ஜாதகம் 47

வேறு

1. மதியும் குஜனும் சீயமுற
   மாலும் கன்னி குரமானில்
   வேதியன் தனுசு ரவிபணியும்
   வெள்ளி கோலில் சிகிமேடம்
   பதியும் நண்டு பலானவர் வசீர்
   வீசர் முனியே விவரமதாய்
   இதுவே ஆண்பால் ஜனனமுறும்
   இல்லம் வடதென் வீதியது.

	கேது		
	இராசி சக்கரம்		லக்கினம்
சனி			சந்திரன் செவ்வாய்
குரு	சூரியன் ராஹு சுக்கிரன்		புதன்

சுபகிருத் ஸு ஐப்பசி மீ 10-ஆம் உ ஞாயிற்றுக்கிழமை இரவு 15 நாழிகைக்கு மேல் 20-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி—26-10-1902

நவக்கிரஹங்களின் பாதசாரம்.—சுவாதி 2-இல் சூரியன், பூரம் 1-இல் சந்திரன், மகம் 3-இல் செவ்வாய், சித்திரை 2-இல் புதன் (வக்ரீ), சிரவணம் 2-இல் குரு, சித்திரை 3-இல் சுக்கிரன் (அஸ்தம்), உத்தராடம் 1-இல் சனி, சித்திரை 3-இல் ராஹு, அசுவினி 1-இல் கேது. நக்ஷத்திரம் பூரம், சுக்கிரதசை இருப்பு வருஷங்கள் பதினெட்டு. நூலாசிரியர் கணிதப்படி உத்தராடம் 1-இல் குரு, உத்தராடம் 2-இல் சனி.

1. சந்திரனும் செவ்வாயும் சிங்கம், புதன் கன்னி, சனி மகரம், குரு தனுஸ், சூரியன் ராஹு சுக்கிரன் துலாம், கேது மேஷம், லக்கினம் கடகம். முனிவர்களே! இஜ் ஜாதகத்தின் பலனைச் சொல்லு வீராக, எனப் பார்வதி கேட்க, முனிவர் பலனைச் சொல்லுகின்றார். இக் கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி தெற்கு வடக்காக அமைந் திருக்கும்.

2. அதுதான் கீழ்ப்பால் வாசலது
   யானை முகத்தோன் காளிஉத்திரம்
   நதியை அணிந்தோன் வடகீழ்ப்பால்
   நாட்டும் சமவூர் தாயில்லலம்
   அதிப னிரண்டாம் ஜனனமுமாய்
   வருவாய் வைசிய குலமென்றேம்
   சுதன்தன் யோகம் அன்னைதந்தை
   துணைவர் புத்திரர் களத்திரமும் ;

2. வீடு கீழ்த் திசை நோக்கி இருக்கும். யானை முகக் கடவுள் ஆலயமும் காளி கோயிலும் வடக்கில் விளங்கிடும். வடகிழக்கில் நதியைச் சடையில் அணிந்த சிவபிரானது கோஷ்டம் உண்டு. அஃது ஒரு நடுத்தரமான ஊராகும். ஜாதகன் தாய் வீட்டில் பிறந்திருக்கிறான். இவன் குடும்பத்திற்கு இரண்டாம் குழந்தை. வைசிய குலம். தேவியே! நாங்கள் இந் நூலில் ஜாதகனது யோகத்தையும், தாய் தந்தை சகோதரர் களத்திரம் புத்திரர் இவர்களைப் பற்றியும் ;

3. முன்பின் ஜன்மம் தான்புகல்வே
   னுதித்தோன் தந்தை துணை யாண்பால்
   ஒன்றே தீர்க்கம் கன்னிகையும்
   ஒரா றென்றேம் அதிலொன்று
   பின்ன மாகும் ஆண்பாலும்
   பிரிதல் வேருய்ச் சென்றிடுவன்
   இன்னுன் குணத்தைத் தான்புகல்வேன்
   இன்பச் சொல்லன் பகையாளன்.

3. முன் பின் ஜன்மங்களையும் சொல்வோம். கடக லக்கினத்தில் பிறந்திருக்கும் இப் பாலனுடைய தந்தைக்கு ஒரு சகோதரனும் தோன்றுவான். ஆறு சகோதரிகள் தோன்றுவார்கள். ஆனால் ஒரு சகோதரிக்குச் சேதம் ஏற்படும். ஆகவே ஒரு சகோதரனும் ஐந்து சகோதரிகளும் தீர்க்கமாக வாழ்வார்கள். சகோதரனும் சீக்கிரத்திலேயே குடும்பப் பிரிவினை செய்துக் கொண்டு வேறு குடும்பம் நடத்துவான். தந்தையின் குணத்தைச் சொல்வேன். பகைமையை நீடித்து மனத்தில் வைத்துக்கொள்வான். இனிமையாகப் பேசுவான்.

4. சொல்லைக் காப்பன் மாநிறத்தன்
   சுத்த மனத்தன் சமதேகன்
   தொல்லையுடை யோர்க் குதவிடுவன்
   சோம்பில் செல்வன் வெளிநாட்டில்
   இல்லை யென்று தான்புகலான்
   எதிரிக் கஞ்சான் இரணியங்கள்
   நல்ல செட்டுத் தான்செய்வன்
   நாட்டில் வறுமை காணுதான்.

4. தான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான். மாநிற முள்ளவன். தூய மனமுள்ளவன். தேகம் சமமாக வளர்ந்திருக்கும். கஷ்டங்களை அடைந்தவர்களுக்கு உதவி செய்வான். கப்பல் மூலம் வெளி நாடுகளுக்குச் செல்வான். உதவியை நாடுபவர்களுக்கு இல்லை என்று சொல்லாதவன். எதிரிகளுக்குப் பயப்படாதவன். தங்கத்தின் மூலம் நல்ல வியாபாரத்தையும் செய்வான். வறுமையினால் கஷ்டப்படாதவன்.

வேறு

5. தேவதா தலங்கள் செல்வன் செய்நன்றி மறவா னாகும்
பாவத்தில் மனம்வை யாதான் பரவுப காரி யாவன்
தாவின பேரைக் காப்பன் ஷண்முகன் பக்தி பூண்பன்
மாமிக ளிரண்டே யாகும் மால்கரம் பத்ம ரேகை.

5. பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வான். நன்றி மறவாதவன். பாவச் செயலில் ஈடுபடாதவன். பரோபகாரம் செய்வான். எளியவர்களைக் காப்பான். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி கொண்டவன். இவனுக்கு மாமியார்கள் இருவர். [இரு மனைவிகள் என்பது கருத்து.] கையில் விஷ்ணுரேகையும் கமலரேகையும் திகழும்.

6. உரோமங்க ளதிக மில்லான் நுவலுப தேசம் கொள்வன்
சேமமாம் குடும்பி யாவன் சல்லியம் கொள்ளா னாகும்
பாவத்தில் மனம்வை யாதான் பரிந்துப சாரம் செய்வன்
தாமத குணத்தா னாகும் சங்கரி கேட்டி டாயே.

6. அதிக உரோமங்கள் இல்லாதவன். பெரியோர்களிடம் நல்லுப தேசங்களைப் பெறுவான். சுபிக்ஷமான குடும்ப முடையவனுவான். கடன் இல்லாதவன். கெட்ட எண்ணமில்லாதவன். வீடு நாடி வந்தவர்களுக்குப் பரிவுடன் உபசாரம் செய்வான். சிறிது தாமத குணமுள்ளவன். ஈசுவரியே ! மேலும் கேளுங்கள்.

7. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே யுதிப்பா னாகும்
அன்னவன் குணத்தைச் சொல்வே னதிகமாய்க் கல்வி கற்பன்
முன்னமே கோபி யாவான் மேதினில் நல்லோ னாவன்
பொன்பணி வணிபம் செய்வன் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்.

7. நாம் சொன்ன இத்தகைய குணமுள்ள மனிதனுக்கு இக் கடக லக்கின மகன் புத்திரனாக உதித்திருக்கின்றான். இனி ஜாதகனுடைய குணங் களைத் தெரிவிப்போம். மேலான கல்வியைக் கற்பான். சிறிது முன் கோபி யாவான். எல்லோருக்கும் நல்லவனாக நடந்துக் கொள்வான். பொன் நகைவியாபாரம் செய்வான். தன்னைப் புகழ்ந்தவர்களுக்கு ஆதரவளிப் பான். [தனது புகழைக் கேட்பதில் விருப்பம் கொண்டவன் என்பது கருத்து.]

8. பந்துவும் புகழ வாழ்வன் பாரது விருத்தி செய்வன்
கந்தனைப் பூசைப் பூண்பான் காணாத வார்த்தை சொல்வன்
நிந்தைக ளேற்கா னாகும் நீர்தோய்வன் வறுமை காணான்
முந்துற மெழுத வல்லன் சிறப்பான குடும்பி யாவன்.

8. இவனது வாழ்க்கை உற்றார் உறவினர் மெச்சும்படி இருக்கும். பூமிகளை அபிவிருத்தி செய்வான். சுப்பிரமணிய சுவாமியை எப்பொழுதும் வழிபடுவான். தான் நேரில் காணாத விஷயங்களைப்பற்றி நேரில் கண்டவன் போல் பேசுவான். ஆயினும் நிந்தனைகள் இவனுக்கேற்படா. புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். வறுமை இல்லாதவன். சீக்கிரமாக எழுதும் வல்லமை படைத்தவன். சிறப்பான குடும்ப முடையவனாகவும் இருப்பான்.

9. பொய்யுரை பகரா னாகும் புத்திநல் லறிவு முண்டு
ஐயமே லிச்சை யுண்டு அவன் துணை முன்னுண் ஒன்று
பையவே அவன்கு ணத்தைப் பகருவோம் ஊனை வாணும்
தையலுக் கினிய னாவன் சந்ததம் வெகுளி யாவன்.

9. பொய்யான வார்த்தைகளைப் பேசாதவன். நல்ல அறிவு உடைய வன். ஏழைகளுக்கு ஐயமிடுவதில் விருப்பம் கொண்டவன். அவனுககு மூத்த சகோதரன் ஒருவன் உண்டு. அவனுடைய குணத்தையும் சிறிது பேசுவோம். அவன் சிறந்த மதியூகி. மனைவிக்கு இனியவன். மனத்தில் மறைக்க வேண்டியவற்றை மறைப்பதற்கு அறியாதவன்.

10. சத்யமும் தனுசு ராசி ஜனிப்பனும் சல்லியம் கொள்ளான்
இதமுன் வார்த்தை சொல்வன் இரணிய வணிபம் செய்வன்
கதைகாவி யங்கள் கேட்பன் கடவுளார் பக்தி பூண்பன்
நதிதலம் சேது செல்வன் நல்லோர்க்கு நல்ல னாவன்.

10. அவன் பிறந்த நக்ஷத்திரம் சதயம். இலக்கினம் தனுஸ். கடன் வாங்காதவன். நன்மைப் பயக்கும் வார்த்தைகளைப் பேசுவான். இவனும் பொன் வியாபாரமே செய்வான். இதிஹாஸ புராணங்களைக் கேட் பதில் பேரவாக் கொண்டவன். கடவுளின் பல மூர்த்திகளிடமும் பேத மின்றி பக்தி செய்பவன். புண்ணிய நதிகளிலும் சேதுவிலும் நீராடு வான். நல்லவர்களிடம் நல்லவனாகவே பழகுவான்.

11. திருப்பணி செய்வா னாகும் தேறினோர்க் கன்னன் மீவன்
பொறை சொலான் யிளம னத்தன் பெரிதான செட்டுச்
செய்வன்
மறுமமில் லாதா னாகும் அரசர்கள் பேட்டி பூண்பன்
வறுமனை ஒன்றே தீர்க்கம் மைந்தர்கள் ஆண்பால் ரண்டு.

11. கோயில்களைப் புதுப்பித்தல் முதலிய திருப்பணிகளைச் செய்வான். தவசிகளுக்கு அமுதளிப்பான். கோள் சொல்லாதவன். இளகிய மனமுள்ளவன். பெரிய வியாபாரம் செய்வான். கபடமில்லாதவன். அரசர்களின் தரிசினம் இவனுக் கேற்படும். இவனுக்கு மனைவி ஒருத்திதான். புத்திரர்கள் இருவர் தோன்றுவார்கள்.

12. கன்னிகை ஒன்றே தீர்க்கம் காதலன் வயது தீர்க்கம்
பின்துணை மூன்று தோன்றும் பெண்ணது இரண்டு தீர்க்கம்
அந்தவர் சேதி யாவும் அறைகிறோம் பின்பால் சேதி
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் தாயே கேளும்.

12. ஒரு பெண் பிறந்து அவளும் தீர்க்காயுளுடன் வாழ்வாள். இவனுடைய [ஜாதகனின் அண்ணனுடைய] வயதும் தீர்க்கமாகும். பின் உடன் பிறந்தவர்கள் மூவர் தோன்றுவர். அவர்களில் இரு பெண்கள் ஸ்திரமாக வாழ்வார்கள். அவர்களுடைய செய்திகள் எல்லாவற்றையும் பின்பாகத்தில் தெரிவிப்போம். ஜாதகனின் விவாஹ காலத்தைச் சொல்லுகிறோம். அன்னையே கேட்பீராக.

13. பாரியு மீரோன் பாண்டில் பகரன்னை வர்க்கம் தன்னில்
நேரிடும் குணத்தைச் சொல்வேன் நிதம்சீலி மாஞ்சி வப்பள்
தேறின புத்தி யுண்டு தேவதா பக்தி பூண்பள்
தீரமில் லாத நெஞ்சம் ஜன உப காரி யாமே.

13. இவனுக்குப் பதினெட்டாம் வயதில் மணம் நடை பெறும். மணப் பெண் தரய் வருக்கத்தில் பிறந்தவள். மண மகளின் குணம் நிறம் முதலியவைகளை அறிவிடபோம். எப்பொழுதும் நற்சீலம் பொருந்தியவள். மாநிறமுள்ளவள். நல்ல அனுபவம் வாய்ந்தவள். கடவுள் பக்திபூண்டவள். உறுதியில்லாத உள்ளம் உடையவள். வித்தியாசம் பாராட்டாமல் எல்லோருக்கும் உதவி புரிவாள்.

14. அன்னம்போல சாய லொக்கு மாளன் தன்மனம்பேல் வாழ்வள்
கன்னிகை யோக காலி காலிகள் விருத்தி யுண்டு
பன்னியே பேச வல்லாள் பாவைக்குச் சுதராண் ஒன்று
மன்னிய பெண்பால் ரண்டு மறுவிடும் தீர்க்க மாக.

14. அன்னம் போன்ற அழகுள்ளவள். தன் கணவன் மனத்தின்படி நடப்பவள். மிகவும் அதிருஷ்டசாலி. கன்று காலிகள் விருத்தியடையும் மிக்க விரிவாகப் பேசும் இயல்புள்ளவள். இந்தத் தம்பதிகளுக்கு ஒரு பிள்ளையும் இரு பெண்களும் பிறப்பார்கள். அம் மூவரும் தீர்க்காயுளுடன் வாழ்வர்.

15. மற்றது மூன்று சேதம் அறிவிப்பீர் விவரம் தன்னைச்
சுத்தமாய் மூன்றும் நாலும் ஷஷ்டமும் சேத மெய்தும்
வித்தகன் முதலி லாண்பால் மேவிடும் தீர்க்க மாக
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தது தப்பா தாகும்.

15. இன்னும் மூன்று குழந்தைகள் பிறந்து இறக்கும். எத்தனையாவது குழந்தைகள் இறக்கும்? அதை அறிவிப்பீர்களாக எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றுர். மூன்றுவது நான்காவது ஆருவது குழந்தைகள் சேதத்தை அடையும். முதலில் பிறந்த ஆண் மகவு தீர்க்கமாக வாழ்வான். விநாயகப் பெருமானுக்குத் தாயானவளே! நாங்கள் சொன்ன மொழி பிழையாகாது.

16. அன்னைமாஞ் சிவப்பா ளாகும் அன்புள மனத்த ளாகும்
முன்கோபம் மூலச் சூடு மொழியது சுபமே யாகும்
பொன்பணி யிச்சை யுண்டு புகழ்ந்தோரை ஆத ரிப்பள்
தன்துணை ஆண்பால் ரெண்டு தையலர் முன்பு தீர்க்கம்.

16. ஜாதகனின் அன்னை மாஞ்சிவப்பு நிறம் வாய்ந்தவள். அன்பு நிறைந்த மனம் படைத்தவள். முன் கோபி. மூலச்சூடு உடையவள். நல்ல வார்த்தைகளையே பேசுவாள். பொன்னுபரணங்களில் ஆசை கொண்டவள். தன்னைப் போற்றியவர்களை ஆதரிப்பாள். அவளுக்கு இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் உண்டு. சகோதரிகள் இவளுக்கு மூத்தவர்கள். அவர்கள் எல்லோரும் தீர்க்ககாலம் ஜீவிப்பார்கள்.

17. இல்லமும் உள்ளூ ராகும் இவன்பூர்வம் சொல்லக் கேண்மோ
அல்லலை விலக்கு கின்ற அருணைக்கு மேல்பா லாக
வல்லியும் வடுகர் வர்க்கம் வந்தனள் சுகமுன் னோளாய்
நல்லவ ளாகி வாழ்ந்து நாயகி மதலை யுண்டாய்.

17. அவளுடைய தாய் வீடும் அதே ஊரில் தான் உள்ளது. இவளுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவோம்; கேளுங்கள். இவள் முன் பிறவியில் மானிடர்களின் வாழ்க்கைத் துன்பங்களைப் போக்கும் திருவண்ணுமலைக்கு மேற்குத் திசையிலுள்ள ஓர் ஊரில் நாயக்கர் வமிசத்தில் பிறந்து கணவன் குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்தாள். "நல்லவள்" என்ற பிரசித்தியை அடைந்தாள்.

18. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமகன் வைசிய சேயாய் ஜனித்தனள் என்று சொல்வோம்
வறுமைகள் காணு ளாகும் மாதுநன் னடக்கை யுண்டு.

18. தருமங்களைச் சிரத்தையுடன் செய்தாள். விருந்தாளிகளுக்கு அன்புடன் அமுதளித்தாள். இவ்வாறு நல்ல வாழ்க்கையை நடத்தி அந்தியத்தில் இறந்த இவளை மறையவன் இங்கு வைசிய குலத்தில் பிறப்பித்திருக்கின்றுன். அவள் வறுமையை அறியாதவள். நன்னடக்கை உடையவள்.

19. பின்ஜன்மம் காளத்தி தன்னில் பிறப்பாளாம் கங்கை சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப் புகழ்ச்சியாய் வாழ்வா ளாகும்
தந்தையின் பூர்வம் சொல்வேன் தாமிர பரணி தன்னில்
முந்தின குலமு தித்து வுயர்வான குடும்பி யானுன்.

19. இவள் மறு பிறவியில் காளத்தி ஷேத்திரத்தில் வேளாள குலத்தில் ஜனித்து, பொன்னையும் மற்றைய பொருள்களையும் பெற்று, புகழுடன் சுகமாக வாழ்வாள். ஜாதகனுடைய தந்தையின் முன் பிறவியைக் கூறுவேன். முன் ஜன்மத்தில் இவன் தாமிரபர்ணி நதிக்கரையில் பிராம்மண குலத்தில் உதித்து, மேலான குடும்பியாக விளங்கினுன்.

20. புத்திரர் மனைவி யுண்டாய்ப் பூமியால் சீவித் தேதான்
குத்தமாம் கால ளூடு குலவியே பிரமன் லக்கம்
வித்தக னுதித்தா னென்றேம் விருத்தரும் தடுத்துச் சொல்வார்
முந்தின குலமு தித்தோன் மேவுமிச் சென்மம் தன்னில் ;

20. மனைவி புத்திரர்களுடன், பூமியை உழுது பயிரிட்டு ஜீவித்து வந்தான். கடைசி காலத்தில் இறந்து இப்பொழுது பூலோகத்தில் மறுபடியும் பிறந்து ஜாதகனுக்குத் தந்தையாக ஏற்பட்டிருக்கின்றான். முன் ஜன்மத்தில் பிராம்மண குலமுதித்த இவன் ;

21. குலம்தாழ்வா யுதிப்ப தென்னைக் கூறுவீர் முனியே நீர் தாம்
நலமுள வேதம் தன்னை நாயகன் விரும்பாத தாலே
உலவினன் குலம்தாழ் வாக உதித்தவூர் லாபம் காணுன்
அலேகடல் சென்று இன்னேன் அதிகப் பொன் சேர்ப்பா னுகும்.

21. இப்பொழுது வைசிய ஜாதியில் பிறக்கக் காரணம் என்னே ? சொல்லுங்கள், எனப் பராசரர் கேட்க, முனிவர் பதில் கூறுவாரானுர். நன்மையைப் பயக்கும் வேதத்தை இவன் விரும்பி ஓதாமல் இருந்தமையால் இச் சென்மத்தில் தாழ்வான குலத்தில் பிறந்திருக்கின்றான். இவன் [ஜாதகனின் தந்தை] சொந்த ஊரில் சம்பாதித்துச் சீவிக்க முடியாதவனுய்த், திரை கடலோடித் திரவியம் சேமித்து வாழ்வான்.

22. மறுஜன்மம் பிருதிவி தன்னில் மறைக்குல முதிப்பா னுகும்
திருமக ளிச்சென் மத்தில் தனத்தின்மே லாசை வைத்து
இருவித வார்த்தை யாயும் இவனுமே வாழ்வ தாலே
மறைக்குல முதிக்கும் வண்ண மறிவிப்பீர் விவர மாக.

22. மறு பிறவியில் இவன் காஞ்சியில் அந்தணர் குலத்தில் உதிப்பான்- இதைக் கேட்டப் பார்வதி, இப் பிறவியில் இவன் பேராசைகொண்டவனுகவும் இருவித வார்த்தைகளைப் பேசுபவனுகவும் இருப்பதால் இவன் எவ்வாறு பிராம்மண குலத்தில் பிறக்க அருகதை உடையவன் ? இவ்விஷ யத்தை விவரமாகத் தெரிவிப்பீராக என வினவினுள்.

23. பலவித வினைகள் செய்தும் பஞ்சைமே லிரக்க மாயும்
தலம்தீர்த்தம் தோய்ந்த தாலும் தன்மனம் வெகுளி யாயும்
கலகத்தைக் கூறுத தாலும் கடவுள்தம் பக்தி பூண்டும்
தலேவனும் வாழ்வ தாலே ஜனிப்பனும் மறைக்கு லத்தில்.

23. முனிவர் பதிலுரைத்தார். பல வித புண்ணியங்களைச் செய்திருக் கிருன். ஏழைகளிடம் கருணை கொண்டு வாழ்ந்தான். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று கடவுளைத் தரிசித்தான். அநேக புண்ணிய தீர்த்தங்களில் நீராடினுன். மனத்தில் கள்ளமில்லாமல் தூய்மையோடு இருந்தான். ஒருவருக்கொருவரிடம் கோள் சொல்லிக் கலகத்தை உண்டு பண்ணினுனல்லன். எல்லாவற்றிற்கும் சிகரமாக, கடவுளிடம் மிக்க பக்தி பூண்டிருந்தான். நாம் சொன்ன இவ்வளவு காரணங்களால் இவன் பிராம்மண ஜாதியில்தான் ஜனிப்பான்.

24. ஜாதகன் பூர்வம் சொல்வேன் தோகைமா மலேக்குக் கீழ்ப்பால்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினுன் ரெட்டி வமிசம்
போதன முடைய ளுகிப் புண்ணிய மனத்த ளுயும்
மாதவர்க் கன்ன மீந்து மார்க்கத்தில் தாகப் பந்தல் ;

24. இனி ஜாதகனுடைய முன் பிறவியைத் தெரிவிப்பேன். இவன் தோகை மலைக்குக் கீழ்த் திசையிலுள்ளதொரு பெரிய ஊரில் ரெட்டி வமிசத்தில் பிறந்து, தனம் படைத்தவனுகி, சுகமாக வாழ்ந்து வந்தான். புண்ணிய மனம் வாய்ந்தவனுக ஆனுன். தவசிகளுக்குச் சிரத்தையுடன் அமுதளித்தான். மார்க்கத்தில் தண்ணீர்ப் பந்தல் நிறுவினுன்.

25. வைத்துமே முருகர் தொண்டு மாநிலம் நல்லோ னுயும்
வித்தகன் பவமில்லாமல் மேவினுன் கால ளூடு
சுத்தமாய்ப் பிரமன் லக்கம் ஜனிப்பனும் வைசியச் சேயாய்
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறே மிவனின் யோகம்.

25. சுப்பிரமணிய சுவாமிக்குப் பக்தியுடன் தொண்டு புரிந்தான். சிறிதும் பாவம் செய்யாமல் நல்லவனுக வாழ்ந்து இறந்தான். அவனைத்தான் பிரம்ம தேவன் வைசிய குலத்தில் கடக லக்னத்தில் பிறப்பித்திருக்கின்றான். விநாயகரைப் பெற்ற தாயே ! இனி ஜாதகனுடைய யோகங்களைக் கூறுவோம்.

26. இந்திர யோக மொன்று இசைந்திடும் பேரி யோகம்
அந்தவோர் பலத்தைச் சொல்வேன் அதிகவா ணிபங்கள் செய்வன்
தன்தனம் அதிகம் சேர்ப்பன் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
சுந்தரன் கட்டில் மெத்தை புரவிவா கனமு முள்ளோன்.

26. இவனுக்கு "இந்திர யோகமும்" "பேரி யோகமும்" இருக் கின்றன. அவைகளின் பலன்களை அறிவிப்போம். அதிக வியாபாரங்களைச் செய்வான். தன் முயற்சியால் அதிக தனத்தைச் சம்பாதிப்பான். தந்தையைக் காட்டிலும் எல்லா வகையிலும் சிறந்து வாழ்வான். ஜாதகன், கட்டில், மெத்தை, பலவித ஆசனங்கள் இவற்றைப் பெற்றவனுகவும், குதிரை முதலிய வாஹனங்களை உடையனுகவும் ஆவான்.

27. திருப்பணி செய்வா னுகும் தேவதா தலங்கள் செல்வன்
தரைமிகத் தேடு வானும் தானிரு வில்லம் செய்வன்
பெருமைநற் புகழு மேற்பன் புவிராசர் மெச்ச வாழ்வன்
மருவிடும் கல்வி ரண்டு ஆருயிரம் பொன்னும் சேர்ப்பன்.

27. கோயில்களுக்குத் திருப்பணி செய்வான். பல புனித ஸ்தலங் களுக்குச் செல்வான். பூமிகளை அதிகம் சேர்ப்பான், இவன் சொந்தமாக இரு வீடுகள் நிர்மாணம் செய்வான். பெருமையும் நற்புகழும் இவனை நாடி வரும். உலகில் அரசர்கள் மெச்ச வாழ்ந்திடுவான். இரு வித கல்விகளில் இவன் மேன்மை அடைவான். ஆருயிரம் பொற்காசுகளைச் சேர்ப்பான்.

28. இருபது ஆறு ஆண்டில் இயல்மீன மாதம் தன்னில்
பெரும்தந்தை கண்ட மென்றேம் பேசுவோம் முப்பான் ரண்டில்
அரிமாதம் அன்னை கண்டம் அறைந்தது தப்பா தாகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

28. ஜாதகனுக்கு இருபத்தாருவது வயது நடை பெறுங்கால் மீன மாதத்தில் இவனது தந்தைக்குக் கண்டம் ஏற்பட்டு அவன் இறப்பான். ஜாதகனுடைய முப்பத்திரண்டாவது வயதில் ஆவணி மாதத்தில் இவனுடைய தாய் மரணமடைவாள். முனிவர்களாகிய நாங்கள் சொன்ன வாக்குத் தப்பாமல் நடை பெறும். கணேசரைப் பெற்ற தாயே! மேலும் கேட்பீராக.

குறிப்பு.—" அரிமாதம் " மார்கழி மாதம் என்றும் கூறலாம். 'मासानां मार्गशीर्षोऽहं' என்ற பகவத் கீதை சுலோகத்தைக் காண்க. " மாதங்களுக்குள் மார்கழி மாதமாக நான் இருக்கின்றேன் " என்பது அதன் பொருள். ஆகவே அரிமாதம் " விஷ்ணு மாதம் " (மார்கழி).

[கீதை, அத். 10, சுலோகம் 35].

29. உதித்தவன் மரண காலம் உறைகிறேம் அறுபா நாலில்
நதிகுட மாதம் தன்னில் நாயக னுடலம் ஏகும்
வசிஷ்டரிவ் விதமாய்ச் சொல்ல விருத்தரும் தடுத்துச் சொல்வார்
சதியான சகடை தோஷம் சார்ந்தது ஆண்டுள் கண்டம்.

29. இனி ஜாதகனுடைய மரண காலத்தை அறிவிப்போம். இவனுடைய அறுபத்து நான்காம் வயதில் மாசி மாதத்தில் ஜாதகன் தேக வியோக மடைவான். இவ்வாறு வசிஷ்டர் சொல்லக் கேட்ட விருத்தராகிய பராசர முனிவர் சொல்வார். இச் சாதகனுக்குத் தீங்கு விளைவிக்கும் " சகடயோகம் " இருப்பதால் இவன் பிறந்து ஓர் ஆண்டிற்குள் கண்டம் ஏற்பட்டிராதோ ? [ஆகையால் ஒரு வயதிற்குள் இறப்பான் என்பது கருத்து.]

30. நேரிடும் பால னுக்கு நிகர்முனி தடுத்துச் சொல்வார்
தீரமா யேழில் பொன்னேன் சுக்கிரன் நாலில் தங்க
மாரனும் வயது தீர்க்கம் மருவிடும் பிணியநேகம்
கூறினேம் மார கங்கள் கோமளி கேட்டி டாயே.

30. வசிஷ்டர் பதில் கூறினர். சகட யோகமிருப்பினும் ஏழாவது கேந்திரத்தில் குரு இருப்பதாலும் [இலக்கினதிபதியைப் பாராவிடினும் இலக்கினத்தைப் பார்ப்பதால் என்பது கருத்து.] சுக்கிரன் நான்காம் கேந்திரத்தில் இருப்பதாலும் ஜாதகனுக்கு தீர்க்காயுள்யோகமுண்டு. சகடயோகத்தின் பயனுக பல பிணிகள் காணும். ஆனல் அவைகளால் மரணமடையான்.

31. பிறந்திடு காலம் தன்னில் பூரத்தின் முதல்பா தத்தில்
சிறந்தசுக் கிரனி ருப்புச் செப்புவோம் பதினெட் டாண்டும்
உறைந்திடும் துணைபின் விருத்தி உதித்தோனும் பிணியு மாகும்
பறந்திடும் தந்தை வேறூர் பாக்ய மிகவே சேரும்.

31. இவன் பூர நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்திருக்கின்றன். ஆகையால் சுக்கிர தசையிருப்பு வருஷங்கள் பதினெட்டு. இத்தசையின் பலன்களைக் கூறுவோம். சகோதர விருத்தியுண்டு. ஜாதகனுக்குப் பல நோய்கள் வரும். தந்தை சீவனத்திற்காக வேறு ஊருக்குச் செல்லுவான். அதிக ஐசுவரியமும் சேரும்.

32. சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னேம்
குத்தங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய்.

32. ஏழு மஹ ரிஷிகளாகிய நாங்கள் இச்சாதகத்தின் பலன்களை ஆராய்ந்து பார்த்துச் சொன்னேம். குற்றமிருப்பின் எல்லாமறிந்த தாங்கள் மன்னிக்க வேண்டுகின்றேம்.

ஜாதகம் 48

1. கடகலக் கினம தாகக் காரிதேள் ராகு மேரு
அடவுடன் புகர்சேய் பொன்னும் அருணனும் கோல தாகத்
திடமுள மதியு மானில் சிகிவீணை பரிதி கன்னி
உடன்நவக் கோளு மிவ்வா றுறைந்ததால் பலன் சொல்வீரே.

			கேது
	இராசி சக்கரம்		லக்கினம்
சந்திரன்			
ராகு	சனி	சுக்கிரன் செவ் புதன் குரு	சூரியன்

விகாரி ஞூ புரட்டாசி மீ 28உ வியாழக்கிழமை இரவு 15-நாழிகைக்கு மேல் 20-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி—12-10-1899.

நவக்கிரஹங்களின் பாதசாரம்.—சித்திரை 2-இல் சூரியன், உத்தராடம் 3-இல் சந்திரன், விசாகம் 2-இல் செவ்வாய், சித்திரை 4-இல் புதன் (அஸ்தம்), சுவாதி 4-இல் குரு, சித்திரை 4-இல் சுக்கிரன் (அஸ்தம்), கேட்டை 4-இல் சனி, மூலம் 1-இல் ராகு, மிருகசீர்ஷம் 3-இல் கேது. நக்ஷத்திரம் உத்தராடம். சூரிய தசையில் இருப்பு வருஷங்கள் இரண்டு.

1. இலக்கினம் கடகம், சனி விருச்சிகம், ராகு செவ்வாய் குரு, புதன் துலாம், சந்திரன் மகரம், கேது மிதுனம், சூரியன் கன்னி. இவ்வாறுள்ள கிரஹநிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி கேட்கிறுள்.

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினி லாண்பால் ஜன்மம் வந்தஇல் தனிய தாகும்
நீதியாய் அருகி லாறு நிகழ்சோலை மலாய்தே சத்தில்
ஆதியாய் மஸ்தான் வம்சம் அனுகுவான் சேட்ட னாகை.

2. இவ்வாறு பார்வதி வினவிய பொழுது, கௌசிக முனிவர் பலன்களைக் கூறுவாருனர். இக்கிரஹ நிலையில் ஜனித்த மகவு ஆண். பிறந்த

வீடு தனித்து நிற்கும். வீட்டிற்கு அருகில் ஆறு உண்டு. பிறந்த ஊர் மலாய் தேசத்திலுள்ளது. இக்குழந்தை முஸல்மான் ஜாதியில் பிறந்திருக்கிறது. குடும்பத்திற்கு இவனே ஜ்யேஷ்டன்.

3. வந்தவன் யோகம் சொல்வேன் அவன்தந்தை துணைத சத்தில்
நொந்திடும் யாவும் தானே நுரைப்பது ஆண்பா லொன்று
அந்தவன் வெளிநா டுய்வன் அவன்சேதி பின்பால் சொல்வேன்
எந்தையே தந்தை சேதி யியம்புவேன் கல்வி மானும்.

3. இக்கடகலக்கினத்தில் பிறந்தவனுடைய யோகம் முதலியவைகளைக் கூறுவேன். ஜாதகனின் தந்தைக்கு உடன் பிறந்தார்கள் எல்லோரும் சேதமடைவார்கள். ஆனால் ஒரு சகோதரன் மாத்திரம் விருத்தியடைவான். அவன் வெளிநாட்டிற்குச் செல்வான். அவனைப்பற்றிய செய்திகளைப் பின் பகுதியில் கூறுவோம். தாயே! தந்தையின் வரலாறுகளை இப்பொழுது அறிவிப்போம். அவன் கல்வியைக் கற்றவன்.

4. ஊகவான் உணச்சல் தேகி உண்மையா மனத்தா னாகும்
பாகமாய்ப் பேச வல்லன் பரவுப காரி யாவன்
நாகரி கங்க ளுள்ளான் நாயகன் சிவந்த மேனி
தோகைசொல் கடவா னாகும் சொல்லது சுகமே யெய்தும்.

4. மதிநுட்பம் வாய்ந்தவன். மெலிந்த சரீரமும் உண்மை மனமும் படைத்தவன். நன்ருகப் பேசும் திறமை உடையவன். பிறர்க்கு உபகாரமும் செய்வான். பழக்கவழக்கங்களும் இனிமையாக இருக்கும். மேனி சிவந்திருக்கும். மனைவியின் வார்த்தையை மீருதவன். அவனது சொல்லும் நயமாக இருக்கும்.

5. அரசரால் தொழிலு மேற்பன் அடைந்தோரை ஆத ரிப்பன்
பெருமையும் புகழு மேற்பன் போஜன வறுமை காணுன்
வரவுக்குச் செலவ னேகம் வாணிபத் தொழிலும் செய்வன்
கரைமனம் பித்த தேகி கடவுளர் தொண்டு பூண்பன்.

5. அரசர்களுடைய ஆதரவு ஏற்பட்டுத் தொழில் செய்வான். தன்னிடம் உதவியை நாடுபவர்களுக்கு ஆதரவளிப்பான். இவனுக்குக் கௌரவங்களும் நற்புகழும் ஏற்படும். ஆகாரத்திற்குக் கஷ்டப்படாதவன். கையில் கிடைக்கும் பணத்தைப் பலவழிகளிலும் செலவு செய்வான். வியாபாரம் இவனது ஜீவனமாகும். இளகிய மனம் உள்ளவன். பித்ததேகம் வாய்ந்தவன். கடவுளுக்குப் பல பணிகளையும் ஆற்றுவான்.

6. கரமதில் சங்கு சக்கரம் கண்முகம் வசிய முள்ளான்
அறிவோர்கள் நேயம் கொள்வன் அற்பரை உறவு கொள்ளான்
நறைமலர்க்கந்த மிஷ்டன் நற்றந்தை ஆஸ்தி காணுன்
விரைவினில் நடக்க வல்லன் வீண்பழி ஏற்கா னுமே.

6. கரத்தில் "சங்க", "சக்கர" ரேகைகள் விளங்கும். முகத்தில் பிறரை வசப்படுத்தும் ஒருவித காந்தி பொருந்தியவன். அறிவாளிகளுக்கு நண்பனுவான். தாழ்ந்த மக்களிடம் பழகாதவன். நல்ல மலர்களிலும், வாசனை பொருந்திய மற்றைய சந்தனம் முதலிய பொருள்களிலும் விருப்ப முள்ளவன். தந்தையின் சொத்து இவனுக்கிராது. நடை துரிதமாக இருக்கும். வீண் அவதூறுகளும் இவனுக்கு ஏற்படா.

7. இந்நெறி யுடையோ னுக்கு இவனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் சிவந்த மேனி
சொன்னசொல் சுகமே யாகும் தொடுத்ததை வெல்வா னுகும்
மன்னர்பா லரசு செய்வன் வண்டிவா கனமு முள்ளான்.

7. இத்தகைய குணங்கள் வாய்ந்த மனிதனுக்கு இக்கடக லக்கின மகன் புத்திரனுகப் பிறந்திருக்கின்றுன். ஜாதகனின் குணங்களைச் சொல்வேன். அழகு உடையவன். சிவந்தமேனியான். இனிமையாகப் பேசுபவன். ஆரம்பித்த காரியத்தை வெற்றியுடன் நிறை வேற்றுவான். அரசர்களிடம் அதிகாரம் பெற்று ஆட்சி புரிவான். வண்டி முதலிய வாஹன வசதிகளும் உடையவன்.

8. வித்தையும் மூன்று கற்பன் விவேகியாம் பொறுமை சாலி
உத்தம குணத்தா னுகும் உயர்வான குடும்பி யாவன்
பத்தினி நேய னுவன் பாருகள் சேர்ப்பா னுகும்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரியத்தில்

8. மூன்றுவித கல்விகளை [இங்குக் "கல்வி" பாஷையைக் குறிக்கும்] கற்றறிந்தவன். விவேகம் உடையவன். பொறுமைக் குணம் வாய்ந்தவன். இவைகளைத் தவிர மற்றைய நற்குணங்களும் இவனிடம் விளங்கும். பெருமை வாய்ந்த குடும்பியாவன். பத்தினியிடம் மிகவும் அன்பு உடையவன். பூமிகளையும் சம்பாதிப்பான். உற்ருர் உறவினர் மதிக்க வாழ்ந்திடுவான். வேலைகளில் சோம்பல் இல்லாதவன்.

9. இல்லமும் மூன்று செய்வன் எதிரியை நசிக்க வைப்பன்
மல்லுக்குச் செல்லா னுகும் அரசர்கள் மதிக்க வாழ்வன்
சொல்லதைக் காப்பா னுகும் துணைவரை ஆத ரிப்பன்
வல்லியர் மோகம் கொள்வன் வஞ்சக வஞ்ச னுவன்.

9. மூன்று வீடுகளைக் கட்டுவான். எதிரிகளை ஒடுக்குவான். சண்டையில் ஈடுபடாதவன். அரசர்களும் போற்றும்படி வாழ்வான். தான் சொன்ன வார்த்தையின்படி நடப்பான். சகோதரர்களை ஆதரிப்பான். பெண்களிடம் மோகம் கொண்டவன். ஏமாற்றும் எண்ணம் கொண்டவர்கள் இவனிடம் ஏமாந்து விடுவார்கள்.

10. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவே னுண்பால் ரண்டு
அவனியில் கன்னி ஒன்று நாட்டுவோம் தீர்க்க மாகத்
தவசியே யினையாண் ஒன்று சாற்றுவோ மவன்கு ணத்தைப்
பவமன மில்லா னுகும் பரிகாச வசனம் கூறுவன்.

10. இவனுடைய உடன் பிறந்தார்களை அறிவிப்பேன். இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு. இம்மூவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். இவனுக்கு அடுத்துப் பிறந்த ஒரு சகோதரனுடைய குணத்தைக் கூறுவேன். கெட்டமனம் இல்லாதவன். பரிகாசம் செய்யும் இயல்புள்ளவன்.

1. பின்புறம் மச்ச முண்டு பிரபல கல்வி யுண்டு
மன்னர்பால் அதிகா ரங்கள் மருவிடும் சிவந்த மேனி
பொன்பல மிகவே சேர்ப்பன் புத்திநல் லறிவு முண்டு
அன்னியர் மதிக்க வாழ்வன் ஆவுகள் விருத்தி யுண்டு.

11. முதுகில் மச்சமிருக்கும். மேலான கல்வி கற்றவன். அரசர்களிடம் அதிகாரம் பெறுவான். சிவந்த மேனியான். அதிக பணத்தைச் சேமிப்பான். நல்வழியில் செல்லும் புத்தி படைத்தவன். உலகத்தார் மதிக்கும் வகையில் வாழ்ந்திடுவான். பசுக்களை விருத்தி செய்வான்.

12. தராதர மறிய வல்லன் சம்பத்து முடைய னுகும்
துராசையு முடையா னுகும் துறவிக்கு அன்ன மீவன்
முராரிபோல் புகழு மேற்பன் மேவிடும் பாரி ஒன்று
நராதிபர் மெச்ச வாழ்வன் நற்சுதர் ஆண்பால் மூன்று.

12. மனிதர்களின் அல்லது பொருள்களின் உயர்வு தாழ்வை அறியும் ஆற்றல் உடையவன். ஐசுவரியம் படைத்தவன். பிறர் பொருள்களில் ஆசை கொண்டவன் தவசிகளுக்கு அன்ன மளிப்பான். விஷ்ணுபோல் கீர்த்தியுடையவன். இவனுக்கு மனைவி ஒருத்திதான். அரசர்களும் இவனைக் கொண்டாடுவார்கள். இவனுக்கு பிள்ளைகள் மூவர்.

13. கன்னிகை அவ்வாறு தீர்க்கம் காணுது வறுமை தானும்
அன்னவன் வயது தீர்க்கம் அவன்வேறுயச் செல்லு வானும்
பின்துணை பெண்பா லொன்று பேசுவோம் தீர்க்க மாகக்
கன்னிபின் ஆண்பா லொன்று கழறுவோம் பால னுக்கு.

13. இவனுக்கு ஒரு பெண்ணும் பிறப்பாள். இந்த நால்வரும் தீர்க்கமாக வாழ்வார்கள். இவன் [ஜாதகனின் அடுத்துப் பிறந்தவன்] நீண்ட ஆயுளுடன் வாழ்வான். சிலகாலம் ஜாதகனுடன் வாழ்ந்து பிறகு வேறுக் குடும்பம் நடத்துவான். இவனுக்கு அடுத்தது ஒரு பெண். அவளுக்குப் பின் ஒரு சகோதரன். இவர்கள் எல்லோரும் ஸ்திரமாக வாழ்வார்கள்.

14. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கிறேம் பதினே ழாண்டில்
அதிபதி வருவா ளாகும் அவள்குணம் சிவந்த மேனி
ததிபாக்கிய முடையா ளாகும் சம்பத்தாய் வாழ்வா ளாகும்
அதிதிகட் கன்ன மீவள் ஆளனுக் கினிய ளாவள்.

14. ஜாதகனுடைய மணத்தின் காலத்தைக் கூறுவோம். பதினேழாம் ஆண்டில் விவாஹம் நடைபெறும். அவள் சிவந்த மேனியாள். பால் தயிர் பாக்கிய முடையவள். சம்பத்துடன் வாழ்வாள். வரும் விருந்தாளிகளுக்கு அன்னம் அளிப்பாள். கணவனுக்கு இனியவள்.

15. நன்னடை மிருது வார்த்தை நாட்டினில் வறுமை காணுள்
தன்சுத ராண்பால் ரண்டு தையலர் மூன்று என்றேம்
இன்னவாறு முனிவர் கூற இயம்புவார் பராசர் தாமும்
தொன்சனி ஐந்தில் தங்கச் சுதர்தோஷம் சொல்ல லாமே.

15. நன்னடக்கை உடையவள். மிருதுவான வார்த்தை பேசுவாள். வறுமை இல்லாதவள். இவளுக்கு இரு பிள்ளைகளும் மூன்று பெண்களும் பிறப்பார்கள். இவ்வாறு முனிவர் கூறியவுடன் பராசர், அஷ்டமாதிபதி யான சனி புத்திர பாவத்தில் இருப்பதால் ஜாதகனுக்குச் சந்ததி தோஷம் உண்டென்றுர்.

16. காரியும் அஞ்சில் தங்கக் காவலன் தனக்குச் சேஷ்டர்
நேரிடும் பெண்பா லாக நிலைக்காது அவர்ப லத்தால்
தீரமா யதன்பின் விருத்தி தீர்க்கமா மென்று சொல்வோம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

6. முனிவர் பதில் உரைத்தார். சனி புத்திரபாவத்தில் இருப்பதால் ஜாதகனுக்கு முதலில் ஒரு பெண் பிறந்து அக்குழந்தை நிலைக்காததாகும். சனி ஐந்தா மிடத்தில் இருப்பதன் பலன் அவ்வளவு தான். ஆகவே அக்குழந்தைக்குப்பின் ஜனிக்கும் மகவுகள் நீடித்து வாழும். சுப்பிர மணிய சுவாமியை ஈன்ற தாயே! மேலும் கேட்பீராக.

17. அன்னையும் சிவந்த மேனி அன்புள மனத்தா ளாமே
முன்கோபம் பின்பு சாந்தம் உயர்வான குடும்ப மேற்பள்
தன்துணை ஆண்பா லொன்று தங்கிடும் கன்னி சேதம்
அன்னவர் குடும்ப லேச்சல் அறைகிறோம் கேட்டி டாயே.

17. ஜாதகனின் அன்னையினுடைய சரீரம் சிவப்புநிறமுள்ளது. எல்லோ ரிடமும் அன்பு கொண்டவள். முன்கோபி. ஆனால் பின்பு சாந்தமாவாள். உயர்ந்தகுடும்பமுள்ளவளாவாள். அவளுக்குச் சகோதரன்ஒருவன். சகோதரி பிறப்பாள். ஆனால் சேதமாவாள். அந்தச் சகோதரனின் குடும்பம் பலக் கஷ்டங்களுக்கு உள்ளாகும். தேவியே! மேலும் கேளுங்கள்.

18. மாதுரு பூர்வம் சொல்வேன் அரக்கர்வாழ் இலங்கைத் தீவில்
தீதிலாக் கங்கை சேயாய் ஜனித்துமே சுகமுள் ளோளாய்
காதலி வாழு நாளில் கழறுவோ மூழி தானும்
தீதாக நாத்தி பேரில் செப்பினுள் சிலேடை வார்த்தை.

18. ஜாதகனின் தாயினுடைய முன் பிறவியைக் கூறுவேன். இவள் அரக்கர்கள் வாழ்ந்திருந்த இலங்கைத் தீவில் வேளாள வமிசத்தில் ஜனித்து கணவன் குழந்தைகளுடன் வாழுங்காலத்தில் இவளுக்குண்டான பாவத்தைக் கூறுவோம். எவ்வித குற்றமும் செய்யாத நாத்தூணங்கை பேரில் பரிகாசமாகவும் குத்தலாகவும் பேசினுள்.

19. கன்னிகை வருத்த முற்றுக் கழறுவாள் சாபம் தானும்
பின்னமாய் என்மேல் குற்றம் புகன்றவிப் பாவிக் கேதான்
பின்வரும் ஜன்மம் தன்னில் பெண்துணை தோஷ மாயும்
தன்வரன் வேறு சாதி சார்ந்திடு மென்று சொன்னுள்.

19. அதனுல் வருந்திய அந்தப்பெண், "அகாரணமாக என்மேல் குற்றம் சொன்னபாவியாகிய நீ, வரும் ஜன்மத்தில் சகோதரி அற்றவளாக இருப்பாய். மேலும் உன் கணவன் ஓர் ஊரிலும் நீ வேறு ஓர் ஊரிலும் பிறந்து வாழ்வீர்கள், "கணவனும் வேறுஜாதியில் பிறந்தவனுவான்" என்றுள்.

20. தெருத்தூளைத் தூற்றிச் சென்றுள் சேர்ந்திடு மந்தத் தோஷம்
மற்றொன்று சொல்லக் கேண்மோவறுமையோர்க் கிடைஞ்சல் [செய்தாள்
சிறுமையோர் சொல்லும் சாபம் ஜனித்தஇல் பாழ தாகும்
உரைத்துமே சென்று ரென்றேம் உத்தமி கேட்டி டாயே.

20. இவ்வாறு சொல்லிவிட்டுத் தெருத்துகளைவாரி இறைத்தாள். அந்தப் பாவம் இவளைச் சார்ந்தது. மற்றொன்றும் இவளுக்குச் சம்பவித்தது. வறுமையினுல் கஷ்டப்படுபவர்களுக்கு இவள் மேலும் கஷ்டத்தை உண்டு பண்ணினுள். ஆகையால் அவர்கள், "நீ பிறந்த வீடு பாழாகக்கடவது" என்று சொல்லிச் சென்றனர்.

21. மாதுவு மந்தி யத்தில் வாயுவால் மரண மாகி
மேதினில் பிரமன் லக்கம் மேவினுள் மலாய் தேசத்தில்
காதலி நாத்தி சாபம் கலந்திடு மிச்சென் மத்தில்
வேதனை வாயு பீடை மேவிடும் கன்னிக் கேதான்.

21. இவள் கடைசி காலத்தில் வாயுவினுல் வேதனைப்பட்டு மரணமடைந் தாள். பிரம்மன் இவளை மலாய் தேசத்தில் படைத்தான்.முன் சென்மத்தில் விடுத்த சாபம் இச் சென்மத்தில் இவளுக்குப் பலித்திடும். மேலும் வாயு ரோகத்தினுல் கஷ்டப்படுவாள் என்றும் அறிவிக்கின்றேம்.

22. மறுஜன்மம் அன்னுள் தன்னில் மருவுவாள் போகர் வர்க்கம்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வதி வாழ்வா ளாகும்
பெரும்தந்தை பூர்வம் சொல்வேன் புலியூரில் வைசியச் சேயாய்ப்
பிறந்தன னிவனே யென்றேம் பூமியில் செட்டு செய்து;

22. மறு ஜன்மத்தில் அவள் "போகர்" குலத்தில் பிறந்து, லக்ஷ்மீ கடாக்ஷம் பொருந்தியவளாகி, சிறப்புடன் வாழ்வாள். இனி, தந்தையி னுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவேன். திருப்பாதிரிப் புலியூரில் வைசிய குலத்தில் பிறந்து வியாபாரம் செய்து;

23. சுகமுள குடும்பி யாகித் தோகையர் மதலை யுண்டாய்
வகையுடன் வாழு நாளில் வரைந்தனை் கணக்கில் மோசம்
தகைமையா யேழைச் சாபம் ஜனித்தவூர் தன்னை விட்டுப்
பகையாக வேறு நாடு பாவியே வாழ்வாய் நீயும்.

23. சுகமாக மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாகி வாழும் காலத்தில் ஏழைகளுடைய கணக்கில் மோசம் செய்தான். ஆதலால் அவர்கள் " நீ மறு பிறவியில் ஜனித்த ஊரில் சிறிதும் சீவிக்கமுடியாமல் வேறு ஊருக்கு ஓடிப்போய் உயிர் வாழ்வாய் " என்று சொன்னார்கள்.

24. அன்னிய ஜாதி மாதை அணைத்துமே வாழ்வாய் நீயும்
மன்னர்பா லரசு செய்து மத்தியில் நீங்கி வாழ்வாய்
இன்னவாறு சொல்லிச் சென்றார் எய்திற்று அந்தத் தோஷம்
பின்னையும் வேறு காணுன் புக்கினன் கால னூடு.

24. மேலும் வேறு சாதியில் பிறந்த மாதை மனைவியாகக் கொண்டு வாழ்வாய். முதலில் அரசர்களின் ஆதரவால் அதிகாரம் பெற்று, பிறகு அவ்வதிகார பதவியை விட்டு நீங்கி வாழ்வாய். அந்தப் பாவமும் இவனுக் கேற்பட்டிருந்தது. இவைகளைத் தவிர வேறு பாவங்கள் செய்யாதவனாக வாழ்ந்து கடைசியில் காலன் நாட்டிற்கு ஏகினான்.

25. சிரநான்கோன வரையப் பட்டு ஜனித்தவ னிவனே யென்றும்
மருவிடும் ஏழைச் சாபம் மறுநாடு வாச மாகும்
வருமனை வேறு ஜாதி மன்னர்பா லரசு செய்து
திருகாகுமென்று சொல்வோம் ஜைமுனி தடுத்துச் சொல்வார்.

25. நான்முகப்பிரம்ம தேவனால் இங்குப் பிறப்பிக்கப் பட்டிருக்கிறான். அந்த ஏழைகளின் சாபத்தினால் வேறு நாடு சென்று ஜீவிப்பான். வரும் பாரியையும் வேறு ஜாதியில் பிறந்தவளாவள். அரசர்களால் உத்யோகம் பெறுவான். ஆனால் அப்பதவியும் இவனுக்கு நிலைக்காது ஒழியும். இவ்வாறுசொல்லக் கேட்ட ஜயமுனிவர் சொல்லுவார்.

26. எந்தக் காலத்தில் குற்றம் எய்திடும் விவரம் சொல்வாய்
வந்தவன் மூன்று மாண்டில் மருவிடும் மரசு நீங்கும்
பிந்தியும் நாலா மாண்டில் பெறுவனும் ராஜ யோகம்
சந்ததம் இருபா ணுண்டும் செப்புவோ மரசு தானே.

26. எந்தக் காலத்தில் அரசாங்க உத்யோகம் இவனை விட்டு நீங்கும் ? இதை விவரமாகச் சொல்லுங்களென, முனிவர் கூறுவார். ஜாதகன் ஜனித்த மூன்றுமாண்டில் அரசாங்க பதவி நீங்கும். அதன்பின் நான்கா மாண்டில் மறுபடியும் " அரசு " பெறுவான். இருபது வருஷங்களுக்கு அப்பதவியில் இவன் இருப்பான்.

27. மத்தியில் குற்றம் நேரும் வகைதனைச் சொல்லு மென்னச்
சத்தியற் றோர்கள் சாபம் சார்ந்தது இதுவல் லாமல்
குத்தமாய்ச் சனியின் தோஷம் கூறும்ஏ முரையாண் டாகும்
இத்தகை யாலே துன்பம் எய்திடு மற்பத் தாலே.

27. இவ்வாறு மத்தியில் என் குற்றம் நேரவேண்டுமெனக் கேட்க, முனிவர் பதிலுரைத்தார். ஏழைகள் சாபம்தான் காரணம். இதற்குச் சரியாக " ஏழரை வருஷ " சனியும் இவனைப் பிடித்துக் கொள்வான். ஆகையால் அல்ப காரணத்தினால் பல துன்பங்களை அனுபவிப்பான்.

28. மதிதசை ராகு புத்தி மருவும்கா லங்கள் நேரும்
அதுமுதல் சேயின் காலம் அரசுமே ஓங்கு மென்றும்
பதியது இரண்டு நேரும் பாருளோர் வசிய மாகும்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

28. இந்நிகழ்ச்சிகள் ஏற்படும்போது ஜாதகனுக்கு சந்திரதசையில் ராஹு புக்தி நடைபெறும். அதன் பின் சந்திரதசை குருபுக்தி ஆரம்பித்து " ராஜ யோகம் " விருத்தியடையும். இரு வீடுகள் ஏற்படும். உலகத்தினர் இவனுக்கு அனுகூலம் செய்வார்கள். அதிதியை ஆதரிக்கும் அன்னையே ! மேலும் கேளுங்கள்.

குறிப்பு—

" दशेशत्रीः अरिगेह भाजः लग्नेश शत्रोरथवापि भुक्तौ ।
शत्रोर्भयं स्थान लयः तदास्य स्निग्धोऽपिशत्रुत्वमुपैतिनूनम् ॥"

என்ற பலதீபிகை சுலோகத்தைக் காண்க. [அத் 20 சுலோகம் 28 இதன் கருத்து " தசாநாதனுக்குச் சத்ருவான புக்திநாதன், சத்ரு வீட்டில் இருக்கும் கிரஹம், லக்னாதிபதிக்கு விரோதியான கிரஹம், இவைகளுடைய புக்தி நடைபெறும்போது, ஜாதகனுக்கு எதிரிகளால் பயம், பதவி நாசம் நண்பர்களுடனும் பகைமை இவைகள் ஏற்படும். இவ்விதி எல்லா சாதகங் களுக்கும் பொருந்தும்.

29. பின்ஜன்மம் இலங்கைத் தீவில் பிறப்பனும் சைவச் சேயாய்
மன்னர்பா லரசு செய்வன் வறுமைகள் காணு னுவன்
....
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

29. இவன் மறு பிறவியில் இலங்கைத்தீவில் சைவ குலத்தில் பிறந்து அரசாங்க உத்யோகம் செய்து வாழ்வான். வறுமை இல்லாதவனாகவும் ஆவான். விநாயகரைப் பெற்ற தாயே ! மேலும் கேட்பீராக.

30. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் பாண்டி நாட்டில்
தீதிலாச் சைவ சேயாய்ச் ஜனித்துமே கிருஷி செய்து
மாதவர் பத்தி பூண்டு மார்க்கத்தில் தாகப் பந்தல்
மேதினில் தலங்கள் சென்று வினையது இல்லா னுகி

30. இனி சாதகனுடைய முன் சென்மத்தைக் கூறுவோம். இவன் முன் பிறவியில் பாண்டிய நாட்டில் பரிசுத்தமான சைவ குலத்தில் பிறந்து; விவசாயம் செய்து சீவித்து வந்தான். தவசிகளிடம் பக்தி கொண்டு

இருந்தான். பலரும் நடந்துசெல்லும் பாதையில் தாகப்பந்தல் நிறுவினன். பல புனித ஸ்தலங்களுக்கும் யாத்திரை சென்ருன். ஒருவித பாவமும் செய்யாதவனுக வாழ்ந்து;

31. மறலியின் பதிக்குப் புக்கி மால்மகன் வரையப் பட்டுத்
திருமகன் மலாய்தே சத்தில் ஜனிப்பனு மிந்தப் பாலன்
உரைக்கிறே மிவனின் யோகம் உலகிற்கு நல்லோ னுவன்
பரிவண்டி யுடையா னுகும் பார்மன்னர் மெச்ச வாழ்வன்.

31. யமனுலகம் சென்ற இவனேப், படைக்கும் தேவன் மலாய் தேசத்தில் பிறப்பித்திருக்கின்ருன். இச் சாதகனுடைய யோகத்தைக் கூறுவோமாக. எல்லோருக்கும் நல்லவனுவான். குதிரை வண்டி முதலிய வாஹன வசதிகள் உடையவன். மன்னர்களும் கௌரவிக்கும் வகையில் சிறப்பாக வாழ்வான்.

32. ஈரொன்ப தாண்டு மேலாய் எய்திடும் ராஜ யோகம்
கூறுவோம் நாற்பா னெட்டும் கோவலர் தன்னு னுய்வன்
மாறி ய அதன்மே லாவி மரணமட் டவரால் உய்வன்
சேருமூ வேழாயி ரம்பொன் செல்வதி கேட்டி டாயே-

32. பதினெட்டு ஆண்டுகளுக்கு மேல் "ராஜ யோகம்" இவனுக்கு ஏற்படும். நாற்பத்தெட்டாவது வயது வரையில் அரசர்களின் ஆதரவால் அதிகாரம் பெற்று வாழ்வான். அதன்பின், சிறிது மாறுதலேற்பட்டு மறுபடியும் அவர்களாதரவினுல் ஆயுள் வரையில் வாழ்வான். இவன் இருபத்தோராயிரம் பொற்காசுளேச் சம்பாதிப்பான். அன்புள்ள அன்னேயே! மேலும் கேளுங்கள்.

33. முப்பது ஆறு ஆண்டில் முயல்மேட மாதம் தன்னில்
செப்புவோம் தந்தை கண்டம் சென்றுபின் நாற்ப தாண்டில்
ஒப்புடன் மகர மாதம் உரைக்கிறே மன்னே கண்டம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

33. ஜாதகனுடைய முப்பத்தாறும் வயதில் சித்திரை மாதத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்பட்டு அவன் இறப்பான். நாற்பதாம் வயது நடை பெறுகையில் தைமாதத்தில் ஜாதகனின் தாய் மரணமடைவாள். கங்கையைச் சடையில் அணிந்த சிவபிரானின் தேவியாரே! நாங்கள் சொன்ன மொழி குன்ருது.

34. அறுபது ஒன்று ஆண்டில் ஆவணி மாதம் தன்னில்
திருமகனுடலம் ஏகும் செப்புவோம் பின்ஜன் மத்தைப்
பெருநதி சேது தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில்
குறைவிலாக் குடும்பி யாவன் கோமளி கேட்டி டாயே

34. ஜாதகன், தனது அறுபத்தோரும் ஆண்டில் ஆவணி மாதத்தில் தேக வியோகமடைவான். இவன் பின் ஜன்மத்தையும் சொல்லுகின்ரேம். இவன் வரும் பிறவியில் சேதுவில் இதே குலத்தில் பிறந்து குறைவில்லாத குடும்பியாகி வாழ்ந்திடுவான். மேன்மையான மேனி வாய்ந்தவளே! மேலும் கேட்பீராக.

35. உதித்திடு ஜனன காலம் உத்தராடம் மூன்றும் பாதம்
கதிர்தசை யிருப்பு ரண்டு ஆண்டுமே கழறு வோம்யாம்
மதிதலம் நேர லாகும் மன்னனும் பிணியால் வாடும்
அதிதியை ஆதரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

35. ஜாதகன் உத்தராடம் மூன்றும் பாதத்தில் ஜனித்திருக்கின்ருன். ஆகையால் சூரிய தசையில் இருப்பு வருஷங்கள் இரண்டு. இத்தசையின் பலனேக் கூறுவோம். வேறு இடத்தில் வாசம் செய்ய நேரிடும். ஜாதகன் பல பிணிகளால் துன்பமடைவான். அதிதி தேவிக்கு அருள்புரியும் அன்னேயே! மேலும் எங்களேக் கேட்டருளல் வேண்டும்.

ஜாதகம் 49

1. பிறைதனு புதனும் சாடி புகர்பரி யோனு மீனம்
கரியவன் மேட மாகக் கனகனும் கேது நந்தி
தரைமகன் வீணை புக்கச் சர்ப்பமும் பரப்பி லேற
வருவது ஜன்மம் நண்டு வரைகுவீர் பலனைத் தானே.

விருஷஹு பங்குனியீ 2-ஆம் உ செவ்வாய்க்கிழமை பகல் நாழிகை 20-க்கு மேல் 25-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 14-3-1882.

நவக்கிரஹங்களின் பாத சாரம்.

பூரட்டாதி 4-இல் சூரியன், பூராடம் 4-இல் சந்திரன், திருவாதிரை 2-இல் செவ்வாய், அவிட்டம் 4-இல் புதன், கிருத்திகை 2-இல் குரு, உத்தரட்டாதி 2-இல் சுக்கிரன், பரணி 2-இல் சனி, அனுஷம் 3-இல் ராஹு, ரோஹிணி 1-இல் கேது, நக்ஷத்திரம் பூராடம். சுக்கிரதசை இருப்பு வருஷங்கள் நான்கு, மாதம் ஒன்று.

சுக்கிரன் சூரியன்	சனி	குரு கேது	செவ்வாய்
புதன்	இராசி		லக்கினம்
	சக்கிரம்		
சந்திரன்	ராஹு		

1. சந்திரன் தனுஸ், புதன் கும்பம், சுக்ரன் சூரியன் மீனம், சனி மேஷம், குரு கேது விருஷபம், செவ்வாய் மிதுனம். ராஹு விருச்சிகம். இலக்கினம் கடகம். இக் கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதிதேவி வினவினாள்.

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது ஆண்பால் ஜன்மம்
வருமில்லம் வடக்குப் பார்வை மாதுக்கு இல்ல மாகும்
பெருநகர் கீழ்மேல் வீதி பெருவயி றப்பன் மேற்கில்
நரிவாக னத்தா ளுத்திரம் நன்னதி கீழ்ப்பா லாகும்.

2. இவ்வாறு உமையவள் கேட்க, அகஸ்த்திய முனிவர் பலன்களைக் கூறுவாரானார். இக்கோள் நிலையில் ஜனித்த மகவு ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திடும். இல்லம் வடதிசை நோக்கும். தாயின் கிருஹத்தில்

ஜனித்திருக்கின்றான். ஊர் பெரிய நகரமாகும். மேற்கில் கணபதி வாசம் செய்வார். காளிதேவி வட திசையில் தங்குவார். கீழ்த்திசையில் ஒரு புனித நதி பெருகும்.

3. இத்தகைய மாடி சூழ்ந்த இளவனும் ஜனன மாகும்
பெத்ததாய் தந்தை யோகம் பின்துணை களத்திர புத்திரர்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் சாந்திய மின்நூல் தன்னில்
சத்தியே சொல்லு கின்றோம் தந்தையின் வர்க்கம் கேளாய்.

3. இத்தகைய மாடிகள் சூழ்ந்த ஊரில் ஜாதகன் ஜனித்திருக்கின்றான். ஜாதகனுடைய தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்கள் சாந்திகள் இவைகளைப் பற்றியும் இந்நூலில் சொல்லப் போகின்றோம். முதலில் தந்தை வருக்கத்தைக் கூறுவோம்; கேட்பீராக.

4. ஆணது மூன்று என்றோம் அவ்வாறே கன்னி யாகும்
நாணிடும் மற்ற வெல்லம் நாயகன் வேறுய்ச் செல்வன்
பூணுவோம் பாகம் நான்காய்ப் போகிடு மொருவன் தானும்
காணுது சுதர்கள் தாமும் கண்டித மிருவர் விருத்தி.

4. ஜாதகனின் தந்தைக்கு மூன்று சகோதரர்கள். அவ்வாறே மூன்று சகோதரிகள். மற்றைய குழந்தைகள் நீடித்திரா. மொத்த சொத்துக்கள் நான்காகப் பிரிக்கப்படும். ஜாதகனின் தந்தை தனியாக வாழ்வான். இரு சகோதரர்களின் குடும்பம் விருத்தியடையாது. மற்ற இரு சகோதரர்களின் குடும்பம் விருத்தியடைந்து இவ்வுலகில் ஸ்திரமாக விளங்கிடும்.

5. எந்தக்கா லத்தில் செல்வர் இயம்புவீர் முனியே நீர் தாழ்
வந்தவ னிவன்வ ழாண்டில் வரைந்தன மந்தச் சங்கை
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாகச்
சந்ததம் பிதாகு ணத்தைச் சாற்றுவோம் தாயே கேளும்.

5. எந்தக் காலத்தில் குடும்பப் பிரிவினை ஏற்படும்? அதை விவரமாகச் சொல்லுமெனக் கேட்க, அகஸ்தியர் கூறுவார். ஜாதகன் பிறந்து ஏழாவது ஆண்டில் அந்நிகழ்ச்சி நடைபெறும். பின்பாகத்தில் இவ்விஷயத்தை விவரமாகத் தெரிவிப்போம். இனி தந்தையின் குணத்தைப் பேசுவோம். அன்னையே! கேளுங்கள்.

6. சீலவான் சிவந்த மெய்யன் தேகமு மெணச்சல் நீட்சி
காலத்தை அறிந்து வாழ்வன் கட்டுரை பகரா னுகும்
ஞாலங்க ளதிக மில்லான் நன்மொழி கல்வி கொஞ்சம்
பால்பாக்கிய மில்லா னுகும் பண் போர்க்கு உதவி செய்வன்.

6. நற்சீல முள்ளவன். சிவந்த மேனியான். சரீரம் மெலிந்து உயர்ந்திருக்கும். காலத்திற்கேற்றபடி தன் வாழ்க்கையை மாற்றிக் கொள்வான். அடுக்கு வார்த்தைகளைப் பேச விருப்ப மில்லாதவன். பூமிகள் அவனுக்கு

அதிக மிரா. கொஞ்சம் கல்வியறிவும் உடையவன்தான். பால்பாக்கிய மில்லாதவன். நல்ல டண்பு படைத்த பெரியோர்களுக்குச் சிரத்தையுடன் உதவிபுரிவான்.

7. சுகதுக்க முடையா னுகும் தூசுகள் தன்னு லுய்வன்
பகையென்று மனத்தில் எண்ணுன் பரிந்துப சாரம் செய்வன்
அகமது வேறு செய்வன் அடக்கமாம் வார்த்தை யுண்டு
செகமதில் நல்லோ னுவன் செலவுளன் சல்லிய முள்ளான்.

7. இவனுடைய வாழ்க்கையில் சுகதுக்கங்கள் அடிக்கடி மாறி மாறி வரும். வஸ்திர வியாபாரத்தினுல் ஜீவிப்பான். பகைமையை மனத்தில் நிலேத்து வைத்திருக்காதவன். வருமவர்களுக்குப் பரிவுடன் உபசாரம் செய்வான். வேறு புதியதொரு வீடு கட்டி வாழ்வான். வணக்கம் தொனிக்கும் வார்த்தைகளேப் பேசுவான். எல்லோரிடமும் நல்லவனுகப் பழகுவான். அதிகச் செலவு செய்பவன். ஆகையால் கடனும் வாங்குவான்.

8. இக்குண முடையா னுக்கு இவனுமே சேஷ்ட னுக
மிக்கவே யுதிப்பா னுகும் விளம்புவோ மிவன்கு ணத்தைத்
தக்கவே கல்வி கற்பன் தறித்தொழில் புரிவா னுகும்
சிக்கன மில்லா னுகும் சிவந்தமெய் யுடைய னுகும்.

8. இத்தகைய குணம் உடையவனுக்கு இப்பாலன் மகனுகப் பிறந்திருக்கின்றுன். இவன் குடும்பத்திற்கு ஜ்யேஷ்டன். தக்க வித்தையைக் கற்றவன். தறித்தொழிலே ஜீவனத்திற்காக நடத்துவான். அதிகச் செலவுகள் செய்பவன். சிவந்த மேனியுடையவனுவான்.

9. ஊகைவா னுணச்சல் தேகி உண்மையா மனத்தா னுகும்
ஆகமம் அதிகம் காணுன் அடைந்தோரை ஆத ரிப்பன்
போகபாக் கியங்கள் பின்னுல் பெறுவனும் வறுமை காணுன்
தோகையர் வந்த பின்பு செப்புவோம் யோகம் தானே.

9. மதியூகம் உடையவன். மெலிந்த சரீரம் வாய்ந்தவன். உண்மையான மனம் படைத்தவன். சாஸ்திர தத்துவங்களே அதிகம் அறியாதவன். தன்னே அண்டியவர்களே ஆதரிப்பான். பிற்காலத்தில் போக்கியப் பொருள்களேப் பெறுவான். வறுமை இல்லாதவன். இவனுக்கு மணமான பிறகு யோகங்கள் விருத்தியாகும்.

10. எப்படி யோகம் சொல்வீர் இயம்புவீ ரந்தச் சங்கை
ஒப்புடன் தனத்தோன் லாபம் ஒன்பதி லிருப்ப தாலும்
மெய்ப்புடன் லாபம் தன்னில் மெய்ஞ்ஞானி பொன்னேன் சேரச்
செப்பினேன் யோகம் தானும் ஜனித்தவ னந்தி யத்தில் ;

10. இவனுக்கு எவ்வாறு யோகங்கள் உண்டு? அதன் காரணத்தைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி தேவி கேட்க, அகஸ்தியர் பதிலுரைக்

கின்றுர். தனுதிபதியான சூரியன் பாக்கியத்தில் இருப்பதாலும், பாக்கியாதிபதியான குரு பதினேராமிடத்தில் [லாபத்தில்] கேதுவோடு இருப்பதாலும் இச்சாதகனுக்கு யோக முண்டு. அந்தியகாலத்தில் ;

11. பிறைபோலே யோகம் வாய்க்கும் பூமியில் தரியா லும்தான்
உறைந்திடும் லாபம் தானும் உலகினில் சல்லியம் காணுன்
வருந்துணே ஆண்பால் நான்கு மாதுவு மிரண்டு தீர்க்கம்
உரைக்கிறேம் பின்பால் சேதி உத்தமி கேட்டி டாயே.

11. வளர்பிறைச் சந்திரன் போல யோகங்கள் வளர்ந்திடும், இவனுக்குப் பூமிகளாலும் தரித்தொழிலாலும் லாபங்கள் கிடைக்கும். கடன் இல்லாதவன். இவனுக்குச் சகோதரர்கள் நால்வர் ; சகோதரிகள் இருவர். இந்த ஆறு உடன் பிறந்தவர்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். இவர்களேப்பற்றிய வரலாறுகளேப் பின்பாகத்தில் தெரிவிப்போம். ஜாதகனுடைய வரலாறுகளே மேலும் கேளுங்கள்.

12. பாரியு மிருபான் ரண்டில் பகருவோ மன்னே வர்க்கம்
நாரியும் உள்ளூ ராகும் நவிலுவோ மவள்கு ணத்தைத்
தீரமில் லாத நெஞ்சம் சிலகது ஒருவர்க் கெண்ணுள்
தேரினேர்க் கன்ன மீவள் சீக்கிர கோபி யாவள்.

12. ஜாதகனுக்கு இருபத்திரண்டாம் வயதில் மணம் நடைபெறும். மணமகள் உள்ளூரில் தாய் வருக்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணங்களேக் கூறுவோம். உறுதியில்லாத உள்ளம் படைத்தவள். ஒருவருக்கும் கெடுதலே எண்ணுதவள். பெரியோர்களுக்குச் சிரத்தையுடன் அமுதளிப்பாள். வெகு சீக்கிரத்தில் இவளுக்குச் சினம் தோன்றும்.

13. உடன்படாள் பிழைக ளுக்கு உத்தமி நடக்கை நன்மை
அடல்மிகு செய்கை யுண்டு கணவனுக் கினியா ளாகும்
அடவுடன் வயது தீர்க்கம் அத்திரி தடுத்துச் சொல்வார்
விடமைந்தில் ஏழோ னீச்சம் விரயத்தில் சேயும் தங்க.

13. குற்றங்களில் ஈடுபடாதவள். நன்னடக்கை உடையாள். கொஞ்சம் பிடிவாத குணமுண்டு. கணவனுக்கினியவள். அவள் தீர்க்காயுர்யோகம் வாய்ந்தவள். இவ்வாறு சொல்லக் கேட்ட அத்திரி மறுத்து உரைப்பார். ராஹு ஐந்தாமிடத்தில, ஏழாம் பாவத்திற்கு உடைய சனி நீசம். செவ்வாயோ பன்னிரண்டாமிடத்தில் இருக்கின்றுன்.

14. இருமனே யனுகு மென்றேம் இயம்புவார் பராசர் தாமும்
பரிதியு மிரண்டோ னுகிப் பாஸ்கரன் கூடி யேதான்
தருமதா னத்தில் தங்க ஜனித்திடு புரத்தில் நல்லோர்
பெருமையா யிருப்ப தாலே பேசொணுத் தாரம் ரண்டு.

14. ஆகவே ஜாதகனுக்கு இருமனேவி உண்டு. [இவளுக்கு வயது தீர்க்கமென்று சொல்லக் கூடாதென்பது கருத்து.] இதற்கு முனிவா பராசர்

பதில் கூறுவார். குடும்பாதிபதியான சூரியன் தரும ஸ்தானத்தில் இருப்பதாலும், பலம் பொருந்தியவர்களாக இருப்பதாலும் ஜாதகனுக்கு மனைவி ஒருத்திதான். இருமனைவிமார்கள் என்று சொல்லுவது யுக்த மன்று.

வேறு

15. இதற்குநே ரிடையாய் ஜாதக சுருதியில்
ஏழாம்பா வத்தினில் பாரு
அதில்சொல்லும் விவரம் இரண்டேழோன் கேந்திரம்
ஆகிலும் கோணத்தில் இருக்கச்
சதமுடன் மனைவி ஒன்றென மொழிந்தோம்
சங்கைள் சிலதுமே யுண்டு
வதிபதி யன்னை தந்தையர் தமக்கு
மாதரு இரண்டுமே வரைவோம்.

15. இதற்காதாரமாக சோதிட சாஸ்திரத்திரத்தில் களத்திர பாவத்தைச் சொல்லும் அத்தியாயத்தைப் பார்ப்பீர்களாக. அந்த அத்தியாயத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிற தென்றால், ஏழாம் பாவத்திற்கு உடையவன்; அல்லது குடும்பபாவத்திற் குடையவன்; இவர்கள் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருப்பார்களாயின் அச் சாதகனுக்கு ஒரே மனைவிதான் உண்டு என்பது. செவ்வாய் பன்னிரண்டிலிருப்பதாலும், சனி நீசம் பெற்று இருப்பதாலும் ஜாதகனுக்குப் பிற மாதின் தொடர்பு தகாத வழியில் ஏற்படுமேயன்றி இரண்டாவது மனைவி நிச்சயமாக ஏற்படமாட்டாள். ஜாதகனுடைய தாயின் தந்தைக்கு இரு மனைவிமார்கள் உண்டு.

வேறு

16. சுதர்களும் காணு தாகும் தோன்றினும் நீதே யாகும்
எதுவித கார ணத்தால் இயம்பீனீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தில் ராகு பொருந்தியே சேய்விர யத்தில்
விதியவ னீச மாக விளம்பினேம் தாயே யாங்கள்.

16. இச் சாதகனுக்குச் சந்ததி தோன்றாது. தோன்றினும் அழியும். அதற்கென்ன காரணம்? அதை விளக்குவீராக எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுவார். புத்திரபாவம் என்று சொல்லப்படும் ஐந்தாமிடத்தில் ராஹு இருப்பது ஒரு காரணம். அந்தப் பாவத்திற்கு உடைய செவ்வாய், பன்னிரண்டில் இருப்பது மற்றொரு காரணம். சனி நீசனாக இருப்பதும் மூன்றாவது காரணமாகும்.

17. முன்ஜன்மம் வினைய னேகம் மேவிற்றுப் பால னுக்கு
என்னஊழ் செய்தா னத்தை யியம்புவீர் முனியே நீதான்
தென்திசை நவபா ஷாணத் தீர்த்தமா நகரி லேதான்
பின்குல மதினுதித்துப் பேதையர் மதலை யுண்டாய்.

17. ஆகவே முன் சென்மத்தில் பெரிய பாவத்தைச் செய்திருக்கின்றான். அது இவனைப் பற்றிக்கொண்டது. என்ன பாவம்? சொல்லுங்கள் என உமாதேவி வினவ, முனிவர் சொல்லுகின்றார். தென் திசையிலுள்ள நவபாஷாணம் என்ற க்ஷேத்திரத்தில் பின் குலத்தில் பிறந்து பாரியை மகவுகளுடன்;

18. இல்லத்தில் வெகுநா ளாக இருந்தது நாக மொன்று
அல்லலாய் மருடத் தாலே அதுமுத்த மதனில் செல்ல
வல்லவ னரங்கம் செய்து வாட்டினன் கழியி னாலே
புக்கிற்றுக் கால னுடு புக்கிற்று அந்தத் தோஷம்.

18. முன் பிறவியில் இவனது இல்லத்தில் ஒரு பாம்பு வசித்து வந்தது. அது ஒரு நாள் வெளியே செல்லும்போது அதை இவன் தடியால் அடித்துக் கொன்றுவிட்டான். அந்தப் பாவம்தான் இவனைப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

19. மறுவினை காணு ருகும் மாரனும் அந்தி யத்தில்
உறும்சுதர் யாவும் நீங்கி உலகமேல் சஞ்ச ரித்து
மறலியின் பதிக்குப் புக்கி மால்மகன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா னுகும் சேர்ந்திடு முன்னூழ் தோஷம்.

19. வேறுபாவம் ஒன்றும் இவன் செய்தவனல்லன். கடைசியில் தன் பிள்ளைகள் எல்லாரையும் இழந்து உலகில் திரிந்து முடிவில் இறந்தான். அவனை, விஷ்ணுவின் மகனாகிய பிரம்மதேவன் இப்பொழுது கடக லக்னத்தில் பிறப்பித்திருக்கின்றான். முன்ஜன்ம பாவம் இவனைத் தொடர்ந்து வருகின்றது.

20. மதலைகள் தோஷ மெய்தும் வரைகிரேம் கிரியை தானும்
அரவுமே சிலையால் செய்து அரசின்கீழ் வைத்து இன்னேன்
முருகர்தம் விரதம் கொள்ள மூண்டஊழ் விலகி யேதான்
பிறந்திடும் சுதர்கள் தீர்க்கம் புண்ணிய சாலி கேளாய்.

20. ஆகையால் புத்திரர் தோன்றினும் அழிவார்கள். அவ்வினைகள் நீங்க ஒரு சாந்தி கூறுவோம். சிலையில் ஒரு நாகத்தைச் செய்து அதை அரசமரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்து கிருத்திகை விரதமும் இருப்பானாகில், தொடர்ந்து வரும் வினை நீங்கும். புத்திரர்களும் உதிப்பார்கள். தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். கருணைக்கடலே! மேலும் கேட்பீராக.

21. சொற்படி செய்யா னுகில் துலங்காரே சுதர்கள் தாமும்
சொற்படி செய்வா ராகில் தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி விழியாள் ரெண்டு வரைந்தனன் தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றாது.

21. முனிவர்களாகிய நாங்கள் சொன்னபடி செய்யானாகில் சந்ததி விளங்காமல்போகும். நாம் சொன்னபடி சாந்திகளைச் சிரத்தையுடன்

செய்வானுகில் ஒரு பிள்ளையும் இரண்டு பெண்களும் பிறந்து தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். கங்கையைச் சடையில் அணிந்த சிவபிரானின் தேவியாரே! நாங்கள் சொன்ன மொழி தவருது நிச்சயமாக நடைபெறும்.

22. அன்னைமாஞ் சிவப்ப ளாகும் அன்புள மனத்த ளாகும்
கன்னென மொழியே சொல்வாள் கடந்தோர்கட் கன்ன மீவள்
நன்னடை துணையாண் ரண்டு நாயகி ஒன்றே தீர்க்கம்
கன்னிதா யில்ல முள்ளூர் கழறுவோம் மாமன் சேதி.

22. ஜாதகனின் அன்னை மாநிற முள்ளவள். அன்பு நிறைந்த மனம் படைத்தவள். கரும்பு போல் இனிய மொழிகளைப் பேசுவாள். பெருந் தவசிகளுக்கு அமுதளிப்பாள். நல்ல நடத்தை உடையவள். இவளுக்கு இரு சகோதரர்களும் ஒரு சகோதரியுமுண்டு. இவள் பிறந்த ஊரிலேயே வாழ்க்கைப்பட்டிருக்கின்ருள். ஜாதகனுடைய மாமன் வரலாறுகளைப் பேசுவோம்.

23. முன்னவன் ஊகை சாலி மொழியதைக் காப்பா ளுகும்
பொன்பொரு ளுடைய ளுகும் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்
பன்னுவான் ஞான நூலைப் பாரினில் வறுமை காணுன்
தன்மனை ஒன்றே தோன்றிச் சத்திபால் துன்ப மெய்தி;

23. இரு மாமன்மார்களில் மூத்தவன் மதி நுட்பம் வாய்ந்தவன். தன் வார்த்தையைக் காப்பாற்றுவான். பொன்னையும், மற்றைய பொருள்களையும் அடைவான். தன்னைப் புகழ்ந்தவர்களை ஆதரிப்பான். வேதாந்த நூலைக் கற்பான். வறுமை இல்லாதவன். தான் ஒருத்தியை மணம் செய்து கொண்டு அவளால் துன்பத்தை அடைந்து;

24. மறுமனை நேரும் தாயே மைந்தராண் இரண்டு தீர்க்கம்
அரிவைமார் நான்கு என்றேும் அவனுக்கு வயது தீர்க்கம்
சிறியவன் சேதி கேளாய்ச் சிறுகான குணத்த ளுகும்
தரித்தொழில் தந்திர வார்த்தை சல்லியம் கொள்ளா ளுமே.

24. வேறு மாதை மணப்பான். அன்னையே! இரு பிள்ளைகளும் நான்கு பெண்களும் தோன்றி நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். அவனும் தீர்க்காயுள்யோகம் உடையவன். இனி, சிறிய மாமனின் செய்தியைக் கூறுவோம். கீழ்த்தரமான குணங்கள் உள்ளவன். தரித் தொழிலைச் செய்வான். தந்திர வார்த்தைகளைச் சொல்லுவான். கடன் இல்லாதவன்.

25 வறுமைஎப் போதும் காணுன் மனைவியு மொன்றே தீர்க்கம்
பெரும்சுதர் உதிக்கும் தீதாம் பேசுவீர் விவர மாக
அரிவைசெய் கொடுமை யாலே அச்சுதர் தோஷ மெய்தும்
அறிவிப்பீர் முனியே நீர்தாம் மாதுவின் பூர்வம் கேளாய்.

25. எந்த வயதிலும் வறுமை இல்லாதவன். இவனுக்கு மனைவி ஒருத்தி தான். பெறப்படும் பிள்ளைகளுக்குக் கஷ்டங்கள் ஏற்படும். அதற் கென்ன காரணமெனக் கேட்க, அகஸ்திய முனிவர், அவன் மனைவி முன்

ஜன்மத்தில் செய்த வினைதான் காரணமென்று கூற, மற்றைய மஹரிஷிகள் அவ்வினையை தெரிவிக்குமாறு வேண்ட, அகஸ்திய முனிவர், சொல்லுகிறேன், கேளுங்கள், என்ருர்.

26. தோகையின் மலைக்கு மேல்பால் தோன்றியே சிறுவூர் தன்னில்
பாகமாய் ரெட்டி வமிசம் பாவையு முதித்தா ளென்றேும்
போகபாக் கியங்க ளுண்டாய் புத்திரர் அதிக மாகி
சாகையில் கொல்லை தன்னில் தங்கிற்றுச் கறுப்பான் தானும்.

26. இவள் முன்ஜென்மத்தில் தோகை மலைக்கு மேற்குத்திசையில் உள்ளதொரு சிறிய ஊரில் ரெட்டி வமிசத்தில் பிறந்து, போக போக்கியங்கள் உடையவளாக, தன் கணவனுடனும் அநேக குழந்தைகளுடனும் சுகமாக வாழ்ந்திருக்கும் காலத்தில், புழக்கடையிலுள்ள ஒரு மரத்தில் கருப்பன் என்று சொல்லப்படும் காற்று உருவத்தில் சஞ்சரிக்கும் ஒரு ஆன்மா வாசம் செய்தது.

27. முன்னோர்கள் தெய்வ மாக முனைந்துமே தோத்த ரிப்பார்
கன்னிகை வணக்க மின்றிக் கருதாமல் நின்று ளென்றேும்
தொன்முனி புகலும் சாபம் செப்புவோம் தாயே கேளும்
உன்னுடைச் சுதர்கள் யாவும் உனக்குத வாமல் செய்வேன்.

27. அந்தக் கருப்பனை இவளுடைய முன்னோர்கள் தெய்வமாகப் போற்றி வழிபட்டுவந்தனர். அவ்வாறு இருக்க இவள் மாத்திரம் அந்த முனீசுவரனைத் தெய்வமாக நினைக்காமலும் வழி படாமலும் நின்றுெழிந்தாள். ஆகையால் கோபமடைந்த அந்த ஆன்மா கூறியதைக் கேளுங்கள். தாயே! உனக்குப் பிறக்கும் மகவுகளைத் தங்காமல் செய்வேன்.

28. மறுஜன்மம் தோன்றி நீயும் மைந்தர்கள் யாவும் கொல்வேன்
உரைத்துமே வேறு சாகை ஒதுக்கிற்று முனியும் தானும்
திருமக ளச்சென் மத்தில் சேயர்கள் யாவும் போக்கி
மறலியின் பதிக்குச் சென்ருள் மங்கையே கேட்டி டாயே.

28. மறு ஜன்மத்திலும் தோன்றும் பிள்ளைகளைச் சம்ஹாரம் செய்வேன், என்று சொல்லி, வேறு மரத்தில் ஒதுங்கி வாசம் செய்தது. அச்சாபத்தின்படி இவள் அந்தப் பிறவியில் எல்லாச் சந்ததியையும் இழந்தாள். அந்தியத்தில் யமனுலகம் சென்ருள். தேவியே! மேலும் கேட்பீராக.

29. வேதனுல் வரையப் பட்டு விளங்கினு ளிந்த மாது
சூதான முனியின் சாபம் சேர்ந்தது இச்சென் மத்தில்
தீதாகும் சுதர்கள் என்றேும் செப்புவீ ரதற்குச் சாந்தி
நீதியாய்க் கரும சாந்தி நிமலிக்குச் செய்ய நீங்கும்.

29. பிரம்மதேவனுல் இங்குப் பிறப்பிக்கப் பட்டிருக்கின்ருள், அவள் இக் கடக லக்கின மகனுக்குப் பாரியையாக வந்திருக்கின்ருள். அந்த முனியும் இச் சென்மத்திலும் ஒட்டி வந்திருக்கின்றது. ஆகையால்

பிறக்கும் குழந்தைகளுக்குத் தீங்கு உண்டாகும். இவ்வாறு அகஸ்திய முனிவர் சொன்னவுடன், அதற்குப் பரிகாரம் சொல்லுவீராக எனப் பார்வதிதேவி கேட்க, சாஸ்திர முறைப்படி சாந்தியைச் செய்தால் வினை நீங்கும், பிள்ளைகளும் தங்கும் என்று கூறி, பரிகார முறையை அடுத்த பாட்டில் விவரிப்பார்.

30. சாந்தியின் விவரம் எவ்வாறு சாற்றுவீர் விவர மாகக்
கூர்ந்துமே கலச மொன்பான் கூர்நவ சமித்து தான்யம்
அந்திய கலச மாடை யெய்தியே யிவளை முன்பாய்ச்
சாந்தமாய் மூலம் மந்தில் சாற்றிய மொழிபோல் கூறி.

30. ஒன்பது கலசங்களை ஒன்பது வித தானியங்களைப் பரப்பி அவைகளின் மேல் வைத்துக் கடைசி கலசத்தின் முன்பு இவளை நிறுத்தி ....

31. கூஷ்மாண்டம் பலியும் தந்து குளிச்சமும் தங்க ரேக்கும்
தாழ்விலாச் சத்தி பீஜம் தானதை வரைந்து மேதான்
தோழியு மணிந்து பின்பு சுக்கிர வார நோன்பு
சூழவே சாபம் நீங்கிச் சுதர்விருத்தி தீர்க்க மெய்தும்.

31. கூஷ்மாண்டத்தில் வைத்து நைவேத்தியம் செய்து பலியிட்டும், அதன்பின் தங்கத் தகட்டில் ஹ்ரீம் (ह्रीं) என்ற சக்தி பீஜத்தை ஆறு கோணங்களில் எழுதி இந்த மாது அணிந்துக்கொள்ளவேண்டும். மேலும் சுக்கிரவார விரதமிருக்கவேண்டும். இவ்வாறு செய்தால் அச்சாபம் நீங்கி ஜனிக்கும் குழந்தைகள் தீர்க்காயுள் பெற்றுவாழும்.

குறிப்பு.—சக்தி பீஜத்தை ஆறுகோணங்களில் எழுதி பூசை செய்து அணியவேண்டிய முறையை மூன்பகுதியில் [ஜாதகம் இருபத்து மூன்று வதில்] தெரிவித்து இருக்கின்றோம்.

32. செய்பவர் எவர்கள் சொல்வாய் சாஸ்திர மந்வோ ராலே
ஐயமில் லாமல்செய்ய அனுகிடும் சுதராண் மூன்று
மைவிழி பெண்பாலொன்று உரைந்தனம் தீர்க்க மாகப்
பொய்யிலா விந்த வார்த்தை புண்ணிய சாலி கேளாய்.

32. இந்தப்பரிகாரத்தைச் செய்பவர்கள் யாவர்? எனப் பார்வதி கேட்க, முனிவர் சுருக்கமாக பதில் கூறுகின்றார். நன்கு மந்திர சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த பெரியோர்கள் இச் சாந்தியை முறைப்படி செய்வார்கள்.

[குறிப்பு.—இவ்வாறு ஒரு ஆக்ஷேப சமாதானத்தைச் செய்து கொண்ட இந் நூலாசிரியர் பொதுவாக எல்லாப் பரிகாரங்களையும் நன்கு கற்றுணர்ந்த பெரியோர்கள் மூலமே செய்துக்கொள்ளல் வேண்டுமெனக் கருதி வற்புறுத்துகின்றார் எனக் காண்க.] இச் சாந்தியைச் செய்தால் மூன்று பிள்ளைகளும் ஒரு பெண்ணும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். எங்கள் வார்த்தை பொய்யாகாது. கருணைக் கடலே! மேலும் கேட்பீராக.

33. மாதுரு பூர்வம் தன்னை வரைகிறேம் கொங்கு நாட்டில்
தீதிலாக் கங்கை சேயாய் ஜனித்துமே சுதர்க ளுண்டாய்ப்
பாதக மனங்க ளின்றிப் பகவானின் பத்தி பூண்டு
தீதான கால னூடு சேர்ந்துமே பிரமன் லக்கம்;

33. ஜாதகனுடைய தாயின் பூர்வஜன்மத்தைக் கூறுவோம். இவள் முன்பிறவியில் கொங்கு நாட்டில் மிகப் பரிசுத்தமான வேளாள வமிசத்தில் ஜனித்து கணவன் மக்களுடன் சுகமாக வாழும்போது, ஒரு வருக்கும் தீங்கு நினைக்காதவளாகவும் கடவுளிடம் பக்தி பூண்டவளாகவும் இருந்து அந்தியத்தில் இறந்தாள். அவள்தான் பிரம்மதேவனால்;

34. வந்தனள் ஜெளரி வர்க்கம் வரைகிறே மிவள்பின் ஜன்மம்
முந்தின தலத்தி லேதான் உதிப்பளாம் செளராஷ்டர வமிசம்
செந்திரு கடாக்ஷம் பெற்றுச் செல்வதி வாழ்வா ளாகும்
தந்திமா முகனைப் பெற்ற தயாபரி கேட்டி டாயே.

34. இங்குப் படைக்கப்பட்டிருக்கின்றாள். இவளுடைய வரும் பிறவியையும் அறிவிப்போம். பிருதிவிலிங்கஸ்வரூபியாகச் சிவபிரான் எழுந்தருளி இருக்கும் காஞ்சியில் செளராஷ்டிரவமிசத்தில் பிறந்து, லக்ஷ்மீ கடாக்ஷம் பெற்று இவள் வாழ்வாள். யானைமுகம் படைத்த விநாயகரைப் பெற்ற கருணைக் கடலே! மேலும் கேட்பீராக.

35. தந்தையின் பூர்வம் தன்னைத் தானெடுத் தியம்பக் கேண்மோ
தென்திசைப் பாண்டிக் கீழ்பால் சிறப்புறும் பேரூர் தன்னில்
விந்தையாய்க் கோகு லத்தில் விளங்கியே குடும்பி யாகி
மைந்தர்கள் மனைவி யுண்டாய் ஆவுகள் பெருக்க மாக.

35. ஜாதகனுடைய தகப்பனின் பூர்வஜன்மத்தைச் சொல்லுவேன். தென் திசையிலுள்ள பாண்டிய தேசத்திற்குத் தலைநகரான மதுரைக்குக் கீழ்த்திசையிலுள்ளதொரு பெரிய ஊரில் யாதவவமிசத்தில் பிறந்து, பெருமைவாய்ந்த குடும்பியாகி மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். தன் ஜாதிச்செல்வமான பசுக்களை விருத்திசெய்து ஜீவித்து வந்தான்.

36. வருவோர்க்குத் தாக மிந்து வினையது யில்லா தாகி
மறவியின் பதிக்குப் புக்கி மால்மகன் வரையப் பட்டு த்
திருமகன் வர்க்கம் தன்னில் ஜனித்தவ னிவனே யென்றேம்
வருஜன்மம் வள்ளூர் தன்னில் மறைக்குல முதிப்ப னுகும்.

36. தன் வீடு நாடிவருபவர்களுக்குச் சோறும் தண்ணீரும் அளித்து வந்தான். சிறிதும் பாவமில்லாமல் வாழுந்து கிழப்பருவத்தில் யமனுலகம் அடைந்தான், விஷ்ணுபுத்திரனுகிய பிரம்மதேவன் அவனை இங்குப் படைக்க, ஜாதகனுக்குத் தந்தையாக வாய்த்திருக்கின்றான். இவனது வரும் ஜன்மத்தையும் குறிக்கின்றோம். இவன் அடுதத பிறவியில் திருவள்ளூரில் வேதமோதும் அந்தணர் குலத்தில் ஜெனிப்பான்.

37. இந்தவோர் ஜன்மம் தன்னில் இவன்செய்த புண்ணிய மென்ன
முந்தவே கழரு மென்ன மொழியதைக் காத்த லாலும்
நொந்தபேர்க் குதவி செய்து நிதம்சீலம் கடவுள் பக்தி
நிந்தைக ளில்லா வாழ்ந்தும் நின்மலன் பத்தி யாயும்.

37. இவ்வாறு அகஸ்திய முனிவர் சொல்லக் கேட்ட பார்வதி, உயர் குலத்தில் பிறப்பதற்கு இவன் இப்பிறவியில் என்ன புண்ணியம் செய்திருக்கின்றான்? என வினவினள். முனிவர் காரணங்களைக் கூறுவார். இவன் தான் சொன்ன மொழிகளைக் காப்பாற்றினான். [உண்மையே பேசினான் என்பதுக் கருத்து] நொந்தவர்களுக்கு உதவி புரிந்தான். எப்பொழுதும் நற்சீலம் உடையவனாக வாழ்ந்தான். கடவுள் பக்தி கொண்டொழுகினான். இவனுடைய வாழ்க்கையில் சிறிதும் மாசு ஏற்படவில்லை.

38. இருப்பதால் பிரம்ம சேயா யெய்துவா னிவனே யென்றோம்
கருமகா லங்கள் சொல்வேன் கரும்பாம்பு தசைகா லத்தில்
பெருமையாய் முப்பா னெட்டில் பேசுவோம் தந்தை கண்டம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

38. இத்தகைய காரணங்களால இவன் மறு பிறவியில் பிராம்மண குலத்தில் பிறப்பான் எனத் தெரிவித்தோம். ஜாதகன் தன் தாய் தந்தையர்களுக்கு ஈமச்சடங்குகள் செய்யநேரிடும் காலத்தைக் கூறுவோம். ராகுதசை நடைபெறும்போது முப்பத்தெட்டாம் வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். வேதசிகரங்களான உபநிஷதங்களில் ஆனந்தநர்த்தனம் புரியும் அன்னையே! மேலும் கேளுங்கள்.

39. நாற்பது இரண்டு ஆண்டில் ராகுவின் தசையி லேதான்
கூப்பிடு வானும் காலன் குறித்ததோர் அன்னை தன்னை
ஏர்க்கவே எழுப தாண்டில் எழில்தனுர் மாதம் தன்னில்
தீர்ப்பாக ஜாத கர்க்குச் செப்புவோம் மார கங்கள்.

39. அதே ராகுதசையில் ஜாதகனுக்கு நாற்பத்திரண்டாவது வயது நடைபெறுங்கால் ஜாதகனின் தாயைக் காலன் தன் நாட்டிற்கு அழைத்துக் கொள்வான். ஜாதகன் எழுபதாம் வயது நடைபெறுங்கால் மார்கழி மாதத்தில் நிச்சயமாக விண்ணுலகம் ஏகுவான்.

40. பின்ஜன்மம் அவ்வூர் தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில்
பொன்பெரு ளுடைய னுசிப் புதல்வனும் வாழுவா னுகும்
திண்ணமா மிந்த வார்த்தை ஜயமுனி தடுத்துச் சொல்வர்
பொன்னனுக் கெட்டில் திங்கள் பொருந்தியே யிருப்ப தாலும்;

40. ஜாதகன் மறுபிறவியில் அதே ஊரில் இக்குலத்திலேயே பிறப்பான். பொன் பொருள்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்வான். இந்த வார்த்தையைக் கேட்ட ஜயமுனிவர் மறுத்துக் கூறுவார். இலக்கினாதிபதியான சந்திரன், குருவிற்கு எட்டாமிடத்தில் இருப்பதாலும்; [குரு கடாக்ஷம் பெருமையால் என்பது கருத்து.]

41. சனியுமே எட்டேனுறித் தசமத்தி லிருப்ப தாலே
கணமான எழுப தாண்டு கழறினீர் விவரம் சொல்வாய்
வினையாக ஏழோ னெட்டோன் விடமதாய்ச் சனியே யாகிப்
பிணையாகு மவர்கா லத்தில் புகலுவோம் மார கங்கள்.

41. ஆயுற்பாவாதிபதியான சனி பத்தாமிடத்தில் நீசனுக இருப்பதாலும் இவன் எழுபதாண்டு வரையில் ஜீவித்திருப்பானென எவ்வாறு கூறலாம்? என, முனிவரான அகஸ்தியர் சமாதானம் அறிவிப்பார். சனி எட்டாமிடத்திற்கு மாத்திரம் உடையவனல்லன். அவன் ஏழுக்கு உடையவனுகவும் ஆவதுடன் பாவியாகவும் இருப்பதுபற்றி அவனுடைய தசையில்தான் மாரகங்கள் ஏற்படும்.

42. ஜாதகன் பொதுயோ கத்தைச் சாற்றுவோம் ஜனனம் தொட்டு
மேதினில் ஐயைந் தாண்டும் விளம்பொணு யோகம் தானும்
ஓதுவேன் அதன்மேல் யோகம் உயர்மதி பேரலே நேரும்
தீதிலா முவாயி ரம்பொன் சேர்ப்பனு மென்று சொல்வோம்.

42. ஜாதகனுடைய ஜனனகாலம் முதல் ஏற்படும் பொதுவான யோகத்தைச் சாற்றுவோம். இவன் பிறந்து இருபத்தைந்து ஆண்டுகள் மட்டில் சொல்லமுடியாத கஷ்டங்களைக் கொடுக்கும் தீயயோகங்கள்தான் நடைபெறும். அதன்பின் நல்லயோகங்கள், வளர்பிறைச்சந்திரன்போல் வளர்ந்திடும். மூவாயிரம் பொற்காசுகளை இவன் சம்பாதிப்பான்.

43. தந்தையின் குடும்பம் வேறு சாற்றுவோம் பாகம் நான்காய்
அந்தகன் பக்கல் ஒன்று அணுகிடும் பின்பால் சொல்வேன்
இந்தவன் ஜனன காலம் இருபதாம் நாளில் அந்தம்
சந்ததம் புகரில் நான்கும் தங்கிடும் திங்க ளென்றோம்.

43. தந்தைக்குப் பின் சொத்துக்கள் நான்காகப் பிரிக்கப்படும். அவர்களில் ஒருவன் அந்தகன உலகம் செல்வான். அவனைப்பற்றி இரண்டாம் பாகத்தில் கூறுவேன். இவன் பூராடநக்ஷத்திரத்தில் நான்காம் பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகையால் சுக்கிரதசையில் இருப்பு வருஷங்கள் நான்கு, மாதம் ஒன்று.

44. தலமும்பே தங்க ளெய்தும் தன்துணைபின்னல் விருத்தி
இன்னல்கள் கலகம் நேரும் இவனன்னை வர்க்கம் சூதம்
மான்விழி தனக்கு ரோகம் வரவுக்குச் செலவ னேகம்
உன்னத மனங்க ளெய்தும் உரைத்தனம் பூர்வ பாகம்.

44. இந்தத் தசையின் பலனைக் கூறுவோம். வாசஸ்தலம் அடிக்கடி மாறும். சகோதரவிருத்தி யுண்டு. பல இன்னல்களும் கலகங்களும் நேரும். இவனுடைய தாய்வருக்கத்தில் சூதகம் ஏற்படும். தாய்க்கும் ரோகம் காணும். வரவிற்குமேல் செலவுகள் ஏற்படும். பெருந்தன்மை வாய்ந்த மனைபாவம் உண்டாகும். இவ்வாறு பூர்வபாகத்தைச் சுருக்கமாகத் தெரிவித்தோம்.

ஜாதகம் 50

1. சந்திரன் பானு நந்தி சனிகன்னி கேது கோலாம்
புன்திசை புகரு வீணை புன்ராகு மேட மாக
இந்தவாறு கிரகம் நின்று லக்கினம் கடக மாக
அந்தவோர் பலன்கள் எவ்வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

குரு	ராகு புதன்	சந்திரன் சூரியன்	சுக்கிரன்
	இராசி சக்கரம்		லக்கினம்
செவ்வாய்			
		கேது	சனி

நந்தனஞு வைகாசிமீ 15-ம் உ வியாழக்கிழமை பகல் 8 நாழிகைக்குமேல் 13-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி—26—5—1892.
நவக்கிரஹங்களின் பாதசாரம்.

ரோஹிணி 1-இல் சூரியன், ரோஹிணி 1-இல் சந்திரன், சிரவணம் 2-இல செவ்வாய், பரணி 2-இல் புதன், ரேவதி 3-இல் குரு, புனர்வஸு 2-இல் சுக்கிரன், உத்திரம் 2-இல் சனி, பரணி 4-இல் ராகு, விசாகம் 2-இல் கேது. நக்ஷத்திரம் ரோஹிணி. சந்திர தசையில் இருப்பு வருஷங்கள் ஒன்பது, மாதங்கள் இரண்டு.

1. செவ்வாய் மகரம், சந்திரன் சூரியன் விருஷபம், சனி கன்னி, கேது துலாம், புதன் மேஷம், குரு மீனம், சுக்கிரன் மிதுனம், ராகு மேஷம். இலக்கினம் கடகம். இவ்வாறு கிரஹ நிலை இருப்பின் பலன்கள் என்ன ? முனிவர்களே ! தெரிவிப்பீர்களாக, எனப் பர்வததேவி கேட்கலுற்றாள்.

2. உமையவள் கேட்கும் போது உரைக்கிறார் பராசர் தாமும்
அமைந்திடு மாண்பால் ஜனமம் அறைந்திடு இல்லம் தானும்
எமனுத்திர வாடை யாகும் இந்திர நோக்கம் வாசல்
உரையவ னீசன் மாயோன் உரைக்கிறோம் கீழ்பா லாக.

2. இவ்வாறு உமையவள் கேட்டவுடன் முனிவரான பராசரர் பலன் கூறுவார். இக்கிரஹ நிலையில் பிறந்த மகவு ஆண். வீதி தெற்கு வடக்காக அமைந்திருக்கும். ஜனித்த இல்லம் கீழ்த்திசை நோக்கும். வீட்டிற்குக் கிழக்கில் சிவபிரான் ஆலயமும் விஷ்ணு ஆலயமும் விளங்கிடும்.

3. அருகினில் சந்து முண்டு யானையின் கோஷ்டம் தென்பால்
மறுமமாய் மஸ்தான் உத்ரம் மாரியு மதன்கீழ்த் தங்கும்
பெருமையாய்ச் செட்டு ஓங்கும் பேரூராம் இந்தப் பாலன்
வருகுவான் நான்காம் ஜன்மம் வரைகிறோம் யோகச் சேதி.

3. அருகில் பல வீதிகள் கூடும் சந்திப்பு உண்டு. தெற்கில் விநாயகர் எழுந்தருளி இருப்பார். வடக்கில் ஒரு மசூதியும் இருக்கும். அதற்குக் கீழ்த் திசையில் மாரியம்மன் கோயிலும் உண்டு. அத்தகைய பெரிய ஊரில் வியாபாரம் விசேஷமாக நடைபெறும். இவன் குடும்பத்திற்கு நான்காம் குழந்தையாவன். இவனது யோகம் முதலியவைகளைக் கூறுவோமாக.

4. தந்தையின் துணைவர் நான்கில் ஆணென்று கன்னிரண்டு
சந்ததம் விருத்தி யென்றேம் சாற்றுவோ மாண்பால் சேதி
முந்தின துணைவ னுக மொழிகிறோம் ஊகை சாலி
சந்ததம் சலத்தால் செட்டுத் தானவன் செய்வா னுமே.

4. ஜாதகனின் தந்தைக்கு உடன்பிறந்தார்கள் நால்வர். அவர்களில் ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் விருத்தியடைந்து வாழ்வார்கள். அந்தச் சகோதரனும் ஜாதகனின் தந்தைக்கு மூத்தவன். அவன் மிகவும் மதி நுட்பம் வாய்ந்தவன். எப்பொழுதும் வெளி தேச வியாபாரம்—ஏற்றுமதி, இறக்குமதி—செய்வான்.

5. போஜன வறுமை காணுன் பாரியு மிரண்டே யாகும்
நேசர்க ளதிகம் கொள்வன் நினைத்தது முடிக்க வல்லன்
பாசமாம் சுதராண் மூன்று பாவையு மிரண்டு தீர்க்கம்
ஆசையா யொன்றுய் வாழ்வன் அவனுமே மகத்தில் ஈவன்.

5. ஆகாரத்திற்குக் குறைவில்லாதவன். அவனுக்கு இரு மனைவிகள். நண்பர்களும் அநேகர். தான் எண்ணிய காரியத்தை முடிக்க ஆற்றல் படைத்தவன். அவனுக்கு மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் ஸ்திரமாக வாழ்வார்கள். தன் தம்பியுடன் அன்போடு குடுத்தனம் செய்வான். அவன் மகநக்ஷத்திரத்தில் பிறந்தவன்.

6. பாரியு மவ்வா ருகும் பகருவோம் பின்பால் சேதி
மாரன்தன் தந்தை சேதி வரைகின்றேம் தாயே கேளு
போர்செலான் சுவாதி கோலாம் பிறையது ஒருவர்க் கெண்ணுன்
காரிய சமர்த்த னுகும் கார்நிறமீகை வானும்.

6. இவனுடைய மனைவியும் நற்குணம் வாய்ந்தவள். அவளைப்பற்றிய செய்திகளை இரண்டாம் பாகத்தில் கூறுவோம். இனி ஜாதகனுடைய தகப்பனின் வரலாறுகளைத் தெரிவிப்போம். அன்னையே ! கேளுங்கள். எவ்வித

சண்டைகளிலும் ஈடு படாதவன். அவன் பிறந்த நக்ஷத்திரம் சுவாதி. லக்ன‌ம் துலாம். யாருக்கும் கெடுதலே எண்ணுதவன். காரியத்தைத் நிறைவேற்றுவதில் சமர்த்தன். கருத்த மேனியான். தியாககுணம் வாய்ந்தவன்.

7. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறைப்பொடு புளிப்பி லிச்சை
குண்டுணி கூறு ளுகும் குலத்திற்கு நல்லோ ளுவன்
தண்டமிழ் நுணுக்கம் தேர்வன் சலத் தொழில் செய்வா ளுகும்
பண்டுநாள் பூமி கொஞ்சம் பாலகன் விருத்தி செய்வன்.

7. சுகமான போசனத்தையே உட்கொள்ளுவான். உறைப்பிலும் புளிப்பிலும் அதிக விருப்பம் கொண்டவன். கோள் சொல்லிக் கலகப்படுத்தாதவன். தன் குலத்தினரால் நல்லவனுகக் கருதப்படுவான். இனிய தமிழின் சுவையை நன் கறிந்தவன். ஆங்காங்குச் சென்று நடத்தவேண்டிய வியாபாரத்தினுல் ஜீவிப்பான். பிதுரார்ஜிதமான பூமியும் சிறிது உண்டு. அதை மேலும் அபிவிருத்தி செய்வான்.

8. பந்துவை ஆத ரிப்பன் பாக்கிய மதிக மில்லான்
முந்துமால் பக்தி கொள்வன் முனிவுண்டு வெளிக்காட் டாதான்
வந்தவர்க் கன்ன மீவன் வாயுநோ யுடைய ளுகும்
சிந்தையும் நல்ல தாகும் சீக்கிர நடையு மாவன்.

8. உறவினர்களே ஆதரிப்பான். அதிக செல்வம் இல்லாதவன். திருமாலிடம் பக்தி பூண்டவன். சினமுள்ளவன். ஆனல் வெளித்தோற்றத்தில் காட்டாதவன். வந்த விருந்தாளிகளுக்கு அமுதளிப்பான். வாயு நோயினுல் பீடிக்கப்படுவான். ஒருவருக்கும் தீங்கு எண்ணுதவன். துரிதமான நடை உள்ளவன்.

9. சமயோகம் வறுமை காணுன் தாக்ஷிண்யன் கனத்த புத்தி
உவமையாய் வார்த்தை சொல்வன் ஒருவர்பா லடங்கி உய்வன்
சுமைதாங்கி போலே காப்பன் தீரமில்லாத நெஞ்சம்
அமைந்திடும் பின்பால் யோகம் அம்மாமி யிரண்டு நேரும்.

9. சமமான அதிருஷ்டம் உடையவன். வறுமை இல்லாதவன். ஒருவரையும் பகைத்துக் கொள்ளாதவன். உதார மனப்பான்மை வாய்ந்தவன். பேசும்போது அடிக்கடி உபமானங்களேக் கூறுவான். ஒருவரிடத்தில் வேலேப் பார்த்து ஜீவிப்பான். சுமைத்தாங்கிகற்பாறைபோல் ஏராள பாரத்தை (பொறுப்பு)த் தாங்கி நிற்பான். உறுதியில்லாத நெஞ்சம் படைத்தவன். இவனுக்குப் பிற்கால வாழ்க்கையில் நல்ல யோகங்கள் வந்திடும். மாமிமார்களும் இவனுக்கு இருவர். [மனைவிகள் இருவர் என்பது கருத்து.]

10. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே யுதிப்பா ளுகும்
அன்னவன் துணைமுன் மூன்று ஆணது தீர்க்க மாகும்
பின்னமா மிரண்டு என்றேரும் பேசின துணேவன் சேதி
பொன்மகம் தனசு ராசி பிறப்பானு மென்று சொல்வோம்.

10. இத்தகைய குணமுள்ளவனுக்கு இக் கடகலக்கின மகன் புத்திரனுகப் பிறந்திருக்கின்ருன். இவனுக்கு மூத்த உடன் பிறந்தார்கள் மூவர். அம் மூவரில் ஆண் ஒருவனே தீர்க்கமாக வாழ்ந்திடுவான். அவன் பிறந்த நக்ஷத்திரம் மகம். தனுர்லக்கினம் என நாங்கள் அறிகின்ருேம்.

11. வித்தையும் சமம தாகும் விவேகியாம் மாஞ்சி வப்பன்
குத்தத்தை மனத்தில் எண்ணுன் குறிப்பினில் கொடுமை [தோன்றும்
சுத்தவான் கர்ணம் மந்தம் சோம்பலும் கொஞ்ச முண்டு
நத்திேனுர்க் குதவி செய்வன் நல்லோர்க்கு நல்ல ளுவன்.

11. அவன் நடுத்தரமான கல்வியறிவு படைத்தவன். பிறர்குற்றங்களே மனத்தில் ஏற்றுக்கொள்ளாதவன். அவன் தோற்றத்தில் கொடியவன் போல் காணப்படுவான் பரிசுத்தமானவன். காது மந்தமாக இருக்கும். சிறிது சோம்பலும் உண்டு. தன்னே நாடி வந்தவர்களுக்கு உதவி புரிவான். நல்லவர்களிடம் நல்ல வனுகவே நடந்துக் கொள்வான்.

12. முன்கோப முடைய ளுகும் மொழியதைக் காப்பா ளுகும்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பன் ஈகை யுண்டு
அன்னியர்க் குதவி செய்வன் அவன்தந்தை மேலாய் வாழ்வான்
மன்னவ ருறவு கொள்வன் மாநிலம் விருத்தி செய்வன்.

12. முன்கோபமுள்ளவன். தன்னுடைய வார்த்தைகளேக் காப்பாற்றுவான். தான் சொன்ன விஷயங்களே சரி யெனப் பிடிவாதம் செய்வான். தியாககுணமும் உண்டு. முன் அறியப்படாதவர்களுக்கும் உதவி புரிவான் தந்தையைவிடச் சிறப்பாக வாழ்வான். அரசர்களுடைய நட்பும் இவனுக்கு இருக்கும். நிலங்களே அபிவிருத்தி செய்வான்.

13. பலவித வணிப்ம் செய்வான் பரஉப காரி யாகும்
சொல்மொழி காப்பா ளுகும் தோகையு மொன்றே யென்றேரும்
அலேகடல் துயின்ருேன் பத்தி அவனுமே கொள்வா ளுகும்
பலமுள குடும்பம் பின்னுல் பின்துணே சொல்தட் டாதான்.

13. பலவித வியாபாரங்களேச் செய்வான். எல்லோருக்கும் உபகாரம் செய்வான். தான் சொல்லும் வார்த்தைகள்படியே நடப்பான். அவனுக்கு மனைவியும் ஒருத்திதான். திருபாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் திருமாலிடம் பக்தி பூண்டவன். பிற்காலத்தில் பிரபல குடும்பமுள்ளவனுவன். தன் தம்பியின் [ஜாதகனின் தந்தை] வார்த்தையை மறுத்துப் பேசாதவன்.

14. சுதர்களும் ஆண்பா லொன்று தோகையு மூன்று என்றேரும்
இதுநான்கும் தீர்க்க மெய்தும் இடருண்டு இரண்டு என்றேரும்
அதிபன்தன் உடனே வாழ்வன் அறிவிப்போம் பின்பால் சேதி
இதுநிற்க ஜனித்தோன் சேதி யியம்புவோம் தாயே கேளு.

14. அவனுக்கு ஒரு பிள்ளையும் மூன்று பெண்களும் தோன்றுவார்கள். இந்நால்வரும் நீண்ட ஆயுளுடன் விளங்குவார்கள். இவர்களைத் தவிர இரு குழந்தைகள் பிறந்து அழியும். ஜாதகனுடனேயே ஒற்றுமையாக வாழ்வான். இவனைப்பற்றிய செய்திகளை இரண்டாம் பாகத்தில் அறிவிப்போம். இனி ஜாதகனின் குணம் முதலியவைகளைத் தெரிவிக்கின்றோம். அன்னையே! கேளுங்கள்.

15. இருநிறம் சமதேகத்தான் இன்பமாய் வார்த்தை சொல்வன்
மருமவான் தந்திர வார்த்தை மறுத்துரை அதிகம் சொல்வன்
பொருளது செலவு செய்யான் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்
அரிபத்தி கொஞ்ச முண்டு ஆதியில் வறுமை யுண்டு.

15. கருத்த மேனியான், சம வளர்ச்சி உடையவன். இனிமையாகப் பேசுவான். சிறிது கபடமுள்ளவன். தந்திரமாகவும் வார்த்தை சொல்வான். பிறர் பேசுவதை மறுத்தே பேசும் இயல்புடையவன். கிடைத்த பொருளைச் செலவு செய்யான். தன்னைப் போற்றுகின்றவர்களை ஆதரிப்பான். விஷ்ணுவிடம் சிறிது பக்திகொண்டவன். பால்யத்தில் வறுமையினால் கஷ்டப்படுவான்.

16. பகைவரை உறவாய் வெல்வன் பலவித வணிபம் செய்வான்
அகமது புதிதாய்ச் செய்வன் அடாவடி வார்த்தை சொல்வன்
நகைசெய்வன் எதிரி தன்னை நாற்காலி சகடு முண்டு
உவமைக ளனேகம் சொல்வன் உறுதியா மனத்த னுமே.

16. எதிரிகளை அடுத்து வெல்லுவான். பலவித வியாபாரங்களைச் செய்வான். புதியதொரு வீடு நிர்மாணம் செய்வான். பிடிவாத வார்த்தைகளையும் கூறுவான். எதிரிகளைப் பரிகசிப்பான். [அவர்களைப் பரிகசிக்கப்படும் தன்மையில் தாழ்த்துவான் என்பது கருத்து] பசு காளை குதிரை முதலியவைகளும் வண்டியும் இவனுக்கு உண்டு. இவனது பேச்சில் உபமானங்கள் நிறைந்திருக்கும். மனத்தில் உறுதி வாய்ந்தவன்.

17. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் பதும ரேகை
சொன்னசொல் இரண்டு முண்டு சோம்பிடான் காரி யத்தில்
கன்னியர் மோக னுவன் கழறுமுன் கோபி யாவன்
பொன்பூமி சேர்ப்பா னுகும் பின்துணை சேத மெய்தும்.

17. இவனுடைய சிவந்த கரத்தில் பதுமரேகை திகழும். தான் சொன்ன வார்த்தைகளைத் தன் சௌகர்யத்திற்கேற்றபடி மாற்றிவிடுவான். முன் கோபமும் உண்டு. வேலைகளில் சோம்பல் இல்லாதவன். பெண்களிடம் மோகம் கொண்டவன். பொன்னையும் பூமிகளையும் சம்பாதிப்பான். இவனுக்கு அடுத்துப் பிறக்கும் குழந்தை சேதத்தை அடையும்.

18. என்னகா ரணத்தி னலே யியம்பீனீர் துணைவர் தோஷம்
மன்னிய மூன்றில் சேயும் வந்ததால் சொன்னேம் யாங்கள்
அன்னையு மவ்வா றுகும் அனுகிடும் பின்தா யொன்று
சொன்னனே நாலா மாண்டில் சுதனன்னை மரண மாகும்.

18. அடுத்து உடன் பிறந்தவன் சேதமடைவதற்குக் காரண மென்னவென்றால், செவ்வாய் "சகோதர பாவம்" என்று சொல்லப்படும் மூன்றுமிடத்தில் இருப்பதுதான். அவ்வாறே இவனைப் பெற்றதாயும் இவனுடைய நான்காம் வயதில் மரணமடைவாள். அதன்பின் இவனுக்கு இளைய தாய் ஏற்படுவாள்.

19. பின்மாதா குடகு தன்னில் பொருந்திடும் சுதராண் ஒன்று
கன்னிகை யிரண்டு என்றோம் கழறின மூன்றும் தீர்க்கம்
அன்னவள் குணமெவ் வாறு அறைகுவீர் முனியே நீர்தாம்
பொன்னிறம் நீட்சி யாவன் பொருத்தமா யுரைப்பா ளாகும்.

19. இளைய தாய் மேற்குத்திசையில் பிறந்தவள். அவளுக்கு ஒரு பிள்ளையும் இரு பெண்களும் தோன்றுவார்கள். நாம் சொன்ன மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். பார்வதிதேவி "முனிவரே! அவளுடைய குணத்தைச் சொல்லுவீர்களாக" எனக் கேட்க, பராசரர் கூறுவார். அவள் பொன்னிறம் வாய்ந்தவள். உயரமாக வளர்ந்தவள். இடம் பொருள் ஏவலை அறிந்து அவைகளுக்குப் பொருத்தமான வார்த்தைகளையே பேசுவாள்.

20. சந்தேக மனத்தா ளாகும் சலிப்புளோர்க் கன்ன மீவள்
பந்துவுக் கினிய ளாகும் பாவையும் சமயோ கத்தாள்
சிந்தையும் நல்ல தாகும் சீக்கிர கோபி யாவள்
சந்ததம் பித்த தேகி சாற்றுவோம் பின்பால் சேதி.

20. எதையும் சீக்கிரத்தில் நம்பாதவள். களைத்தவர்களுக்கு அமுதளிப்பாள். உறவினர்களுக்கு இனியவள். அவள் சமயோகம் வாய்ந்தவள். எல்லோரிடத்திலும் நல்ல எண்ணம் கொண்டவள். சீக்கிரத்தில் சினம் தோன்றும். இவளது உடலில் பித்தம் தலை தூக்கி நிற்கும். இவளைப் பற்றிய வேறு வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் பேசுவோம்.

21. இவன்தனை யீன்ற அன்னை இவள்சேதி சொல்லு மென்னத்
தவசிகட் கன்ன மீவள் தன்வரன் மனம்போல் வாழ்வள்
நவனியில் பொய்கள் சொல்லாள் நாயகி மாஞ் சிவப்பள்
அவனியில் நல்லோ ளாவள் அவளில்லம் உத்ர மாமே.

21. இஃதிருக்கட்டும்; ஜாதகனைப் பெற்றதாயின் குணங்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவ, மஹரிஷியான பராசரர் பதில் கூறுவார். அவள் தவசிகளுக்குச் சிரத்தையுடன் அமுதளிப்பாள். கணவன் மனத்தின் படி நடப்பாள். பொய் சொல்லாதவள். மாநிற முள்ளவள். எல்லோருக்கும் நல்லவளாக நடப்பாள். அவள் பிறந்த வீடு வடதிசையி லுள்ளது.

22. தனதுணை ஆண்பால் மூன்று சத்தியு மொன்றே யாகும்
சொன்னஆண் ஒருவ னுக்குச் சுதர்காணன் வெகுளி யாவன்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
அன்னையின் பூர்வம் தன்னை அறைகிறோம் தாயே கேளு.

22. அவளுக்கு மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு. அம் மூன்று சகோதரர்களில் ஒருவன் சந்ததி இல்லாதவன். கபடம் உடையவனு மல்லன். இரண்டாம் பாகத்தில் அவர்களைப்பற்றிய வரலாறுகளைப் பேசுவோம். ஜாதகனுடைய தாயின் முன் ஜன்மத்தைக் கூறுவேன். அன்னையே! கேளுங்கள்.

23. சொக்கர்வாழ் பாண்டி நாட்டில் ஜனித்தனள் கர்ண சேயாய்த்
தக்கவே குடும்பி யாகித் தன் வரன் மதலை யுண்டாய்
நக்கன்தன் அடியா ருக்கு நாயகி அன்ன மீந்து
துக்கமாம் கால னுடு சென்றனள் வரன்முன் னுக.

23. இவள் முன்பிறவியில் சொக்கநாதர் எழுந்தருளியிருக்கும் பாண்டிய நாட்டில் கர்ண ஜாதியில் பிறந்து, கணவன் குழந்தைகளுடன் பெரிய குடும்பியாகி, சிவனடியார்களுக்கு அமுதளித்து, புனித வாழ்க்கை நடத்தி கடைசியில் தன் கணவன் இறப்பதற்கு முன்னமேயே இவள் இறந்தாள்.

24. சிரநான் கோன் வரையப் பட்டு ஜனித்தனள் வடுகர் வர்க்கம்
வரும்ஜன்மம் வள்ளூர் தன்னில் மாதுவும் வைசியச் சேயாய்
உறைகுவாள் வறுமை யின்றி உத்தமி வாழ்வா ளாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

24. பிறகு நான்முக பிரம்மதேவனுல் இந்த நாயக்கர் வமிசத்தில் படைக்கப்பட்டாள். மறுபிறவியில் இவள் திருவள்ளூரில் வைசிய குலத்தில் பிறந்து, வறுமை இல்லாதவளாக வாழ்வாள். உபநிஷதங்களால் போற்றப் படும் பெருமை வாய்ந்த தேவியே! அன்னையே! மேலும் கேட்பீராக.

25. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் பழனி நாட்டில்
முந்தின குலமு தித்து மேதினி விருத்தி செய்து
வந்திடு மனைவி மைந்தர் வளமுள குடும்பி யாகி
இந்தவன் வாழு நாளில் இயம்புவோ மூழி தானே.

25. இனி தந்தையினுடைய பூர்வஜன்மத்தைக் கூறுவேன். இவன் முன்பிறவியில் பழனியில் பிராம்மண குலத்தில் பிறந்து, நிலங்களைப் பயிரிட்டு மனைவி மகவுகளுடன் சிறப்பான குடும்பியாகி வாழும் காலத்தில் இவனுக் கேற்பட்ட பாவத்தை அறிவிப்போம்.

26. ஏழையோன் மணத்திற் காக இவனைமங் கலியம் கேட்கத்
தாழ்விலாத் தாரே னென்று தைரியம் அவர்க்கு ஒத
ஆழியில் சேக ரித்து அடுத்தநாள் முத்திரை கேட்கப்
பாழான தொழிலி னுலே பகை செய்ய மறந்தே னென்ன.

26. ஓர் ஏழை மணம் செய்து கொள்வதற்காக இவனிடம் மாங்கல்யம் வேண்ட, இவனும் தருகின்றேன் என்று உறுதியாகச் சொன்னுன். இவனை நம்பி அவ்வேழை கலியாணத்திற்குத் தேவையான மற்றைய ஏற் பாடுகளைச் செய்துவிட்டு, கலியாணம் நடைபெறவேண்டிய தினத்திற்கு முதல்

நாள் இவனிடம் வாங்கிப்போக வந்து நின்றபோது இவன், இன்னும் மாங் கல்யம் செய்யவில்லை, மறந்துவிட்டேன் என்று சொல்லி அவ்வேழையைத் திண்டாடவைத்தான்.

27. வேறொரு முத்திரை வாங்கி வித்தகன் மணமு டித்துக்
கூறுவார் சாபம் தானும் குறித்திடும் பின்ஜன் மத்தில்
பாரியும் ரெண்டு மாயும் பாரினில் வாழ்வா யென்று
கூறியே தெருத்தூள் விட்டான் குலவிற்று அந்தத் தோஷம்.

27. இவ்வாறு கஷ்டத்திற்குள்ளான ஏழை வேறு மாங்கல்யத்தை வாங்கி ஒருவாறு மணம் செய்து கொண்டான். பிறகு அவன், தனக்கு இவனுல் ஏற்பட்ட சங்கடத்தை எண்ணி வருந்தியவனுகச் சபித்தான். வரும் பிறவியில் உனக்கு இரு மனைவிகள் ஏற்படுவார்களாக. [முதல் மனைவியை இழப்பாய் என்பதுக்கருத்து] என்று கூறி, தெருத்தூளை வாரி இறைத்துச் சென்றுன். அந்தத் தோஷம் ஒன்று இவனைப் பற்றிக்கொண்டது.

28. இது வன்றி வேறு சொல்வேன் ஈசன்தன் பூசைக் காக
அதிதியும் மலர்கள் கொண்டு அரன் கோஷ்டம் செல்லும் காலை
அதிபனும் அதை மடக்கி யதனையே மனைவிக் கீந்து
மன்மதன் ஊடல் செய்தான் மருவிற்று அதுவோர் தோஷம்.

28. இதுவன்றி மற்றொரு பெரிய பாவமும் இவனுக்குச் சம்பவித்தது. ஒரு பக்தன் சிவபிரானுக்குப் பூசை செய்ய நறுமலர்களைச் சிவாலயத்திற்குக் கொண்டுபோகும்போது, இவன் அவனை வழியில் மறித்து அம்மலர்களை அப கரித்துத் தன் மனைவிக்குச் சூட்டி அவளுடன் இன்பங்களை அனுபவித்தான். இஃது ஒரு பெரிய சிவாபசாரமன்றோ!

29. இன்னமும் சிலது தோஷ மெய்திற்றுப் பால னுக்கு
அன்னவ னந்தி யத்தில் அவன்மனை மரண மாகித்
தன்மனச் சஞ்ச லத்தால் சண்டன்தன் பதிக்குச் சென்று
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யென்றோம்.

29. இன்னும் சில பாவங்களும் இவனை அடைந்தன. ஆகவே அவன் முன் பிறவியின் அந்திய காலத்தில் மனைவியை இழந்தான். பல கவலை களால் துன்பமடைந்து யமனுலகம் சென்றுன். பிறகு படைக்கும் கடவுள் அவனை இங்குப் பிறப்பித்திருக்கின்றுன். அவன்தான் இக் கடக லக்கின மகனுடைய தந்தை.

30. பஞ்சைகள் சாப மொன்று பரமன்தன் புட்ப தோஷம்
நஞ்சுமே சேர்ந்த தென்றும் நல்கிடும் பாரி ரண்டு
தஞ்சமாய்த் துணைக்கு அவ்வாறு சாற்றுவோம் தாயே யாங்கள்
கொஞ்சிய முன்ஜன் மத்தில் குலமது மறையோ னென்றீர்.

30. ஏழை விடுத்த சாபத்தாலும் சிவபிரானை அர்ச்சிப்பதற்கான புஷ்பத்தை அபகரித்த பாவத்தாலும் இதர தீயவினைகளாலும் இவன் முதல் மனைவியை இழந்து மறுமனைவியை மணப்பான். இவன் அண்ணனுக்கு

அவ்வாறே இரு மனைவிகள் ஏற்படுவார்கள். முன் ஜன்மத்தில் இவன் [ஜாதகனின் தந்தை] பிராம்மண குலத்தில் பிறந்தான் என்று சொன்னீர்கள்.

31. இந்தவோர் ஜன்மம் தன்னில் இக்குல முதிப்ப தென்ன
அந்ததோர் சேதி சொல்வாய் அருமறை யோதாத தாலும்
வந்தவ னிக்கு லத்தில் வரும்ஜன்மம் வள்ளூர் தன்னில்
முந்தின குல மு தித்து உயர்வான குடும்பி யாவன்.

31. இப்பிறவியில் இவ்வடுகர் வமிசத்தில் பிறக்கக் காரணம் என்னே? என்று உமையவள் கேட்க, பராசரர் முனிவர் தெரிவிப்பார். பிராம்மண ஜாதியில் பிறந்தும் மேலான வேதத்தை ஓதாமல் ஒழிந்தான். ஆதலால் தாழ்வான குலத்தில் பிறந்திருக்கின்றன். வரும் பிறவியில் இவன் திருவள்ளூரில் பிராம்மண ஜாதியில் பிறப்பான். பெருமைவாய்ந்த குடும்பியாகவும் விளங்குவான்.

32. அத்திரி சொல்லு கின்றார் அவனுமிச் சென்மம் தன்னில்
குத்தமாய் அற்பச் செட்டுக் குறைவுள அளவு செய்தும்
முந்தினோர்க் கிடைஞ்சல் செய்தும் மொழியது தவறுவ தாலும்
சுத்தமாய்ச் பிரம்மச் சேயாய்த் தோன்றும்கா ரணங்க ளெவ்வாறு.

32. இதைக் கேட்ட முனிவர் கூறுவார். அவன் இந்த ஜன்மத்தில் பல குற்றங்களைச் செய்து வியாபாரத்தை நடத்தி ஜீவித்து வருகின்றன். பெரியோர்களுக்கு இடையூறுகளையும் உண்டுபண்ணினன். தான் சொன்ன படி நடந்தவனுமல்லன் [பொய் பேசினவனென்பது கருத்து]. ஆகவே இவன் மறுபிறவியில் எவ்வாறு பிராம்மண குலத்திலுதிப்பான்? அதன் காரணங்களைத் தெரிவிப்பீர்களாக.

33. பலவித வினைகள் செய்தும் பரவுப காரி யாயும்
தலவாசம் சென்ற தாலும் சாலஆ பத்தைக் காத்தும்
அலைகடல் துயின்றோன் பத்தி அவன்மனம் கபடு மின்றி
நிலையிலார்க் கன்ன மீந்தும் நிருபனும் வாழ்வ தாலே.

33. பராசரர் மஹரிஷி காரணம் கூறுவார். பல நல்வினைகளையும் இவன் செய்திருக்கின்றன். பிறர்க்கு உதவி புரிந்தான். புனித ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று அங்குக் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் கடவுள் மூர்த்திகளைத் தரிசித்தான். சிலரை, அவர்களுக்கேற்பட்ட பேராபத்திலிருந்து காப்பாற்றினன். பாற்கடலில் பையத் துயிலுகின்ற பரமனடிகளில் பக்தி பூண்டான். உள்ளத்தில் கள்ளமின்றி வாழ்ந்தான். ஊரூராகச் சென்று பிச்சை எடுத்து உயிர்வாழும் ஏழைகளுக்கு அன்னமளித்து உதவினன்.

34. உதிப்பனு மெனறு சொல்வோ முதித்தவன் மணத்தைச் [சொல்வேன்
சதியிலா இருப தாண்டில் சத்திதான் அன்னை வர்க்கம்
அதிபதி வருவா ளாகும் மாதுவின் குணத்தைச் சொல்வேன்
அதிகமாய் வார்த்தை கூர்வள் அம்மைபோல் சாய லொக்கும்.

34. இவ்வாறு பல நற்காரியங்களையும் செய்து வாழ்வதால் பிராம்மண குலத்தில் ஜனிப்பான். இனி ஜாதகனுடைய மணத்தின் காலத்தைச் சாற்றுவேன். இருபதாம் வயதில் விவாஹம் நடை பெறும். மணப் பெண் தாய் வருக்கத்தில் பிறந்திருக்கிருள். அப்பெண்ணின் குணத்தைக் கூறுவோம். அதிகமாகப் பேசுபவள். அன்னம்போல் தோற்றமுள்ளவள்.

35. முன்கோபி சிவந்த மேனி மொழியதைக் காப்பா ளாகும்
கன்னிக்கு வயது தீர்க்கம் கழறுவார் அத்திரி தாமும்
துன்னிய கேது ஏழில் சுக்கிரன் மூன்றில் தங்க
இன்னவன் தந்தைக்குத் தார மியம்புவே னிரண்டே யாக.

35. முன்கோபம் உண்டு. சிவந்த மேனியாள். தான் சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றுவாள். இவ்வாறு சொல்லக் கேட்ட அத்திரி கூறுவார். கேது ஏழாமிடத்தில் இருப்பதாலும் களத்திரகாரனுகிய சுக்கிரன் மூன்றாமிடத்தில் நீசனுக இருப்பதாலும் இவனுக்கு இரு மனைவிகள் என்று நாம் சொல்லுவோம்.

36. குறுமுனி சொல்லு கின்றார் குழவிக்குத் தாரம் ரண்டு
மறுவாது ஒன்றே தீர்க்கம் மதிரண்டில் பொன்னேன் ஜன்மம்
இருப்பதால் தார மொன்றே ஏழில்கேது இருந்த தோஷம்
அரிவையர் அனேகம் சேர்வர் அவைகளால் நிந்தை யேற்பன்.

36. குடத்தில் அவதரித்த முனிவரான அகஸ்த்தியர் பதில் கூறுவார். இவனுக்கு இரண்டு மனைவிகள் ஏற்படமாட்டார்கள். ஏனெனில் இலக்கனதிபதியான சந்திரன் குடும்பத்தில் இருக்கின்றன். மேலும் எல்லாத் தீயவினைகளைப் போக்கும் குரு லக்கினத்தில் விளங்குகிருர். [ஏழாமிடத்தைப் பார்க்கிருர் என்பது கருத்து] ஆகவே தாரம் ஒன்றுதான். ஏழாமிடத்தில் கேது இருப்பதால் பல மாதர்களுடன் இவன் தகாத முறையில் நட்புக்கொள்வான். ஆதலால் இவனுக்கு பல நிந்தனைகளும் உண்டாகும்.

குறிப்பு.—இவ்விரு பாடல்களும் ஐம்பதாவது ஜாதகத்திற்குப் பொருந்தாததை வாசகர்கள் காண்க.

37. குலமிலா மாதைச் சேர்வன் கூறின தாரம் ஒன்றே
புதல்வர்கள் சேதி சொல்வாய்ப் பிறந்திடும் நவம தாக
அதுகளில் ஆண்பால் மூன்று அம்பிகை மார்க ளவ்வாறு
சதமுடன் தீர்க்க மென்றேம் சாற்றும்பா லன்முன் ஜன்மம்.

37. சமகுலத்தில் ஜனிக்காத மாதர்களை அடைவான். ஆயினும் சாஸ்திரப்படி மணந்த மனைவி ஒருத்திதான். புத்திர பாவத்தைச் சொல்லுவீர்களாக என உமாதேவி கேட்க, முனிவர் கூறுகின்றர். இவனுக்கு ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் மூன்று பிள்ளைகளும் மூன்று பெண்களும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இனி ஜாதகனுடைய முன் ஜன்மத்தைச் சொல்வேன்.

38. தோகைமா மலைக்குக் கீழ்ப்பால் தண்டகா வனத்தி லேதான்
பாகமாய் ரெட்டி வமிசம் பிறந்துமே கிருஷி செய்து
ஆகம முணர்ந்தோர் கட்கு அமுதீந்து புகழும் பெற்றுப்
போகபாக் கியங்க ளுண்டாய்ப் புத்திரர் மனைவி யாகி.

38. தோகைமலைக்குக் கீழ்த் திசையிலுள்ள தண்டகா வனத்தில் ரெட்டி வமிசத்தில் தோன்றி, விவசாயம் செய்து, களத்திரர் புத்திரர்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். சாஸ்திர மறிந்த பெரியோர்களுக்கு அமுதளித்து ஆதரித்தான். நற்கீர்த்தியும் இவனுக்கேற்பட்டது. இவ் வுலகில் சுகங்களைத் தரும் பொருள்களை அடைந்து எல்லாச் சுகங்களையும் அனுபவித்தான்.

39. பவமது இல்லா தாகிப் பாவினுன் கால னூடு
நவனியில் பிரமன் லக்கம் நாயக னுதிப்பா னுகும்
தவசியே யிவனின் யோகம் சாற்றுவோம் பன்னி ரண்டில்
அவனியில் சேர்ப்பா னுகும் அம்புலி போலே யோகம்.

39. பாவம் சிறிதும் செய்யாதவனுகி அந்தகன் உலகை அடைந்தான். அவன் பிரம்மனது உலகமும் சென்று இங்கு இக் கடக லக்கினத்தில் தோன்றி இருக்கின்றுன். முனிவர்காள்! இனி ஜாதகனின் யோகங்களைக் கூறுவேன். பன்னிரண்டாவது வயதில் பூமிகளைச் சேர்ப்பான். அதன் பின் சுக்கில பக்ஷ சந்திரன்போல யோகங்கள் அதிகரிக்கும்.

40. ஈரெட்டு ஆண்டு தன்னில் எய்திடும் நிதிநி க்ஷேபம்
மாறிடா திந்த வார்த்தை மங்கலன் தசையந்த த்தில்
கூறுவோம் ஞாதி மேலாய்க் குபேரசம் பத்து ஏற்பன்
பாரினில் அரசர் மூலம் பலவிதச் செட்டுச் செய்வன்.

40. பதினுறும் வயது நடைபெறும்போது நிதி கிடைக்கும். நாங்கள் கூறின இவ் வார்த்தைத் தவருது. செவ்வாய்த் தசையின் அந்திய பாகத்தில் குபேரனுக்குச் சமமான ஐசுவரியத்தை அடைந்து, தன் குலத்தினருக்கு மேலாக வாழ்வான். அரசர்களுடைய ஆதரவினுல் பலவித வியாபாரங்களை நடத்துவான.

41. இல்லமும் இரண்டு செய்வன் இவன்துணை காப் பானுகும்
சொல்லது மேன்மை யாகும் தொடுத்ததை வெல்வா னுகும்
வல்லியும் வந்து பின்பு வளர்பிறை போலே யோகம்
நல்லதோர் சேதுசெல்வன் நல்கும்வ மாயி ரம்பொன்.

41. இரு வீடுகளை நிர்மாணம் செய்வான். தன் சகோதரனை ஆதரிப்பான். இவனுடைய பேச்சிற்கு விசேஷ கௌரவம் உண்டாகும். தான் ஆரம்பித்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவான். இவனுக்கு, மணத்திற்குப் பின், வளர் பிறைச் சந்திரன்போல அதிருஷ்டம் இன்னும் அதிகமாகும். சிறந்த புண்ணியஸ்தலமான சேதுவிற்குச் சென்று நீராடுவான். இவன் ஏழாயிரம் பொற்காசுகளைச் சம்பாதிப்பான். [உத்தேச மதிப்பு ரூபாய் எழுபதாயிரம்].

42. தந்தைமுன் துணைவர் வேறு செய்குவான் பதினே ழாண்டில்
பிந்திதாய்ச் சுதனை வேறு பிரிப்பனும் முப்ப தாண்டில்
தந்தைக்கு இருபா னேழில் சாற்றுவோம் கண்டம் தானும்
முந்துமால் அருளு மோங்கு முயர்வான குடும்ப மேற்பன்.

42. இவனது பதினேழாவது ஆண்டில், தந்தையின் முன் துணைவன் தனிக்குடும்பம் நடத்துவான். ஜாதகன் தனது முப்பதாவது வயதில் தன் இளைய தாய்க்குப் பிறந்த சகோதரனைத் தனித்துக் குடும்பம் நடத்தச் செய்வான். இவனது இருபத்தேழாவது வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும்; இறப்பான். ஜாதகனுக்குத் திருமாலின் கிருபையும் உண்டாகும். உயர்ந்த குடும்பி யாவான்.

43. அற்பசா தியரால் பொன்னும் அணுகிடும் பதினே ராண்டில்
சொற்பம்கோள் வந்து நீங்கும் துன்பங்கள் அணுகா வாகும்
பற்பல விதத்தால் லாபம் பகருவோம் சேயின் காலம்
விற்பன வேந்த னாலும் மேவிடும் தனம னேகம்.

43. பதினேராவது ஆண்டில் தாழ்ந்த குலத்தினரால் இவனுக்குப் பொன் கிடைக்கும். சிலர் இவனுக்கு எதிராகக் கோள் சொல்லுவார்கள். ஆயினும் அதனுல் ஒரு தீங்கும் ஏற்படாது. பல வழிகளில் லாபம் இவனுக்கு வரும். செவ்வாய்த் தசையின் பலனைக் கூறுவோம். அறிவாளியான அரசர்கள் மூலம் அதிக தனம் கிடைக்கும்.

44. அன்பது நாலு ஆண்டில் அழகிய ரிடப மாதம்
இன்னவ னுடலம் ஏகும் இயம்புவோ மிவன்பின் ஜன்மம்
தென்திசை சேது தன்னில் ஜனிப்பனும் க்ஷத்திரிய சேயாய்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

44. ஐம்பத்துநான்காவது ஆண்டில் வைகாசி மாதத்தில் ஜாதகன் இம் மண்ணுலகம் நீங்கி விண்ணுலகம் ஏகுவான். இவன் மறு பிறவியில் தென் திசையிலுள்ள சேது க்ஷேத்திரத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறப்பான். விநாயகரைப் பெற்ற தாயே! மேலும் கேட்பீராக.

45. பாலகன் ஜனிக்கும் காலை பண்டிவார் முதல்பா தத்தில்
ஏலவே ஆண்டு ஒன்பான் எய்திடும் திங்கள் ரண்டும்
சாலவே அன்னை கண்டம் சார்ந்திடும் வேறு மாதா
கோலமாம் தந்தை முன்னேன் கோதையு மரணமெய்தும்.

45. ஜாதகன் ரோஹிணி நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்திருக்கிறுன். ஆகையால் சந்திர தசையில் பாக்கி வருஷங்கள் ஒன்பது, மாதங்கள் இரண்டு. இந்தச் சந்திர தசையில் ஏற்படும் முக்கிய பலன்களைச் சொல்லுவேன். இவனைப் பெற்ற தாய்க்குக் கண்டம் ஏற்பட்டு இறப்பாள். அவ்வாறே ஜாதகனின் பெரிய தந்தையின் மனைவியும் மரணமடைவாள்.

46. தந்தையின் ஞாதி சூதம் சஞ்சல மனமு மெய்தும்
இந்தவன் தனக்கு ரோக மெய்திடும் பலவா றுகத்
தன்தனம் செலவே யுண்டு சாற்றுவோம் பின்பால் சேதி
இந்திர னிறைஞ்சு மாதே யிதுபூர்வ பாக மாமே.

46. தந்தையின் பங்காளி வருக்கங்களிலும் சூதகமேற்படும். கவலைகள் அதிகமாகும். ஜாதகனுக்கும் பல ரோகங்களால் உபத்திரவம் நேரும். பணம் பல வழிகளிலும் செலவாகும். இந்திரனும் போற்றி வணங்கும் தேவியே! இது பூர்வபாகமாகையால் சுருக்கமாகத் தெரிவித்தோம். இரண்டாம் பாகத்தில இச் செய்திகளை விவரமாக அறிவிப்போமாக.

ஜாதகம் 51

1. மதிவிணை கேது லாபம் மந்தனும் விரயம் புக்கப்
புதன்ரவி வெள்ளி ஏழில் பொன்குச னிரண்டில் தங்கச்
சதியிலா ராகு ஐந்தில் சந்திரர்க் கிரண்டாம் ஓரை
பதியது ஜன்ம மாகப் பகருவீர் பலனைத் தானே.

		கேது	சந்திரன் சனி
	இராசி		லக்கினம்
புதன் சூரியன் சுக்கிரன்	சக்கரம்		குரு செவ்வாய்
	ராகு		

நக்ஷத்திரம் திருவாதிரை ராகு தசை இருப்பு வருஷங்கள் பதினறு, மாதங்கள் எட்டு.

1. சந்திரன் மிதுனம், கேது விருஷபம், சனி மிதுனம், புதன் சூரியன் சுக்கிரன் மகரம் குரு செவ்வாய் சிங்கம், ராகு விருச்சிகம். லக்கினம் கடகம். இக் கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என உமையவள் வினவினுள்.

2. உமையவள் கேட்கும் போது உரைக்கிறுர் வசிட்டர் தாமும்
அமைந்திடு மாண்பால் ஜன்மம் அறைகிறே மில்லம் தன்னை
எமனுத்திரம் வாடை யாகும் இந்திரன் வாச லாகும்
ஜமதக்கினி மாயன் கீழ்ப்பால் செப்புவோம் தன்கீழ் ஈசன்.

2. இவ்வாறு உமையவள் கேட்கும்போது வசிஷ்டர் பதிலுரைப்பார். நவக்கோள்களின் இத்தகைய நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி தெற்கு வடக்காக அமைந்திடும். ஜனித்த வீடு கீழ்த்திசையை நோக்கி இருக்கும். வீட்டிற்குக் கிழக்குத் திசையில் ஜமதக்னி கோயிலும் விஷ்ணு ஆலயமும் விளங்கும். அக் கோயில்களுக்கும் கீழ்ப்புறத்தில் சிவபிரான் கோஷ்டமும் உண்டு.

குறிப்பு.—ஜமதக்னி முனிவர் ரேணுகா தேவியின் கணவனுவார். மாரியம்மனுக்கு ரேணுகாதேவி என்ற பெயருமுண்டு. இப் பாட்டில் மாரியம்மன் கோயிலுண்டு என்று சொல்லுவதற்கு மாருக ஜமதக்னி, கோயில் உண்டென இந் நூலாசிரியர் புதிய முறையில் கூறினுர். கிழக்குத் திசையில் மாரியம்மன் கோயில் உண்டென்பது கருத்து.

3. அக்கினி காளி தந்தி அறைந்தனம் நதியும் தெற்கில்
மிக்கவே யீசன் கோஷ்ட மறைந்திடு மிதுவல் லாமல்
நக்கனைப் பூசை செய்யும் நாயகி அருகில் தங்கும்
தக்கவே புத்த ருத்திரம் தானடை யாளத் துள்ளே ;

3. தென் கிழக்குத் திசையில் காளி கோயிலும் விநாயகரது ஆலயமும் இருக்கும். தெற்கில் ஒரு நதியும் உண்டு. அங்குச் சிவபிரான் ஆலயம் ஒன்றும் விளங்கும். கைலாயநாதனைப் பூசை செய்யும் பார்வதி தேவியின் கோஷ்டமும் இருக்கும். வடதிசையில் புத்தர் விஹாரமும் விளங்கும். இத்தகைய அடையாளமுள்ள ஊரில் ;

4. பலவித சோலை சூழி பகருவோம் சஹா தன்னில்
இலகிய கங்கைச் சேயா யிவனுமே யுதிப்பா னுகும்
குலவிய தந்தை மாதா குமரர்கள் மனைவி யோகம்
நலமுள துணைவர் யோகம் நாட்டுவோ மிந்நூல் தன்னில்.

4. பலவித சோலைகளும் நீர்நிலைகளும் உண்டு. அவ்வாருன நடுத்தர மான கிராமத்தில் வேளாள குலத்தில் இச்சாதகன் பிறந்திருக்கின்ருன். தேவியே! நாங்கள் இந்நூலில் ஜாதகனின் தாய் தந்தை, சகோதரர் மனைவி களத்திரம் இவர்களைப்பற்றியும், முன்பின் ஜன்மம், யோகம் இவைகளையும் அறிவிப்போம்.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோம் மூவ ராகும்
அந்தவர் வேருய்ச்செல்வர் அறைகிரும் பிதாகு ணத்தை
முந்தவே மால்நி றத்தான் முன்கோபம் பின்பு சாந்தம்
தன்தன முடையா னுகும் தைரியனுகை சாலி.

5. ஜாதகனின் தந்தைக்குச் சகோதரர்கள் மூவர். அம்மூவரும் தனித் தனியே வாழ்வார்கள். பிதாவின் நிறம் குணம் முதலியவைகளைத் தெரி விப்போம். திருமால் நிறம் பொருந்தியவன். [கருந்தமேனியான் என்பது கருத்து.] முன்கோபமுள்ளவன். ஆயினும் உடனே சாந்தமடைவான். தன் முயற்சியால் பணத்தைச் சம்பாதிப்பான். மிக்க தைரியம் வாய்ந்தவன். மதிநுட்பம் உடையவனுகவும் இருப்பான்.

6. உரோமங்கள் நீட்சி யில்லான் நுவலுப தேசம் கொள்ளான்
தீமைக ளொருவர்க் கெண்ணன் ஜனஉப கார னுவன்
தாமத குணத்தா னுகும் சகலருக்கு நல்ல னுவன்
நேமியில் அல்ப வஸ்து நுகருவான் சூடு முள்ளான்.

6. ரோமங்கள் நீண்டிரா. நல்லவர்களிடம் உபதேசம் கேளாதவன். யாருக்கும் தீமைகளை மனத்தினுலும் எண்ணுதவன். ஜனங்களுக்கு உதவி புரிவான். தாமத குணமுள்ளவன். எல்லோரிடமும் நல்லவனுகப் பழகுவான். அற்ப வஸ்துக்களிலும் ஆசைகொண்டவன். இவனது உடலில் உஷ்ணம் அதிகரித்திருக்கும்.

7. மூலநோ யுடைய னுவன் முன்கரம் ருத்திர ரேகை
சாலவே கிருஷி செய்வன் தயையுளன் சுக புசிப்பன்
ஞாலமேல் பகைவ ரில்லான் நனிமைாய் வார்த்தை சொல்வன்
வேல்விழி மனையாள் பட்சம் வித்தகி கேட்டி டாயே.

7. மூலரோகம் உடையவன். கரத்தில் உருத்திர ரேகை விளங்கும். மிகச் சிரத்தையுடன் விவசாயம் செய்வான். எல்லோரிடமும் கருணை கொண்டவன். சுகங்களை நன்ருக அனுபவிப்பான். எதிரிகள் இல்லாதவன். நயமாகப் பேசுவான். மனைவியிடத்தில் மிக்க பக்ஷபாதம் உடையவன். ஸர்வவல்லமை வாய்ந்த ஈசுவரியே ! மேலும் கேட்பீராக.

8. பூமியும் விருத்தி செய்வன் புண்ணியம் செய்ய இச்சை
சாமிமேல் பக்தி கொள்வன் சகடிக ளுடைய னுகும்
காமனை விருப்பம் கொள்ளான் கடனிலான் பந்து நேயன்
தேன்மொழி மாதே யாங்கள் செப்பின மொழி குன்ருது.

8. நிலங்களை அபிவிருத்தி செய்வான். புண்ணிய காரியங்களில் விருப்பங்கொள்வான். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டவன். வண்டி முதலிய வாஹன வசதிகள் உடையவன். அதிக ஆசை இல்லாதவன். கடன் இல்லாதவன். பந்துக்களிடம் அன்பு உடையவன். தேன் போன்ற இனிய மொழிகளைக் கூறும் தாயே ! நாங்கள் சொன்ன மொழி குன்ருது.

9. இப்படி யிருக்கும் தந்தை யிவனுமே மூன்றும் ஜன்மம்
மெய்ப்புட னுதிப்பா னுகும் விளம்புவோ மிவன்கு ணத்தை
ஒப்புடன் கல்வி கொஞ்சம் உறுதியா மூர்க்க முள்ளான்
தப்பித மொருவர்க் கெண்ணு தான்கரு நிறத்தா னென்ருேம்,

9. இத்தகைய குணங்கள் வாய்த்தவனுக்கு இக் கடகலக்கின மகன் புத் திரனுகப் பிறந்திருக்கின்ருன். இனிச் ஜாதகனின் குணத்தைக் கூறுவோம். சிறிது கல்வி கற்றவன். பிடிவாத முள்ளவன். அதுவும் ஸ்திரமாக இருக்கும். பிறர்க்குக் கெடுதல்களை எண்ணுதவன். அவன் கருநிறம். வாய்ந்தவன்.

10. அவசர மனத்த னுகும் அவன்தேக மொடிச்ச துள்ளான்
அவனியில் பொய்கள் சொல்லான் நன்முக வடிவு காணும்
தவசிக ளுறவு கொள்ளான் தன்தேகம் பித்த சூடு
அவனியோர் புகழவாழ்வான் அருந்துவான் அல்ப வஸ்து.

10. அவசரமனம் வாய்ந்தவன். [காரியத்தின் விளைவுகளை யோசிக்காமல் திடீரென அவைகளில் இழிவான் என்பதுகருத்து.] மெலிந்த சரீரம் உடைய வன். பொய்சொல்லாதவன். அவனது முகத்தில் வடுக்கள் காணப்படும். பெரி யோர்களுடன் தொடர்பு கொண்டவன். பித்தச்சூடு உடையவன். உலகத்தினர் புகழும் வகையில்வாழ்க்கை நடத்துவான். அல்பவஸ்துக்களையும் உட்கொள்ளு வான். [இதற்குக் கள்குடிப்பான் என்றும் பொருள் கொள்ளலாம்.]

11. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தன்துணை ஆத ரிப்பன்
முந்திய துணைவர் காணுன் முருகன்மேல் பக்தி கொள்வன்
பிந்திநே ரிழையோ ரில்லான் பலமுளான் நாபி நோயன்
சந்ததம் வறுமை யில்லான் சகலர்க்கு நல்லோ னுவன்.

11. தந்தையைவிட சிறப்புடன் வாழ்வான். தன் சகோதரர்களை ஆதரிப்பான். இவனுக்கு மூத்த உடன்பிறந்தார்கள் இல்லை. சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி கொண்டவன். பின் பிறந்த சகோதரிகள் இல்லாதவன். [சகோதரர்கள் உண்டென்பது கருத்து.] நல்ல சரீர பலம் வாய்ந்தவன். நாபியில் நோய் உடையவன். எப்பருவத்திலும் வறுமை இல்லாதவன். எல்லோருக்கும் நல்லவனுவான்.

12. தரளத்தோ டொத்த தந்தம் பங்கய ரேகை யுள்ளான்
இதமான வசனம் சொல்வன் ஈகைவான் கிருஷி செய்வன்
விதவிதச் செட்டுச் செய்வன் விசித்திர வீடு செய்வன்
நதிபல தீர்த்தம் தோய்வன் நாயகி கேட்டி டாயே.

12. பற்கள் முத்துக்கள் போல் விளங்கும். கரத்தில் கமல ரேகை திகழும். நன்மையைத்தரும் வார்த்தைகளைப் பேசுவான், பொருள்களைத் தியாகம் செய்வதில் ஆசை உடையவன். விவசாயம் செய்து ஜீவிப்பான். பலவிதமான வியாபரங்களையும் செய்வான். அழகிய வீடு கட்டுவான். பல புண்ணிய நதிகளில் ஸ்னனம் செய்வான். எங்கள் ஈச்வரி! மேலும் கேட்பீராக.

13. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் முத்தோர்
காணேம் அவனியில் இளையோ னுண்டு ஆனது ரண்டு தீர்க்கம்
நவனியில் மாது நஷ்டம் நாட்டுவோ மிவனுக் கேதான்
கவனமா யிளையோன் சேதிகூறுவோம் தாயே கேளு.

13. இவனுடைய துணைவர்களைப் பற்றி பேசுவோம். இவனுக்கு முன் பிறந்தார்களில்லை. இளைய சகோதார் இருவருண்டு. அவர்கள் தீர்க்காயுளுடன் வாழ்வர். ஆனல் இவனுடைய சகோதரிகள் நீடித்து வாழார்கள். இளையவனுடைய வரலாறுகளைச் சொல்லுகின்றேன். அன்னையே! கேளுங்கள்.

14. யானையின் திறத்தா னுகும் அதிகமாய் வார்த்தை சொல்வன்
மான்விழி மனையாள் பட்சன் மருமவான் மூர்க்கமுள்ளான்
ஈனமாம் குணங்க ளில்லான் எதிரிக்கு அஞ்சா னுகும்
கானக முடைய னுகும் காதலி கேட்டிடாயே.

14. யானைபலம் பொருந்தியவன். அதிகமாகப் பேசுவான். மனைவியிடத்தில் மிகவும் அன்புள்ளவன். கபடமும் உண்டு. மூர்க்கன். ஆனல் கெட்ட குணங்கள் இல்லாதவன். எதிரிகளைக் கண்டு அஞ்சாதவன். தோப்புகளும் தோட்டங்களும் உடையவன். பார்வதி தேவியே! கேளுங்கள்.

15. துருசான நடையு மாவன் துண்டமாய்ப் பேச வல்லான்
திருமகன் வாச முள்ளான் தீரனும் வலிவு முள்ளான்
அறைகிறேம் தாரம் ஒன்றே அவனுக்குச் சுதர்ஆண ரண்டு
மருவிய பெண்பால் மூன்று வரைந்தனம் தீர்க்க மாக.

15. வேகமாக நடப்பான். கண்டிப்பாகப் பேசுவான். லக்ஷ்மீ வாசம் பொருந்தியவன். தைரியம் உடையவன். சரீரவலிமை பொருந்தியவன். அவனுக்கு மனைவி ஒருத்திதான். அவர்களுக்கு இரு பிள்ளைகளும் மூன்று பெண்களும் பிறந்து தீர்க்காயுளுடன் வாழ்வார்கள்.

16. அதற்குப்பின் சேத மாகும் அதன்பின்னல் வருவோன் சேதி
நிதியுளான் கருநி றத்தான் நிமிஷத்தில் கோபி யாவன்
சதியான மனத்தா னுகும் சமர்த்தாக வார்த்தை சொல்வன்
பதியது புதிதாய்ச் செய்வன் பார்வதி கேட்டி டாயே.

16. அவைகளுக்குப் பின் பிறக்கும் குழந்தைகள் சேதத்தை அடையும். நிற்க, ஜாதகனுடைய இரண்டாவது சகோதரனைப் பற்றிக் கூறுவோம். அவன் செல்வம் படைத்தவன். இருண்ட மேனியான். வெகு சீக்கிரத்தில் கோபியாவான். கபடமனம் உடையவன். சாதுர்யமாகப் பேசுவான். புதிய வீடு கட்டுவான். பார்வதி தேவியே! மேலும் கேட்பீராக.

17. தன்மன மழுத்த முள்ளான் ஜனங்களும் நல்லோ னென்பர்
கனமன முடையோன் போலே கழறுவோம் பலத்தி லாறு
பின்னையும் குழவி போலே பேசியே எதிரி பொன்னை
தன்னய மாக வாங்க நற்சமத் துடைய னுமே.

17. மன அழுத்தம் உடையவன். ஜனங்கள் இவனை நல்லவனென்றே கொண்டாடுவார்கள். உதாரமனம் படைத்தவன் [பணத்தைப் பொருட்படுத்தாதவன்] போல முதலில் பழகி பின்பு குழந்தைப்போலக் கொஞ்சிப் பேசிப் பிறருடைய பொன் முதலிய பொருள்களைத்தன் வசப்படுத்தும் ஒரு வித ஆற்றல் படைத்தவன் என்று யாம் அறிவோம். [சுருங்கச்சொல்லின் வஞ்சகன் என்பது கருத்து.]

18. இவனுடை செங்கை தன்னிச் லிலகும்பூ மகளின் ரேகை
கவனமா யிருக்கு மென்று காட்டினேன் தெளிந்து காண்பாய்
நவமணி சலங்கள் முற்றும் நல்கிடு மிவனுக் கென்றேன்
பவமது மணுகி டாமல் பாலகன் வாழ்வ னுமே.

18. இவனுடைய சிவந்த கரத்தில் செவ்வாய் ரேகை அல்லது தானிய ரேகை விளங்கும். ஆகையால் இவனுக்கு நவதானிய சமிருத்தி இருக்கும். வாழ்க்கையில் எவ்விதக் கெடுதலும் இல்லாமல் சிறப்பாக வாழ்ந்திடுவன்.

19. தந்தைதாய்ப் பட்ச னுவன் சாற்றினே னரசர் நேயன்
விந்தையா யெதிரிக் கஞ்சான் வேண்டிய மாடதச் சேர்வன்
சுந்தரன் கரங்கால் தானும் சோர்விலாச் சமமென் றேது
விந்தையா யபிமா னப்பெண் மேவிடு மொருத்தி யென்றேும்.

19. தாய் தந்தையர்களிடம் பக்திகொண்டிருப்பான். அரசர்களுக்கும் இவன் நண்பனுவான். எதிரிகளைக் கண்டு பயப்படாதவன். தான் விரும்பிய மாதர்களிடம் பழக்கமுள்ளவனுவான். கைகால் முதலிய அவயவங்கள் சமமாக வளர்ந்து அழகாக விளங்கும். சோர்வில்லாதவன். இவன். ஓர் அபிமான மனைவியையும் அடைவான்.

20. மனைவியு மொன்றே யாகும் வரும்சுத ராண்பா லொன்று
கனமுடன் விருத்தி யென்றேும் கழறினேம் துணைவர் சேதி
அனையவே சிலநாள் சென்று அவர்களும் வேருய்ச் செல்வர்
சினமிலா அந்தி யத்தில் செப்புவோம் விவர மாக.

20. சாஸ்திரமுறைபடி மணமான மனைவி ஒருத்திதான். அவளுக்கு ஒரு பிள்ளை பிறந்து நீண்ட ஆயுளுடன் வாழ்வான். ஜாதகனும் அவளுடைய இரு சகோதரர்களும் சிலகாலம் ஒன்றுகக் குடும்பம் செய்து, அதன்பின் வேருகச் செல்வர். இவ்வாறு ஜாகதனின் துணைவர்களின் விருத்தாங்தங்களைச் சொன்னேம். இன்னும் விவரமாக இரண்டாம் பாகத்தில் கூறுவோம்.

21. இந்நல முடையா னுக்கு இயற்றுவோ மணத்தின் காலம்
சொன்னதோர் பதினெட் டாண்டில் துலங்கிய உத்திர திக்கில்
தன்னிலே உதித்த மாதைத் ஜாதகன் மணமே கொள்வன்
அன்னவள் மாதுர் வர்க்கம் அறைந்தன மொழிகுன் றுது.

21. இனி ஜாதகனின் விவாஹ காலத்தைச் சொல்லுவேன். இவனுக்கு பதினெட்டாம் வயதில் மணம் நடைபெறும். மணப்பெண் வடதிசையில் அன்னை வருக்கத்தில் பிறந்திருக்கின்ருள். நாம் சொன்ன மொழி தவருது நடைபெறும்.

22. கொண்டிடும் அம்மா நுக்குக் குழவிக ளாண்பால் ரண்டு
வண்குழல் கன்னிரண்டு மருவிடும் தீர்க்க மாக
விண்டிடா மூன்று நஷ்டம் வசிட்டரும் சொல்லும் போது
கண்டித விசுவா மித்திரர் கழறுவார் அதிலோர் சங்கை.

22. அந்தத் தம்பதிகளுக்கு இரு பிள்ளைகளும் இரு பெண்களும் பிறந்து தீர்க்கமாக வாழ்வார்கள். இவர்களைத் தவிர மூன்று குழந்தைகள் சேதமாகும். வசிஷ்டர் இவ்வாறு சொல்லக் கேட்ட விசுவாமித்திரர் ஓர் ஆக்ஷேபத்தைக் கூறிஞர்.

23. அஞ்சினுக் குடையோ னீசம் அரிமக னைந்தைப் பார்க்கத்
துஞ்சிடு மதலே யென்றேும் சுரர்குரு உச்ச மாகத்
தஞ்சமா யஞ்சைப் பார்க்க ஜனித்திடும் குழவி யென்றேும்
மஞ்சனின் பூர்வம் தன்னே வரைகிறேம் கேளும் தாயே.

23. புத்திரபாவத்திற்கு உடையவன் நீசம். அரிமகனும் ஐந்தாமிடத்தைப் பார்க்கின்ருன். ஆகையால் இவனுக்குச் சந்ததியே இராது இவ்வாக்ஷேபத்திற்கு வசிஷ்டர் பதில் உரைப்பார். தேவகுரு உச்சம்

பெற்று ஐந்தாமிடத்தைப் பார்ப்பதால் நிச்சயமாக ஜாதகனுக்குப் புத்திர பாக்கியமுண்டு. இவனுடைய பூர்வஜசன்மத்தைக் கூறக் கேளுங்கள் தாயே!

வேறு

24. பாலகனின் முன்ஜன்மம் பத்திநிற்கும் காளாத்தி
சீலமுமுள குன் றின்பால் சென்திததே
சாலவருன் மதுசைவனுக வாகாக அவ்வூரில்
சீலமீலா செயலனேகம் சென்றே.

24. ஜாதகன் முன்பிறவியில் காளஹஸ்தி க்ஷேத்திரத்திற்கு அருகிலுள்ளதொருமலையை அடுத்துள்ள ஊரில் சைவகுலத்தில் பிறந்திருந்தான். நற்சீலத்திற்குப் பொருந்தாத பல செயல்களைச் செய்தான்.

25. கணிதவேலைக் குரிய காரணத்தைத் தானேற்றுன்
மாணமுதலில் அரன்செலவு வாங்குதலும்—தனமுடைய
வாணிபத்தால் நான்வருகும் பொய்க் கணக்கும் கைமுதனும்
பேணும் பெரியதனம் பார்.

25. கணிதவேலைக்குரிய யோக்யதையை அடைந்து, முதலில் சிவபிரான் பூசைக்கு என்று பணத்தை வாங்கி, பொய்க்கணக்கு எழுதி அதைக் கொண்டு வியாபாரம் செய்து அதிக பணம் சம்பாதித்தான்.

வேறு

26. அந்நகர் க்ஷத்திரிய வமிசம் மனமில் லாத பெண்ணை
இன்னவன் பலவந் தத்தால் ஆலய போகம் துய்த்தான்
கன்னிக்குக் கருவு தங்கிக் கனத்தபண்டிதங்கள் செய்ய
உன்னக் கருவு நீங்கி உத்தமி உடலை நீத்தாள்.

26. இவ்வாறு இருக்கையில் இவன் அந்த ஊரிலுள்ள ஒரு க்ஷத்திரிய பெண்ணைப் பலாத்காரமாகக் கெடுத்தான். அவளுக்குக் கர்ப்பம் ஏற்பட்டவுடன் பல மருந்துகளைக் கொடுத்து அதை நீக்கினுன். அதனுல் அந்தப் பெண்ணும் உயிர் நீத்தாள்.

27. அந்தவோர் தோஷம் தானும் அணுகிற்று அவனுக் கேதான்
வந்திடு மந்தி யத்தில் வாயுவால் பாதை கண்டு
சுந்தரன் மருண மாகியால் சுநிதியின் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றேும் மங்கையே கேட்டி டாயே.

27. அந்தப் பாவம் இவனை வந்தடைந்தது. பிறகு இவன் அந்திய காலத்தில் வாதரோகத்தினுல கஷ்டப்பட்டு இறந்தான். அவனைத்தான் இங்குப் பிரம்மதேவன் படைத்திருக்கின்ருன். தேவியே! மேலும் கேளுங்கள்.

28. முந்திய தோஷம் தீர முயலுவோம் சாந்தி தானும்
மைந்தனும் மனைவி யோடு வறுமுகர் தலங்கள் சென்று
சந்ததம் வில்வம் தன்னால் ஷண்முகர்க் கர்ச்சித் தேத்தி
எந்தையே மாதம் தோறும் இன்பமாய்க் கார்த்தி கைக்கு ;

28. முன்ஜன்மத்திலேற்பட்ட பாவம் தீர்ந்து குழந்தைகள் உய்ய ஒரு சாந்தி சொல்லுகிறோம். இச் சாதகன், தன் மனைவியுடன் சுப்பிரணிய சுவாமி எழுந்தருளி இருக்கும் அநேக புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று அவரை வில்வத்தால் பக்தியுடன் அர்ச்சித்துப் போற்றவேண்டும். மேலும் ஒவ்வொரு மாதமும் கிருத்திகை தினத்தில் ;

29. அரனடி ஒருவர்க் கன்னம் அன்புட னீவா ளுகில்
வரும்சுதர் விருத்தி யென்றும் வளர்பிறை போலே யோகம்
பெருகிடு மிவனுக் கேதான் பேசின மொழிகுன் றாது
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

29. ஓர் அரனடியார்க்கு அன்புடன் அமுதளிக்கவேண்டும். இவ்வாறு செய்தால் ஜனிக்கும் குழந்தைகள் விருத்தியடையும். ஜாதகனுக்கும் யோகங்கள், வளர்பிறைச் சந்திரன்போல வளர்ந்திடும். நாங்கள் சொன்ன வார்த்தை தவறாது. ஆறுமுகக் கடவுளைத் தந்த தாயே! மேலும் கேளுங்கள்.

30. அன்னையு மிருநி றத்தாள் அவளுமே ஒடிச்சல் தேகி
தன்னிலே பித்தச் சூடு தங்கிடும் சீல மில்லாள்
உன்னத அழகில் லாதாள் உறுதியா மனத்த ளாகும்
இன்னவ ளதிர்ஷ்ட சாலி இவள்குலக் குற்ற முள்ளாள்.

30. ஜாதகனுடைய தாய் கருத்தமேனியாள். மெலிந்த சரீரம் வாய்ந்தவள். பித்தச்சூடு உடையவள். நற்சீல மில்லாதவள். அவளது தோற்றமும் அழகியதன்று. உறுதியான மனம் படைத்தவள். அதிருஷ்ட முடையவள். இவள் பிறந்த குலத்தில் தோஷங்கள் ஏற்பட்டிருக்கும்.

31. வறுமைக ளில்லா ளாகும் வரனுக்கு நேய முள்ளாள்
அறைகிறோம் துணைவர் தம்மை ஆணென்று பெண்ணு மவ்வாறு
இருவரும் விருத்தி யென்றும் இலகாது மற்ற வெல்லம்
நிறையதாய்த் தந்தை வர்க்கம் நிகழ்த்துவோம் தாரம் ரண்டே.

31. வறுமை இல்லாதவள். கணவனிடத்தில் மிக்க பக்தி கொண்டவள். அவளுக்கு ஒரு சாகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு. அவ்விருவரும் விருத்தியடைவார்கள். மற்றைய உடன் பிறக்கும் குழந்தைகள் விருத்தியாகா. இவனுடைய தகப்பனுக்கு மனைவிமார்கள் இருவர்.

32. அன்னையின் பூர்வம் தன்னை அறைகிறோம் தணிகை தெற்கில்
தன்னிலே பேரூர் தன்னில் சதுர்குலம் தனிலு தித்து
மன்னிய குடும்பி யாகி வாழ்கிற நாளி லேதான்
இன்னவன் தனக்கு வந்த இடரதைச் சொல்லு கின்றோம்.

32. ஜாதகனுடைய அன்னையின் பூர்வஜன்மத்தைக் கூறுவேன். இவள் முன்பிறவியில் திருத்தணி க்ஷேத்திரத்திற்குத் தெற்கில் உள்ளதொரு பெரிய ஊரில் வேளாள குலத்தில் பிறந்து பெரிய குடும்பியாகி வாழ்ந்துவரும் காலத்தில் இவனுக்கேற்பட்ட பாவத்தை நாங்கள் கூறுகின்றோம்.

33. சேவலின் அண்டம் தன்னை சிறையில்............
வியக்............பின்னம்................
தாவிய ஐந்து குஞ்சு தானது மாண்ட தென்றோம்
பாவங்க ளிவளைப் பற்றிப் பகருவோம் கேளும் தாயே.

33. ஒரு தாய்க்கோழியை சிறையிலடைக்க, தனித்திருந்த முட்டைகளிலிருந்து ஜனித்த ஐந்து கோழிக்குஞ்சுகள் சேதத்தை அடைத்தன. அந்தப் பாவங்கள் இவளைத் தானே சாரும்! தாயே! மேலும் கேளுங்கள்.

34. முன் ஜன்மம் போன தோஷம் முயன்றதா லிச்சென் மத்தில்
இன்னவள் தனக்குப் புத்திர ரேகிடு மெமன்ப திக்குப்
பன்னிய ஐந்து தோஷம் பகர்ந்தன மிவளுக் கேதான்
பின்னமும் ஜன்மம் தன்னை யியம்புவோ மவ்வூர் கீழ்ப்பால்
(தன்னிலே யிக்கு லத்தில் தானவள் வருவா ளாமே.

34. முன்ஜன்மத்திலேற்பட்ட பாவத்தால் இப்பிறவியில் இவளுடைய குழந்தைகளில் ஐவர் சேதத்தை அடைவர். பின்ஜன்மத்தையும் சொல்லுகின்றேன். இப்பொழுது வசிக்கும் ஊருக்குக் கீழ்த்திசையில் உள்ளதொரு கிராமத்தில் இதே ஜாதியில் பிறப்பாள்.

35. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் காஞ்சி தென்கீழ்ச்
சந்ததம் கலகம் காத்த வாதரீஸ் வரர்தன் னூட்டில்
அந்தவோர் வணிக னுக்கு அருமக வாகத் தோன்றி
மூந்தியே செட்டுச் செய்து முயற்சியாய்க் குடும்பி யாகினான்.

35. ஜாதகனுடைய தகப்பனின் முன்ஜன்மத்தைச் சாற்றுவேன். காஞ்சிக்குத் தென் கிழக்கில் கஷ்டங்களைக் காத்த வாதபுரீச்வரர் எழுந்தருளி இருக்கும் ஊரில் ஒரு வணிகனுக்கு மகவாகப் பிறந்து வளர்ந்து வியாபாரம் செய்து மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாகி வாழ்ந்து வந்தான்.

36. தானமும் தரும மின்றித் தனத்தின்மே லிச்சை யாகித்
தேன்மொழி தனை உரைத்து ஜனஉப கார ளுகி
மானமாய் ஜீவித் தேதான் மறலிதன் பதிக்குச் சென்று
ஆனதோர் பிரமன் லக்கம் வரையிலே வந்தா னென்றோம்.

36. தான தருமங்களைச் செய்தான். பணத்தில் ஆசை கொண்டவனாகவும் இருந்தான். [மேன் மேலும் பணம் சம்பாதித்துத் தான தருமங்கள் செய்தான் என்பது கருத்து.] கொடூர வார்த்தைகளைப் பேசாமல் தேன் போன்ற வார்த்தைகளையே பேசி வந்தான். [இதுவும் ஒரு முக்கிய தருமம்

எனக் கொள்ளல் வேண்டும்.] ஜனங்களுக்கு உதவி புரிந்தான். இவ்வாறு நல்ல வாழ்க்கை நடாத்தி அந்தியத்தில் இறந்து'' பிரம்மன் உலகமும் சென்று அங்கிருந்து இப்புவியில் பிறந்திருக்கிருன்.

37. பின்ஜன்மம் துவாரை தன்னில் பிறப்பனே கோகு லத்தில்
அன்னேயும் கேட்க லுற்ருள் அவனிந்த ஜன்மம் தன்னில்
என்னபுண்ணி யங்கள் செய்தா ரியம்புவீர் முனியே யென்ருள்
அன்னவ னிச்சென் மத்தில் யாவர்க்கு நல்லோ ணுகி;

37. வரும் ஜன்மத்தில் துவாரகையில் யாதவ வமிசத்தில் பிறப்பான். பார்வதி தேவி கேட்கலுற்ருள். புண்ணிய ஸ்தலமான துவாரகையில் பிறப்பதற்கான புண்ணியம் இச்சென்மத்தில் என்ன செய்திருக்கின்ருன்? முனிவரே! சொல்லுங்கள் என, முனிவர் பதில் சொல்லுவார். அவன் இப்பொழுது யாவர்க்கும் நன்மைகளைச் செய்திருக்கின்ருன். ஆகையால் இவனுக்கு நல்லவன் என்ற பெயரும் தானகவே ஏற்பட்டது.

38. அறந்தனி லிச்சை வைத்து அறுகுணன் பத்தி பூண்டு
வருவதால் பின்ஜன் மத்தில் வருகுவான் நந்த ணுகத்
திறமுட னிவர்கள் காலம் செப்புவீர் முனியே என்ருள்
நெறியுடன் சொல்லு கின்றேன் நிமலியே கேட்டி டாயே.

38. மேலும் தருமத்தைச் சிரத்தையுடன் செய்தான். விஷ்ணு பக்தி பூண்டிருந்தான். ஆகையால் வரும் பிறவியில் துவாரகையில் யாதவ குலத்தில் பிறப்பான். ஜாதகனுடைய தாய் தந்தையர்களின் ஆயுட் காலத்தை வரையறுத்துக் கூறுங்கள் எனப் பார்வதி கேட்க, முனிவர் கூறுவார்.

குறிப்பு.—இங்கு அறுகுணன் என்ற சொல் விஷ்ணுவைக் குறிக்கும். கடவுளின் ஆறு குணங்களாவன: ஐசுவரியம், வீர்யம், புகழ், திரு, ஞானம் வைராக்கியம்.

39. தந்தையின் மரண காலம் சாற்றுவோ முப்பா ணலில்
அந்தையே மகர மாதம் இயம்புவோம் கர்மம் தானும்
முந்திய முப்பான் மூன்றில் உயர்கன்னி மாதம் தன்னில்
வந்திடு மாதுர் கண்டம் மங்கையே கேட்டி டாயே.

39. ஜாதகனுக்கு முப்பத்து நான்காவது வயதில் தை மாதம் வரையில் இவன் தந்தை உயிர் வாழ்ந்திருப்பான். ஜாதகனின் முப்பத்து மூன்றும் வயதில் புரட்டாசி மாதம் வரையில் இவன் அன்னே உயிரோடு இருப்பாள். தேவியே! மேலும் கேளுங்கள்.

40. இன்னவர் மரண காலம் இயம்புவோ மறுப தாண்டில்
உன்னித மிதுன மாத முயர்பக்கம் சதுர்த்தி தன்னில்
தன்னிலே மார்பு நோயால் சண்டன்தன் பதிக்குச் செல்வன்
அன்னவன் பின்ஜன் மத்தை அறைகிறோம் கேளும் தாயே.

40. ஜாதகனுடைய மரண காலத்தையும் இயம்புவேன். அறுபதாவது வயதில் ஆனி மாதத்தில் சுக்கிலபக்ஷத்தில் சதுர்த்தி திதியில் மார்பு நோய் [மாரடைப்பு] கண்டு விண்ணுலகம் ஏகுவான். அவனுடைய மறு பிறவியையும் தெரிவிக்கின்றேன்.

41. திருப்பனங் காட்டூர் தன்னில் செல்வனு மருகா வமிசம்
பெருமையாய்க் குடும்பி யாகிப் பிரபல கீர்த்தி பெற்று
வறுமைக ளில்லா வாழ்வன் வரைகிறோம் யோகச் சேதி
ஆறுமுகன் தன்னேப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

41. திருப்பனங்காடு என்னும் ஊரில் இவன் சைன சாதியில் பிறந்து பெருமை வாய்ந்த குடும்பியாகி, பிரபல புகழையும் பெற்று, வறுமை இல்லாதவனுக வாழ்வான். இவனுடைய பொதுயோக வரலாறுகளைக் கூறுவேன். ஆறுமுகனேப் பெற்ற தாயே! கேட்பீராக.

42. தன்தன மதிகம் சோப்பன் தன்குல மெச்ச வாழ்வன்
சொந்தமாய்ப் பணிதி பாத்திரம சுகம்பெறு கிருஷி யுண்டு
சிந்துரு சகட முண்டு சித்திர வீடு செய்வன்
சொந்தநல் ஆஸ்தி விருத்தி சுந்தரி கேட்க லுற்ருள்.

42. தன் முயற்சியினுல் அதிக தனத்தைச் சம்பாதிப்பான். ஆபரணம், பலவகைப் பாத்திரங்கள் முதலியவைகளும் ஏற்படும். விவசாயம் நன்ருகப் பலிதமாகும். குதிரை வண்டி முதலிய வாகன வசதிகள் உண்டாகும். அழகியதொரு வீடு கட்டுவான். சொந்த முயற்சிகளால் ஏராள சொத்துக்களைச் சம்பாதிப்பான். பார்வதி தேவி வினவினுள்.

43. எந்தக்கா லத்தி லேதான் இவன்சித்திர வீடு செய்வான்
அந்தவோர் காலம் சொல்வாய் ஐமூன்று ஆண்டின் மேலே
அந்தையே கிரகம் செய்வன் இதுவன்றி யின்னும் கேளு
முந்திய முட்பா ணலில் மொழிந்திட்டோம் குடும்பம் வேறு.

43. எந்தக் காலத்தில் இவனுக்கு அழகிய வீடு ஏற்படும்? சொல்லுங்கள் என, ஜாதகனுடைய பதினைந்தாவது வயதிற்குமேல் வீடு கட்டுவான். இதுவுமன்றி மேலும் கேளுங்கள். முப்பத்துநான்காவது வயதில் குடும்பப் பிரிவினை நடை பெறும்.

44. எவ்விதம் குடும்பம் வேறு இயம்புவீர் முனியே யென்ருள்
பவ்வமாய்ப் பெண்க ளாலே பகர்ந்தனம் குடும்பம் வேறு
ஒவ்விய பாகம் மூன்ருய் உறைந்திட்டோ மிவனுக் கேதான்
திவ்விய மாதே யாங்கள் சொலுமொழி குன்றி டாது.

44. முனிவரே! எக்காரணத்தினுல் குடும்பப் பிரிவினை நடைபெறும்; தெரிவிப்பீர்களாக என உமையவள் கேட்க, முனிவர் வசிஷ்டர் பதில் கூறுவார். குடும்பம் வேருவதற்கு ஸ்திரீகள்தான் காரணமாவார்கள். மொத்தச் சொத்துக்கள் மூன்று பாகமாகப் பிரிக்கப்படும். எங்கள் தாயே. நாங்கள் சொன்ன மொழி பொய்யாகாது.

45. அந்தவோர் காலம் தன்னில் அவனுக்கு வாயு பீடை
முந்திய கைகால் வாயு மொழிகிரே மதற்குச் சாந்தி
விந்தையாய் முருக ருக்கு வித்தக னர்ச்சித் தேத்தி
எந்தையே ஔடதத்தால் ஏகிடும் ரோகம் தானே.

45. குடும்பப் பிரிவினைக் காலத்தில் இவனுக்கு வாயுவினால் பீடை ஏற்பட்டுக் கை கால்கள் முடக்கப்படும். அதற்குத் தக்கதொரு சாந்தி கூறுவோம். சுப்பிரமணிய சுவாமிக்கு அபிஷேக அர்ச்சனைகளை நடத்தி அதன் பின் ஔஷதங்களைச் சேவித்தால் ரோகம் நீங்கிச் சௌக்கியத்தை அடைவான்.

46. பாலகன் ஜனிக்கும் காலம் பணிதசை பதினு றுண்டும்
கோலமா யெட்டுத் திங்கள் கூறுவோம் பலனை யாங்கள்
ஞாலமேல் துணைவர் விருத்தி நற்சித்திர வீடு செய்வன்
சாலவே கிருஷி ஓங்கும் தன்துணை சேத மாமே.

46. இச்சாதகன் திருவாதிரை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகவே ராஹு தசையில் இருப்பு வருஷங்கள் பதினாறு, மாதங்கள் எட்டு. இதன் பலன்களை யாங்கள் கூறக் கேண்மோ. சகோதர விருத்தி யுண்டு. அழகிய திடமானதொரு வீடு கட்டுவான். விவசாயம் நன்கு ஓங்கி வளரும். சகோதர வருக்கத்திற்குச் சேதமும் உண்டு.

47. தந்தை தாய் ரோக மெய்தும் தன்பந்து சூத முண்டு
நிந்தையும் பெண்க ளாலே நேரிடும் குலவினுேம் யாம்
தன்தனம் செலவே யாகும் தன்மனச் சஞ்ச லங்கள்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாக.

47. தாய் தந்தையர்களுக்குப் பிணிகள் நேரும். தன் உறவினர்களின் மரணத்தால் தீட்டு நேரிடும். ஸ்திரீகளால் நிந்தைகளும் வரும். பணம் அதிகமாகச் செலவழியும் என்றேம். மனத்தில் எப்பொழுதும்கவலைகள்குடி கொண்டிருக்கும். அன்னையே! இரண்டாம் பாகத்தில் இவ்வரலாறுகளை விவரமாகத் தெரிவிப்போம்.

ஜாதகம் 52

1. சந்திரன் புந்தி பொன்னும் [1] சல்லியன் [2] மாதை [3] புக்கக்
கந்தனும் [4] பானும் [5] கோலில் [6] காரியும் [7] தேள தாக [8]
மந்தரக் கயிறு [9] மானில் [10] மற்றசெம் பாம்பு [11] வண்டு [12]
சுந்தர அலவன் [13] ஜன்மம் தோன்றினுல் பலன்சொ ல்வீரே,

	இராசி சக்கரம்		லக்கினம் கேது
ராகு			
	சனி	செவ்வாய் சூரியன்	சந்திரன் புதன் குரு சுக்கரன்

சித்திரை 1-ங் கால் அ. தசை ஷை 6–10–10.

1. சந்திரனும் புதனும் குருவும் சுக்கிரனும் கன்னியிலும் அங்காரகனும் சூரியனும் துலாத்திலும், சனி விருச்சிகத்திலும், ராகு மகரத்திலும், கேது கடகத்திலும் இருந்து, கடக லக்கினத்தில் ஜனனமானால் பலன்களைச் சொல்லுவீர்கள் என்று பார்வதியம்மை சப்த ரிஷிகளைக் கேட்டார்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கிர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கிரக் கிரக நிலை பொருத்தமுடையதாகும். மேஷத்தில் குருவும் சுக்கிரனும், கடகத்திற் சனி, சிம்மத்திற் சந்திரன், கன்னியிற் புதன் கேது, தனுசிற் சூரியன், மீனத்தில் அங்காரகன் ராகுவும் ஆகும்.

2. சுந்தர னுதித்த வீதி சொல்லுவோம் கீழ்மேல் வீதி
வந்தஇல் வடக்கு வாடை வாசலு மிந்திர [14] நோக்கம்
தந்தியும் [15] வடகீழ் தங்கும் சாமுண்டி துர்க்கை மாரி
விந்தையாய் மேற்கில் தங்கும் மேவுபா ஞ்சாலி தென்கீழ்.

2. ஜாதகர் ஜெனனமான வீதியின் அமைப்பைச் சொல்லுவோம். அது கிழக்கு மேற்கு வீதியாகும். ஜனனமான வீடு வடவண்டை வாடை. வாயிற்கால் கிழக்குத் திக்கைப் பார்க்கும். ஆண் யானை முகத்தோன் என்ற

[1] குரு. [2] சுக்கிரன். [3] கன்னி. [4] அங்காரகன். [5] சூரியன். [6] துலாம். [7] சனி. [8] விருச்சிகம். [9] மலைக்கயிறு என்ற ராகு. [10] மகரம். [11] கேது. [12] பூசம் உள்ள கடகம். [13] கடகம். [14] கிழக்கு. [15] ஆண்யானை.

விநாயகக் கடவுளின் கோயில் வடகிழக்குத் திக்கிலும், சாமுண்டீச்வரி என்ற பார்வதி, தூர்க்கை என்ற காளி, மாரியம்மன் இவர்களின் கோயில்கள் மேற்குத் திக்கிலும், பாஞ்சாலி என்ற துரோபதையம்மன் கோயில் தென் கிழக்குத் திக்கிலும் இருக்கும்.

3. இயமத்தான் தென்மேல்தங்கு மிவ்வித அடையா ளத்துள்
சேமமாம் சிற்றூர் தன்னில் தீபடு மில்லந் தன்னில்
நாமமோ செக்கா ளுகை நல்கிடு மாண்பால் ஜன்மம்
காமனே யெரித்தோன் தேவி கழறுவோம் மேலுங் கேளே.

3. எமனுடைய கோயில் தென் மேற்குத் திக்கில் இருக்கும். இங்குச் சொல்லப்பட்ட அடையாளங்கள் உள்ள க்ஷேமகரமாய் நல்ல ஸ்திதியிலுள்ள சிறிய கிராமத்தில் நெருப்புப்பட்ட வீட்டில் ஜாதகர் ஜனித்தார். ஜாதகர் செக்கு ஆடும் ஜாதியார் என்று சொல்லப்பட்ட செட்டியார் ஜாதியில் ஆண் பிள்ளையாகப் பிறந்தார். மன்மதனை எரித்தப் பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! நாங்கள் இன்னும் மேலுஞ் சொல்லுவதைக் கேட்பீராக.

4. இன்னவன் ஜனனயோகம் யெழில்பெரும் தந்தை யோகம்
மன்னிய அன்னே யோகம் வருந்துணை புத்திர யோகம்
தன்னிலே களத்திர யோகம் சாற்றுவோம் முன்பின் ஜன்மம்
பின்னையும் சாந்தி தானும் பேசுவோ மிந்நூல் தன்னில்.

4. இந்த ஜாதகருடைய ஜனன காலம் முதல் நடக்கும் யோகங்களையும், அழகும் வலிமையுமுள்ள தகப்பனுடைய யோகங்களையும், பெருமை வாய்ந்த தாயாருடைய யோகங்களையும், கூடப் பிறந்தவர்கள் பிறக்கப் போகிறவர்கள் இவர்களுடைய யோகங்களையும், சந்ததிகளின் யோகங்களையும், தனக்கு வந்து வாய்க்கும் மனைவியின் யோகங்களையும், ஜாதகர் தாய் தந்தையர் முதலானவர்களின் முன்ஜன்ம பலன்களையும், பின் ஜன்ம பலன்களையும் சொல்லுவோம்; மேலும் சாந்திகளைப் பற்றியும் இந்த சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லப்போகிறோம்.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பா லொன்று
சந்ததம் தீர்க்க மாகும் சாற்றுவோம் மற்ற வெல்லாம்
நொந்திடு மென்று சொன்னேம் நுவலுவோம் பிதாகு ணத்தை
எந்தையே சிவந்த மேனி யின்பமாய் வார்த்தை சொல்வன்.

5. ஜாதகருடைய தகப்பனுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகிறோம். தகப்பனுருக்கு ஆண் சகோதரர் ஒன்று உண்டு. அந்தச்சகோதரர் நீண்ட ஆயுளுள்ளவர். மற்றச் சகோதரர்கள் எல்லாம் நொந்து க்ஷீணித்துப் போய்விடும், இறந்து போய்விடும் என்று சொல்லுகிறோம். இனிமேல் ஜாதகருடைய தகப்பனுடைய குணதிசயங்களைச் சொல்லுகிறோம், எங்களுடைய தாயாராகிய பார்வதியே! கேளும். தகப்பனுர் சிவந்த நிறமுள்ள தேகமுடையவர், இனிப்பாய்ப் பேசுவார்.

6. கீர்த்தியு முடைய ளுகும் கௌரவ குடும்பி யாவன்
துரைமிகத் தேட வல்லன் சகலர்க்கு நல்லோ னுவன்
மரமாட்டுத் [1] தொழிலு முள்ளான் வாக்குக்கள் தவறு ளுகும்
தீரமாம் காரி யத்தைச் செய்வனிவனே யென்றேம்.

6. ஜாதகருடைய தகப்பனுர் கீர்த்தியும் நல்ல பெயருமுடையவர். கௌரவமான குடும்பத்தையுடையவராவர். அதிகார முடையவராயும், மேன்மையான மகனும் அதிகமான செல்வத்தைத் தேடக்கூடியவராயும், எல்லோருக்கும் நல்லவராயும் இருப்பார். மரம் ரசம் தேன் இவைகள் சம்மந்தமானத் தொழிலை (அஃதாவது மரச்செக்கு ஆடி ரசம், எண்ணெய், தேன் முதலியவைகளை உண்டாக்கும் தொழிலை) உடையவர். சொன்ன சொல்லைத் தவருமல் காப்பாற்றுவார். மனத்தைரியமுள்ள பலமானக் காரியங்களைச் செய்வார் என்று சொல்லுகிறோம்.

7. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உரைக்கிறோம் பித்தச் சூடு
குண்டனி செய்யா ளுகும் கூறுவான் சுகமாய் வார்த்தை
அண்டினேர் தம்மைக் காப்பன் அவன்தெய்வ பக்தி யுள்ளான் *
தண்டமி முடைய ளுகும் தன்கரம் ருத்திர ரேகை.

7. ஜாதகருடைய தகப்பனுர் சுகத்தைத் தரக்கூடிய நல்ல உணவைச் சாப்பிடுவார். பித்தச்சூடான தேகமுள்ளவர். கோள் சொல்லாதவர். வார்த்தைகளை நயமாகவும் இனிமையாகவும் சொல்லிப் பேசுவார். தன்னை வந்து அண்டித் தன் உதவியைக் கோருபவர்களைக் காப்பாற்றுவார். தெய்வ பக்தி யுள்ளவர். வணக்கம் உடையவர். இனிமையான தமிழைப் பேசுவார். தன்னுடைய உள்ளங்கையில் ருத்திரரேகை என்ற ஒரு விதமான ரேகையை உடையவர் ஆவர்.

குறிப்பு.—* ஒன்பதாவது பாவம் பிதுர்ஸ்தானம். பிதுர் ஸ்தானமாகிய மீனத்தை குரு சுக்கிரன் புதன் சந்திரன் ஆகிய நால்வரும் பார்ப்பதைக் கவனிக்கவும்.

8. தந்தைக்குத் தாரம் மூன்றில் தரித்திடும் இளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்துவோ மிவனே யம்மா
மாதவ [2] ருறவு கொள்வன் மவன்சித்திர வீடு செய்வன்
தீதிலா நற்கு ணத்தான் தீங்கதை எண்ண ளுகும்.

8. ஜாதக ருடைய தகப்பனுர், தன்னுடைய தகப்பனுருக்கு வந்து வாய்த்த மூன்று மனைவியர்களுக்குள் இளையவளான இரண்டாவது மனைவி பெற்றெடுத்த நீதியானப் பிள்ளை என்று, அம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம். இவர் முனிவர்களுடைய சினேகிதத்தை அடைவார். இவர் சித்திர வேலைகள் அமையப்பெற்ற அழகான வீடு கட்டுவார். கெடுதி இல்லாத நல்ல குணங்களையுடையவர். பிறருக்குத் தீங்கு செய்ய எண்ணவே மாட்டார்.

குறிப்பு.—பிதுர் பாட்டனுருக்கு மூன்று தாரம். ஜாதகருடைய தகப்பனுர் ராசி மீனம். இந்த மீனத்திற்குத் தகப்பனுர் ராசி விருச்சிகம். ஆகையால் விருச்சிகம் பிதுர்பாட்டன் ராசி. விருச்சிகத்திற்கு லாபாதிபதியாகிய புதனும் களத்திராதிபதியாகிய சுக்கிரனும் கூடி இருப்பதைக் கவனிக்கவும்.

[1] தேன். [2] முனிவர்.

" கொள்ளும் லாபாதி களத்திராதி கூடினுலும்பார்த்தாலும்
தெள்ளும் பலவானுகி இவர் திரிகோணத்திருந்திடினும்
உள்ள விவாகம் மூன்றென்றே உரைப்பர் கணித வல்லோர்கள் ''
ஜாதக அலங்காரம் பாட்டு நெம்பர் 689.

9. துணையவன் சேதி கேளாய் துருசான[1] நடையு மாவன்
வினையான[2] மனத்தா னுகும் விரும்புவா னடிசில்[3] தானும
பிணையான[4] வார்த்தை சொல்லான் பேசுமுன் கோபம் கொஞ்சம்
அணையவே பகையும் கொஞ்சம் அம்பிகை யாளே கேளாய்.

9. ஜாதகருடைய தகப்பனுருடைய சகோதரனது குணதிசயங்களை இனிமேல் சொல்லுகிருர். இவர் குற்றமான நடையையுடையவர். குற்றமான நடவடிக்கையுடையவர். வஞ்சகமான, கள்ளத்தனமான மனதை உடையவர். சாப்பாட்டின்பேரில் பிரியமுள்ளவர். ஆசையான விரும்பத்தக்கப் பேச்சுகளைப் பேசமாட்டார். பேசுவதற்கு முந்தியே சிறிது கோபமுடைய முன்கோபி யாவர். இவருடன் சேர்ந்து பழகுபவர்களிடம் இவர் சிறிதுகோபங்கொள் வார். பார்வதியே ! கேட்பீராக.

10. மனமது மர்ம்ம முள்ளான் மாநிலம் விருத்தி செய்வன்
இனமாதால் பெருமை பூண்பன் இடருகள் வந்து நீங்கும்
தன் சொலேதட்டானுகும் சமர்த்தான வார்த்தை சொல்வன்
கன முள குடும்பி யாவன் கண்டிடும்[5] மூல சூடு.

10. ஜாதகருடைய தகப்பனுருடைய சகோதரர் மர்மமான மன துடையவர். பெரிய பூமியைப் பயிர் செய்து விருத்தி செய்வார். தன்னுடைய இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் பாலால் பெருமையை அடைவார். இவருக் குக் கெடுதிகள் வந்து நீங்கும், இவருக்குப் பேசும்போது வார்த்தைகள் தடை படாமல் வரும். இவர் சாமர்த்தியமாய்ப் பேசுவார். இவர் பெரிய குடும்ப முள்ளவராவர். இவருக்கு மூலச்சூடு என்ற ஒரு நோய் ஓரளவு இருக்கும்.

11. மாநிற முடைய னுவன் மாடுகள் விருத்தி யுள்ளான்
ஆண்டவர் நேசம் கொள்வன் அவன் மாதுகு லமும் வேறும்
தேன் மொழி கூறு வானும் சேயிழை பிரிய னுவன்
வானவர் பத்தி பூண்பன் வாக்குகள் தப்பானுமே.

11. ஜாதகருடைய தகப்பனுருடைய சகோதரர் மானிறமான தேக முடைவர். அவருக்கு ஆடுமாடுகள் விருத்தியாகும். அவர் முப்பது வயதிற்கு மேற்பட்டு நாற்பத்தெட்டு வயதிற்கு உட்பட்ட ஆண்மக்களிடத்தில் நட்பு முள்ளவர். அவருடைய மனைவியின் ஜாதி குலம் வேறுனதாகும், புதிய தாகும். அவர் தேன் போன்ற இனிப்பான வார்த்தைகளைச் சொல்லுவார். பெண், ஆபரணம் இவைகளின் பேரில் ஆசையுள்ளவர். தேவர்கள், தெய் வங்கள் இவர்களிடத்தில் பக்தி உள்ளவர். தான் சொன்ன வாக்கைத் தவறி டாமல் காப்பாற்றுவார்.

---
[1] குற்றமான. [2] வஞ்சகயான. [3] சோறு.
[4] ஆசையான. [5] ஓரளவு.

12. மனைவியு மொன்றேயாகும் மைந்தரு மாண்பா லிரண்டு
கனமுடன் பெண்பா லொன்று கழறுவோம் தீர்க்கமாக
பிணையாகும் மூன்று தாமும் பிரியாம லொன்றுய் வாழ்வன்
சினமிலாத் தவங்கள் செய்யும் தேவியே கேட்டிடாயே.

12. ஜாதகருடைய தகப்பனுருடைய சகோதரருக்குத் தாரம் ஒன்றே ஆகும். இவருக்குச் சந்ததிகள் இரண்டு ஆண்களும் ஒரு பெருமை வாய்ந்தப் பெண்ணும் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள் என்று சொல்லு கிரும். இந்த மூன்று சந்ததிகளும் ஒன்றுக்கொன்று பிரியாமல் இருந்து கொண்டு தங்களுடைய தகப்பனுருடனும் கூடி வாழ்வார்கள். நாங்கள் சொல் வதைக் கோபமில்லாமல் தவங்கள் செய்யும் பார்வதியம்மையே ! கேட்பீராக.

13. இத்தகை யுடையா னுக்கு இவனுமே யிரண்டாம் ஜன்மம்
மிக்கவே யுதிப்பா னுகும் விளம்புவோ மிவன்குணத்தைத்
தக்கவே கல்வி கற்பன் தைரியன் சிவந்த மெய்யன்
சிக்கன மில்லா னுகும் தேவியே கேட்டிடாயே.

13. இதுவரையிலும் ஜாதருடைய தகப்பனுருடைய விஷயங்களை யும், தகப்பனுருடன் பிறந்தவருடைய விஷயங்களையும் சொல்லிவந்தார். இனிமேல் ஜாதகருடைய விஷயங்களைச் சொல்லுகிருர். மேலே இதுவரையி லும் சொல்லிவந்த விஷயங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் இரண் டாவது கர்ப்பமாக ஜெனனமானுர். ஜாதகருடைய குணதிசயங்களை இனி மேல் சொல்லுகிரும். ஜாதகர் தகுந்த கல்வியை அடைவார். தைரிய முள்ளவர். சிவந்த நிறமான தேகமுடையவர். சிக்கனமாய் இல்லாமல் செல வாளியாயிருப்பார். பார்வதியம்மையே ! நாங்கள் சொல்வதைக் கேட் பீராக.

14. வருவோரை ஆதரிப்பன் வாக்குகள் சுத்த முள்ளான்
திருமகள்[1] வாச முள்ளான் சித்திர வீடு செய்வான்
பெருமவர் நேசம் கொள்வன் பலமான குடும்பி யாவன்
விரைவினில் நடக்க வல்லன் மேதினியில் சேர்ப்பா னென்ருேம்.

14. ஜாதகர் தன்னிடம் வருபவர்களின் மேல் அன்பு வைத்து அவர்களுக்கு உதவி செய்வார். சுத்தமான நல்ல வார்த்தைகளை உபயோகிப் பார். தன்வீட்டில் இலக்ஷ்மி வந்து வாசஞ் செய்வாள். செல்வப் பெருக் குண்டாகும். அழகான சித்திர வீட்டை உண்டாக்குவார். பெருமை வாய்ந்த வர்களுடைய சினேகிதத்தை அடைவார். வலிவான பெரிய குடும்பத்தை உடையவர். வேகமாயும் சீக்கிரமாகவும் நடக்கும் வல்லமை உடையவர். பூமி யில் தனம் முதலியவைகளைச் சேர்த்துவைப்பார் என்று சொல்லுகிரும்.

15. வண்டியும் நந்தி யெய்தும் வழக்கது சொல்லா னுகும்
கண்டவர்க் கீத லுண்டு காரிய சமர்த்த னுகும்
அண்டின பேருக் கெல்லாம் அருநிதி உதவி செய்வன்
துண்டமாய்ப் பேசவல்லன் துராசையு மில்லா னென்ருேம்.

---
[1] இலக்ஷ்மி

15. ஜாதகருக்கு வண்டியும் மாடும் வந்து சேரும். இவர் வழக்கு உண்டாகும்படியாய்ப் பேசி வீண்வாதஞ் செய்யமாட்டார். தன்னை வந்து பார்த்தவர்களுக்குத் தன்னிடத்திலுள்ளதைத் தருமஞ்செய்வார். எடுத்தக் காரியத்தை முடிப்பதில் சாமர்த்தியமுள்ளவர். தன்னை வந்து அண்டிக் கேட்டவர்களுக்கெல்லாம் அருமையான தனத்தைக் கொடுத்து உதவி செய்வார். சுருக்கமாகவும் கண்டித்தும் பேசுந் திறமை வாய்ந்தவர். கெட்ட ஆசையும் இல்லாதவர் என்று சொல்லுகிறோம்.

16. குலத்திற்குச்சிரேஷ்ட னுவன் குணமது இரண்டு மாகும்
நிலையான பூமி சேர்ப்பன் நேமியில் சல்லியம்[1] கொள்ளான்
உலகிற்கு உதவி செய்வான் உண்டியும் சுகமாய்க் கொள்வான்
தலமதில் தீர்த்தம் தோய்வன்* தன்கரம் பத்ம ரேகை.

16. ஜாதகர் தன்னுடைய குலத்தில் சிரேஷ்டராகவிருப்பார், இருவித குணங்களுமுடையவராவர். நீடித்த காலம் இருக்கும்படியான பூமியைச் சேர்ப்பார். பூமியில் கடன் இல்லாதவர். உலகத்தோருக்கு உதவியைச் செய்பவர். சுகமான நல்ல உணவைச் சாப்பிடுபவர். புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று அவ்விடத்தில் தீர்த்த ஸ்நானஞ் செய்து கடவுளை தரிசிப்பார். தன்னுடைய உள்ளங்கையில் பத்ம ரேகை என்ற ஒருவித ரேகையை உடையவர்.

குறிப்பு.—* இவருடைய ஜாதகத்தில் ஒன்பதாமிடமாகிய மீன ராசியைக் குரு, சுக்கிரன், புதன், சந்திரன் இவர்கள் பார்ப்பதைக் கவனிக்கவும். "ஆன பொன் (குரு), புகர் (சுக்கிரன்), மால் (புதன்), இந்து (சந்திரன்) ஆக இந் நான்கு பேரும் தானம் ஒன்பதிலே நின்றால் தர்மராஜாவே என்பர்". துய்ய கேரளம், ஒன்பதாம் பாவம் 27-வது பாடலைப் பார்க்கவும். மேலும் குரு, சுக்கிரன், புதன் இவர்கள் மூவரும் ஒன்பதாம் பாவத்தைப் பார்ப்பதைப்பற்றித் துய்ய கேரளம் ஒன்பதாம் பாவம் 11-வது பாடலையும் பார்க்கவும். குரு, சுக்கிரன், புதன், சந்திரன் இவர் கூடி ஒன்பதில் இருப்பதும் பார்ப்பதும் விஷயமாகச் சாராவளி முப்பத்திரண்டாவது அத்தியாயம் 103, 104-வது சுலோகங்களைப் பார்க்கவும்.

17. இவனுடைத் துணைவர் தம்மையியம்புவோ மாண்பா லிரண்டு
அவனியில் கன்னி மூன்று அறைகிறோம் தீர்க்கமாக
நவனியில் இரண்டு நட்டம் நவிலுவோ மிவனுக்கேதான்
நவசியை ஆத ரிக்கும் தயாபரியே மேலும் கேளே.

17. ஜாதகருடைய கூடப்பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகிறோம். ஜாதகருக்கு ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரர்கள் மூவரும் பூமியில் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள் என்று நாங்கள் சொல்லுகிறோம். இவருக்குச் சகோதரங்களில் இரண்டு சகோதரர்கள் நஷ்டமாவர் என்று சொல்லுகிறோம். தபசு செய்பவர்களின் பேரில் அன்பு வைத்து உதவி செய்யுங் கிருபையுடைய பார்வதியம்மையே ! நாங்கள் இன்னும் மேலே சொல்லப்போவதைக் கேட்பீராக.

[1] கடன், இக்கட்டு.

18. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மொருபா னெட்டில்
கன்னிகை மேற்குத் திக்கில் கலப்பளாமவள் வசீகரமாகும்
அன்னம்போல் வடிவுமாகும் அவள்குணம் இருநி றத்தாள்
உன்னத வார்த்தை சொல்வாள் உரைக்குமுன் கோபியாமே.

18. ஜாதகருக்கு விவாகக் காலத்தை இனிச் சொல்லுவோம். இவருக்குப் பதினெட்டாவது வயதில் மனைவி மேற்குத் திக்கிலிருந்து வந்து வாய்ப்பாள். அவள் புருஷனை வசியப்படுத்துந் தன்மையுடையவள். அன்னத்தைப் போன்ற அழகான வடிவம் உள்ளவள். அவள் தேகம் இரண்டு நிறங்களுங் கலந்த நிறமான மானிறமுள்ளதாகும். அவள் உன்னதமான மேன்மையான வார்த்தைகளைச் சொல்லுவாள். அவள் பேசுவதற்கு முன்னே கோபத்தை யுடையவளாகி முன்கோபியாயிருப்பாள்.

குறிப்பு.—வயது வருஷம் 17-0-0 முதல் வருஷம் 18-0-0 வரையில் ராகு தசையில் புதன், கேது புத்திகள் நடக்கின்றன. ராகு களத்திர ஸ்தானத்திலிருந்து களத்திர ஸ்தானாதிபதியாகிய சனியால் பார்க்கப்படுவதால் விவாகத்திற்கு யோகமுண்டு.

19. அடக்கமும் பெருமை யுள்ளாள் அன்னமும் போட இச்சை
நடக்கையும் நல்ல தாகும் நாயகி வயது தீர்க்கம்
திடமான புஜண்டர் சொல்ல ஜயமுனி கூறுகின்றார்
மடமனே தீர்க்க மென்று வகுத்திட்டீர் முனிவ ரேநீர்.

19. ஜாதகருடைய மனைவி அடக்கமும் பெருமையு முடையவள். அன்னம் அளிப்பதில் ஆசையுள்ளவள். அவளுடைய நடவடிக்கையும் நல்லதாக விருக்கும், அவளுக்கு வயது தீர்க்கமானது என்று உறுதியாய்ப் புஜண்டரிஷியானவர் சொல்ல, ஜயமுனியானவர் அவரைத் தடுத்து, முனிவரே ! நீர் ஜாதகருடைய மனைவி தீர்க்கமான ஆயுளை உடையவள் என்று சொல்லிவிட்டீரே.

20. ஏதுகார ணத்தி னாலே யியம்புவீர் எந்த னுக்கு
ஓதுவேன் கேளு மையா உயரேமோன் அஞ்சில் நிற்கப்
போதவே குருவு மேழை பொரிந்தியே பார்த்த தாலே
மேதினில் தார மொன்று விளம்புவோம் முனியே கேளாய்.

20. என்ன காரணத்தினால் நீர் அப்படிச் சொன்னீர் ? அதை எனக்குச் சொல்லும் என்று கேட்க, அதற்குப் புஜண்டர் நான் காரணத்தைச் சொல்லுகின்றேன் ; நீர் அதைக் கேளும் ஐயா. ஏழாம் பாவாதிபதியாகிய சனி ஐந்தாம் பாவத்திலிருக்க, அந்த ஏழாம் பாவத்தைக் குரு பார்ப்பதால் ஜாதகருக்கு ஒரே தாரம் என்று நான் சொல்லுகிறேன், முனிவரே ! கேளும்.

21. அப்படிச் சொல்லொ ணாது அரவுமே[1] ஏழில் நிற்க
ஒப்புடன் குசனும்[2] காரி[3] ஒரேழைப் பார்த்த தாலே
செப்புவோம் ஜாத கர்க்குத் தேவிக ளிரண்டே யாகும்
இப்படி யிருவர் சொல்ல ஈச்வரி சொல்லு கின்றாள்.

[1] இராகு [2] அங்காரகன் [3] சனி

21. அதன் பேரில் ஜயமுனி சொல்லுகின்றார். அவ்விதமாகச் சொல்லக்கூடாது, ராகு ஏழாவது பாவத்திலிருப்பதாலும், அங்காரகனும் சனியும் ஏழாம் பாவத்தைப் பார்ப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் என்று நான் சொல்லுகிறேன். இவ்விதமாக இரண்டு முனிவர்களும் தர்க்கித்து வாதஞ் செய்யும் போது பார்வதி பிரவேசித்துச் சொல்லுகிறார்.

22. இருவர்கள் வார்த்தை தானு மியம்பினீர் சரியே யப்பா
வருமவன் தனக்குத் தாரம் வரைகிறேன் ஒன்றே யாகத்
திறமையாய் வேறு மாது செப்புவோ மபிமானம் தான்
மருமமாய்த் தந்தை தாய்போல் வந்திடு மபிமானம் தான்.

22. நீங்கள் இருவரும் சரியான வார்த்தையைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஜாதகருக்குத் தாரம் ஒன்றே என்று நான் சொல்லுகின்றேன். ஆனால் அவருக்கு இன்னொரு பெண் அபிமான மனைவியாக ரகசியமாகவிருப்பாள். அவள், ஜாதகரை அவருடைய தாய் தகப்பனுரைப் போல ஆதரிப்பாள்.

23. எந்தக்கா லத்தில் தான்நீரியம்பினீ ரந்தச் சங்கை
முந்தவே கூறு மென்ன முப்பது ஆண்டி லேதான்
சந்தத முத்தி ரத்தில் சைவமாம் குலத்து மாது
வந்திடும் பணிதி பொன்னு மவளுக்குப் புத்திரர் சொல்வீர்.

23. ஜாதகருக்கு எந்த வயதில் அந்த அபிமான மனைவியின் சம்மந்தம் ஏற்படும் என்ற விஷயத்தைச் சீக்கிரம் சொல்லுவீர் என்று கேட்க. ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இவ்விதம் நேரிடும். அந்த அபிமான மனைவி சைவ குலத்தைச் சேர்ந்தவள். அவள் வடக்குத் திக்கிலுள்ளவள். அவளுக்குச் சொத்துக்களும் ஆபரணங்களுமுண்டு. இனிமேல் நீங்கள் ஜாதகருக்குச் சந்ததி விஷயத்தைப் பற்றி சொல்லுவீர்களாக.

குறிப்பு.—வயது ஷூ 29–0–0 முதல் ஷூ 30–0–0 வரையிலும் குரு தசையில் சனி புதன் புக்திகள் நடக்கின்றன. குரு இரண்டாவது களத்திர ஸ்தானமாகிய ஒன்பதிற்கு உடையவராய் ஏழையும், ஒன்பதையும் பார்க்கின்றார். அவர் ஆறுக்கும் உடையவர். லக்கினதிபதிக்கும் ஒன்பதிற்குடையவருக்கும் சம்மந்த முண்டானால் இரண்டாவது தாரயோகமுண்டென்பர். குரு ஆறுக்குடையவராதலால் அந்தத் தாரம் பங்கமுள்ளதாகும் என்பர்.

24. மதலைக ளில்லா தாகும் மலடியா யிருப்பா ளென்றோம்
சுதர்களு முதல்ம னைக்கு ஜனிக்குமே யென்று சொன்னோம்
விதங்களைச் சொல்லு கின்றேன் மேவிடு மாண்பா லொன்று
சதியிலா பெண்பா லவ்வாறு ஜனித்திடும் தீர்க்க மாக.

24. ஜாதகருடைய அபிமான மனைவி சந்ததி இல்லாமல் மலடியாயிருப்பாள் என்று சொல்லுகின்றோம். முதல் மனைவிக்குப் பிள்ளைகள்

பிறக்குமென்று சொல்லுகிறோம். அதன் விரைத்தை சொல்லுகிறோம், ஆண் சந்ததி ஒன்றும், அவ்வாறே குற்றமில்லாத பெண் சந்ததி ஒன்றும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவர்களாகவிருப்பார்கள்.

25. அஞ்சினில் [1] காரி நிற்க அஞரவன் நாலில் நிற்கத்
[2] துஞ்சிடும் மதலை [3] யென்றோம் சுரர்குரு [4] விற்கஞ்சில் ராகு
தஞ்சமா [5] யிருப்ப தாலே ஜனிக்கினும் தீதே தேயாகும்
கொஞ்சிய பராசர் சொல்லக் [6] குறுமுனி கூறுகின்றார்.

25. இலக்கினத்திற்கு ஐந்தில் சனி இருந்து ஐந்திற்குடைய அங்காரகன் நாலில் இருப்பதால் ஆண் குழந்தைகள் இறந்து போய்விடுமென்று சொல்லுகின்றோம். தேவ குருவாகிய குருபகவானுக்கு ஐந்தாவது பாவத்தில் இராகு வலிவாய் இருப்பதால் ஆண் குழந்தைகள் பிறந்தாலும் அவை நிதானமாக, அஃதாவது, அந்தியத்தில் பிறக்கும் என்று பராசர் குற்றமாகச் சொல்ல, குறுமுனியாகிய அகஸ்தியர் சொல்லப் போகிறார்.

26. கருமத்தோன் நாலில் நிற்கக் கனும் [3] நவத்தைப் பார்க்க
உருமங்கள் [4] செய்ய வேண்டி உறைந்திடும் புத்திரர் தானும்
வரும்சுதர் முதலில் பீடை வரைகிறே மிவனுக் கேதான்
பெருவயிரோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

26. கர்மாதிபதியாகிய அங்காரகன் நான்காவது பாவத்திலிருப்பதாலும், குரு ஒன்பதாவது பாவத்தைப் பார்ப்பதாலும் ஜாதகருக்குக் கர்மங்கள் செய்யும்படியான அமைப்பு இருப்பதால் புத்திரன் உண்டு என்று சொல்லுகிறேன். ஜாதகருக்கு முந்தி பிறக்கும் பிள்ளைகள் பீடையையுடையனவாகி இறந்து போய்விடும் என்று நான் சொல்லுவதைப் பெரிய வயிற்றையுடைய விநயக கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதி யம்மையே! கேட்பீராக.

27. மதலைகள் [7] வரைந் தீட்டீர் முனியே நீர்தாம்
விதங்களைச் [8] சொல்லுமென்ன வித்தகன் [9] முன் ஜன் மத்தில்
அதிகபா வங்கள் செய்தான் அத்தோஷ கார ணத்தால்
சுதர்களு முதலில் பீடை சொல்லு வாயந்தச் சங்கை.

27. ஜாதகருக்குப் பிள்ளைகள் பிறக்கும் என்று சொன்னீரே முனிவரே! அந்த அதிசயமான விஷயங்களைச் சொல்லும் என்று கேட்க, சாமார்த்திய முள்ளவரும் பொருளைக் கொடுப்பவருமான ஜாதகர், தன்னுடைய முன்ஜன்மத்தில் அதிகப் பாபங்களைச் செய்திருக்கிறார். அந்தத் தோஷங்களின் காரணத்தால் அவருக்கு முந்திப் பிறக்கும் பிள்ளைகளுக்குப் பீடை உண்டாகும் என்று சொல்ல, அந்த விஷயங்களை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்கிறார்.

---

[1] சனி [2] இறக்கும் [3] ஆண் குழந்தை [4] தேவ குரு
[5] பெருமையாய்; வலியாய் [6] அகஸ்தியர்
[8] குரு [9] கர்மங்கள்

[7] ஆண் குழந்தைகள் [8] அதிசயமான விஷயங்கள்
[9] சாமர்த்தியமுள்ளவனும் பொருளைகொடுப்பவனுமான ஜாதகர்

வேறு

28. அவனியிலே காஞ்சிநகர் தென்மே லாக
அருகினிலே சமணகுலம் வந்தான் பாலன்
தவநிலை உடையானுய் கடவுள் பக்தித்
தான்பணிந்து பணைவர்கள் பெருக்க முண்டாய்
நவனியிலே தனிகனுய்ச் செட்டுச் செய்து
நாயகனும் வாழுநாளில் வந்த ஊழை[1]
[2] உவமையாய்ச் சொல்லுகின்றேன் தாயே கேளும்
ஊர்க்கணக்கன் மனைவிமே லிச்சை கொண்டான்.

28. பூமியிலே காஞ்சிமா நகரத்திற்கு அருகில் தென் மேற்கிலுள்ள ஒரு கிராமத்தில் சமணர்கள் குலத்தில் இந்த ஜாதகர் முன் ஜன்மத்தில் பிறந்தார். அவர் தவங்கள் செய்யும் நிலைமையையடைந்து கடவுள் பக்தி பூண்டு, கடவுள் தொண்டு செய்து, வேலைக்காரர்கள் அதிகம் உடையவராயும், பூமியில் செல்வம் உடையவராய் வியாபாரங்களைச் செய்துகொண்டும் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் நேர்ந்த ஊழ்வினையாகிய முன் ஜன்மத்தின் கர்மத்தைப் பொருத்தமாகச் சொல்லுகிறேன், பார்வதியம்மையே! கேட்பீராக. கிராமக் கணக்கனுடைய மனைவியின் பேரில் ஆசைப்பட்டார்.

29. இச்சை கொண்டு போகித்து வாழுந் நாளில்
இதை வரனும் தானறிந்து மனைவி பேரில்
நிச்சய மதாய்க் கோபித்து விரோதம் பேச
வித்தகியும் சமணன் மேல் ஆசை கொண்டு
உச்சரித்தாள் வரன் சேதியாவும் தானும்
உன் கணவர் பக்கலிலே வேண்டா மென்று
நிச்சயமாய் என் பக்கல் வருவாய் நீயும்
நேமிதனில் அம்மொழி போல் நின்ருள் மாது.

29. ஆசை மேலிட்டு அவளிடம் சேர்ந்து சுகித்து வாழுகின்ற காலத்தில் அவளுடைய புருஷன் இந்த விஷயத்தைத் தெரிந்துகொண்டு தன் மனைவியாகிய அவளிடத்தில் உண்மையாகவே கோபங்கொண்டு விரோதமாகப் பேசி அவளைக் கண்டிக்கச் சாமர்த்தியமுள்ள அவள் சமண ஜாதியைச் சேர்ந்தவன் பேரில் ஆசை மேலிட்டு, தன்னுடைய புருஷன் தன்னிடத்தில் நடந்து கொண்ட சங்கதி எல்லாவற்றையும் அந்தச் சமணக் கள்ள புருஷனிடஞ் சொன்னுள். அதன் பேரில் அந்தச் சமணன் நீ இனி மேல் உன் புருஷனிடம் இருக்கவேண்டாம், உண்மையில் என்னிடம் வந்து சேர்ந்துவிடு என்று சொல்லவே, அவள் இப் பூமியில் சமணன் சொல்லிய வார்த்தை பிரகாரம் அவனிடம் சென்று நிலைத்துவிட்டாள்.

30. இன்பமில்லாக் கணக்கனுக்கு இரண்டாம் மாது
இவன்விலக்கக் கருணிகன் வருத்த முற்று
என்மனைவி தனைக்கெடுத்த பாவிக் கேதான்
இப்பிறப்பில் ஆண்சுதர்கள் யெய்தா ராகிப்

[1] வினையை பூர்வகர்மத்தை [2] பொருத்தமாக

பின்ஜனன வமிசங்கள் தோஷ மாகிப்
புத்திர ருதிக்கில் நஷ்டம் செய்வாயீசா
தென்புலத்தார்[1] தமைநோக்கி வருத்த முற்முன்
சேதியெனும் பாவமது சேர்ந்த தம்மா.

30. அவள் பேரில் ஆசையில்லாத அந்தக் கணக்கனுக்கு அவள் இரண்டாவது தாரமானவள், அவள் தன் புருஷனை விட்டு விலகிப் போகவே கணக்கன் வருத்தங்கொண்டு, என்னுடைய மனைவியைக் கெடுத்து விட்ட பாவியாகிய சமணனுக்கு இந்த ஜன்மத்தில் ஆண் குழந்தைகள் விருத்தியாகாமலும், மறு ஜன்மத்திலும் கூடத் தன் சந்ததிகளுக்குத் தோஷம் நேரிட்டும் புத்திரர்கள் பிறந்தால் அவர்கள் இறந்துவிடும்படியும் செய்வாயாக, ஈசுவரனே! என்று சொல்லி வேண்டிக்கொண்டு தன்னுடைய பிதுர்வர்க்கங்களை நினைத்து வருந்தினுன். இப்போது சொல்லி வந்த விஷயங்களாகிய பாவம் இந்த ஜாதகரை வந்து அணுகியது, பார்வதி அம்மையே! என்று சொன்னுர்.

வேறு.

31. கடவுளர் தமக்கு விட்ட காளையை ஏரில் கட்டி
அடவுடன் உழுதா னென்றேும் அதுஒரு தோஷ மாச்சு
திடமுடன் தாய்தந் தைக்கே செப்பினுன் விரோத வார்த்தை
தொடர்ந்தது அந்தத் தோஷம் சுந்தரி[2] கேட்டி டாயே.

31. ஜாதகர் முன்ஜன்மத்தில் தெய்வங்களுக்காகச் சுற்றி விட்டு விடப்பட்ட எருதை ஏரில் பூட்டி உழுதான் என்கிறேும். இஃது ஒரு தோஷமாயிற்று. மேலும் ஜாதகர் தாய் தந்தையர்களிடம் விரோதமான வார்த்தைகளைச் சொன்னுர். அதுவும் ஒரு தோஷமாக இந்த ஜன்மத்தில் அவனைத் தொடர்ந்து வந்திருக்கிறது. அழகு பொருந்திய பார்வதி அம்மையே! கேட்பீராக என்று சொன்னுர்.

32. கருணிக மாதுக் கேதான் கலந்தது கர்ப்பம் தானும்
உரிமையாய்ப் பண்டி தங்கள் உத்தமன் செய்தா னென்றேும்
கருவுமே விலகி யேதான் காதலி மரண மாகி
உரிமையாய்க் காஞ்சி தன்னில் உதித்தனள் தீயின் வம்சம்.

32. அந்தக் கணக்க ஜாதிப் பெண்ணுக்குக் கர்ப்பம் உண்டாகவே, ஜாதகர் தன் முன்ஜன்மத்தில் இஷ்டத்துடனும் உரிமையுடனும் அவளுக்குத் தகுந்த வைத்தியங்களைச் செய்யவே, கர்ப்பம் பிரஷ்டமாகி வெளி வந்துவிட, அந்த ஆசை மேலிட்டுள்ள பெண் இறந்து, காஞ்சிமா நகரத்தில் வன்னியர் குலத்தில் தன் இஷ்டம் போல் வந்து பிறந்தாள்.

33. பின்னையும் மரண மாகிப் பிறப்பளே சைவ வமிசம்
அன்னவள் முப்பா ணுண்டில் அபிமான மாகச் சேர்வள்
இன்னவன் சமணன் தானும் எமன்பதி நரகம் புக்கித்
தன்னிலே வைசிய குைத் தானவன் வந்தா னென்றேும்.

[1] பிதுர்க்கள் [2] பார்வதி

33. இப்படிப் பிறந்த அவள் மறுபடியும் இறந்து சைவ குலத்தில் பிறந்தாள். இந்தச் சமணரும் எமபட்டணத்தில் நரகத்திற்குச் சென்று வைசியனுக வந்து பிறந்தார். இவ்விதமாய்ப் பிறந்த இந்த ஜாதகருக்குத் தன்னுடைய முப்பதாவது வயதில் அவள் அபிமான மனைவியாக வந்து நேருவாள்.

34. இந்தமூ விதபா பத்தா லியம்பினோம் புத்ராதி தோஷம்
தன்குலம் குற்ற மெய்தும் தந்தையின் பூர்வம் சொல்வேன்
உன்னத வள்ளூர் மேல்பால் உறைந்திடும் சிற்றூர் தன்னில்
அன்னவன் மறையோ னுக அவனுமே வந்தா னென்றேம்.

34. இந்த மூன்றுவித பாபங்களாலே ஜாதகருக்குப் புத்திர தோஷத்தையும் களத்திர தோஷத்தையும் நாங்கள் சொன்னேம். இனி மேலாகத் தகப்பனுருடைய பூர்வ ஜன்ம விஷயத்தைச் சொல்லுகிறேன். மேன்மை தங்கிய வள்ளூருக்கு மேற்கிலிருக்கிறது என்று சொல்லக் கூடிய ஒரு சிறு கிராமத்தில் பிராமணக் குலத்தில் ஜாதகருடைய தகப்பனர் வந்து பிறந்தார்.

35. கல்வியு முடையா னுகிக் கனராசர் பக்கம் சேர்ந்து
நல்லதி காரம் பெற்று நாயகன் வாழுந் நாளில்
வல்லியும் [1] விதவை தானும் வந்தனள் சலங்கள் கொள்ளப்
புல்லிய [2] புத்தி கொண்ட புருடனும் அவள்பால் சென்று ;

35. ஜாதகருடைய தகப்பன் தன்முன் ஜன்மத்தில் கல்வி கற்றுப் பெரிய அரசரிடம் நல்ல அதிகாரமுள்ள ஒரு வேலையிலமர்ந்து வாழுங் காலத்தில் ஒரு விதவையான பெண் ஜலத்தைக் கொண்டுபோக வந்தாள். அவளிடம் இழிவான அற்பப் புத்தியுள்ளவன் சென்று ;

36. சிலசில வேறு வார்த்தை தேவிபால் சொல்லும் போது
நலமுள மாது தானும் நவின்றதுக் கிசையா ளாகிப்
பலமதாய் அவள்க ரத்தைப் பற்றினுன் அவள் வெகுண்டு
குலவிய இல்லம் சென்று கூறினுள் துணைவ ரோடு.

36. அவன் அந்தப் பெண்ணிடம் சென்று குற்றமானச் சில வார்த்தைகளைச் சொல்ல அந்த நற்குணமுள்ளப் பெண் அவன் சொல்லிய வார்த்தைகளுக்கு இணங்காமல் போகவே, அவளுடைய கையைப் பலாத்காரமாகப் பிடித்தான். அதன் பேரில் அவள் கோபங் கொண்டு தன் வீட்டிற்குச் சென்று தன்னுடைய சகோதரர்களிடம் நடந்த விஷயத்தைச் சொன்னுள்.

37. அங்ஙனே கோப முற்று அதிகாரி மறையோன் பக்கல்
சங்கையைச் சொல்லும்போது சதிசெய்தோன் தனையழைத்துச்
சிங்கம்போல் கோபம் கொள்ளத் தீரன்பால் பொருளை வாங்கி
மங்கைமேல் குற்றம் சாட்ட வரைகு வாளந்த மாது.

[1] பெண் [2] இழிவான்

37. அதன் பேரில் சகோதரர்கள் கோபமுடையவராய் உடனே அதிகாரியாயுள்ள மேற் சொல்லிய பிராமணரிடஞ் சென்று நடந்த விஷயங்களைச் சொல்லவே, அந்தப் பிராமண அதிகாரி குற்றஞ் செய்தவனை வரவழைத்து அவன் பேரில் தான் ஒரு சிங்கத்தைப் போல அதிகமாகக் கோபித்துக்கொள்ள, அதன்பேரில் அந்தக் குற்றவாளியானவன் கொடுத்தப் பொருளை அந்தப் பிராமணர் வாங்கிக்கொண்டு, அந்தப் பெண் பேரிலேயே குற்றத்தைச் சாட்ட, அந்தப் பெண் பின்வருமாறு சொல்லுகிருள்.

38. என்பேரில் குற்றம் சொல்லி எதிரிபால் பொருள் பறித்தான்
பின்வரும் ஜன்மம் தன்னில் பெற்றதாங் குற்ற மாயும்
தன்பந்து இல்லா தாயும் ஜன நிந்தை யுடையனுயும்
அன்புடன் வாழ்வா யென்று அறைந்தன ளந்த மாது.

38. அந்த விதவைப் பெண், " என் பேரிலேயே குற்றத்தைச் சாட்டி விட்டு எதிரியினிட மிருந்து பொருளைப் பிடுங்கிக் கொண்டவனுன பிராமணன், தன்னுடைய மறு ஜன்மத்தில் தன்னைப் பெற்ற தாயாருக்குக் குற்றம் நேர்ந்தும் தன்னுடைய பந்துக்கள் இல்லாதவனுயும் ஜனங்களுடைய நிந்தையை யுடையவனுயும் இருந்து வாழவேண்டும் " என்று சொன்னுள்.

குறிப்பு.—எட்டாவது செய்யுளில் தகப்பன் இளையாளுக்குப் பிறந்தவன் என்பதையும், பாட்டனுக்கு மூன்று தாரம் என்று சொல்லி இருப்பதையும் கவனிக்கவும். தகப்பனுடைய தாய் இரண்டாவது மனைவியாகி இறந்து விட்டிருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம்.

39. அந்திய காலம் தன்னில் அவனுக்கு வாயு நோயால்
அந்தகன் [1] பக்கல் சேர்ந்து அரிமகன் [2] வரையப் பட்டு
வந்தவ னிவனே என்றேம் மங்கையும் கேட்க லுற்றுள்
முன் ஜன்மம் மறையோ னுக முயன்றவ னிச்சென் மத்தில் ;

39. அந்தப் பிராமணன் தன்னுடைய கடைசிக் காலத்தில் வாயு நோய்க் கண்டு இறந்து எமனை அடைந்து பிரம்மாவால் எழுதப் பட்டு ஜாதகருடைய தகப்பனுராக இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறேம். அதன் பேரில் பார்வதியம்மையார் பின்வருமாறு கேட்கின்றுர்—" முன் ஜன்மத்தில் பிராமணராகப் பிறந்தவர் இந்த ஜன்மத்தில் ;

40. இக்குல முதிப்ப தென்ன இயம்புவீர் முனியே நீர்தாம்
மிக்கவே முன்ஜன் மத்தில் மறைகளை ஓதா னுகித்
தக்கவே பொருளி லிச்சை தானவன் வைத்த தாலே
செக்கனன் வைசியச் சேயாய் தேவியே கேட்டி டாயே.

[1] எமன் [2] பிரம்மா

40. இந்த வைசிய குலத்தில் பிறந்ததற்குக் காரணம் என்ன அதை, முனியே! நீர் சொல்வீர்" என்று கேட்க, "முன் ஜன்மத்தில் பிராமணராயிருந்தும் வேதங்களை ஓதாமல் பணத்தின் பேரில் ஆசையுடையவராகி யிருந்ததால் செக்கை ஓட்டுகிற வைசியக் குலத்துப் பிள்ளையாய்ப் பிறந்தார் என்று சொல்லுகிறேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

41. அன்னையின் குணத்தைச் சொல்வேனன்புள மனத்தாளாகும்
இன்னவ ளிரு நிறத்தாள் யாவர்க்கு நல்லோ ளாவள்
பின்னையும் துணைவ ரில்லாள் புருடன்தன் மனம்போல் வாழ்வள்
தன்குலக் குற்ற முள்ளாள் சங்கரி மேலும் கேளே.

41. இனிமேல் தாயாருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். அவள் அன்புள்ள மனத்தையுடையவள். இருநிறங்கள் கலந்துள்ள மாநிறமுள்ள தேகமுடையவள். எல்லோருக்கும் நல்லவளாயிருப்பாள். மேலும், தன்னுடன் பிறந்தவர்க ளில்லாதவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்கு ஒத்தாப் போல் நடந்து கொள்ளுவாள். தன்னுடைய குலத்திற்குக் குற்ற மிருக்கும். பார்வதியம்மையே! மேலுங் கேட்பீராக.

42. அவளுடைப் பூர்வம் சொல்வேன் அறுமுகன் தணிகை கீழ்ப்பால்
இவளுமே கோகு லத்தி லெய்தினள் வறுமை யின்றி
அவனியில் ஆடு மாடு அதிகமு முடையா ளாகி
நவனியில் வாழு நாளில் நாட்டுவோ மூழிதானே.

42. அவளுடைய பூர்வ ஜன்மத்தைச் சொல்லுகிறேன். ஆறுமுகக் கடவுளாகிய கந்தர் வசிக்கின்ற திருத்தணிகையின் கிழக்குத் திக்கில் இடையர் ஜாதியில் பிறந்து, வறுமையில்லாமல் பூமியில் ஆடுமாடுகள் அதிகம் உள்ளவளாகி வாழுகின்ற காலத்தில் வந்து சம்பவித்த ஊழ் வினையைச் சொல்லுகின்றேன்.

43. அரனுடை அபி ஷேகத்திற் கவள்மேதி பாலைத் தந்தாள்
உறைந்தது அந்தத் தோஷம் உத்தமி அந்தி யத்தில்
பெரும்பிணி குன்ம நோயால் புக்கினள் மறலி [1] பக்கல்
பிறமனல் வரையப் பட்டுப் பிரந்தனள் கங்கை [2] வமிசம்.

43. சிவபெருமானுடைய அபிஷேகத்திற்காக எருமைப் பாலைக் கொடுத்தாள். அதனால் தோஷம் வந்து நேர்ந்தது. தன்னுடைய கடைசிக் காலத்தில் பெரிய நோயாகிய குன்ம நோயால் இறந்து எமனுடைய பக்கத்திற்குச் சென்று பிரம்மாவால் எழுதப்பட்டு வேளாண்மைத் [3] தொழிலைக் கைக்கொண்ட குலத்தில் பிறந்தாள்.

44. பின் ஜன்மம் அருணை [3] தன்னில் பிறப்பனே சைவ வமிசம்
தன்னிலே சுகமாய் வாழ்வள் தந்தையின் பின்ஜன் மங்கள்
மன்னிய வேங்க டத்துள் [4] மறைக் குல முதிப்பா ளுகும்
சொன்ன சொல் குன்றிடாது சுந்தரி மேலுங் கேளே

[1] எமன் [2] வேளாள குலம்
[3] அருணாசலம் என்ற திருவண்ணாமலை [4] திருப்பதியில்

44. இவள் மறு ஜன்மத்தில் திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் சைவ குலத்தில் பிறப்பாள். இந்த விடத்தில் சுகமாய் வாழ்வாள். ஜாதகருடைய தகப்பனருடைய மறு ஜன்மம் திருப்பதியில் பிராமணர் குலத்தில் நேரிடும். நான் சொல்லிய விஷயங்கள் குறைவு படாமல், தவறிடாமல் நடக்கும். அழகு பொருந்திய பார்வதியம்மையே! நான் மேலுஞ் சொல்வதைக் கேட்பீராக.

45. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ மிருபா னெட்டில்
பிந்திய கூனி [1] மாதம் பேசுவோம் கண்டந் தானும்
சந்தத மன்னைக்கே தான் சாற்றுவோ முப்பா னேழில்
முந்திய தனுசு மாதம் [2] மொழிகிறோம் மார கங்கள்.

45. ஜாதகருடைய தகப்பனருடைய மரண காலத்தைச் சொல்லுகிறேன். ஜாதகருக்கு இருபத்தெட்டாம் வயதில் பங்குனி மாதத்தில் அவருடைய தகப்பனருக்குக் கண்டம் நேர்ந்து தகப்பனர் இறந்து விடுவார். ஜாதகருடைய தாயாருக்கு மரண காலத்தைச் சொல்லுகிறேன். ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் மார்கழி மாதத்தில் தாயாருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகிறோம்.

குறிப்பு.—(1) வயது ஷூ 27–0–0 முதல் ஷூ 28–0–0 வரையில் குரு தசையில் சனி புக்தி ஆகும். குரு பிதுர்ஸ்தானாதிபதியாகி பிதுர் மாரக ஸ்தானமாகிய மூன்றில் இருப்பதைக் கவனிக்கவும்.

(2) வயது ஷூ 36–0–0 முதல் ஷூ 37–0–0 வரையில் குரு தசையில் சூரிய சந்திர புத்திகளாகும். மாதுர் ஸ்தானமாகிய துலாத்திற்கு 1–8-க்குடைய சுக்கிரனுடன் குரு சம்மந்தப்பட்டு 4-க்கு 12-ல் இருப்பதை கவனிக்கவும். துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-வது பாட்டைப் பார்க்கவும். "சாவதாம் எட்டோனோடும் தனித்த லக்கினத்தோடும் .... என்பாரே."

46. ஜாதகன் நிரியா ணத்தைச் சாற்றுவோ மன்பா நாலில்
மேதினில் மேட மாதம் மேவிய பருவம் தன்னில்
தீதான சுரத்தி னலே தேகமே வாடு மென்றோம்
போதவே பின்ஜன் மத்தைப் போற்றுவோம் கேளும் தாயே.

46. ஜாதகருடைய மரண காலத்தைச் சொல்லுகிறோம். அவர் தமது ஐம்பத்து நான்காம் வயதில் சித்திரை மாதத்தில் பருவ திதியில் கொடுமையான ஜுரத்தால் தேகம் கெட்டுப்போய் இறந்து விடுவார் என்று சொல்லுகிறோம். இனிமேல் ஜாதகருடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். தாயாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—வயது ஷூ 53–0–0 முதல் ஷூ 54–0–0 வரையில் சனி தசையில் சந்திர அங்காரக புக்திகள் ஆகும். சனி தசை நாலாந் தசையாகும். சனிக்குச் சந்திர லக்கினதிபத்தியமாவது, பாக்கியாதி பத்திய

[1] பங்குனி மாதம். [2] மார்கழி மாதம்.

மாவது வரவில்லை. லக்கினத்திற்கு 1, 8, 10 யை நைசர்கிக சுபர் யாரும் பார்க்கவில்லை. இது மத்திம ஆயுள் அமைப்பும், சனி தசையில் மாரக அமைப்பும் வாய்ந்த ஜாதகம் என்று சொல்லக்கூடியதாம்.

47. மறுஜன்மம் காஞ்சி தன்னில் அவனுமே சௌராஷ்டர வமிசம்[1]
பெருமையா யுதித்து மேலும் பிரபலச் செட்டுச் செய்து
திருமகள் விலாசம் பூண்டு செல்வனும் வாழ்வா னுகும்
கரிமுகன் தன்னைப் பெற்ற காதலி[2] கேட்டி டாயே.

47. ஜாதகர் மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் பட்டுநூல்காரக் குலத்தில் பெருமையாயுள்ள குடும்பத்தில் பிறந்து பிறகு பிரபலமாய் வியாபாரஞ் செய்து லக்ஷ்மி அவருடைய வீட்டில் விளையாடி வாசஞ் செய்யும் செல்வாக்குடன் வாழ்வாராகும். யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றவளும், சிவபெருமானுடைய மனைவியுமாகிய தலைமை வகித்த பார்வதியம்மையே! கேட்பீராக.

48. இன்னவன் பொதுயோ கத்தை யியம்புவோம் சல்லிய மில்லான்
துன்னில பொருளுஞ் சேர்ப்பன் தொல்புவிக் குதவி செய்வன்
பின்னையும் நாலாண் டின்மேல் பேசுவோம் சேஷ யோகம்
உன்னத பிறைபோல் செல்வம் ஓங்கிடு மிவனுக்கே தான்.

48. ஜாதகருடைய யோகத்தை இனிமேல் சொல்லப்போகிறோம். ஜாதகர் கடன்பட மாட்டார். பூமி செல்வம் சேரும். உலகத்தாருக்கு உதவி செய்வார். மேலும் இவருக்கு நான்கு வயதிற்கு மேல் (பிதாவிற்குச்) சேஷ யோகம் என்ற ஒருவித யோகத்தைச் சொல்லுகிறோம். ஜாதகருக்குச் சந்திர பிறையைப் போல வளர்ந்து கொண்டே யிருக்கின்ற மேன்மையான செல்வம் ஓங்கித் தழைத்து நிற்கும்.

குறிப்பு.—பத்திற்குடையவர் நான்கில் இருந்தால் சேஷயோகம் (களத்திர யோகம்) என்று ஒருவாறு சொல்லக் கூடும்.

49. ஜனித்திடு காலம் தன்னில் சேய்[3]த்த சையிருப்புத் தானும்
குணித்தி டுமாண்டு மாறும் கூர்திங்களீரஞ் சாகும்
தினமது பத்த தாகும் செப்புவோம் பலனை யாங்கள்.
வினையான ரோகம் வாய்க்கும் விரயங்கள் மிகவே யுண்டு.

49. ஜனனகாலத்தில் அங்காரகனுடைய தசை கணிதம் பிரகாரம் ஆறு வருஷமும், பத்து மாதங்களும், பத்து நாட்களும் ஆகும். இதற்கு நாங்கள் பலனைச் சொல்லுகிறோம். வினையை அனுசரித்த ரோகம் ஜாதகருக்கு உண்டாகும், அவருடைய தகப்பனுருக்கு அதிகச் செலவுகள் உண்டாகும்.

---

[1] பட்டுநூல்கார ஜாதி. [2] மனைவி, தலைவி. [3] அங்காரகன்.

50. கடனென்று காலி[1] சேதம் கலவர புத்தி யாகும்
அடவுடன் துணைவர் விருத்தி அவனில்லம் களவு போகும்
திடமுடன் சுபமு முண்டு திரும்பின சல்லியங்கள்
வடவரை[2] மகளே பின்பால் வழுத்துவோம் விவரம் யாவும்

50 ஜாதகருடைய தகப்பனுருக்கு ஒரு கடன் நேரிடும். மாடு இறந்து போய்விடும், கலவரமான சபல புத்தி உண்டாகும். ஜாதகருக்குச் சகோதரர் உண்டாகி விருத்தியாவார். வீட்டில் திருட்டு போகும். குடும்பத்தில் பெரிய சுபகர்மங்கள் நடக்கும், மறுபடியும் கடன்கள் ஏற்படும். இவைகளின் விவரங்களை எல்லாம் பின்பாகங்களில் சொல்லுகிறோம், வடக்கே உயர்ந்த மலையாகிய இமயமலைக்கதிபதியாகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! கேளும்.

---

[1] பசுக்கூட்டம் [2] வடக்கே உயர்ந்த மலை

ஜாதகம் 53

புதன் சுக்கிரன்	சூரியன்		கேது
	இராசி சக்கரம்		லக்கினம் அங்காரகன்
			சந்திரன்
சனி ராகு		குரு	

பூரம் 1-ங் கால் சு. தசை இருப்பு 16-4-0.

1. சந்திரன் சிம்ம ராசி சனிராகு தனுசு வாகப்
புந்தியும் புகரும்[1] மீனம் பூமகன்[2] கடக மாக
மந்திரி[3] கோல தாக[4] மேடத்தி லிரவி[5] யாக
இந்தவாறு கோளும் நின்றுஇலக்கினம் வளைய லாக[6];

1. சந்திரன் சிம்ம ராசியிலிருந்து, சனியும் ராகுவும் தனுசிலிருந்து புதனும் சுக்கிரனும் மீனத்திலிருந்து, அங்காரகன் கடகத்திலிருந்து, குரு துலாத்திலிருந்து, சூரியன் மேஷத்திலிருந்து, இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து லக்கினம் கடக ராசியானால்;

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கிரக் கிரக நிலை பொருத்த முடையதாகும்.—மேஷத்தில் சுக்கிரனும் சனியும், மிதுனத்தில் சூரியன், கடகத்தில் ராகு, சிம்மத்தில் சந்திரன், துலாத்தில் அங்காரகன், மகரத்தில் கேது, கும்பத்தில் புதனும், குருவும் ஆகும்.

2. பலன்தனைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும்போது
குலவிய பராசர் சொல்வர் குழவியு மாண்பால் ஜன்மம்
தலைவாசல் உத்தர மாகும் சாற்றுவோம் கீழ்மேல் வீதி
நீலமாய்த் தந்தி யீசன் நிகழ்த்துவோம் கீழ்ப்பா லாக

2. பலன்களைச் சொல்வீர் என்று பார்வதி கேட்கும்போது, பராசர முனிவர் சந்தோஷித்துச் சொல்லுகின்றார். ஆண் குழந்தை ஜெனனமாகும். வீதி கிழக்கு மேற்காகும். பிறந்த வீட்டின் முதன்மையான வாசற்படி வடக்கிலுள்ளதென்று சொல்லுவோம். கறுத்த ஆண் யானை முகத்தோனாகிய விநாயகக் கடவுள், சிவன் இவர்கள் கோயில்கள் கிழக்கில் இருக்கும் என்று சொல்லுகிறோம்.

---

[1] சுக்கிரன் [2] அங்காரகன் [3] குரு [4] துலாம் [5] சூரியன் [6] நண்டுவளை என்ற கடகம்

3. சிங்கவா கனத்தாள் தெற்கில் தீபாஞ்சாலி[1] அருகில் தங்கும்
அங்கமா மாரி மேற்கில் சொல்லுமிவ் வடையா ளத்துள்
சங்கையச் சிற்றூர் தன்னில் தந்தையி னில்லம் சொன்னோம்
கங்கையின் குலத்தி லேதான் காவல னுதிப்பா னாகும்.

3. துர்க்கையம்மன் கோயில் தெற்கிலும், அக்கினி தேவன் துரோபதையம்மன் இவர்கள் கோயில்கள் பிறந்த வீட்டிற் கருகிலும், அங்காளம்மை மாரியம்மை இவர்கள் கோயில்கள் மேற்கிலும் இருக்கும். இப்படிச் சொன்ன அடையாள முள்ளத் தகப்பனுருடைய வீட்டில் ஒரு சிறிய கிராமத்தில் வேளாள ஜாதியில் இந்த ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகிறோம்.

4. உதித்தவன் யோகச் சேதி உரைகிறோ மினிமே லாக
மதித்திட அன்னை யோகம் அவன்தந்தை துணைவர் யோகம்
பதியினில் மனைவி புத்திரர் பகருவோம் முன்பின் ஜன்மம்
விதியினால் நவக்கோ ளாய்ந்து விளம்புவோ மிந்நூல் தன்னில்.

4. ஜாதகருடைய யோக விஷயங்களை இனிமேல் சொல்லுகிறோம். ஜாதகருடைய தாய், தகப்பன், சகோதரர், மனைவி, புத்திரர்கள் இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம், பின் ஜன்மம் இவைகளையும், நவக்கிரகங்களை ஆராய்ச்சி செய்து இந்தச் சாஸ்திரத்தில் விதிப்பயனைக் சொல்லுகிறோம்.

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மைவ ராகும்
எந்தையே ஆண்பா லொன்று எழிலுள கன்னி அவ்வாறு
சந்ததம் தீர்க்க மாகும் சாற்றுவோம் மற்ற வெல்லாம்
நொந்திடு மென்று சொன்னோம் நிமலியே மேலுங் கேளே.

5. ஜாதகருடைய தகப்பனுருடைய சகோதரவர்க்கத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். தகப்பனுருடன் பிறந்தவர்கள் ஐந்துபேர் ஆகும். பார்வதியம்மையே! ஓர் ஆண் சகோதரமும் ஒரு பெண் சகோதரமும் நீண்ட ஆயுளுடையவர்களாவர். மற்றச் சகோதரர்களெல்லாம் இறந்து போய்விடுவர் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் மேலே சொல்லப் போவதைக் கேட்பீராக.

குறிப்பு.—இந்த ஆண் சகோதரர் மூற்ற சகோதரராவர், 39-ஆவது பாடலைப் பார்க்கவும்.

6. இருநிற முடைய னாகும் ஈகைவான் தந்திர வாதி
பெருமவர் நேசம் கொள்வான் பின்புத்தி யுடையா னாகும்
வறுமைகளி ல்லா னாகும் மானிலம் குறைவு செய்யான்
திருமாலிரண்டு பாகம் சித்திர வீடு செய்வன்.

6. ஜாதகருடைய தகப்பனார் இரண்டு நிறங்களுங் கலந்த மானிறமுள்ள தேகமுடையவர். கொடையாளி. தந்திர முள்ளவர். பெருமை வாய்ந்தவர்களுடைய சினேகத்தை யுடையவர். பின்புத்தியுள்ளவர். கஷ்டமும்

---

[1] துர்க்கை.

தரித்திரமு மில்லாதவர். பூமியைக் குறையும்படி செய்யமாட்டார். பூமியில் குளங்களைச் செய்யமாட்டார். விஷ்ணுவின் கிருபையால் இரண்டு பங்குடையவர். அழகான சித்திரங்களடங்கிய இரண்டு கட்டு வீட்டைக் கட்டுவார்.

7. பகையுமே கொஞ்ச முள்ளான் பரமனும் பித்த தேகி
ஆகம மறியா னாகும் அரனுப தேசம் கொள்ளான்
வேகமாய் நடக்க வல்லான் வீண்செல வுகளும் செய்யான்
தோகையர் மோக வானும் சொல்லது இரண்டு முள்ளான்.

7 அவர் பகைவர்களைக் கொஞ்சமாயுடையவர். பித்தவாய்வுள்ளத் தேகத்தை யுடையவர். ஆகம சாஸ்திரத்தைப் படிக்காதவர். சிவனுடைய மந்திர உபதேசத்தை அடையாதவர். சீக்கிரமாயும், வேகமாயும் நடக்குஞ் சாமர்த்திய முள்ளவர். வீணைச் செலவுகள் செய்யமாட்டார். பெண்களின் பேரில் மோகம் உடையவர். இரண்டு விதமாய்ப் பேசுந் தன்மையுடையவர். நல்லதையுங் கெட்டதையுஞ் சொல்லுவார்.

8. கைமுத லதிக மில்லான் கரமதில் கத்தரி ரேகை
செய்தொழில் கிருஷி யென்றேம் தீரமா நெஞ்சு மாவன்
வையகம் நல்லோ னவன் வழக்கினில் செல்லா னாகும்
பொய்யுரை அதிகம் பேசான் புகலுவோம் சம யோகம் தான்

8. இவர் கையிருப்புத் தொகை அதிக மில்லாதவர். இவர் தன் உள்ளங்கையில் கத்தரி ரேகையை யுடையவர். இவர் விவசாயத் தொழிலைச் செய்வார் என்கிறோம். இவர் தீரமான, தைரியமான மனதுடையவர். பூமியில் நல்லவரென்று பேரெடுப்பார். வழக்கு வியாஜ்ஜியங்கள் செய்ய மாட்டார். பொய் வார்த்தைகளை அதிகமாய்ச் சொல்ல மாட்டார். சமமான நடுத்தரமான யோகத்தை யுடையவர் என்று சொல்லுகிறோம்.

9. இக்குண முடையா னுக்கு இவனுமே அஞ்சாம் ஜன்மம்
மிக்கவே யுதிப்பா னாகும் விளம்புவோ மவன்குணத்தைத்
தக்கவே யிருசி கப்பன் சன்மார்கன் கோபியாவன்
திக்கெலாங் கீர்த்தி யேற்பன் தீரமா நெஞ்ச னவன்.

9. இவ்விதமான குணங்களையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் ஐந்தாவது கர்ப்பத்தில் பிறந்தவர். இவருடைய குணதிசயங்களை இனிமேல் சொல்லுகிறோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமான தேகத்தை யுடையவர். நல்லொழுக்க முடையவர். கோபமுள்ளவர். எல்லாத் திக்குகளிலும், கீர்த்தியும் பெருமையும் அடைவர். தைரியமான நெஞ்சு படைத்தவர்.

10. வஞ்சக வஞ்ச னவன் வார்த்தையு மதிகம் சொல்வன்
செஞ்சொலும் நுணக்கம் தேர்வன் சிறந்ததோர் கல்வி கற்பன்
அஞ்சிடான் எதிரி கட்கு ஆவுகள் விருத்தி செய்வன்
தஞ்சமென் றோரைக் காப்பன் தயையும் பெருமை யோனே.

10. இவர் கபடருக்குள் கபடராவர். அதிகமாகப் பேச வல்லவர். இவர் உபயோகப்படுத்தும் வெளிபடையான சொற்கள், அஃதாவது உரிய பொருளை யுணர்த்துஞ் சொற்கள் நுட்பமானவைகளாகும். இவர் மேன்மையான உயர்ந்த வித்தையைக் கற்றவர். எதிரிகளுக்குப் பயப்பட மாட்டார். பசுக்களை வைத்து விருத்தியாக்குவார். தன்னிடம் வந்து அடைக்கலம் புகுந்தவர்களைக் காப்பாற்றுவார். தயையும், பெருமையும் உள்ளவர்.

11. சங்கீதம் பாடு வானும் தரணிக ளதிகம் சேர்ப்பன்
பொங்கிய குடும்பி யாவன் போசன சுகி யென்றேம்
நங்கையர் மோக வானும் நினைத்த காரியம் முடிப்பன்
பங்கய [1] ரேகை யுள்ளான் பணிதிபாத் திரமும் சேர்ப்பன்.

11. ஜாதகர், சங்கீதம் பாட்டு இவைகளைப் பாடுவார். பூமியை அதிகமாகச் சேர்ப்பார். பெருமையுள்ள பெரிய குடும்ப முடையவராவர். நல்ல, சுகமான போஜனத்தைச் சாப்பிடுவார். சிறந்தப் பெண்களின் மேல் ஆசையுடையவர். தான் எண்ணிய காரியத்தைச் செய்து முடிப்பார். தன் உள்ளங்கையில் கமல ரேகை என்ற தாமரைரேகை யுடையவர். ஆபரணங்களையும், உண் கலன்கள் உள்பட சகல பாத்திரங்களையும் சேகரித்து வைப்பார்.

12. தந்தைநாள் பூமி கொஞ்சம் தன்காலம் விசேஷ முண்டு
தன்தன மதிக முண்டு சகடுக ளெய்து மென்றேம்
நொந்தவர் தம்மைக் காப்பன் நீர்தனில் தோய வல்லன்
சிந்தையு மர்ம மில்லான் திருப்பணி செய்வா னாமே.

12. ஜாதகருடைய தகப்பனுருடைய வாழ்நாளில் பூமி கொஞ்சமாக விருக்கும். ஜாதகருடைய வாழ்நாளில் பூமிகள் அதிகப்படும். வீட்டு மனைகளும் அதிகமாகும். வண்டிகளும் வந்து சேரும். ஜாதகர், செல்வத்தில் நொந்து வறுமையுடையவர்களைக் காப்பாற்றுவார். ஜலத்தில் முழுகுவதில் கெட்டிக்காரர், அஃதாவது நீஞ்சலில் வல்லவர் அல்லது புண்ணியத் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். கபடமான மனதில்லாதவர். கோயில் வேலைகளையும், திவ்விய தெய்வீகத் தொண்டுகளையும் செய்வார்.

13. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மெழுவ ராகும்
அவனியில் ஆண்பால் காணன் நாயகி யிரண்டு என்றேம்
பவமுள முன்னல் ஒன்று பாலகன் பின்னு லொன்று
இவைகளும் தீர்க்க மெய்துமீச்வரி கேட்டி டாயே.

13. இனிமேல் ஜாதகருடைய சகோதரர்களின் விஷயத்தைச் சொல்லுவோம். உடன் பிறந்தவர்கள் எழுபேர் ஆவர். ஆண் சகோதரர் இல்லை. பெண் சகோதரங்கள் இருவராகும். இவர்களில் ஒருத்தி தமக்கையாவள். மற்றொருத்தி தங்கையாவள். இவர்கள் இருவரும் நீண்ட ஆயுளுள்ளவர்களாவார்கள். பார்வதியம்மையே கேட்பீராக.

---

[1] கமலம்

14. ஏதுகா ரணத் தினுலே யிவன்துணை ஆண்பால் காணுன்
ஓதுவீர் முனியே நீர்தாம் ஒருமூன்ருேன் நீச மாயும்
தீதான ஆறில் ராகு செறிந்ததால் துணைஆண் தோஷம்
போதக வானைப் [1] பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

14. என்ன காரணத்தினுலே ஜாதகருக்கு ஆண் சகோதரர் இடை யாது என்றீர் ? அந்த விபரத்தை முனியே சொல்லுவீர் என்று பார்வதி கேட்க, மூன்ரும் பாவாதிபதியாகிய புதன் மீனராசியில் நீசமாயிருப்ப தாலும், கெட்ட பாவமாகிய ஆருவது பாவத்தில் ராகு சகோதரரை அழிக்குந் தன்மையுடையவராயிருப்பதாலும் ஆண் சகோதரர் தோஷமா கும்: யானை முகத்தோனுகிய விநாயக் கடவுளைப் பெற்றப் புண்ணியவதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—6-இல் ராகு இருப்பதைப்பற்றிக் கீரனூர் நடராஜர் அருளிச் செய்த தமிழ் ஜாதகாலங்காரம் என்ற புத்தகத்தில் 525-ஆவது பாடலைப் பார்க்கவும். "ஆரு மிடத்திலாய கருங்கோள்........நேமி யோரறிய."

இதே புத்தகத்தில் 633-ஆவது பாடலையும் பார்க்கவும். "கோளினிற் கரிய நாகங் கூறுமா றிடத்தி னிற்கில்........திடவானுமே."

15. மணமது பதினெட் டாண்டில் வடதிசை மனைவி தோன்றும்
குணமுளாள் கோபி யாவள் குலத்துளோர் மெச்ச வாழ்வள்
வினையான வார்த்தை சொல்லாள் பின்புத்தியுடை யாளாகும்
வினையதை மனத்தி லெண்ணுள் விளம்புவோ மிருநிறத்தாள்.

15. ஜாதகருக்கு விவாகம் பதினெட்டாவது வயதில் நடக்கும். வடக்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள். அவள் நல்ல குண முள்ளவள். கோபமுடையவளா யிருப்பாள். தன் குலத்தைச் சார்ந்தவர்கள் அவளைப் போற்றும்படியாக அவள் வாழுவாள். பிறரை வருத்தும் வார்த்தை களைச் சொல்லமாட்டாள். பின்புத்தி யுள்ளவளாகும். கெட்டதைத் தன் மனத்தில் நினைக்கமாட்டாள். இரண்டு நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிற முள்ள தேகத்தை யுடையவள் என்று சொல்கிரும்.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஆு 17—0—0 முதல் ஆு 18—0—0 வரையினும் சூரிய தசையில் சந்திரன் அங்காரகன் ராகுபுத்திகள் நடக்கின் றன. விவாகத்துக்குச் சம்மந்தமுள்ள இரண்டாவது பாவாதிபதி யாகிய சூரியன் போகஸ்தானத்திலுள்ள குருவால் பார்க்கப்படுகிருர். போகக் காரணுகிய ராகு சனியுடன் இருக்கிருர். ஆகையால் சூரிய தசையில் இராகு புத்தியில் விவாக யோகமுண்டு.

16. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் மெழுவ ராகும்
சித்தமா யாண்பால் ரண்டு செப்புவோம் பெண்பால் மூன்று
சுத்தமாய் ஐந்து தீர்க்கம் சேர்ந்திடு மிரண்டு தாமும்
பத்தியாய் முதலில் தோஷம் பகருவோ மிவனுக் கேதான்.

1 இளமையான யானை, (யானைக்கன்று.)

16. ஜாதகருக்குப் புத்திரபாவத்தைப்பற்றி இனிமேல் சொல்லு கிருேம். இவருக்குச் சந்ததிகள் ஏழுபேர் ஆவர். ஆண் சந்ததிகள் இரண்டும், பெண் சந்ததிகள் மூன்றும், ஆக இவ்வைந்து சந்ததிகளும் தீர்க்க ஆயுளை யுடையவர்களாவார்கள். இரண்டு சந்ததிகள் இறந்துவிடும். இவருக்கு முதலில் பிறந்த சந்ததிகள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிருேம்.

17. என்ன காரணத்தி ஞலே இவன்சுதர் முதலில் பீடை
தன்னிலே சொல்லு மென்னச் [1] சேயவ னஞ்சோ னுகிப்
பின்னமாய் நீச்ச மாகப் புகலுவோ மந்தத் தோஷம்
இன்னவன் முன்ஜன் மத்தி லெய்திற்று அந்தத் தோஷம்.

17. ஜாதகருக்கு முதலில் பிறக்கும் சந்ததிகள் எந்தக் காரணத் தினல் இறந்து போய்விடும் என்பதைச் சொல்லுவீரென்று பார்வதி கேட்க, புத்திர ஸ்தானமாகிய ஐந்தாம் பாவத்திற் கதிபதியான அங்காரகன் கடக ராசியில் நீசமடைந்து பலங் குறைந் திருப்பதால் இந்தத் தோஷத்தைச் சொல்லுகிருேம். இந்தத் தோஷமும் இவருடைய முன் ஜன்மத்தில் நேர்ந்ததாகும்.

குறிப்பு.—சந்திர லக்கினத்திற்குப் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் சனியும் ராகுவும் சேர்ந்திருப்பதையும், குரு சந்திரனுக்கு மூன்றில் இருப்பதையுங் கவனிக்கவும்.

18. வினையதைச் சொல்லு மென்ன வித்தகன் பூர்வம் தன்னில்
கனமுள காஞ்சி மேல்பால் கருநிய பனங்காட் டூரில்
அனையவே வைசியச் சேயாய் அவனுமே யுதித்து மேலும்
தனையனும் செட்டுச் செய்து தன்மனை புத்திரரு ண்டாய்.

18. ஜாதகருக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தில் சம்பவித்த பாவத்தைச் சொல்லுவீரென்று பார்வதி கேட்க, காஞ்சிமா நகரத்திற்கு மேற்குத் திக்கிலுள்ள பனங்காட்டூர் என்றக் கிராமத்தில் இவர் வைசிய குலத்திற் பிறந்து, வியாபாரஞ் செய்து, தன்னுடைய மனைவிக்குப் புத்திரர் கள் பிறந்து, அவர்களுடன்;

19. இன்னவன் வாழுந் நாளி லிவனுடைச் சிறிய அன்னை
உன்னத பணிதி ஒன்று உறுதின இவன்கை யீந்து
தன்னுடை நகரம் சார்ந்து தானவள் கொள்ளை யிட்டாள்
இவனிவை தெரிந்து மாது எழில்பணி வாங்க வந்தான்.

19. இந்த ஜாதகர் வாழுகின்ற காலத்தில், இவருடைய சிறிய தாயார் விலை யுயர்ந்த ஓர் ஆபரணத்தை இவரிடம் கொடுக்க, இவர் அதைப் பத்திரமாய் வைத்திருக்கிறேன் என்று உறுதிமொழி சொல்ல, அவள் தன் னுடைய பட்டணத்திற்குச் சென்று அவள் திருடினுள். இதை இந்த ஜாத கர் தெரிந்துகொண்டு அழகிய ஆபரணங்களை அவளிடமிருந்து வாங்கப் போனுர்.

1 அங்காரகன்

20. வந்தவன் தன்னை நோக்கி வந்திடும் பணிதி கேட்கத்
தந்ததோர் பணியும் வாங்கித் தன்னில்லம் வைத்தே னம்மா
தந்திர உபாயம் கற்றுச் சண்டாள னெவனோ வந்து
அந்தர மாகி யில்லத் தரும்பொருள் கவர்ந்து போனன்.

20. அவளிடம் சென்ற இந்த ஜாதகரைப் பார்த்து தான் இவரிடங்கொடுத்து வைத்திருந்த ஆபரணத்தைக் கேட்க, இவர், நீர் கொடுத்த ஆபரணத்தை வாங்கி நான் வீட்டில் வைத்தேனம்மா. தந்திரமும், உபாயமும் அறிந்த யாரோ ஒரு துரோகியான திருடன் ஆகாயத்தைப் பார்க்கின்ற, அஃதாவது பந்தோபஸ்தில்லாத என்னுடைய வீட்டிற்குள் நுழைந்து, அந்த அருமையான விலையுயர்ந்த ஆபரணத்தைத் திருடிக்கொண்டு போய் விட்டான் என்று சொன்னர்.

21. இன்னவாறு அன்னவன் சொல்ல இவளுமே திகிலடைந்து
உன்னிடம் வைத்து வைத்த உயர்நிதி பணியைக் கேட்க
என்னையும் வருத்தம் கொள்ள எத்தனை நாளி ருந்தாய்த்
தன்மக ளில்லா தாகித் தரித்திரம் யில்லா வாழ்ந்தான்.

21. ஜாதகர் இவ்விதமாய்ப் பதிலளிக்க, அவள் பயந்து நான் உன்னிடம் பந்தோபஸ்துக்காகக் கொடுத்து வைத்த அதிக திரவியம் பெறக்கூடிய ஆபரணத்தைத் திருப்பிக்கொடு என்று கேட்க, "நீ எனக்கு வருத்தம் உண்டாகும் படியாய் இப்படி பதிலளிக்க நீ எத்தனை நாள் காத்திருந்தாய்" என்று சொல்லிச் சாபித்தாள். இவர் முன் ஜன்மத்தில் தனக்குப் பெண் இல்லாமலும், தரித்திரம் இல்லாமலும் வாழ்ந்தார்.

22. மறுஜன்மம் தோன்றிய தான மைந்தனும் தனிய ஞகிப்
பெறும்சுதர் முதலில் பீடை புக்கிடு மென்று சொல்லி
மறுஅன்னை சொல்லி யேதான் வந்தனள் இல்லம் தன்னில்
திருமக னந்தி யத்தில் சென்றனன் காஞ்சிக் கேதான்.

22. இவ்விதமாக இந்த ஜன்மத்தை அடைந்த இந்த ஜாதகரைப் பார்த்து "நீ, ஆண் சகோதர மில்லாமல் தனியாக இருந்து கொண்டு நீ முதலில் பெற்றிடும் பிள்ளைகள் இறந்தும் வாழ்வாயாக", என்று சிறிய தாயார் முன்ஜன்மத்தில் சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் போய்ச் சென்றாள். இந்த ஜாதகர் முன் ஜன்மத்தில் அந்திய காலத்தில் காஞ்சிமா நகரத்திற்குச் சென்றார்.

குறிப்பு.—முன்பு 14-ஆவது பாடலில் ஜாதகருக்கு ஆண் சகோதரன் கிடையாது என்று சொல்லியிருப்பதை இங்குக் கவனிக்கவும்.

23. அறுமுகன் குமர கோஷ்டம் அதிகமாய் ஊழி செய்து
திருவிளக் கதிகம் வைத்து சிலருக்கு அன்ன மீந்து
குறைலிலா உள்ளூர் சென்று குறிப்புற காசத்தாலே
மறலி [1] யின் பதிக்குச் சென்று மால்மகன் [2] வரையப் பட்டு;

[1] எமன் [2] பிரம்மா.

23. ஜாதகர் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் காஞ்சீபுரத்திலுள்ள ஆறுமுகக் கடவுள் எழுந்தருளியுள்ள குமாரகோஷ்டம் என்ற கோயிலுக்குச் சென்று, விளக்குகளை அநேகமாகவும் அழகாகவும் வைத்து ஏற்றியும், சிலருக்குச்சாப்பாடு போட்டும், பிறகு தன் கிராமத்திற்குச் சென்று குறைவில்லாமல் வாழ்ந்து, கடைசியில் காச நோயால் இறந்து, எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமாவினுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ;

24. வந்தவ னிவளே என்றேம் மங்கைமுன் சாபம் தானும்
தங்கிடு மிவனுக் கேநான் தனியனாய் வாழ்வா னுகும்
முந்திய புதல்வர் தோஷ மெய்திடு மென்று சொன்னேம்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழி குன்றுது.

24. (இ-ள்) இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவர் ஜாதகர் என்று சொல்லுகிறேம். முன் ஜன்மத்தில் தன் சிறிய தாயார் கொடுத்தச் சாபம் இந்த ஜன்மத்தில் இவருக்கு வந்து சம்பவிக்கும். இவர் ஆண் துணை இல்லாமல் ஒண்டியாய் வாழ்வார். இவருக்கு முதலில் பிறக்கும் பிள்ளைகள் தவறாமல் இறந்து போய்விடும் என்று சொல்லுகிறேம். குமரக் கடவுளைப் பெற்ற பார்வதி யம்மையே ! நரங்கள் சொல்லும் வார்த்தைதவறு தாகும்.

25. அன்னையின் குணத்தைச் சொல்வேன் ஆளனுக் கினிய ளாகும்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பாள் கோப முண்டு
பின்புமே சாந்த முண்டு பித்தச் சூடுடைய ளாகும்
கன்னன மொழியே சொல்வாள் காதலி ஈகை கொஞ்சம்.

25. ஜாதகருடைய தாயின் குணதிசயங்களை இனிமேல் சொல்லுகிறேன். அவள் தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள். தான் சொல்லுகிற வார்த்தையே மேன்மையானதென்று சொல்லிச் சாதிக்குந் தன்மை வாய்ந்தவள். முன்னுல் கோபமுடையவள். பின்னுல் அந்தக் கோபந் தணிந்து சாந்தமடைவள். பித்தச் சூட்டு தேகமுடையவள். இனிப்பான வார்த்தைகளையே பேசுவாள். பிறருக்குக் கொடுக்குந் தன்மையுடையவள்.

26. அவள் ஆற தாகும் ஆண்துணை யில்லா தாகும்
பவமுள கன்னி மூன்று பருகிடு மிவளுக் கேதான்
அவனியில் துணைஆண் சேதம் நாட்டினீர் எது சொல்வீர்
தவசியே ஆறில் ராகு சார்ந்ததால் துணைஆண் தோஷம்.

26. இவள் ஆறும் பிறவியாகும். இவளுக்கு ஆண் சகோதரம் கிடையாது. மேன்மையான மூன்று சகோதரிகள் உண்டு. இவளுக்கு பூமியில் ஆண்துணை இறந்து போகும் என்று சொன்னீரே, அதற்குக் காரணத்தைச் சொல்வீர், என்று பார்வதியம்மை கேட்க, தவங்களைச் செய்யும் அம்மையே ! ஆறுவது பாவத்தில் ராகு இருப்பதால் இவளுக்கு ஆண் சகோதரம் இறந்துவிடும் என்று சொன்னேம்.

குறிப்பு.—மாதுர்ஸ்தானம் நான்காம் வீடாகிய துலாம். இந்தத் துலாத்திற்குச் சகோதர ஸ்தானமாகிய தனுசு ராசியில் ராகு இருக்கிறர். இந்தத் தனுசு, லக்னத்திற்கு 6-ஆவது பாவமாகிறது என்பதைக் கவனிக்கவும்.

27. இல்லமும் எதிர்வீ டாகும் இவள்பூர்வம் சொல்லக் கேளாய்
அல்லலை விலக்குங் காஞ்சி அதன்கீழ் பால் பேரூர் தன்னில்
நல்லசெங் குந்த வமிசம் நாயகி உதித்து மேலும்
தொல்லையு மில்லா தாகிச் சுகமுடன் வாழ்ந்தா ளென்றோம்.

27. ஜாதகருடைய தாயின் வீடு ஜாதகருக்கு எதிர்த்த வீடாகும். இவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றேன், கேளுமம்மா. இவள் துன்பத்தையும் பாபத்தையும் நிவிர்த்தி செய்யுந் தன்மையுடைய காஞ்சிமா நகரத்தின் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் செழித்திருந்த ஒரு செங்குந்த ஜாதி என்னும் கைக்கோளர் ஜாதியில் பிறந்து, கஷ்டங்க ளில்லாமல் சுகமாக வாழ்ந்தாள் என்று சொல்லுகிறோம்.

28. அவ்வூரில் வரனுண் டாகி அழகிய மதலை யுண்டாய்
பவ்வமாய் வாழுந் நாளில் பகருவோ மூழி தானும்
ஒவ்விய சோலை தன்னில் உற்றோர்கள் கூடி வேலை
திவ்விய மாது செய்யச் சேர்ந்ததூழ் சொல்லக் கேளாய்.

28. அவளுக்கு அந்தக் கிராமத்திலே புருஷன் ஏற்பட்டு, அழகான குழந்தைகளைப் பெற்று, நல்ல பருவமுடையவளாய் வாழ்கின்ற காலத்தில், அவளுக்கு வந்து நேர்ந்த ஊழ்வினையாகிய பாபத்தைச் சொல்லுகிறோம். இன்பத்தைத் தரக்கூடிய ஒரு தோப்பில், தன் பந்துக்களுடனும் சிநேகிதர் களுடனும் இந்த மேன்மை தங்கிய பெண் ஓர் ஆளாக வேலையைச் செய்யும்போது வந்து நேர்ந்தப் பாவத்தைச் சொல்லுகிறோம், கேட்பீராக.

29. குக்கல்கள் குற்றம் செய்யக் கோலினல் அடித்தா ளென்றோம்
துக்கமாய்க் கூச்ச லிட்டுச் சேர்ந்தது ஒன்று தானும்
முக்கிய மரண மெய்து முடிந்தது விதியு மென்றோம்
குக்கலின் தோஷம் தானும் குமரியை அணுகிற் றேதான்.

29. அப்போது நாய்கள் குற்றமானக் காரியங்களைச் செய்ய, இவள் ஒரு தடியினல் அவைகளை அடித்தோட்டினள். அவைகள் துன்பமடைந்து கூச்சலிட்டு ஓடின. அவைகளில் சிறந்ததான ஒரு நாய் தனக்கு ஆயுள் முடியவே இறந்து விட்டது என்று சொல்லுகிறோம். இந்த நாயினுடைய தோஷமானது இவளை இச் சென்மத்தில் வந்து அடைந்தது.

30. இதுவன்றி வேறு இல்லை யிவளுமே அந்தி யத்தில்
பெரும்பித்த பாண்டு வாலே புக்கினள் காலன் பக்கல்
சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ ளிவளே யென்றோம்
உறைந்தது குக்கல் தோஷம் ஒன்றெடி ஆணின் தோஷம்.

30. இந்தத் தோஷம் தவிர வேறு தோஷங் கிடையாது. இவள் முன் ஜன்மத்தில் தன்னுடைய கடைசிக் காலத்தில் பெரிய பலத்த பித்த பாண்டு நோய்கண்டு இறந்து, எமனிடம் சென்று, நான்கு சிரசுகளையுடைய நான்முகக் கடவுளாகிய பிரமாவினல் எழுதப்பட்டு, இச் சென்மத்தில்

வந்து இவள் பிறந்தாள் என்று சொல்லுகிறோம். முன்ஜன்மத்தின் நாய் தோஷம் இவளை இந்த ஜன்மத்தில் வந்து தாக்கியது. ஆண்களுக் குத் தோஷமுண்டாகும். பிரகாசமான வளையல்களை அணிந்த பார்வதி யம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—26-ஆவது பாடலில் ஆண்துணை இல்லை என்று சொல்லிய தைக்கவனிக்கவும்.

31. சுதர்களு முதலில் பீடை சேர்ந்திடு மென்று சொன்னோம்
விதியினு லிவள்பின் ஜன்மம் விளம்புவோம் விவர மாக
நதிபிறை அணிந்தோன் வாழும் ஆலங்காட் டதனிலே தான்
நதிருவு முதிப்பா ளாகும் நாயகி சுகமாய் வாழ்வாள்.

31. இவளுக்கு முதலில் பிறக்கும் ஆண்குழந்தைகள் இறந்து விடும் என்று சொல்லுகிறோம். இனிமேல் இவளுக்கு விஜயால் சம்பவிக் கின்ற மறுஜன்மத்தை விவரமாகச் சொல்லுகிறோம். கங்கா தேவியை யும், சந்திர பகவானையும் அணிந்த சிவபெருமான் வாழ்கின்ற திருவாலங் காடு என்ற திவ்விய க்ஷேத்திரத்தில் இவள் மறுஜன்மத்திற் பிறந்து சுகமாய் வாழ்வாள்.

32. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் வள்ளூர் தன்னில்
எந்தையே வைசியச் சேயா யிவனுமே யுதித்து மேலும்
முந்தியே செட்டு செய்து முயற்சியாய்க் குடும்பி யாகி
வந்தவர்க் கன்ன மீந்து மாநிலம் நல்லோ னுகி ;

32. இனிமேல் ஜாதகருடைய தகப்பனுருடைய முன்ஜன்மத் தைச் சொல்லுகிறோம். இவர் வள்ளூர் என்ற கிராமத்தில் வைசிய குலத் தில் பிறந்து, எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! மேலும் நாங்கள் சொல்வதைக் கேட்பீராக, மேல் மேலும் விருத்தியான வியாபாரஞ் செய்து, ஒரு குடும்பியாக இருந்து, தன்னை வந்து அண்டினவர்களுக்குச் சாப்பாடு போட்டு, இந்தப் பெரிய பூமியில் நல்லவர் என்று பெயரெடுத்து ;

33. தேவதா பக்தி கொண்டு தீமையாய்க் காலன் பக்கல்
மேவியே கஞ்ச[1] னாலே விண்ணினில் வரையப் பட்டுத்
தாவிய கங்கை சேயாய்த் தானவ னுதித்தா னென்றோம்
தீவினை யிவன்பின் ஜன்மம் செப்புவோம் கேளும் தாயே.

33. தெய்வ பக்தி உடையவராய்க் கஷ்டத்தை யடைந்து இறந்து எமனிடஞ் சென்று தெய்வ லோகத்தில் பிரமாவினல் எழுதப்பட்டு வேளாண்மைத் தொழிலையுடைய குலத்தில் ஆண்பிள்ளையாய்ப் பிறந்தார் என்று சொல்லுகிறோம். மேலும் கெட்ட வினைப்பயனுக உண்டாகும் இவரு டைய மறுஜன்மத்தைச் சொல்லுகிறோம். எங்கள தாயாராகியப் பார்வதி யம்மையே! கேட்பீராக.

[1] பிரமதேவர்.

34. தனிகையின் மேல்பா லாகச் சார்ந்ததோர் நகரம் தன்னில்
கனமுன ரெட்டி யாகிக் கனத்ததோர் பூமி யுண்டாய்
அனையவே மனைவி புத்திரர் அதிகமாய்க் கீர்த்தி பெற்றுச்
சினமிலா வாழ்வா னுகும் செல்வியே மேலுங் கேளே.

34. தனிகை என்ற திருத்தணிக்கு மேற்குத் திக்கில் அதை அடுத்துள்ள ஒரு பட்டணத்தில் பெருமையும் செல்வமுமுள்ள ஒரு ரெட்டியா ராகப் பிறந்து, அதிகமான பூமியுண்டாகி, மனைவி புத்திரர்கள் அதிகக் கீர்த்தி இவைகளை யடைந்து, கோபமில்லாமல் வாழ்வார் என்று சொல்லு கிறோம். ஐசுவரியத்தையுடைய பார்வதியம்மையே ! இன்னுங் கேட்பீராக.

35. ஜாதகன் யோகச் சேதி சாற்றுவோ மீரெட் டாண்டுகள்
மேதினில் பிறைபோல் யோகம் விளங்கிடும் வறுமை யில்லான்
நிதுக ளடையா னுகும் சதுஷ்பாதம் விருத்தி யாகும்
மாதவர்க் கன்ப னுகு மதிகபாக் கியமும் சேர்ப்பன்.

35. இனிமேல் ஜாதகருடைய யோக விஷயங்களைச் சொல்லு கிறோம். இவருக்குப் பதினாறும் வயது வரையிலும் பூமியில் வளர் பிறைச் சந்திரனைப் போல யோகம் விருத்தியாகும். இவர் தரித்திரம், கஷ்டம் இவைக ளில்லாதவர். இவருக்கு நாற்கால் ஜீவன்கள் அதாவது கால்நடைகள் விருத்தியடையும். இவர் ரிஷிகளிடம் அன்பும் சினேகமு முடையவராவர், அதிக தனத்தையுஞ் சேர்த்து வைப்பர்.

36. ஈரெட்டு ஆண்டு மேலே யெய்திடும் நிதிநி க்ஷேபம்
பாரிய குடும்பி யாவன் பலருக்கும் சகாயம் செய்வன்
ஊரெல்லாம் வசியம் கொள்வன் உலகிற்கு நல்லோ னுவன
தீரனுய் வாழ்வா னுகும் செல்வியே மேலுங் கேளே.

36. இவருக்குப் பதினாறு வயதிற்குப் பிறகு தனமும் புதையலும் வந்து சேரும். இவர் பெரிய குடும்ப முடையவராவர். அனேக ஜனங்களுக்கு உதவி செய்வார். கிராமங்களிலுள்ள எல்லோரும் இவருக்கு வசியமாயும் அனுகூலமாகவும் இருப்பார்கள். இவர் உலகிலுள்ளவர்களுக்கு நல்ல வராக விருப்பார். தைரியமாயும் வலுத்த குடியாயும் வாழ்வார். ஐசுவரியமுடைய பார்வதியம்மையே ! தலைவியே ! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

37. மாதுரு வர்க்கத் தாலே வந்திடும் சிலது பூமி
நீதியாய்ப் பணியும் செய்வன் நிகர்சோலை துரவு செய்வன்
ஏதுகா ரியம் செய் தாலும் இன்பமே யடைவா னுகும்
சூதினல் ஜயமே செய்வன் சொல்லது தப்பா தாமே.

37. ஜாதகருக்கு தன் தாயாரைச் சார்ந்தவர்கள் மூலமாகச் சில பூமிகள் வந்து சேரும். நியாயமாய்க் கோவில் வேலைகளையும் திவ்வியத் தொண்டுகளையும் இவர் செய்வார். பெருமை வாய்ந்த சோலை, தோப்பு,

துரவு இவைகளை உண்டாக்குவார். இவர் எந்தக் காரியத்தையுஞ் செய்ய எத்தனித்தாலும் அந்தக் காரியத்தைச் செய்து முடித்து இன்பத்தை அனுபவிப்பார். உபாயத்தால் ஜயத்தை அடைவார். தான் சொல்லுகிற வார்த்தையைத் தவறிடாமல் காப்பாற்றுவார்.

38. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிருபா னென்றில்
வந்திடும் கண்ட மென்றே மறுமுகன் தன்னால் நீங்கும்
பிந்தியே யிருபா னென்பான் புரட்டாசி மாதம் தன்னில்
எந்தையே கண்டம் நேரு மிம்மொழி தப்பா தாமே.

38. ஜாதகரின் தகப்பனுருடைய மரண காலத்தை இனிமேல் சொல்லு கிறோம். இவருக்கு இருபத்தோராவது வயதில் இவர் தகப்பனுருக்குக் கண்டம் நேரிடும் என்று சொல்லுகிறோம். ஆறுமுகக் கடவுளின் அருளால் இந்தக் கண்டம் நிவிர்த்தியாகும். பிறகு இருபத்தொன்பதாவது வயதில் புரட்டாசி மாதத்தில் தகப்பனுருக்குக் கண்டம் உண்டாகி மரணம் நேரிடும். எங்கள் தாயாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய இந்த வார்த்தை கள் தவருதாகும்.

குறிப்பு.—இந்தக் காலத்தில் ஜாதகருக்குச் சந்திர தசையில் புதன்புக்தி நடக்கின்றது. சந்திரன் பிதுர்ஸ்தானமாகிய மீனத்திற்குக் கண்டஸ்தான மாகிய சிம்மத்தில் இருக்கின்றார். புதன் பிதுர் ஸ்தானத்திற்கு மாரக ஸ்தானமாகிய கன்னிக்கு அதிபதியாகி, பிதுர்லக்கினத்தில் இருக்கிறார். இவைகளைக் கவனிக்கவும்.

39. அன்னைக்கு முப்பான் மூன்றில் ஆனிமா தத்தி லேதான்
பின்னமாய்க் காலன் பக்கல் புக்குவா ளென்று சொன்னேம்
இன்னவாறு முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
தன்தந்தை மூத்தோ னுக்குச் சாற்றுவீர் நிரியா ணத்தை.

39. ஜாதகருடைய தாயார் தனது முப்பத்து மூன்றாவது வயதில் ஆனிமாதத்தில் * நோய்வாய்ப் பட்டுப் பின்னமடைந்து, இறந்து, எமனிடம் போய்ச் சேருவாள் என்று சொல்லுகிறோம். இவ்விதமாக இந்த முனி வர் சொல்ல, பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகருடைய தகப்ப னுடைய மூத்தச் சகோதரனது † மரணத்தைச் சொல்லுவீர்.

*குறிப்பு.—இந்தக் காலத்தில் ஜாதகருக்குச் சந்திர தசையில் சூரிய புக்தி நடக்கின்றது. சந்திரன் மாதுருகாரகனுகி மாதுரு ஸ்தானமாகிய துலாத் திற்கு மாரகஸ்தானமாகிய 11-இல் சிம்மத்தில் இருக்கின்றார். கர்மஸ்தான மாகிய 10-இல் சூரியன் இருந்து மாதுருஸ்தானத்தைப் பார்க்கின்றார். இவை களைக் கவனிக்கவும்.

†குறிப்பு.— 5-வது பாடலைப் பார்க்கவும்.

40. அவர்பலனிரண்டில் சொல்வேன் யாவத்தும் விவர மாக
இவனுக்கு அறுப தாண்டில் எய்திடும் கூனி மாதம்
வளர்பிறைத் துவா தசி வந்திடும் கண்டம் தானே
சிவம்தனை பூசை செய்யும் செல்வதி [1]கேட்க லுற்றாள்.

[1] ஐசுவரிய முடையவள், தலைவி

40. அவருடைய (பெரியப்பனுடைய) பலனை விவரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறேன். ஜாதகருக்கு அறுபதாவது வயதில் பங்குனி மாதத்தில் வளர் பிறையில் துவாதசி திதியில் மரணம் நேரிடும் என்று முனிவர் சொல்ல, சிவ பெருமானைப் பூஜை செய்யும் ஐசுவரியமுடையவளும் தலைவியுமாகியப் பார்வதியம்மையார் பின்வருமாறு கேட்கிறார்.

குறிப்பு.— இந்தக் காலத்தில் ஜாதகருக்குக் குரு தசையில் சனி புக்தி நடக்கின்றது. குரு ஆருவது பாவாதிபதியாகி நான்கில் இருக்கின்றார். சனி மாரகஸ்தானங்களாகிய 7, 8-க்குடையவராய் 6-ஆவது பாவத்திலிருக்கின்றார். இவைகளைக் கவனிக்கவும். சிலசமயம் 6-ஆவது பாவாதிபதி கூட மாரகஞ் செய்து விடுவார். இங்கு, குரு மாரகஸ்தானமாகிய 2-க்குடைய சூரியனைப் பார்க்கின்றார். சம்ஸ்கிருத ஜாதக சந்திரிகை 26ஆ-வது சுலோகத்தையும், தமிழ்த் தாண்டவமாலை 25-ஆவது பாடலையும் வாசிக்கவும்.

41. இதுமத்தில் ஜாத கர்க்கு எய்தாதோ மார கங்கள்
பொதுமையாய்ச் சொல்லுகின்றேன் பிறந்தாண்டில் மூன்றில்
[எட்டில்
சதியினல் பத்தொன்பாண்டில் சார்ந்திடும் சிலது கண்டம்
எதுவித ரோகம் வந்து இலகாது என்று சொன்னேம்.

41. இந்த அறுபது வயதிற்கு முன்னே ஜாதகருக்குக் கண்டங்கள் நேரிடாவோ என்று பார்வதி கேட்க பொதுவாகச் சொல்லுகிறார். பிறந்த வருஷத்திலும் மூன்ருவது வயதிலும் கட்டியால் கண்டம் நேரிடும். மனைவி மூலமாய்ப் பத்தொன்பதாவது வயதில் சில கெண்டங்கள் நேரிடும். எந்தவிதமான நோய் வந்த போதும் அது பலக்காது என்று சொல்லுகிறோம்.

42. எப்படிப் பிணிகள் தீரும் இயம்புவீர் முனியே நீர் தாம்,
செப்புவேன் கேளு மம்மா சதுர்த்தகேந் திரத்தில் பொன்னேன்
ஒப்புட னிருப்ப தாலே உத்த மன் வயது தீர்க்கம்
தப்பிதம் வராது கண்டாய்ச் சடை முனி வாக்குதானே.

42. எந்தக் காரணத்தினுல் இடையில் வருகின்ற நோய்கள் தீர்ந்து விடும் என்று சொல்லுகின்றீர், அதைச் சொல்லும், முனிவரே நீர்! என்று பார்வதியம்மையார் கேட்க, சொல்லுகிறோம், பார்வதியம்மையே! அதைக் கேட்பீராக என்று முனிவர் சொல்லுகிறார். லக்கினத்திற்கு நான்காவது கேந்திரத்தில் குரு இருப்பதால் உத்தமரான ஜாதகருக்குத் தீர்க்கமான வயதுண்டு. ஜடைமுனியாகிய நான் சொல்லுகிற வார்த்தைகள் தவறிப் போகா, பார்வதியம்மையே! நீர் இதைக் சோதித்துப் பார்ப்பீராக.

குறிப்பு.—" மணிகண்ட கேரள ஜோதிடம் " என்ற அகஸ்தியர் அருளிச் செய்த ஜோதிட புத்தகத்தில் அரிஷ்டகாண்டம் 18-ஆவது பாடலைப்பார்க்கவும். " உலகினில் உதித்த பேர்கட் கொளிர்மதி........சாகவு மொட்டார் மாதே"

[1]. குரு

மேலும் " பிரதி அரிஷ்ட காண்டம், 40-ஆவது பாடலைப் பார்க்கவும் " பூரண பலத்தி னேடு புண்ணியர் சுபமே யாகிற்..........கொல்லுவார் கொஞ்ச நாளில். " மேலும் சூரியனுக்கு ஐந்தில் சந்திரன் இருக்கின்றார். புலிப்பாணி மகா முனிவர் செய்த "சோதிடம் முந்நூறு" என்ற புத்தகத்தில் 102-ஆவது பாடலைப் பார்க்கவும். மேலும் ஆயுள்விஷயமாய்ப் பத்தாவது பாவத்தைக் கூட கவனிக்கவேண்டும். இந்தப் பத்தாவது பாவமாகிய மேஷத்தைக் குரு நாலிலிருந்து பார்க்கின்றார். துய்ய கேரளம் எட்டாம் பாவம் 5-வது பாடலைப் பார்க்கவும். " நிலைவரம் பத்தோ னெட்டோன். ... என் பாரே. " ஆகையால் குரு நான்கில் இருப்பதைக் குறித்திருக்கின்றார்.

43. பின் ஜன்மம் வேங்க டத்துள்[1] பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னையும் கேட்க லுற்ருள் அவனிந்த ஜன்மம் தன்னில்
என்னபுண் ணியம்செய்தானும் இயம்புவீர் என்று கேட்கக்
கன்னன உமையே கேளாய் காவல னிச்சென் மத்தில்;

43. ஜாதகர் மறுஜன்மத்தில் வேங்கடம் என்று சொல்லப்பட்ட திருப்பதி க்ஷேத்திரத்தில் பிராமணராகப் பிறப்பார். அதன் பேரில் தாயாகிய பார்வதியம்மையார் பின் வருமாறு கேட்கின்றார். ஜாதகர் பிராமண குலத்திற் பிறப்பதற்கு இந்த ஜன்மத்தில் என்ன புண்ணியஞ் செய்தார்? அதைச் சொல்லும், என்று பார்வதி கேட்கவே, இன்பத்தைத் தருகின்ற பார்வதியம்மையே! நான் சொல்லுவதைக் கேட்பீராக, தன்னை அண்டினவரைக் காப்பாற்றுபவனுகிய இந்த ஜாதகர், இந்த ஜன்மத்தில் ;

44. தேவதா பக்தி கொண்டும் திருப்பணி வேலை செய்தும்
தாவிய வருவோ ருக்குத்தாகமு மன்ன மீந்தும்
ஆவலா யிருப்ப தாலே அவன்மறை குலமுதிப்பான்
நேமமாய்த் தவங்கள் செய்யும் நிமலியே கேட்டி டாயே.

44. தெய்வ பக்தியுடன் கோயில் வேலைகளையும் திவ்விய தொண்டுகளையும் செய்து, தன்னை நோக்கி வருபவர்களுக்குத் தாகமும் அன்னமும் கொடுத்து அவர்களிடம் ஆசையாயிருப்பதால், ஜாதகர் மறுஜன்மத்தில் பிராமணர் ஜாதியில் பிறப்பார். நியமமாய்த் தவங்களைச் செய்கின்ற சுத்தமான பார்வதியம்மையே! கேட்பீராக, என்று முனிவர் சொல்லுகிறார்.

குறிப்பு.—12-ஆவது பாடலைப் பார்க்கவும்.

45. பிறந்தசேய் ஜனன காலம் புகர்[2]தசை தனிலிருப்புச்
சிறந்திடு பதினு றுண்டும் திங்களும் நான்க தாகும்
நிரந்தரம் குடும்ப மோங்கும் நேர்ந்திடும் துணைவர் தாமும்
விரைவினில் பூமி சேரும் வித்தகி கேட்டி டாயே.

45. இந்த ஜாதகர் பிறந்த காலம் சுக்கிரதசை ஆகும். அதில் இனிச் செல்ல வேண்டியது வருஷம் பதினுறு, மாதம் நான்கு ஆகும்.

[1]. திருப்பதி. [2]. சுக்கிரன்.

இவருடைய குடும்பம் எப்போதும் விருத்தியாகும். இவருக்குச் சகோதரர்கள் பிறப்பார்கள். சீக்கிரத்தில் பூமி வந்து சேரும். ஞானமுடையவளாகிய பார்வதியம்மையே ! நரங்கள் சொல்லுவதைச் கேட்பீராக.

46. அன்னையின் துணைவர் சேதம் அவன்தந்தை வர்க்கம் சூதம்
பின்னமாம் காலி தானும் பேசுவோம் களவு கொஞ்சம்
அன்னையின் தந்தை பீடை அறைகிரேும் விவரம் ரண்டில்
இந்திர னிறைஞ்சு மாதே யியம்பின மொழிகுன் ருவே.

46. இந்தச் சுக்கிரமகா தசை காலங்களில் ஜாதகருடைய தாயாருடைய சகோதரர்கள் மரணமடைவார்கள். ஜாதகருடைய தகப்பன் வர்க்கத்தில் சூதகம் வந்து நேரிடும். பசுக் கூட்டங்களுக்குக் கெடுதி நேரிடும். திருட்டு சிறிது நேரிடும். தாயாருடைய தகப்பனுக்குக் கஷ்டமும் நோயும் வரும். மற்றவைகளை விவரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம், தேவேந்திரன் வணங்கித் தொழுகின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 54

1. கடகலக் கினம தாகக் கேதுவு மிரண்டிலேற
உடுபதி[1] புகர்[2] பொன்[3] னறில் உதயனும்[4] புதனு மேழில்
முடவனும்[5] ராகுமெட்டில் மங்கலன்[6] அஞ்சி லேற
அடவுடன் பலன்க ளெவ்வாறு அறிவிப்பீர் முனிவரேநீர்.

சனி ராகு	இராசி சக்கரம்		லக்கினம்
சூரியன் புதன்			கேது
குரு சுக்கிரன் சந்திரன்	அங்காரகன்		

மூலம் - 3 - ஆம் பாதம் கேது தசை 2-8-0.

1. ஜன்ம லக்கினம் கடகமாகிக் கேது இரண்டிலும், சந்திரன், சுக்கிரன், குரு இவர்கள் மூவரும் ஆறிலும், சூரியனும் புதனும் ஏழிலும் சனியும் ராகுவும் எட்டிலும், அங்காரகன் ஐந்திலும் இருந்தால், பலன்கள் எவ்விதமாகும் என்பதை முனிவரே, நீர் சொல்லுவீராக.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும்—மேஷத்தில் குரு, சுக்கிரன், ராகுவும், மிதுனத்தில் சந்திரனும், சிம்மத்தில் அங்காரகனும், துலாத்தில் கேதுவும், விருச்சிகத்தில் சனியும், மகரத்தில் சூரியனும், மீனத்தில் புதனும் ஆகும்.

2. பிருகுவுமே புகலு கின்றுர் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலு மேல்பால் நோக்கம்
அரன்கோஷ்டம் மேல்பா லாகும் ஆதியில் வடமேல் தங்கும்
நரிவாக னத்தா ளுத்திரம் நல்கிய பேரூர் தன்னில்

2. பிருகுமகாரிஷி சொல்லுகின்றுர்; பிறந்திடுங் குழந்தை ஆணகை ஜனிக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவிலுள்ளது, அதனுடைய வாயிற்படி மேற்குத் திக்கைப் பார்த்திருக்கும். சிவன் கோயில் மேற்கே

1 சந்திரன். 2 சுக்கிரன். 3 குரு. 4 சூரியன். 5 சனி. 6 அங்காரகன்.

இருக்கும். ஆதி தேவனுகிய விஷ்ணுவின் கோயில் வடமேற்கிலிருக்கும். துர்க்கையின் கோயில் வடக்கிலிருக்கும். இப்படிப்பட்ட அடையாளமுள்ள விடத்தில் ஒரு பெரிய கிராமத்தில் ;

3. உதிப்பனு மிந்தப் பாலன் உத்தம யோகச் சேதி
மதிநுத லன்னை யோகம் அவன்துணை களத்திர யோகம்
சதியிலா முன்பின் ஜன்மம் சாற்றுவோ மிந்நூல் தன்னில்
அதிதி[1] யை ஆத ரிக்கும் அம்பிகை யாளே[2] கேளாய்.

3. இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய நல்லயோக விஷயங்களையும் சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய தாயினுடையவும் இவருடைய சகோதரங்களுடையவும் யோகங்களையும், இவருடைய களத்திரத்தின் யோகத்தையும் இவருடைய முன் ஜென்மம், பின்ஜென்மம் இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறேம், பரதேசிகளைக் காப்பாற்றும் பார்வதி யம்மையே ! கேட்பீராக.

4. தந்தைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு மினையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்துவோ மிவனின் தந்தை
ஒதுவேன் துணைவர் தம்மை உண்மையா யாண்பால் ரண்டு
காதலி மார்க ளவ்வாறு கழறுவோம் கனியே கேளும்.

4. இந்த ஜாதகர், தன்னுடைய தகப்பனுருடைய இரண்டு மனைவிகளில் இரண்டாவது மனைவிக்குப் பிறந்தவராவர். இவருடைய தகப்பனுருடைய விஷயங்களைச் சொல்லுகிறேம். தகப்பனுருடன் பிறந்தவர்களைச் சொல்லுகிறேம். அவர்கள் இரண்டு ஆண்களும், அவ்வாறே அஃதாவது இரண்டு பெண்களும் ஆவார்கள் என்று சொல்லுகிறேம். பார்வதி யம்மையே ! கேட்பீராக.

5. மற்றவை சேத மெய்தும் வரைகிறேம் பிதாகு ணத்தைக்
குற்றத்தை மனத்தில் வைய்யான் கொடுமையை எவர்க்கு
[மெண்ணுன்
சுத்தவா னிரு நிறத்தான் தொல்புவி கிருஷி செய்வன்
சத்திய மென்ரு லச்சம் தையரிய மனத்தா னுமே.

5. மற்றச் சகோதரங்கள் இறந்து போய்விடும். தகப்பனுடைய குணுதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேம், அவர் கெட்ட விஷயங்களை மனத்தில் நினைக்கமாட்டார். கொரேமானக் காரியங்களை எவருக்குஞ் செய்ய எண்ணமாட்டார். பரிசுத்தமானவர். இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமான தேகத்தை யுடையவர். பழைய பூர்விகமானப் பூமிகளைப் பயிரிடுபவர். சத்தியத்தின் பேரிலே நோக்கமுடையவர். தைரியமான மனத்தையுடையவர் ஆவார்.

6. மனைவியால் பெருமை யேற்பன் வரு வோரை ஆதரிப்பன்
சினமுண்டு உடனே தாழ்வு சதுஷ்பாதம் விருத்தி செய்வன்
கனமுள குடும்ப மேற்பன் கஞ்சமாம்[3] ரேகை யுண்டு
துணைவரைப் பிரிதல் செய்வன் தோகையில் வாழ்வா னுகும்.

[1] பரதேசி. [2] பார்வதி. [3] கமலம், தாமரை.

6. தகப்பனுர் தன்னுடைய மனைவியால் நல்ல அந்தஸ்தையும் பெருமையையும் அடைவார். தன்னிடம் வந்து அண்டினவர்களைக் காப்பாற்றுவார். இவருக்குக் கோபம் வரும். ஆனுல் அது உடனே தணிந்து அடங்கிவிடும். இவர் நாற்கால் ஜீவன்களாகிய ஆடு மாடுகளை விருத்தியாக்குவார். பெரிய குடும்பத்தையுடையவர், தன் உள்ளங்கையில் கஞ்சரேகை என்ற கமலரேகையை உடையவர். தன்னுடைய சகோதரர்களிடமிருந்து பாகப் பிரிவினை செய்து கொண்டு, அவர்களை விட்டுப் பிரிந்து, தன்னுடைய மனைவியின் வீடுபோய் சேர்ந்து, அவ்விடத்தில் வாழ்வார்.

7. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைக் கேண்மோ அழகுளான் மா நிறத்தான்
தன்னுடல் சமமாம் நீட்சி தரணியால் உய்வ னுகும்
பின்ன மில்லாத தேகி பொருத்தமா யுரைப்பா னுகும்.

7. நாங்கள் இப்போது சொல்லிய இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணத்தைச் சொல்லுகிறேம். கேட்பீராக. இவர் அழகுள்ளவரா யிருப்பார். மா நிறமுள்ள தேக முடையவர். நடுத்தரமான உயரமுடையவர். பூமியால் ஜீவிப்பார், அங்கவீன மில்லாத தேக முடையவர். பொருத்தமாகப் பேசுவார்.

8. முகமதில் வடுவு காணும் முன்கோபி மூலச் சூடு
அகமது மிரண்டுண் டாகும் அன்னையால் லாப மெய்தும்
இருபூமி பின்னுல் சேர்ப்பான் முயர்வான குடும்ப மேற்பன்
ஜகமதில் நல்லோ னுவன் செய் நன்றி மறவா னுகும்.

8. ஜாதகருடைய முகத்தில் அடையாளங்களுண்டு. இவர் முன்கோப முடையவர். மூலச்சூடு என்ற நோயையுடையவர். இவருக்கு இரண்டு வீடுகள் கிடைக்கும். இவருடைய தாயாரால் இவருக்கு அனுகூலங்களுண்டு. பொருளுண்டு. இரண்டு பூமிகளைத் தன் பிற்காலத்தில் அடைவார். பெருமையுள்ள குடும்ப முடையவர். உலகத்தில் நல்லவரென்று பெயரெடுப்பார். தனக்குப் பிறர் செய்த நன்றியை மறக்கமாட்டார்.

9. கல்வியும் சமம தாகும் கடந்தோர் மேல்பிரிய மில்லான்
இல்லையென் றுரைக்க மாட்டான் எதிரியை லகுவில் வெல்வன்
வெல்லும் சொல் உடைய னுகும் வீண்வம்பு கலாபுனுகும்
சல்லியம் கொள்ளா னுகும் சங்கையான மனத்தா னென்றேம்.

9. ஜாதகருக்கு நடுத்தரமான வித்தை யுண்டு, இறந்து விட்டவர்களைப்பற்றி நினைக்கமாட்டார். தன்னை மீறி நடந்தவர்களிடம் ஆசையில்லாதவர். தன்னை வந்து கேட்டவர்களுக்கு இல்லை என்று சொல்லமாட்டார். தன் எதிரியைச் சுலபமாக வென்று விடுவார். பிறரைத் தன வசப்படுத்தும்படியான இன்பமான சொற்களை உபயோகப்படுத்துவார். வம்பு, சண்டை முதலியவைகளை விளைவிக்கக்கூடிய வீண் வார்த்தைகளைச் சொல்லமாட்டார், கடன் வாங்கமாட்டார், சந்தேகமான, அச்சமான, மனத்தை உடையவர் என்று சொல்லுகிறேம்.

10. சிறுத்தவர்க் குதவி செய்வன் சிறுதீனிப் பிரிய ருரும்
பொறுத்தமாய்ப் பேசு வானும் புகலுவான் கட்டு வார்த்தை
துரிதமாய் நடக்க வல்லன் சோலைகள் கூவல் [1] செய்வன்
மர்மமு முடையா னுவன் மங்கையர் மோக னுவன்.

10. சிறியர்களுக்கும் ஏழைகளுக்கும் ஜாதகர் உதவி செய்வார். அவர் சிற்றுண்டியில் ஆசையுள்ளவர். பொருத்தமாகப் பேசுவார். புனைந்த வார்த்தைகளையும் பொய்யையும் சொல்லுவார். வேகமாக நடக்குஞ் சக்தியுள்ளவர். சோலைகள், தோப்புக்கள், கிணறுகள் இவைகளை உண்டாக்குவார். மர்மமான மனதுடையவர். பெண்களின் பேரில் ஆசையுடையவர்.

11. தன்துணை ஆண்பால் ஒன்று சத்திமார் மூவ ராகும்
பின்பாகம் அவர்கள் சேதி பேசுவோம் கனியே கேளும்
இன்னவன் மணத்தின் கால மியம்புவோமீ ரொன் பானில்
கன்னிகை உத்திரத்தில் கலப்பளாம் குணத்தைச் சொல்வேன்.

11. ஜாதகருக்குச் சகோதரர்களில் ஆண் ஒன்றும், பெண்கள் மூன்றும் உண்டு. இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னல் சொல்லப் போகிற பாகத்தில் சொல்லுவோம். பார்வதியம்மையே! கேட்பீராயாக, இனிமேல் ஜாதகருடைய விவாகம் நடக்குங் காலத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். ஜாதகருக்குப் பதினெட்டாவது வயதில் மனைவி வடக்குத் திக்கிலிருந்து வந்து வாய்ப்பாள். அவளுடைய குணநிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன்.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஞ்ப 17-0-0 முதல் ஞ்ப 18-0-0 வரையிலும் சுக்கிர தசையில் சனி புக்தி நடக்கிறது. களத்திரத்திற்குச் சம்பந்தமான பாவங்கள் 2-7-9-11. களத்திரகாரகனும் போகஸ்தானமாகிய நாலாம் பாவத்திற் கதிபதியுமாகிய சுக்கிரன் 11- க்குடையவராய் லக்னுதிபதியாகிய சந்திரனுடன் சம்பந்தம், சனி ஏழுக்குடையவராய்ப் போக்காரகனுகிய ராகுவுடன் சம்பந்தம். ஆகையால் இக்காலத்தில் விவாக யோகமிருக்கிறது. ஏழிலிருக்கும் புதன் வடக்குத் திக்கிற்கு அதிபதியாகும்.

12. மாந்தளிர் மேனி யாகும் மறுத்துரை அதிகம் கூருள்
சாந்தவாள் முன் கோபத்தாள் சரசமாய் வார்த்தை யுண்டு
சேர்ந்தவர் தம்மைக் காப்பாள் சீலியாம் பித்த தேகி
யேந்திழை[2] யோகசாலி மிடரான புத்தி யில்லாள்.

12. ஜாதகருடைய மனைவி மாந்துளிர் என்னும் இளமையான மாவிலையின் நிறம்போன்ற ஒரு வகைச் சிகப்பு நிறமுள்ளவள். மறுத்துத் தவரான வார்த்தைகளை அதிகமாகச் சொல்லமாட்டாள். சாந்தமானவள், முன் கோபமுள்ளவள். இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். தன்னிடம் வந்து அண்டினவர்களைக் காப்பாற்றுவாள். நற்குணங்களுடையவள். பித்த தேகமுடையவள். யோகமுடைய பெண், துன்பத்தை, ஆபத்தை விளைவிக்கக் கூடிய கெட்ட புத்தியில்லாதவள்.

---

[1] கூபம், கிணறு. [2] பெண்.

13. பால்பாக்கிய முடையா ளாகும் பசித்தோர்க்கு அன்ன மீவள்
மால்மனை[1] வாச மெய்தும் வாக்குச்சொல் காப்பா ளாகும்
ஞாலம் மேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக் கேத்தோள்
காலத்தை அறிந்து வாழ்வள் காதலி தீர்க்க ஜீவி.

13. ஜாதகருடைய மனைவி பால்பாக்கிய முடையவளாவாள். பசி என்று சொல்லிவந்து கேட்பவர்களுக்குச் சாப்பாடு போடுவாள். விஷ்ணுவின் மனைவியாகிய இலக்ஷிமி இவளிடம் வாசஞ் செய்வாள். இவள் தான் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவாள். பூமியில் நல்லவளாயிருப்பாள். தன் புருஷனுடைய மனத்திற் தகுந்தபடி நடந்து கொள்வாள். காலங்களை அறிந்து அந்த அந்தக் காலத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்வாள். இந்த அன்புடைய மனைவி நீண்ட ஆயுளை யுடையவள்.

14. ஜயமுனி யிதனைக் கேட்டுச் செப்புவார் சங்கை யொன்று
வியமாகு முதல் மனைதான் மேவிடு மிரண்டாம் பாரி
பயமிலா சொன்ன சங்கை பகருவீர் விவரம் தன்னை
நயமிலா ஏழோ னெட்டில் ராகுவும் கூடி நிற்க;

14. இவ்விதமாக மனைவிக்கு ஆயுள் தீர்க்கம் என்று சொன்னதைக் கேட்ட ஜயமுனி என்பவர் ஒரு சந்தேகத்தைச் சொல்லுவார். ஜாதகருக்கு முதல் மனைவி விரையமாகிவிடும். அதன் பேரில் இரண்டாவது மனைவி நேரிடும். நீர் பயமில்லாமல், அஃதாவது சந்தேகமில்லாமல் சொல்லிய விஷயத்தைப்பற்றி விவரமாகச்சொல்லுவீர் என்று கேட்க ஜயமுனி சொல்லுவார். ஏழாம் பாவத்திற்குடைய சனி ராகுவுடன் எட்டில் நன்மையைச் செய்யக் கூடாதவராய்ப் பலவீனமாயிருப்பதாலும் ;

15. ஆரனும்[2] அவரைப் பார்க்க அறைந்தனம் தாரம் ரண்டு
கூறுவார் பராசர் தாமும் சூரியன்[3] ரவியு [4]மேழில்
பாருளோன்[5] ஆட்சி யாகப் பற்றுது தாரம் ரண்டு
நாரி[6]க்குச் சிலது நோய்கள் நல்கிப் பின் நிவிர்த்தி யாகும்.

15. அந்தச் சனியை அங்காரகன் பார்ப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு தாரம் என்று ஜயமுனி சொல்ல, பராசர முனிவர் சொல்லுகிறர், கூர்மையான புத்தியையுடையவராகிய புதனும் சூரியனும் ஏழில் இருப்பதாலும் அங்காரகன் ஆட்சியாய் இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவி கிடையாது. ஆனல் மனைவிக்குச் சில நோய்கள் வந்து பிறகு அவைகள் நிவிர்த்தியாகிவிடும்.

16. குமலிக ளுதிக்கும் காலே கோதைக்குப் பிணிஅ னேகம்
மருவிப்பின் நிவிர்த்தி யாகும் மறலியைக் காணு ளாகும்
அரிவை[7]மாரனேகம் பேரை அவனுமே போகம் செய்தான்
வரனின்றி மாதுவும் தாழ்ந்து மாதரைப் போகம் செய்வன்.

---

[1] இலக்ஷிமி. [2] அங்காரகன். [3] புதன்.
[4] சூரியன். [5] அங்காரகன். [6] பெண்.
[7] இருபத்தைந்து வயதுள்ள பெண்.

16. ஜாதகருடைய மனைவிக்குப்[1] பிரசவங்கள் நேரிடுகின்ற காலங்களில் அநேக நோய்கள் கண்டு, பிறகு அவைகள் நிவிர்த்தியாகும். ஆனால் அவள் எமனைத் தரிசிக்கமாட்டாள். அதாவது அக்காலங்களில் இறக்க மாட்டாள். ஜாதகர் இருபத்தைந்து வயதுள்ள அனேகப் பெண்களிடம் சம் போகஞ் செய்வார். புருஷன் இல்லாததால் சம்மதிக்கும் பெண்களிடம் சம்போகம் செய்வார்.

17. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடும் முதலில் சேதம்
சதமுட ளுண்பால் ரண்டு சத்திமார் மூவர் தீர்க்கம்
எதுவிதக் கார ணத்தால் வியம்பினீர் முதலில் தோஷம்
புதல்வர்தா னத்தில் சேயும்[1] பொருந்தியும் காரி[2] பார்க்க ;

17. ஜாதகருக்கு எட்டுக் குழந்தைகள் பிறக்கும். முதலில் சில குழந்தைகள் இறந்துவிடும். ஆண் குழந்தைகள் இரண்டுபேரும், பெண் குழந்தைகள் மூன்றுபேரும் தீர்க்கமான ஆயுளுடையவர்களாயிருப்பார்கள். எந்தக் காரணத்தினாலே முதலில் பிறக்குங் குழந்தைகளுக்குத் தோஷ முண்டென்று சொன்னீர்? என்று கேட்கப், புத்திரஸ்தானமாகிய ஐந்தில் அங்காரகன் இருப்பதாலும், அவரைச் சனி பார்ப்பதாலும்.

18. சொல்லினே மந்தச் சங்கைச் சுதனுட பூர்வம் கேளாய்
எல்லையி லுயர்வதான எழில் கொங்கு நாட்டிலேதான்
நல்லதோர் வைசிய னுக நாயக னுதித்து மேலும்
மெல்லியும்[3] மதலை யுண்டாய் வணிபங்கள் பலமாய்ச் செய்து ;

18. அச்சத்தை விளைவிக்கக்கூடிய இந்தத் தோஷத்தைச் சொன்னோம். இனிமேல் ஜாதகருடைய முன்ஜென்மத்தைப்பற்றிச் சொல்லு கிறோம். அதைக் கேட்பீராக. பூமியில் மேன்மைதங்கிய அழகிய கொங்கு தேசத்தில் நல்ல ஒரு வைசியனாக ஜாதகர் பிறந்து, மனைவியையும் குழந்தை களையும் உடையவராகி வியாபாரங்களை அதிகமாகச் செய்து.

19. தேவதா பத்தி யாகித் தேடினேர்க் கன்ன மீந்து
இல்லத்தில் மனம் வையாமல் பரவுப கார னுயும்
தாவினன் கால னுடு சதுர்முகன் வரையப் பட்டு
ஆவலா யிக்கு லத்தில் அணுகினன் என்று சொல்வோம்.

19. தெய்வபக்தியுடையவராகித் தன்னைத் தேடிவந்தவர் களுக்குச் சாப்பாடுபோட்டுத் தன் குடும்பத்தின்பேரில் நோக்கமில்லாமல் பிறருக்கு உபகாரஞ் செய்பவராய் வாழ்ந்து இறந்து எமபட்டணம் போய்ச் சேர்ந்து, நான்கு முகங்களுடையவராகிய பிரமாவினால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஆசையாய் இந்த ஜாதியில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறோம்.

20. வந்தவன் யோகச் சேதி வரைகிறேம் தாயே கேளும்
முந்திநாள் யோக மில்லான் மேதினில் வறுமை காணன்
பிந்திநாள் பிறைபோல் யோகம் பொருந்திடும் நிதியும் பூமி
கந்தன்தன் அருளி னாலே கலக்கங்கள் காண ளுகும்.

[1] அங்காரகன். [2] சனி. [3] பெண், மனைவி.

20. இவ்விதமாக வந்த ஜாதகருடைய யோக விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகிறோம். தாயாகிய பார்வதியம்மையே கேட்பீராக, இவருடைய வாழ்நாளில் முற்பாகத்தில் இவருக்கு யோகம்கிடையாது. ஆனால் வறுமை என்ற தரித்திரமும் கிடையாது. பிற்பாகத்தில் இவருக்கு யோகம், அஃதாவது செல்வம் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்கு நாள் அதிகப்படும். தனமும் பூமியும் அதிகப்படும். முருகருடைய கிருபை யால் ஜாதகர் கஷ்டங்களையும், துன்பங்களையும் அடையமாட்டார்.

21. மால்மனை கணேசன் போலே மருவுவா னிந்தப் பாலன்
சாலவே அன்னை ஆஸ்தி சார்ந்திடு மென்று சொல்வோம்
மூலமாம் பொருளு நேரும் மொழிகுவீர் காலம் தன்னைப்
பாலனுக் கெண்ணுன் காண்டில் பற்றுமே நிதிநிட் சேபம்.

21. ஜாதகர் மகாவிஷ்ணுவின் வீட்டிற்கு அவர் மருமகனாகிய விநாயகக் கடவுள் போவது போலத் தன் மாமியார் வீட்டிற்குப் போய்க் கலந்துவிடுவார். இவருக்குத் தாயாருடைய ஆஸ்தி வந்தடையும் என்று சொல்லுகிறோம். மூலாதாரமானச் சொத்துகளும் பொருள்களும் வந்து அடையும் என்று சொல்ல, அவைகள் வந்து நேரக்கூடிய காலத்தைச் சொல்லுமென்று கேட்க, ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது * வயதில் தனமும், புதையலும் வந்துசேரும்.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயது வருஷம் 31 முதல் வருஷம் 32 வரையிலும் சந்திர தசையில் ராகு குரு இவர்களுடைய புக்திகள் நடக் கின்றன. லக்கினத்திற்கு 6–7-ல் நைசர்க்கிக சுபர்கள் இருப்பதால் இது "லக்கினாதி யோக ஜாதகமாகும். ஆனால் அங்காரகன் 5-இல் இருப்பதால் ஜாதக சந்திர ஹோரை என்னும் சந்திரகலா நாடி-தேவகேரளத்திற் சொல்லியபடி அதியோகம் சிறிது குறைவுபடும். இந்த யோகத்திற் சம்மந்தப்பட்டக் கிரகங்களில் சுக்கிரன் மாதுருஸ்தானாதிபதியாகும், சந்திரன் மாதுருகாரகன், குரு பாக்கியாதிபதி ஆகும். இவைகளைக் கவனிக்கவும். இதற்குக் கேசரி யோகமும் இருக்கிறது. ஜாதக அலங்காரம் 274–276-ஆவது பாடலையும், ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 114, 115, 116, 117-ஆவது சுலோகங்களையும், கஜகேசரியோகம், லக்கினாதியோகம் இவைகளைப் பற்றிப் பார்க்கவும்.

22. காரணம் யாது என்னக் காரி[1] சேய்[2] பொன்னேன்[3] தானும்
சிரமாய் நான்கு வீட்டில் சேர்ந்ததோர் கிரகத் தாலே
கூறுகேதார யோகம் குலமதிப் புடனே வாழ்வன்
பாரினில் புகழு மேற்பன் பார்வதி கேட் டிடாயே.

22. என்ன காரணம் என்று கேட்க சனி அங்காரகன், குரு இவர்களும் மற்றக் கிரகங்களும் நான்கு வீட்டிற்குள் வரிசையாய்ச் சேர்ந்தாப் போல் இருப்பதால் "கேதாரயோகம்" என்ற ஒருவித யோகம் உண்டு

[1] சனி. [2] அங்காரகன். [3] குரு.

என்று சொல்லுகிறோம். ஆகையால் ஜாதகர் தன் குலத்தோர்கள் மதிக்கும் படி வாழ்வார். பூமியில் கீர்த்தியை யடைவார். பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—"கேதாரயோகம்" என்பது எல்லாக் கிரகங்களும் (அஃதாவது ராகுகேது தவிரமற்ற எல்லாக் கிரகங்களும்) நான்கு ராசிகளிலிருப்பதாகும். சம்ஸ்கிருத சதயோகமஞ்சரியில் 92-ஆவது யோகமாகும். தமிழ் ஜாதகாலங்காரம் 321-ஆவது பாடலையும், தமிழ் ஜாதக சிந்தாமணியில் 2042-ஆவது பாடலையும் பார்க்கவும். இந்த யோகம் லக்கினத்தைப்பற்றி ஒன்றுஞ் சொல்லாதயோகமாகும். சமஸ்கிருத சாராவளி என்ற கிரந்தத்தில் 21-ஆவது அத்தியாயத்தில் 19-ஆவது, 49-ஆவது சுலோகங்களையும் பார்க்கவும். ஜாதக சாரதீபம் 62-ஆவது அத்தியாயம், 35-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும்.

23. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அவளிரு நிறத்தா ளாகும்
தன்னுடல் பித்தவாயு தங்கிடும் கோப மேற்பள்.
அன்னியர் குற்றம் சொல்லாள் அடைந்தோரை ஆத ரிப்பள்
அன்னமு மன்பா யீவள் அணுகிடும் தந்தை நோயும்.

23. ஜாதகருடைய தாயின் குணதிசயங்களைச் சொல்லுகிறேன். அவள் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமான தேகமுடையவள். பித்தவாயு உள்ளவள். கோபமுள்ளவள். பிறர்பேரில் குற்றமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். அவளை வந்து அண்டினவர்களைக் காப்பாற்றுவாள். சாதமும் பிறருக்குச் சந்தோஷமாய்க் கொடுப்பாள். அவளுடைய தகப்பனுடைய நோய் அவளுக்கு வந்து நேரும்.

24. அன்னையி னூர்ஜிதங்கள் அணுகிடும் பாவைக் கேதான்
தன்துணை ஆண்பால் ரண்டு தங்காது ஒன்று தானும்
கன்னிகை ஒருத்தி தீர்க்கம் காளைகள் ஆணுக் கில்லை
முன்துணைபாரி[1] யாகும் வித்தகி கேட்டி டாயே.

24. இவளுக்குத் தன்னுடைய தாயாருடைய ஆஸ்திகள் வந்து சேரும். இவளுடன் கூடப் பிறந்தவர்கள் ஆண் இரண்டு. இதில் ஓர் ஆண் இறந்துவிடும். ஒரு பெண் தீர்க்க வயதுள்ளவளாயிருப்பாள். ஆண் சகோதரத்திற்கு ஆண் குழந்தைகள் கிடையா. இவளுக்கு முந்திய சகோதரன் பெரியோன் ஆவன். ஞானத்தையுடைய பார்வதியம்மையே! கேட்பீராக.

25. மாதுரு பூர்வம் சொல்வேன் வடமலை[2] கீழ்ப் பாலாகக்
காதலி ரெட்டி வமிசம் கலந்துமே வறுமை யின்றிப்
போதன மதிக[3] முண்டாய்ப் புண்ணிய மதிக மின்றிக்
காதலி வாழ்ந்து மேதான் கணவன்முன் மரண மாகி;

[1] பெரியோன். [2] திருப்பதி, இமயமலை. [3] அறிவு.

25. ஜாதகருடைய தாயின் பூர்வ ஜென்மத்தைச்சொல்லுகிறேன். இவள் திருப்பதிக்குக் கிழக்கில் ஒரு ரெட்டியார் ஜாதியில் பிறந்து தரித்திரம் இல்லாமல் அறிவு அதிகமுண்டாகி அதற்கேற்றப் புண்ணியம் அதிகமில்லாமல் வாழ்ந்து, தன் புருஷனுக்கு முந்தி இறந்து.

26. வந்தவ ளென்று சொல்வோம் மாதுரு இல்லம் வாழ்வள்
பிந்திய ஜன்மம் சொல்வோம் பிருதிவி[1] தன்னி லேதான்
இந்ததோர் குல முதித்து எழிலான குடும்பி யாகி
அந்தவள் வாழ்வா ளாகும் அம்பிகை யாளே கேளாய்.

26. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவள் என்று சொல்லுகிறோம். இவள் தன்னுடைய தாய் வீட்டிலேயே வாழ்ந்து காலத்தைக் கழிப்பாள். இவளுக்கு மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேன். பிருதிவிஸ்தலமாகிய காஞ்சிமாநகரத்தில் இந்த ஜாதியில் பிறந்து மேன்மையான குடும்பமுடையவளாய் வாழ்வாள் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

27. தந்தையின் பூர்வம் சொல்வேன் செந்தி மா[2] மலைநாட் டன்னில்
வந்தனன் வன்னிய சேயாய் மனைவி மைந்தரு முண் டாகி
முந்தினோர் தொண்டு பூண்டு மேதினில் கிருஷி செய்து
நொந்தபேர்க் கன்ன மீந்து நிமலனும் பவமில் லாமல்;

27. ஜாதகரின் தகப்பனுருடைய முன் ஜென்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். திருச்செந்தூரை அடுத்தப் பெரிய நாட்டில் வணிகர் குலத்தில் பிறந்து மனைவி பிள்ளைகளை உடையவராகித் தேவர்களையுந் தெய்வங்களையும் பூஜைசெய்து பூமியில் விவசாயத் தொழில் செய்து ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டுச் சுத்தமாயிருந்த இந்த ஜாதகர் பாவஞ் செய்யாமல் வாழ்ந்து;

28. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல்[3] வரையப் பட்டுச்
சீலமாம் கங்கை சேயாய் ஜனிப்பனும் மென்று சொல்வோம்
ஞாலத்தா லுய்வா னாகும் நமன்பதி அறுபா னென்றுள் *
ஆலம்போல் பிணியால் மாள்வன் அறைகிறோ மிவன்பின் ஜன்மம்.

28. இறந்து எமபட்டணம் அடைந்து பிரமாவால் எழுதப் பட்டுச் சுத்தமான வேளாண்மைத் தொழிலையுடைய குலத்தில் இந்த ஜன்மத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார் என்று சொல்லுகிறோம். பூமியினால் இவர் ஜீவிப்பார். இவர் அறுபத்தோராம் வயதில் விஷம்போன்ற ஒரு கொடிய நோயால் இறப்பார். இவருடைய பின் ஜன்மத்தைச் சொல்லுகிறேன்.

* **குறிப்பு.**—ஜாதகருக்கு வயது ௵ 60 முதல் 61 வரையினும் ராகு தசையில் சுக்கிர சூரிய புக்திகள் நடக்கின்றன. ராகு பிதுர்ஸ்தானமாகிய ஒன்பதாமிடத்திற்குப் பன்னிரண்டாமிடமாகிய லக்கினத்திற்கு 8-இல் இருக்கின்றார். ஆகையால் பிதுருக்கு மரண யோகமுண்டு. புலிப்பாணி ஜோதிடம்

[1] பூமிஸ்தமாகிய காஞ்சி. [2] திருச்செந்தூர். [3] பிரமா.

முந்நூறில் 65-ஆவது பாடலைப் பார்க்கவும். " ஆச்சப்பா பத் தெட்டில் கோள்கள் நிற்க........பிதுரைத் தேடிக் கொற்றவனே சண்டனுமே வருவான்." மேலும் சுக்கிரன் பிதுர்ஸ்தானத்திற்கு திரிதிய அஷ்டமாதி பதியாகிப் பிதுர்லக்னாதிபதியாகிய குருவுடன் சம்மந்தம். ஆகையால் பிதுருக்குக் கண்டயோகமுண்டு. துய்யகேரளம், எட்டாம் பாவம், 14-ஆவது, 20-ஆவது பாடல்களைப் பார்க்கவும். "அஷ்டமராகு பிதுர்மாரகம்" ஆனகாரி ஈராறு ஜாதகர்மாரகம்..என்ற வசனம் பிரகாரமுங் கூட பிதுர்மாரகமாகும்.

29. குடதிசை [1] கொச்சி தன்னி லுதிப்பனும் வைசியச் சேயாய்த்
திடமுள குடும்பம் பெற்றுச் செல்வனுமாகி வாழ்வன்
விடவிழி அன்னைக் கேதான் விளம்புவோம் நாற்பதாண்டில் *
திடீரென்று மரண மெய்தும் செல்வதி கேட்டி டாயே.

29. ஜாதாரின் தகப்பனார் மேற்குத் திக்கில் கொச்சியில் வைசிய குலத்தில் ஆணாகப் பிறந்து பெரிய குடும்பமுண்டாகிச் செல்வவானாக வாழுவார். ஜாதகருடைய தாயாருக்கு மரணத்தைச் சொல்லுகிறோம். நாற்பதாவது வயதில் அவளுக்கு எதிர்பாராமல் திடீரென்று மரணம் வந்து சம்பவிக்கும். செல்வமுடைய தலைவியாகியப் பார்வதியம்மையே கேட்பீராக.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயது வருஷம் 39 முதல் வருஷம் 40 வரையில் அங்கார தசையில் அங்காரகன் ராகு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. அங்காரகன் மாதுர்ஸ்தானமாகிய நான்கிற்கு 2-7-க்குடைய வராய் லக்னத்திற்குக் கர்மாதிபதியாயும் வருகிறார். ஆகையால் மாதுர் மாரகயோக மிருக்கின்றது.

30. அறுபதுஐந்து ஆண்டில் ஆடிமா தத்தி லேதான்
திருமக னுடலம் ஏகும் செப்பு வோ மிவன்பின்ஜன்மம்
கரியூருக் கருகி லேதான் கலப்பனும் க்ஷத்திரிய சேயாய்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்ப்

30. அறுபத்தைந்தாவது வயதில் ஆடி மாதத்தில் ஜாதக ருக்கு மரணம் சம்பவிக்கும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லு கிறோம். கரியூருக்கு அருகில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார். பெரிய வயிற்றையுடைய விநாயக்கடவுளைப் பெற்றப் புண்ணிய வதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது வருஷம் 64 முதல் வருஷம் 65 வரையில் குரு தசையில் குருபுத்தி நடக்கிறது. குரு ஆறும் பாவத்திற்குடையவராகி லக்னாதிபதியாகிய சந்திரனுடன் கூடி ஆறிலேயே இருக்கின்றார். ஜாதகருக்கு மாரகயோகம் இருக்கின்றது. துய்யகேரளம் எட்டாம் பாவம், 20-ஆவது பாடலையும், சமஸ்கிருத ஜாதக சந்திரிகை சுலோகம் 26-ஐயும் தாண்டவ மாலை பாடல் நெம்பர் 25-ஐயும் பார்க்கவும்.

[1] மேற்கு.

31. உதித்திடுங் காலம் தன்னில் மூலமும் மூன்றும் பாதம்
அதிதியின்[1] தசைமி ருப்பு அருளுவோ மாண்டு ரண்டு
சதியிலா திங்க ளெட்டும் சாற்றினோம் பூர்வ பாகம்
நதிசடை யணிந்தோன் தேவி நவின்றது தப்பா தாகும்.

31. ஜாதகர் ஜனனமாகுங்காலத்தில் மூல நட்சத்திரத்தின் மூன்றும் பாதம் ஆகும். கேதுவின் தசை அப்போது இருப்பு வருஷம் இரண்டும். மாதம் எட்டும் என்று சொல்லுகிறோம். இதுவரையிலும் முதலாவது பாகத்தைச் சொன்னோம். கங்காதேவியைத் தன் ஜடையில் அணிந்துள்ள பரமசிவத்தின் மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லியது தவறுமல் நடக்கும்.

[1]. கேது.

ஜாதகம் 55

1. நண்டதனில் [1] ரவி[2]பு கரும் [3] காரி [4] ராகு
நாலில் மதி [5] குஜனி[6]ருக்க ருசிதா [7] னைந்தில்
கொண்டசிகி [8] சப்தமத்தில் புதனும் வீணை [9]
கூர்க்கடகம் ஜனித்தவர்க்குப் பலன்கள் கூறக்
கண்டசிறு மதலையது ஆண்பா லாகும்
காஞ்சிக்குத் தென்பாகம் கரியூ ருக்கு
அண்டியேகுணக்கது [10] வாம் தெற்குத் திக்கில்
அரன் கோஷ்டம் சீரிநிற்கும் அம்மை யேகேள்.

			புதன்
	இராசி	சக்கரம்	லக்கினம் சூரியன் சுக்கிரன் சனி, ராகு
கேது			
	குரு	அங்காரகன் சந்திரன்	

1. கடகத்தில் சூரியனும் சுக்கிரனும் சனியும் ராகுவும் இருந்து, நான்கில் சந்திரனும் அங்காரகனும் இருந்து, குரு ஐந்திலும் கேது ஏழிலும், புதன் மிதுனத்திலும் இருந்து, கடக லக்கினத்தில் ஜனித்தவருக்குப் பலனைச் சொல்லுவோம். ஜனனமான சிறிய குழந்தை ஆண் குழந்தையாகும். காஞ்சிமாநகரத்திற்குத் தெற்குப் பாகத்தில் கரியூருக்கு அடுத்தும் கிழக்கிலும் உள்ள விடத்தில் ஜனனம். தெற்குத் திக்கில் சிவன் கோயிலும் கள்ளி மரங்களும் இருக்கும். பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—இந்த ஜாதகத்திற்குஜன்ம நட்சத்திரமாவது அல்லது ஜனன கால தசையாவது குறிக்கப்படவில்லை. ஆயினும் சந்திரன் துலாத்திலிருப்பதால் ஜனன நட்சத்திரம் சித்திரை 3-ஆம் பாதம் முதல் விசாகம் 3-ஆம் பாதம் முடியும் வரையிலும் இருக்கவேண்டும். ஜனனகாலம், லக்கினத்தில் சூரியனிருப்பதால், சூரிய உதையத்திற்குச் சமீபத்தில் இருக்க வேண்டும். கிரக நிலையை அனுசரித்துப் பார்க்க ஜனனம் சுவாதி அல்லது விசாகத்தில் இருக்கவேண்டும் என்று தோற்றுகிறது. மேலும் ஜாதகருடைய

[1] கடகம் [2] சூரியன் [3] சுக்கிரன் [4] சனி [5] சந்ர [6] அங்காரகன்குரு [7] ருசிதான் = குரு [8] கேது [9] மிதுனம் [10] கிழக்கு

மரணகாலம், அவர் தாய் தந்தையர் மரணகாலம் இவைகளை யோசிக்குமிடத்து, ஜென்ம நட்சத்திரம் விசாகம் இரண்டாம் பாதமாக விருக்கலாமென்று தோற்றுகிறது. இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—கடகத்தில் சுக்கிரனும், சிம்மத்தில் குருவும் சூரியனும், கன்னியில் ராகும், தனுசில் அங்காரகனும் சனியும், மீனத்தில் புதனும், ரிஷபத்தில் சந்திரனும் ஆகும். சுவாதியாகில் சூரியன் கடகத்திலும், சந்திரன் மகரத்திலும், புதன் கும்பத்திலும், மற்றக் கிரகங்கள் மேற்சொல்லியபடியும் பொருந்தும்.

2. இதுமத்தில் பேரூராம் ஜனித்த வீடு
இசைகுவோம் வடதென்பால் வீதி யாகும்
மதியணிந்த யீசன்குடி மீன மாகும்
வடக்கினிலே யானைமுகன் வடமேல் திக்கில்
கதிகொடுக்கும் சாமுண்டி பாஞ்சாலி கோவில்
காரிகையேசூழியுண்டு குடகு திக்கில்
துதியப்பன் மாலின்குடி யிருக்கு மென்றே
சொல்லுகிறேம் தெற்கினிலே மூத்தோ னுண்டு.

2. இவ்விதமான எல்லைக்குள்ளே ஒரு பெரிய கிராமத்தில் ஜனனமான வீடு இருக்கும். தெரு வடக்குத் தெற்காக விருக்கும். சந்திரனைத் தன் சடையில் வைத்திருக்குஞ் சிவபெருமானுடைய கோயில் வட கிழக்குத்திக்கிலிருக்கும். வடக்கே யானைமுகத்தையுடைய விநாயக் கடவுளின் கோயிலும் ஐசுவரியத்தையும் மோக்ஷத்தையுந் தருகின்ற பார்வதியம்மன் கோயிலும். திரௌபதியம்மன் கோயிலும் வட மேற்குத் திக்கிலும் இருக்கும். அம்மையே ! மேற்குத் திக்கில் கடல் இருக்கும், துதிக்கப்படுகின்ற விஷ்ணுவின் கோயிலுமிருக்கும். தென்திக்கில் விநாயகக் கடவுளின் கோயிலிருக்கும் என்று சொல்லுகிறேம்.

3. அம்மையவள் மிதுனத்தி லிருப்பாள் பாரு
அதுவல்லால் பலதேவர் அவ்வூர் வாசம்
செம்மையாய் ஜனித்த யில்லம் கெட்டியாகும்
செங்கதிரோன் வாஸ்துவாம் சேஷ்ட னில்லான்
கொம்மையனு மாதுரு தன்வீட்டில் வந்தோன்
குலமதுவே காராளர் குலத்தில் வந்தோன்
துன்மையாம் பிறந்த வில்லம் மர்மமில்லை
சுந்தரிக்கு மாதுருவும் தொலைந்து போமே.

3. பார்வதியம்மன் கோயில் மேற்குத் திக்கிலிருக்கும். இவைகளுமல்லாமல் இந்தப் பெரிய கிராமத்தில் பல தெய்வங்களின் கோயில்களும் இருக்கும். ஜாதகர் பிறந்தவீடு வலிவான செழுமையாயுள்ள பலத்த வீடாகும். கீழண்டைவாடையிலுள்ளது. ஜாதகர் அழகான தாயார் வீட்டில் பிறந்தவர். வேளாளர் குலத்தில் பிறந்தவர். பிறந்தவீட்டில் துன்மைகளும் கெடுதிகளுமுண்டு. ரகசியமானது கிடையாது. தாயாருக்குத் தாய் இறந்து விடுவாள். ஜாதகருக்கு மூத்த சகோதரரில்லை.

வேறு

4. இன்னவன் ஜனன யோகம் எழில் பெரும் தந்தை யோகம்
மன்னிய அன்னை யோகம் மறுவிய யிவன்முன் ஜன்மம்
பன்னுமிப் பலன்க ளெல்லாம் பகருவோ மிந்நூல் தன்னில்
கன்னலா மொழியி ளுளே கழறு வோம் கேளும் மாதே.

4. ஜாதகருடைய ஜனனகாலம் முதல் யோகங்களையும் வல்லமையும் பெருமையுமுள்ளத் தகப்பனுடைய யோகத்தையும் பெருமையுள்ளத் தாயின் யோகத்தையும் ஜாதகருடைய முன்ஜன்மத்தையும் இவைகளைப் பற்றிய பலாபலன்கள் எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்ருேம். கேட்பீராக.

5. தந்தையின் சகோதரர்கள் சாற்றுவோ மாண்பா லொன்று
பிந்திய கன்னி அவ்வாறு பேசுவோம் தீர்க்க மாகும்
எந்தையே இதற்கு மேலா யிலதினு மரிட்ட மாகும்
சுந்தரி தனக்குத் தோழர் தோன்றிடா ரரிஷ்ட மாமே.

5. ஜாதகருடைய தகப்பனுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகிருேம். ஆண் சகோதரம் ஒன்ருகும். பின்னுல் அவ்விதமாகவே ஒரு பெண் சகோதரம் நீண்ட ஆயுளையுடையதாக விருக்கும் என்று சொல்லுகிருேம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! இவர்களுக்கு மேல் சகோதரங்கள் அதிகமாகப் பிறந்தாலும் இறந்துவிடுவார்கள். இந்தப் பெண்ணிற்குப் பிறகு பிறக்கும் சகோதரர்கள் கிடையாது. பிறந்தாலும் இறந்துவிடும்.

6. இனிதந்தை நிறம்கு ணத்தை யியம்புவேன் சிவந்த மேனி
கனிவுள குறுகி மெய்யன் கன்னியர் மோகவா ளும்
வனிதை யரிருவ ராகும் வள்ளல்மேல் பக்தி யுள்ளான்
சினமிலான் ஈகை யாளன் சிறந்திடும் சமதே கத்தன்.

6. இனிமேலாகத் தந்தையின் நிறத்தையும் குணாதிசயங்களைப் பற்றியும் சொல்லுகின்றேன். இவர் சிவப்பான தேகத்தையுடையவர் குட்டையான தேகத்தையும் அன்புள்ள மனதையும் உடையவர். பெண்களின் பேரில் ஆசையுடையவர். இவருக்கு இரண்டு மனைவிகளாகும். இவர் அளவில்லாமற் கொடுக்கின்ற கடவுளின் பேரில் பக்தியுள்ளவர். கோபமில்லாதவர். பிறருக்குக் தானஞ் செய்யுந்தன்மையுள்ளவர். மேன்மையான, சமமான தேகமுடையவர்.

7. பலபேர்க்கும் பந்தி நிற்கும் பகரிவன் நண்பாய் நிற்பன்
சொல்மொழி பிசகா ளுகும் சோம்பிடான் காரி யத்தில்
கல்வியு மல்ப முள்ளான் கனத்தவர் நேசம் செய்வன்
வலிவுளன் வணிபம் செய்வன் மனதினில் வர்ம முள்ளான்.

7. இவர் அனேகர்களிடம் ஒழுங்காய் நடந்துகொண்டு கீர்த்தியுடன் இருப்பார். சினேகமாகவிருப்பார். தான் சொன்னவார்த்தையைத் தவருமல் காப்பாற்றுவார். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவர்.

சிறிதான வித்தையுடையவர். பெரிய மனிதர்களுடைய சினேகத்தை அடைவார். வலிவுள்ளவர். வியாபாரஞ் செய்வார். தன்னுடைய மனத்தில் வைராக்கிய முடையவர்.

8. முகமது பள்ள முள்ளான் முனியுளன் வடிவு முள்ளான்
அகமது கலக்க முள்ளான் அண்டின பேரைக் காப்பன்
ஜகமதில் கீர்த்தி யேற்பன் சிவபூசை யுடைய ளுவன்
தகைமையாய் எதிரிக் கஞ்சான் சத்தியம் தப்பா ளுமே.

8. இவர் (ஜாதகருடைய தகப்பனுர்) தன் முகத்தில் பள்ளத்தையுடையவர். கோபமும் வெறுப்பு முள்ளவர். அடையாளங்கள் உள்ளவர். கலக்கமுள்ள தூனபமுள்ள மனத்தையுடையவர். தன்னைவந்து அண்டினவர்களைக் காப்பாற்றுவார். பூமியில் கீர்த்தியையுடையவர். சிவபெருமானைப் பூஜை செய்வார். ஒழுங்கான குணமுடையவராகி எதிரிக்குப் பயப்படாமலிருப்பார், சத்தியமாக நடந்து கொள்வார்.

9. தந்தைதாய்க் கன்ப ளுவன் தளமொடு செல்வ முண்டாம்
நந்தியா உடைய ளுவன் நவதானியத் தொழிலும் செய்வன்
சிந்தையில் கபடு முள்ளான் சித்திர வீடு முள்ளான்
வந்தவர்க் கன்ன மீவ னடிமையா ளுடைய ளுமே.

9. இவர் தன்னுடைய தாய் தந்தையர்களுக்குப் பிரியமானவர். இவருக்கு வீடு நிலம் தனம் முதலிய சம்பத்துக்களுண்டு. இவ எருது பசு இவைகளையுடையவர். நவதானிய வியாபாரஞ் செய்வார். மனதில் கபட மில்லாதவர். அழகான வீடு உடையவர். தன்னை வந்து கேட்பவர்களுக்குச் சாப்பாடு கொடுப்பார். வேலையாட்களையு முடையவர்.

10. இப்படி யிருக்கும் தந்தை யிவனுடை முன்ஜன் மத்தை
மெய்ப்புடன் சொல்வோம் யாங்கள் மேலைகோட் டதனில் கீழ்ப் பால்
மெய்ப்புள கள்ள ஜாதி உற்றன னிவனின் ஜன்மம்
அப்படி யுதித்தோ னுக்கு ஆண்மையும் வலிவு முண்டாய்.

10. இவ்விதமாயிருக்கக்கூடிய தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப் பற்றி மெச்சிக்கொள்ளும்படியாயும் உண்மையாயும் நாங்கள் சொல்லுகிருேம் இவர் மேலைக் கோட்டையில் கிழக்குத் திக்கில் மேன்மையாயுள்ள கள்ளர் ஜாதியில் பிறந்தார். இவ்விதமாய்ப் பிறந்தவருக்கு ஆண்தன்மையும் மனத்திடமும் தேகவலிவும் உண்டாகியிருந்தன.

11. பூமியு மதிக முண்டு புத்திரர் மனைவி யுண்டாய்
நேமியோர் மெச்ச வாழ்ந்து நிற்கின்ற காலம் தன்னில்
நாமினி தனக்கு ஊழி நாட்டுவோ மினிமே லாக
காமனை எரித்தோன் பக்கல் கனத்திடு மம்மை யேகேள்.

11. இவருக்குப் பூமியும் அதிகமாக விருந்தது. இவர் மனைவி புத்திரர்கள் இவர்களையுடையவராய்ப் பூமியில் மெச்சும்படியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் இவருக்கு வந்து நேர்ந்த ஊழ்வினையை இனி

மேலாக நாங்கள் சொல்லுகிறோம். காமனை எரித்தக் கடவுளாகிய சிவ பெருமானுடைய பக்கத்தில் வலிமையாயுள்ள பார்வதியம்மையே ! கேட்பீராக.

வேறு

12. அந்தக்கா லத்தில் இனத்துடன் சேர்ந்து
அங்கவர் களவுக்கு ஏக
பந்தமாய்த் திருடும்கா லத்தி லேதான்
பத்தினி மாங்கலிய வாங்கச்
சிந்தையும் நொந்து அவளிட்ட சாபம்
செப்புவோம் பின்ஜன்மம் தன்னில்
வந்திடு மனையாள் மாண்டிடு மென்றாள்
மங்கையே கேட் டிடாயே.

12. அவ்விதமாக அவர் வாழுங்காலத்தில் அவர் தன்னுடைய குலத்தாருடைய கூட்டத்திற் சேர்ந்து கொண்டு திருடப்போய்த் தன் உறவின ருடன் ஏற்பாட்டின்பிரகாரம் திருடுங்காலத்தில் ஒரு கற்புடையவளுடைய மாங்கலியத்தைத் திருடிக்கொள்ள, அவள் தன்னுடைய மனது நொந்து கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகிறோம். "உனக்குப் பின் ஜன்மத்தில் வந்து வாய்க்கும் உன்னுடைய மனைவி இறந்து விடுவாள்" என்று சாபங் கொடுத்தாள், பார்வதியம்மையே ! கேட்பீராக.

வேறு

13. ஆகையாலிச் சென்மத்தில் அவன்மனை யாளைக் கொண்டு
மோகங்க ளனுப வித்து மொழிகிறேன் பாலர் தோன்றி
ஆகவே இவனின் பாரி அடைகுவாள் பரனின் பாதம்
பாகமா யிரண்டா மாது பாரினில் வருவாளம்மா.

13. ஆகையால் அவர் இந்த ஜன்மத்தில் மனைவியை அடைந்து அவள் பேரில் மோகங்கொண்டு அவளை அனுபவித்து அவளிடம் குழந்தைகள் பிறந்த பிறகு அவருடைய பாரியாள் கடவுளின் பாதங்களை அடைவாள் அஃதாவது இறந்து விடுவாள் என்று சொல்லுகிறேன். அதன் பிறகு அவருக்கு இப் பூமியில் இரண்டாவது மனைவி வந்து சேருவாள். பார்வதி அம்மையே !

14. ஆகையால் பின்ஜன் மத்தில் அருணைநா டதற்கு மேல்பால்
வாழ்க்கையாய்ச் சிற்றூ ரொன்றில் வைசியனுய் ஜனித்துச் செட்டுப்
பாகமாய்ச் சேஷம் செய்து பாரியு மகவு முண்டாய்ச்
சாரசி தனக்கு மெத்தச் சந்தோஷ மடைவானுமே.

14. அவர் மறு ஜன்மத்தில் திருவண்ணுமலைக்கு மேற்கேவளம் பொருந்திய ஒரு சிறிய கிராமத்தில் வைசிய குலத்தில் பிறந்து வியாபாரத்தைப் பாகமாகவும் பக்குவமாகவுங் கொஞ்சமாகவுஞ் செய்து மனைவியையுங் குழந்தைகளையு மடைந்து பரிகாசக்காரன் அடையும் சந்தோஷத்தை விட அதிக சந்தோஷத்தை அடைவார்.

15. ஜாதகன் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருசி கப்பன்
போதனைக் கல்வி வாசம் புகழ்ச்சியாய்ப் பூமி சேர்ப்பன்
சாதனை யுடையன் காமி சந்ததி விருத்தி யுள்ளான்
மாதவர் தம்மைப் பேணுன் வம்சத்தைக் காப்பா னாமே.

15. ஜாதகருடைய குணாதிசயங்களைச் சொல்லுகிறோம். இவர் இரண்டு நிறங் கலந்த மாநிறமான தேகத்தையுடையவர். ஞானமும் கல்வியும் அடைந்து புகழுடன் வாழ்வார். பூமிகளைச் சேகரிப்பார். பிடிவாதஞ் செய்பவர். காமமுடையவர். இவருக்குக் குழந்தைகள் விருத்தியாகும். முனிவர்களைப் போற்றுதவர். தன்னுடைய வம்சத்தைக் காப்பாற்றுவார்.

16. நடையது சொகுச னுவன் நவில்புளிப் பதனி லிச்சை
விடையுமா விருத்தி யுண்டு வேணது பொருளும் சேர்ப்பன்
அடைமொழி பேச வல்லன் அண்டின பேரைக் காப்பன்
குடமெனும் தனத்தாள் பாரி கொள்வனு மிரண்டு என்றே.

16. இவருடைய நடவடிக்கைகள் ஒழுங்குள்ளதாகவிருக்கும். இவருக்குப் புளிப்பான வஸ்துக்களின் பேரில் ஆசையிருக்கும் என்று சொல்லுகிறோம். இவருக்கு எருதும் பசுவும் விருத்தியாகும். இவர் அனேகப் பொருள்களைச் சேர்ப்பார். பகுத்தறிந்து பேசுந்திறமையுடையவர். தன்னை வந்து அண்டினவர்களைக் காப்பாற்றுவார். கும்பராசியில் பிறந்து தனத்தையுடைய மனைவியை அடைவார். இவருக்கு இரண்டு மனைவிகளுண்டு என்று சொல்லுகிறோம்.

17. முகமது வசிய மாகும் முன்கையில் மச்ச ரேகை
அகமதில் லட்சுமி வாசம் அழகுளாள் உரோம நீட்சி
ஜகமதில் கீர்த்தி யேற்பள் சிவந்தமெய் உடைய ளாவள்
தகைமையாய்க் கோபி யாவள் தயாளமு முடைய ளாமே.

17. இவருடைய மனைவியின் முகம் அழகாகவும் வசீகரமாகவும் இருக்கும். இவளுடைய உள்ளங்கையில் மச்சரேகை என்ற ஒருவித ரேகையிருக்கும். இவளுடைய வீட்டில் லக்ஷ்மி வாசஞ் செய்வாள். இவள் அழகுள்ளவள். நீண்ட மயிருடையவள். பூமியில் கீர்த்தியையும் பெருமையையும் அடைவாள். சிவப்பானத் தேகத்தையுடையவள். ஒழுங்கும் கோபமுமுடையவள். தயாளமான குணத்தையு முடையவளாவள்.

18. இப்படி அறுவர் கூற இயம்புவார் புயண்டர் கேள்வி
மெய்ப்படி கண்ணுள் ரெண்டு வழுதித்தினீர் உரைசொல் என்னச்
செப்பமா யறுவர் தாமும் சொல்லுவார் எழில் கேது
[1] கொப்பென வமோன் காரி [2] கொண்டதோர் சரத்தி லேற.

18. இவ்விதமாக அறுவர் என்ற முனிவர் சொல்ல, புஜண்டர் என்ற ரிஷி ஒரு கேள்வி கேட்கின்றார். விசுவாசத்தைக் காட்டிக்கொள்ளுகின்ற மனைவியர் இருவர் என்று சொன்னீரே! அதற்குக் காரணத்தைச் சொல்லும்

[1] கொசலைட. [2] சனிட.

என்று கேட்க, அதற்கு இணங்கி அறுவர் என்ற முனிவர் செவ்வையாகச் சொல்லுகிறார். ஏழாவது பாவத்தில் கேது இருந்து, கொண்டையையுடைய வளாகிய மனைவியைக் குறிக்கும் ஏழாவது ராசிக்குடையவராகிய சனி கடகமாகிய சர ராசியிலிருக்கிறார்.

குறிப்பு.—ஏழாம் பாவத்திற்குடையவர் சர ராசியிலிருந்தால் இரண்டு தார யோகமுண்டு. தமிழ் ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடலைப் பார்க்கவும். " ஏழ் வீட்டினிற் கதிபன் சரத்தினிற்கில் இரு மனைவி ...."

19. இப்படி யிருக்கும் போது மியம் புவோம் தாரம் ரண்டு
செப்பமாய் முன்னு ளூழி தீவினை அணுகினத் தாலே
அப்படி முதல் பாரிக்கு அழகுடன் கர்ப்ப முண்டாய்க்
கொப்பனே பாதை யாலே கொண்டதோர் தாரம் நஷ்டம்

19. இவ்விதமாகக் கிரகங்கள் இருப்பதாலே ஜாதகருக்குத் தாரம் இரண்டு என்று சொல்லுகிறோம். வழிவழியாய் முன் ஜன்மத்தில் ஏற்பட்ட ஊழ்வினையாகிய கெட்டவினை ஜாதகரை இந்த ஜன்மத்தில் வந்து அடைந்ததால் முதல் மனைவிக்கு அழகுமேற்பட்டுக் கர்ப்பமுமுண்டாகிப் பிறகு சீக்கிரத்தில் அதிக நோயுண்டாகி முதல் தாரமாக வந்து வாய்த்த மனைவி இறந்து விடுவாள்.

20. தாரமே நஷ்ட மென்று சாற்றினீர் முனிவரே கேள்
தீரமாய் முன்னு ளூழி செப்பு வீரென்று கேட்கப்
பாரினில் அறுவர் தாமும் பார்வதி முகத்தை நோக்கி
கூறுவோ கேளு மம்மா குடகினி லிவன்முன் ஜன்மம்.

20. ஜாதகருக்குத் தாரம் நஷ்டமாகிவிடும் என்று சொன்னீரே முனிவரே! நான் சொல்லுவதைக் கேளும். முன் ஜன்மத்திலேற்பட்ட ஊழ்வினையைத் தைரியத்துடன் சொல்லுவீரென்று கேட்க, அறுவர் என்ற முனிவர் பார்வதியம்மையின் முகத்தைப் பார்த்து, பார்வதியம்மையே! சொல்லுகிறோம், கேட்பீராக. ஜாதகருடைய முன்ஜன்மம் குடகு தேசத்தில் சம்பவித்தது.

21. அந்தணர் குலத்தில் வந்து அருந்தவ முனிவர்க் கன்னம்
சிந்தையில் மகிழ்ச்சி யாகச் செய்தவ னிவனே யம்மா
பிந்தியு மனையாள் மக்கள் பெரும்பூமி கன்று காலி
சந்ததம் தனமு மோங்கி சலிப்பிலா திருக்கு நாளில்.

21. ஜாதகர் முன்ஜன்மத்தில் பிராமணர் ஜாதியில் வந்து பிறந்து சிறந்த தவத்தைச் செய்கின்ற ரிஷிகளுக்குச் சாப்பாட்டைத் தன்னுடைய மனத்தில் சந்தோஷத்துடன் கொடுத்து வந்தவர் இந்த ஜாதகர் ஆவார். பார்வதியம்மையே! பிறகு ஜாதகர் மனைவி குழந்தைகள் அதிகமான பூமி பசுக்கூட்டம் கன்று எப்போதுமுள்ள தனம் ஆகிய இவைகளுண்டாகி மனத்திற்குத் துக்கம் நேரிடாமல் செழித்தோங்கி வாழுகின்ற காலத்தில்;

22. வந்ததோர் ஊழ் வினையைச் சொல்வேன் வளமிலா ஈச னுக்குச்
சந்ததம் புஷ்பம் கோர்த்துத் தான்கொண்டு வருகும் போது
இந்தவாறு மைந்தன் கண்டு யிவைகளை மடக்கி வாங்கிக்
கொந்தளி குழலி யார்க்குக் கொண்டுபோய்த் தந்து விட்டான்.

22. ஜாதகருக்கு வந்து சம்பவித்த ஊழ்வினையைச் சொல்லுகிறேன். செல்வமில்லாத ஒரு சிவன் கோயிலுக்காக எப்போதும்போல புஷ்பங்களைக் கோர்த்துக் கட்டி எடுத்துக்கொண்டு ஒரு ஸ்திரீ வரும்போது, இப்படி வருபவளை இந்த ஜாதகர் வழியில் பார்த்து அவளை வழிமடக்கி அந்தப் புஷ்ப மாலைகளையும் சரங்களையும் வாங்கிக்கொண்டு போய்க் கூந்தலையுடைய ஊனமடைந்தப் பெண்ணாகிய ஒரு வேசிக்குக் கொடுத்து விட்டார்.

23. அம்மாது வேசி வாங்கி அணிந்தனள் அதுஒர் தோஷம்
செம்மையாய் நேசம் செய்து சினேகிதன் பொருள் கவர்ந்து
வம்புபோல் விரோதம் செய்து வந்ததோ ஷம்தா னென்று
தம்பிக்குப் பாகம் தன்னில் தானவன் மோசம் செய்து;

23. வேசியாகிய அவள் அந்தப் புஷ்பங்களைப் பெற்றுக்கொண்டு முடித்துக்கொண்டாள். இவ்விதமாக ஜாதகருக்கு ஒரு தோஷம் நேர்ந்தது. ஜாதகர் ஒருவரிடம் பெருமையாயும் ஒழுங்காயும் சிநேகஞ் செய்துகொண்டு பிறகு அவருடைய பொருளைத் திருடி அவரிடம் விரோதமடைந்து சண்டை போட்டதால் வந்து சம்பவித்தது இன்னொரு தோஷம். மேலும் ஜாதகர் தன்னுடைய தம்பியுடன் பாகப் பிரிவினையைச் செய்து கொள்ளுவதில் மோசம் செய்தார்.

24. இவ்வித தோஷத் தாலே யிருபிறப் பாள னுக்குக்[1]
கவ்விற்று அச்சா பங்கள் காணேதுன் மரண மாகி
வெவ்விய இச்சென் மத்தில் விளங்கின இந்தப் பாலன்
திவ்விய மாதே நாங்கள் சொல்லுமிம் மொழி குன்றாவே.

24. இவ்விதமான மூன்றுவித தோஷங்களாலே இரு பிறப்பாளர் என்று சொல்லப்பட்ட பிராமணர் குலத்திலுதித்த அந்தப் பிராமணருக்குத் தோஷங்கள் நேர்ந்தன. அவர் இளம் வயதிலே அகால மரணமடைந்து இந்த ஜன்மத்தில் இந்த ஜாதகர் வந்து பிறந்தார் என்று மேன்மை தங்கிய சிறந்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகிறோம். எங்களுடைய வார்த்தைகள் தவறிடாதவையாகும்.

25. ஆகையா லந்தப் பாவம் அணுகிற்று இவனுக் கேதான்
தோகை யிரண்டு முண்டு சொல்லுவேன் குடும்ப மலைச்சல்
பாகமும் வேற தாகும் பாரில் மாதுரு நஷ்டம்
போகமாய்ப் புத்திர தோஷம் மொழிந்தன மிவனுக் கேதான்.

25. ஆகையால் மேற்சொல்லிய தோஷங்கள் இந்த ஜாதகருக்கு வந்து சம்பவித்தன. ஜாதகருக்கு இரண்டு தாரமாகும். தன்னுடைய குடும்

[1] பிராமணர்.

பம் துன்பத்தை அடையும். பாகப் பிரிவினை ஏற்பட்டுவிடும். தாய் இறந்து விடுவாள். ஆசைமேலிட்டுப் பிறந்த குழந்தைகளுக்குத் தோஷமுண்டாகும் என்று நாங்கள் சொல்லுகிறோம்.

26. அந்ததோர் சாபம் தீர அருளுவோம் கிரியை யொன்று
தந்திமா முருகன் கோயில் தட்சிணம் தன்னில் செய்து
வந்தவர்க் கன்னி மீந்து வளமையாய்த் தீபம் வைத்தால்
முந்திய ஊழி தீரும் மொழிகிறோம் மேலும் கேளே.

26. மேற்சொல்லிய முன் ஜன்மத்தின் பாபங்கள் நீங்குவதற்காக நாங்கள் ஒரு சாந்தி சொல்லுகிறோம். ஆண் யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயிலைத் தெற்கில் உடனே கட்டி, தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடுபோட்டு அந்தக் கோயிலில் தீபங்களை மாட்சிமை யடையும்படியாய் வைத்து வந்தால் முன் ஜன்மத்திய ஊழ்வினைகள் தீர்ந்துவிடும் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்லுவதைக் கேட்பீராக.

27. மாதமோர் கார்த்தி கைக்கு வந்தவோர் பரத்துக் கன்னம்
நீதியா யளிப்பா னாகில் நில்லாது பாவ தோஷம்
மேதினி லதிக கீர்த்தி விளங்கிடும் தாரம் ஒன்றே
காதலர் விருத்தி யாகும் கனமுட னுரைத்தோ மம்மா.

27. மேலும் ஒவ்வொரு மாதத்திலும் கிருத்திகை தினத்தில் வந்த ஒரு பரதேசிக்குச் சாப்பாடு நீதி சாஸ்திரத்தில் சொல்லியபடி ஒழுங்காயும் பக்தியுடனும் போடுவாராகில் முன் ஜன்மத்திய பாவங்களும் தோஷங்களும் நீடிக்காமல் விலகிவிடும். பூமியில் ஜாதகருக்கு நல்ல கீர்த்தியும் பெருமையும் உண்டாகும். தாரம் ஒரு தாரமாகவே யிருந்துவிடும். ஆகையால் பிறக்கும் பிள்ளைகள் விருத்தியடைவார்கள் என்று தைரியமாகவும் திடமாகவுஞ் சொல்லுகிறோம். பார்வதியம்மையே!

28. புகலிவன் சகோத ரர்கள் போற்றுவே ணண்பா லொன்று
வகையுட னதன்மே லில்லை திருமணக் காலம் சொல்வேன்
சுகமுட னிருப தாண்டில் தட்சிணம் அயலூர் தன்னில்
தகைமையாய் மாது வந்து சேருவா ளிவனுக் கம்மா.

28. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்வோம். இவருக்கு ஓர் ஆண் சகோதரந்தானுண்டு. அதற்குமேல் இவருக்கு உடன் பிறந்தார் கிடையாது. ஜாதகருக்கு இனிமேல் விவாகம் நடக்குங்காலத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்: ஜாதகருக்கு இருபதாவது வயதில் தெற்கே அருகிலுள்ள அயலூரிலிருந்து ஓர் அழகிய பெருமை வாய்ந்த பெண் மனைவியாய் வந்து அமைவாள். பார்வதியம்மையே!

குறிப்பு.—ஜன்ம நட்சத்திரம் விசாகம் இரண்டாம் பாதமானல் ஜாதகருக்கு வயது ஹூ 19-0-0 முதல் 20-0-0 வரையினும் சனி தசை நடக்கிறது. சனி ஏழுக்குடையவராகிக் களத்திரகாரராகிப் போகஸ்தானமாகிய நான்காம்

பாவத்திற்கு அதிபதியாகிய சுக்கிரனுடனும், போககாரகனுகிய ராகுவுடனும் இருந்துகொண்டு ஏழாம் பாவத்தைப் பார்க்கின்றார், ஆகையால் விவாஹ யோகமுண்டு. பல கிரந்தங்களில் போகஸ்தானம் நாலாமிடம் என்றும், சில கிரந்தங்களில் மூன்றுமிடம் என்றும் கண்டிருக்கிறது.

29. சொற்படி முன்னுல் ஊழி சுந்தரன் செய்யா னாகில்
மெய்ப்படி மனையாள் மாயும் மைந்தரும் விருத்தி யாகா
மெய்ப்புடன் பெண்ணி ரண்டு உலகினில் விருத்தி யாகார்
ஒப்புடன் செய்வா னாகில் ஓங்கிடும் செல்வ மேலாய்.

29. நாங்கள் முந்தியே சொல்லியுள்ள பிரகாரம் ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்திய பாவங்களையும் தோஷங்களையும் நிவிர்த்தி செய்யச் சாந்திகள் செய்யாமலிருந்தால் உண்மையாகவே மனைவி இறந்துவிடுவாள். பிள்ளைகளும் விருத்தியாகமாட்டார்கள். உண்மையாகவே இரண்டு பெண்களும் விருத்தியடையமாட்டார்கள். நாங்கள் சொல்லிய சாந்திகளைச் சம்மதத்துடன் பொருத்தமாகச் செய்வாரானல் எல்லாச் செல்வங்களும் மேன் மேலாய் ஓங்கி வளர்ந்துவரும்.

30. இவ்வித மிருவர் கூற இயல்ஜய முனிவர் சொல்வார்
நல்லிய மூன்றோன் புந்தி லக்கின விரைய மேற
அவ்விதப் பால னுக்கு ஆணென்று சோதர மென்றீர்
திவ்விய அவனின் சேதி செப்புவீர் நூலை ஆய்ந்து.

30. இவ்விதமாக இரண்டு முனிவர்கள் சொல்லிவரவே, நல்ல குணத்தையுடைய ஜயமுனிவர் கேட்கிறார், நன்மையைச் செய்யக்கூடிய மூன்றும் பாவத்தின் அதிபதியாகிய புதன் லக்கினத்திற்கு விரய ஸ்தானமாகிய பன்னிரண்டாம் பாவத்தில் இருக்கிற ஜாதகருக்கு ஓர் ஆண் சகோதரம் உண்டு என்று சொன்னீர்கள். இந்தச் சாஸ்திரத்தை ஆராய்ச்சி செய்து அந்தச் சகோதரனுடைய பலாபலன்களைச் சொல்லுவீராக.

31. ஆதியில் தரித்திர முண்டு அவனுண்டி குறைவு முண்டு
நீதியாய் ரோகி யாவன் நித்தியம் தோஷ முண்டு
கோதிலா மூன்று ண்டின்மேல் கூறுவோம் பலன்கள் யாவும்
தீதிலாக் குணவா னுகும் தீரனும் சொல்லுக் கஞ்சான்.

31. இனிமேல் ஜாதகருடைய சகோதரனுடைய பலாபலன்களைச் சொல்லுகிறார். சகோதரனுக்கு இளமையில் தரித்திரம் இருக்கும். சாப்பாடும் குறைவுபட்டிருக்கும். அவர் நோயாளியாயிருப்பார். தினந்தோறும் அவருக்குக் கஷ்டங்களுண்டு. மூன்று வயதிற்குமேல் பலன்களெல்லாம் குற்றமில்லாமலிருக்கும் என்று சொல்லுகிறோம். சகோதரர் கெட்டகுணங்களில்லாதவராயிருப்பார். தைரியமுள்ளவர். பேசுவதற்குப் பயப்படாதவர்.

32. வல்லியே வித்தை புத்தி வந்திடு மிவனுக் கம்மா.
மெல்லென வார்த்தை கூறுவன் மேதினில் கீர்த்தி ஏற்பன்
சொல்லிய கோப முள்ளான் சோம்பிடான் காரி யத்தில்
நல்லதோர் பலன்கள் மேலாய் நாடிடும் பெரியோர் நட்பே.

32. பார்வதியம்மையே! இவருக்கு வித்தையும் அறிவும் வருமம்மா, இவர் மெதுவாகப் பேசுவார். பூமியில் பெருமையை யடைவார். பேசும்போது கோபமுடையவர். ஒரு காரியத்தைச் செய்யும்போது ஜாம்பலில்லாமல் அதைச் செய்வார். இவருக்கு நல்ல பலன்கள் மேல் மேலாய் உண்டாகும். பெரிய மனுஷர்களுடைய சினேகங்கள் உண்டாகும்.

33. தனபதியாகி வாழ்வன் சத்தியம் தவரு நெஞ்சன்
கனபூமி யதிகம் சேர்ப்பன் காளைக்குப் புத்திர ரில்லே
இனத்துக்கு சிரேஷ்டனுவன் இவனெங்கும் செல்வாக் குள்ளான
மனஞ்சலிப் பில்லா வாழ்வன மங்கையே மேலுங் கேளே.

33. இவர் செல்வமுள்ளவராகவிருந்து வாழ்வார். உண்மையைத் தவருமல் பேசும் மனமுடையவர். மேன்மையான பூமிகளை அதிகமாகச் சேர்ப்பார். இவருக்குப் பிள்ளைகள் கிடையா. தன்குலத்திற்கு இவர் பெரியவராவார். எங்கேபோனுலும் செல்வாக்குடையவராவர், மனதிற்குக் கஷ்டம் நேரிடாமல் வாழ்வார். பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்வதைக் கேட்பீராக.

34. பலபல நோய்கள் வந்து பருகிடும் நாலாண் டிற்குள்
நிலமையாய்க் கிரக சாந்தி நிகழ்த்தினுல் தோஷம் போகும்
நலமுடன் செய்யா விட்டால் நாயகன் தோஷ முண்டு
குலவிய மாதே யாங்கள் கூறிய மொழி குன்ருவே.

34. இவருக்கு நான்கு வயதிற்குள்ளே அனேகவிதமான நோய்கள் வந்து சம்பவிக்கும், உறுதியாய்க் கிரகதோஷ பரிகாரத்திற்காகச் சாந்திகளைச் செய்தால் தோஷங்கள் போய்விடும். சாந்திகளை நன்ருகச் செய்யாவிட்டால் இவருக்குத் தோஷங்கள் ஏற்பட்டுவிடும். எங்களுடன் சஞ்சரிக்கும் பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

35. தந்தையின் காலம் யாங்கள் சாற்றுவோ மூப்பா னைந்தில்
எந்தையே மாதுரு வுக்கு இருநான்கில் கண்ட முண்டு
மைந்தனு அறுபத் தொன்பான் வளர்பிறை ரிஷபமாதம்
முந்தின தசமி தன்னில் முத்தியாம் பதவி சேர்வன்.

35. ஜாதகருடைய தகப்பனுருக்கு மாரககாலத்தை இனிமேல் சொல்லுகிறோம். தகப்பனுர் ஜாதகரது முப்பத்தைந்தாவது * வயதில் இறந்து போவார். எங்கள் தாயாகிய பார்வதியம்மையே! ஜாதகருடைய தாயாருக்கு எட்டாவது † வயதில் கண்டமுண்டாகி அவள் இறந்துவிடுவாள். ஜாதகரும் தனது அறுபத்தொன்பதாவது †† வயதில் வளர்பிறையில் ரிஷப மாதமாகிய வைகாசி மாதத்தில் தசமி திதியின் முற்பாகத்தில் எல்லோருக்கும் முந்தியாயுள்ள கடவுளின் பதவியை அடைவார், அ:·தாவது இறந்து விடுவார்.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 34 முதல் ஷ 35 வரையில் புத தசை நடக்கிறது. புதன் பிதுர்ஸ்தானத்தின் ஏழாமிடமாகிய கன்னிக்கு

அதிபதியாகியிருப்பதால் (அ:·தாவது பிதுர்கர்மஸ்தானங்களில் ஒன்ருகிய மூன்றுக்குடையவராகி யிருப்பதால்) பிதுர் மாரகத்திற்கு யோகமுண்டு.

† குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 7 முதல் ஷ 8 வரையிலும் குரு தசை நடக்கிறது. குரு மாதுருஸ்தானத்திற்கு 3–6–க்குடையவராகி இரண்டில் இருக்கிருர். ஆகையால் மாதுருக்கு மாரகயோகமிருக்கிறது. ஒரு பாவத்தில் அந்தப் பாவகாரகர் இருந்தால் அந்தக் காரகத்திற்குத் தோஷமுண்டு. இங்கு மாதுருஸ்தானத்தில் மாதுருகாரகராகிய சந்திரன் இருக்கின்ருர். ஆகையால் மாதுருக்குத் தோஷமுண்டு. சம்ஸ்கிருத பலதீபிகை என்ற புத்தகத்தில் 15-வது அத்தியாயத்தில் 26-வது சுலோகத்தைப் பார்க்கவும். மேலும் அங்காரகன் நான்காவது பாவத்திலிருப்பதுடன் சந்திரனுடன் கூடியிருக்கின்ருர். ஆகையால் மாதுருக்குத் தோஷம் அதிகமாக விருக்கின்றது.

†† குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 68 முதல் ஷ 69 வரையில் சுக்கிர தசை நடக்கின்றது. சுக்கிரன் கடக லக்கினத்திற்குப் பலத்த மாரகாதிபதியாகி லக்கினத்தில் அஷ்டமாதிபதியாகிய சனியுடன் கூடியிருக்கின்ருர். ஜாதகருக்கு மாரகயோகம் உண்டு. துய்யகேரளம் 8-ஆம் பாவம், 20-ஆவது பாடலைப் பார்க்கவும்.

36. பின்வரு மிவனின் ஜன்மம் பேசுவோம் கடையூர் பக்கல்
தென்புடன் பிரம்ம சாந்தி தெலுங்கனு யுதிப்பா னம்மா
நண்புள செல்வம் ஞானம் நல்கியே சிவனுக் கன்பாய்
நின்குரு வாழ்வான் யென்று இயம்பினேம் ரிஷிக ளம்மா.

36. இவருக்குப் பின்னுல் நேரிடுகின்ற மறுஜன்மத்தைச் சொல்லுகிறோம். இவர் திருக்கடையூருக்குப் பக்கத்தில ஆசையுடன் ஓமஞ்செய்யும் தெலுங்கு பிராமணராகப் பிறப்பார், பார்வதியம்மையே, பிறந்து, நட்பு செல்வம் அறிவு இவைகளை அடைந்து பரமசிவனிடம் அன்பாய் இருந்து ஹோமக்கிரிகைகளைச் செய்யுங் குருவாகவிருந்து வாழ்வார் என்று ரிஷிகளாகிய நாங்கள் சொல்லுகிறோம். பார்வதியம்மையே!

ஜாதகம் 56.

1. புந்தி[1]ரவி[2]மீனத்தில் கேதுமேஷம் பொன்னவனும்[3]
தெருக்காலில்[4] மதியும்[5] வில்லில்[6]
மந்தனுமே[7]கன்னியில் ராகுகோலில்[8] வான்புகரும்[9]
கும்பமதில் மகரம் செவ்வாய்ப்
பந்தமாய்ஜனனமது கடகமாகப் பகருவோம்
மாண்பாலாம் ஜனன மாகும்
வந்ததொருஇல்லமது கீழ்மேல்வீதி வாசலுமே
தெற்காகும் வழுத்து வோமே.

சூரியன் புதன்	கேது		
சுக்கிரன்	இராசி சக்கரம்.		லக்கினம்
அங்காரகன்			
சந்திரன்	குரு	ராகு	சனி

1. புதனும் சூரியனும் மீனத்திலும், கேது மேஷத்திலும், குரு விருச்சிகத்திலும், சந்திரன் தனுசிலும், சனி கன்னியிலும், ராகு துலாத்திலும், ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற சுக்கிரன் கும்பத்திலும், அங்காரகன் மகரத்திலும் இவ்விதமாகக் கிரகங்கள் அழகாய் வரிசையாக விருந்து ஜனனம் கடகராசியில் நேர்ந்தால் குழந்தை ஆணுக ஜனிக்கும் என்று சொல்லுகிறோம். பிறந்த வீதி கிழக்கு மேற்குத் தெருவாகும். தெருவாயிற்படி மேற்கிலிருக்கும் என்று சொல்லுகிறோம்.

குறிப்பு.—இந்த ஜாதகத்திற்கு ஜன்ம நட்சத்திரமாவது அல்லது ஜனனகால தசையாவது குறிக்கப்படவில்லை. ஆயினும் சந்திரன் தனுசில் இருப்பதால் ஜனன நட்சத்திரம் மூலம், பூராடம், உத்திராடம். 1-ஆம் பாதம் முடியும் வரையிலும் இருக்கவேண்டும். ஜனன லக்கினத்தை யோசிக்குமிடத்து ஜனன நட்சத்திரம் மூலம் 4-ஆம் பாதம், அல்லது பூராடம் 1-ஆம் பாதம் 4-ஆம் பாதம், உத்தராடம் 1-ஆம் பாதம் இவைகளில் ஒன்ருக

---

1 புதன். 2 சூரியன். 3 குரு. 4 விருச்சிகம். 5 சந்திரன். 6 தனுசு. 7 சனி. 8 துலாம். 9 சுக்கிரன்.

இருக்கக்கூடும். இங்குக் கொடுத்துள்ள ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சச்சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும். மிதுனத்தில் ராகுவும், சிம்மத்தில் அங்காரகனும், கன்னியில் குருவும் சனியும், தனுசில் சூரியனும் கேதுவும், கும்பத்தில் புதனும், மீனத்தில் சுக்கிரனும், சந்திரன் மேற்குறித்த நட்சத்திரப்பாகத்திற்காகிய அம்சராசியிலும் ஆகும். இந்த ஜாதகம் லக்கினத்தை உள்ளடக்கியிராத ஒருவித கிரகமாலிகா யோக ஜாதகமாகும்.

2. வடக்கில்பாஞ் சாலி காளி வரநதி குழி யுண்டு
குடகினில் அனுமான் சாலை கூறு வோம் கிழக்கில் மாயோன்
இடத்துக்குத் தெற்கிலே தான் படர்ந்ததோர் சமணன் கோஷ்டம்
தடத்துக்கு அருகில் மூத்தோன் சலகரை ஓடை யாமே.

2. வடக்குத் திக்கில் துரௌபதி யம்மன் கோயிலும் காளிகோயிலும், நதியும், குளமும், மேற்குத்திக்கில் அனுமார் கோயிலும் சாலையும் வெளி மண்டபமும், கிழக்குத்திக்கில் விஷ்ணு கோயிலும், பிறந்தவிடத்திற்குத் தெற்குத்திக்கில் சமணர்களுடைய கோயிலும், பிறந்தவிடத்திற்கு அருகில் விநாயகர் கோயிலும் நீர்க்கரையும் ஓடையும் இருக்கும் என்று சொல்லுகிறோம்.

3. இவ்வித அடையாள த்துள் இலகிய பேரூர் தன்னில்
நவ்விய சைவ ஜாதி நாட்டுவோம் சிவம தங்கள்
கவ்விய பலன்கள் யாவும் கழறுவோ மிந்நூல் தன்னில்
திவ்விய மாதே யாங்கள் சொலுமொழி குன்றி டாது.

3. இவ்விதமான அடையாளங்களுள்ள, பெருமைகுறைந்த ஒரு பெரிய கிராமத்தில் அழகும் பெருமையும் வாய்ந்த சிவமதங்களை அனுஷ்டிக்கும் ஒரு சைவ குலத்தில் ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகிறோம். பலவிதமான பலாபலன்கள் எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். மேன்மைதங்கிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகிற வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த மேனி
பந்தமாய் யொடிச்சல் தேகி பாரினில் கீர்த்தி யுள்ளான்
சிந்தையில் கபடு மில்லான் செலவுளான் காமி யாவன்
தன்தன மில்லா னுகும் தாரங்க ளனேக முண்டு.

4. தகப்பனுருடைய குணாதிசயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகிறோம். இவர் சிவப்பு நிறமுள்ள தேகமுடையவர். அழகுபொருந்திய ஒல்லியான தேகமுடையவர். உலகில் பெருமையுடையவர். தன்னுடைய மனத்தில் கபடமில்லாதவர். செலவு செய்பவர். காமமுடையவர். தான் சம்பாதித்தச் சொத்தில்லாதவர். அனேகத் தாரங்கள் உள்ளவர்.

5. லாகிரி அதிகம் கொள்வன் நடனசங் கீத முள்ளான்
வாகன முடைய னுவன் மைந்தரு மதிக முள்ளான்
போகவான் சுகபு சிப்பன் புண்ணிய மனத்தா னுகும்
தியாகியா மொருவர்க்கஞ்சான் ஜனங்களுக் குதவி யாவன்.

5. லாகிரி வஸ்துக்களை அதிகமாய்ச் சாப்பிடுவார். நாட்டியம், கூத்து, சங்கீதம் இவைகளை அனுபவிப்பார். வண்டி மாடுகள் உள்ளவர், அனேகக் குழந்தைகளையுடையவர். போகங்களை அனுபவிப்பவர். சுகமான ஆகாரத்தைச் சாப்பிடுவார். புண்ணியமான காரியங்களைச் செய்ய ஆசையுள்ள நல்ல மனத்தையுடையவர். கொடையாளியாயிருப்பார். யாருக்கும் பயப்பட மாட்டார். ஜனங்களுக்கு உதவிசெய்வார்.

6. அகசிய மதிகம் சொல்வன் அண்டின பேரைக் காப்பன்
பகைவரை ஜயிக்கவல்லான் பந்துவு மதிகமில்லான்
ஜகமதில் பூமி சேர்க்கான் ஜனப்பகை ரோக முள்ளான்
வகைக்கரு மருத்தி னுலே மைந்தனும் ஜீவிப் பானே.

6. சிரிப்பை உண்டாக்கக்கூடிய வேடிக்கையான வார்த்தைகளை அதிகமாய்ச் சொல்லுவார். தன்னை வந்து அடைந்தவர்களைக் காப்பாற்று வார். எதிரிகளை வெல்லுஞ் சாமர்த்தியமுள்ளவர். அதிகமான பந்துக்களில் லாதவர், உலகத்தில் பூமியைச் சேர்க்காதவர். ஜனங்களுடைய பகையை உடையவர். நோயுள்ளவர். நல்ல தரமுள்ளக் கருமருது என்ற கருப்பு மருத மரத்தினுல் இவர் ஜீவனஞ் செய்வார்.

7. கோபவான் மூர்க்க னுகும் குசித்த மதிகம் சொல்வன்
பாபங்க ளனேகம் செய்வன் படைத்திடு மாதர் மூன்று
தீமையு மொருவர்க் கெண்ணுன் சித்தினி ஜாதி யாவன்
நேமியில் நினைத் தவேலை நிகருடன் முடிப்பா னுமே.

7. இவர் கோபமுள்ளவர், ஆங்காரமும் கோபத்தினுல் மூடத் தன்மையும் உடையவர். குற்றமுள்ள தந்திரமான வார்த்தைகளை அதிக மாகச் சொல்லுவார். அனேக பாபகாரியங்களைச் செய்வார். இவர் மூன்று மனைவிமார்களை* அடைவார். யாருக்குங் கெடுதியைச்செய்ய நினைக்க மாட்டார். சித்தினி ஜாதியைச்† சேர்ந்த பெண்களின் குணத்தையுடையவர். பூமியில்தான் எண்ணிய வேலையை நன்றாகவும் பிறருக்குப் பிரகாசிக்கும்படி யாகவும் செய்து முடிப்பார்.

* குறிப்பு.—இந்த ஜாதகத்திற்குப் பிதுர் பாவமாகிய மீனத்திற்குக் களத் திரபாவமாகிய கனனியில் மீனத்திறகு 11-12-க்குடைய சனி இருக்கின்றுர். மீனத்திற்கு 7-க்குடைய புதன் அஸ்தங்கதமும் நீசமும் அடைந்து இருக் கின்றுர். புதனும் சனியும் மீனத்திற்கு 7 11-க்குடையவர்களாய் ஒருவரையொருவர் பார்க்கின்றுர்கள். மீனத்திற்கு 2-இல் கேதுவும் 12-இல் சுக்கிரனும் இருக்கின்றுர்கள். ஆகையால் தகப்பனுருக்கு மூன்று களத்திர யோகமுண்டு. தமிழ் ஜாதகாலங்காரம் 689-ஆவது பாடலைப் பார்க்கவும். "கொள்ளும் லாபாதி களத்ராதி கூடினுலும் பார்த்தாலும்......விவாகம் மூன்றென்றே யுரைப்பர்".

† குறிப்பு.—சித்தினி ஜாதியைப்பற்றி 58-ஆவது ஜாதகம், 33-ஆவது பாட்டில் பார்க்கவும்.

8. இப்படி யிருக்கும் தந்தை யிவனுக்கே உதித்த பாலனை
செப்புவேன் பலன்கள் யாவும் தியாகியா மிருநி றத்தான்
மைப்படி மனையான் ஒன்று வழுத்திட்டோம் சம தேகத்தன்
தப்பிதமொருவர் கெண்ணுன் சாந்தவான் கல்வி கல்லான்.

8. இவ்விதமான குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இந்த ஜாதகருடைய பலாபலன்கள் எல்லாவற்றையும் சொல்லு கிறேன். இவர் உபகாரி. கொடையாளி. இரண்டு நிறங்கள் கலந்த மானிற மான தேகமுடையவர். ஒரு கறுப்பான மனைவியை யுடையவர் என்று சொல்லுகிறேம். சமமான அளவுள்ள தேகமுடையவர். ஒருவருக்கும் கெடுதி களை நினைக்கமாட்டார். சாந்தமான குணமுடையவர். வித்தையில்லாதவர்.

9. புண்ணிய மனத்தா னுகும் புத்திர விருத்தி யுள்ளான்
கண்ணிய முடைய னுவன் கேவல மனுகாச் சித்தன்
அன்னிய ருறவு கொள்வன் அவன்பித்த வாய்வு முள்ளான்
சொன்ன சொல்தப்பா னுகும் சுந்தரி மேலுங் கேளே.

9. புண்ணியமானக் காரியங்களைச் செய்ய எண்ண முள்ள மனத்தை யுடையவர். துன்பம் அணுகாத மனத்தையுடையவர். அயலாருடைய சிநேகத்தையடைவார். இவருக்குக் குழந்தைகள் விருத்தியாவார்கள். இவர் பெருமை உடையவர். பித்தவாயு தேகமுடையவர். தான் சொல்லிய வார்த்தைப்படி தவறிடாமல் நடந்து கொள்ளுவார், பார்வதியம்மையே! நாங்கள் இன்னமும் சொல்லுவதைக் கேட்பீராக.

10. உரோம ங்களதிக முள்ளான் நுண்ணிய நீட்சி யில்லான்
தாமத குணத்தா னுகும் தையரிய மதிக மில்லான்
காமியாம் வாயு பாதை கை காலில் உண்டுகண்டாய்
தீமையாய்க் குணமு முள்ளான் சிறுத்தவர் தம்மைக் காப்பன்.

10. ஜாதகர்தன் உடம்பில் மயிர் அதிகமாகவுடையவர். மிகவும் நீண்டு நுட்பமாயுள்ள தேகமில்லாதவர். தாமதமான சாந்தகுணமுடையவர். அதிக தைரியமான மனமில்லாதவர். காமமுடையவர். காலிலும் கையிலும் மேகவாயுபாதை உள்ளவர்; கெட்ட குணமுமுடையவர். நொந்தவர்களையும் ஏழைகளையும் காப்பாற்றுவார். இவரிடம் இப்படிப்பட்ட குணங்கள் இருப் பதை, பார்வதியம்மையே! நீர் பார்ப்பீராக.

11. மச்சங்கள் வடிவு முள்ளான் மனையாளுக் கினிய னுவன்
பச்சைக ளனேக முள்ளான் நாட்டினின் கீர்த்தி கொள்வன்
மிச்சமாம் செலவு முள்ளான் விதவையைச் சேர்வ னம்மா
அச்சுதன்[1] தங்கை யாளே அவன்பூமி அதிகம் சேர்ப்பன்.

[1] விஷ்ணு.

11. ஜாதகர் தன் உடம்பில் மச்சங்களும் வடுக்களும் உடையவர். இவர் தம்முடைய மனைவிக்கு இஷ்டமானவர். வெட்கம் அச்சம் இவைகளை அதிகமாக வுடையவர். பூமியில் பெருமையை அடைவார். மிச்சப்படும் படியாகச் செலவு செய்வார். விதவைகளிடம் சம்போகஞ் செய்வாரம்மா. பூமிகளை அதிகமாகச் சேர்ப்பார். விஷ்ணுவின் சகோதரியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

12. வண்டிவா கனமு முண்டு மனதினில் மர்மம் முள்ளான்
அண்டின பேரைக் காப்பன் அவன்பித்த தேக வானும்
குண்டனி கலகம் செய்வன் குணமிலாச் செட்டுச் செய்வன்
தண்டமிழ் அல்ப முண்டு சகோதா ருறவு கொள்வான்.

12. ஜாதகருக்கு வண்டிகளும் வாகனங்களு முண்டு. இவர் மனதில் கபடமுடையவர். தன்னைவந்து அடைந்தவர்களைக் காப்பாற்றுவார். பித்த முள்ள தேகத்தை உடையவர். கோள் சொல்லுவார். கலகத்தை உண்டு பண்ணுவார். மேன்மையாயில்லாத வியாபாரத்தைச் செய்வார். இனிய தமிழ் கொஞ்சமாயறிவர். தன் சகோதரர்களிடம் சினேகமாயிருப்பார்.

13. இன்னவன் செங்கை தன்னிலி லிலிடு மச்ச ரேகை
உன்னத சூழி [1] யுண்டு உலகெலா மதிக்க வாழ்வன்
பின்வய ததனில் செல்வம் பலத்திடு தனங்கள் சேர்ப்பன்
அன்னிய ஊரில் வாசம் அதனாலே சுகமு முண்டு.

13. ஜாதகருடைய கையில் மச்சரேகை என்ற ஒருவித ரேகை உண்டு. உயர்ந்த நெற்றியையுடையவர். உலகத்தோரெல்லோரும் இவரை மதிக்கும்படியாக வாழ்வார். இவருடைய வாழ்நாளில் பிற்பாகததில் செல்வம் அதிகப்படும். பணத்தைச் சேர்த்துவைப்பார். பிறந்த கிராமத்தில்லாமல் வேறே கிராமத்தில் வாசஞ்செய்வார். அதனால் இவருக்கு சுகமுண்டு.

14. கருமரு ததனால் யோகம் கனத்திடு மிவனுக் கம்மா
பெருமையாய்ப் பூமி யோங்கும் புத்திர விருத்தி யாகும்
சிறுமையாய் மூன்று வுண்டு செல்வங்கள் பின்னு வுண்டு
உரிமையாய்ச் சித்திர வீடு உரைக்கிறோ மிவனுக் கம்மா.

14. இவருக்குக் கருமருது என்ற கருப்பு மருதமரத்தால் அதிக யோகமுண்டாகும். பார்வதியம்மையே! பூமிகள் மேன்மையான பலனைக் கொடுத்து ஓங்கி செழித்து வரும். சந்ததிகள் விருத்தியையடையும். இவருக்குத் தன் ஆயுளின் முற்பாகத்தில் வறுமைகளும் தரித்திரமுமுண்டு. பிற்பாகத்தில் செல்வம் உண்டாகும். இவருக்குத் தனக்குப் பாத்தியதையுடையதான ஓர் அழகிய சித்திரங்களுள்ள வீடு உண்டாகும் என்று பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகிறோம்.

---

[1] நெற்றி.

15. ஜாதகன் துணைவர் தம்மைச் சாற்று வோமீரைந் தாகும்
போதவே ஆண்பால் நாலு புகல்கன்னி மூன்று மாகும்
நீதியாய்த் தீர்க்க மாகும் நிலைக்காது மற்ற தெல்லாம்
சோதித்துக் கண்டு யாங்கள் சொலுமொழி குன்றி டாது.

15. ஜாதகருக்குச் சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவருக்குப் பத்து சகோதரர்களுண்டு, ஆண் சகோதரர்கள் நால்வர் பெண் சகோதரர்கள் மூவர் நீண்ட ஆயுளையுடையவராக விருப்பார்கள் மற்றச் சகோதரர்களெல்லாம் நிலைத்துராமல் இறந்துவிடுவர். நாங்கள் ஜாதகத்தை நன்றாக ஆராய்ச்சி செய்து பார்த்துச் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

16. இப்படிப் புயண்டர் சொல்ல யியல்முனி பராசர் சொல்வார்
ஒப்புடன் சகோதரங்கள் உறுநான்கு என்றுசொல்வர்
செப்பமா யவர்குணத்தைச் சொல்லுவீ ரென்று கேட்க
மெய்ப்புடன் புயண்டர் சொல்வர் விளங்கிடு முத்தோ னுக்கு ;

16. இவ்விதமாகப் புஜண்டர் என்ற ரிஷி சொல்ல, குணமுள்ள பராசர முனிவர் சொல்லுகிறார். பொருத்தமுள்ளச் சகோதரர்கள் மிகுதியாக நான்கு இருப்பார்கள் என்று சொன்னீர். அவர்களுடைய குணதிசயங்களைச் செவ்வையாகச் சொல்லுவீரென்று கேட்க, உண்மையாகப் புஜண்டர் சொல்லுகின்றார். ஜாதகருடைய பெரிய அண்ணனுக்கு ;

17. அலேச்சலு மதிக மாகும் அவனுக்குப் புத்திர ருண்டு
நிலைக்கவே மாட்டா னெங்கும் நித்திய தரித்திர முள்ளான்
கவலையு மதிக முள்ளான் கடினமாய் வார்த்தை கூறுவன்
தலைச்சனும் புத்திர னில்லான் சத்தியை அதிகம் கொள்வன்.

17. அலேச்சல் திரிச்சல் அதிகமாக விருக்கும். அவருக்குச் சந்ததிகள் உண்டாகும். எந்த விடத்திலும் நிலையாக விருக்கமாட்டார். அவருக்கு எக்காலமும் தரித்திரம் இருக்கும். கவலைகள் அதிகமாக விருக்கும். கடுமையான, அஃதாவது வருத்தத்தை யுண்டுபண்ணக்கூடிய சொற்களைச் சொல்லுவார். முதலில் பிறக்கும் பிள்ளை இல்லாதவர். பெண்கள் அதிகமாக வுடையவர்.

18. தந்தையின் தொழிலைச் செய்வன் செலவுளன் தயையுமுள்ளான்
பிந்திய யிளையோன் சேதி பேசுவோம் பொறுமை யுள்ளான்
சந்ததம் தனங்கள் சேர்ப்பன் சந்ததி யுடைய னுவன்
சொந்தமாய்ப் பூமி சேர்ப்பன் சித்திர வீடுமுள்ளான்.

18. அவர்தன் தகப்பனுருடைய தொழிலைச் செய்பவர். அதிகச் செலவு செய்பவர். தயையை யுடையவர். அடுத்த இளைய சகோதரனுடையசங்கதியைச் சொல்லுகின்றோம். இவர் பொறுமையுடையவர். எப்போதும் பணத்தைச் சேர்த்துவைப்பார். குழந்தைகளை யுடையவர். தான் சொந்தமாகப் பூமிகளைச் சேர்ப்பார். சித்திரங்களுள்ள அழகிய வீட்டையுமுடையவர்.

19. மனதினில் கபடு முள்ளான் மர்மவான் தந்திர வாதி
அனைவரு மெச்சவாழ்வன் அவன் குலத் தொழிலு முள்ளான்
சினமிலான் செலவு செய்வன் ஜகமெலாம் வசியம் செய்வன்
இனங்களை ஆத ரிக்கான் இவன்பாரி குற்ற முள்ளாள்.

19. இவர் தன்னுடைய மனதில் கபடமுடையவர். உண்மையைச் சொல்லாமல் மர்மமாக விருப்பார். தந்திரமுள்ளவர். உபாயமுள்ளவர். எல்லோரும் இவரைப் பெருமைபாராட்டும்படியாக வாழ்வார். தன்னுடைய குலத்தொழிலைச் செய்வார். கோபமிலாதவர். செலவு செய்வார். உலகத் திலுள்ளவர்களைத் தன்பக்கம் வசப்படுத்திக் கொள்ளுவார். தன் பந்துக்களைக் காப்பாற்ற மாட்டார். இவருடைய மனைவி தோஷத்தை யுடையவள். பழுது டையவள்.

20. அதிஷ்டவான் நடைக்கு அஞ்சான் யாவரு முறவு கொள்வன்
பதியது சொந்த முள்ளான் பாலர் களதிக முள்ளான்
ததி நெய்பால் பிரிய முள்ளான் ஜாதகன் தீர்க்க முள்ளான்
நிதிபணி பூஷ ணங்கள் நேர்ப்பா மனேக மாக.

20. இவர் அதிர்ஷ்ட முடையவர். நடப்பதற்குப் பயப்படாதவர். எல்லோரையுஞ் சினேகஞ் செய்து கொள்வார். சொந்தமான வீடு பூமி உள்ளவர். அதிகமான குழந்தைகளையுடையவர். தயிர் நெய் பால் இவை களின் பேரில் ஆசையுள்ளவர். பிறரைத்தனக்கு வசப்படுத்திக் கொள்வார். காரியசித்தியுடையவர். நீண்ட ஆயுளுள்ளவர். தனம், வேலையாட்கள், ஆபரணம் இவைகளை அதிகமாகயடைவார்.

21. அவனுக்கு யிளையோன் தானும் அதிர்ஷ்டவான் ஊக முள்ளான்
தவமிலான் வித்தை யில்லான் சத்துருக் கடங்கான் மேலும்
கவனமாய் வேலை செய்வன் காளைக்குப் புத்திர ருண்டு
[1]நவமதில் தனமும் பூமி நாயகன் சேர்ப்பானென்றேம்.

21. இவருக்கு இளைய சாகோதரன் அதிர்ஷ்டமுடையவர். புத்தி சாலி. புண்ணியத்தைச் செய்யாதவர். இரஜஸ்ஸுண மில்லாதவர். கல்வி யில்லாதவர். சத்துருக்களுக்குத் தோற்கமாட்டார். மேலும் கருத்துடனும் சீக்கிரமாகவும் வேலையைச் செய்வார். இவருக்குப் பிள்ளைகளுண்டு. பூமியில் பணத்தையும் சொத்துக்களையும் இவர் சேர்ப்பார் என்று சொல்லுகிறேம்.

22. ஆயுசு அற்ப மாகும் அவனும் துன்மரண மாகும்
நேயமாய் யிவனுக் கேதான் நிதானமாய்வாழ்வா னம்மா
தூயவே யிவன் பின் வந்தோன் துருசாக நடப்பன் காமி
ஈகுவான் பெண்களுக்கு இவன் பொருளொன்று சொன்னேம்.

22. இவருக்கு அற்பாயுசாகும். இவர் அகாலமான கெட்ட மரணத்தை அடைவார். இவர் ஜாதகருக்குச் சினேகமாய் இருந்து கொண்டு நிதானத்துடன் ஜாதகருக்குத் தாழ்ந்த நிலையில் வாழ்வார். பார்வதியம்மையே! இவருடைய இளைய சாகோதரர் வேகமாக நடப்பார். காம முடையவர். தன்னுடைய பொருள்களை ஸ்திரீகளுக்குக் கொடுத்துவிடுவார் என்று சொல்லுகிறேம்.

[1] பூமி.

23. தனங்களை அதிகம் சேர்ப்பன் செலவுளான் நிதான மில்லான்
மனையாளை விரோதம் செய்வன் மற்றொரு பெண்ணைக் கொள்வன்
இனத்துக்கு விரோதி யாவன் ஏகுவா னன்னிய தேசம்
கனமுடன் யோகம் வாய்க்கும் காலேபின் வயதி லேதான்.

23. இவர் பொருள்களையும் பணத்தையும் அதியமாகச் சேர்ப்பார். செலவு செய்பவர். சாந்தமில்லாதவர். தன்னுடைய மனைவியை விரோதித்துக் கொள்ளுவார். இன்னொரு ஸ்திரீயை வைத்துக் கொள்வார். பந்துக்களுக்கு விரோதியாக விருப்பார். வெளிதேசம் போவார். இவருக்குத் தன்னுடைய ஆயுளின் பிற்பாகத்தில் பெரியயோகம் வந்து சம்பவிக்கும்.

24. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றும் வேனிருபா னென்றில்
போதவே ஆண்டி லேதான் புகர்[1] திக்கினுதித்த மாதை
மேதினில் கொள்வனந்த மெல்லியாள் [2] குணத்தைச் சொல் [வேன்
தீதலா மனத்தா ளாகும் தீங்குமுன் கோபி யாவள்.

24. ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகிறேன். இவ ருக்கு இருபத்தோராவது வயதில் சுக்கிரனுக்குரிய திக்காகியத் தென்கிழக் குத் திக்கில் பிறந்தப் பெண்ணை இந்தப் பூமியில் இவர் விவாகஞ் செய்து கொள்வார். அந்தப் பெண்ணின் குணுதிசயங்களை இனிச் சொல்லுகிறேன். அவள் தீங்கில்லாத, அஃதாவது நல்ல மனத்தை யுடையவள். கெடுதியை விளைவிக்கக் கூடிய முன்கோபத்தை யுடையவள்.

25. உண்டியும் சுருக்க மாகும் உயர்சீல மாவள் மேலும்
அண்டின பேரைக் காப்பள் ஆளனை உறவு கொள்வள்
கண்டித மொழியு முள்ளாள் காளையு மாண்பால் ரெண்டு
பெண்டுகள் ரெண்டும் தீர்க்கம் பேசினே மிவனுக் கம்மா

25. அவள் உணவைக் கொஞ்சமாகச் சாப்பிடுவாள். மேன்மை யான நற்குணங்களுடையவள். தன்னை வந்து அடைந்தவர்களைக் காப்பாற்று வாள் புருஷனைத் தன் வசப்படுத்திக் கொள்வாள். கண்டிதமான திட்டமான வார்த்தைகளை யுடையவள். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறேம் பார்வதியம்மையே!

26. இவனுடை முன்சன் மத்தை எடுத்து முரைக்கக் கேளாய்நாத்
தவசிறு பாக்கம் தன்னில் தனவைசிய ஞகிப் பின்னும்
மனைவியும் மக்க ளோடு மைந்தனும் செட்டு செய்து
அவமதிப் பில்லா ளுகி அவனுமே வாழுந் நாளில் ;

[1] சுக்கிரன். [2] பெண்.

26. ஜாதகருடைய முன் ஜென்மத்தைப் பற்றி நாங்கள் சொல்லுகிறோம், கேட்பீராக. புண்ணிய முள்ள சிறுபாக்கம் என்ற கிராமத்தில் செல்வமுள்ள வைசியனுகப் பிறந்து, பெண்சாதி பிள்ளைகளை யுடையவராகி ஜாதகர் வியாபாரஞ் செய்து, கெட்ட மதிப்பு, கெட்ட பெயரில்லாமல் வாழுகின்ற காலத்தில் ;

27. வந்ததோர் ஊழி தன்னை வரைகிறே னிவனுக் கேதான்
சொந்தமாய்த் தர்மம் தானம் சுயமாகச் செட்டு செய்து
வந்தவர்க் கன்ன மீந்து மைந்தனும் வாழும் போது
அந்தணர் நதியின் பக்கல் அணுகிய அரசு தன்னை ;

27. ஜாதகருக்கு வந்து சம்பவித்த ஓர் ஊழ்வினைப் பாவத்தைச் சொல்லுகிறேன். இவர் சொந்தமாகத் தானம், தர்மம் செய்து தன்னிச்சை போல் சொந்த வியாபாரஞ் செய்து கொண்டு, தன்னை வந்து அண்டினவர்களுக்குச் சாப்பாடு போட்டு, ஜாதகர் வாழுகின்ற காலத்தில், அந்தக் கிராமத்திலுள்ள நதியின் கரைப் பக்கத்தில் இருந்த ஓர் அரசமரத்தை ;

28. பாலகன் வெட்டி விட்டான் பாபங்க ளிச்சென் மத்தில்
கோலமா யணுகி யேதான் குடும்பத்தில் தனிய னவன்
ஏலவே தந்தை காலமி யம்புவே யிருபா னலில்
ஆலமுண் டவனின்[1] பாதம் அடைகுவா னென்று சொன்னோம்.

28. இந்த ஜாதகர் வெட்டி விட்டார். மரத்தை வெட்டின தோஷங்கள் சனியனுக இவரை இப்பிறப்பில் வந்து சார்ந்ததால் இவர் தன்னுடைய குடும்பத்தில் தனியனுக விருப்பார். முன்னே, நாங்கள், தகப்பன் இறந்து போகுங் காலத்தைச் சொல்லுகிறோம். ஜாதகருக்கு இருபத்தினன்காவது வயதில் தகப்பனுர் சிவலோகபதவியை அடைவார், அஃதாவது இறந்து விடுவார் என்று சொல்லுகிறோம்.

29. அன்னையின் காலம் தன்னை அறைகிறேன் முப்பா னென்றில்
இன்னவன் மரண கால மிசைகிறே னெழுப தாண்டில்
கன்னியின் மாதம்[2] தன்னில் கனமுட னம்மா வாசை
மன்னவன் வயிற்றுநோயால் மரணமே யாவான் சொன்னோம்.

29. ஜாதகருடைய தாயின் மரண காலத்தைச் சொல்லுகிறேன். இவருடைய தாய் இவருக்கு முப்பத்தொன்றுவது வயதில் இறந்து விடுவாள். ஜாதகருடைய மரண காலத்தைச் சொல்லுகிறேன். இவர் தனக்கு எழுபதாவது வயதில் புரட்டாசி மாதத்தில் கடுமையான ஒரு வயிற்று நோயால் இறந்து விடுவார் என்று சொல்லுகிறோம்.

30. மறுஜன்மம் காஞ்சி நாட்டில் வைசிய குலமு தித்துப்
பொருள்களு மனேகம்பெற்றுப் பிற்பல செட்டு செய்து
வருவோர்க்குத் தானதர்மம் மன்னவன் செய்வா னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

[1] சிவபெருமான். [2] புரட்டாசி மாதம்.

30. ஜாதகர் அடுத்த ஜன்மத்தில் வைசிய ஜாதியில் பிறந்து அனேக பொருள்களையும் செல்வத்தையும் அடைந்து பிரபலமான பெரிய வியாபாரஞ் செய்து தன்னிடம் வருபவர்களுக்குத் தானமும் தர்மமும் செய்வார். ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! நாங்கள் இன்னும் சொல்லுவதைக் கேட்பீராக.

31. இன்னவன் ஜனனம் தொட்டு இருபது ஆண்டுக் குள்ளே
தன்னிலே அதிக யோகம் தானமும் சுகமு முண்டாம்
பின்னங்க ளணுகா தம்மா பேசுவோ மதன்மேல் தானும்
நன்னிய முப்பான் மூன்றுள் நங்கையே பலனைக் கேளாய்.

31. ஜாதகர் பிறந்த காலம் முதல் இருபது வயதிற்குள்ளே தன்னுடைய குடும்பத்தாருக்கு அதிக யோகமுண்டாகும். செல்வமும் குடும்பத்தாருக்கும் தனக்கும் சுகங்களுமுண்டாகும். யாதொரு குறைவும் நேரிடாது பார்வதியம்மையே ! இருபது வயதிற்கு மேல் முப்பத்துமூன்று வயதிற்குள் நடக்கும் பலன்களைச் சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

32. அதிகமே செலவு நேரும் அவன்செயல் பலித்திடாது
பதியினில் கலக்க மாகும் பாரினி லபவா தங்கள்
விதனமு மதிக முண்டாம் விளம்புவோம் கடனுண் டாகும்
துதிபெறு சகோத ரர்கள் துன்பமாம் நஷ்ட மாகும்.

32. ஜாதகருக்கு அதிகமான செலவுகள் ஏற்படும். இவர் செலவு செய்து செய்யுங் காரியங்களினுல் நல்ல பலனுண்டாகாது. வீட்டில் கஷ்டங்கள் நேரிடும். பூமியில் இவருக்குக் கெட்ட பெயரும் குற்றச்சாட்டுகளும் அதிக மனத்துயரங்களும் மனவேதனையும் உண்டாகும். கடன்களும் ஏற்படும் என்று சொல்லுகிறோம். இவரைப் போற்றுகின்ற சகோதரர்களுக்குத் துன்பமுண்டாகும். மரணமு முண்டாகும்.

33. தேகத்தில் பாதை யுண்டு திரிச்சனு மதிக மாகும்
ஆகவே சுபமு முண்டு ஆகாது நினைத்த வெல்லாம்
பாகமா யதன்மேல் நாற்பான் பகையில்லை சுகமு முண்டு
போகமு மயலூர் தன்னில் பிரபல லாப முண்டே.

33. ஜாதகருக்குத் தன்னுடைய உடம்பில் பாதைகள் ஏற்படும். இவருக்குத் திரிச்சனும் அதிகமாக விருக்கும். இப்படியிருந்தும் சுப காரியங்களும் நடைபெறும். நினைத்த காரியங்களெல்லாம் கை கூடிவரா. இவருக்கு வயது முப்பத்துமூன்றுக்கு மேல் நாற்பது வயது வரையிலும் கெடுதியில்லை. எதிரிகளில்லை, சுகம் ஏற்படும். அயலூரில் சுகபோகங்களும் அதிகமான லாபங்களுமுண்டாகும்.

34. குலத்தொழில் தன்னுல் லாபம் கூறுவோ மதிக மாக
நலமான பூமி யுண்டு நன்மைந்தர் விருத்தி யாகும்
பலவிதத் தொழிலால் லாபம் பகைமனத் திடரும் தீரும்
நிலைவர மாக வாழ்வன் நிகழ்த்துவோ மிதற்குள் ளாக;

34. ஜாதகருக்குத் தன்னுடைய குலத்துத் தொழிலால் அதிக லாப முண்டாகும். நல்ல பலனைத் தரக்கூடிய பூமிகள் உண்டாகும். நல்ல பிள்ளைகள் விருத்தியடைவார்கள். பலவிதமான தொழில்களால் லாபம் ஏற்படும். பகைவர்கள் ஒழிவார்கள். மனத்திலுண்டான கஷ்டங்களும் நிவிர்த்தியாகும். ஓர் உறுதியான நிலையில் இருந்து வாழ்வார் என்று சொல்லுகிறோம். இந்தக் காலத்திற்குள்ளே ;

35. உரோகமுங் கொஞ்சமுண்டு நீங்கிடு முருகர் தம்மால்
சாகிற வரைக்கு மேதான் சஞ்சல மணுகி டாது
ஆகவே உள்ளூர் தன்னில் அவனுக்குப் பலன் கிட்டாது
பாகமாய் அயலூர் தன்னில் பாலர்க்குச் சுகமு முண்டாம்.

35. ஜாதகருக்கு சிறிது நோய் ஏற்படும். முருகருடைய அருளால் அது நீங்கி விடும். இவருக்குத் தான் இறக்கின்றவரையிலும் கஷ்டங்கள் உண்டாகா. ஆனால் இவருக்குத் தனது கிராமத்தில் பலன்கள் கூடிவரா. அன்னிய கிராமத்தில்தான் சுகங்கள் ஏற்படும்.

36. கருமருத தன்னைச் செய்து கனதன லாபம் பெற்றுப்
பெரும்பணி பூஷ ணங்கள் பூமியும் சேர்ப்பா னம்மா
திருவுமே வாச மாகும் சித்திர வீடு செய்வன்
பெருமத வானை பெற்றப் புண்ணிய சாலி கேளாய்.

36. ஜாதகர் கருமருது என்ற கருப்பு மருதமர வியாபாரஞ் செய்து அதிக லாபத்தை அடைந்து அதிகமான வேலையாட்களையும் ஆபரணங்களையும் பூமியையும் சேர்ப்பார். பார்வதியம்மையே! லக்ஷ்மி இவரிடத்தில் வாசஞ் செய்வாள். சித்திரங்களுடைய அழகிய வீட்டைக் கட்டுவார். பெருமை பொருந்திய மதயானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றுப் புண்ணிய சாலியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 57.

1. ஜன்மமும் கடக மாக சேயவன்[1] மீன மாகப்
புந்தியும் வீணை யாகப்[2]புகர்[3]ரவி[4] புல்ல்[5] மாக
மந்தனும்[6] துலேயி லாக[7] மதி[8]தேளில்[9]ராகு கும்பம்
பந்தமாய்க் குருவும் வண்டு[10] பகர்சிகி[11] சிம்மமாக;

அங்கார கன்		சூரியன் சுக்கிரன்	புதன்
ராகு	இராசி		லக்கினம் குரு
	சக்கரம்		கேது
	சந்திரன்	சனி	

1. ஜன்ம லக்கினம் கடகமாகி அங்காரகன் மீனத்திலும், புதன் மிதுனத்திலும், சுக்கிரனும் சூரியனும் ரிஷபத்திலும், சனி துலாத்திலும், சந்திரன் விருச்சிகத்திலும், ராகு கும்பத்திலும், மேன்மையாய்க் குரு கடகத்திலும், ஈனமுள்ள கேது சிம்மத்திலும், இருந்து ;

குறிப்பு.—இந்த ஜாதகத்திற்கு ஜன்ம நட்சத்திரம் அல்லது ஜனனகால தசை குறிக்கப்படவில்லை. ஆயினும் சந்திரன் விருச்சிகத்தில் இருப்பதால் ஜனன நட்சத்திரம் விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை முடியும் வரையிலும் இருக்கவேண்டும். ஜனன லக்கினத்தை யோசிக்குமிடத்து ஜனன நட்சத்திரம் விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம் 1-ஆம் பாதம், கேட்டை 1-ஆம் பாதம் இவைகளில் ஒன்றாக இருக்கக்கூடும். இங்குக் கொடுத்துள்ள ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் அல்லது ரிஷபத்தில் சூரியனும், மேஷத்தில் சனியும், மிதுனத்தில் புதனும்கேதுவும், துலாத்தில் அல்லது விருச்சிகத்தில் குருவும், துலாத்தில் அங்காரகனும், தனுசில் ராகும், மகரத்தில் சுக்கிரனும் ஆகும். சந்திரன் விசாகம் 4-இல் அனுஷம் 1-இல் இருந்தால் சூரியன் மேஷத்திலும் குரு துலாத்திலும் பொருந்தும். சந்திரன் கேட்டை 1-இல் இருந்தால் சூரியன் ரிஷபத்திலும் குரு விரிருச்சிகத்திலும் பொருந்தும். சந்திரன் மேற்குறித்த நட்சத்திரப் பாதத்திற்குரிய அம்சை ராசியிலும் ஆகும்.

[1] அங்காரகன். [2] மிதுனம். [3] சுக்கிரன். [4] சூரியன். [5] ரிஷபம். [6] சனி. [7] துலாம். [8] சந்திரன். [9] விருச்சிகம். [10] பூசம் உள்ள கடகம். [11] கேது.

2. இப்படிக் கிரகம் நின்று லிதன்பலன் சொல்லு மென்றுள்
ஒப்புடன் புயண்டர் தாமும் உரைப்பார்க ளாண்பால் ஜன்மம்
மெய்ப்புடன் கீழ்ப்பால் வீதி விளம்புவோம் உத்தர வாசல்
செப்புவோம் மேற்கி லேதான் சிறந்திடு மடமும் சாலே.

2. இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலனைச் சொல்லுவீரென்று பார்வதியம்மை கேட்கப் புஜண்டர் என்ற ரிஷி சம்மதித்துச் சொல்லுகிறார். ஆண் குழந்தை பிறக்கும். பிறந்த வீதி கிழக்கு மேற்குத் தெருவாகும். பிறந்த வீடு வடவண்டை வாடையாகும், என்று உண்மையாய்ச் சொல்லுகிறோம். மேன்மைதங்கிய மடமும் வெளி மண்டபமும் விருட்சங்களடங்கிய பாதையும் மேற்கில் இருக்குமென்று சொல்லுகிறோம்.

3. சோலையும் குண்ட முண்டு சொல்லுவோம் வடக்கி லேதான்
நீலியும் மாரி தந்தி நிர்மல னீசன் தங்கும்
சீலமாம் சிற்றூர் தன்னில் ஜனிப்பனே கூரை வீட்டில்
பாலகன் சௌரி வமிசம் பண்புடன் ஜனிப்பா னென்றோம்.

3. மேலும் தோப்பும் குளமும் கிணறும் மேற்கில் இருக்குமென்று சொல்லுகிறோம். வடக்குத் திக்கில் துர்க்கையம்மன் கோயில், மாரியம்மன் கோயில், ஆண் யானை முகத்தை யுடையவரான விநாயகர் கோயில், மாசில்லாத பரமசிவன் கோயில் இவை இருக்கும். இவ்விதமான எல்லைகளையுடைய நல்லொழுக்க முள்ளவர்களையுடைய அழகிய ஒரு சிறிய கிராமத்தில் கூரை வீட்டில் ஜாதகர் பிறப்பார். இவர் ஒரு விஷ்ணு குலத்தில் தகுதியாகப் பிறப்பார் என்று சொல்லுகிறோம்.

4. இன்னவன் ஜனன யோக மெழில்மாது தந்தை யோகம்
மன்னிய முன்பின் ஜன்மம் வரும்துணை மனையாள் யோகம்
உன்னிய புத்திர யோகம் உரைக்கிறோம் மிந்நூல் தன்னில்
அன்னையே யாங்கள் சொல்லும் அடைமொழி[1] குன்றி டாது.

4. ஜாதகருடைய ஜனன காலத்திய யோகத்தையும் வல்லமை பொருந்திய தாய் தந்தையர்களுடைய யோகங்களையும், பெருமை பொருந்திய முன் ஜன்மத்தையும் பின் ஜன்மத்தையும் ஜாதகருடைய சகோதரர்கள் மனைவி இவர்களுடைய யோகங்களையும், அவர் தமக்குப் பிறக்கும் புத்திரர் புத்திரிகள் இவர்களின் யோகங்களையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்ற நன்மை தீமையைப் பகுத்தறியக் கூடிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருசி வப்பன்
பந்தமாய் யொடிச்சல் தேகி பாரினில் ஊக சாலி
சந்ததம் தியாகி மோகி சன்மார்க்கன் ஊக முள்ளான்
வருமவர்க் கன்ன மீவன் மறுமனை யார்கள் மோகன்.

[1] விசேடண மொழி.

5. ஜாதகருடைய தகப்பனுடைய குணதிசயங்களைப் பற்றி இனிச் சொல்லுகிறோம். இவர் இரண்டு நிறங்களையுடைய மாநிறமான தேகத்தை யுடையவர். அழகிய மெல்லிய தேகத்தை யுடையவர். பூமியில் யுக்திசாலி, விவேகி. எப்போதும் பிறருக்குக் கொடுக்குந் தன்மையுடையவர். மோக முடையவர். நல்ல நடவடிக்கைகளையுங் குணங்களையு முடையவர். ஊகிக்குஞ் சக்தியுள்ளவர். தன்னிடம் வருகிறவர்களுக்குச் சாப்பாடு போடுவார். அயலாருடைய மனைவிகளின்பேரில் ஆசையுடையவர்.

6. தல்லியும் மற்ப ருகும் கணக்கினில் ஊகை சாலி
நல்லவர் பலர்க ளாலே நாட்டினில் கீர்த்தி யேற்பன்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையும் நேசங் கொள்வன்
தொல்லையு முடையவ னுவன் சோம்பலும் கொஞ்ச முள்ளான்.

6. தகப்பனுருடைய தாயாருக்குத் தோஷம் நேர்ந்து சீக்கிரம் இவர் தாயாரில்லாதவராவார் *. கணக்கில் கெட்டிக்காரர். இவர் அனேக நல்லவர்களால் பூமியில் பெருமையை யடைவார். யாருக்கும் இல்லை என்று சொல்லமாட்டார். எப்படிப்பட்டவரையும் சினேகஞ் செய்து கொள்வார். தொந்தரவும் கடனுமுடைவர். சிறிது சோம்பலு முள்ளவர்.

குறிப்பு.— * பிதுர்ஸ்தானம் மீனம். இதற்கு மாதுர்ஸ்தானம் மிதுனம். இதை அங்காரகனும் கேதுவும் பார்க்கின்றார்கள். மிதுனத்திற்கு ஆறில் சந்திரன் நீசமாய் இருக்கிறார். ஆகையால் மாதுருக்குத் தோஷமிருக்கின்றது.

7. பித்தச் சூடுடைய னுவன் பிறர்பனை விருப்ப முள்ளான்
நத்தின பேரைக் காப்பன் நன்முக வடிவு முள்ளான்
பத்தினி யிஷ்ட னுவன் பாலர்க ளதிக மில்லான்
குத்தமு மெண்ணுச் சித்தன் கூறுவோம் மேலும் கேளே.

7. ஜாதகருடைய தகப்பனார் பித்தச் சூட்டை யுடையவர். பிறருடைய மருதநிலம், வயல்கள் இவைகளின்பேரில் ஆசையுள்ளவர். தன்னை விரும்புகிறவர்களைக் காப்பாற்றுவார். நல்ல முகத்தையும் அழகிய வடிவத்தையும் உருவத்தையும் உடையவர். மனைவியின்பேரில் ஆசையுடையவர். குழந்தைகள் அதிகமாக இல்லாதவர். பிறருக்குக் கெடுதியை நினைக்காத மனத்தையுடையவர். இன்னம் சொல்லுகிறோம், கேட்பீராக.

8. தந்தையின் ஆஸ்தி யில்லான் தன்சுய ஆஸ்தி யில்லான்
பந்தமாய் மாதுரு ஆஸ்தி பாலக னடையா னென்றோம்
முந்தவே துணைவர் தம்மை மொழிகின்றோ மாண்பால் காணுன்
சிந்தையாய்க் கன்னி நான்கு செப்புவோம் தீர்க்க மாக.

8. ஜாதகருடைய தகப்பனுக்கு பிதுரார்ஜித சொத்து கிடையாது, சுயார்ஜித சொத்து கிடையாது, தன்னுடைய தாயாருடைய சொத்தையும் இவர் முறையாக அடையமாட்டார் என்று சொல்லுகிறோம். இவருடன்

பிறந்தவர்களைப்பற்றி முன்னே சொல்லுகிறேம். இவருக்குச் சகோதரன் கிடையாது. நான்கு சகோதரிகள் நீண்ட ஆயுளுடையவர்களாய் இருப் பார்கள் என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—ஜாதகருடைய பிதுர் லக்கினம் மீனம். இதற்கு மூன்றில் ரிஷபத்தில் மூன்றுக் குடையவராகிய சுக்கிரன் சூரியனுடன் இருக்கின்ருர். ஆகையால் பின் ஆண்துணைக்குத் தோஷம், சூரியன் மூன்றில் இருப்ப தால் மூத்த துணைவனுக்குத் தோஷம். மணிகண்ட கேரளம் சகோதர காண்டம் 6-ஆவது பாடலையும், சமஸ்கிருத சம்புஹோராப் பிரகாசா என்ற புத்தகத்தில் சகஜபாவம் 58-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும்.

9. இப்படி யிருக்கும் தந்தை யிவனுக்கு உதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவும் தீரநன் மனத்த ளுகும்
மெய்ப்புடன் சிவந்த மேனி வித்தைக ளதிகம் கற்பன்
தப்பித மொருவர்க் கெண்ணுன் தயாளவான் வாயு தேகன்

9. இவ்விதமா யிருக்கக் கூடிய தகப்பனுக்கு இந்த ஜாதகர் ஜனனமானுர். இந்த ஜாதகருடைய எல்லாப் பலன்களையும் நாங்கள் சொல்லுகிறேம். இவர் தைரியமான நல்ல மனத்தை யுடையவர். மேன் மையான சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவர். கல்வி அதிகமாக வுடையவர். யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார். கிருபை இரக்கம், தயை இவைகளை யுடையவர். வாய்வான தேகத்தையுடையவர்.

10. சொன்னசொல் தவரு ளுகும் சோம்பிடான் காரியத்தில்
கன்னென மொழியு முள்ளான் காளமுன் கோபி யாவன
இன்னவன் சுகபுசிப்பன் யாரையும் நேசம் கொள்வன்
மண்ணின்மேல் செட்டு செய்வன் வண்டிவா கனமு முள்ளான்

10. ஜாதகர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவருமல் காப்பாற்றுவார். தான் செய்யுங் காரியத்தில் சோம்பலில்லாதவர். இனிமையான வார்த்தைகளையுடையவர். முன் கோபத்தையுடையவர். சுகமான நல்ல போஜனத்தைச் சாப்பிடுவார். எல்லோரையுஞ் சினேகஞ் செய்து கொள்வார். பூமியில் வியாபாரஞ் செய்வார், வண்டியும் வாகனமும் உடையவர்.

11. பூமியு மதிகம் சேர்ப்பன் புத்திர விருத்தி யுள்ளான்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிதானமாய் வார்த்தை கூறுவன்
சேமமாம் குடும்ப முள்ளான் திருமகள் வாச முள்ளான்
காமிகன் மூர்க்க னுவன் கசடர்களுறவு கொள்ளான்.

11. ஜாதகர் பூமிகளை அதிகமாகச் சேர்ப்பார், இவருக்குக் குழந்தைகள் விருத்தியாகும். பூமியிலுள்ளவர்கள் இவரைப் போற்றும் படியாகப் பெருமையாக வாழ்வார். நிதானமாகவும் சாந்தமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். இவருடைய குடும்பம் க்ஷேமமாயும்

சௌக்கியமாயு மிருக்கும். லக்ஷ்மி இவருடைய வீட்டில் வாசஞ் செய்வாள். காமமுடையவர், கோபமும் ஆங்காரமு முடையவர். கீழ் மக்கள் குற்ற முள்ளவர்கள் ஆகிய இவர்களுடைய சினேகித்தை யுடையவர்.

12. மாதுரு ஆஸ்தி தன்னை மன்னவ னடைவா னென்றேம்
கோதிலா தந்தை ஆஸ்தி குணமுட னில்லை யென்றேம்
மேதினில் துணைவர் தன்னை விளம்புவோம் மாண்பால் காணும்
தீதிலா பெண்பால் ரெண்டு செப்புவோ மிவனுக் கேதான்.

12. ஜாதகர் தன்னுடைய தாயாருடைய சொத்துக்களை அடைவார் என்று சொல்லுகிறேம். இவருக்குக் குற்றமில்லாத தந்தையினுடைய நல்ல சொத்து கிடையாது. இவருக்குச் சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகிறேம். இவருக்கு ஆண் சகோதரரில்லை,* இவருக்கு குற்றமில்லாத பெண் சகோதரிகள் இருவர் என்று சொல்லுகிறேம்.

* **குறிப்பு.**—மூன்றிற்குடையவரான புதன், கேது அங்காரகன் இவர்களால் பார்க்கப்பட்டுப், பன்னிரண்டில் மறைந்திருக்கின்ருர். இளைய சகோதர ஸ்தானமாகிய மூன்றை அந்தப் பாவகாரராகிய அங்காரகன் பார்க் கின்ருர். ஆகையால், இளைய சகோதரனுக்குத் தோஷமிருக்கிறது. மூத்த சகோதர ஸ்தானமாகிய பதினென்றில் சூரியன் மூத்த சகோதர ஸ்தானுதிபதியாகிய சுக்கிரனுடன் இருக்கின்ருன். ஆகையால் மூத்த சகோதர னுக்குத் தோஷமிருக்கிறது. சம்ஸ்கிருத பலதீபிகை 15-ஆவது அத்தியாயம் 26-ஆவது சுலோகம், சம்புஹோராபிரகாசிகா இவைகளைப் பார்க்கவும். சம்ஸ்கிருத நாரதீயம் மூன்றும் பாவம் 4-ஆவது சுலோகத்தையும் பார்க் கவும்.

13. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் ஒருபா ளுறில்
தீதிலாத் தந்தை வர்க்கம் ஜனித்திடு மாது தன்னை
மேதினில் கொள்வா னம்மா வித்தகன் தனக்குப் புத்திரர்
நீதியாய் உரைப்போம் யாங்கள் நிமிலியே கேட்டி டாயே

13. ஜாதகருக்கு விவாக காலத்தைச் சொல்லுகிறேம். இவ ருக்குப் பதினறு வயதில் தன் தகப்பனுருடைய வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு கெடுதியில்லாத குடும்பத்தில் பிறந்த பெண்ணை இவர் விவாகஞ் செய்து கொள்வார். பார்வதியம்மையே ! அறிவும் செல்வமுமுள்ள ஜாதக ருக்குப் பிறக்குங் குழந்தைகளைப்பற்றி நாங்கள் நியாயமாகச் சொல்லு கிறேம், பார்வதியம்மையே ! கேட்பீராக.

14. புத்திர ராண்பா லொன்று புகலுவோம் பெண்பால் ரண்டு
வித்தகர் முனிவர் கூற விளம்புவா ளம்மை தாமும்
பத்தினி மாதுர் வமிசம் பகருவீ ரென்று கேட்கக்
தீதிலா முனிவர் தாமும் சிறப்புடன் சொல்லலுற்ருர்.

14. ஜாதகருக்கு ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தைகள் இரண்டும் உண்டு என்று சொல்லுகிறேம் இவ்விதமாக அறிஞராகிய

முனிவர் சொல்ல, பார்வதியம்மை சொல்லுகிருர். மாதுரு வம்சத்தை பற்றிச் சொல்லுவீர், என்று பத்தினியாகியப் பார்வதியம்மை கேட்கக் குற்றமில்லாத முனிவரும் பெருமையுடன் சொல்லுகிருர்.

15. மாதுரு துணைவர் தம்மை வழுத்தவே பலத்தைக் காணேம்
மேதினில் தனிய ளாவள் வித்தகி ஒடிச்ச லுள்ளாள்
சீதள முகத்தா ளாகும் செப்புமுன் கோபி யாவாள்
பாதக மொருவர்க் கெண்ணுள் பந்துவு மெச்ச வாழ்வள்.

15. ஜாதகருடைய தாயோடு கூடப் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்ல வலிவு கிடையாது. தாய் பூமியில் கூடப்பிறந்தவர்களில்லாமல் ஒருத்தியாக வாழ்வாள். மெலிந்த தேகமுடையவள், குளிர்ந்த முகத்தை யுடையவள். பேசுவதற்கு முன்னே கோபமுடையவள். எவருக்குங் கெடுதியை நினைக்கமாட்டாள். பந்துக்கள் மெச்சும்படியாகப் பெருமையாய் வாழ்வாள்.

16. அடக்கமு மொடுக்க முள்ளாள் ஆளனுக் கினிய ளாவள்
படகங்க ளெண்ணு நெஞ்சம் யிவள்பித்த சூடாம் தேகம்
நடக்கையும் நல்ல தாகும் நன்மன முடையளாகும்
மடக்கொடி யோக சாலி மர்மமும் கொஞ்ச முள்ளாள்.

16. ஜாதகருடைய தாயார் அடக்கம் ஒடுக்கம் உள்ளவள். புருஷனுக்கு இஷ்டமானவள். கலகங்களை யுண்டு பண்ணுகிற எண்ண மில்லாதவள். இவள் அதிக சூடான தேகமுள்ளவள், இவளுடைய நட வடிக்கைகள் நல்லதாக விருக்கும். நல்ல மனதை யுடையவளாவாள். இவள் யோகமுள்ள பெண்ணுகவிருப்பாள். கொஞ்சம் இரகசியமுள்ளவள்.

17. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்ருள்
மெய்ப்புடன் தந்தை ஜன்மம் விளம்புவீ ரென்று கேட்க
ஒப்புடன் முனிவர் தாமும் உரைப்பார்கள் சோழ நாட்டில்
செப்பமாய்ச் சூத்திர ஞகிச் செய்நில முள்ளா ஞகி;

17. இவ்விதமாக முனிவர் சொல்லப் பார்வதியம்மை கேட்கின்ருர். உண்மையாய்த் தகப்பனுருடைய முன்பின் ஜன்மங்களைப் பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க சம்மதத்துடன் முனிவரும் சொல்லு கின்ருர். தகப்பன் தன் முன் ஜன்மத்தில் சோழ தேசத்தில் ஒழுங்கான ஒரு சூத்திரனுகப் பிறந்து செய்கால் பூமிகள் உள்ளவராகி

18. மனைவி மைந்தரு முண்டாகி வாழ்ந்துமே யிருக்கும் காலம்
அனையவே வந்த ஊழ் அறைகிருேம் கேளு மம்மா
துணையவர் தமக்குப் பாகம் சுதனுமே கொடுக்கா மல்தான்
தனையனும் தன்கைக் கொண்டான் தன்துணை சாபம் சொன்னுன்.

18. மனைவி குழந்தைகள் இவர்கள் உண்டாகி வாழ்ந்து கொண்டிருக்கிற காலத்தில், இவரை வந்தடைந்த ஊழ் வினையைச் சொல்லுகிருேம், கேளும், பார்வதியம்மையே ! இவர் தன்னுடைய சகோதரர் களுக்குப் பாகம் கொடுக்காமல் எல்லாச் சொத்தையும் தானே எடுத்துக் கொண்டார். அதன்பேரில் அவருடைய சகோதரர்கள் இவருக்குச் சாபங் கொடுத்தார்கள்.

19. மற்றொரு ஜன்மம் தன்னில் வரும்துணை ஆஸ்தி யின்றி
உற்றதோர் தனிய ராகி ஊரெலாம் திரிச்ச லாகி
பெற்றிடு பூமி யில்லாப் பின்னொரு ஊரிலே தான்
பற்றியே வாழ்வா ராகும் பாவையால் சுகமு ண்டாகி;

19. பின் ஜன்மத்தில் உனக்குச் சகோதரர்களும் சொத் தும் இல்லாமல் ஒருவனுயிருந்து எல்லாக் கிராமங்களிலும் திரிந்து அலைந்து கொண்டு தனக்கு வந்தடையும்படியான பூமிகள் இல்லாமல் வேறொரு கிராமத்தில் வாழ்வாயாக, என்று சொல்லி இவர்களுக்கு மனைவியால் சுகங்கள் ஏற்பட்டு,

20. சாபங்கள் சொல்லி யேதான் துணையர்கள் கூறி பின்பு
கோபமாய் மறுதே சங்கள் கொண்டனர் துணைவர் தாமும்
பாபத்தா லச்சென் மத்தில் பாவையும் பாலர் நீங்கிக்
கோபத்தால் தில்லை எகி சுந்தரன் மரண மாகி ;

20 சாபங்களைக் கொடுத்துவிட்டுச் சகோதர்களான இவர்கள் பின்னுல் கோபத்துடன் அன்னிய தேசங்களுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். இவ்விதமான பாபத்தால் ஜாதகருடைய தகப்பன் முன் ஜன்மத்தில் மனைவியையும் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து கோபத்தால் சிதம்பரத்திற்குச் சென்று அவ்விடத்தில் இறந்து ;

21. இச்சென்மம் தன்னி லேதான் இவனுமே உதித்துப் பின்பு
லச்சைக ளதிகம் பட்டு நாயகன் திரிச்சலாகி
அச்சுதன் தமைத் துதித்து அவனற்ப ஜீவ னத்தால்
இச்சையாய்த் தந்தை ஆஸ்தி யிவனுக்கு யில்லை யென்ருேம்.

21. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர். இவர் பிறகு நாணமும் வெட்கமும் அதிக முண்டாகித் திரிச்சலும் அலைச்சலு முடைய வராகி ஒர் அற்பத் தொழிலால் தழைத்து இருக்கிருர். இவருக்குத் தன் தகப்பனுருடைய சொத்து கிடையாது என்று சொல்லுகிருேம்.

22. தந்தையின் பின்ஜன் மத்தைச் சாற்றுவோம் காஞ்சி தன்னில்
பந்தமாய்க் கருணீகர் வமிசம் பாலகன் பிறந்து மேலும்
முந்தவே மாலின் கோஷ்டம் முயற்சியாய்க் கணக்கு பார்த்துச்
சந்ததம் வாழ்வா னென்ருேம் சத்தியே மேலுங் கேளே.

22. தகப்பனுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறோம். காஞ்சி வரத்தில் ஓர் ஒழுங்குள்ள கருணீகர் குலத்தில் இவர் பிறந்து மேன்மையான ஒரு விஷ்ணு கோயிலில் கணக்குப் பார்க்கும் வேலேயாளாக அமர்ந்து எப்போதும் வேலேயிலிருந்து வாழ்வார் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! இன்னும் கேட்பீராக.

23. ஜாதகன் முன்ஜன் மத்தைக் கூறுவோம் காஞ்சி மேல்பால்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கிய வன்னிய னுகி
நீதியாய் மனைவி மைந்தர் நீள்நில மதிக முண்டாய்
ஆதியாய் வாழ்ந்து பின்பு அறைகிறோம் மேலும் கேளே.

23. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் காஞ்சீபுரத்திற்கு மேற்கிலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் வளம் பொருந்திய ஒரு வன்னியராகப் பிறந்து நல்லொழுக்கத்துடன் மனைவி குழந்தைகள் இவர்களை யடைந்து நிலங்களை அதிகமாக வடைந்து பரதேசியைப் போலத் தெய்வபக்தியுடைய ராகவாழ்ந்தார். பின்னல் அவருக்கு நடந்தவைகளை மேலேசொல்லுகிறோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

24. சாலேயின் மார்க்கம் தன்னில் தாகப் பந்தலும மைத்துக்
கோலமாய் வருவோர்க் கன்னம் குணமுட னீந்து பின்பு
ஞாலமேல் மரண மாகி நாற்றிசை களுச்சம் தன்னுல்
காலனுல் வரையப் பட்டு தித்தவ னிவனே யம்மா.

24. மரங்களடர்ந்த வழிப்பாட்டையில் தாகவிடாய்த் தீர்க்க ஒரு பந்தல் ஏற்படுத்திக் கஷ்டத்துடன் வருபவர்களுக்குச் சாப்பாடு நல்ல மனத்துடன் கொடுத்துப் பின்னல் பூமியில் இறந்து எல்லாத்திக்குகளிலும் தன்னுல் கீர்த்தி ஏற்படச் செய்து எமனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுப் பிறகு பிறந்தவர் இந்த ஜாதகராவார். பார்வதியம்மையே !

25. இச்சென்மம் தன்னி லேதான் இவன்யோகம் சொல்லக் கேளாய்
மிச்சமாய்ச் செட்டு செய்வன் விளேபுல மதிகம் சேர்ப்பன்
உச்சித பொருள்கள் சேர்ப்பன் உறவெலாம் உதவி செய்வன்
கச்சணி [1]மாதே யாங்கள் கழறின மொழிகுன் றுவே.

25. இந்த ஜன்மத்தில் இந்த ஜாதகருடைய யோகங்களைச் சொல்லுகிறோம். கேட்பீராக. லாபம் ஏற்படும்படியாய் வியாபாரஞ் செய்வார். நல்ல பலிதம்தரக்கூடிய நிலங்களை அதிகமாகச் சேர்ப்பார். அரிய உயர்ந்தப் பொருள்களைச் சேர்ப்பார். எல்லாப் பந்துக்களுக்கும் சினேகிதர்களுக்கும் உபகாரஞ் செய்வார். பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகிற வார்த்தைகள் தவருமல் நடக்கும்.

26. வண்டிவா கன மு முள்ளா னரசர்கள் பேட்டி கொள்வன்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குறைவிலாச் செல்வ முள்ளான்
எண்டிசைக் கீர்த்தி கொள்வன் எதிரியை நாசம் செய்வன்
கண்டித வார்த்தை யுள்ளான் கழறுவோம் மேலுங் கேளே.

---

[1] இரவிக்கை அணிகின்ற

26. ஜாதகர் வண்டியும் வாகனங்களு முள்ளவர். இவருக்கு இராஜாக்களுடைய தரிசனம் கிடைக்கும். எருது பசு இவைகள் இவருக்கு விருத்தியாகும். குறைவுபடாத சொத்துக்களை யுடையவர். எல்லாத் திசைகளிலும் பெருமையையும் புகழையும் அடைவார். தன்னுடைய சத்துருவை அழித்து விடுவார். உறுதியான திட்டமானச் சொற்களை உபயோகிப்பார். இன்னும் சொல்லுகிறோம், கேட்பீராக.

27. இவனுடைப் பிற்சென் மத்தை யியம்புவோ மரங்கம் தன்னில்
அவனியில் வைசியச் சேயாய் அவருமே உதித்து மேலும்
அவனியில் செட்டு செய்து நாடெலாம் கீர்த்தி பெற்றுச்
சிவனுடை அடியார்க் கெல்லாம் செல்வனும் நேய மாவர்.

27. ஜாதகருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறோம். அரங்கம் என்று சொல்லப்பட்ட ஸ்ரீரங்கம் என்ற க்ஷேத்திரத்தில் ஒரு வைசியராக ஜாதகர் பிறந்து வியாபாரஞ் செய்து தேசமெல்லாம் பெருமையையும் புகழையும் அடைந்து, சிவபெருமானுடைய பக்த்தர்கள் தொண்டர்கள் எல்லோருக்கும், செல்வத்தையுடைய இந்த ஜாதகர், சினேகமாகவும் அன்புள்ளவராகவுமிருப்பார்.

28. இவ்வித முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
பவ்வமாய் ஜாதகன் தான் பரசமே விடங்க ளொன்று
திவ்விய மாது கேட்க ஜயமுனி கூற லுற்றார்
நவ்விய மாதுரு ஆஸ்தி நாயக னடைவா னென்றோம்.

28. இப்படி முனிவர் சொல்ல பார்வதியம்மை கேட்கின்றார். ஜாதகர் தன்னுடைய நல்ல பருவமான வயதில் தனத்தை அடையும்படியான விடங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜயமுனி சொல்லுகின்றார். நன்மையை விளைவிக்கக் கூடிய தாயாருடைய சொத்துக்களை ஜாதகர் அடைவார் என்று சொல்லுகிறோம்.

29. இவனுடைத் தந்தை கால மியம்புவோ மிருபா னெட்டில்
அவனியில் மாதுரு காலம் அறைகிறோ மதன்மேல் நான்கும்
நவமதி லிவனின் காலம் நாட்டுவோ மறுபா னைந்தில்
கவனமாய்க் கணித்த மாதம் கனத்தப்பா னயி லேதான்.

29. ஜாதகருடைய தகப்பனருடைய மரண காலத்தைச் சொல்லுகிறோம். தகப்பனர் ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில் மரணமடைவார். ஜாதகருடைய தாயார் தகப்பனுக்குப் பிறகு நான்காவது வருஷத்தில், அஃதாவது ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் இறந்து விடுவாள். ஜாதகருடைய மரணகாலத்தைச் சொல்லுகிறோம். ஜாதகர் தனக்கு அறுபத்தைந்தாவது வயதில் மாசி மாதத்தில்

30. மரணமே யாகியே தான் மறுஜனனம் வேங்கடத்தில்
பெருமையாய் க்ஷத்திரிய னுகிப் பிரபல வணிபம் செய்து
திறமையாய் வாழ்வா னென்றோம் ஜயமுனி கூறும் போது
அருமறை மாது சொல்வாள் அவன்மனை காலம் சொல்வீர்.

30. இறந்து பிறகு மறு பிறப்பில் வேங்கடம் என்று சொல்லப் படும் திவ்ய திருப்பதி க்ஷேத்திரத்தில் பெருமை வாய்ந்த ஒரு க்ஷத்திரிய குலத்தில் ஆணகப் பிறந்து பிரபலமான பெரிய வியாபாரஞ் செய்து சாமர்த்தியமாய் வாழ்வார் என்று சொல்லுகிறேம். இவ்விதமாக ஜய முனிவர் சொல்லும் போது பார்வதியம்மை சொல்லுகிருர். ஜாதகருடைய மனேவியின் மரண காலத்தைச் சொல்லுவீர்.

31. இவன்பின்னுல் மரண மாவள் இதுவல்லால் ஜனனம் தொட்டு
அவனியில் நாலாண் டுக்குள் அனேகமாய்த் துன்பம் வாய்க்கும்
நவமதில் மாதுரு தந்தை நாயகன் தனக்கு ரோகம்
பவமுளவிரைய முண்டாய்ப் பிறந்ததோர் அலேச்ச லாகும்.

31. ஜாதகருடைய மனேவி இவருக்குப் பின்னுல் இறந்து விடுவாள். இதுவுமல்லாமல் ஜாதகருக்குத் தன்னுடைய ஜனன காலம் முதல் நான்கு வயதிற்குள் துன்பங்கள் அதிகமாக உண்டாகும். ஒன்பதாவது வயதில் தாயாருக்கும் தகப்பனுருக்கும் தனக்கும் ரோகங்கள் உண்டாகி அழிவை உண்டாக்கக் கூடிய அதிகச் செலவு ஏற்பட்டுப் பிறந்தது முதல் அலேச்சலு முண்டாகும்.

32. அதற்குமேல் மரண மட்டும் அணுகாவே தரித்தி ரங்கள்
குதர்க்கங்க ளொன்று மில்லே குணமுடன் பாக்கியம் சேரும்
நிதநித லாபம் உண்டாம் நீள்நில மதிகம் சேரும்
சதமான சித்திர வீடு ஜாதகன் செய்வா னென்றேம்.

32. ஜாதகருக்குத் தன்னுடைய ஒன்பது வயதிற்கு மேல் தன் மரண காலம்வரையிலும் தரித்திரங்கள் கிடையாது. கெடுதிகளுங் கிடையாது. நல்ல செல்வங்கள் வந்து சேரும். தினந்தோறும் லாப முண்டாகும். பெரிய பூமிகளே அதிகமாகச் சேர்ப்பார். நீடித்த காலமிருக்கும்படியான சித்திரங் களேயுடைய அழகிய வீட்டைக் கட்டுவார்.

33. பலவித லாப முண்டாம் பாக்கிய மதிகம் சேரும்
நிலவுபோல் யோகம் வாய்க்கும் நினேத்தகா ரியங்கள் கூடும்
உலகினில் செட்டு ஒங்கும் ஊரெலாம் நேய மாகும்
மலேயினில் தவங்கள் செய்யும் மங்கையே மேலும் கேளே.

33. ஜாதகருக்குப் பலவிதமான லாபங்கள் கிடைக்கும். செல்வம் அதிகமாக வந்து சேரும். வளர் பிறை சந்திரனேப் போல யோகம் விருத்தி யாகும். தான் நினேத்தக் காரியங்க ளெல்லாம் கைக்கூடி வரும். பூமியில் வியாபாரம் தழைத்து ஓங்கும். கிராமத்தார் எல்லோரும் ஜாதகருக்குச் சினேகிதர்களாவார்கள். இமயமலேயில் தவங்களேச் செய்கிற பார்வதி அம்மையே ! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகம் 58

1. மந்திரி[1] மீன தாக வானபுக[2] ரிரவி[3]வண்டி[4]
சந்திரன் புந்தி[5] வீணே[6] சனித்தெறுக் காலி[7] லேற
முந்திய கயிறு[8] சீயம்[9] வக்ரன்[10] விடையி[11] லாக
பந்தமாய்ச் சாடி[12] கேது பகர் ஜன்மம் வளே[13] லாக;

குரு		அங்காரகன்	சந்திரன் புதன்
கேது	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் சுக்கிரன்
			ராகு
	சனி		

திருவாதிரை 1-ஆம் பாதம், இராகு தசை இரு 15–7–0

1. குரு மீனத்திலும், ஆகாயத்திலுள்ள சுக்கிரன் சூரியன் கடகத் திலும், சந்திரனும் புதனும் மிதுனத்திலும், சனி விருச்சிகத்திலும், இராகு சிம்மத்திலும், அங்காரகன் ரிஷபத்திலும், அழகாய்க் கும்பத்தில் கேதுவும் இருந்து ஜன்ம லக்கினம் கடகமாக விருந்து ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கிரக் கிரகநிலே பொருத்த முடையதாகும். ரிஷபத்தில் ராகுவும், கடகத்தில் அங்காரகனும் சனியும், சிம்மத்தில் சூரியனும், துலாத்தில் சுக்கிரனும், விருச்சிகத்தில் கேதுவும், தனுசில் சந்திரனும், மகரத்தில் குருவும், கும்பத்தில் புதனும் ஆகும்.

2. இவ்விதக் கோளும் நின்று லியம்புவீர் பலனே யென்றுள்
ஒவ்விய ஆணும் ஜன்மம் உறையில்லம் வடதென் வீதி
நவ்விய மேற்கு வாசல் நாட்டுவோம் கூரை யாகும்
பவ்வமாய் மேற்கில் சோலே பகருவோம் சூழி யுண்டு.

2. இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களேச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை கேட்டார். பிறந்த குழந்தை ஆண்

[1] குரு [2] சுக்கிரன் [3] சூரியன் [4] பூசம் உள்ள கடகம் [5] புதன் [6] மிதுனம் [7] விருச்சிகம் [8] இராகு [9] சிம்மம் [10] அங்காரகன் [11] ரிஷபம் [12] கும்பம் [13] கடகம் [14] மீன்-மீனம்

குழந்தையாகும். வசிக்கின்ற வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேலண்டை வாடையில் கூரை வீடாக விருக்கும் என்று சொல்லுகிறோம். மேற்கில் அழகாய்த் தோப்பும் குளமும் இருக்கும் என்று சொல்லுகிறோம்.

3. மீனத்திலீசன் கோஷ்டம் விளங்கிடு மருகில் காளீ
ஆனதோ ரக்கினி தன்னில் அறைகிறோம் முசல்மான் கோஷ்டம்
பான்மையாய்ச் சந்தி யப்பன் பருகிடு மாழி[1] யுண்டு
ஈனமாம் மாயோன் கோஷ்ட மிலகாது என்று சொன்னோம்.

3. வடகிழக்குத் திக்கில் பரமசிவன் கோயிலும் அதற்கு அருகில் காளிகோயிலும் தென் கிழக்கில் முஸ்லிம் மசூதியும் மேன்மையான சந்திதேவதைகளும் விநாயகர் கோயிலும் இருக்கும். மேலும் தென்கிழக்கில் கிலமாயுள்ள விஷ்ணுகோயில் இருக்கும். இந்தக் கோயில் பிரகாசிக்காத கோயிலாக விருக்கும் என்று சொல்லுகிறோம்.

4. தெற்கினில் வயல்க ளோடை செப்புவோம் சமவூர் தன்னில்
உரைக்கிறோம் சைவச் சேயாய் உதிப்பனு மிந்தப் பாலன்
வரைகிறோம் தந்தை மாதா வரும்துணை களத்திர புத்திரர்
தெரியவே முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

4. தெற்கில் வயல்களும் ஓடையும் இருக்கும் என்று சொல்லுகிறோம். இப்படிப்பட்ட எல்லைகளையுடைய ஒரு நடுத்தரமான கிராமத்தில் ஒரு பிரபல சைவ குலத்தில் ஜாதகர் பிறப்பார். ஜாதகருடைய தகப்பன் தாய் கூடபிறந்தவர் மனைவி பிள்ளைகள் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளை இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம்.

5. தந்தையின் குணத்தைக் கேளாய்ச் சமதேகன் சிவந்த மேனி
சிந்தையில் கபடு மில்லான் சீலனும் கல்வி யுள்ளான்
பந்தமாய்ப் பித்த தேகி பரமன்தன் பூசை செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் ஆதியில் வறுமை யுள்ளான்.

5. ஜாதகருடைய தகப்பனுருடைய குணதிசயங்களைப் பற்றிக் கேட்பீராக. இவர் சமமான தேகத்தை யுடையவர். சிவப்புநிற முடையவர். மனத்தில் கள்ளம் கபடு இல்லாதவர். நல்லகுணத்தை யுடையவர். நல்லொழுக்க முடையவர். வித்தையுடையவர். பித்ததேக முடையவர். சிவபெருமானைப் பூஜிப்பார். தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். முதலில் தரித்திரமும் கஷ்டமும் உள்ளவர்.

6. சகலர்க்கு நண்ப னுவன் தாட்சிண்யன் கனத்த புத்தி
தகைமையாய் வார்த்தை கூறுவன் சற்சன றுறவு கொள்வன்
பகையிலான் பொறுமை யுளான் பந்துபூ சிதனும் நேயன்
வகையான பூமி சேர்ப்பன் மார்மசாஸ் திரங்கள் கற்பன்.

[1] கடல், யானைக்கை நுனி

6. ஜாதகருடைய தகப்பன் எல்லோருக்கும் சினேகிதனுகவிருப்பார். தயை தாட்சிண்யமுள்ளவர். பெரும் புத்தியுடையவர். பொருத்தமாகவும் தருந்தபடியாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். நல்ல குணங்களுடையவர்களுடைய சினேகிதத்தை அடைவார். எதிரிகளில்லாதவர். சாந்தமுடையவர். பந்துக்கள் இவரைப் போற்றுவார்கள், நேசிப்பார்கள். இவர் மேன்மையான நல்ல பூமிகளைச் சேர்ப்பார். மர்ம சாஸ்திரத்தையும் படிப்பார்.

7. சஞ்சல மனத்தா னுகும் சல்லிய மில்லா னென்றோம்
வஞ்சிபால் பெருமை யுள்ளான் வாக்குகள் சுத்த முள்ளான்
அஞ்செலன் றடைந்ததோர் தம்மை ஆதரிப் பானும் மேலும்
நொஞ்சினர்மே லிரக்க முள்ளான் நிமலியே மேலும் கேளே.

7. ஜாதகருடைய தகப்பனுர் சஞ்சலமான மனத்தையுடையவர். அவருக்குக் கடன்கள் ஏற்படா என்று சொல்லுகிறோம். பெருமையையுடையவர். சுத்தமான நல்ல வாக்கு உள்ளவர். பயந்து தன்னிடம் வந்து அடைந்தவர்களைக் காப்பாற்றுவார். வறுமையுள்ளவர்களிடத்தில் இரக்கமுள்ளவர். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக,

8. இவனுடைத் துணைவர் தம்மை மியம்புவோ மாண்பால் ரண்டு
அவனியில்[1] கன்னி ரண்டு அறைகிறோ மிவனுக் கேதான்
நவனியி[2] லிவர்கள சேதி நாட்டுவோ மிரண்டி லேதான்
கவனமிக் குணத்தா னுக்குக் காவலன் பிறப்பா னென்றோம்.

8. ஜாதகருடைய தகப்பனுருடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு ஆண் சகோதரங்கள் இருவர். பெண் சகோதரங்கள் இருவர் உண்டு என்று சொல்லுகிறோம். இந்தச் சகோதரர்களைப்பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். இவ்விதமான குணங்களையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார் என்று சொலலுகிறோம்.

9. ஜாதகன் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த மேனி
மேதினில் சமதே கத்தன் வித்தையு முடையா னுகும்
பாதக மொருவர்க் கெண்ணுன் பந்துவும் மெச்ச வாழ்வன்
வேதனை யில்லா னுகும் விளைபுலம் விருத்தி செய்வன்.

9. ஜாதகருடைய குணதிசயங்களை இனிமேல் சொல்லுகிறோம். இவர் சிவப்பு நிறமுள்ள தேகமுடையவர். சமமான தேகமுடையவர். கல்வியுடையவராகும். எவருக்குங் கெடுதிகளை நினைக்கமாட்டார். பந்துக்கள் இவரைப் போற்றும்படியாகப் பெருமையாக வாழ்வார். துன்பங்கள் இல்லாதவராவர். பயிரிடும் பூமிகளை விருத்தியாக்குவார்.

[1] பூமியில் [2] எதுகையாகும்

10. மால்மக[1] னெப்ப தாகு மவன்சுக போச னத்தன்
சீலமா சார முள்ளான் சிந்தையில் கபடு மில்லான்
ஞாலம் மேல் வறுமை யில்லான் நற்புத்தி நாபி நோயன்
வேலுடைக் கடவுள் பேரில் விருப்பங்கள் கொள்வா னென்றேம்.

10. ஜாதகர் மாகாவிஷ்ணுவின் குமாராகிய பிரமதேவனுக்குச் சமானமானவர். இவர் சுகமான நல்லபோஜனத்தைச் சாப்பிடுவார். நல்ல ஒழுக்கமும் நல்ல ஆச்சாரமும் குணமுமுள்ளவர். மனத்தில் கபடமும் வஞ்சகமும் இல்லாதவர். பூமியில் தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாதவர், நல்ல புத்தியுடையவர். தொப்புளில், அதாவது வயிற்றில் நோயுடையவர். வேலாயுதக் கடவுளாகிய முறுகர் பேரில் பக்தியுள்ளவர் என்று சொல்லுகிறேம்.

11. சித்திர வீடு செய்வன் சிறப்பான குடும்ப முள்ளான்
பத்தினிக் கிஷ்ட னுவன் பலருக்கு நேய முள்ளான்
சுத்தநன் மனத்தா னுகும் சுகமுளான் அலேச்ச வுள்ளான்
சக்தியை வெறுக்கா னென்றேம் தாமதக் குணத்தா னென்றேம்.

11. ஜாதகர் சித்திரங்க ளடங்கிய வீட்டைக் கட்டுவார். மேன்மையான பெருமையுள்ள குடும்பத்தை யுடையவராவர். தன்னுடைய மனைவிக்கு இஷ்டமானவர். எல்லோருக்கும் சிநேகமாயிருப்பார். பரிசுத்தமான நல்ல மனத்தையுடையவர். சுகத்தை யனுபவிப்பவர். ஆனுல் அலேச்சலேயுடையவர். உலக மாதாவாகிய சங்கரியினிடம் வெறுப்பில்லாதவர், அஃதாவது பார்வதியிடம் பக்தியுள்ளவர், தாமதமான சாந்தமான குணத்தையுடையவர் என்று சொல்லுகிறேம்.

12. கரமதில் கமல ரேகை கனத்திடு சுழியு முள்ளான்
திறமையாய்ப் பேச வல்லன் சொன்னசொல் தப்பா னுகும்
உறன்முறை மெச்ச வாழ்வன் உறைந்திடு பித்தச் சூடு
விரைவினில் நடக்க வல்லன் விசேஷமாய்ப் பூமி சேர்ப்பான்.

12. ஜாதகருடைய உள்ளங்கையில் கமலரேகை என்ற ஒரு விதமான தாமரை ரேகை உண்டு. இவருக்குப் பெரிய சுழியுமுண்டு. இவர் தன் பந்துக்கள் தன்னைப்போற்றும்படியாகப் பெருமையுடன் வாழ்வார். இவருக்குப் பித்தச்சூடு உண்டு. வேகமாகவும் சீக்கிரமாகவும் நடக்குஞ் சக்தியை உடையவர். இவர் பூமியை அதிகமாகச் சேர்ப்பார்.

13. தந்தையின் ஆஸ்தி தன்னை ஜாதகன் விருத்தி செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மனைவிக ளிரண்டே யாகும்
இந்தவாறு முனிவர் கூற ஈஸ்வரி கேட்க லுற்றுள்
பந்தமாய் ஜாத கர்க்குப் பகரினீர் தாரம் ரண்டாய்.

[1] பிரமதேவன்

13. ஜாதகர் தன்னுடைய தகப்பனுடைய ஆஸ்தியை விருத்தியாக்குவார். தன்னிடம் வருபவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. இவ்விதமாக முனிவர் சொல்ல, பார்வதியம்மை கேட்கின்றுர். நீர் ஜாதகருக்குத் தாரம் இரண்டு என்று சொன்னீர்.

14. ஏது காரணங்க ளத்தை யியம்புவீ ரென்று கேட்க
மாதவர் சொல்லு கின்றுர் வாக்கினில் கருங்கோள் தங்கத்
தீதான சனியும் பார்க்கச் செப்பினேம் தாரம் ரண்டாய்
ஓதுவார் புயண்டர் தாமும் உத்தமன் குருவே யாகி ;

14. காரணங்கள் என்ன ? அவைகளைச் சொல்லுவீரென்று கேட்க, பெரிய தவங்களைச் செய்கின்ற முனிவர் சொல்லுகின்றுர். வாக்கு ஸ்தானமாகிய இரண்டாவது வீட்டில் இராகு இருப்பதாலும் இந்த வீட்டைக் கொடிய பாபியாகியச் சனி பார்ப்பதாலும் இரண்டு தாரம் என்று சொன்னேம் அதன்பேரில் புஜண்டர் சொல்லுகின்றுர். குரு நல்லவராகி,

குறிப்பு.—களத்திரத்தின் நிலைமையை அறியவேண்டுமானுல் 2, 7, 9, 11-ஆம் பாவங்களையும், இந்தப்பாவாதிகளையும் லக்கினுதிபதியையும் சுக்கிரனையும் ஆராய்ச்சி செய்யவேண்டும். ஆகையால் இந்தப் பாட்டில் இரண்டாவது பாவத்தைப் பற்றிச் சொல்லுகிறுர்.

15. இரண் டேழோன் தன்னை யின்பமாய்ப் பார்த்த தாலும்
திறமையாய் ஏழோன் தானும் திரத்தினி லிருக்க நீரும்
அறைந்திடாதீர் தாரம் ரண்டு அத்திரி முனிவர் சொல்வார்
[1] மறையவனு ரேனுகி மைந்தனு [2] மெட்டோ னுகி ;

15. இரண்டாம் பாவத்திற்குரிய சூரியனையும் ஏழாம் பாவத்திற்குரிய சனியையும் பார்ப்பதாலும், ஏழாம் பாவாதிபதியாகிய சனி ஸ்திர ராசியாகிய விருச்சிகத்திலிருப்பதாலும் நீர் இரண்டுதாரம் என்று சொல்லாதீர் என்று சொல்ல, அத்திரி என்ற முனிவர் சொல்லுகிறுர். குரு ஆறுவது பாவாதிபதியாகியும், சனி எட்டாவது பாவாதிபதியாகியும் இருப்பதாலும் ;

குறிப்பு.—ஏழாம் பாவாதிபதி ஸ்திர ராசியில் இருப்பது களத்திரத்திற்கு நல்லதாகும். ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடலைப் பார்க்கவும். இரண்டாவது பாவத்தை 6–7-ஆவது பாவாதிபதிகள் பார்த்தாலும் இப்பாவத்தில் இருந்தாலும் களத்திரத்திற்குத் தோஷமுண்டாகும். பலதீபிகை 15-ஆவது அத்தியாயம், 5-ஆவது சுலோகத்தையும், ஜாதக பாரிஜாதம் 11-ஆவது அத்தியாயம் 4-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும், இவைகள் கிரகங்கள் இருப்பதைப் பற்றிக் குறிக்கின்றன, பார்ப்பதையும் எடுத்துக் கொள்ளலாம்.

16. துதியத்தோன் சுகத்தோன் சேர்ந்து துன்பமாய்ப் பகையும் பெற்றுப்
பதிக்குமே விரய மாகப் பகர்ந்தனம் மனைவி ரண்டு
வதிஜய முனிவர் சொல்வர் மனைவிக ளிரண்டு என்றீர்
அதமுண்டோ தீர்க்க முண்டோ அறைகுவீர் விவர மாக.

[1] குரு [2] சனி

16. இரண்டாம் பாவத்திற்குரிய சூரியனும் சுகஸ்தானம் என்ற நான்காவது வீட்டிற் கதிபதியாகியச் சுக்கிரனும் ஆகிய இவர்கள் இருவரும் ஒன்ருய்க் கூடிப் பகையாகி இரண்டாம் வீட்டிற்கு விரய ஸ்தானமாகிய பன்னிரண்டாவது வீட்டிலிருப்பதால் இரண்டு தாரம் என்று சொன்னேம். அதற்குமேல் ஜயமுனிவர் கேட்கின்ருர். இரண்டு மனைவிகள் என்று சொன்னீரே ! இந்த இரண்டு மனைவிகளில் ஒருத்தி இறந்து விடுவாளோ அல்லது இரண்டு மனைவிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களோ ! இதை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார்.

17. முன்ஜன்மம் வினையி ஞலே முயலாது முதல்ம னைதான்
பிந்திய மனைவி தீர்க்கம் பேசுவோ மிவனுக் கேதான்
அன்னையும் கேட்க லுற்ருள் அம்முதல் மனைவி எவ்வாறு
துன்பங்க ளடைவாள் நீங்கள் சொல்லுவீர் முனியே என்ருள்.

17. ஜாதகருடைய முன்ஜன்மத்திய ஊழ்வினைப் பாபத்தால் முதல் மனைவி நீடித்திருக்கமாட்டாள். இரண்டாவது மனைவி தீர்க்காயுளை உடையவள் என்று சொல்லுகிருேம். அதன்பேரில் பார்வதியம்மையார் கேட்கின்ருர் அந்த முதல் மனைவி எவ்விதமாக இறந்து விடுவாள் என்பதை முனியே நீங்கள் சொல்லுவீர் என்று கேட்டாள்.

18. அஞ்சினில் காரி [1] நிற்க அவளுக்குக் கருவு தங்கித்
துஞ்சிடு மனைவி என்ருேம் சொல்லுவார் புயண்டர் தாமும்
வஞ்சியும் [2] எந்தக் காலம் வருகுவாள் சொல்வாயதைத்
தஞ்சமாய்ச சொல்லு மென்னச் சாற்றுவா ரத்திரி தாமும்.

18. ஐந்தாவது பாவத்தில் சனி இருப்பதால் ஜாதகருடைய முதல் மனைவிக்குக் கர்ப்பம் உண்டாகி அதனுல் இந்த மனைவி இறந்து விடுவாள் என்று சொல்லுகிருேம். அதன் பேரில் புஜண்டர் கேட்கின்ருர். முதல் மனைவி ஜாதகருக்கு எந்த வயதில் வந்து நேரிடுவாள்[1] எந்த வயதில் இறந்து விடுவாள் என்பதைத் தயையுடன் சொல்லும் என்று கேட்க அத்திரி முனிவர் சொல்லுகின்ருர்.

19. ஐயைந்து ஆண்டி லேதான் அணுகிடும் மனைவி தானும்
உய்யுவா ளேந்து ஆண்டு உரைக்கிருே முப்பா ணண்டில்
தையலு மரண மாகிச் சடுதியில் இரண்டா மாது
வையமேல் வருவா ளென்ருேம் மங்கையும் கேட்க லுற்ருள்.

19. ஜாதகருக்கு இருபத்தைந்தாவது வயதில் முதல் மனைவி வந்து நேரிடுவாள். அவள் ஐந்து வருஷம் உயிருடன் இருந்து வாழ்வாள். ஜாதகருக்கு முப்பதாவது * வயதில் இவள் இறந்து விடுவாள். உடனே இரண்டாவது மனைவி வந்து வாய்ப்பாள்* என்று சொல்லுகிருேம். அதற்கு மேல் பார்வதி யம்மையார் கேட்கின்ருர்.

[1] சனி [2] பெண்

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷூ 24-0-0 முதல் ஷூ 25-0-0 வரையில் குரு தசையில் சுக்கிரபுக்தி நடக்கிறது. வயது ஷூ 29-0-0 முதல் ஷூ 30-0-0 வரையில் குரு தசையில் அங்காரகன் ராகு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. குரு இரண்டாவது தார பாவமாகிய மீனத்திற்கு அதிபதியாகிச் சுக்கிரனையும் லக்கினத்தையும் பார்ப்பதைக் கவனிக்கவும். ராகு இரண்டி லிருப்பதையுங் கவனிக்கவும்.

20. வினையென்று சொன்னீ ரதை விளம்புவீ ரென்று கேட்கக்
கனமுடன் முன்ஜன் மங்கள் காவலன் அருணை உத்திரம்
அனையவே பிரம்ம சேயாய் அவனுமே உதித்து மேலும்
இணையிலாச் செல்வம் பெற்று அரசரால் அரசு செய்து ;

20. இது ஜாதகருக்கு முன் ஜன்மவினைப் பயன் என்று சொன்னீர். அதை விவரமாகச் சொல்லும் என்று கேட்க, முன் ஜன்மத்தைச் சொல்லுகின்ருேம். ஜாதகர் அருணை என்ற திருவண்ணுமலைக்கு வடக்கில் பிராமணராகப் பிறந்து ஒப்பில்லாத அதிகச் செல்வமுடையவராகி அரசாங்கத்தில் வேலையில் அமர்ந்து ஆட்சி செய்து கொண்டு ;

21. வாழ்கிற நாளி லேதான் வந்தஊழ் தன்னைச் சொல்வேன்
ஆழியில் தமையன் பெண்டு அவளுமே விதவை யாகித்
தாழ்வுட னிருக்கும் போது தானவன் மோகம் கொண்டு
பாழான காமத் தாலே பலாத்கார மாகச் சேர்ந்தான்.

21. வாழ்ந்து வருகின்ற காலத்தில் இந்த ஜாதகருக்கு வந்து சம்பவித்த ஊழ்வினைப் பாவத்தைச் சொல்லுகிறேன். ஜாதகருடைய அண்ணன் மனைவி விதைவையாகித் தன்னுடைய அந்தஸ்து குறைந்து இருக்கும்போது அவள் பேரில் இவன் ஆசைகொண்டு பாவத்தை விளைவிக்கக்கூடிய காமத்தால் அவளிடம் பலாத்காரமாய்ப் புணர்ச்சி செய்தான்.

22. அப்படிச் சிலநாள் சென்று அவளுக்குக் கருவு தங்கிச்
செப்புவேன் பண்டி தத்தால் சிலசில அவிழ்த மீய
ஒப்புடன் கருவு நீங்கி உத்தமி மாண்டா ளென்ருேம்
மெய்ப்புடன் அந்தத் தோஷம் மேவிற்று இவனுக் கேதான்.

22. இவ்விதமாகச் சில நாட்கள் சென்றதும் அவளுக்குக் கர்ப்பம் உண்டாகவே அவளுக்குச் சில மருந்துகளைக் கொடுத்து வைத்தியஞ் செய்யக் கர்ப்பங் கலைந்து பிரஷ்டமாகி அவள் இறந்து விட்டாள். இந்தத் தோஷம் உண்மையிலே ஜாதகருக்கு வந்து சம்பவித்தது.

23. இதுவலால் இன்னும் வேறு இயம்புவோ மிவனுக் கேதான்
நிதியிலா ஏழை யோனும் நிமலன்பால் சென்று மேதான்
துதிசெய்து மணங்கள் வேண்டச் சொர்ணங்கள் கேட்க லுற்ருன்
அதிபனும் தாரே னென்ருன் மனமது களிப்புக் கொண்டு ;

23. இந்த தோஷமு மில்லாமல் ஜாதகருக்கு இன்னொரு தோஷம் நேர்ந்தது என்று சொல்லுகிறோம். பணமில்லாத ஏழை ஒருவன் ஜாதகரிடம் சென்று அவரைப் போற்றி விவாகத்திற்காகப் பணத்தைக் கேட்டான். ஜாதகராகிய பிராமணர் அப்படியே கொடுக்கின்றேன் என்று சொல்ல, அவன் மனத்தில் சந்தோஷ முண்டாகி ;

24. வந்ததோர் ஏழை தானும் மணங்களும் நிச்ச யித்து
இந்தவாறு மறையோன் பக்க லியம்பினன் பொருளை யேதான்
சொந்தமாய்த் தாரே னென்றேன் சொல்லிய முடிவி லேதான்
தன்தன மீயா னுகிச் சாற்றுவார் சாபம் தானும்.

24. சென்ற அந்த ஏழையானவன் விவாகத்தை நிச்சயஞ் செய்து விட்டு மறுபடியும் பிராமணரிடஞ் சென்று பணத்தைக் கொடுங்கள் என்று கேட்கத் தன்னுடைய சொந்தமானப் பணத்தைக் கொடுக்கின்றேன் என்று சொல்லிவிட்டப் பிராமணர் கடைசியில் கொடுக்காததால் அந்த ஏழை சாபத்தைச் சொல்லுகின்றார்.

25. இச்சைகள் சொல்லி யேதான் ஈயாத பாவிக் கேதான்
மிச்சமாய் ஜன்மம் தோறும் மெல்லிய ரிரண்டு மாகி
லச்சை களதிக முண்டாய் நாட்டினில் வாழ்வா யென்று
உச்சித சாபம் சொல்லி உதாசீன மாகச் சொல்லி ;

25. இனிமையான வார்த்தைகளைச் சொல்லிக் கடைசியில் பணம் கொடுக்காத பாபி, இனிவரும் ஒவ்வொரு ஜன்மத்திலும் இரண்டு மனைவிகளை அடைந்து வெட்கமும் அச்சமும் அதிகமாகிப் பூமியில் வாழ்வாய் என்று தகுந்ததானச் சாபத்தைக் கொடுத்துவிட்டுத் தூஷணம் பேசிவிட்டு ;

26. இப்படிச் சொல்லி யேதான் ஏழைக்கு வேறொ ருத்தர்
ஒப்பிய தனங்க ளீய உத்தேச முடித்தா னென்றோம்
செப்புவே னந்தத் தோஷம் சேயனைப் பற்றின தாலே
இப்பிறப் பினிலே தார மியம்பினே மிரண்டு மாக.

26. இவ்விதமாகச் சொல்லிவிட்டுப் போன ஏழைக்கு இன்னொருவர் சம்மதப்பட்டுத் தகுதியான பணத்தைக் கொடுக்க அந்த ஏழைதான் எண்ணிய காரியங்களை முடித்துவிட்டான் என்று சொல்லுகிறோம். இந்தத் தோஷமானது இந்த ஜாதகரைத் தொடர்ந்ததால் ஜாதகருக்கு இந்த ஜன்மத்தில் இரண்டு தாரம் என்று சொன்னோம்.

27. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவா ளம்மன் தாமும்
அனையவே ஜாதகர்க்கு அறைகுவீர் சுதர்க ளென்றார்
கனமுடன் சொல்லு கின்றேன் காளைக ளில்லை யம்மா
வினையதைச் சொல்லுமையா விளம்புவார் முனிவர் தாமே.

27. இவ்விதமாக முனிவர் சொல்ல, பார்வதியம்மை, ஜாதகருக்குச் சந்ததிகளைப்பற்றிச் சொல்லுமென்று முனிவரைக் கேட்க, உறுதியாகச் சொல்லுகிறேன். ஜாதகருக்கு ஆண் சந்ததி கிடையாது. பார்வதியம்மையே! என்று முனிவர் சொல்ல, பார்வதியம்மை ஊழ்வினையைச் சொல்லும் என்று கேட்க; முனிவர் சொல்லுகின்றார்.

28. காரி[1] யு மைந்தில் நிற்கக் கழறினேம் புத்திர தோஷம்
மாறியே சொல்லு கின்றார் மறையவ [2]னைந்தைப் பார்க்கத்
தேறிய கருமத் தோனும் சேயாகி [3] லாப மேற
வீரிய மதலை யுண்டாம் விளம்புவார் புயண்டர் தாமும்.

28. சனி ஐந்தாவது பாவத்திலிருப்பதால், புத்திர தோஷத்தைச் சொன்னோம் என்று சொல்ல, இதற்கு மாறுபாடாகப் புஜண்டர் சொல்லுகிறார். குரு ஐந்தாவது பாவத்தைப் பார்ப்பதாலும், கர்மாதிபதியாகிய அங்காரகன் லாபமாகிய பதினோராவது பாவத்திலிருப்ப தாலும், வலிவுள்ள ஆண் குழந்தை உண்டு என்று சொல்லுகிறோம்.

29. பிறக்கினும் தீதாய்ப் போகும் பூர்வதோஷத்தி னாலே
உரைக்கிறோ மதற்குச் சாந்தி உத்தமன் மனைவி யோடு
திறமையாய் ஏழுகார்த் திக்குத் திருத்தணி சென்று மேதான்
ஆறுமுகர்க் கர்ச்சித்தேத்தி அவனுமே உள்ளூர் மீண்டு ;

29. அதற்கு மேல் பலன் சொல்லிவந்த முனிவர் சொல்லுகிறார். ஆண் குழந்தை ஒரு சமயம் பிறந்தாலும் முன் ஜென்ம பாபத்தால் இறந்து விடும். அதற்குச் சாந்தி சொல்லுகிறோம். ஜாதகர் தன்னுடைய மனைவியுடன் ஏழு கார்த்திகை வரையிலும் ஒவ்வொரு கார்த்திகை தினத்திலும் மனதிடத்துடன் திருத்தணிக்குச் சென்று ஆறுமுக கடவுளுக்கு அர்ச்சனை செய்து விளக்கு வைத்து ஏற்றித் தன் கிராமத்திற்குத் திரும்பி வந்து ;

30. ஓராண்டு சஷ்டி நோன்பு உத்தன் விரதம் கொள்ளக்
கூறினேம் மதலை தீர்க்கம் குறையென்று செய்யா னுகில்
வீருது மதலை யென்றேம் வித்தகி கேட்க லுற்றாள்
பாரியை எந்தத் திக்குப் பகருவாய் முனியே என்றாள்.

30. ஒரு வருஷம் வரையிலும் ஜாதகர் சஷ்டி தினம் நோன்பு நோற்று விரதம் இருந்தால் ஆண் குழந்தை நீண்ட ஆயுளுடன் இருக்கும் என்று சொல்லுகிறோம். நாம் சொல்லுவது தப்பிதம் என்று எண்ணி நாம் சொல்லிய பிரகாரம் செய்யாவிட்டால் அந்த ஆண் குழந்தை விளங்காது, பிழைத்திராது என்று சொல்லுகிறோம். அதற்கு மேல் பார்வதியம்மை கேட்கின்றார். ஜாதகருக்கு மனைவி எந்தத் திக்கிலிருந்து வருவாள் என்பதை முனியே நீர் சொல்லுவீர் என்று பார்வதியம்மை கேட்டார்.

[1] சனி [2] குரு [3] அங்காரகன்

31 உத்திரத் திக்கிலே தான் உதித்திடு மிரண்டு மாது
சித்தமாய் மூத்தா ளுக்குத் தீங்காகு மதலை யென்றேம்
வித்தகி யிளையா ளுக்கு விளங்கிடு மாண்பா லொன்று
பத்தினி யிரண்டு என்றேம் பகருவோம் தீர்க்க மாக.

31. ஜாதகருக்கு இரண்டு மனைவிகளும் வடக்குத் திக்கிலிருந்து வந்து தோன்றும். முதல் மனைவிக்குக் குழந்தை தீங்கை, அஃதாவது மரணத்தை உண்மையாக உண்டு பண்ணு மென்று சொல்லுகிறேம். இரண்டாவது மனைவிக்கு ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தைகள் இரண்டு என்று சொல்லுகிறேம். இவைகள் நீண்ட ஆயுளையுடையன வென்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—முதல் மனைவி ஸ்தானமாகிய மகரத்திற்குப் புத்திரஸ்தானமாகிய ரிஷபத்தில் அங்காரகன் இருப்பதையும், ரிஷபத்தைச் சனி பார்ப்பதையும், ரிஷபத்திற்கு அதிபதியாகிய சுக்கிரன் களத்திரஸ்தானத்திற்கு அஷ்டமாதிபதியாகி சூரியனுடன் கூடி அஸ்தங்கதம் அடைந்திருப்பதையுங் கவனிக்கவும். இவ்விதமாக முதல் தாரத்திற்குப் புத்திர தோஷம் அதிகமாக விருப்பதைக் கவனிக்கவும். மேலும் சனி ஐந்தாவது பாவத்திலிருந்து குருவால் பார்க்கப்பட்டால் ஜாதகர் இரண்டு மனைவி யுடையவர். முதல் தாரத்திற்குப் பிள்ளை இல்லை, இரண்டாந் தாரத்திற்குப் பிள்ளையுண்டு என்று பிருகு சூத்திரம் என்ற புத்தகத்தில் 7ஆவது அத்தியாயத்தில் 5 அவது சுலோகத்தில் சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

32. இன்னவன் துணைவர் தமை யியம்புவோம் முத்தோர் காணேம்
உன்னத யிளையோ ருண்டு உரைக்கிறே மாண்பா லொன்று
கன்னியு மவ்வா ருகும் கழறுவோ மிவனுக் கேதான்
அன்னமே யிளையோன் சேதி அறைகிறேம் கேளு மம்மா.

32. ஜாதகருடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகிறேம். இவருக்கு முன்னே பிறந்தவர்கள் கிடையாது. பின்னல் பிறந்தவர்களுண்டு. அவர்கள், ஆண் சகோதரர் ஒன்றும், பெண் சகோதரம் ஒன்றும் என்று சொல்லுகிறேம். இளைய சகோதரனுடைய விஷயங்களைச் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

33. சிவந்திடு மேனி யாவன் சித்தினி சாதி யாவன்
நயம்படக் கூறு ருகும் நாட்டினில் கிருஷி செய்வன்
அயலார்பொன் னிச்சை யில்லான் அவன்பித்த தேகி யாவன்
பவமுள சமமாம் கல்வி பகருவான் கட்டு வார்த்தை.

33. ஜாதகருடைய இளைய சகோதரன் சிவப்பான தேகத்தையுடையவர். சித்தினி ஜாதியைச் சேர்ந்த பெண்களின் குணத்தை உடையவர். இனிமையாகவும் நயமாகவும் பேசமாட்டார். கிராமத்தில் விவசாய வேலையை செய்வார். பிறருடைய சொத்துக்களின்பேரில் ஆசை யில்லாதவர். பித்த தேக முடையவர். நடுத்தரமான படிப்புள்ளவர். புனைந்த வார்த்தைகளையும் பொய்யையும் பழமொழிகளையும் சொல்லுவார்.

சித்தினி ஜாதி.—(1) பத்மினி ஜாதி, (2) சித்தினி ஜாதி, (3) சங்கினி ஜாதி, (4) ஹஸ்தினி ஜாதி என்ற நால்வகை ஜாதி ஸ்திரீகளில் ஒருவகை. சித்தினி ஜாதி ஸ்திரீயானவள் ஷஷ்டி, அஷ்டமி, தசமி, துவாதசி ஆகிய இந்தத் திதிகளில் சம்போகத்தை அடைந்தால் அவள் காமப்பீரிதியை யடைவாள். ஸ்ரீசிவசுப்பிரமணியக் கடவுள் அகஸ்தியருக்குத் திருவாய் மலர்ந்தருளிய சாமுத்திரிகாலட்சண நூலில் கடைசியில் பார்க்கவும். சித்தினி ஜாதி ஸ்திரீயானவள் தாமரை மலர்போன்ற முகத்தையுடையவள், மான்விழியாள், மழ மழப்பான அழகிய சரீர முடையவள், உயர்ந்த கொங்கைகளை யுடையவள், சிறந்த அவயவங்களை யுடையவள், குயில் போன்ற குரலை யுடையவள், யானையைப் போன்ற கம்பீரமான நடையை யுடையவள், சங்கீதம் சிற்பம் அறிந்தவள் முதலியனவாகும்.

34. காரிய சமர்த்த ருகும் கனத்தவர் நேசம் கொள்வன்
மாரியே சொல்வா ருகும் மறுமவான் நற் குணத்தான்
கூறுவோம் தரித்திர மில்லான் குணமுடன் தந்திர வாதி
வீரிய மனைவி புத்திரன் விளம்புவோ மிரண்டி லேதான்.

34. காரியங்களைச் செய்து முடிப்பதில் வல்லவர். பெரிய மனுஷர்களுடைய சினேகிதத்தை யடைவார். ஒன்றை மற்றொன்ருக மாற்றிச் சொல்லுவார். மர்மமாயிருப்பார். நல்ல குணங்களுடையவர், தரித்திர மில்லாதவர் என்று சொல்லுகிறேம். நல்ல குணமுடைய உபாயமுள்ள வாாவர், இவருடைய மனைவி சந்ததிகளைப்பற்றி இரண்டாவது பாவத்தில் சொல்லுகிறேம்.

35. செத்திரு ரோம முள்ளான் சிலுத்து சொல்லா ருகும்
பன்னியே உரைக்க வல்லன் பந்துவுக் கினிய ருவன்
அன்னிய ரிஷ்டம் கொள்வன் அழகுளான் விரோத மில்லான்
தன்னுளே மாதுர் சேதி சாற்றுவோம் கேளு மம்மா.

35. லக்ஷ்மிகரமான ரோமத்தையுடையவர். துன்பத்தை விளைவிக்கக் கூடிய தப்பிதமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். சொன்னதையே சொல்லிச் சொல்லிப் பேசுந் திறமையுடையவர். பந்துகளுக்கு இஷ்டமானவர். அயலாருடைய சினேகத்தை யடைவார். அழகானவர். பகைவரில்லாதவர். பிறரிடத்தில் கோப மில்லாதவர். ஜாதகருடைய தாயாருடைய விஷயங்களைச் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

36. மாதுவின் நிறம்சி வப்பாம் வாயுவாம் பாதை யுள்ளாள்
தீதிலாக் குணத்தா ளாகும் தீங்கதை எண்ணு நெஞ்சம்
சோதிபோல் முகத்தா ளாகும் துராசையு மில்லா ளாகும்
மாதவர் தன்னைத்து திப்பாள் வரனுக்கு நேய முள்ளாள்.

36. ஜாதகருடைய தாயார் சிகப்பு நிறமுள்ளவள், வாய்வுநோய்ப் பாதையை யுடையவள், கெட்ட குணமில்லாதவள், பிறருக்குக் கெடுதி செய்ய

நினைக்காதவள். பிரகாசமான முகத்தை யுடையவள். கெட்ட ஆசை யில்லாதவள். முனிவர்களைத் தொழுவாள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள்.

37. காலதுணை ஊன முள்ளாள் காதலி அதிர்ஷ்ட சாலி
சீலமாம் அன்ன மீவள் ஜனங்களும் மெச்ச வாழ்வாள்
ஞாலம்மேல் பொறுமை யுள்ளாள் நாதனுர் பக்தி பூண்பள்
வேலனைப் பயின்ற மாதே விளம்புவோம் மேலுங் கேளே.

37. தன்னுடன் பிறந்த சகோதர தோஷமுடையவள். அதிர்ஷ்டமுடையவள், நல்லொழுக்க முடையவள், பிறருக்கு அன்னத்தைக் கொடுப்பவள். ஜனங்கள் இவளைப் போற்றும்படியாக மேன்மையாக வாழ்வாள். பொறுமையான சாந்தமான குணமுடையவள். கடவுளின்பேரில் அன்புடையவள். முருகரைப் பெற்றப் பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்வதைக் கேட்பீராக.

38. அவளுடைத் துணைவர் தம்மை அறைகிறே மாண்பால் ரண்டு
நவனியில் கன்னி அவ்வாறு நாட்டுவோ மிவளுக் கேதான்
தவசியே மாமன் மார்க்குத் தாரமே துதிய மென்றேம்
பவமுள குடும்ப மேழை பகருவோம் கேளு மம்மா

38. ஜாதகருடைய தாயாரின் கூடப் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகிறோம். ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரங்கள் இரண்டும் இவளுக்கு உண்டு என்று சொல்லுகிறோம். ஜாதகருடைய அம்மான்மார்களுக்குத் தாரம் இரண்டு என்று சொல்லுகிறோம். அவர்களுடைய குடும்பம் ஏழைக் குடும்பமாகும் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

39. எப்போதும் வறுமை யாக யிருப்பாரோ க்ஷேம முண்டோ
செப்புவீர் முனியே என்றாள் ஜாதகன் தனக்கு மேதான்
ஒப்புடன் முப்பா னைந்தில் மேலேதான் உறையும் யோகம்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

39. ஜாதகருடைய அம்மான்மார்கள் எப்போதும் தரித்திர மான நிலையில் இருப்பார்களா அல்லது அவர்களுக்கு க்ஷேம முண்டாகுமா என்பதை, முனிவரே! சொல்லும் என்று பார்வதியம்மை கேட்க, ஜாதகருக்கு முப்பத்தைந்து வயதான பிறகு அவர்களுக்கு யோக முண்டாகும். ஜடையில் பாம்பையுடைய பரமசிவனின் மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லும் வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும் என்று முனிவர் சொல்லுகிறார்.

40. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் தில்லை மேல்பால்
பந்தமாய்ப் பேரூர் தன்னில் பாலகன் பிரம்ம சேயாய்
வந்துமே மனைவி மைந்தர் வளமுள விசேஷ பூமி
தன்தன முள்ளானுகித் தரணியில் வாழுந் நாளில்;

40. ஜாதகருடைய தகப்பனுருடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். சிதம்பரத்திற்கு மேற்கில் அழகான ஒரு பெரிய கிராமத்தில் அவர் பிராமணராகப் பிறந்து, மனைவி பிள்ளைகளை உடைய வராகி நல்ல வளமான பயிரிடும் பூமிகளையும் தன்னுடைய சொந்தச் செல்வத்தையும் உடைய வராகி, பூமியில் வாழ்கின்ற காலத்தில்;

41. சங்கைக ளொன்று உண்டு சாற்றுவோம் கேளு மம்மா
திங்களை அணிந்தோன் போலே தவசியு மிவன்பால் சென்று
மங்கள வார்த்தை கூறி வயிற்றிற்கு அன்னம் கேட்க
இங்கிவன் இல்லை என்று ரியம்புவார் முனிவர் தாமும்.

41. அச்சமான சந்தேகமான ஒரு சம்பவம் இருக்கிறது. அதைச் சொல்லுகிறோம், கேளும், பார்வதியம்மையே! சந்திரனைத் தன் ஜடையில் தரித்துள்ள பரமசிவனைப் போல் ஒரு தபசி இவரிடம் போய்ச் சுபகரமான நல்ல வார்த்தை சொல்லித் தன்னுடைய வயிற்றிற்காகச் சாப்பாட்டைக் கேட்க, இவர் போஜனம் இல்லை என்று சொல்ல, அந்தப் பசியுள்ள முனிவர் சொல்லுகிறார்.

42. மனைவிமைந் தர்மே லிச்சை வைத்துமே எனக்கு அன்னம்
கனமுட னில்லை என்றீர் காதலி மரண மாகித்
தனங்களும் நிவிர்த்தி யாகிச் சஞ்சல மனத்தா னுகி
இனத்துக்குப் பகையுமாக இருப்பீர்க ளென்று சொல்லி;

42. மனைவி பிள்ளைகள் இவர்கள்பேரில் நீர் ஆசையை வைத்துக் கொண்டு எனக்குச் சாப்பாடு கிடையாது என்று தைரியமாயும் உறுதியாயும் சொல்லிவிட்டீர். ஆகையால் உன்னுடைய மனைவி மரணமாகி உன்னுடைய தனங்களும் உன்னைவிட்டுப் போய் நீர் மனத்தில் துன்பமடைந்து உம்முடைய பந்துக்களுக்கும் நீர் விரோதியாய் இருப்பீர் என்று சொல்லி;

43. அப்புறம் செல்ல லுற்றார் அம்முனிசாபம் நேர்ந்து
செப்புவோ மந்திய காலம் செல்வியு மரண மாகி
ஒப்புடன் மார்ப்பு நோயால் உத்தமன் மரண மாகி
மெய்ப்புட னிக்கு லத்தில் மேவினு னிவனே யென்றேம்.

43. அவரைவிட்டு விலகிப் போய்விட்டார். அந்த ரிஷியின் சாபம் ஜாதகருடைய தகப்பனுரை வந்து அடைந்தது. அவருடைய கடைசிக் காலத்தில் அவருடைய மனைவி மரண மடைந்து பிறகு அவரும் மார்நோயால் மாண்டு மெய்யாக இந்தக் குலத்தில் வந்து இவர் உதித்தார் என்று சொல்லுகிறோம்.

44. முன் ஜன்மம் பிரம்ம சேயாய் முயன்றவ னிச்சென் மத்தில்
அன்புட னிக்கு லத்தில் அனுகும்கா ரணங்க ளென்ன
மன்னவன் முன்ஜன் மத்தில் மறைகளை விரும்பா னுகித்
தன்னிலே உதித்தா னென்றேம் சத்தியே மேலும் கேளே.

44. முன் ஜன்மத்தில் பிராமணராகப் பிறந்தவர் இந்தஜன் மத்தில் இக் குலத்தில் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று பார்வதி கேட்க முனிவர் சொல்லுகிருர். இவர் முன் ஜன்மத்தில் வேதங்களை விரும்பாமல் இருந்து இந்த ஜன்மத்தில் பிறந்தார் என்று சொல்லு கிரும். பார்வதியம்மையே ! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட் பீராக.

45. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிராமண குலமு தித்து
அண்ணலுக் கர்ச்சித் தேத்தி அதிகமாய்ச் செல்வம் பெற்றுத்
தன்னிலே வாழ்வா ளுகும் தாயின்தன் முன்ஜன் மத்தை
அன்னயே சொல்லு கின்ருேம் ஆலங்காட் டதற்குக் கீழ்பால் ;

45. ஜாதகருடைய தகப்பன் மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் பிராமணராகப் பிறந்து சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்து விளக்கு வைத்து அதனுல் அதிகமான செல்வத்தைப் பெற்று வாழ்வார். ஜாதக ருடைய தாயின் முன் ஜன்மத்தைச் சொல்லுகிருேம். பார்வதியம்மையே ! இவள் திருவாலங்காட்டிற்குக் கிழக்கே ஒரு கிராமத்தில் ;

46. வன்னிய மரபில் தோன்றி மைந்தர்களு முள்ளா ளாகிச்
சொர்ணமும் அதிகம் பெற்றுத் துறவிகட் கன்ன மீந்து
மன்னவன் தனக்கு முன்னே மரணமே யாகி யேதான்
பன்னிய பிரம்மன் தன்னுல் பாரினில் வரையப் பட்டு ;

46. வன்னியர் ஜாதியில் பிறந்து பிள்ளைகளைப் பெற்றுத் தனத்தையும் அதிகமாக அடைந்து இல்லறத்தைவிட்டு நீங்கியவர்களுக்குச் சாப்பாடு கொடுத்துத் தன் புருஷனுக்கு முன்னே மரணமடைந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் வந்து ;

47. உதித்த வளிவளே யென்ருேம் உரைக்கிருேம் பின்ஜென் மத்தை
விதிக்கிருேம் அருணை உத்திரம் மேவிய பேரூர் தன்னில்
சதியுள வைசிய வமிசம் தன்னிலே உதிப்பா ளாகும்
அதிபதி யாக வாழ்வள் அம்பிகை யாளே கேளாய்.

47. இவள் பிறந்தாள் என்று சொல்லுகிருேம். இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிருேம். திருவண்ணுமலைக்கு வடக்கே ஒரு பெரிய கிராமத்தில் வைசிய குலத்தில் பிறப்பாள். தன் வீட்டில் தலைவியைப் போல இருந்து வாழ்வாள். பார்வதியம்மையே ! கேட்பீராக.

48. தந்தைதாய் மரண காலம் சாற்றுவோ மீரே ழாண்டில்
வந்திடு மாதுரு கண்டம் வரைகிருேம் நாற்பா ஞென்பான்
எந்தையே தந்தை கண்ட மிவனுக்கு அறுபா ஞென்பான்
முந்திய ஆனி மாதம் மூலநாள் தன்னில் உய்வன்.

48. ஜாதகருடைய தகப்பனுர் தாயார் இவர்களுடைய மரணகாலங்களைச் சொல்லுகிருேம். ஜாதகருக்குப் பதினுன்காவது வயதில் தாயார் மரண மடைவாள். ஜாதகருக்கு நாற்பத்தொன்பதாவது வயதில் தகப்பனுர் மரண

மடைவார். பார்வதியம்மையே ! ஜாதகர் அறுபத்தொன்பதாவது வயதில் ஆனி மாதத்தில் முதல் பாகத்தில் மூல நட்சத்திரத்தில் இறந்து விடும்படி யாக ஜிவித்திருப்பான்.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ௵ 13-0-0 முதல் ௵ 14-0-0 வரை யிலும் ராகு தசையில் சூரிய சந்திர புக்திகள் நடக்கின்றன. மாதுருஸ் தானம் துலாம். இதற்கு லக்கினுதிபதியாகிய சுக்கிரன் கடகத்தில் பகை பெற்றுத் தனக்குப் பகைவராகிய சூரியனுடன் கூடி அஸ்த மடைந்திருப் பதையும் எட்டில் அங்காரகன் இருப்பதையும் எட்டைச் சனி பார்பதையும், மாதுருக்கு ஆயுள் ஸ்தானுதிபதியாகிய சுக்கிரன் மேற்சொன்னபடி இருப்ப தையும் சந்திரனை ராகு பார்ப்பதையுங் கவனிக்கவும். ஆகையால் தாய் ஜாத கருக்கு நீண்டகாலம் இருப்பதற்கு ஹேது கிடையாது. இங்கு சுக்கிரன் வக்கிர கதியில் சூரியனுக்குப் பின் நான்கு பாகைக்குள் இருக்கின்ருர். சூரியன் மாதுரு லக்கினத்திற்கு ஒன்று எட்டிற் குடைய சுக்கிரனுடன் இருக்கின்ருர். ஆகையால் துய்யகோளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாட்டில் சொல்லிய பிர காரம் சூரியனுக்கு மாதுருவை மார்கஞ்செய்ய அதிகாரம் இருக்கிறது. ஜாதக சந்திரிகை 12-ஆவது சுலோகத்தில் சொல்லியபடி ராகுவுக்குச் சூரியனுக்கு வந்த மாரகத்தை எற்றுக்கொள்ள அமைப்பு இருக்கிறது.

பிதுர் மரணம்.—ஜாதகருக்கு வயது ௵ 40-0-0 முதல் 41-0-0 வரையி லும் சனிதசையில சுக்கிரபுக்தி நடக்கிறது. பிதுர்ஸ்தானம் மீனம். மீனலக்கி னத்திற்குச் சனி மாரகாதிபதி என்று ஜாதக சந்திரிகை 67-ஆவது சுலோகத் திலும் பராசரஹோரையிலும் சொல்லி இருக்கிறது. சுக்கிரன் பிதுர்லக் கினத்திற்குத் திரிதியை அஷ்டமாதிபதியாக இருக்கின்ருர்.

* **ஜாதகர் விஷயம்.**—ஜாதகருக்கு வயது ௵ 68-0-0 முதல் ௵ 69-0-0 வரையிலும் கேதுதசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசரஹோரை பிரகாரம் சனி மாரகனுகின்ருர். கேது எட் டில் இருக்கின்ருர். இவர் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் சனியினுடைய மாரக அதிகாரத்தை எற்றுக் கொள்ளும் அமைப்பு உள்ள வராயிருக்கின்ருர். பராசரஹோரைப் பிரகாரம் கடகலக்கினத்திற்குச் சுக்கிரன் பாபியாகி மாரகாதிபதியுமாகிருர். இவர் கேதுவுக்கு ஆறில் லக்கினத்தி லிருப்பதைக் கவனிக்கவும்.

49. இன்னவன் யோகச்சேதி யியம்புவோம் ஜனனம் தொட்டு
மன்னவன் மரண காலம் வழுத்தினேம் யோகம் தானும்
தன்னிலே பிறைபோல் யோகம் தழைத்திடு மிவனுக்கே தான்
சொன்னனே கிருஷி யாலும் சுந்தரன் ஜீவிப் பானும்.

49. ஜாதகருடைய யோகங்களைப்பற்றிச் சொல்லுகிருேம். இவர் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் இவருக்கு யோகமுண்டு என்று சொல்லுகிருேம். இவருக்கு யோகம் வளர்பிறை சந்திரனைப்போலத் தழைத்து ஓங்கும். விவ சாயத்தால் ஜாதகர் ஜீவிப்பார்.

50. சல்லிய மில்லா னுகும் தனம்பூமி சேர்ப்பா னுகும்
சொல்லுமே நெறியுள் ளோனும் சுகமுளான் அன்ன மீவன்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையும் உறவு கொள்வன்
அல்லலு மில்லா னுவன் அவன்சித்திர வீடு செய்வன்.

50. இவர் கடன் படாதவர். பணம் பூமிகள் இவைகளைச் சேகரிப்பார், இவர் நல்ல குணமும் நன்மார்க்கமு முடையவர். சுகமாக வாழ்வார். பிறருக்குச் சாப்பாடு போடுவார். யாருக்கும் இல்லை யென்று சொல்லமாட்டார். எல்லோரையும் சினேகஞ் செய்து கொள்ளுவார். கஷ்டங்கள் இல்லாதவர், இவர் சித்திரங்களடங்கிய அழகிய வீட்டைக் கட்டுவார்.

51. எந்தக்கா லத்தி லேதான் இவனுமே கிருகம் செய்வன்
அந்ததோர் காலம் சொல்வீர் அவன்முப்பான் ரண்டின் மேலாய்
சொந்தமாய்க் கிருகம் செய்வன் சுகமுடன் வாழ்வா னுகும்
சந்தத மிவன்பின் ஜன்மம் சாற்றுவோம் கேளு மம்மா.

51. ஜாதகர் எப்போது வீட்டைக்கட்டுவார் என்பதைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை கேட்க, ஜாதகர் தனது முப்பத்திரண்டாவது வயதில் தனக்குச் சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டுவார். சுகமாக வாழ்வார். இவருடைய பின் ஜன்மத்தைச் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

52. தணிகைக்கு உத்தரத்தில் க்ஷத்திரிய குலத்தி லேதான்
இணையிலாச் செல்வம் பெற்று இவனுமே யுதிப்பா னுகும்
அணையவே குடும்பச் சேதி அறைகிறே மிரண்டி லேதான்
கனமுடன் தவங்கள் செய்யும் காதலி மேலுங் கேளே.

52. ஜாதகர்பின் ஜன்மத்தில் திருத்தணிக்கு வடக்கில் ஒரு கிராமத்தில் க்ஷத்திரிய ஜாதியில் மிகவும் அதிக செல்வமுள்ள குடும்பத்தில் பிறப்பார். இவருடைய குடும்பத்தின் விஷயங்களைப் பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறேம். மேன்மையான பெரிய தவங்களைச் செய்யும் பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

53. உதித்திடு காலம் தன்னில் உயர்ராகு திசையி ருப்புப்
பதித்திடப் பதினைந் தாண்டும் வளர்திங்க ளேழு மாகும்
விதிக்கிறேம் பலனை யாங்கள் விடாயங்கள் துணைவர் விருத்தி
சதியினல் பூமி வாய்க்கும் தன்தேக நலிக ளுண்டு.

53. ஜாதகர் பிறக்கும்போது ராகு தசை இருப்பு பதினைந்து வருஷமும் ஏழு மாதமும் ஆகும். இதற்குப் பலாபலன்களைச் சொல்லுகிறேம். ஆசைகளும் சகோதரர்களும் விருத்தியாகும். பார்வதியம்மையின் அருளினுல் பூமிகள் வந்து சேரும். தன்னுடைய தேகத்திற்கும் நோய்கள் வரும்.

54. தந்தையின் துணைவர் கெண்டம் தன்தாயும் *சேத மாகும்
முந்திய கலக முண்டு முயற்சியாம் நினைத்த வெல்லாம்
வந்திடும் விரோதம் நீங்கும் வரைகிறேம் விவரம் ரண்டில்
சந்ததம் சிலது சேதி தானதைச் சொல்லு கின்றேம்.

54. தகப்பனுருடைய சகோதரர்களுக்குக் கண்டங்களும் மரணமும் நேரிடும். ஜாதகருடைய தகப்பனுருடைய தாயாரும் இறந்துவிடுவாள். முதலில் கலகங்கள் ஏற்படும். நினைத்த காரியங்களை எல்லாம் முயன்று முடிப்பார். பகைவர் ஒழிந்து விடுவார்கள். மற்ற விவரங்களை எல்லாம் இரண்டாம் பாகத்தில் சொல்லுகிறேம். ஆனல் சில விஷயங்களை மாத்திரம் இப்போது இந்தப் பாகத்தில் சொல்லிவிடுகிறேம்.

* குறிப்பு.—இங்கு ராகுதசை இருப்பாகிய 15 வருஷம் 7 மாதம் ஆகிய இந்தக் காலத்திற்குள் நடக்கும் பலனைச் சொல்லிவருவதாலும், முன்னமே 48-ஆவது பாடலில் ஜாதகருடைய தாயாரின் மரணத்தைச் சொல்லிவிட்டதாலும், தகப்பனுடைய விஷயங்களைச் சொல்லிவருவதாலும் " தன்தாயும் சேதமாகும். என்பது தகப்பனுருடைய தாயைப் பெரும்பாலும் குறிக்குமே யன்றி ஜாதகருடைய தாயாரைக் குறிக்காது என்று அறியவும். மீனம் பிதுர்ஸ்தானம். இதற்கு ஆறில் ராகு இருப்பாதல் ஜாதகாலங்காரம் 525-ஆவது பாடலில் சொல்லிய பிரகாரம் தகப்பனுருடைய சகோதரர்களுக்குக் கண்டம் நேரிடும். " ஆறுமிடத்திலாய கருங்கோள் . . . . .அவன் தசைபோாய்வரினும் பலமுள்ளச் சகோதரம் நீருய் உயிர் விடும். . " *பிதுருக்கு மாதுருஸ்தானம் என்பது 9-க்கு 4-ஆமிடமாகிய மிதுனம் ஆகும். மிதுனத்திற்கு மூன்றிற்குடைய சூரியன் பராசரஹோரைப் பிரகாரம் மாரகாதிபதி, இவர், மாரகஸ்தானமாகிய இரண்டில் இருக்கின்ருர். ராகு, பராசரஹோரைப்பிரகாரமும், சூரியனுடைய பலனைக் கொடுக்கவேண்டும். ஆகையால் இராகு பிதுருவின் தாயாருக்குத் தன் தசையில் மரணத்தைக் கொடுக்கக்கூடும்,

55. மந்திரி[1] தசை கேளாய் வரும்சுபம் தானியம் சேரும்
சந்ததம் மனைவி வாய்க்கும் சகலரும் நேச மாவர்
முந்திய பூமி சேரும் முயற்சியாம் குடும்பம் தானும்
எந்தையே கிருஷி ஓங்கும் இடருகள் வந்து நீங்கும்.

55. குருதசையின் பலனைச் சொல்லுகிறேம், கேட்பீராக. சுபங்கள் நடக்கும். தானியம் வந்துசேரும். ஜாதகருக்கு மனைவிவந்து நேரிடுவாள். எல்லாரும் ஜாதகருக்குச் சினேகிதராவார். மேன்மையான பூமிகள் வந்து சேரும். குடும்பத்தில் முயற்சிகள் செய்வார்கள். பார்வதியம்மையே! விவசாயம் விருத்தியாகும். கஷ்டங்கள் வந்து நீங்கிவிடும்.

56. காலிகள் விருத்தி யுண்டாம் கனத்திடு மாள்கள் தாமும்
ஞாலம் மேல் பெருமை யுண்டாம் நாதனுர் பூசை கொள்வன்
சாலவேத னங்கள் சேரும் தன்மனை † கண்டமாகும்
வேல்விழி யிரண்டாம் மாது மேவுவா ளென்று சொன்னேம்.

---

[1] குரு

56. கால்நடைகள் விருத்தியாகும். வேலையாட்கள் அதிகப்படுவார்கள் பூமியில் ஜாதகருக்குப் பெருமையும் புகழும் உண்டாகும். கடவுளை பூஜிப்பார். பணம் அதிகமாக வந்து சேரும். தன்னுடைய மனைவி இறந்து விடுவாள். வேலைப்போன்ற கண்களையுடைய பெண் இரண்டாந் தாரமாக வந்து வாய்ப்பாள் என்று சொல்லுகிறோம்.

† குறிப்பு.—" தன்மனை " என்பது ஜாதகருடைய மனைவி ஆகும். முந்தியே 19-ஆவது பாடலில் ஜாதகருடைய முதல் மனைவி, ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இறந்துவிடுவாள் என்று சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். அப்போது குருதசை நடக்கிறது.

57. துணைவர்க்குச் சுபமே யுண்டு சுற்றத்தார் பகையு முண்டு
இணையிலாச் சூத கங்கள் இலகிடும் காலி சேதம்
கனமுடன் அலைச்சல் காணும் கதித்தவர் உருவு மாறும்
அனையவே விவிரம் ரண்டில் அறைகிறோம் கேளு மம்மா.

57. ஜாதகருடைய சகோதரர்களுக்குச் சுபங்கள் நடக்கும். பந்துக்களுடைய விரோதமும் ஏற்படும். பெரிய சூதகங்கள் வந்துநேரிடும். கால்நடைகள் நஷ்டமாகும். அலைச்சல்கள் அதிகமாக விருக்கும். அவருடைய பிரகாசமான வடிவம் மாறுதலை அடையும். மற்ற விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 59

1. சந்திரன் ராகு வெள்ளி[1] சேய்[2] துலாம் ஞானி[3] மேடம்
மந்திரி[4] காரி[5] மேரு[6] மால்[7]ரவி[8] மாதை[9] யாக
இந்தவாறு கிரகம் நின்று லக்கினம் கடக மாக
அந்ததோர் பலன்கள் எவ்வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

	கேது		
	இராசி		லக்கினம்
	சக்கரம்.		
சனி குரு		ராகு அங்காரகன் சந். சுக்.	சூரியன் புதன்

சுவாதி 3-ஆம் பாதம் : ராகு தசை 5–10–0.

1. சந்திரனும் ராகுவும் சுக்கிரனும் அங்காரகனும் துலாத்திலும், கேது மேஷத்திலும், குருவும் சனியும் தனுசிலும், புதனும் சூரியனும் கன்னியிலும் இருந்து, இவ்விதமாகக் கிரகங்களெல்லாம் அமைந்து, கடகலக்கினத்திற் பிறந்த ஜாதகருக்குப் பலாபலன்கள் எவ்விதமாக யிருக்கும் மென்பதை, முனிவரே ! நீர் சொல்லுவீராக.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கரகிரகநிலை பொருத்த முடையதாகும்:—மேஷத்தில் அங்காரகனும், ரிஷபத்தில் ராகுவும், கிழக்கே அஸ்தமனத்திலுள்ள புதனும், கடகத்தில் குருவும், சிம்மத்தில் சனியும், விருச்சிகத்தில் சுக்கிரனும் கேதுவும், மகரத்தில் சூரியனும், கும்பத்தில் சந்திரனும் ஆகும்.

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது ஆண்பால் ஜனமம்
பெருந்தந்தை யில்லம் சொல்வேன் பேரூராம் கீழ்மேல் வீதி
மறலியின் வாடை யாகும் மால்சிவன் தந்தி மேற்கில்
அரிவாக னத்தாள் வாயு அனேகமாய் மஸ்தா னுண்டு.

2. குறுகிய முனியாகிய அகஸ்திய முனிவர் சொல்லுகிறார். குறித்துக் கேட்ட குழந்தை ஆண் குழந்தையாக ஜனிக்கும். பிறந்த வீடு தகப்பனர் வீடு என்று சொல்லுகிறேன். இது பெரிய ஊரில் கிழக்கு

1 சுக்கிரன் 4 குரு 7 புதன்
2 அங்காரகன் 5 சனி 8 சூரியன்
3 கேது 6 தனுசு 9 கன்னி

மேற்கு வீதியில் தென்னண்டை வாடையிலிருக்கும். விஷ்ணுகோயில் சிவன்கோயில், விநாயகர்கோயில் இவைகள் மேற்கிலும், காளியம்மன் கோயில் வடமேற்குத் திக்கிலும் உண்டு. அனேகம் பைத்தியக்காரர்களும் இவ்வூரிலுண்டு.

3. உத்தரம் கெடியு முண்டு உறங்கிடு மென்று சொல்வோம்
வெற்றியா மரசர் வாசம் விசேஷமாய்ச் செட்டு ஒங்கும்
இத்தகை யடையா ளங்கள் இவனுமே நான்காம் ஜன்மம்
சித்தசன் [1] கங்கை சேயாய் செப்பலா மாதே யாங்கள்.

3. வடக்குத்திக்கில் கோட்டையுமுண்டு. அதில் வேலையில்லாமல் அது தூங்கிக்கொண்டிருக்கும் துர்க்கைக் கோயிலுமுண்டு. அரசாங்கத்தார் அந்தப் பெரிய ஊரில் வாசஞ் செய்துகொண்டிருப்பார்கள். வியாபாரங்கள் அதிகமாக நடந்து கொண்டு விருத்தியாகிவரும். இப்படிப்பட்ட அடையாளங் களும் எல்லைகளுமுள்ள ஒருபெரிய பட்டணத்தில் ஜாதகர் மன்மதனைப்போல அழகுள்ள நான்காவது குழந்தையாக வேளாளர் தொழிலுள்ள சைவ குலத்தில் உதிப்பார் என்று நாங்கள் சொல்லக் கூடும், பார்வதியம்மையே!

4. வந்தவன் குடும்பச் சேதி வரைகிறே மினிமே லாக
தந்தையின் துணை ஆண் ஒன்று சத்திமார்ரெண்டு தீர்க்கம்
பிந்திய துணைஆ ணுக பேசுவோம் தாயே யாங்கள்
அந்தவன் சேதி சொல் வோம் அற்பமாம் கல்வி யென்றோம்.

4. ஜாதகருடைய குடும்பத்தின் விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகிறோம். தகப்பனுருடன் பிறந்தவர்கள் ஆண் ஒருவரும், பெண்கள் இருவரும் நீண்ட ஆயுளையுடையவர்களாக இருப்பார்கள். பார்வதி யம்மையே! பிந்திய சகோதரர் ஆண் சகோதரர் என்று நாங்கள் சொல்லு கிறோம். இந்த இளைய சகோதரனைப்பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு வித்தை குறைவாகவிருக்கும் என்று சொல்லுகிறோம்.

5. பயிர்த் தொழில் புரிவா னும் பாலகன் மாநி றத்தன்
அயலார்பொன் இச்சை யுண்டு அவசர மனத்த னும்
பயமிலான் எதிரிக் கஞ்சான் பகருவான் தந்திர வார்த்தை
ஜயம்செய்வ னெடுத்த வேலை ஜனித்தநாள் முதலாய்த் துன்பம்.

5. விவசாயத்தொழிலைச் செய்வார். மாநிறமுள்ள தேகத்தை யுடையவர். பிறருடைய சொத்தின்மேல் ஆசையுள்ளவர். அவசரமாகச் சீக்கிரமாக எண்ணக் கூடியவர். பயமிலாதவர். பகைவர்களுக்குப் பயப்பட மாட்டார். தந்திரமாகவும் உபாயமாகவும் பேசக்கூடியவர். தான் ஆரம்பித்த க்காரியத்தைப் பூர்த்தி செய்வர், பிறந்த காலம் முதல் இவருக்குக் கஷ்டங்களுண்டு.

---

[1] மன்மதன்

6. சல்லியப் பாதை நேரும் சதுஷ்பா தம் நாச மாகும்
இல்லமும் தூறு மென்றே மிடருக ளந்த மெய்தும்
பில்லிகள் வைத்த தென்று புகலுவார் சிலருமே தாமும்
எல்லைகள் சேத மெய்து மிடுக்கமாம் குடும்ப மென்றோம்.

6. இவருக்குக் கடனால் துன்பங்கள் ஏற்படும். கால்நடைகள் நஷ்ட மடையும். வீடும் இலமாகும். கடைசியில் கெடுதிகள் வந்து நேரும். சூனியம் வைத்து விட்டார்கள் என்று சில ஜனங்கள் சொல்லுவார்கள். பூமிகள் நாசமாகும். குடும்பம் கஷ்டத்தை யடைந்து ஒடுங்கிவிடும் என்று சொல்லுகிறோம்.

7. தரித்திர முடைய னாகும் சங்கையைப் பின்னால் சொல்வேன்
அரிவையும் ஒன்றே யாகும் அணுகிடும் வடபாலாகப்
பெரும்சுதர் ஆண்பால் மூன்று பேதையு மவ்வாறு தீர்க்கம்
மருவிப்பின் வேருய்ச் செல்வர் வகுக்குகிறோம் புத்திர பாவம்.

7. இவர் தரித்திரமுடையவர். காரணங்கள் முதலியவைகளைப் பின்னால், அஃதாவது பின் பாகத்திற் சொல்லுகிறேன். இவருக்கு ஒரே மனைவியாகும். அவள் வடக்குத்திக்கிலிருந்து வருவாள். இவருக்கு மூன்று பிள்ளைகளும் மூன்று பெண்களும் உண்டு. இவர் முதலில் குடும்பத்தில் ஒற்றுமையாகவிருந்து பின்னால் குடும்பத்தைவிட்டுப் பிரிந்துபோய் விடுவார். இவருடைய புத்திரர்களின் விஷயங்களைப் பின்னால் சொல்லுகிறோம்.

8. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சகலர்க்கும் நல்லோ னவன்
சிந்தையும் நல்ல தாகும் சிறப்புள குடும்பம் முன்னால்
பிந்தியும் நசிக்கு மென்றோம் பயிர்த்தொழில் புரிவா னாகும்
நொந்திடும் வலிய நெல்லும் நேருவான் மாநி றத்தான்.

8. ஜாதகருடைய தகப்பனுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் எல்லோரிடத்திலும் நல்லவராக விருப்பார். நல்ல எண்ணமுடையவர். முன் பாகத்தில் இவருடைய குடும்பம் க்ஷேம மாயும் மேன்மையாயும் இருக்கும். ஆனால் பிற்காலத்தில் குடும்பம் நொந்துபோய்விடும் என்று சொல்லுகிறோம். இவர் விவசாயத்தொழிலைச் செய்வார், வளமுள்ள நெற்பயிர் பூமிகளும் செழிப்பில் குறைவு அடையும். இவர் மாநிறமுள்ள தேகத்தை யுடையவராவார்.

9. கல்வியு சமம தாகும் கருதிடான் கட்டு வார்த்தை
இல்லையென் றுரைக்கமாட்டா னிடரெண்ணுன் யாவ ருக்கும்
மல்லில்முன் செல்லா னாகும் மறித்துரை கூரு னாகும்
எல்லையால் சீவிப் பானும் பாதக முடைய னாமே.

9. இவருக்கு வித்தை நடுத்தரமானது. புனைந்த வார்த்தைகளை யும் பொய்வார்த்தைகளையும் உபயோகிக்க எண்ணமாட்டார். யாருக்கும் இல்லை யென்று சொல்லமாட்டார். யாருக்குந் தீங்குகளை நினைக்கமாட்டார். சண்டையில் முன்னே போகமாட்டார். தடுத்துப் பதில் சொல்லமாட்டார். பூமியால் ஜீவனஞ் செய்வார். துரோக முடையவராவார்.

10. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் காதலி யிஷ்ட னுவன்
உடன்படான் ஏழை யோர்க்கு உறுதியில் லாதா னுகும்
தடபுடல் செய்கை யுண்டு சகடுவா கனமும் சேர்ப்பன்
மடையரை உறவு கொள்ளான் மனமது சஞ்ச லத்தான்.

10. இவர் கடன் வாங்குவார். அதைத் தீர்த்துவிடுவார். மனை விக்கு இஷ்டமாயிருப்பார். ஏழைகளிடத்தில் சம்மதித்து நடந்து கொள்ள மாட்டார். அவர்களுக்கு உதவி செய்யமாட்டார். நிலையான மனதில்லாதவர். தடபுடலாயும் டம்பமாயும் காரியங்களைச் செய்வார். வண்டி சவாரிசெய்யும் பிராணிகள் இவைகளைச் சேர்ப்பார். மூடர்களிடத்தில் சினேகஞ் செய்ய மாட்டார். துன்பமுள்ள மனத்தை யுடையவர்.

11. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைக் கேண்மோ அழகுளான் மாஞ்சிவப்பன்
உன்னதக் கல்வி கற்பன் உயர்வான குடும்ப மேற்பன்
கன்னென மொழியே சொல்வன் கணக்கினில் ஊக வானே.

11. இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார். ஜாதகருடைய குணுதிசயங்களைச் சொல்லுகிறேம் கேட்பீராக. இவர் அழகுள்ளவர். மாமரத்தின் துளிரைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறமுள்ளவர். உயர்ந்த மேன்மையான வித்தையை யடைவார். மேன்மை யான குடும்பத்தை யுடையவர். இனிமையான வார்த்தைகளைச் சொல்லு வார். கணிதத்தில் புத்திக் கூர்மை யுள்ளவர். கெட்டிக்காரர்.

12. பலவிதச் செட்டுச் செய்வன் பரஉப காரி யாவன்
நிலமது சேர்ப்பா னுகும் நினைத்தது முடிக்கவல்லன்
புலவன்போல் மொழிவா னுகும் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்
தலவாசம் செல்வா னுகும் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு.

12. ஜாதகர் பல விதமான வியாபாரங்களைச் செய்வார். பிறருக்கு உதவி செய்வார். பூமிகளைச் சேகரிப்பார். நினைத்த காரியத்தைச் செய்து முடிக்குஞ் சக்தியுள்ளவர். பண்டிதனைப் போல் பேசுவார். தன்னைப் புகழ்ந்து பேசுபவர்களைக் காப்பாற்றுவார். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். கால்நடைகள் விருத்தியாகும்.

13. தந்தைபோல் வாழ்வா னுகும் சந்தேக மனத்தா னுகும்
சூதினல் நீங்கும் பூமி சேர்ப்பானும் வறுமை காணுன்
பாதக மனட்செல் லாதான் பராசரும் தடுத்துச் சொல்வார்
ஓதினீர் யோகம் எவ்வாறு உறைப்பீர்க ளந்தச் சங்கை.

13. ஜாதகர் தன் தகப்பனுரைப்போல வாழ்வார். சந்தேகமான மனத்தையுடையவர். சூதுமார்க்கத்தில் தன்னைவிட்டு விலகிப்போகும் பூமி களை மறுபடியும் சேர்ப்பார். தரித்திரமும் கஷ்டமுமில்லாதவர். கெட்ட வழிகளில் தன்மனதைச் செல்ல விடமாட்டார். இவ்விதமாகச் சொல்லிவர பராசர முனிவரானவர் தடுத்துக் கேட்கிறுர், ஜாதகருக்கு எவ்விதமாக யோகத்தைச் சொன்னீர் ? அந்தக் காரணத்தைச் சொல்லுவீர்கள்.

14. மதி[1]புகர்[2] சேயும்[3] நாலில் மால்[4] ரவி[5] மூன்றில் தங்க
அதுபலன் யோக மெய்தும் ஐந்தாண்டு முதலா மாக
நிதிபூமி கன்று காலி நிலம்செய்தல் யாவும் நன்மை
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

14. சந்திரன் சுக்கிரன் அங்காரகன் இவர்கள் நான்காம் பாவத்திலும், புதனும் சூரியனும் மூன்றுவது பாவத்திலும் இருப்பதால், ஜாதகருக்கு ஐந்து வயது முதல் யோகமுண்டாகும். தனம், பூமி, கால் நடைகள் இவைகள் எல்லாம் ஜாதகருக்கு உண்டாகி நிலைத்துவிடும். சீர் பட்டும் விடும். எல்லா விதத்திலும் நன்மையுண்டாகும். பரதேசிகளைக் காப் பாற்றும் பார்வதி யம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—சூரியனும் புதனும் கூடி யிருப்பதைப்பற்றி சாராவளி 15-ஆவது அத்தியாயம் 4-ஆவது சுலோகத்தையும், ஜாதகபாரிஜாதம் 8-ஆவது அத்தியாயம் 1-ஆவது சுலோகத்தையும், பிருஹத்ஜாதகம் 14-ஆவது அத்தியாயம் 1-ஆவது சுலோகத்தையும், ஜாதகதத்துவம் 11-ஆவது விவேகா, 87-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். சந்திரன் அங்காரகன் சுக்கிரன் இவர்கள் கூடியிருப்பதைப்பற்றி இந்தப் புத்தகங்களையும் பார்க்க லாம். மேலும் கூட்டக் கிரகங்களைப்பற்றி கர்கஜாதகம், பலபத்திரஹோராரத்தி னம் பலதீபிகை இவைகளையும் பார்க்கலாம். இங்கு, சந்திரன் அங்காரகன் சுக்கிரன் இவர்களில் சந்திரன் லக்னுதிபதியாயும், அங்காரகன் ஐந்திற்குப் பத்திற்குடைய யோககாரகனுகவும், சுக்கிரன் நான்கு பதினென்றிற்குடைய வராகவும் அமைந்து கேந்திரத்தி லிருக்கின்றுர்கள்.

15. தன்துணை முன்னேர் சேதம் தங்காது யாவும் தானே
என்னகா ரணங்கள் சொல்வாய் லாபத்தைச் சேயும்[3] பார்க்கச்
சொன்னனே துணைவர் தோஷம் சுதன்பின்னு ஊண்பா லொன்று
சத்திமா ரிரண்டு தீர்க்கம் பின்பாகம் விவரமாகப் பேசுவோம
[வர்கள் சேதி.

15. ஜாதகருக்கு முன்னே பிறந்தவர்கள் எல்லோரும் இறந்து விடுவார்கள். என்ன காரணம் அதைச் சொல்லுவீர் என்று கேட்க, லாபம் என்ற பதினேராவது பாவத்தை அங்காரகன் பார்ப்பதால் சகோதரர்களுக் குத் தோஷம் * என்று சொன்னேன். ஜாதகருக்குப் பின்னல் ஆண் சகோ தரர் ஒன்றும் பெண் சகோதரங்கள் இரண்டும் நீண்ட ஆயுளுள்ளவர்க ளாக விருப்பார்கள். அவர்களுடைய விஷயங்களைப்பற்றி விவரமாகப் பின் பாகத்தில் சொல்லுகிறேன்.

* குறிப்பு.—சூரியன் மூன்றுவது பாவத்தில் இருந்தால் மூத்த இளைய சகோதரர்களுக்குத் தோஷம் உண்டு. சம்புஹோராபிரகாசர, சகோதர பாவம் 58-ஆவது, 57-ஆவது சுலோகங்களைப் பார்க்கவும். மேலும் மூத்த சகோதர காரகராகிய குரு லக்னத்திற்கு ஆறிலும் பதினென்றிற்கு எட்டி லும் சனியுடன் கூடி இருப்பதால் மூத்த சகோதரர்களுக்குத் தோஷ முண்டு.

[1] சந்திரன் [2] சுக்கிரன் [3] அங்காரகன் [4] புதன் [5] சூரியன்

16. ஈரெண்ப தாண்டு தன்னி லிவனுக்குப் பாரி வாய்க்கும்
நாரியும் உத்தர திக்கில் நவிலுவோ மன்னே வர்க்கம்
காரிழை குணத்தைச் சொல்வேன் கபடிலாள் மாநி றத்தாள்
தேறினேர்க் கன்ன மீவள் சீலியாம் முன்கோ பத் தாள்.

16. ஜாதகருக்குப் பதினெட்டாவது வயதில்* மனைவி வந்து வாய்ப்பாள். மனைவி மாதுருவர்க்கத்தைச் சேர்ந்தவள். இவள் வடக்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறோம். இவளுடையக் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் கபட மில்லாதவள். மாநிறமுள்ள தேகத்தை யுடையவள். தன்னிடம் வந்து சேர்ந்தவர்களுக்குச் சாதங்கொடுப்பாள். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையும் உள்ளவள். முன்கோப முடையவள்.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 17–0–0 முதல் ஷ 18–0–0 வரையிலும் குரு தசையில் சந்திர புக்தியும் அங்காரக புக்தியும் நடக்கின்றன. குரு களத்திர ஸ்தானதிபதியாகிய சனியுடன் சம்பந்தப்பட்டவர். அங்காரகன் போகஸ்தானமாகிய நான்கில் போககாரகனுகிய ராகுவிற்கு மிகவும் நெறுக்கத்தில் இருந்துகொண்டு ஏழைப் பார்க்கின்றார். ஆகையால் குருவிற்கும் அங்காரகனுக்கும் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அதிகாரம் இருக்கின்றது என்பதைக் கவனிக்கவும்.

17. புத்திமான் வறுமை காணுன் பொய்யது வழுத்தா நெஞ்சம்
நந்தினேர்க் குதவி செய்வள் நடைநன்மை வயது தீர்க்கம்
அத்திரி தடுத்துச் சொல்வார் அவனுக்குத் தாரம் ரண்டு
குத்தத்தைச் சொல்லு மென்ன குருவுடன் காரி[1] சேர்ந்து;

17. இவள் அறிவுள்ளவள். தரித்திரமும் கஷ்டமுமில்லாதவள். பொய் பேசும் எண்ணமில்லாத மனதுடையவள். தன்னை வந்தடைந்தவர்களுக்கு உதவியைச் செய்வாள். நல்ல நடவடிக்கை யுள்ளவள். இவளுக்கு வயது தீர்க்கமானது. இவ்விதமாக முனிவர் சொல்ல, அத்திரி ரிஷி மறுத்துச் சொல்லுகிறார். ஜாதகருக்கு இரண்டு தாரம் நேரிடும் என்று சொல்லக் காரணத்தைச் சொல்லுமென்று கேட்க, குருவுடன் சனி கூடி ;

18. ஆறிட மிருப்ப தாலே அறைந்தனம் தாரம் ரண்டு
மாறியே முனிவர் சொல்வார் மதி[2]புகர்[3] நாலில் தங்கக்
கூறொணுத் தாரம் ரண்டு கோதையர் அனேக மாகச்
சேருவா னிந்தப் பாலன் சேயிழை ஒன்றே தீர்க்கம்.

18. ஆறுமிடத்தில் *இருப்பதால் ஜாதகருக்கு இரண்டு தாரம் என்று சொல்லுகிறோம் என்று அத்திரி ரிஷி சொல்ல, முன்பு சொல்லி வந்த முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். சந்திரனும் சுக்கிரனும் நாலாவது பாவத்தில் இருப்பதால் இரண்டு தாரம் என்று சொல்லக்கூடாது. ஆனுல் ஜாதகர் அநேகம் பெண்களைச் சேருவார். ஆனுல் இவருக்கு மனைவி ஒன்றேயாகும். அவள் நீண்ட ஆயுளை யுடையவள்.

[1] சனி [2] சந்திரன் [3] சுக்கிரன்

* குறிப்பு.—சனி இங்கு முதலாவது, களத்திர ஸ்தானதிபதி. குரு இங்கு இரண்டாது களத்திர ஸ்தானமாகிய ஒன்பதிற்கும், ரோக ஸ்தானம் துஸ்தானமாகிய ஆறும் பாவத்திற்கும் உடையவர். ஆகையால் முதல் தாரத்திற்குத் தோஷமுண்டு. (சிலர் இரண்டு அல்லது எட்டு இரண்டாவது களத்திர ஸ்தானம் என்றும் சொல்லுவார்கள்.) நான்காமிடம் காம விஷய போக ஸ்தானமாகும் (மூன்றுமிடம் போகஸ்தானம் என்று சிலர் சொல்லுவர். அது காமம் தவிர உள்ள மற்ற விஷய போகஸ்தானமுமாகும்.) நான்காமிடத்தில் சந்திரனும் சுக்கிரனும் லக்னதி பதியாகவும் போகாதிபதியாகவும் இருந்து கூடியிருக்கின்றார்கள். ஆகையால் ஜாதகருக்கு போகத்திற்குக் குறைவு கிடையாது. ஆனுல் ராகுவும் அங்காரகனும் கூடியிருப்பதால் கெட்ட விஷயத்தில் போகம் ஏற்படும் என்று இங்குச் சொல்லியிருக்கிறது. இவ்வித தோஷத்தால் தாரம் ஒன்று என்று கண்டிருக்கிறது.

19. சுதர்களும் நவமே தோன்றும் சோர்வுறும் சிலது என்றோம்
சதமுடன் ஆண்பால் மூன்று சத்தியு மிரண்டு தீர்க்கம்
முதல்ரண்டு ஐந்து ஒன்பான் வீறுது பாலர் தாமும்
அதுகுற்றம் சொல்லு மென்ன ஆறலும்[1] நாளில் தங்க ;

19. ஜாதகருக்கு ஒன்பது குழந்தைகள் பிறக்கும். இவைகளில் சில குழந்தைகள் இறந்துவிடும் என்று சொல்லுகிறோம். ஆண் குழந்தைகள் மூன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். முதலில் பிறக்கும் இரண்டு குழந்தைகளும், ஐந்தாவது ஒன்பதாவது குழந்தைகளும் விளங்காமல் இறந்துவிடும். இந்தத் தோஷத்திற்குக் காரணம் சொல்லுவீரென்று கேட்க, அங்காரகன் நான்காவது பாவத்தில் இருப்பதாலும்

20. பொன்னவன் [2]ஆறி லேறை போற்றினே மந்தச் சங்கை
அன்னையின் குணத்தைச் சொல்வேன் ஆளனுக் கினியளாகும்
பன்னுமுன் கோபி யாவள் பாட்டாளி பதரில் செல்லாள்
கன்னிகை சமயோ கத்தாள் கண்முகம் வசிய முண்டு.

20. குரு ஆருவது பாவத்தில் இருப்பதாலும் *இந்தத் தோஷத்தைச் சொன்னோம். ஜாதகருடைய தாயாரின் குணதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் தன் புருஷனுக்கு இஷ்டமானவள். சொல்லுவதற்கு முன்னே கோபத்தை யடையக்கூடிய முன்கோபியாயிருப்பாள். கஷ்டப்பட்டு வேலையைச் செய்யக்கூடியவள். நன்ருக உழைப்பவள். அற்பமான பலனற்றக் காரியங்களில் பிரவேசிக்கமாட்டாள். இவள் சமமான நடுத்தரமான யோகத்தை யுடையவள். கண்களும் முகமும் அழகாகவும் கவருந் தன்மையை யுடையனவாகவும் இருக்கும்.

* குறிப்பு.—புத்திரதோஷ விஷயம், புத்திர ஸ்தானமாகிய ஐந்திற்குரிய அங்காரகன் இந்த ஐந்தாம் வீட்டிற்கு விரய ஸ்தானமும் மறைவிடமுமாகிய நான்காவது வீட்டில் இருப்பது தோஷமாகும். புத்திரகாரகனும்

[1] அங்காரகன் [2] குரு

இன்னொரு புத்திர ஸ்தானமாகிய ஒன்பதாம் வீட்டிற்கு அதிபதியுமாகிய குரு லக்கினத்திற்கு மறைவிட ஸ்தானமாகிய ஆறில் சனியுடன்கூடி ராகுவால் பார்க்கப்பட்டிருப்பதும் சந்ததிக்குத் தோஷத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

21. உத்தர மில்ல மாகும் ஒருதுணை ஆண்பால் தீர்க்கம்
குத்தாமா மொருவன் தானும் கோதைக்குத் துணைப் பெண் [தோஷம்
பெத்தகா ரணத்தை நீங்கள் பேசுவீர் முனியே நீர்தாம்
சித்தமாய் மதிக்கு [1] மூன்றில் சனியுமே யிருப்ப தாலே.

21. தாயாரின் வீடு வடக்கே யுள்ளதாகும். இவளுக்கு ஒரு சகோதரன் தீர்க்க ஆயுளை யுடையவனாயிருப்பான். இன்னொரு சகோதரன் இறந்துவிடுவான். சகோதரிக்குத் தோஷமுண்டு. இந்தத் தோஷத்திற்குக் காரணத்தை, முனியே நீர் சொல்லுவீர் என்று கேட்க, சந்திரனுக்கு மூன்றாவது பாவத்தில் சனி இருப்பதால் ; *

*குறிப்பு.—சந்திரன் இருக்கின்ற ராசியையே தாயாருடைய லக்கினமாகப் பாவித்து அதைக்கொண்டு தாயாருடைய சகோதர பலன் முதலிய சகல பாவப் பலாபலன்களையும் சொல்லவேண்டும் என்ற ஒரு கொள்கையும் உண்டு. இந்தக் கொள்கைக்கு ஆதாரமாகப் பலதீபிகை கிரந்தத்தில் 15-ஆவது அத்தியாயம் 22, 23, 24, 25-ஆவது சுலோகங்களைப் பார்க்கவும். இங்குச் சந்திரன் இருக்கின்ற ஸ்தானமும் மாதுருஸ்தானமும் ஒரே ராசியாகிய துலாராசியாக அமைந்திருக்கிறது. சந்திரனுக்கு மூன்றாம் வீடாகிய தனுசு தாயின் சகோதரஸ்தானமாக விருக்கின்றது. இந்தத் தனுசில் சனி இருக்கின்றார். இதனால் சகோதர தோஷம் தாயாருக்கு உண்டு என்று இங்கு சொல்லி இருக்கின்றது. சகோதரஸ்தானமாகிய மூன்றில் சனி இருந்தால் முன் சகோதரன், பின் சகோதரன் ஆகிய இருசகோதரர்களுக்கும் தோஷம் உண்டென்று சம்புஹோராபிரகாசா என்ற கிரந்தம் சகஜபாவம் 58-ஆவது சுலோகத்தில் சொல்லி இருப்பதைக் கவனிக்கவும்.

22. செப்பினேம் துணைப்பெண் தோஷம் செல்வதி பூர்வம் தன்னில்
தப்பிதம் மதிகம் செய்தாள் சாற்றுவீ ரந்தச் சங்கை
ஒப்புடன் பூர்வம் சொல்வேன் ஓதுறு தல்த்தி லேதான்
மெய்ப்புடன் வன்னிய சேயாய் மேவியே மதலை யுண்டாய்;

22. பெண் சகோதரத்திற்குத் தோஷமுண்டு என்று சொல்லுகிறோம். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் அதிகமான பாவங்களைச் செய்தாள் என்று சொல்ல, அந்த விஷயங்களைச் சொல்லுவீரென்று கேட்க, இவளுடைய பூர்வஜன்ம விஷயங்களைச் சொல்லுகிறேன், வேதங்களை ஓதுகின்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் மேன்மையான வன்னியர் குலத்தில் பிறந்து குழந்தைகளை உடையவளாகி ;

---

[1] சந்திரன்

23. சுகமுடன் வாழுந் நாளில் செய்த ஊழ் தன்னைக் கேண்மோ
மிகுபழி ஒருத்தி பேரில் விளம்பினு ளிந்த மாது
பகையுண்டாய் மாது சொல்வாள் பதர்வார்த்தை சொன்ன பாவி
தகைமையாய்ப் பின்ஜன்மத்தில் தன்துணைப் பெண்பா லின்றி ;

23. சுகத்துடன் வாழ்கின்ற காலத்தில் இவள் செய்த பாவத்தைக் கேட்பீராக. இவள் ஒரு பெரிய பழியாகிய குற்றத்தை ஒருத்தி பேரில் சொன்னாள். அவள் கோபமடைந்து சொன்னதாவது—" திடுக்கிடும்படியான, நடுங்கும்படியான வார்த்தைகளைச் சொன்ன பாவியே, தன்னுடைய மறு ஜென்மத்தில் தனக்குச் சகோதரி இல்லாமல் ;

24. சுதர்களும் தோஷ மெய்தும் சுகமிலாக் குடும்பி யாயும்
பதியினில் வறுமை யுண்டாய்ப் பஞ்சைபோல் வாழ்வா யென்று
விதவித வார்த்தை சொல்லி வித்தகி தெருத்தூள் விட்டாள்
சதியாக அந்தச் சாபம் சார்ந்தது பாவைக் கேதான்.

24. தனக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கும் தோஷ முண்டாகி, சுகமில்லாத குடும்பத்தை யுடையவளாகி, பூமியில் தரித்திரத் துடனும் கஷ்டத்துடனும் தரித்திரியைப் போல வாழ்வாய் " என்று பலவிதமான வார்த்தைகளைச் சொல்லி, தெருவிலுள்ள மண்ணை எடுத்துத் தூற்றினாள். அந்தச் சாபமானது வினையாக இவளை வந்தடைந்தது.

25. இன்னமு சிலது தோஷ மெய்திற்றுப் பாவைக் கேதான்
தன் சுதர் அந்த மாண்டு சஞ்சல மனத்தளாகி
அன்னவள் தந்தி தோஷம் அணுகினுள் தீபம் தானும்
முன்னோர்க்கு அன்ன மீந்து மேவினுள் காலன் னடு.

25. இதுவுமின்றி இன்னும் சில பாபங்கள் இவளை வந்து அடைந்தன. இவளுடைய முன்ஜன்மத்தில் இவளுக்கு கடைசி காலத்தில் தன்னுடைய பிள்ளை இறந்து துன்பத்தை யடைந்து பிறகு அந்தச் சாபங்களை நிவிர்த்தி செய்ய ஒரு விநாயகர் கோயிலுக்குப் போய் அவ்விடத்தில் விளக்கு ஏற்றிவைத்துப் பழைய மனிதர்களாகிய வயது சென்றவர்களுக்குச் சாப்பாடு போட்டுப் பிறகு இறந்து எமனுடைய பட்டணத்திற்குச் சென்று அவ்விடத்தில் ;

26. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தன ளிந்த மாது
அரிவைமுன் சாபம் தானும் அணுகிடு மிச்சென் மத்தில்
வறுமையும் துணைவர் தோஷம் மதலைகள் தோஷ மெய்தும்
பெரு வயிறப்பன் கோஷ்டம் புகன்றதோர் தீப புண்யம்;

26. நான்கு தலைகளையுடைய பிரமதேவனால் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவளுடைய முன் ஜென்மத்திய சாபங்கள் இவளை இந்த ஜென்மத்தில் வந்து அடையும், இவளுக்குத் தரித்திரமும் கஷ்டங்களுமுண்டு. இவளுடைய சகோதரர்களுக்குத்தோஷம் உண்டாகும். இவளது குழந்தைகள் இறந்துவிடும். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளின் கோயிலில் தீபம்வைத்துப் புண்ணி யத்தின் ;

27. பலனதைச் சொல்லு மென்ன பாலர்கள் பின்னுல் விருத்தி
நலமுறும் அந்தம் தன்னில் நவிலு வோம் இவள்பின் ஜன்மம்
தலமதி லுயர்வ தான சேதுவின் பதியி லேதான்
குலவுவாள் வன்னிய சேயாய்க் கோமளி கேட்டி டாயே.

27. பலனைச் சொல்லுவீரென்று கேட்க, சொல்லுகிருர். பின்னே பிறக்கும் குழந்தைகள் விருத்தியடையார்கள். கடைசியில் சுகத்தை அடைவார்கள். இவளுடைய பின்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். ஸ்தலங்களில் மேன்மை பெற்ற ஸ்தலமாகிய சேதுஸ்தலத்தில் வணிகர் குலத்தில் இவள் பிறப்பாள், பார்வதியம்மையே ! கேட்பீராக.

28. தந்தையின்தன் பூர்வம் சொல்வேன் தக்கோல மருகில் உத்ரம்
பிந்திய ஊரி லேதான் பிறந்தனன் வைசியச் சேயாய்ச்
சந்ததம் செட்டுச் செய்து சகலர்க்கும் நல்லோ னுயும்
நிந்தைக ளில்லா னுகி நேர்ந்தனன் காலன் னுடு.

28. ஜாதகருடைய தகப்பனுரின் முன்ஜன்மத்தைச் சொல்லுகிறேன். தக்கோலத்திற்கு வடக்கே அதற்கு அருகிலுள்ள ஒரு பின்னேற்ற முள்ளக் கிராமத்தில் வைசியராகப் பிறந்தார். இவர் வியாபாரஞ் செய்து கொண்டு எல்லோருக்கும் நல்லவராக இருந்து அபவாதங்களும் தோஷங்களுமில்லாதவராகி இறந்து எமபட்டணத்திற்குச் சென்றுன்.

29. சிரநான் கோன் வரையப்பட்டு ஜனித்தவனிவனே யென்றேும்
வரும்ஜன்மம் வான்மீ யூரில் வருகுவான் சைவ சேயாய்
பிறந்தவன் தனக்குப் பூர்வம் சொல்வேன் பிருதிவி தலத்திலே [தான்
சிறந்ததோர் சௌராஷ்ட்ர வம்சம் ஜனித்தவனென்று [சொல்வோம்.

29. அவ்விடத்தில் நான்கு தலைகளையுடைய பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவர் வந்து பிறந்திருக்கின்றுர் என்று சொல்லுகிறேும். இவர் மறு ஜன்மத்தில் திருவான்மியூரில் சைவராகப் பிறப்பார். ஜாதகருடைய முன் ஜென்மத்தைச் சொல்லுகிறேன். இவர் பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சீபுரத்தில் பெருமையும் பிரக்யாதியுமுள்ள ஒரு சௌராஷ்டிர வம்சம் என்கிற பட்டுநூல்கார வம்சத்தில் பிறந்தார் என்று சொல்லுகிறேும்.

30. வினையொன்று மில்லா னுகி மேவினன் காலன் னுடு
கனமுள பிரமன் லக்கம் கலப்பனு மிக்கு லத்தில்
சினமிலா யோகம் சொல்வேன் ஜனித்தநாள் முதலா மாக
அனையவே யாண்டி ரண்டுள் அல்ப்பமாம் குடும்ப மெய்தும்.

30. ஜாதகர் முன்ஜென்மத்தில் யாதொரு பாபமுமில்லாமல் இறந்து எமபட்டணத்திற்குச் சென்று பெருமை பொருந்திய பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜென்மத்தில் இக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுர்.

இவருக்கு யோகத்தைச் சொல்லுகிறேன். இவர் பிறந்தது முதல் இரண்டு வருஷத்திற்குள் குடும்பம் அற்பமாக விருக்கும். கொஞ்சம் சுகத்தையுடையதாக விருக்கும்.

31. பந்துவுக் கிணக்கமா மாகும் பலபல துன்ப மெய்தும்
நஞ்சுபோல் மனமு மெய்தும் நாட்குநாள் பிறைபோல் யோகம்
நிந்தைக ளதிகமெய்தும் நிமலனும் பிணியால் வாடும்
சந்ததம் அதின்மேலாகத் தங்கிடும் பிறைபோல் யோகம்.

31. இவருடைய குடும்பம் பந்துக்களுக்கும் ஒற்று அடங்கியிருக்கும் பலவிதமானக் கஷ்டங்களை அடையும். விஷத்தைச் சாப்பிட்ட ஒருவருடைய மனம் எப்படித் துன்பத்தை யடையுமோ அவ்விதத் துன்பத்தை இவருடைய குடும்பம் அடையும். அதற்குமேல் நாளுக்கு நாளாய் வளர் பிறைச்சந்திரனைப்போல யோகம் உண்டாகும். நிந்தனைகளும் பழிகளும் அதிகமாக இவர் குடும்பத்திற்கு வந்து சேரும். இவரும் நோயால் குன்றிவிடுவார். அதற்குமேல் வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம்அதிகரிக்கும்.

32. சமரச யோக மெய்தும் சகடுகள் நேரு மென்றேும்
நிலங்களும் நிவிர்த்தி கொஞ்சம் நிதனமாய்க் குடும்ப மெய்தும்
சுமைதாங்கி போலே கஷ்டம் செய்குவன் சல்லியப்பாதை
அவனியால் லாப மெய்தும் நாலாண்டு வறுமை யெய்தும்.

32. சமமான யோகம் நடந்து வரும். வண்டிகள் வந்து கிடைக்கும். நிலங்கள் கைவிட்டுப் போய்விடும். குடும்பம் தரித்திரமான நிலையில் நடந்துவரும். தனக்கு யாதொரு நன்மையுமில்லாமல் சுமைதாங்கிபோலப் பொறுப்பாளியாக இருந்து உதவி செய்து அதனுல் கஷ்டப்படுவார். கடனுல் உபத்திரவமுண்டாகும். பூமியால் லாபமுண்டாகும். நான்கு வயதிற்குள் தரித்திரமும் கஷ்டங்களும் உண்டாகும்.

33. ஐந்தாண்டு முதலா மாக அம்புலி போலே யோகம்
வந்திடும் பால னுக்கு ஊர்ந்திடும் தனதான்யங்கள்
எந்திடம் பெருமை யேற்ற லெய்திடு மில்லம் தானும்
முந்திய சல்லியம் நீங்கும் முயற்சியாய்க் குடும்ப மேற்கும்.

33. ஜாதகருக்கு ஐந்து வயது முதற்கொண்டு வளர்பிறை சந்திரனைப்போல யோகம் விருத்தியாகும். தனமும் தான்யங்களும் அதிகப்படும். எந்த இடம் போனுலும் ஜாதகருக்குப் பெருமை உண்டாகும். வீடு கிடைக்கும். பழைய கடன்கள் நிவிர்த்தியாகும். நல்ல முயற்சியால் குடும்பம் மேலுக்குமேல் விருத்தியாகும்.

34. அது முதல் அன்பா ணுண்டும் அனுகாது வறுமை தானும்
வதிஷ்டரும் தடுத்துச் சொல்வார் வரைந்ததுநீர் யோகம் எவ்வாறு
கதிர்மகன்[1] பொன்னு[2] மாறில் கலந்ததால் குறைவாம் யோகம்
நிதிகுரு ஆட்சி யாக நீலனும்[3] ஆறதாக;

---

[1] சனி. [2] குரு. [3] சனி.

34. அந்தக் காலம் முதல் ஜாதகருக்கு ஐம்பது வயது வரைக்கும் தரித்திரமும் கஷ்டங்களும் கிடையா. இவ்விதமாக முனிவர் சொல்லிவர வசிஷ்டரிஷி மறுத்துக் கேட்கிறார். நீர் எந்தக் காரணத்தினால் ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னீர்? சனியும் குருவுங் கூடி இருப்பதாலே யோகம் குறைவுபடுமே என்று வசிஷ்டர் சொல்ல, செல்வத்தைக் கொடுக்கக்கூடிய குரு தன் ராசியாகிய தனுசில் ஆட்சியாக விருப்பதாலும் சனியும் கூடியிருப்பதாலும்;

35. தேவலோ காம்சம் தன்னில் செறிந்ததால் தசைகா லத்தில்
மேவிடும் யோகமென்றேம் விளம்புவோம் புத்திர பாக்கியம்
ஆவலாய் முப்பான் ரண்டில் அறைந்தனம் தந்தை கண்டம்
தாவிய நாற்ப தாண்டில் தாய்க்குமே உடலம் ஏகும்.

35. தேவலோகாம்சத்தில் † இருப்பதாலும் இவர்களுடைய தசாகாலங்களில் யோகம் விருத்தியாகும் என்று சொல்லுகிறேம் என்று முனிவர் சமாதானம் சொல்லுகிறார். இனிமேல் ஜாதகருக்குப் புத்திர பாக்கியத்தையும் சொல்லுகிறேம். ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் தகப்பனர் இறந்து விடுவார். ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் * தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகிறேம்.

† குறிப்பு.—தேவலோகாம்சம் என்பது பாரிஜாதாம்சம் முதலிய பதின் மூன்று வர்க்கங்களில் ஒன்று ஆகும். ஏழு வர்க்கங்கள் சேர்ந்திருப்பது தேவலோகாம்சம் ஆகும். சர்வார்த்தசிந்தாமணி 1-ஆவது அத்தியாயம் 20-ஆவது சுலோகத்தைப் பார்க்கவும். ஜாதகபாரிஜாதகம் 1-ஆவது அத்தியாயம் 46-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். குருவும் சனியும் கூடி கெட்டவிடத்தில் இருந்தால் கெட்ட பலனேயும் நல்ல இடத்திலிருந்தால் நல்ல பலனேயுங் கொடுப்பார்கள் என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. தேவகேரளம் என்ற சுக்கிரநாடியிலும் யோகசாராவளி என்ற கிரந்தத்திலும் கீழ்க்கண்டபடி சொல்லி இருப்பதாகக் கண்டிருக்கிறது. "எப்பொழுது சனிஸ்வர வர்க்கத்தில் பலமுள்ளவனும், யோகாம்சத்தில் குருவோடு கூடினவனும் இருக்கிறனே அப்பொழுது ஜாதகர் பணம் புத்தி கீர்த்தி இவைகள் உள்ளவராயும், ஆசை நிறைந்தவராயும் அரசர்களின் காரியத்தை முடித்து வைக்கச் சாமர்த்தியமுள்ளவராயும் இருப்பார்.

தகப்பனர் விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷ 31-0-0 முதல் வருஷம் 32-0-0 வரையில் சனி தசையில் சுக்கிர புக்தி சூரிய புக்திகள் நடக்கின்றன. பிதுர் லக்கின மீனம். பராசர ஹோரை ஜாதக சந்திரிகை பிரகாரம் மீனலக்கினத்திற்குச் சனி மாரகாதிபர். இவர் பிதுர்லக்னுதிபதியாகிய குருவுடன் கூடியிருப்பதுடன் பிதுர்காரராகிய சூரியனைப் பார்க்கின்றார். துய்யகேரளம் 8-ஆம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் சனி பிதுருக்கு மாரகாதிபதி ஆகிறார். மேலும் சூரியன் பிதுர்ஸ்தானத்திற்கு ஆறுக்குடையவராகி மாரக ஸ்தானமாகிய ஏழில் இருக்கின்றார். இவர் பிதுர்ஸ்தானத்தைப் பார்ப்பது பலதீபிகை 15-ஆவது அத்தியாயம் 26-ஆவது சுலோகப் பிரகாரம் பிதுருக்குத் தோஷத்தை உண்டுபண்ணும். ஆகையால் சுக்கிரனைவிட சூரியனுக்குப் பிதுரை மாரகஞ் செய்ய அதிக அதிகாரம் இருக்கிறது. ஆகையால் இங்கு 31-ஆவது வயதில் பிதுர்மாரகம் சொல்லியிருக்கிறது.

* மாதுரு விஷயம்.—ஜாதகருக்கு வயது 39-0-0 முதல் வருஷம் 40-0-0 முடியும் வரையிலும் சனிதசையில் குரு புக்தி நடக்கிறது. மாதுரு லக்கனம் துலாம், பராசர ஹோரை ஜாதக சந்திரிகைகளின்பிரகாரம் குரு மாதுருக்கு மார காதிபதியாகிறார். மூன்றும் வீடுகூட ஒரு மாரகஸ்தானமாகும். மாரக ஸ்தானத்தில் உள்ளவரும் மாரகாதிபதியாகிய குருவுடன் சம்மந்தப்பட்டவருமான சனி ஜாதக சந்திரிகை 27-ஆவது சுலோகப் பிரகாரம் தனக்கு முன்னும் பின்னும் வருகிற மாரகர்களைத் தள்ளிவிட்டுத் தானே மாரகஞ் செய்ய அதிகாரம் பெற்றிருக்கின்றார். ஏற்கெனவே குரு மாரகாதிபதியாகி இருக்கின்றார். ஆகையால் இங்கு, சனி தசையில் குருபுக்தியில் மாதுருக்கு மாரகஞ் சொல்லியிருக்கின்றார்.

36. அறுபது நாலு ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமக னுடலம் ஏகும் செப்புவோ மிவன்பின் ஜென்மம்
அருணைக்கு வடபா லாக அனுகிய பேரூர் தன்னில்
நிறைசேயும் வைசிய சேயாய்ச் நேருவா னென்று சொல்வோம்.

36. ஜாதகர் தமது அறுபத்துநான்காவது வயதில் † ஐப்பசி மாதத்தில் இறந்து விடுவார். இவருடைய மறுஜென்மத்தைச் சொல்லுகிறேம். திருவண்ணுமலைக்கு வடக்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் வைசிய குலத்தில் இந்த மாட்சிமை தங்கிய ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகிறேம்.

† குறிப்பு.—ஜாதகருக்கு வயது வருஷம் 64-10-0 முடியும் வரையிலும். கேதுதசையில் சனிபுக்தி, புதன்புக்தி நடக்கின்றன. அங்காரகன் லக்கினுதிபதியாகிய சந்திரனுடன் சம்பந்தப்பட்டுச் சுக்கிரனைவிட குறைந்த பல முடையவராயிருக்கின்றார். ஆகையால் துய்யகேரளம் 8-ஆம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் மாரகராகிறார். கேது அங்காரகன் வீட்டிலிருந்து கொண்டு லக்கினுதிபதியாகிய சந்திரனைப் பார்ப்பதுடன் எட்டாவது பாவத்தையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் அங்காரகனுடைய மாரகத்தைத்தான் ஏற்றுக்கொள்ளுகின்றார். சனி கடக லக்கினத்திற்கு, பராசரஹோரை ஜாதகச்சந்திரிகைகளின் பிரகாரம் மாரகாதிபதியாகிறார். ஆறிலும் இருக்கின்றார். ஜாதகசந்திரிகை 27-ஆவது சுலோகப் பிரகாரம் புதனைத் தள்ளிவிட்டு தானே மாரகஞ் செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார். ஆகையால் இங்கு கேதுதசை சனி புக்தியில் வயது ஷ 63-1-இல் ஜப்பசி மாதத்தில் ஜாதகருக்கு மாரகஞ்சொல்லி யிருக்கின்றார்.

37. ஜனித்திடுங் காலம் தன்னில் சுவாதியின் மூன்றும் பாதம்
வினைராகு திசைபி ருப்பு விளம்புவோ மாண்டு ஐந்து
கனமுடன் திங்கள் பத்தும் கழறுவோம் பலனை யாங்கள்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

37. ஜாதகர் ஜனிக்கும்போது சுவாதி நக்ஷத்திரத்தின் மூன்றும் பாதமாகும். இதற்குரிய ராகுமகாதசை இருப்பு வருஷம் ஐந்தும், மாதம் பத்தும் ஆகும் என்று சொல்லுகிறேம். பலனைச் சொல்லுகிறேம். தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகம் 60

1. மதி[1] தனுஸ் காரி[2] குடம்[3] மன்னன்[4] ராகு மானதிலே[5]
புதன் சேய்[6] புகர்[7] பான்[8] கோல்[9] தன்னில் பின்பாம்[10] பலவன்[11] கடகமுயிர்]
இதுவே கிரகம் தானின்றுலி யியம்பும் பலன்க ளெவ்வாறு
அதுவே ஆண்பால் ஜனன முறும் அறைவோம் கீழ்மேல் [வீதியதே.

சனி	இராசி சக்கரம்		லக்கினம் கேது
ராகு குரு			
சந்திரன்		புதன் சுக்கிரன் அங்காரகன் சூரியன்	

1. சந்திரன் தனுசிலும், சனி கும்பத்திலும், குருவும் ராகுவும் மகரத்திலும். புதனும் அங்காரகனும் சுக்கிரனும், சூரியனும் துலாத்திலும், கேது கடகத்திலும் இருந்து, ஜன்ம லக்கினம் கடகமாக விருந்தால் பலா பலன்கள் எவ்விதமிருக்கும் என்பதைச் சொல்லுவீர். இந்தக் குழந்தை ஆண் குழந்தையாக ஜனிக்குமென்று சொல்லுகிறோம். ஜனனமான இடம் கிழக்கு மேற்குத் தெருவில்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர நிலை பொருத்தமுடையதாகும். ரிஷபத்தில் சந்திரன், புதன், ராகுவும், மிதுனத்தில் சனியும், துலாத்தில் அங்காரகனும், விருச்சிகத்தில் சுக்கிரனும் கேதுவும், கும்பத்தில் சூரியனும், மீனத்தில் குருவும் ஆகும். இந்த ஜாதகத்தில் ஓர் அபூர்வமான சம்பவம் இருக்கிறது. அஃதாவது ஜாதகர் ஒரே மனைவிக்கு இரண்டு தடவை தாலி கட்டுவதால் இரண்டுதார தோஷம் நிவிர்த்தியாகிறது. மூலம்2-ஆம் பாதம் கேது தசை வருஷம் 3,மீ 6. இஃது ஒரே மனைவிக்கு இரண்டு தாலி கட்டும் ஜாதகம் ஆகும்.

---
[1] சந்திரன் [2] சனி [3] கும்பம் [4] குரு [5] மகரம் [6] அங்காரகன் [7] சுக்கிரன் [8] சூரியன் [9] துலாம் [10] கேது [11] கடகம்

2. தென்பால் வாடை கூரையில்லம் திருமால் காளி உத்திரத்தில்
அன்னே மாரி மேற்கிலுறும் அரன்கோஷ்டங்கள் வடகீழ்ப்பால்
மன்னு தீயில் பிறந்தவளாம் வடமேல் திக்கில் சமவூரில்
இந்த அடையா ளத்தினிலே யெய்து மிந்தப் பாலகனும்.

2. தென்னண்டை வாடையில் ஒரு கூரை வீடு ஒன்று சொல்லுகிறோம். வடக்குத் திக்கில் விஷ்ணு கோயிலும் காளியம்மன் கோயிலும், மேற்குத் திக்கில் பார்வதியம்மன் கோயிலும் மாரியம்மன் கோயிலும், வடகிழக்குத் திக்கில் பரமசிவன் கோயில்களும் அக்கினியில் பிறந்த தேவதையான திரௌபதியம்மன் கோயில், வடமேற்குத் திக்கிலும் இருக்கும். இவ்வித மான அடையாளங்களும் ஜெகப்பந்தியும் உள்ள நடுத்தரமான கிராமத்தில் இந்த ஜாதகர் பிறப்பார்.

3. பாலன் தந்தை யோகமுமே பாலர் மனைவி துணையோகம்
சாலன் முன்பின் ஜன்மங்கள் சாற்றக் கேண்மோ இந்நூலில்
ஞாலம் தந்தை குணம் சொல்வேன் இனிதாய் வார்த்தை மன்ன வர்முன்]
சீல முடையான் விவசாயம் தேவி பட்சம் துணை காணுன்.

3. ஜாதகருடைய யோகம், தகப்பனுருடைய யோகம் குழந்தைகள் மனைவி சகோதரர், முன்ஜன்மம் ஆகிய இவைகளை இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். கேட்பீராக. ஜாதகருடைய தகப்பனுடைய குணாதிசயங்களைச் சொல்லுகிறேன். இனிமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். அரசர்கள் முன்னிலையில் நல்லொழுக்கமுடையவர். பயிரிடுந் தொழிலைச் செய்வார், மனைவியிடத்தில் அன்புடையவர். கூடப் பிறந்தவர்கள் இல்லாதவர்.

4. கான வார்த்தை தானுரைப்பன் கனத்தோர் நேசன் கல்வியுளன்
தானே யென்று பேருடையன் தலவா சங்கள் தான் செல்வன்
தேனே வார்த்தை யீகையுளன் சிறுத்தோர்க் குதவி தீர நெஞ்சன்
வானோர் பூஜை தான் செய்வன் மருமம் வெளியில் காட்டா தான்.

4. இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். பெரிய மனிதர்களுடைய சிநேகத்தையுடையவர். வித்தையுள்ளவர். தானஞ் செய்பவர் என்ற நல்ல பெயருடையவர். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். தேனைப் போன்ற இனிமையுள்ள வார்த்தைகளையுடையவர். தயையுள்ளவர். கொடுக்குந் தன்மையுடையவர். வறுமையுடையவர்களுக்கு உபகாரஞ் செய்வார். தைரிய முள்ளமனத்தையுடையவர். தேவர்களையுங் கடவுளையும் பூஜை செய்வார். இரகசியத்தை வெளியிடாதவர்.

5. நடையும் கடியன் சுகபுசிப்பன் நல்லோ ரிஷ்டன் பெண்மோகன்
படையில் செல்லான் கரமதிலே பத்ம ரேகை பரிந்துரைப்பன்
விடவாக் குடையன் சமதேகன் மேவும் நாபிச் சூடு என்றேரும்
கடனே கொள்வன் செலவுளனும் காலாள் உடையன் காதலீயே.

5. கடுமையாக நடந்துகொள்ளுபவர். சுகமாகப் புசிப்பவர். நல்லவர்களுக்கு இஷ்டமானவர். பெண்களின்மேல் காம ஆசையுடையவர். சண்டைக்குப் போகமாட்டார். தன்கையில் பத்மரேகை என்ற கமல ரேகையையுடையவர். அன்புடன் இரக்கங்கொண்டு பேசுவார். விஷமான கெட்டவாக்குடையவர். சமமான அளவுள்ள தேகமுடையவர். தொப்புளில் வயிற்றில் கணைச்சூடுள்ளவர் என்று சொல்லுகிறோம். கடன் வாங்குவார். அதிகம் செலவு செய்பவர். கால் நடைக்காரர்கள் உள்ளவர் என்று சொல்லுகிறோம், பார்வதியம்மையே !

6. என்றோ னுக்கு இப்பால னெய்தும் துணைஆணி ரண்டென்றோம்
கன்னி மூவர் தீர்க்கமுறும் கழறு மாண்பா லிரண் டென்றேன்
முன்னோன் குணத்தைத் தான் சொல்வேன் புலவன் [1]ராசி [நாள் பூசம்
முன்னுள் உதிப்பன் தயையுள்ளும் மூலச் சூடு முடையவனே.

6. இவ்விதமான குணங்களையுடையவனென்று சொல்லப்பட்ட தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார். ஜாதகருக்கு ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரர்கள் மூன்றும் நீண்ட ஆயுளை யுடையவர்களென்று சொல்லுகிறோம். ஆண் சகோதரர்கள் இருவர் என்று சொன்னேனே அவர்களுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். ஒரு சகோதரன் புதனுடைய ராசிலக்கினமாகவும், பூசத்திற்கு முந்திய புனர்பூசம் ஜன்ம நக்ஷத்திரமாகவும் ஜனனமாவர். தயையுள்ளவர். மூலச் சூட்டு நோயுடையவர்.

7. இடப்பால் மச்சம் பொறுமை யுளன் இனிதா யில்லம் தான் [செய்வன்
கடனே கொள்வன் நிவிர்த்தி யுளன் கருதான் கட்டு வார்த் [தைகளைப்
படையில் செல்லான் விவசாயம் பண்ணும் வாத தேகியுமாம்
படிபோல் மனைவி ரண்டாகும் சுதராண் ரண்டு பெண் மூன்றே.

7. இடதுபக்கம் மச்சமுண்டு. சாந்தமானவர். அழகான வீடு கட்டுவார். கடன் படுவார். அதனை நிவிர்த்திச் செய்துவிடுவார். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் விரும்பமாட்டார். நினைக்க மாட்டார். சண்டைக்குப் போகமாட்டார். பயிர்த்தொழிலைச் செய்வார். வாயுவான தேகத்தையுடையவர். இவருக்கு ஒன்றன்பின்னொன்றாக இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள். இவருக்கு ஆண் குழந்தைகள் இருவரும், பெண் குழந்தைகள் மூவரும் பிறப்பார்கள்.

8. முன்னோள் பாரி தனக்குச் சுதர்மேவும் கன்னி ஒன்றுமே
அன்னோள் கர்ப்பிணி யாகவே அடைவாள் காலன் பக்கலிலே
பின்னோள் தனக்கு ஆணிரண்டு பேதை அவ்வாறு தீர்க்கமுறும்
சொன்னேன் வயது தீர்க்கமுமே துணையோ டொத்து தான்வாழ் [வன்.

[1] புதன்.

8. முதல் மனைவிக்குக் குழந்தை பிறக்கும். ஒரு பெண் குழந்தைதான் உண்டு. இவள் கர்ப்பிணியாகவே இறந்து எமனிடம் போய்ச் சேருவாள். இரண்டாவது மனைவிக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இவருக்கு நீண்ட ஆயுள் உண்டென்று சொல்லுகிறேன். இவர் தம்முடைய சகோதரர்களுடன் கூட இருந்து ஒத்து வாழ்வார்.

9. அவன்பின் சேதி தானுரைப்பேன் அனுகும் நாபிச் சூடுடையன
தவமே புரிவன் விடை[1] ஜன்மம் பாரில் உத்த ராடம் தோன்றும்
தவமே புரிவோர் தான்சேர்வான் தக்கோர் நேயன் சாதிப்பான்
நவனி விருத்தி செய்திடுவன் நட்பாய்ச் சொல்லும் செலவாளி.

9. இவருக்குப் பின்னால் பிறந்த சகோதரனுடைய விஷயத்தைச் சொல்லுகிறேன். இவர் தொப்புளில், வயிற்றில் கணைச்சூடு உடையவர். தபசுகளையும் யாகங்களையுஞ் செய்வார். இவர் ரிஷபலக்கினத்தில் உத்தராட நக்ஷத்திரத்தில் ஜனனமாவார். தபசு செய்கிறவர்களிடம் சேருவார். மேலோர்களுடைய, பெரியோர்களுடைய சினேகத்தை அடைவார். பூமியைப் பயிரிட்டு விருத்திசெய்வார். சினேகமாகவும் ஆசையுடனும் பேசுவார். அதிகமாகச் செலவு செய்வார்.

10. பாரிவட கீழ்தா னனுகும் பாவை தன்னால் சுகமெய்தும்
நாரி யில்லம் சிலகாலம் நல்கு மென்றோம் நாயகியே
தீரன் பெண்கள் மோகமுகன் சிறப்பாய்க் குடும்பி சிவந்தமெய்யன்
போரே புரிவன் முகவடிவன் பொருந்தும் பித்த தேகனுமே.

10. இவருக்கு மனைவி வட கிழக்குத்திக்கிலிருந்து வந்து நேருவாள். இவளால் இவருக்குச் சுகமுண்டு. இவர் சிலகாலம் மனைவியின் வீட்டில் வசிப்பார் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! இவர் தைரியமுள்ளவர். பெண்கள் மோகிக்கக்கூடிய அழகான முகமுடையவர். மேன்மையான சிறப்புள்ள குடும்பத்தையுடையவர். சிவப்பான தேகத்தையுடையவர். சண்டைபோடுஞ் சக்தியுடையவர். முகம் வடிவுள்ளதாக விருக்கும். இவருடைய தேகம் பித்த முள்ள தேகமாகும்.

11. வறுமை காணன் மனத்திரன் மைந்த ராண்பா லொன்றுமே
அரிவை யிரண்டு தானெய்தும் அல்ப மாகு மூன்றென்றோம்
குறியோம் தந்தை ஆஸ்திதனைக் குலவு வானும் மனைவிபக்கல்
நெறியோன் வயது தீர்க்கமுறும் நிகழ்த்து வோமே யிவன்குணத் [தை.

11. இவர் தரித்திரமுங் கஷ்டங்களுமில்லாதவர். மனத்தைரியமுள்ளவர். இவருக்கு ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் ஜீவித்திருக்கும். மூன்று குழந்தைகள் அற்பாயுளுள்ளதாகும் என்று சொல்லுகிறோம். இவருக்குத் தந்தை ஆஸ்தி கிடையாதென்கிறோம்.

[1] ரிஷபராசி.

மனைவி வீட்டிற்குப் போய்விடுவார். நல்ல நெறியும் நடத்தையுமுடையவர். இவருக்கு நீண்ட ஆயுளுண்டு. ஜாதகருடைய குணத்தை இனிமேல் சொல்லுகிறோம்.

12. பதருன் வார்த்தை உபகாரி பாரில்ஊகி பலர்நேயன்
துதிசெய் தோர்க்கு அன்பனுமாம் சுகமாம் வித்தை சொல்
[சோரான்
ததிநெய் யிஷ்டன் கல்வியினல் சாரும் லாபம் சமத்துடையன்
அதிதி போலே வார்த்தையுளன் அடைந்தோர்க் கன்பன் அரசுடை
[யன்.

12. திடுக்கிடும்படியான, நடுக்கமுண்டுபண்ணக்கூடிய பதங்களை அவசரப்பட்டுச் சொல்லமாட்டார். பிறருக்கு உதவிசெய்வார். புத்திசாலி சினேகமாகவிருப்பார். தன்னைப் போற்றுபவர்களிடம் பிரியமாயிருப்பார். சுகத்தை விளைவிக்கக்கூடிய நல்ல கல்வியுடையவர். பேசுவதில் தளர்ச்சியடையமாட்டார். தயிர் நெய் இவைகள்மேல் ஆசையுடையவர். படிப்பினுல் இவருக்கு லாபமுண்டாகும். சாமர்த்தியமுடையவர். பரதேசிகளைப்போல, தெய்வ பக்தியுடையவர்களைப்போல வார்த்தைகளை உபயோகிப்பார். தன்னை வந்தடைந்தவர்களிடம் ஆசையுள்ளவர். இராஜாங்க வேலைகளைச் செய்வார்.

13. கல்வி சிலர்க்குப் போதிப்பன் கிராமச் செட்டும் தானனுகும்
நல்லோர் பலரால் புகழேற்பன் நங்கை மார்கள் மோகமுளன்
சொல்லு நெறியோன் சுகமுடையன் துறவோர் பக்தி தான்கொள்
[வன்
இல்லை யென்றே ரிடர்தீர்ப்பன் யின்பமாக உரைத்திடுவன்.

13. இவர் சிலருக்கு வித்தையைக் கற்றுக்கொடுப்பார். கிராமத்திய வியாபாரமுஞ் செய்வார். அனேக நல்லவர்களால் புகழப்படுவார். பெண்களின்மேல் காம ஆசையுடையவர். தான் சொல்லுகிற வார்த்தைகளைக் காப்பாற்றும்படியான நல்ல நீதிமுறையையுடையவர். சுகங்களை அனுபவிப்பவர். முனிகளிடத்திலும் இல்லறத்தை விட்டுவிட்ட பரதேசிகளிடத்திலும் அன்புடையவர். தனமும் சத்தியும் இல்லை என்று சொல்லித் தன்னிடம் வருகிறவர்களின் கஷ்டங்களை நிவிர்த்தி செய்வார். இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார்.

14. இடுவன் ஏழை தமக் கன்ன மினிதாய்ப் பூமி விருத்திசெய்வன்
திடமாம் குடும்பி தானுவன் ஜயமே செய்வன் எடுத்ததையே
மடையோ ருறவு கொள்ளாதான் மன்னர் நேயன் மறுத்துரை
[யான்
தடைசொ லில்லான் துணைவருக்குச் சாந்த கோப முடையவனே.

14. ஏழைகளுக்கு இவர் சாப்பாடு போடுவார். பூமிகளைச் சந்தோஷத்துடன் விருத்திபண்ணுவார். வலிவான குடும்பத்தையுடையவராவார். தான் எடுத்த காரியத்தை ஜயமுண்டாகும்படியாய்ச் செய்து முடிப்பார். புத்தியில்லாதவர்களிடத்தில் சினேகஞ் செய்யமாட்டார். அரசர்களுக்கு

இஷ்டமானவர். தடுத்தும் எதிர்த்தும் பேசமாட்டார். தடுக்கும்படியான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். தன்னுடைய சகோதரர்களிடத்தில் கோபமுண்டாகி உடனே சாந்தத்தையடையுந் தன்மையுடையவராவார்.

15. விலக்கு அரசு தான்பெறுவன் விளம்பும் அன்னை தான் குணத்தை
நிலையில் லார்மேல் பிரிய முள்ளள் நீதிதோர்க் கன்பள் நீதம்சீலி
தலைவன் மனம்போல் தான்வாழ்வள் சத்தியினில்லம் வடகீழ்ப்
[பால்
குலமும் துணைவர் ஆண்மூன்று கோதை அவ்வாறு தீர்க்கமுறும்.

15. இவர் அரசுசெய்யுந் தொழிலையுடையவர். ஜாதகருடைய தாயின் குணதிசயங்களைச் சொல்லுகிறோம். அந்தஸ்து அல்லது தனம் அல்லது தொழிலில்லாதவர்களிடத்தில் அன்புள்ளவள். துறவிகளிடத்தில் பிரியமுள்ளவள். நீதியும் நன்னெறியும் பாக்கியமு முடையவள். நல்லொழுக்கத்தையுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்கு ஒத்தாப் போல் வாழ்வாள். இவளுடைய தாயார் வீடு வடகிழக்குத்திக்கிலிருக்கும். இவளுக்கு உடன்பிறந்த மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள்.

16. பித்த தேகி சிவந்திடுவள் பேசிடுவள்தன் பூர்வத்தை
முத்தும் கன்னியா குமரியினில் உதித்தாள் சைவ குலமதனில்
பத்தி ஞோர்க்கு அன்னமீந்து பகவான்பத்தி மிகப் பூண்டு
சுத்த மனதாய்த் தான்வாழ்ந்து சேர்ந்தா ளவளும் காலனுடு.

16. ஜாதகருடைய தாயார் பித்தமுள்ள தேகத்தையுடையவள். சிவப்பான நிறமுடைய தேகத்தை உடையவள். இவளுடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். கன்னியாகுமரியில் ஒரு சைவ ஜாதியில் முன் ஜென்மத்தில் பிறந்தாள். கடவுளிடம் தொண்டு செய்பவர்களுக்கு உணவு கொடுத்து, கடவுளிடத்தில் அதிகமாகத் தொண்டுசெய்து, சுத்தமான மனமுடையவளாய்த் தான் வாழ்ந்து இறந்து எமனை அடைந்தாள்.

17. விதியன் வரையப் பிரம்மகுல மேவினள் காணே இம்மாது
சதியா யிவள்பின் ஜன்மத்தைச் சாற்றக்கேண்மோ துவரை
[தன்னில்
இதுவே குலத்தில் தான்தோன்றி யிடரென் ரேர்க்கு அன்னமீந்து
பதியில் வறுமை யில்லாமல் பாவை வாழ்வள் பார்வதியே.

17. பிரமதேவனுல் எழுதப்பட்டுப் பிராமணர் குலத்தில் வந்து இவள் இப்பிறப்பில் பிறந்தாள். இவளுடைய மறுஜன்மத்தைச் சீக்கிரம் சொல்லுகிறோம். கேட்பீராக. இவள் மறுஜென்மத்தில் துவாரகையில் இப்போது பிறந்துள்ள பிராமண ஜாதியில் பிறந்து கஷ்டத்தை அடைந்திருக்கின்றேம் என்று சொல்லுபவர்களுக்குச் சாதம் கொடுத்து, தன்னுடைய புருஷன்வீட்டில் தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் வாழ்வாள், பார்வதியம்மையே !

வேறு

18. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் பெண்ணை ஓரம்
பிந்திய ஊரி லேதான் பிறந்தனன் கங்கை சேயாய்
வந்திடு மனைவி மைந்தர் வளமுள குடும்பி யாகி
நொந்தவர்க் கன்ன மீந்து நேர்ந்தனன் சேது தீர்த்தம் ;

18. ஜாதகருடைய தகப்பனரின் முன்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். இவர் பெண்ணையாற்றின் கரை ஓரத்தில் ஒரு சிறிய உனமில்லாத கிராமத்தில் வேளாளர் தொழிலையுடைய குலத்தில் பிறந்து, மனைவி மக்கள் இவர்களைப் பெற்று, செழிப்பான ஒரு குடும்பமுடையவராகி, ஏழைகளுக்கும் கஷ்டமடைந்தவர்களுக்கும் சாதம் கொடுத்து, சேதுஸ்தலத்திற்குச் சென்று தீர்த்தமாடி ;

19. பலவித தலங்கள் சென்று பவமது யில்லா னுகிக்
குலவினன் காலன் பக்கல் குறைதலை வரையப் பட்டு
நலமுள பிரம்ம சேயாய் நாயக னுதித்தா னென்றோம்
தலைவன்பின் ஜன்மம் சொல்வேன் சங்கரி கேட்டி டாயே.

19. பிறகு இன்னும் அனேக புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று, பாவம் ஒன்றுமில்லாதவராகி, இறந்து, எமனிடஞ்சென்று, தலையில் பிரமனல் எழுதப்பட்டு, இந்த ஜன்மத்தில் சௌக்கியமுள்ள பிராமண குலத்தில் பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகிறோம். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேன், பார்வதியம்மையே ! கேட்பீராக.

20. பிருதிவி தலத்தி லேதான் பிறப்பனும் பிரம்ம சேயாய்
அரசரால் தொழிலும் பெற்று அதிகார முடைய னுகி
இருவினை யில்லா வாழ்வ னியம்பின மொழி குன்ருது
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

20. பிருதிவி ஸ்தலம் என்று சொல்லப்பட்ட காஞ்சீபுரத்தில் பிராமண குலத்தில் பிறப்பார். இராஜாங்கத்தில் ஒரு வேலையில் அமர்ந்து அதிகாரமுள்ளவராகி இருவினை என்ற நல்வினை தீவினையாகிய புண்ணியம், பாவம் இவைகள் இல்லாமல் வாழ்வார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

21. ஈரேழு ஆண்டு தன்னி லியம்புவோம் தந்தை கண்டம்
தீரமாய் முப்பா னைந்தில் செப்புவோ மன்னை கண்டம்
நாரியே அன்பா னைந்தில் நவின்றனன் துணைவன் சேஷ்டன்
மாரிபின் இரண்டு ஆண்டில் மரிப்பனும் பின்னேன் தானும்.

21. ஜாதகருடைய தகப்பனர் ஜாதகரது பதினான்காம் வயதில் * இறந்து விடுவார் என்று சொல்லுகிறோம். ஜாதகரது முப்பத்தைந்தாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாளென்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! ஜாதகருக்கு ஐம்பத்தைந்தாவது வயதில் * மூத்த சகோதரன் இறந்துவிடுவார். இதற்குப் பிறகு இரண்டாவது வருஷத்தில் பின் சகோதரன் இறந்து விடுவார்.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 13-0-0 முதல் ஷ 14-0-0 முடியும் வரையில் சுக்கிர தசையில் ராகுபுக்தி குருபுக்தி இவை நடக்கின்றன. பிதுர் லக்கினமாகிய மீனத்திற்கு மூன்றிற்கும் எட்டிற்கும் உடையவராகி சுக்கிரன் எட்டில் பிதுர்காரகனுகிய சூரியனுடன் கூடியிருக்கின்ருர். ஆகையால் பராசரஹோரை ஜாதகசந்திரிகை 67-ஆவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் மாரகனுகிருர். மேலும் குரு ஒன்பதிற் குடையவராகி, அ∴தாவது பிதுர் லக்கினதிபதியாகி, பிதுர்லக்கினத்திற்கு மாரகஸ்தானமாகிய பதினென்றில் இருக்கின்ருர். இவருக்கும் சுக்கிரனுக்கும் விரோதமுண்டு. ஆகையால் சுக்கிர தசையில் குருபுக்தியில் பிதுருக்குக் கண்டம் இருக்கிறது.

* **தாயார் விஷயம்.**—ஜாதகருக்கு வயது ஷ 34-0-0 முதல் ஷ 35-0-0 முடியும் வரையில் சந்திர தசையில் சனிபுக்தி நடக்கிறது. மாதுரு லக்கினமாகிய துலாத்திற்குப் பராசாரஹோரை ஜாதகசந்திரிகை 56-ஆவது சுலோகப் பிரகாரம் குரு மாரகனுகின்ருர். குருவுடைய வீட்டிலும் மாரகஸ்தானமாகிய மூன்ருவது வீட்டிலும் சந்திரன் இருக்கின்ருர். ஆகையால் பராசரஹோரை ஜாதகசந்திரிகை 25-ஆவது, 24-ஆவது சுலோகப் பிரகாரம் மாரகாதிபதி வீட்டிலிருக்கிற மாரகனுகிய சந்திரன் மாரகாதிபதியாகின்ருர். மேலும், சந்திரன் மாதுருகாரகனுகி மாதுரு ஸ்தானத்திற்கு மூன்றில் இருப்பதால் மாதுருக்குத் தோஷத்தை யுண்டு பண்ணக் கூடியவராய் இருக்கின்ருர். சனி துலாத்திற்கு மாரக ஸ்தானங்களாகிய இரண்டு ஏழாவது வீடுகளாகிய விருச்சிகத்தையும் மேஷத்தையும் பார்க்கின்ருர். ஆகையால் சந்திர தசையில் சனிபுக்தியில் மாதுருக்கு மரணயோகமிருக்கிறது. **மூத்த சகோதரரின் விஷயம்:**—ஜாதகருக்கு வயது ஷ 54-0-0 முதல் ஷ 55-0-0 முடியும் வரையில் ராகுதசையில் சனிபுக்தி, புதன்புக்தி இவைகள் நடக்கின்றன. மூத்தோர் ஸ்தானம் 11-ஆவது பாவமாகிய ரிஷபம். ரிஷப லக்கினத்திற்குக் குரு மாரகனுக, பராசரஹோரை, ஜாதக சந்திரிகை 46-ஆவது சுலோகப் பிரகாரம் ஏற்படுகின்ருர். இவர் 8-11-க்கு உடையவராகி மாரகாதிபதியாகவும் ஆகின்ருர். இவர் நீசமடைந்திருக்கின்ருர். மேலும் குரு எல்லோருக்கும் மூத்த சகோதரக்காரர். இவருடன் ராகு சம்மந்தப் பட்டிருப்பதால் ஜாதகசந்திரிகை 12-ஆவது சுலோகப் பிரகாரம் குருவுடைய மாரகத்தை ராகு ஏற்றுக்கொண்டு குருவின் பலனைக் கொடுப்பார். துய்ய கேரளம் 8-ஆம் பாவம் 20-ஆவது பாடலையும் பார்க்க, எட்டிற்குடையவருடன் சம்மந்தப்பட்ட ராகு மாரகனுக நேரிடுகிருர். புதன் இரண்டிற்குடையவராய் ரிஷபலக்கினத்திற்கு மாரகனுகிருர். இவர் லக்கினதிபதியாகிய சுக்கிரனுடன் கூடி இருப்பதால் மேற்கண்ட துய்யகேரளப் பாடல் பிரகாரம் மாரகனுகிருர். ஆகையால் ராகுதசையில் புதபுக்தியில் மூத்த சகோதரனுக்கு மாரகயோகமிருக்கின்றது. மேலும் வயது 56-0-0 முதல் 57-0-0 வரையிலும் ராகுதசையில் புதபுக்தியே நடக்கின்றது.

22. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கிறே மிருபா னைந்தி
லதிபதி வடகீழ் தன்னில் வருவளாம் குணத்தைச் சொல்வேன்
சதியிலா மனத்த ளாகும் சாதிப்பாள் சிலது சங்கை
துதிசெய்தோர்க் கன்ன மீவள் சொல்லது சுகமே யெய்தும்.

22. ஜாதகருடைய கலியாணமாகுங் காலத்தைச் சொல்லுகிறோம். இவருக்கு இருபத்தைந்தாவது வயதில் * மனைவி வடகிழக்குத் திக்கிலிருந்து வந்து வாய்ப்பாள். இவளுடைய குணதிசயங்களைச் சொல்லுகிறேன். வஞ்சனையில்லாத மனமுடையவள். சில காரியங்களைச் செய்து முடிப்பாள். தன்னையோ கடவுளையோ தோத்திரஞ் செய்பவர்களுக்குச் சாதம் கொடுப்பாள். சுகமான வார்த்தைகளை உபயோகிப்பாள்.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 24-0-0 முதல் 25-0-0 முடியும் வரையில் சூரியதசையில் சந்திரன், அங்காரகன் ராகு இவர்கள் புக்திகள் நடக்கின்றன. களத்திரவிஷயத்தில் சம்மந்தமுள்ள இரண்டாம் பாவாதிபதியாகிய சூரியன் போகஸ்தானமாகிய நான்கில் களத்திரகாரனுகிய சுக்கிரனுடன் சம்மந்தப்பட்டிருக்கின்றுர். அங்காரகன் ஐந்து பத்துக்குடையவராய்ச் சூரியனுடனும் சுக்கிரனுடனும் கூடி போகஸ்தானமாகிய நான்கிலிருந்துகொண்டு ஏழைப் பார்க்கின்றுர். ஆகையால் சூரியதசையில் அங்காரகபுக்தியில் ஜாதகருக்கு விவாகயோக அமைப்பு இருக்கிறது.

23. வரன்மனம் போல வாழ்வள் மாதுநன் னடக்கை யுண்டு
திருமக ளொப்ப தாகும் செல்விக்கு வயது தீர்க்கம்
குறுமுனி யிவ்வாறு சொல்லக் கூறுவார் பராசர் தாமும்
இருமனை அணுகு மென்றே மெப்படிச் சொல்லு மென்ன ;

23. இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்கிசைந்தாப் போல வாழ்வாள். இவள் நல்ல நடவடிக்கையுடையவள். இலக்ஷ்மியைப் போல விருப்பாள். இவளுக்கு வயது தீர்க்கமானது. இவ்விதமாக அகஸ்திய முனிவர் சொல்ல, பராசர முனிவர் சொல்லுகிறர். ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் வந்து நேரிடும் என்று சொல்லுகிறோம். எந்தக் காரணத்தினுல் இவ்விதமாகச் சொல்லுகின்றீர் என்று கேட்க ;

வேறு.

24. சப்தமந் தன்னில் ராகுவு மிருக்கச் சனியனு மெட்டில் சேர
வித்தகன் தனக்கு மனைவிய ரிரண்டு மேவிடு மென் கருத்தையா
அத்திரி புகல்வார் ஏழுமிடத் தோனும் ஆட்சியா யிருப்ப தாலும்
பத்திய நாலோ ன்றுனும் பத்தோ னென்றுய்ப் பரவியே யிருப்பதனுலும் ;

24. ஏழாவது பாவத்தில் ராகு இருப்பதாலும், சனி எட்டில் இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவி என்பது என்னுடைய அபிப்பிராயமையா என்று சொல்ல, அத்திரி ரிஷி சொல்லுகிறர். ஏழுக்குடையவர் ஆட்சியாய் இருப்பதாலும், நான்கிற்குடையவரும் பத்திற்குடையவரும் ஒன்றுய்ச் சேர்ந்திருப்பதாலும் ;

25. மறுமனம் காணுன் மனைவியு மொன்றே வரைந்தனம் அம்மாது தனக்கு
உரைத்திடு முத்திரை யிரண்டென மொழிவோம் உறையுங்காரணங்களைப் புகல்வாய்
அறைகிறோம் முப்பா னெட்டினில் சோரரவர்களால் முத்திரை நீங்கி
விரைவினில்வேறு முத்திரை நேரும் விளம்புவோ மிரண்டினில் விவரம்

25. ஜாதகருக்கு மறுபடியும் விவாகம் உண்டாகாது. மனைவி ஒருத்தி தான் என்று சொல்லுகிறோம். ஆனல் அந்த ஒரே மனைவிக்கு இரண்டு தாலி உண்டாகும் என்று சொல்லுகிறோம். காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வயதில் * திருடர்களால் மனைவியிடமிருந்து தாலி விடுவிக்கப்பட்டு, உடனே சீக்கிரத்தில் இன்னெரு தாலிகட்டும்படி வந்து நேரிடும் என்று சொல்லுகிறோம். இதனுடைய விவரத்தை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம்.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷ 37-0-0 முதல் 38-0-0முடிவு வரையிலும் சந்திர தசையில் கேதுபுக்தி, சுக்கிரபுக்தி இவைகள் நடக்கின்றன. களத்திர லக்கினம் மகரமாகும். மகர லக்கினத்திற்குச் சந்திரன் பராசரஹோரை ஜாதகசந்திரிகை சுலோகம் 62, 63-ப்படி மாரகனுகின்றுர். மகர லக்கினத்திற்கு மாரக ஸ்தானமாகிய ஏழாவது வீட்டில் கேது இருக்கின்றுர். கேதுவுக்கும் சந்திரனுக்கும் விரோதமுண்டு. கேதுவும் சந்திரனும் ஒருவருக்கொருவர் ஆறுவது எட்டாவது வீடுகளில் இருக்கின்றுர்கள். ஆகையால் கேது சந்திரதசையில் கெட்ட பலனைக் கொடுக்கக்கூடியவர். மேலும் சந்திரன் மகரலக்கினத்திற்கு மாரகனுய் ஏற்கனவே வருவதுமன்றி, பன்னிரண்டில் இருக்கின்றுர். ஆகையால் சந்திரதசையில் கேதுபுக்தியில் மனைவிக்குக் கண்டம் முதலிய கஷ்டங்கள் நேரிட அமைப்பு இருக்கிறது. இங்கு மனைவிக்கு மரணத்தைச் சொல்லாமல் அவளுடைய மாங்கல்யத்தைத் திருடன் அறுத்துக்கொண்டு போய்விடுவான். அதனுல் அவளுக்கு பங்கம் நேரிட்டு அவள் இன்னெரு தரம் வேறு தாலியை அதே புருஷனுல் கட்டிக்கொள்ள நேரிடும் என்கிறர். இங்கு குரு ஆறுக்குடையவராய் ஏழில் நீசமாகவிருக்கின்றுர். அங்காரகன் ஏழைப் பார்க்கின்றுர். ஆகையால் திருடர் அக்கினி இவைகளால் மனைவிக்குக் கஷ்டம் நேரிட அமைப்பு இருக்கிறது. இரண்டு தாலி கட்டும்படியான அமைப்புள்ள இன்னெரு ஜாதகம் மிதுனலக்கின வால்யூம் என்ற புத்தகத்தில் இருபதாவது ஜாதகமாகும். இவ்விரண்டு ஜாதகங்களையும் ஒத்துப் பார்க்கவும்.

26. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடும் சிலது சேதம்
சதமுட னைப்பா லொன்று தங்கிடும் பெண்பால் ரண்டு
இதுமூன்றும் தீர்க்க மெய்தும் எகிடும் முதலாம் நான்கும்
அதுவின்றி ஆறு ஏழும் அந்தமும் சேத மாமே.

26. ஜாதகருக்கு எட்டு சந்ததிகள் உண்டாகும். சில குழந்தைகள் இறந்துவிடும். ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் நிலைக்கும். இந்த மூன்று குழந்தைகளும் நீண்ட வயதை யுடையவர்களாக விருப்பார்கள். முதற் குழந்தையும் நான்காவது குழந்தையும் இறந்துவிடும். இதுவுமல்லாமல் ஆறாவது ஏழாவது குழந்தைகளும் கடைசி குழந்தையாகிய எட்டாவது குழந்தையும் இறந்துவிடும்.

குறிப்பு.—புத்திர தோஷம் விஷயம்.—புத்திரஸ்தானம் ஐந்தாவது ஒன்பதாவது பாவமாகும். ஐந்திற்குடையவரான அங்காரகன் ஐந்திற்குப் பன்னிரெண்டில் சூரியனுடன் கூடி அஸ்தமடைந்திருக்கிறார். மேலும் இவர் சந்ததிக்குத் தோஷத்தை விளைவிக்குந் தன்மையுடையவரும் பகைவருமான புதனுடன் கூடி இருக்கின்றார். ஐந்தாவது பாவத்தையும் ஒன்பதாவது பாவத்தையும் ராகு பார்க்கின்றார். ஐந்தாவது பாவத்தைச் சனி ஏழுக்குடையவரும் எட்டிற்குடையவருமாகிப் பார்க்கின்றார். ஏழுக்குடையவர் அல்லது எட்டிற்குடையவர் புத்திர ஸ்தானத்தைப் பார்த்தால் புத்திர தோஷமுண்டு என்பர். புத்திரகாரகுைகிய குரு பாபக்கிரகமாகிய சனியின் வீட்டில் நீசமடைந்து ராகுவுடன் கூடி இருக்கின்றார். குரு ஒன்பதாம் அதிபதியாகவும் இருக்கின்றா. ஆகையால் புத்திர தோஷம் அதிகமாகவிருக்கின்றது.

27. முன்னிவ னிருந்த ஜன்மம் மொழிகிறோம் தாயே கேளும்
பன்னிய மலைநாட தன்னில் வைசிய குலமே தோன்றிப்
பொன்னுடு பணிதி உண்டாய்ப் புகழான குடும்பி யாகித்
தன்னினத் தவர்க்கு மேலாய்த் தரணியில் செட்டுச் செய்து ;

27. ஜாதகருடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகிறோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே கேட்பீராக. நெருங்கிய மலைகளுள்ள மலை நாட்டில் வைசிய குலத்தில் பிறந்து, தனம் ஆபரணம் இவைகளை அடைந்து, பெருமையான குடும்பியாகித் தன்னுடைய பந்துக்களைவிட அதிக பெருமையுடனும் செல்வாக்குடனும் பூமியில் அதிகமான வியாபாரஞ் செய்து ;

28. சேதுவின் பதிக்குச் சென்று தேறினோர்க் கன்ன மீந்து
தீதென்றோர்க் குதவி செய்து திருமாலின் பக்தி கொண்டு
மாதவர்க் குதவி யாகி மார்க்கத்தில் தாகப் பந்தல்
சூதான காலன் பக்கல் சேர்ந்தன னென்று சொல்வோம்.

28. சேது ஸ்தலத்திற்குப் போய் சுத்தமான மனத்தையுடையவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாதம் போட்டும், கஷ்டத்தை அடைதிருக்கின்றோம் என்று சொன்னவர்களுக்கு உபகாரஞ் செய்தும், மகாவிஷ்ணுவின் மேல் பக்தியுடையவராகி, முனிவர்களுக்கும் தபசிகளுக்கும் உதவி செய்தும், ஜனங்கள் போக்கு வரத்து வழிகளில் தாக விடாயைத் தீர்க்கத் தண்ணீர் பந்தல்களை ஏற்படுத்தியும், பிறகு இறந்து எமனிடம் போய்ச் சேர்ந்தாரென்று சொல்லுகிறோம்.

29. கஞ்சனுல் வரையப் பட்டுக் காளையு மிச்சென் மத்தில்
முந்திய குலமு திப்பான் விருத்தரும் கேட்க லுற்றார்
தஞ்சமாய் முன்சென்மத்தில் தனவைசிய குலத்தில் வந்தோன்
கொஞ்சிய பிரம்ம சேயாய்க் குலமும்கா ரணங்க ளென்ன ;

29. பிரம தேவனால் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் மேன்மையான முதற் குலமான பிராமணர் குலத்தில் பிறப்பார். இதன் மேல் விருத்தர் என்ற முனிவர் கேட்கின்றார். முன்ஜன்மத்தில் பிராமணர் குலத்தைவிடத் தாழ்ந்த குலமாகிய வைசிய குலத்தில் தனமுடைவராகப் பிறந்தவர் மேன்மையான பிராமண குலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்ததற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க ;

30. முன்ஜன்மம் மாலின் பக்தி முயர்வோர்க்கு அன்ன மீந்து
உன்னத சேதுச் சென்றும் உயர்தாகப் பந்தல் வைத்தும்
அன்னவன் வாழ்ந்த தாலே அருளுவவான் பிரம்ம சேயாய்
உன்னத யானை பெற்ற உத்தமி கேட்டிடாயே.

30. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் மகாவிஷ்ணுவின் மேல் பக்தி உடையவராய் பெரியோர்களுக்கும் உயர்ந்த குணங்களை யுடையவர்களுக்கும் சாப்பாடு போட்டு, மேன்மையான சேது ஸ்தலத்திற்குப் போய் சிறப்பாகத் தாகவிடாய் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலை ஏற்படுத்தி வாழ்ந்து வந்ததால், அருளைப் பெற்று இந்த ஜன்மத்தில் பிராமணராகப் பிறந்தார். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகரைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

31. வந்தவன் தனக்குச் சேதி வரைகிறோம் தாயே யாங்கள்
விந்தையாய்க் கல்வி யாலும் விளங்கிடும் கிராமச் செட்டுத்
தன் தனம் செலவு செய்து தானவன் கொள்வா னுகும்
தந்தைநாள் பூமி விருத்தி தானுமே செய்வா னுகும்

31. இந்த ஜாதகருடைய விஷயங்களை நாங்கள் சொல்லுகிறோம், பார்வதியம்மையே ! ஆச்சரியமாய் வித்தையைக் கற்று அதனால் தன்னுடைய கிராமத்தின் வியாபாரத்தைத் தன்னுடைய பணத்தைச் செலவு செய்து அடைவார். மேலும் தன்னுடைய தகப்பனாருடைய காலத்திலிருந்து வருகிற பூமிகளைப் பயிரிட்டு விருத்தி செய்வார்.

32. இல்லமும் புதிதாய்ச் செய்வ னீரொன்ப தாண்டு தன்னில்
நல்லக விகளால் லாபம் நயப்புறும் பெரியோ ராலே
சொல்லுவே னிருபா னைந்துள் தொடர்ந்திடும் கிராமச் செட்டு
வல்லியே நாற்பா னுண்டில் வரைந்தன மரசு தானே.

32. ஜாதகர் பதினெட்டாவது வயதில் புதிய வீட்டைக் கட்டுவார். இவருக்குப் பதினெட்டாவது வயதில் மேன்மையான படிப்புகளாலும் அன்புள்ள பெரிய மனுஷர்களின் உதவியாலும் லாபம் உண்டாகும். இவர் இருபத்தைந்து வயதிற்குள் தன்னுடைய கிராம

வியாபாரத்தை ஆரம்பித்து விடுவார். இவருக்கு நாற்பது வயது வரையிலும் இராஜாங்க வேலை உண்டு என்று சொல்லுகிறோம், பார்வதியம்மையே !

33. குடும்பத்தின் சேதி தன்னைக் கூறுவோம் நாலாண்டு
திடமதாய் விளங்கு மென்றோம் செப்புவோம் தன்மேல் வேறு
அடவுடன் பதினே மூாண்டில் அக்கினி யில்லம் நேரும்
தடவரை மகளே பின்பால் சாற்றுவோம் விவர மாக.

33. ஜாதகருடைய குடும்பத்தின் விஷயங்களைச் சொல்லுகிறோம். இவருக்கு நான்கு வயது வரையிலும் குடும்பம் வலிவாக ஓங்கி வளரும். அதற்கு மேல் வேறு விதமாக விருக்கும். இவருக்குப் பதினேமூாவது வயதில் தென் கிழக்குத் திக்கில் ஒரு வீடு வந்து சம்பவிக்கும். விசாலமான இமய மலையின் அரசனுகிய ப்ர்வத ராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே ! விவரமாகப் பலன்களைப் பின்னல் அடுத்த பாகத்தில் சொல்லுகிறோம்.

34. ஜனித்திடும் காலம் தன்னில் சிகி[1] தசை ஆண்டு மூன்றும்
குனித்திடு திங்க ளாறும் கூறுவோம் பலனை யாங்கள்
வினைவரும் ஜாத கர்க்கு மிக்கநாற் காளி பீடை
துணைவரும் விருத்தி யாகும் செப்புவோம் விவரம் ரண்டில்.

34. ஜாதகர் பிறக்கும் காலத்தில், துக்கத்தை விளைவிக்கக் கூடிய கேது தசை வருஷம் மூன்று மாதம் ஆறும் ஆகும். இதற்குப் பலனை நாங்கள் சொல்லுகிறோம். ஜாதகருக்குக் கெடுதிகள் சம்பவிக்கும். அதிகமான கால்நடைகளுக்கு நோயுண்டாகும். சகோதரங்கள் விருத்தி யாவார்கள். மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம்.

[1] கேது

ஜாதகம் 61

குரு	ராகு		
	இராசி சக்கரம்.		லக்கினம்
அங்காரகன்			சுக்கிரன்
சந்திரன்		சூரியன் புதன் கேது	சனி

மூலம் 2-ஆம் பாதம் : கேது தசை வ 4—4—0

1. திங்களும் [1] தனசுவாகச் சேய் மானில் [3] குருவு மீனம்
அங்கையன் [4] புந்தி [5] ஞானி [6] பகர்த் துலே [7] காரி [8] கன்னி
துங்கமாம் வெள்ளி [9] சீயம்[10] ஜன்மமும் கடக மாக
இங்கிவை கிரகம் நின்றுலி யியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் தனுசிலும், அங்காரகன் மகரத்திலும், குரு மீனத்திலும், சூரியன், புதன், கேது, இவர்கள் துலாத்திலும், சனி கன்னியிலும், பெருமையுள்ள சுக்கிரன் சிம்மத்திலும், ராகு மேஷத்திலும், ஜன்ம லக்கினம் கடகமும் ஆகி, இவ்விதமாக கிரக நிலைகள் இருந்தால் பலனைச் சொல்லுவீர் என்று;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடைய தாகும்: மேஷத்தில் புதனும், ரிஷபத்தில் சந்திரனும் சனியும், சிம்மத்தில் ராகுவும் கன்னியில் அங்காரகனும் தனுசில் சுக்கிரனும், மகரத்தில் சூரியனும், கும்பத்தில் கேதுவும் மீனத்தில் குருவும் ஆகும்.

2. சுந்தரி கேட்கும போது செயமுனி புகலுகின்றார்
வந்தது ஆணும் ஜன்மம் வடவாசல் கீழ்மேல்வீதி
இந்திர நகர மாகும் இராசர்கள் வாசமாகும்
அந்தஇல் வாடையாகும் யானையின் முகத்தோன் மேற்கில்.

2. பார்வதியம்மை கேட்கும் போது ஜய முனிவர் சொல்லுகின்றார். வந்து பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீதி கிழக்கு மேற்குத் தெருவாகும். வீடு வடவண்டை வாடையாகும். பிறந்த ஊர்

[1] சந்திரன் [2] அங்காரகன் [3] மகரம்
[4] சூரியன் [5] புதன் [6] கேது
[7] துலாம் [8] சனி [9] சுக்கிரன் [10] சிம்மம்

தேவேந்திரபட்டணம் போல விருக்கும். அரசர்கள் அவ்வூரில் வாசஞ் செய் வார்கள். பிறந்த வீட்டின் வாடையில் மேற்குத் திக்கில் யானையின் முகத் தையுடைய விநாயகக் கடவுளின் கோயில் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாசமி வ்வித அடையாளத்துள்
அன்னவ னுதிப்பா னுகும் அவன்தந்தை தாயின் யோகம்
தன்துணை களத்திர புத்திரர் சாதகன் யோக சேதி
முன்பின்ஜன் மங்கள் யாவு முரைக்கிறோ மிந்நூல் தன்னில்.

3. இன்னமும் பல தேவர்கள் அந்தப் பட்டணத்தில் வாசஞ் செய்வார்கள். இவ்விதமான அடையாளங்களுள்ள விடத்தில் ஜாதகர் பிறப் பார். இவருடைய தகப்பனுர் தாயார் இவர்களுடைய யோகம், இவருடைய சகோதரங்கள் மனைவி புத்திரர்கள் இவருடைய யோகவிஷயங்கள், முன் ஜன்மம், பின் ஜன்மம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம்.

4. தந்தையின்துணை ஆண் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாகப்
பிந்தின துணைவனுகப் பேசுவோம் தாயேகேளும்
நொந்திடும் மற்றதெல்லாம் நுவலுவோம் பிதாகுணத்தைச்
சிந்தையும் நல்ல தாகும் சிவந்த மெய் வாத தேகி.

4. ஜாதகருடைய தகப்பனுக்கு ஒரு ஆண் சகோதரர்தான். அவர் நீண்ட ஆயுளை உடையவர் என்று சொல்லுகிறோம் இந்தச் சகோ தரன் இளைய சகோதரன் என்றும் சொல்லுகிறோம். பார்வதியம்மையே! கேட்பீராக. மற்றச் சகோதரர்கள் எல்லாம் இறந்து விடுவார்கள். ஜாதகருடைய தகப்பனுருடைய குணதிசயங்களைச் சொல்லுகிறோம்: அவருக்கு நல்ல எண்ணங்களுண்டு. அவர் சிவப்பு நிறமாயுள்ள தேகமுடையவர். வாதசரீர முடையவர் ஆவா.

5. அன்னையும் பகையு மெய்தும் அல்பவஸ் துக்களு மிஷ்டன்
மன்னர் பால் ஜீவிப்பானும் மருவிடும் கல்வி ரெண்டு
அன்னிய பாஷை மேன்மை அவன்தந்தை ஆஸ்திகாணுன்
கன்னென மொழியே சொல்வன் காவலர் நேசம் கொள்வன்.

5. அவருக்குத் தாயார் விரோதியாக விருப்பார். அவருக்கு அற்பமான வஸ்துக்களின்மேல் ஆசையுண்டு. அரசர்களிடத்தில் தொழிலே யுடையவர். இரண்டுவித கல்வி உண்டு. அன்னிய பாஷை மேன்மையாகத் தெரியும். அவருக்குப் பிதுரார்ஜித சொத்து கிடையாது: இனிமையான வார்த்தைகளைப் பேசுவார். அரசர்களுடைய சினேகிதத்தை அடைவார்.

6. சொந்தமா யில்சேர்ப் பானுகும் செம்பஞ்சு கட்டில் மெத்தை
வந்தவர்க் கன்ன மீவன் மனைவியால் பெருமை எற்பன்
நிந்தைகள் தாயால் நேரும் நிதம்சுகி போச னத்தான்
முந்துமால் பத்தி கொஞ்சம் முனிவுண்டு பின்னுல் தாழ்வன்.

6. அவர் சொந்தமாக வீட்டை அடைவார். கட்டில் மேன்மை யான பஞ்சுமெத்தை இவைகளை அடைவார். தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். மனைவியால் அவருக்கு மேன்மையும் பெருமையு முண்டாகும். அவருக்குத் தன்னுடைய தாயாரால் கெட்ட பெயர் உண்டாகும். அவருக்குத் தினந்தோறும் சுகமான சாப்பாடு உண்டு. முதலில் அவருக்கு மகாவிஷ்ணுவின்மேல் கொஞ்சம் பக்தியும் நம்பிக்கையும் உண்டாகும். கோபமுண்டாகும், பின்னுல் அது குறைந்துவிடும்.

7. கரமதில் சங்குச் சக்கரம் கனத்தப்புத் திகளு முண்டு
உறன்முறை மெச்சவாழ்வன் ஊகைவான் கணக்கில் தேர்வன்
நெறியதைத் தவறுதல் செய்யான் நீரின்மேல் பிரிய னுவன்
குறையென்றோர்க் குதவி செய்வன் கொம்பனே யாளே கேளாய்.

7. அவருடைய கையில் சங்கு சக்கர ரேகைகளுண்டு. பெரும் புத்திகளையுடையவர். பந்துக்கள் அவரை மெச்சும்படியாக மேன்மையாக வாழ்வார். யுக்தி உள்ளவர். கணக்குப் போடுவதில் கெட்டிக்காரர். நல்ல ஒழுக்கம் சன்மார்க்கம் இவைகளைத் தவருமல் உடையவர். ஜலத்தைக் கண்டால் அதிக ஆசையுடையவர். கஷ்டமுள்ளவர்களுக்கும் ஏழைகளுக் கும் உபகாரஞ் செய்வார். மேன்மையான பார்வதியம்மையே! கேட்பீராக.

8. இந்நெறி யுடையா னுக்கு யிவனுமே யிரண்டாம் ஜன்மம்
அன்னவ தினுப்பா னுகும் அறைகிறோ மவன் குணத்தைத்
தன்தேகம் உணச்சல் நீட்சி சாரும்பின் வயதில் வாயு
உன்னத கலைகள் கற்பன் உயர்வான தொழிலு மேற்பன்.

8. இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு ஜாதகர் இரண்டாவது குழந்தையாகப் பிறப்பார். ஜாதகருடைய குணதிசயங்களைச் சொல்லுகிறோம். இவருடைய தேகம் ஒல்லியாகவும் நீண்டும் இருக்கும். பிந்தியவயது காலத்தில் இவரது தேகம் வாயு தேகமாகப் பருத்துவிடும். உயர்ந்த வித்தைகளைக் கற்றுக்கொள்ளுவார். உயர்ந்த மேன்மையான வேலையை அடைவார்.

9. அரசரால் தொழிலு மேற்பன் அற்பரை உறவு கொள்ளான்
பரிவண்டி யுடைய னுகும் பகை யென் றுமனத்தில் வைய்யான்
பெருமையா யதிகாரத்தைப் பேணுவான் போஜன சுகிய னுவன்
நறைமலர் இஷ்டம் கொள்வன் நாயகி மார்கள் மோகன்.

9. அரசர்களிடத்தில் வேலையில் இருப்பார். தாழ்ந்தவர்களிடத் தில் சினேக மில்லாதவர். குதிரை வண்டி உடையவர். தன்னுடைய மன தில் விரோதமில்லாதவர். மேன்மையான அதிகமான அதிகாரத்தின் மேல் ஆசையுடையவர். சுகமான போஜனத்தை யுடையவர். வாசனையுடைய புஷ்பங்களில் ஆசையுள்ளவர். பெண்களின்பேரில் காம ஆசை உடையவர்.

10. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட ஞவன்
புல்லிய புத்தி யில்லான் புண்ணிய மனத்தா ஞவன்
தொல்லேஅல் லல்களில்லான் யாரையும் உறவு கொள்வன்
எல்லேக ளதிகம் சேர்ப்பன் ராஜபூஜிதனு மாவன்.

10. ஜாதகர் நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். முரடர்களுக்கும் முட்டாள்களுக்கும் வலிவுடையவனுகவும் சலிக்காதவனுகவும் இருப்பான். தாழ்ந்த புத்தியில்லாதவர். புண்ணியத்தைச் செய்யக்கூடிய நல்ல மனத்தை யுடையவர். கஷ்டங்களேயும் தொந்தரவுகளேயும் அடையாதவர். எல்லோரையுஞ் சினேகஞ் செய்துகொள்வார். அதிகமான பூமிகளேச் சேகரிப்பார் அரசர்களால் போற்றக் கூடியவருமாவார்.

11 தன்துணே முன்னேர் காணுன் தங்காது பின்னு மவ்வாறு
மன்னிய ஆணும் ஜன்மம் மீனராசி அஸ்த நாளாம்
அன்னவன் வருவா ஞகும் அவன்குணம் சிவந்த மெய்யன்
பொன்பணி சேர்ப்பா ஞகும் புயபல முடைய ஞமே.

11. ஜாதகருக்கு முன்னே பிறந்த சகோதரங்கள் கிடையாது, பிறந்தாலும் உயிருடன் இருக்காது. பின்னுல் பிறக்குஞ் சகோதரம் ஆண் சகோதரமாகும். இந்த இளேய சகோதரன் மீன ராசி லக்கினத்தில் அஸ்த நட்சத்திரத்தில் பிறப்பார். இவருடைய குணுதிசயங்களேச் சொல்லுகிறேம். இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தை யுடையவர். தனமும் ஆபரணங்களும் சேர்த்து வைப்பார். தோள்வலிவுடையவர்.

12. அரசர்பூசிதமெய்தும் அன்னிய கல்வி யாலே
பெருமையும் தொழிலும் வாய்க்கும் பூமியில் சல்லியம் காணுன்
மறுவரைவசித் தேவெல்வன் வண்டிவாகனமு முள்ளான்
திருமகள் வாசமுள்ளான் சென்றிடும் பெருமை யேற்பன்.

12. அரசர்கள் இவரைப் போற்றுவார்கள். அன்னிய பாஷை வித்தையால் இவருக்குப் பெருமையும் உத்தியோகமும் கிடைக்கும். இவருக்குக் கடன்கள் கிடையாது. பகைவரை மயக்கியோ அல்லது வசியஞ் செய்தோ வென்று விடுவார். வண்டியையும் வாகனத்தையு முடையவர். இலக்ஷ்மி இவரிடம் வாசஞ் செய்வாள். இவர் கீர்த்தியையும் பெருமையையும் அடைவார்.

13. வஞ்சக வஞ்ச ஞவன் வசனமும் சுகமு மெய்தும்
அஞ்சிடான் யாவருக்கும் அரிபக்தி பூண்பா ஞகும்
மிஞ்சிய வார்த்தைசொல்வன் மெல்லியும் மொன்றே யாகும்
நஞ்சாகும் சுதர்க ளென்றேம் நல்காது என்று சொல்வோம்.

13. கபடமுள்ளவர்களுக்குக் கபடமுள்ளவராக விருப்பார். சுகமாகவும் இனிப்பாகவும் வார்த்தைகளே உபயோகிப்பார். யாருக்கும் பயப்படாதவர். மகாவிஷ்ணுவின்மேல் பக்தியுடையவர். வார்த்தைகளே அத்து

மீருமல், அ·.·.தாவது கொஞ்சமாகச் சொல்லுவார். இவருக்கு ஒரே பெண் குழந்தையுண்டு. பிள்ளேகள் நிமையை அடைந்து விடுவார்கள், அஃதாவது இறந்து விடுவார்கள்.

14. மறுபாரி ஒன்று தோன்றும் அவளுக்குச் சுதராண் ஒன்று
அரிவைமா ரிரண்டு என்றேம் அவன்சிலநாட்கள் ஒன்ருய்ப்
பரவிப்பின் வேருய்ச் செல்வன் பகருவோம் பின்பால் சேதி
பெருவயி றேனேப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

14. இவருக்கு இன்னெரு மனேவி ஏற்படும். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கும் என்று சொல்லுகிறேம். இவர் சிலகாலம் ஜாதகருடன் ஏககுடும்பத்தில் ஒன்ருக விருந்து பின்னுல் குடும்பத்தை விட்டுப் பிறிந்து போய்விடுவார். இவருடைய மற்ற விஷயங்களேப் பின்னுல் பின் பாகத்தில் சொல்லுகிறேம். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளேப் பெற்றப் புண்ணியவதியாகிய பார்வதி யம்மையே ! கேட்பீராக.

15. பின்துணே பெண்பா லொன்று பேசுவோம் தீர்க்க மாக
அன்னவள் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்
இன்னவன் மணத்தின் காலமி யம்புவோ மீரொன் பானில்
கன்னிகை மேல்பால் நேரும் கழறு வோமவள் குணத்தை.

15. ஜாதகருக்கு இளேய சகோதரி ஒருத்தி நீண்ட ஆயுளே யுடையவள். அவளுடைய விஷயங்களேப் பின்னுல் பின்பாகத்தில் நாங்கள் சொல்லுகிறேம் எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே, ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகிறேம். இவருக்குப் பதினெட்டாவது வயதில் † மனேவி மேற்குத் திக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணுதிசயங்களேச் சொல்லுகிறேம்.

குறிப்பு.—† ஜாதகருக்கு வயது ஷூ 17–0–0 முதல் ஷூ 18–0–0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் குருபுக்தி சனிபுக்தி இவைகள் நடக்கின்றன. களத்திர சம்மந்தமான இரண்டாவது வீட்டில் போகஸ்தானமாகிய நான்காம் பாவத்திற்குரிய சுக்கிரன் இருப்பதால் இவருக்கு விவாகஞ் செய்துவைக்க அதிகாரம் இருக்கிறது. சனி களத்திரம் சம்மந்தமான ஏழாம்பாவத்திற்கு அதிபதியாகிச் சுக்கிரனுக்கு இரண்டில் குருவின் பார்வையை அடைந்து இருக்கின்ருர். ஆகையால் சனிக்கு விவாகம் செய்யும் அதிகாரம் இருக்கிறது.

16. புத்திமான் சிவந்த மேனி புகலுமுன் கோபி யாவள்
சித்தமே கறுப்பு மில்லாள் தேவியும் யோக சாலி
நத்திஞேர்க் குதவிசெய்வள் நாயகன் மனம் போல் வாழ்வள்
வித்தகி சீல மாவள் வீண்வம்பில் செல்லா ளாமே.

16. இவள் புத்திசாலியாயிருப்பாள். சிவப்பான நிறமுடைய தேகத்தையுடையவள். முன்கோபத்தை யுடையவள். இவளுடைய மனது களங்கமில்லாமல் இருக்கும். இவள் யோக முடையவளாக விருப்பாள். தன்

விடம் வந்தடைந்தவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். புருஷனுடைய மனத்திற்கு ஒத்தாப்போல் வாழ்வாள். இவள் அறிவுடையவள். நல்லொழுக்க முடையவள். வீண்சண்டைக்குப் போகமாட்டாள்.

17. அறமதி லிச்சை யுண்டு அணுகிடும் பித்தச் சூடு
திருமக ளொப்ப தாகும் தீரமா மனத்தா ளாகும்
அறைகிறேம் புத்திர பாவம் ஒன்பது தோன்று மென்றேம்
திறமாக ஆண்பால் ரண்டு செல்விமார் மூன்று என்றேம்.

17. இவள் தர்மஞ் செய்வதில் ஆசையுள்ளவள். பித்தச் சூடான தேகமுடையவள். இலக்ஷ்மியைப்போல விருப்பாள். தைரியமான மனத்தையுடையவள். இவளுக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவளுக்கு ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள் என்று சொல்லுகிறேம். இரண்டு ஆண் குழந்தைகளும், மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்கள் என்று சொல்லுகிறேம்.

18. மற்றவை சேத மெய்தும் மாதரு குணத்தைச் சொல்வேன்
சுத்த மூம் சிவந்த மேனி சொல்லாத சுகமுமெய்தும்
பத்தினி நடக்கை நன்மை பெருந்தந்தம் முன்கோ பத்தாள்
வித்தகி வந்த பின்பு வானுக்கு யோகம் வாய்க்கும்.

18. மற்றக் குழந்தைகள் இறந்து விடுவார்கள். ஜாதகருடைய தாயின் குணாதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் சுத்தமான சிவப்பான தேகத்தை யுடையவள். சொல்லொணுச் சுகங்கள் இவளுக்குத் தானே வந்து நேரும். இவள் கற்புடையவள். நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உடையவள். பெரிய பற்களை யுடையவள். முன்கோபமுடையவள். இவள் தன்னுடைய புருஷனை வந்தடைந்த பிறகு புருஷனுக்கு யோகமுண்டாகும்.

19. சொல்லது அதிக மெய்தும் துணைஆண்பால் தோஷ மெய்தும்
வல்லிமா ரிருவர் தீர்க்கம் மரித்திடு நான்கு என்றேம்
புல்லிய புத்தி யில்லாள் பணிகளும் அதிகம் சேர்ப்பள்
அல்லல்பேர்க் குதவி செய்வள் அன்புள மனத்தா ளாமே.

19. இவள் அதிகமாகப் பேசுவாள். இவளுக்கு ஆண் சகோதரர்கள் தோஷத்தை அடைவார்கள், இறந்துவிடுவார்கள். இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்கள். நான்கு சகோதரர்கள் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகிறேம். தாழ்ந்த புத்தியில்லாதவள். ஆபரணங்களை அதிகமாகச் சேர்த்துவைப்பாள். துன்பத்தை யடைந்தவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். விசுவாசமுள்ள மனத்தையுடையவள் ஆவாள்.

20. வந்ததோர்வினையைச் சொல்வேன் விரதத்தில் விரோதம் செய்தாள்
முந்தினோர்க் கிடைஞ்சல் செய்தாள் மொழியதைத் தடுத்து வாழ்ந்தாள்
பந்தியில் வஞ்சம் செய்தாள் படர்ந்தது அந்தத் தோஷம்
அந்திய காலம் தன்னில் அற்பமாம் குடும்பி யாகி;

20. இவளுக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகிறேன். இவள் விரதங்களைச் செய்வதில் விரோதமாகவும் குற்றமாகவும் நடந்து கொண்டாள். பழைய காலத்து மனுஷர்களுக்கும் வயது சென்றவர்களுக்கும் பிராமணர்களுக்கும் இக்கட்டுகளையும் கெடுதிகளையுஞ் செய்தாள். தன் புருஷனுடைய வார்த்தைகளைத் தடுத்து அதற்கு மாறுபாடாக நடந்து வாழ்ந்து வந்தாள். ஜனங்களுடைய சபையில் கூட்டத்தில் வஞ்சனையாக நடந்து கொண்டாள். இந்த தோஷங்கள் எல்லாம் இவளை வந்து அணுகின. இவள் தனக்குக் கடைசி காலத்தில் குடும்பம் நொந்து சிறுத்துப்போய்;

21. அன்னையின் பூர்வம் சொல்வேன் அருணைக்குத் தென்பா லாகச்
சின்னவூர் தன்னி லேதான் ஜனித்தன ள் மறைக்குலத்தில்
பொன்பணி யுடையா ளாகிப் புகழ்ந்தோர்க் குதவிசெய்து
தன்சுதர் அனேகமுண்டாய்த் தையலும் வாழும் நாளில் ;

21. ஜாதகருடைய தாயின் முன்ஜன்மத்தைச் சொல்லுகிறேன். இவள் திருவண்ணாமலைக்குத் தெற்கில் ஒரு சிறிய கிராமத்தில் பிராமண குலத்தில் பிறந்தாள். தனமும் ஆபரணமும் உடையவளாகித் தன்னைப் புகழ்ந்து பேசினவர்களுக்கு உபகாரஞ் செய்து, தனக்கு அனேகம் குழந்தைகள் பிறந்து வாழ்கின்ற காலத்தில் ;

22. காரகப் பிணியு மாகிக் காலன்தன நாட டைந்து
தீரமாய்ப் பிரமன் லக்கம் தேவியும் வந்தாளென்றேம்
நாரியும் முன்ஜன் மத்தில் நன்மறைக் குலமு தித்தோள்
பாரினில் குலம்தாழ் வாகப் பிறந்தகா ரணங்கள் சொல்வீர்.

22. இவள் காரக ரோகத்தால் இறந்து, எமப் பட்டணத்திற்குச் சென்று, வலிவாய்ப் பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவள் முன்ஜன்மத்தில் நல்ல பிராமண குலத்தில் பிறந்து, பூமியில் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த குலத்தில் வந்து பிறந்ததற்குக் காரணங்களைச் சொல்லுவீர்.

23. விரதங்கள் குறைவு செய்தும் வாய்த்ததோ ரிடைஞ்சல் செய்தும்
அரிவையும் வாழ்ந்த தாலே அணுகினள் குலம்தாழ் வாக
வரன்சொல்லைத் தடுத்த தோஷம் மைந்தர்கள் தோஷ மெய்து
உறையில்லம் பாழ தாகும் உறும்துணை ஆண்பால் தோஷம்.

23. இவள் முன் ஜன்மத்தில் விரதங்களைக் குறைவுடனும் தோஷங்களுடனும் செய்தும், பெரிய இக்கட்டுகளைச் செய்தும் வாழ்ந்து வந்ததால் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த ஜாதியை அடைந்தாள், முன் ஜன்மத்தில் தன்னுடைய புருஷனுடைய வார்த்தைகளை மீறி நடந்த தோஷத்தால், ஆண் குழந்தைகளுக்குத் தோஷமுண்டாகும். தான் வசிக்கின்ற வீடு பாழாகும். இவளுக்கு ஆண் சகோதரர்கள் தோஷங்களை அடைவார்கள்.

24. வந்துபின் பிறைபோல் யோகம் வரனுக்கு நேரு மென்றோம்
பிந்திய ஜன்மம் சொல்வேன் பிருதிதி தன்னி லேதான்
பிந்திய குலமு திப்பாள் பேதையே கேட்டி டாயே
தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோ மினிமே லாக.

24. இவள் புருஷனை வந்து அடைந்த பிறகு புருஷனுக்கு யோகம் வளர்பிறைச் சந்திரனைப்போல விருத்தியடையும் என்று சொல்லுகிறோம். இவளது மறுஜன்மத்தைச் சொல்லுகிறேன். பிருதிவி ஸ்தலமாகிய காஞ்சீபுரத்தில் தாழ்ந்த குலத்தில் வந்து பிறப்பாள். பார்வதியம்மையே! கேட்பீராக. ஜாதகருடைய தகப்பனுடைய முன்ஜன்மத்தை இனிமேல் சொல்லுகிறோம்.

25. தில்லையில் வைசியச் சேயாய் ஜனித்துமே செட்டுச் செய்து
வல்லியும் மதலை யுண்டாய் வளமுள குடும்பி யாகித்
தொல்லையில் லாமல் வாழ்ந்தாள் சூழ்ந்ததோர் வினையைச்
[சொல்வேன்
கொல்லையில் கருப்பன்[1] வாசம் குலதெய்வ மென்று சொல்லி.

25. ஜாதகருடைய தகப்பன் சிதம்பரத்தில் வைசிய குலத்தில் ஆணுகப் பிறந்து வியாபாரஞ் செய்துகொண்டு மனைவி மக்களை யுடையவராகி மேன்மை தங்கிய செழிப்பாயுள்ள ஒரு குடும்பத்திற்கு அதிபதியாகிக் கஷ்டங்களும் கடன்களும் இல்லாமல் வாழ்ந்துவந்தார். அப்போது அவருக்கு வந்து சம்பவித்த ஒரு பாவத்தைச் சொல்லுகிறேன். அவருடைய கொல்லையில் வீட்டுப் புழக்கடையில் ஸ்திரீகளின் கர்ப்பப்பையிலுள்ள கருவுகளை நாசஞ் செய்யுங்காரணத்தால் கருமுனி என்று சொல்லப்படுகிற ஒரு முனீச்வரன் வாசஞ் செய்துகொண்டு வந்தார். இவரைத் தங்களுடைய குல தெய்வம் என்று சொல்லிப் பாவித்து.

26. முன்னோர்கள் தோத்த ரிப்பார் முனிவாழும் விருக்ஷம் தன்னைத்
தன்வேலை புரிய வேண்டித் தரித்தானும் இவனும் என்றோம்
இல்லறம் போன பின்பு ஏகிற்று வேறு இல்லம்
துன்முனி புகலு கின்ற தோஷத்தைச் சொல்வேன் கேளாய்.

26. ஜாதகருடைய தகப்பனுடைய முன்னோர்களாகிய மூதாதைகள் துதித்து வந்தார்கள். இந்த முனீசுவரன் வாசஞ்செய்துகொண்டிருந்த வாசஸ்தலமாகிய ஒரு மரத்தை இந்தத் தகப்பன் தன்னுடையதனது காரியம் முடிவு பெறுவதற்காக வெட்டிவிட்டார். பிறகு இந்த முனீசுவரன் தன்னுடைய இல்லமாகிய, வாசஸ்தலமாகிய விருக்ஷம் போய்விட்ட பிறகு இன்னொரு வாசஸ்தலத்துக்குப் போய்விட்டார். இந்தத் துன்பமடைந்த முனீசுவரன் சொல்லுகின்ற சாபத்தைச் சொல்லுகிறேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

[1] முனீச்வரன்.

27. இருப்பிட மழித்த பாவி இனிவரும் ஜன்மம் தன்னில்
பிறக்குமிவ் வில்லம் நீங்கிப் பேனுவாய் வெளியூர் தன்னில்
சிறக்காது தந்தை ஆஸ்தி ஜனித்தசேய் யிரண்டு பங்கு
மரிக்குமே என்று சொல்லி வசனித்து முனியும் தானும்.

27. "என்னுடைய வாசஸ்தலத்தை அழித்துவிட்ட பாபியாகிய நீ, மறு ஜன்மத்தில் உன்னுடைய பிறந்த வீட்டை விட்டு வெளியூருக்குப் போய்விடுவாய். உனக்கு உனது தகப்பனுருடைய சொத்து விருத்தியாகாது. உனக்குப் பிறக்கும் குழந்தைகளில் (மூன்றில்) இரண்டு பங்கு குழந்தைகள் இறந்துவிடும்" என்று இவன் தகப்பனைப் பார்த்து அந்த முனீசுவரன் விவரமாகச் சொல்லிற்று.

28. கருமுனி சாபம் தானும் கலந்திடு மிச்சென் மத்தில்
பெருந்தந்தை யில்ல மின்றிப் பிறக்குமேசய் மூன்றி லிரண்டு
மறலியின் பதிக்குச் சேரும் மன்னனும் சுகமாய் வாழ்வன்
வறுமைக ளில்லா வாழ்வன் மருமத்தைச் சொல்லு மென்ன;

28. இந்த முனீசுவரனுடைய சாபமானது தகப்பனுரை இந்த ஜன்மத்தில் வந்து அடையும். ஆகையால் தகப்பன் தன்னைப் பெற்றத் தகப்பனுடைய வீடு இல்லாமலும் தனக்குப் பிறக்கும் குழந்தைகளில் மூன்று பங்கில் இரண்டு பங்கு குழந்தைகள் இறந்தும் இவர் சுகமாய் வாழ்வார். தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமலும் வாழ்வார். இதற்கு ரகசியமான காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க.

29. மந்திரி[1] ஒன்பா னிற்க மங்கலன் [2] உச்ச மாக
இந்திர போக முண்டு இராஜபூ சிதமு மெய்தும்
முந்துமா லருளி னுலே யுயர் வான குடும்பி யாவன்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாக.

29. குரு ஒன்பதாம் பாவத்தில் இருப்பதாலும், அங்காரகன் மகரத்தில் உச்சமாக விருப்பதாலும், ஜாதகருடைய தகப்பனுருக்கு இந்திர போகமுண்டாகும். தகப்பனுர் இராஜாங்கத்தில் போற்றப்பட்டவர். முன் ஜன்மத்திய மகாவிஷ்ணுவினுடைய கிருபையினுல் மேன்மையான குடும்பமுடையவராவார். பிந்திய பாகத்தில் விபரங்களை விஸ்தாரமாகச் சொல்லுகிறோம்.

30. மறுஜன்மம் மலைநா டன்னில் மன்னர்தம் குலமு திப்பான்
கரிபரி யுடையா னுகிக் காவலன் வாழ்வா னுகும்
திருமக ளிச் சென்மத்தில் தாய்ப்பகை அல்ப வஸ்து
அருந்தியும் பொருள்மே லிச்சை அரிபக்தி கொஞ்ச மாயும்;

30. தகப்பனுர் மறு பிறப்பில் மலை நாட்டில் அரசர் குலத்தில் பிறப்பார். யானை குதிரை இவைகளை யுடையவராகி வாழ்வார். இவர் இந்த

[1] குரு. [2] அங்காரகன்.

ஜன்மத்தில் தாயாரைப் பகைத்துக்கொண்டும், அற்பமான வஸ்துக்களைச் சாப்பிட்டும், பொருள்களின்பேரில் ஆசையுடையவராகி விஷ்ணு பக்தியுடையவராயும் ;

31. கொண்டவன் மறுபி றப்புக் கோவலர் குலமு திக்கும்
கண்டிடும் சொல்லு மென்னக் கழறுவோம் முனியே கேளும்
குண்டுணி கூறு தாலும் கதியிலார்க் குதவி செய்தும்
துண்டமாய் வார்த்தை யின்றி துறவோர்க்கு அன்ன மீந்தும் ;

31. இருந்தவருக்கு மறு ஜன்மத்தில் அரசர்களுடைய குலத்தில் பிறப்பதற்குக் காரணத்தைக் கண்டிப்பாய்ச் சொல்லுமென்று கேட்க சொல்லுகிரேம், முனியே ! கேட்பாயாக. இவர் கோள் சொல்லாமலிருந்ததாலும், ஏழைகளுக்கும் வசதியில்லாதவர்களுக்கும் உபகாரஞ் செய்ததாலும், கடினமான வார்த்தைகளை உபயோகிக்காமல் துறவிகளுக்கும் பரதேசிகளுக்கும் சாதம் கொடுத்ததாலும் ;

32. நல்லதோர் தலங்கள் சென்றும் நாயகன் வாழ்வ தாலும்
புல்கினன் அரசர் வர்க்கம் பிறப்பனு மென்று சொல்வோம்
சொல்லுவேன் உதித்தோன் பூர்வம் திருவானைக் காவல் தன்னில்
கொல்லன்தன் குலமு தித்து குவலய நல்லோனுகி ;

32. திவ்வியமான புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வாழ்ந்ததாலும் இராஜ வம்சத்தில் பிறப்பார் என்று சொல்லுகிரேம். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். திருவானைக்காவல் என்ற க்ஷேத்திரத்தில் கம்மாளர் குலத்திற் பிறந்து பூமியில் நல்லவனுகவிருந்து ;

33. அறுமுகன் பக்தி கொண்டு அறமதி லிச்சை யுண்டாய்
வருமார்க்கம் தாகப் பந்தல் வைத்துமே அதிதிக் கன்னம்
குறையென்றோர்க் குதவி செய்தும் கூற்றன்தன் பதிக்குச் சென்று
பிரமனல் வரையப் பட்டுப் பிறப்பனும் வடுகர் வமிசம்.

33. முருகர்மேல் பக்தி உடையவராகி, தருமத்தில் ஆசையுண்டாகி, ஜனங்கள் போக்குவரத்து வழியில் தாகவிடாயைத் தீர்க்கத் தண்ணீர் பந்தல் வைத்து, பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு, கஷ்டத்தையும் வறுமையையும் அடைந்திருக்கின்றேம் என்று சொன்னவர்களுக்கு உபகாரஞ் செய்தும், பிறகு இறந்து, எமனுடைய பட்டணத்திற்குச் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு, இந்த ஜன்மத்தில் வடுகர் குலத்திற் பிறந்தார்.

34. வந்தவன் பொதுயோ கத்தை வரைகிறேம் ஜனனம் தொட்டு
இந்தவன் மரண மட்டும் இளம்பிறை போலே யோகம்
தன்தனம் நாட்கு நாளாய்ச் சேர்ந்திடும் கல்வி மேன்மை
இந்திர போக முண்டு இல்லமும் இரண்டு நேரும்.

34. ஜாதகருடைய பொதுவான யோக பலாபலன்களைச் சொல்லுகிரேம். இவருடைய ஜெனனகாலம் முதற்கொண்டு இவருடைய மரணகாலம் வரையிலும் வளர்பிறை சந்திரனைப் போல யோகம் விருத்தியாகும். இவருக்கு நாளடைவில் தனம் வந்து சேரும். வித்தை விருத்தியாகும், மேன்மையை அடையும். இவருக்குச் சகல இந்திரியங்களுக்கும் சுகமும் இன்பமும் உண்டாகக்கூடிய அமைப்பு, அதாவது தேவேந்திர போக அமைப்பு இருக்கிறது ; இவருக்கு இரண்டு வீடுகள் கிடைக்கும்.

35. கேசரி யோக மொன்று கேதார யோக மொன்று
பேசுவோம் பலன்கள் தம்மைப் பிரபல புகழு மேற்பன்
காசுக ளதிகம் சேர்ப்பன் காலாள்க ளுடைய னுகும்
பேசினில் சோரா னுகும் பெரிதான தொழிலு மேற்பன்.

35. இவருக்குக் கேசரி யோகம் என்ற ஒரு யோகமும், கேதார யோகம் என்ற இன்னெரு யோகமும் இருக்கின்றன. இந்த யோகங்களின் பலன்களைச் சொல்லுகிரேம். இவருக்குப் பிரபலமான கீர்த்தியும் பெருமையும் உண்டாகும். தனம் அதிகமாக வந்து சேரும். இவருக்கு வேலைக்காரர்கள் உண்டு. இவர் பேசுவதில் சளைக்கமாட்டார், இளைக்கமாட்டார். பெரிய உத்தியோகத்தை அடைவார்.

குறிப்பு.—கேசரியோகம்—சந்திரனும் குருவும் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பதால் கேசரியோகம் இருக்கிறது. இது விஷயமாக ஜாதக அலங்காரம் என்ற தமிழ்ப் புத்தகம் 274, 276-ஆவது பாடல்களையும், ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 116-ஆவது சுலோகத்தையும், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 10-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். கேதார யோகத்தைப்பற்றிக் கீரனூர் நடராஜர் செய்த தமிழ் ஜாதக அலங்காரம் 321; 372—376-ஆவது பாடல்களையும், சாராவளி 21-ஆவது அத்தியாயம் 19—49-ஆவது சுலோகங்களையும், ஜாதகசிந்தாமணி 1970, 2042-ஆவது பாடல்களையும், பலதீபிகை 8-ஆவது அத்தியாயம் 35-ஆவது சுலோகத்தையும், பிருஹஜ்ஜாதகம் 12-ஆவது அத்தியாயம் 10-ஆவது சுலோகத்தையும், ஜாதக கணிதம் 2-ஆம் பாகம் 6-ஆவது அத்தியாயம் 88-ஆவது அயிட்டத்தையும், பிருகுசம்ஹிதாந்தர்கத யோகாவளி என்ற கிரந்தத்தையும் பார்க்கவும். பிருகுசம்ஹிதைப் பிரகாரம் நைசர்க்கிகபாபியாகிய சனி மூன்றில் இருப்பதால் (6- 8- 12-இல் பாபிகள் இல்லை) கேதாரயோகம் ஜாதகருக்கு இருப்பதாகத் தோற்றுகிறதே தவிர, ஜாதக கணிதம் தவிர மற்றக் கிரந்தங்கள் ரீதியாய்க் கேதார யோகம் ஜாதகருக்கு இருப்பதாகத் தோற்றவில்லை. சந்திர ரீதியாய்ப் பிதுர்ஸ்தானம் சிம்மம். இந்தச் சிம்மலக்கினத்திற்குப் பிருகுசம்ஹிதாப் பிரகாரமும் ஜாதக கணிதப் பிரகாரமும் கேதாரயோகம் இருப்பதாகத் தோற்றுகிறது. ஜாதகலங்காரம் 376-ஆவது பாடல் பிரகாரமும் பிதுர் லக்கினமாகிய சிம்மத்திற்குக் கேதார யோகம் இருப்பதாகத் தோற்றுகிறது. இதற்குப் புதன் சந்திரனுக்குப் பதினென்றிலிருக்க வேண்டும் என்றும், ஜன்மாதி "நோக்கமுற" என்பதற்குப் பதிலாகக் கூடி இருக்க என்றும் பாவிக்க வேண்டும்.

36. நினைத்ததை முடிக்க வல்லன் நிருபர்களிஷ்டம் கொள்வன்
கனத்தபுத் திகளு முண்டு கட்டுரை பகரா னுகும்
வினையெண்ணன் யாவ ருக்கும் விருந்தினர்ப் பிரிய னுவன்
துணைவனை ஆத ரிப்பன் சொல்லதைக் காப்பா னுமே.

36. இவர் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்குஞ் சக்தி யுடையவர். அரசர்களுடைய சினேகமும் அன்பும் இவருக்கு உண்டு. இவருக்குப் பெருமை, மேன்மையான புத்தியுண்டு. புனைந்த வார்த்தைகளை யும் பொய்யான வார்த்தைகளையும் சொல்லமாட்டார். யாருக்கும் கெடுதியை யும் துன்பத்தையும் நினைக்கமாட்டார். விருந்தாளிகளிடம் விசுவாசமாக விருப்பார். தன்னுடைய சகோதரனைக் காப்பாற்றுவார். தான் சொல்லும் வார்த்தைகளைத் தவறிடாமல் நிறைவேற்றுவார்.

37. அன்னையின் குடும்பம் வேறு அணுகிடும் பாலனுக்குக்
கன்மநாள் சொல்லு மென்னக் காவலன் முப்பா னென்பான்
பின்தனில் தந்தை கண்டம் சென்றுபின் மூன்று ஆண்டில்
அன்னைக்குத் தோஷ மெய்தும் அறைந்தது தப்பா தாமே.

37. தாயாருடைய குடும்பமும் ஜாதகரை வந்து அடையும். தாய் தந்தையர்களுக்குக் கர்மம் எப்போது நேரிடும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு முப்பத்தொன்பதாவது வயதில் பின் பாகத்தில் தகப்பனுக்கு மரணம் நேரிடும். இதற்குப் பிறகு மூன்ருவது வருஷத்தில் தாயாருக்கு மரணமுண்டாகும். நாங்கள் சொல்லுவது தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு.—தகப்பன் விஷயம்—ஜாதகருக்கு வயது ஷூ 38–0–0 முதல் ஷூ 39–0–0 முடியும் வரையிலும் சந்திர தசையில் கேதுபுக்தி சுக்கிரபுக்தி இவைகள் நடக்கின்றன. ஒரு பாவாதிபதி தன்னுடைய தசாபுக்தி காலங் களில் அந்தப் பாவத்தால் குறிக்கப்பட்டவர்களுக்கு மரணத்தை உண்டு பண்ணக்கூடும் என்று சாஸ்திரங்கள் சிலவற்றில் சொல்லப்பட்டிருக் கின்றது. இங்கு குரு பிதுர்பாவாதிபதி. இதற்கு இவர் கேந்திராதிபதி தோ ஷத்தை அடைகிருர். சில கிரந்தங்களில் குரு மீனலக்கினத்திற்கு அசுபர் என்றும் சொல்லி இருக்கிறது. இவருடைய வீட்டில் சந்திரன் இருக்கின்ருர். சந்திரன் பிதுர்ஸ்தானத்திற்குப் பத்தில் இருக்கின்ருர். மேலும், சந்திரன் கேதுவினுடைய நக்ஷத்திரமாகிய மூலத்தில் இருக்கின்ருர். கேது மீனத்திற்கு மாரகஸ்தானமாகிய எட்டில் இருந்து கொண்டு சந்திரனைப் பார்க்கின்ருர். ஆகையால் சந்திரனுக்குப் பிதாவை மாரகஞ் செய்ய அதிகாரம் வருகிறது. மீனத்திற்கு எட்டில் கேது இருப்பதால் கேதுவுக்குப் பிதாவைமாரகஞ் செய்ய அதிகாரம் உண்டு என்று மேலே சொன்னேம். சுக்கிரன் மீனத்திற்கு 3, 8-க்குடையவராய் இருந்து ஆறில் இருப்பதால் சுக்கிரனுக்குக்கூட பிதாவை மாரகம் செய்ய அதிகாரம் இருக்கிறது. கேது சுக்கிரன் இவர்களில் கேது தன் அதிகாரத்தைச் சந்திரனுக்கு மாற்றிவிடுவதால் கேதுவிற்குச் சுக்கிரனை விடப் பிதுருக்குத் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அதிகாரம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் சுக்கிரனுக்குத் தன் புத்தியில் மாரகஞ் செய்ய அதிக அதிகாரம் இருப்பதாகத் தெரிகிறது.

தாய் விஷயம் :—மாதுருஸ்தானம் துலாம். துலா லக்கினத்திற்குப் பராசரஹோரை சில பதிப்பிலும், ஜாதக சந்திரிகை 56-ஆவது சுலோகம் பிரகாரம் அங்காரகன் மாரகனல்ல. குருவும் சூரியனும் மாரகர்கள். ஜாத

கருக்கு வயது ஷூ 41–0–0 முதல் 42–0–0 வரையிலும் அங்காரக தசையில் அங்காரகன், ராகு, குரு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. ஆகையால் அங்காரகதசையிலேயே இங்கு மாதுருக்கு மாரகம் என்று சொல்லி இருக் கின்றது. பம்பாயில் லக்ஷ்மீ வேங்கடேசுவர பிரசில் சாலிவாகன சகம் 1845-ஆவது வருஷத்தில் பதிப்பித்த பராசரஹோரையில் துலாலக்னத்திற் குச் செவ்வாய் மாரகனுகின்ருன் என்று சொல்லி இருக்கிறது. ராகு துலாத் திற்கு மாரகஸ்தானமாகிய ஏழிலும், சந்திரனுக்கு துர்ஸ்தானமாகிய மீனத் திற்கு இரண்டிலும் மாரகஸ்தானத்திலும் இருப்பதாலும், அங்காரகபுக்தி, ராகு புக்தி இவைகளில் ராகு புக்தி அதிகமான அதிகாரத்தை யுடையதாக விருக்கிறது.

38. அறுபது எழு ஆண்டில் ஆடிமா தத்தி லேதான்
திருமக னுடலம் ஏகும் தடுத்துமே பராசர் சொல்வர்
இருநான்கு ஆண்டுக் குள்ளே யிவனுடை உடலம் ஏகும்
உறைகுவீர் அந்தச் சங்கை உதையத்தில் கேது சக்கரம் ;

38. ஜாதகருக்கு அறுபத்தேழாவது வயதில் ஆடி மாதத்தில் மரணமுண்டாகும் என்று சொல்ல, பராசர முனிவர் மறுத்துச் சொல்லு கின்ருர். எட்டு வயதிற்குள்ளே ஜாதகர் இறந்து விடுவார் என்று பராசர் சொல்லி, அதற்குக் காரணங்களைச் சொல்லும் என்று கேட்கின்ருர். அதற்கு முதலாவது தசையாகக் கேது தசை ;

குறிப்பு.—ஜாதகருக்கு வயது ஷூ 66–0–0 முதல் ஷூ 67–0–0 வரையி லும் குரு தசையில் குரு புக்தி நடக்கின்றது. இங்குக் குரு தசையில் தான் ஜாதகருக்கு மாரகம் என்று சொல்லி இருக்கின்றது. கடக லக்கினத்திற்குக் குரு ஆருவது பாவாதிபதியாகி, புதனுடைய நட்சத்திரமாகிய ரேவதியில் இருக்கின்ருர். கடக லக்கினத்திற்குப் புதன் மாரகர். இவர் தன்னுடைய அதிகாரத்தைத் தன் நட்சத்திரத்திலுள்ளக் குருவுக்கு மாற்றி விடவே குரு மாரகாதிபதியாக ஏற்படுகின்ருர். குமாரசாமி யத்தில் ஆருமாதி பதிகூட மாரகராகின்ருர்.

39. நடப்பதால் கண்டம் நேரும் நவின்றனம் முனியே நாங்கள்
அடவுடன் பொன்னே[1] னென்பான் அரவுமே[2] தசத்தில் நிற்கத்
திடமுடன் வயது தீர்க்கம் செங்கதிர் முன்பனிப் போலே
உடன்பிணி நீங்கி யேதான் உத்தமன் தீர்க்க ஜீவி.

39. (இ - ள்) நடப்பதால் ஜாதகருக்கு மரணம் நேரிடும் என்று, முனிவரே! நாங்கள் சொல்லுகிரும். அதற்குக் குரு ஒன்பதாமிடத்தில் இருப்பதாலும், இராகு பத்தாமிடத்தில் இருப்பதாலும், ஜாதகருக்கு நீண்ட ஆயுளுண்டு, சூரியனைக் கண்ட பனிபோல ஜாதகருக்கு நேரிடும் நோய்கள் உடனே நிவர்த்தியாகி ஜாதகர் தீர்க்க ஜீவியாய் இருப்பார் என்று முனிவர் சொல்லுகிருர்.

குறிப்பு.—ஜாதகருக்கு வயது விஷயம்—லக்கினத்தைக் குரு பார்க்கின் ருர். நைசர்க்கி சுபர்களாகிய குரு ஒன்பதிலும், சுக்கிரன் இரண்டிலும்

[1] குரு. [2] ராகு.

புதன் நான்கிலும் இருப்பது ஆயுளுக்கு அனுகூலமானது. மணிகண்ட கேரளம் "அரிஷ்காண்டம்—பாலாரிஷ்டம்" 18-ஆவது பாடலையும், "பிரதி அரிஷ்டகாண்டம்" 40-ஆவது பாடலையும் பார்க்கவும். கேந்திரங்களில் நைசர்க்கிக பாபிகள் இருப்பது ஆயுளுக்குப் பிரதிகூலமானது. சூரியன் நான்கிலும், அங்காரகன் ஏழிலும் இருப்பதைப்பற்றி மணிகண்டகேரளம் அரிஷ்டகாண்டம் பாலரிஷ்டம் 11-ஆவது பாடலைப் பார்க்கவும். பாபிகள் கேந்திரங்களில் இருப்பதைப்பற்றிப் பிருஹஜ்ஜாதகம் 6-ஆவது அத்தியாயம் 7-வது சுலோகத்தையும், ஜாதகபாரிஜாதம் பலதீபிகை இவைகளையும் பார்க்கவும். ஆயுள் சம்பந்தமான லக்கினாதிபதியான சந்திரன் 6-இலும் எட்டிற்குடைய சனி 3-இல் குருவின் பார்வையுடனும், பத்திற்குடைய அங்காரகன் உச்சமாயும் இருக்கின்றார்கள். சந்திரன் தவிர மற்றவர்கள் இப்படியிருப்பது ஆயுளுக்கு அனுகூலமானது. துய்யகேரளம் 8-ஆம்பாகம்4-ஆவதுபாடல்களைப் பார்க்கவும். ஆகையால் ஜாதகருக்கு "மத்திமாயுளில் பூர்ணயுள்" என்ற 66⅔ வருஷம் ஆயுள் யோக அமைப்பு இருக்கிறது. மேலும் எட்டிற்குடையவர் எட்டிற்கு எட்டாகிய மூன்றில் இருப்பது ஆயுள் விருத்திக்கு அனுகூலமானது என்றும் சில கிரந்தங்களில் சொல்லியிருக்கின்றது. ஆயுள் காரகனுகிய சனி மூன்றில் இருப்பது ஆயுள் தீர்க்கத்திற்கு அனுகூலமானது. புலிப்பாணி ஜோதிடம் முன்னூறில் 50-ஆவது பாடலைப் பார்க்கவும்.

40. பின்ஜன்மம் துவரை தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்ப்
பொன்பொரு ளுடைய னுகிப் புகழான குடும்பம் பெற்று
இன்னவன் வாழ்வா னுகு மியம்பின மொழிகுன் ருது
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

40. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் துவாரை என்று சொல்லப்படுகிற துவாரகையில் பிராமண குலத்தில் பிறப்பார். இவர் தனமும் சொத்துகளும் உடையவராகி, பெருமையான குடும்பத்தை அடைந்து வாழ்வார். நாங்கள் சொல்லும் வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். சிறந்த யானை முகத்தையுடைய விநாயகரைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

41. அரவுமே[1] தசமம் நின்று அந்தணன்[2] ஒன்பான் திறக
உறைகுவீர் பலனை நீங்கள் உதித்தவன் தருமம் செம்பொன்
அறுமூன்று யிரம்பொனே ன்றேம் அவன் திருப்பணியும் [செய்வன்
பெரிதான திரிரி செய்து போகுவான் இந்தப் பாலன்.

41. இராகு பத்தாவது பாவத்தில் இருப்பதாலும், குரு ஒன்பதாவது பாவத்தில் இருப்பதாலும் நீங்கள் பலனைச் சொல்லுவீர்கள். ஜாதகர் பதின்மூன்றுயிரம் பொன்கள் செலவு செய்து தருமஞ் செய்வார் என்று சொல்லுகிறேம். கோயில் வேலைகளைச் செய்வார், ஒரு பெரிய தேர் செய்து வைத்து, பிறகு இந்த ஜாதகர் இறந்து விடுவார்.

[1] இராகு. [2] குரு.

42. உதித்தபின் ஸ்திரமா மில்லம் உறைந்திடும் பால னுக்கு
நிதியினுல் வேறு இல்லம் நேர்ந்திடும் மூவா ருண்டில்
பதியது உப்ப ரிக்கை பண்ணுவ னென்று சொல்வோம்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யானே கேளாய்.

42. ஜாதகர் பிறந்த பிறகு நிலையான ஒரு வீடு உண்டாகும். இவருக்குப் பதினெட்டாவது வயதில் பணம் செலவு செய்து இன்னொரு வீடு வந்து சேரும். தான் வாசஞ் செய்யும் வீட்டை உப்பரிகையாக, மெத்தை வீடாக மாற்றிவிடுவார் என்று சொல்லுகிறேம். பரதேசிகளையும் யாசகர்களையும் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

43. முப்பது இரண்டாண் டுக்கும் விளம்பினேம் தந்தை யோகம்
ஒப்புடன் மரண மட்டும் உதவியாம் அரசர் தம்மால்
எப்போதும் வறுமை காணுன் இயம்பின மொழிகுன் ருது
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ருது.

43. ஜாதகருக்கு ப்பத்திரண்டு வயது வரையிலும் தன்னுடைய தகப்பனுருக்கு யோகமுண்டு என்று சொல்லுகிறேம். ஜாதகர் இறந்து போகும் வரையிலும் இவருக்கு அரசர்களால் உதவி உண்டாகும். எந்தக் காலத்திலும் இவருக்குத் தரித்திரமும் கஷ்டங்களும் கிடையா. நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிப்போகாமல் நடக்கும். பாம்பைத் தன்னுடைய சடையில் தரித்துள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

44. இருபது நாலாண் டின்மேல் இவனுக்கு ராஜயோகம்
பெருகிடும் அன்பா னுறும் பிரபல புகழு மெய்தும்
திருகது நேரா தாகும் செப்பின மொழிகுன் ருது
அருமறை முடிவி லாடும் அம்பிகை புகன்றிட் டோமே.

44. ஜாதகருக்கு இருபத்துநான்கு வயதிற்குமேல் ஐம்பத்தாறு வயது வரையிலும் ராஜயோகம் உண்டாகி அதிகப்பட்டுக்கொண்டே வரும். அதிகமான பலமான கீர்த்தியும் பெருமையும் உண்டாகும். இதற்கு மாறுபாடாக, பிணக்காக ஒன்றும் நேரிடாது. நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் விளங்குகின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிவிட்டோம்.

45. ஜனித்திடும் காலம் தன்னில் செம்பாம்பு தசையி ருப்புக்
குனித்திடு ஆண்டு நாலும் கழறுவோம் திங்கள் நாலும்
வினைவரும் ஜாத கர்க்கு மேவிடும் துணையின் விருத்தி
கனமுடன் இல்லம் சேரும் கழறுவோம் பின்பால் சேதி.

45. ஜாதகர் பிறந்த காலத்தில் கேது தசையில் இருப்பு கணிதப் பிரகாரம் நான்கு வருஷமும் நான்கு மாதமும் என்று சொல்லுவோம். ஜாதகருக்குக் கஷ்டங்கள் இக்காலத்தில் வந்து நேரிடும். பிறகு விலகிவிடும். இளைய சகோதரம் உண்டாகி விருத்தியாகும். மேன்மையுடன் வீடு வந்து நேரிடும். மற்ற விஷயங்களைப் பின்னுல் பின்பாகத்தில் சொல்லுகிறேம்.

ஜாதகம் 62

1. திங்களும்[1] தேள[2] தாகச் சனிமானில்[3] பணியுங்[4] கன்னி
கனமெனக் கதிர்[5]சேயும்[6] மேடம் பலிங்கன் [7]பொன் [8]கேது மீனம்
பொங்கிய புதனும் நந்தி[9] பேசுவோம் ஜன்மம் நண்டு[10]
இங்கிவை கிரகம் நின்று லியம்புவீர் பலனைத் தானே.

சுக்கிரன் குரு கேது	சூரியன் அங்காரகன்	புதன்	
	இராசி சக்கரம்		லக்கினம்
சனி			
	சந்திரன்		ராகு

அனுஷம்—1-ஆம் பாதம், சனி தசை ஷை 16-6-0.

1. சந்திரன் விருச்சிகத்திலும், சனி மகரத்திலும், இராகு கன்னியிலும். வலிவுள்ள சூரியனும் அங்காரகனும் மேஷத்திலும், சுக்கிரன் குரு கேது மீனத்திலும், வலிவானப் புதன் ரிஷபத்திலும் இருக்க, ஜன்மலக்கினம் கடகம் என்று சொல்லுகிறோம். இவ்விதமான கிரக அமைப்புகள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீராக.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—சந்திரன் கேது சனி சிம்மத்திலும், சூரியன் கன்னியிலும், அங்காரகன் விருச்சிகத்திலும், புதன் மகரத்திலும், குருவும் ராகுவும் கும்பத்திலும், சுக்கிரன் மீனத்திலும் ஆகும்.

2. அத்திரி புகலு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னுதித்த இல்லம் விரும்புவோம் கீழ்மேல் வீதி
உத்தரம் வாடை யாகும் உருவற்ற மாரி தென்பால்
பத்திர காளி உத்தரம் பரமனும் கீழ்மே லாகும்.

---

[1] சந்திரன். [2] விருச்சிகம். [3] மகரம். [4] இராகு. [5] சூரியன். [6] அங்காரகன். [7] சுக்கிரன். [8] குரு. [9] ரிஷபம் [10]. கடகம்.

2. ஆண் குழந்தை ஜனனமாகும் என்று அத்திரி மகாரிஷி சொல்லுகின்றார். ஜாதகர் பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வட வண்டை வாடையில் உள்ளது என்று சொல்லுகிறோம். ரூபமில்லாத மாரி யம்மன் தெற்கிலும், பத்திர காளியம்மன் கோயில் வடக்கிலும், பரமசிவன் கோயில் கிழக்கிலும் மேற்கிலும் இருக்கும்.

3. மாலவன் மேல்பா லாகும் மருவிய சமனா ராகும்
சாலயில் வடையா ளத்துள் ஜனிப்பனு மெட்டாம் ஜன்மம்
பாலகன் வடுகர் வர்க்கம் பகருவோம் குடும்பச் சேதி
ஏலவே தந்தைக் கேதா னியம்புவோ மன்னை ரெண்டு.

3. விஷ்ணு கோயில் மேற்கிலிருக்கும். பிறந்த ஊர் சமமான கிராமமாகும். இப்படிப்பட்ட நல்ல அடையாளங்களும் எல்லைகளும் உள்ள விடத்தில் எட்டாவது கர்ப்பத்தில் ஜாதகர் பிறப்பார். இவர் வடுகர் என்ற ஒரு தெலுங்கு ஜாதியில் பிறப்பார். இவருடைய குடும்பச் சங்கதிகளைச் சொல்லுகிறோம். தகப்பனுருக்கு இரண்டு தாயார் என்று முன்னே சொல்லுவோம்.

குறிப்பு.—பிதுர் ஸ்தானம் மீனம். இதற்குப் பிதுர்ஸ்தானம் விருச்சிகம். இந்த விருச்சிகம் பிதுர்பாட்டன் லக்கினமாகும். இதற்குக் களத்திர ஸ்தானமாகிய ஏழாம் வீடாகிய ரிஷபத்தில் எட்டிற்கும் பதினொன்றிற்கு முடைய புதன் இருக்கின்றார். ரிஷபத்தைக் கேது பார்க்கின்றார், களத்திரா பதியும் களத்திரகாரகனுமாகிய சுக்கிரன் குருவுடனும் கேதுவுடனும் இருக் கின்றார். சுக்கிரன் இருக்கிற மீனராசி உபயராசி. சுக்கிரனைச் சனியும் பார்க் கின்றார். ஆகையால் ஜாதகருடைய தகப்பனுருக்கு இரண்டு தாயார் யோக மிருக்கிறது.

4. பின்மாதா ஈன்ற தந்தை பேசுவோம் துணைஆண் ரண்டு
கன்னிகை காணு ருகும் காதலர் வேறுய்ச் செல்வர்
முன்மாதா தனக்குப் புத்திரர் விளங்காது ஏகுவாளா
மன்னிய தந்தை சேதி வரைகிறோ மினிமே லாக.

4. ஜாதகருடைய தகப்பனுரானவர் தன்னுடைய தகப்பனுருக்கு இரண்டாவது மனைவியின் பிள்ளை என்று சொல்லுவோம். இவருக்கு ஆண் சகோதரர்கள் இருவராகும். இவருக்குச் சகோதரிகள் கிடையாது. இவரு டைய சகோதரர்கள் வேறு குடும்பமாகப் பிரிந்து போய்விடுவார்கள். இவரு டைய பெரிய தாயார் பிள்ளைகள் இல்லாமல் இறந்து விடுவாள். நிலைத் திருந்த தகப்பனுருடைய விஷயங்களை இனிமேல் சொல்லுகிறோம்.

5. மாநிறம் உணச்சல் தேகி மருமமில் லாதா னுகும்
ஈனமாம் குணமில் லாதான் இடரென்றோர்க் குதவி செய்வன்
ஊனமாம் தந்த மென்றோ மூகவான் ஈகை யாளன்
தானமும் தரும மிச்சை தந்தையால் சுகமில் லாதான்.

5. தகப்பனூர் மாநிறமான தேகத்தையுடையவர். மெலிந்த தேகமுடையவர். இரகசியமில்லாதவர். தாழ்ந்த குண மில்லாதவர். கஷ்டத்தை அடைந்திருக்கிறோம் என்று சொல்பவர்களுக்கு உபகாரஞ் செய்வார். இவருக்குப் பற்கள் கெட்டுப்போய் இருக்கும். இவர் புத்திசாலி. தயாள குணமுள்ளவர். தானமும் தருமமும் செய்ய ஆசையுள்ளவர். இவருக்குத் தன்னுடைய தகப்பனூரால் சௌக்கியங் கிடையாது.

6. தந்தையி னில்லம் வாழான் தான்வேறு ஊரில் வாசம்
நிந்தைக ளேற்பா னுகும் நீசரோர்க்கு அன்ன மீவன்
தன்தனம் கொடுக்கல் வாங்கல் சல்லியம் மென்று லச்சம்
சொந்தமாய் வணிபம் தூசு சுய தொழில் செய்வா னுகும்.

6. தகப்பனூர் தன்னுடைய பிதாவின் வீட்டில் வாசஞ் செய்யமாட்டார். இவர் வேறே ஒரு கிராமத்தில் வசிப்பார். பழிகளையும் இகழ்ச்சியையும் அடைவாராகும். துறவிகளுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடுவார். தன்னுடைய பணத்தைப் பிறருக்குக் கொடுப்பார். திருப்பி வாங்கிக் கொள்ளுவார், அஃதாவது பணத்தில் லேவாதேவி செய்வார். கடன் வாங்குவதென்றுல் இவருக்கு நாணமும் வெட்கமும் ஏற்படும். சொந்தமாய்த் துணி வியாபாரத்தையும், தன்னுடைய குலத்தொழிலையும் செய்வார்.

7. சில்து நாள் பாரி யூரில் செல்லுவான் வனவா சங்கள்
நிலைவிட்டு அதற்கு உத்தரம் நிலைப்பனு மென்று சொல்வோம்
அலைச்சல்கள் வந்த தென்ன அறிவிப்பீ ரந்தச் சங்கை
குலவிற்று பூர்வ தோஷம் கூறுவீ ரந்தச் சங்கை.

7. ஜாதகருடைய தகப்பனூர் சில காலம் வனத்தில் திரிவது போல ஒரு பெரிய ஊரில் திரிந்து அலைந்து கொண்டிருப்பார். அதன் பிறகு அந்த ஊரை விட்டு விட்டு அதற்கு வடக்கிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று அவ்விடத்தில் நிலைத்து விடுவார் என்று சொல்லுகிறோம். இவருக்கு இப்படிப்பட்டத் அலைதல்களும் தொந்தரவுகளும் வந்து சம்பவித்ததற்குக் காரணங்கள் என்ன என்ற விஷயத்தைச் சொல்லுவீர், என்று கேட்க, முன் ஜன்மத்திய தோஷங்கள் இந்த ஜன்மத்தில் இவரை வந்து அடைந்தன, என்று சொன்னுர். அதற்குமேல் அந்தத் தோஷங்களைச் சொல்லுவீர் என்று கேட்டார்.

8. முன் ஜன்மம் திருச்செந் தூரில் லுதித்தனன் மறை குலத்தில்
தன்மனை மதலை யுண்டாய்த் தரணியால் சீவித் தேதான்
இன்னவன் வாழுந் நாளில் இசைந்ததோர் வினையைக் கேண்மோ
அன்னிய மாது பேரில் அடா நிந்தை சொல்லும் போது ;

8. ஜாதகருடைய தகப்பனூர் தன்னுடைய முன் ஜன்மத்தில் திருச்செந்தூரில் பிராமண குலத்திற் பிறந்து மனைவி குழந்தைகள் இவர்களை அடைந்து விவசாயத் தொழிலைச் செய்து கொண்டு வாழ்ந்து

வந்தக் காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாபத்தைச் சொல்லுகிறேன், கேட்பீராக. ஓர் அயல் ஸ்திரியின் மேல் ஒரு தகாத பழியை, நிந்தையை இவர் சொல்லும் போது ;

9. மங்கையும் திகிலடைந்து வரைகிருள் சாபம் தானும்
பங்கமாம் வார்த்தை சொன்னப் பாவிக்கு மறுஜன் மத்தில்
தங்காது துணைப் பெண் ணும்தான் தன்சுதர்க் கன்னி யின்றிப்
பொங்கிய குடும்பம் விட்டுப் போகுவாய் வெளிதே சத்தில்.

9. அந்த ஸ்திரீ பயந்து சாபத்தை இவருக்குக் கொடுக்கின்றுள்—"என் மேல் அவமானமும் ஈனமும் எனக்கு நேரிடும்படியாய்க் குற்றமான வார்த்தைகளைச் சொன்ன பாவியாகிய உனக்குப் பின் ஜன்மத்தில் சகோதரி நிலைத்து ஜீவித்திருக்க மாட்டாள். உனக்குப் பிள்ளையும் பெண்ணும் இல்லாமல் பெரிய குடும்பத்தைக் கோபத்துடன் விட்டு விட்டுப் பிரிந்து வெளிதேசத்திற்குப் போய்விடுவாய்" என்று அவள் இவரைப் பார்த்துச் சொன்னுள்.

10. இன்னமும் பலவாறு சொன்னு ளெய்திற்று அந்தச் சாபம்
துன்னிய காலன் னுடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
அன்னவன் வருவா னுகும் அம்மாது சாபத்தாலே
கன்னிகை யில்லம் விட்டு ஏகும்தன் துணைப் பெண் தோஷம்.

10. அவள் இன்னும் இவருக்கு அநேகவிதமாகச் சாபத்தைக் கொடுத்தாள். அந்தச் சாபங்கள் இவரை வந்து அடைந்தன. இவர் முன் ஜன்மத்தில் தீமையையும் துன்பத்தையும் விளைவிக்கக்கூடிய எமப்பட்டணத்திற்குச் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுர். அவளுடைய சாபத்தால் இவருடையப் பெண் வீட்டைவிட்டு வெளியே தாண்டிப் போய்விடுவாள். இவருடைய சகோதரிக்குத் தோஷம் உண்டாகும்.

11. பிருகுமே புகலு கின்றுர் புனிதன்முன் ஜன்மம் தன்னில்
மறைக்குல முதித்தா னென்றீர் வடுகர்தன் குலம்எவ்வாறு
உறையும்கா ரணங் ளெவ்வாறு உத்தமன் முன்ஜன் மத்தில்
பெருமையாய் வேதம் தன்னைப் பேசாமல் நின்ற தோஷம் ;

11. "இவர் முன் ஜன்மத்தில் பிராமணக்குலத்தில் பிறந்து சுத்தமானவராக இருந்தார் என்று நீர் சொன்னீரே இவர் எந்தக் காரணத்தினுல் இந்த ஜன்மத்தில் வடுகர் என்ற தெலுங்கர் குலத்திற் பிறந்தார். அந்தக் காரணங்களைச் சொல்லுவீரென்று பிருகு மஹரிஷியானவர் கேட்க, முன் ஜன்மத்தில் உத்தமராகவிருந்த இவர் வேதங்களைப் பெருமையுடன் சொல்லாமல் சும்மாய் விருதாவாக இருந்தத் தோஷத்தாலே ;

12. இந்ததோர் குலமு தித்தா னிக்குண முடையோ னுக்கு
விந்தையாய்ப் பாலன் தோன்றும் விளம்புவோ மிவன்கு [ணத்தைச்
சுந்தா முடையா னுகும் ஜகராசர் பேட்டி கொள்வன்
முந்துமால் பக்தி கொள்வ னுயர்வான குடும்ப மேற்பன்.

12. இந்த ஜன்மத்தில் இந்த வடுகர் வம்சத்தில் வந்து பிறந்தார் என்று சொன்னுர். இப்படிப்பட்ட குணமுடையவருக்கு இந்த ஜாதகர் ஆச்சரியமாகப் பிறப்பார். ஜாதகருடைய குணுதிசயங்களை இனிமேல் சொல்லுகிறேம். இவர் அழகுள்ளவர். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். சீக்கிரம் மகா விஷ்ணுவின்மேல் பக்தி உடையவராய் இருப்பார். மேன்மையான குடும்பத்தை உடையவராவர்.

13. வித்தையு மூன்று கற்பன் விவேகியா மெவர்க்கும் நேயன்
சித்திர இல்லம் செய்வன் செம்பொன்னு மதிகம் சேர்ப்பன்
குற்றத்தை மனத்தில் வையான் கொடுமையே எவர்க்கு மெண் [ணன்
புத்தியில் பெரியோ னுவன் பிறைபோலே யோக மெய்தும்.

13. இவர் மூன்று விதமான வித்தைகளையும் பாஷைகளையும் கற்றுக் கொள்வார். புத்தியுள்ளவராயிருப்பார். எல்லோரிடமும் சிநேகமாயிருப்பார். சித்திரங்களையுடைய அழகான வீட்டைக் கட்டுவார். மேன்மையான தனத்தை அதிகமாகச் சேர்த்து வைப்பார். பிழைகளையும் தீங்குகளையும் தன்னுடைய மனத்தில் வைத்துக் கொள்ளமாட்டார். கெடுதிகளை எவருக்கும் நினைக்கமாட்டார். அறிவில் சிறந்தவ ரென்றும் பெரியவ ரென்றும் கருதப்படுவார். அவருக்கு வளர்பிறைச் சந்திரனைப் போல யோகம் விருத்தியாகும்.

14. அன்னிய பாஷை மேன்மை அதிகார முடைய னுகும்
தன்துணை ஆண்பால் மூன்று தங்கிடும் தீர்க்க மாக
இன்னவன் தன்னுல் யோக மெய்திடு மவர்க ளுக்கு
மண்ணின்மேல் வறுமை காணுன் மன்னர்க்கு இவன்சொல் [மேன்மை.

14. இவருக்கு அன்னிய பாஷை மேன்மையாகவும் அதிகமாகவும் வரும். இவர் அதிகாரங்களையும் செல்வாக்கையும் உடையவர். இவருக்கு ஆண் சகோதரர்கள் மூன்று பேர் நீண்ட ஆயுளையுடையவராயிருப்பார்கள். இந்த மூன்று சகோதரர்களுக்கும் ஜாதகரால் யோகமுண்டாகும். ஜாதகருக்கு இந்தப் பூமியில் கஷ்டங்களும் தரித்திரமும் கிடையா. இவருடைய வார்த்தைகள் அரசர்களால் மேன்மையாகப் பாவிக்கப்படும்.

15. எந்தக் காலத்தி லில்லம் எகிடும் விவரம் சொல்வாய்ச்
சாந்தமா மாருருமாண்டில் சார்ந்திடு வடபா லில்லம்
பந்துவு மதிக்க வாழ்வன் பலவிதச் செட்டு மோங்கும்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழி குன்றுவே.

15. ஜாதகருக்கு எப்போது வீடு வந்து நேரிடும் என்ற விவரத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, முப்பத்தாருவது வயதில் வடக்குத்திக்கில் வீடு உண்டாகும். தன்னுடைய பந்துக்கள் இவரை மதித்துப் போற்றும்படியாக இவர் வாழ்வார். இவருக்குப் பலவிதமான வியாபாரங்கள் ஓங்கி விருத்தியாகும். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லும் வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு.—வீடு கட்டும் விஷயம்.—13-ஆவது பாடலில் ஜாதகர் சித்திர வீட்டைக் கட்டுவார் என்று சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். இவருக்கு வயது ஸ்ரீ 35-0-0 முதல் ஸ்ரீ 36-0-0 முடியும் வரையிலும் கேது தசையில், சுக்கிரன் சூரியன் சந்திரன் இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. வீடு விஷயமான பாவம் நான்காம் பாவமும், கிரகம் சுக்கிரனும் ஆகும். சுக்கிரன் நான்கிற்கும் பதினொன்றிற்கும் உடையவராய் ஒன்பதில் இருக்கின்றுர். ஒன்பதாவது பாவத்தில் சுக்கிரன் இருந்தால் ஜாதகர் வீடு மாளிகைக் கட்டி வாழ்வார் என்று பிருகுசம்ஹிதையிலும், ஜாதக கணிதம் 2-ஆம் பாகம் 3-ஆவது அத்தியாயம் 79-ஆவது அயிட்டத்திலும் சொல்லி இருப்பதைக் கவனிக்கவும்.

16 அன்னையின் குணத்தைச் சொல்வே னன்புள மனத்தா ளா [கும்
முன்கோப முடனே தாழ்வு மேதினில் நல்லோ ளாவள்
தன்துணை ஆண்பால் மூன்று சத்திமா ரிவ்வாருகும்
முன்னமே குடும்ப மென்றே முதிப்பாளா மவ்வூர் தன்னில்.

16. ஜாதகருடைய தாயாருடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் விசுவாசமுள்ள மனத்தை உடையவள். இவளுக்குக் கோபம் முன்னே வந்து உடனே அடங்கித் தணிந்துவிடும். இவள் பூமியில் நல்லவளாக இருப்பாள். இவளுக்குக் கூடப்பிறந்தவர்கள் ஆண்கள் மூவரும், பெண்கள் மூவரும் ஆவார்கள். இவளுடைய குடும்பம் மேன்மையையும் முன்னேற்றத்தையும் உடையதாகும். இவள் ஜாதகர் பிறந்த ஊரிலேயே பிறந்தவள் என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—மாதுருஸ்தானமாகிய நான்காம் பாவமாகிய துலாத்திற்கு மூன்றிற்குடைய குரு மீனத்தில் சுக்கிரனுடன் ஆட்சியாய் இருப்பதையும், பதினொன்றிற்குடைய சூரியன் மேஷத்தில் உச்சமாகி அங்காரகனுடன் இருப்பதையும் தாயின் சகோதரங்கள் விஷயமாய்க் கவனிக்கவும்.

17. மாதுரு பூர்வம் சொல்வேன் மைலத்தில் ரெட்டி வமிசம்
போதன முடையா னுக்குப் பிறந்தன ளிந்த மாது
மாதவர்க் கன்ன மீந்து மங்கைக்கு வினையில் லாமல்
ஈதான காலன் னுடு சேர்ந்துமே பிரமன் லக்கம் ;

17. தாயின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் மைலம் என்ற க்ஷேத்திரத்தில் ரெட்டியார் குலத்தில் பணக்காரர்

ஒருவருக்குப் பிறந்தாள். இவள் முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடுபோட்டு யாதொரு பாபமும் தோஷமு மில்லாமல் துன்பத்தையும் கெடுதிகளையும் விளைவிக்கக்கூடிய எம பட்டணத்திற்குச் சென்று பிறகு பிரம தேவனால் எழுதப்பட்டு;

18. வந்தவ ளென்று சொல்வோம் வரைகிரோ மிருபா னேழில
இந்தவள் மார கங்க ளியம்புவோ மிவள்பின் ஜன்மம்
சந்தத மாலங் காட்டில் சக்கான்தன் குலமே தோன்றிச்
சிந்தையும் நல்ல தாகிச் சிறப்புடன் வாழ்வா ளென்றோம்.

18. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவளுக்கு ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் மரணம் நேரிடும். இவளுடைய மறு ஜன்மம் திருவாலங்காடு என்ற க்ஷேத்திரத்தில் செக்காட்டி என்னும் வைசியர் குலத்தில் நேரிட்டு, இவள் நல்ல மனதை உடையவளாகி, மேன்மையுடனும் பெருமையுடனும் வாழ்வாள் என்று சொல்லுகிறோம்.

குறிப்பு.—தாய் மரணம்.— ஜாதகருக்கு வயது ஷு 26-0-0 முதல் ஷு 27-0-0 முடியும் வரையிலும் புதன் தசையில் ராகு புத்தி நடக்கின்றது. புதன் துலாத்திற்குப் பன்னிரண்டிற்குடையவராய் எட்டில் இருக்கின்றார். சந்திரனையும் பார்க்கின்றார். சுக்கிரன் துலாத்திற்கு எட்டிற்கும் ஒன்றிற்கும் உடையவராதலால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் மாரகராகிறார். இவர் வீட்டிலுள்ள புதன் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப்பிரகாரம் அதிக மாரகராகிறார். ராகு துலாத்திற்குப் பன்னிரண்டில் இருந்து கொண்டு சந்திரனையும், மாதுரு லக்னாதிபதியாகிய சுக்கிரனையும் பார்க்கின்றார். ஆகையால் ராகுவுக்கு மாதாவை மாரகஞ் செய்ய அதிகாரம் உண்டாகின்றது. (துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடலையும் பார்க்கவும். இங்கு 1—8-க்குடைய சுக்கிரனுடன் ராகு கூடியிருப்பதற்குப் பதிலாகப் பார்க்கின்றார்.)

19. பாலகன் மணத்தைச் சொல்வேன் பதினெட்டு ஆண்டில் நேரும்
நீலியு மன்னே வர்க்கம் நேருவாள் குணத்தைச் சொல்வேன்
காலத்தை அறிந்து ரைப்பள் கணவனுக் கினிய ளாகும்
மால்மனே யொப்ப தாகும் வருவோரை ஆத ரிப்பள்.

19. ஜாதகருடைய விவாகம் நடக்குங் காலத்தைச் சொல்லுகிறேன். இவருக்குப் பதினெட்டாவது வயதில் விவாகம் நடக்கும். மனைவி தன்னுடைய தாயார் வர்க்கத்திலிருந்து வருவாள். அவளுடைய குணுதிசயங்களைச் சொல்லுகிறேன். அப்போதைக்கப்போது நடந்து வருகின்ற காலத்திற்குத் தகுந்தாற்போலப் பேசுவாள். புருஷனுக்கு இஷ்டமானவளாக விருப்பாள். மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலக்ஷ்மியைப் போல விருப்பாள். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள்.

குறிப்பு.—விவாகக்காலம்—ஜாதகருக்கு வயது ஷு 17-0-0 முதல் ஷு 18-0-0 முடியும் வரையிலும் புததசையில் புத புக்தி

நடக்கிறது. முதல் களத்திரம் சம்மந்தமான பாவங்கள் 7-2 ஆகும். போகஸ்தானமாகிய 4-ஆவது வீட்டிற்கு அதிபதியும் களத்திரகாரகனுமாகிய சுக்கிரன் வீட்டில் சந்திரனுக்கு ஏழில் 2-ஆவது வீட்டிற்குடைய சூரியனுடைய நக்ஷத்திரமாகிய கிருத்திகை நக்ஷத்திரத்தில் புதன் இருக்கிறான். ஆகையால் புதனுக்கு விவாகஞ் செய்யும் அதிகாரம் ஏற்படுகிறது.

(சிலர் மூன்று மிடம் போகஸ்தானம் என்பர். அது சாதாரண நல்ல விஷய போகங்களை அனுபவிக்கும் ஸ்தானமாகும். நான்காமிடம் காமவிஷயமான போகஸ்தானமாகும்.)

20. அன்னம்போல் சாய லொக்கும் அடாவடி கூறு ளாகும்
அன்னமும் அன்பா யீவள் ஆளன்தன் மனதுக் கேத்தோள்
அன்னியர் குற்றம் சொல்லாள் அவள்சுத ராண்பா லொன்று
கன்னிகை மூன்று என்றோம் காதலி கேட்டிடாயே.

20. இவள் உருவத்தில் அன்னத்தைப்போல விருப்பாள். அநியாயமாகவும் முரட்டுத்தனமாகவும் பேசமாட்டாள். சாப்பாட்டை ஆசையுடன் போடுவாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளும் தன்மையுடையவள். பிறருடைய குற்றங்களையும் தோஷங்களையும் எடுத்துக்காட்டிச் சொல்லமாட்டாள். அல்லது பிறர்மேல் குற்றங்களைச் சாட்டமாட்டாள். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் உண்டு என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

21. மைந்தனின் பூர்வம் சொல்வேன் மாயூரம் தன்னி லேதான்
தன்தன முடை யானுக்கு ஜனித்தனன் ரெட்டி வமிசம்
முன்னோர்க்கு அன்ன மீந்து மேதினில் புகழும் பெற்றுத்
தென்திசை சேதுச் சென்று சென்றனன் காலன் னூடு.

21. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் மாயவரத்தில் ரெட்டியார் குலத்தில் ஒரு பணக்காரருக்குப் பிறந்தார். பழைய கால மனிதர்களுக்கும் வயது சென்றவர்களுக்கும் பிராமணர்களுக்கும் சாப்பாடு போட்டுப் பூமியில் கீர்த்தியும் பெருமையும் அடைந்து தெற்குத் திக்கிலுள்ள சேது என்ற ஸ்தலத்திற்குப் போய்ப் பிறகு இறந்து எம பட்டணத்தை அடைந்தார்.

22. வேதனல் வரையப் பட்டு விளங்கு வானிக்கு லத்தில்
ஓதுவே னிவனின் யோகம் உதயனும்[1] புகரு முச்சம்[2]
மதலன்[3] சனிசே[4] யாட்சி வந்ததால் ராஜயோகம்
ஆதவன்[5] போலே கீர்த்தி அரசரால் உய்வ னுகும்

22. பிரமாவால் எழுதப்பட்டு ஜாதகர் இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்திற் பிறப்பார். இவரது யோகத்தைச் சொல்லுகிறேன். சூரியனும் சுக்கிரனும் உச்சமாக விருக்கின்றார்கள். மதலன் என்ற மதலையாகிய

[1] சூரியன். [2] சுக்கிரன். [3] குரு.
[4] அங்காரகன். [5] சூரியன்.

பிள்ளைக்கு அதிபதியாகிய குருவும் சனியும் அங்காரகனும் ஆட்சியாய் இருப்பதாலும், ஜாதகருக்கு இராஜயோகம் ஏற்படுகின்றது. ஆகையால் ஜாதகர் சூரியன் பிரகாசிப்பதுபோலப் பிரசித்தியையும் பெருமையையும் அடை வார். இராஜாக்களால் ஜீவனம் செய்வார்.

குறிப்பு.—இராஜயோக விஷயம்—கடகலக்கின ஜாதகருக்குப் பராசர் ஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் குருவும் அங்காரகனும் யோககாரர்கள், சுபர்கள். தர்மகர்மாதிபதிகளாகிய குருவும் அங்காரகனும் ஆட்சியாய் இருக்கின்றார்கள். ஆகையால் தர்மகர்மயோகம் இருக்கின்றது. ஏழு கிரகங்களும் கேந்திர கோணதிபர்களும் கேந்திர கோணத்தில் இருப்பதால் சந்திர கலாநாடி—தேவகேரளம் இவற்றின் பிரகாரம் சிறிது மத்தமாதங்கயோகம் இருக்கிறது. ஆனால் லக்கினதிபதியாகிய சந்திரன் நீசத்திலிருப்பதால் இந்தமத்த மாதங்கயோகம் பங்கமடைகிறது. சுக்கிரன் உச்சத்திலிருப்பதால், சந்திரகலாநாடி—தேவகேரளம் இவற்றின் பிரகாரம் மாளவியயோகம் ஏற்படுகிறது. ஆனால் குருவைச் சனி பார்ப்பதாலும், சுக்கிரனுடன் கேது சம்மந்தப்பட்டிருப்பதாலும் இந்த மாளவியயோகம் சந்திரகலாநாடி—தேவகேரளம் ரீதியாச் சிறிது பங்கம் அடைகிறது. மூன்று கிரகங்கள் சுய க்ஷேத்திரத்தில் நல்ல வீட்டிலிருப் பதைப்பற்றி இந்த சந்திரகலாநாடி — தேவகேரளத்தையே பார்க்கவும். இதனால் ஜாதகருக்குச் சுகமும் நல்ல ஜீவனமும் உண்டாகும். பொதுவாய், 10, 9, 5, 11, 2, 4-க்குடையவர்கள் நல்ல விடங்களில் இருப்பது யோகத்தைக் கொடுக்கும். மணிகண்டகேரளம் தனகாண்டம் தனலாபம் என்பதில் 1-ஆவது பாடலைப்பார்க்கவும்.

23. தந்தைக்கு மேலாய் ஜாதகன் வாழ்வா னுகும்
பந்துவை ஆத ரிப்பன் பாருக ளதிகம் சேர்ப்பன்
விந்தையாய் மூன்று இல்லம் வித்தகன் தேடு வானும்
தந்தியை வளர்த்த மாதே சாற்றின மொழி குன்றுது.

23. ஜாதகர் தன்னுடைய தகப்பனரைவிட அதிக யோகமுடையவராய் வாழ்வார். * தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். பூமிகளை அதிகமாக சேர்ப்பார். ஆச்சரியமாக மூன்று வீடுகளை, அறிஞராகிய சாமர்த்தியமுள்ள, இந்த ஜாதகர் சம்பாதிப்பார். யானை முகத்தையுடைய விநாயக் கடவுளைக் காப்பாற்றிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

* குறிப்பு.—சந்திரன் முதல் சூரியன் உள்ள ராசிவரையிலும் மும்மூன்ருக எண்ணி வர மூன்று வருவதால் ஜாதகர் தன் தகப்பனரைவிட அதிக யோக முள்ளவர் என்று ஜாதகாலங்காரம் 441-ஆவது பாடல் பிரகாரம் ஏற்படுகிறது. "தேவர்களமுத சந்திரன் முதலாய்ச் செங்கதிரளவு மட்டெண்ணி......பூவின் மூன்றிற் பிதாவினுக்கதிகம் புத்திரர்கென்ற றிந்திடுமே." (இதற்குச் சந்திரனுக்கு 3,6,9,12-ல் சூரியன் இருக்க வேண்டும்.)

24. இருபது இரண்டு ஆண்டிலி வன் பிதா மரண மென்றேம்
வரும்ஜன்மம் காஞ்சி தன்னில் வருகுவான் செங்குந்த ருகப்
பொருளது பெருக்க முண்டாய்ப் பூமியில் வாழ்வா னுகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்

24. ஜாதகருக்கு இருபத்திரண்டாவது வயதில் தன்னுடைய தகப்பனர் இறந்துவிடுவார் என்று சொல்லுகிறேம். இவருடைய பிதா மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் செங்குந்தர் என்னும் கைக்கோளர் ஜாதியில் பிறப்பார். செல்வம் அதிகமுண்டாகி, பூமியில் வாழ்வார். அருமையான வேதங்களின் முடிவாகிய உபநிஷதங்களில் விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—பிதாவின் மரண காலம்.—ஜாதகருக்கு வயது ஷை 21-0-0 முதல் ஷை 22-0-0 முடிகிறவரையிலும் புத தசையில் சுக்கிர புக்தி நடக்கிறது. பிதுர்பாவம் மீனம். மீனலக்கினத்திற்குப் பராசர ஹோரை ஜாதக சந்திரிகை 67- ஆவது சுலோகப் பிரகாரம் புதன் மாரகாதிபதியாகிரார். இவர் மாரகஸ்தானமாகிய ஏழிற்குடையவராகி மாரகஸ்தானமாகிய மூன்றில் திரிதிய அஷ்டமாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருக்கின்றார். ஜாதகருடைய லக்கினத்திற்கு மூன்ருவது வீடு, பிதுர்ஸ்தானத்திற்கு ஏழாவது வீடாகையால் பிதுருகர்மஸ்தானம் என்று சொல்வதும் வழக்கமுண்டு. ஆகையால் புதன் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அதிகார முடையவராய் இருக்கின்றார். சுக்கிரன் பிதுர்லக்கினதிற்கு மூன்று எட்டிற்கு முடையவராய் இருக்கின்றார். குருவுடன் கூடி பிதுர்ஸ்தானத்திலேயே இருக்கின்றார். இங்கு குரு பிதுர் லக்கினதிபதியாகின்றார். ஆகையால் துய்யகேரளம் எட்டாம்பாவம் 20-ஆவது பாடல் பிரகாரங்கூடச் சுக்கிரன் மாரகாதிபதி ஆகிரார். ஆகையால் சுக்கிரபுக்தியில் பிதிரு மாரகத்திற்கு அமைப்பு இருக்கிறது.

25. மைந்தனின் மரண காலம் வரைகிறேம் அன்பா னெட்டில்
முந்திய ஆனி மாதம் விளம்புவோம் மார கங்கள்
பிந்திய ஜன்மம் சொல்வேன் புதுவையில் பிரம்ம சேயாய்
இந்தவ னுதிப்பா னுகும் மீச்வரி கேட்டிடாயே.

25. ஜாதகருடைய மரணகாலத்தைச் சொல்லுகிறேம். இவருக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் ஆனிமாதத்தின் முதல் பாகத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகிறேம். இவரது மறு சென்மத்தைச் சொல்லுகிறேன். இவர் புதுச்சேரியில் பிராமணர் குலத்தில் பிறப்பார். பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—இங்கு இந்த ஜாதகருக்கு ஷை $33\frac{1}{3}$ க்குமேல் ஷை$66\frac{2}{3}$-க்குள்ளாகவுள்ள மத்திம ஆயுளைச் சொல்லியிருக்கிறதைக் கவனிக்கவும். லக்கினதியாகியச் சந்திரன் நீசமாயும் அஷ்டமாதிபதியாகிய சனி 7-ஆவது கேந்திரத்திலும் இருப்பதால் சாதக சிந்தாமணி எட்டாம்பாவம் 1076-ஆவது பாடல் பிரகாரம் அற்பாயுள் யோக முண்டு. ஆனால் சந்திரனைக் குரு பார்ப்பதாலும் லக்கினத்தைக் குருவும் சனியும் பார்ப்பதாலும் ஆயுள் விருத்தியுண்டு.

சந்திரனையும் லக்கினத்தையும் அங்காரகனும் ராகுவும் பார்ப்பது ஆயுளுக்குப் பிரதிகூலமாகும். சந்திரனைப் புதன் பார்ப்பது, மணிகண்ட கேரளம் பிரத்தியோக காண்டம் கெண்டயோகம் 218-ஆவது பாடல் பிரகாரம் ஆயுளுக்குப் பிரதிகூலமானது. இங்கு 1–8–10-க் குடையவர்களில் சந்திரன் நீசம். சனி ஆட்சி. அங்காரகன் ஆட்சியாயும் அஸ்தம் அடைந்தும் இருக்கின்றார்கள். ஆகையால் தூய்ய கேரளம் எட்டாம்பாவம் 4-ஆவது 5-ஆவது பாடல்கள் பிரகாரம் ஜாதகருக்கு மத்திம வயதிற்குமேல் வயது கிடையாது. ஜாதகருக்கு வயது ஷ 57–0–0 முதல் ஷ 58–0–0 வரையிலும் சுக்கிரதசையில் புதபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசர ஹோரை ஜாதகசந்திரிகை 50-ஆவது சுலோகம் பிரகாரம் சுக்கிரனும் புதனும் மாரகாதிபதிகள். சுக்கிரன் மாரகஸ்தானமாகிய பதினொன்றிற் குடையவர். இந்திரஜித்திற்குக் கடக லக்கனமாகி 11-க்குடைய சுக்கிரன் மாரகஞ் செய்து விட்டபடியால் கடக லக்கினத்திற்குச் சுக்கிரன் பெருத்த மாரகர் என்று சொல்லுவது வழக்கமுண்டு. புதன் 3–12-க்குடையவராகி 11-ல் இருக்கிறார். ஆகையால் சுக்கிரதசையில் புதபுக்தியில் ஜாதகருக்கு மாரக அமைப்பு இருக்கிறது.

26. ஜனித்திடுங் காலம் தன்னில் சனிதசை பதினு றுண்டும்
குனித்திடுந் திங்க ளாறும் குழவிக்குக் கண்ட மெய்தும்
துணைவர்க்குப் பிணியு மெய்துமுறுவான் வெளியூர் தன்னில்
கனதனம் பெருக்க மெய்தும் கடனது வருகு மெனரேம்.

26. ஜாதகர் பிறக்கும் போது சனிதசையில் பதினறு வருஷமும் ஆறு மாதமும் ஜனன கால தசை இருப்பு கணிதம் பிரகாரம் ஏற்படுகிறது. இந்தத் தசையில் ஜாதகருக்குக் கெண்டம் நேரிடும். இவருடைய சகோதரங்களுக்கு நோய்கள் உண்டாகும். இவர் அயலூருக்குப் போய் அவ்விடத்தில் நிந்திக்கப்பட்டுச் சிதறுண்டு கஷ்டப்படுவார். பெருமையும் செல்வமும் அதிகமாகும். ஆனல் கடனும் வந்து சம்பவிக்கும் என்று சொல்லுகிறோம்.

27. பாக்கியம் வெள்ளி பொன்னும் பதிந்ததால் ஜாத கற்க்கு
வாக்குச் சொல் மேன்மை யாகும் மணிபணி வீடு யாவும்
தாக்குவோம் மூவேழா யிரம்பொன் சார்ந்திடு மென்று சொல் வோம்
நாக்கது காப்பனுகும் நவின்ற னம் பூர்வ பாகம்.

27. சுக்கிரனும் குருவும் பாக்கியம் என்று சொல்லப்பட்ட ஒன்பதாவது பாவத்தில் இருப்பதால் ஜாதகருக்குத் தன்னுடைய வாயிலிருந்து வருஞ் சொல் பெருமையுடையதாகும். மதிக்கப்படுவதாகும். நவரத்தினங்களும் ஆபரணங்களும் வீடுகளும் இருபத்தோராயிரம் பொன்னும் ஜாதகருக்கு ஆஸ்தியாக விருக்கும் என்று சொல்லுகிறோம். இவர் தான் சொல்லுஞ் சொல்லைக் காப்பாற்றுவார். இவ்விதமாகப் பூர்வ பாகமாகிய முதலாவது பாகத்தைச் சொன்னோம்.

ஜாதகம் 63

ராகு			
	இராசி சக்கரம்		லக்னம் சந்திரன் சுக்கிரன்
சனி			சூரியன் புதன்
அங்காரகன்		குரு	கேது

புனர்பூசம் 4-ஆம் பாதம் குருதசை 1–00.

1. கடகலக் கினமதாகக் கலை[1]புகர்[2] ஜன்மம் தங்கச்
சுடரவன்[3] புதனும் ரண்டில் செம்பாம்பு[4] மூன்றி லாக
அடல்குரு நான்கி லாக ஆரனு[5] மாறில் தங்க
முடவனு[6] மேழிலாக முழுவிஷம்[7] நவத்தி லாகா ;

1. ஜன்ன லக்கினம் கடக ராசியாகி சந்திரனும் சுக்கிரனும் ஜன்ம லக்னத்திலும், சூரியனும் புதனும் லக்கினத்திற்கு இரண்டிலும், கேது மூன்றிலும், வலிவான குரு நான்கிலும், அங்காரகன் ஆறிலும், சனி ஏழிலும், இராகு ஒன்பதிலும் இருந்தால் ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும்.— மிதுனத்தில் கேதுவும் கடகத்தில் சூரியனும் சந்திரனும் அங்காரகனும் சனியும், விருச்சிகத்தில் புதனும், தனுசில் குருவும் ராகுவும், மீனத்தில் சுக்கிரனும் ஆகும்.

2. சொல்லுவீர் பலனை என்று சுந்தரி கேட்கும் போது
வல்லவர் வதிஷ்டர் சொல்வாராணது ஜனன மாகும்
இல்லமும் கீழ்மேல் வீதி யெமன்வாடை மேல்பால் குண்டம்
வல்லிமா காளி யீசன் வடதிசை தங்கு மென்றேம்.

2. பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை கேட்கும்போது, வல்லமை பொருந்தியவரான வசிஷ்ட மகாரிஷி சொல்லுகிறார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். ஜனனமான வீடு கிழக்கு மேற்

[1] சந்திரன் [2] சுக்கிரன் [3] சூரியன் [4] கேது
[5] அங்காரகன் [6] சனி [7] இராகு

குத் தெருவில் தென்னண்டை வாடையாகும். மேற்குத் திக்கில் குளமும் கிணறு முண்டு. பெரிய மாகாளியம்மன் கோயிலும் பரமசிவன் கோயிலும் வடக்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகிறேம்.

3. இத்தகை அடையா ளத்துளிலகிய சிறுஊர் தன்னில்
வித்தகன் வடுகர் வர்க்கம் விளங்கு வானிந்தப் பாலன்
பெத்ததாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இவ்விதமான அடையாளங்கள் உள்ள இடத்தில் ஒரு சிறிய கிராமத்தில் அறிவும் சாமர்த்தியமும் உள்ள இந்த ஜாதகர் வடுகர் என்ற தெலுங்கர் குலத்தில் வந்து பிறப்பார். இவரைப் பெற்றெடுத்தத் தாயார், தகப்பனர், இவர்களுடைய யோகங்களையும், இவருடைய மனைவி குழந்தைகள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், சுத்தமாக முன் ஜன்மத்தையும் பின் ஜன்மத்தையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறேம்.

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சரசமாய் வார்த்தையுண்டு
தந்தமும் தரள மொக்கும் தரணியில் புகழு மேற்பன்
தன்பந்து மதிக்க உய்வன் சகடுவாகனமு மேற்பன்
தன்சொல்லு மேன்பா டாகும் தரணிகள் பலவூர் சேர்ப்பன்.

4. ஜாதகருடைய தகப்பனருடைய குணதியங்களைச் சொல்லுகிறேன். இவர் இனிமையான வார்த்தைகளை உபயோகிப்பார். இவருடைய பற்கள் முத்தைப் போல வெளுப்பாயும் அழகாயுமிருக்கும். இவர் பூமியில் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியாக இவர் வாழ்வார். வண்டியும் வாகனமும் உள்ளவர். இவருடைய வார்த்தைகள் பெருமை பாராட்டக்கூடியதாக விருக்கும். இவர் அனேக கிராமங்களில் பூமிகளைச் சேர்ப்பார்.

5. பலருக்கும் பந்தி னர்க்கும் பரிந்துப சாரம் செய்வன்
நலமதை யெவர்க்கும் செய்வன் நல்லோர்க்கு நல்ல னுவன்
தலமதுதிருப் பணியும் செய்வன் சாராள் களதிக முண்டு
விலைமாதர் மோகம் கொள்ளான் வெஞ்சினம் வெளிக் கட்டாதான்.

5. இவர் அனேகருக்கும் பந்துக்களுக்கும் முன் வந்து ஆசையுடன் உபசரணையையும் மரியாதையையும் பண்ணுவார், உபகாரஞ் செய்வார். எல்லோருக்கும் நல்லதைச் செய்வார். நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். க்ஷேத்திரங்களில் கோயில் வேலைகளைச் செய்வார். இவருக்குத் தன் பக்கம் சேர்ந்த மனுஷர்கள் அனேகம் பேர் உண்டு. அனேக வேலையாட்களுமுண்டு. இவருக்குத் தாசிகளின்மேல் காம ஆசைகிடையாது. கடுங் கோபத்தை வெளியே காட்டமாட்டார்.

6. அறமதி லிச்சை யுண்டு யாவர்க்கும் உதவி செய்வன்
நறைமல ரிஷ்டம் கொள்வன் நாற்காலி விருத்தி யுண்டு
நிலையதைக் காப்பா னுகும்நினைத்தகாரி யம்முடிப்பன்
பொறைசொலா ளிளம னத்தன் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்

6. தகப்பனருக்குத் தர்மஞ் செய்வதில் ஆசையுண்டு. எல்லோருக்கும் உபகாரஞ் செய்வார். வாசனையுள்ள புஷ்பங்களின்மேல் ஆசையுண்டு. கால்நடைகள் விருத்தியாகும். இவர் தன்னுடைய அந்தஸ்தையும் நிலைமையையும் குணத்தையும் தொழிலையும் காப்பாற்றிக்கொள்ளுவார். தான் எண்ணின காரியத்தைச் செய்து முடிப்பார். குற்றமான, சுமையைச் சாற்றும்படியான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இளகும் படியான தயாளமான மனத்தையுடையவர். தன்னைப்பற்றிப் புகழ்ந்து பேசுகிறவர்களைக் காப்பாற்றுவார்.

7. செலவுக ளதிக முண்டு சல்லியப் பாதை ஏற்பன்
கலகத்தைக் கூற ுைகும் காரிய சமர்த்த னுகும்
குலவிடும் பித்தவாயு கோதைய ரிஷ்டம் கொள்வன்
சலம்தோய்வன் சீல னுவன் சாமர ரேகை யுண்டு.

7. இவருக்கு அதிகமான செலவுகள் ஏற்படும். இவர் கடனுல் துன்பத்தை அடைவார். கலகத்தை உண்டு பண்ணக் கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். காரியங்களைச் செய்து முடிப்பதில் சாமர்த்திய முள்ளவர். இவருக்குப் பித்தவாயுநோய் உண்டாகும். இவர் பெண்களின் மேல் ஆசையுடையவர். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார், நல்லொழுக்க முடையவராவர். இவர் கையில் சாமரரேகை என்ற ஒரு ரேகை உண்டு.

8. தன்துணை ஆண்பா லைந்து சத்திமா ரிருவ ராகும்
அன்னவ ரோன்றுய் வாழ்வர் அலைகடல் போல் குடும்பம்
பின்னவர் வேருய்ச் செல்வர் பேசுவோம் பின்பால் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

8. தகப்பனருக்குச் சகோதரர்கள் ஐந்து பேரும், சகோதரிகள் இரண்டு பேரும் உண்டு. இவர்களெல்லோரும் ஏக குடும்பமாய் இருந்து வாழ்வார்கள். இவருடைய குடும்பத்தார்கள் அலைகடலைப்போல அலைந்து கொண்டும் திரிந்து கொண்டும் இருப்பார்கள். பிறகு சகோதரர்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய் விடுவார்கள். அவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னுல் சொல்லுகிறேம். மேன்மையான. சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

9. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் முகுளான் உணைச்சல்தேகி
உன்னத தேகி யாவன் உயர்வான புத்தி யேற்பன்
சொன்னசொல் காப்பா னுகும் சோம்பிடான் காரி யத்தில்.

9. இதுவரையிலும் சொல்லிவந்த இவ்வித குணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். ஜாதகருடைய குணதிசயங்களைச் சொல்லுகிறேன். இவர் அழகான தேகத்தை யுடையவர். மெலிந்த் தேகத்தை யுடையவர். மேன்மையான சிறந்த உயரமான தேகத்தை யுடையவர். நல்ல பெரிய புத்தியை யுடையவர். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். தான் எடுத்தக் காரியத்தில் சோம்பலே அல்லது தாமதத்தைக் காட்டமாட்டார்.

10. தேவதா பக்தி பூண்பன் சிறுத்தோர்மேல் பிரிய ஞவன்
ஆவலா யடுத்துச் செய்வன் உடன்படான் பிழைக ளுக்கு
உறுதியில் லாத நெஞ்சன் தட புடல் செய்கை யுண்டு
சாரான்க ளுடைய ஞகும் படைசெல்லான் பெரியோர் நேயன்
பங் கய ரேகை யுண்டு.

10. ஜாதகர் தெய்வபக்தி யுடையவர். ஏழைகளின்மேலும் வறுமையை யடைந்தவர்கள்மேலும் அன்பைக் காட்டுவார். தான் எந்தக் காரியத் தையும் ஆசையுடனும் விடாமலும் செய்வார். தவருன காரியங்களைச் செய்ய சம்மதிக்க மாட்டார். நிலையான ஸ்திரமான மன மில்லாதவர். டம்பமாகவும் அவசரமாகவும் படாடோபமாகவும் காரியங்களைச் செய்வார். இவருக்குத் தன் பக்கம் சேர்ந்த மனுஷர்களும் வேலையாட்களும் உண்டு. சண்டைக்குப் போகமாட்டார். பெரியோர்களுடைய சினேகிதத்தையுடையவர். இவர் கையில் பங்கய ரேகை என்ற ஒரு வித கமலரேகை உண்டு.

11. பாலகன் துணைஆண் தோஷம் பாவையர் நால்வ ராகும்
பாலகன் துணைஆண் தோஷம் பகருவீ ரந்தச் சங்கை
சாலவே சேயு[1] மாறில் சிகி[2] மூன்றி விருப்ப தாலே
ஏலவே துணைஆண் தோஷ மியம்புவோம் பால னுக்கு.

11. ஜாதகருடைய ஆண் சகோதரர்களுக்குத் தோஷம் இருக் கிறது. பெண் சகோதரர்கள் நான்கு பேர் இருப்பார்கள். ஜாதகருடைய சகோதரர்களுக்குத் தோஷம் உண்டு என்று சொன்னீரே. அதற்குக் காரணத் தைச் சொல்லுவீர். அங்காரகன் ஆருவது வீட்டிலும், கேது மூன்ருவது பாவத்திலும் இருப்பதால் ஜாதகருடைய ஆண் சகோதரர்களுக்குத் தோஷம் இருக்கிறது என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—**இளைய ஆண் சகோதர விஷயம்.**—மூன்ருவது பாவத்தில் கேது இருக்கிருர். மூன்றிற்குடையவரான புதன் சூரியனுடன் கூடி அஸ்தமடைந்து தன் வீட்டிற்கு விரயத்திலிருக்கின்ருர். அங்காரகன் ஆறில் இருக்கின்ருர். மணிகண்டகேரளம் சகோதரகாண்டம் 6-ஆவது பாடல் பிரகாரம் "டரிதியு முன்றேன் கூடிற் பாலன்பின் னில்லே மாதே". மேலும் சந்திரனைக் கேது பார்க்கின்ருர். சந்திரனுக்கு ஏழில் சனி இருக் கினருர். இந்தப் பாடல் பிரகாரமே இளைய சகோதரர்களுக்குத் தோஷம்

[1] அங்காரகன். [2] கேது

இருக்கிறது. இந்தப் பாடலுக்கு அடுத்த பாடலாகிய 6-ஆவது பாடலின் 2-ஆவது வரிப் பிரகாரம் கூட பின் ஆண் சகோதரத்திற்குத் தோஷம் இருக்கின்றது.

மூத்த ஆண் சகோதர விஷயம்.—பதினேராம் வீட்டதிபதியாகிய சுக்கிரன் தன் வீட்டிற்கு மூன்றில் இருக்கின்ருர். இவரைச் செவ்வாயும் கேதுவும் சனியும் பார்க்கின்ருர்கள். பதினென்றை ராகு பார்க்கின்ருர். மூத்த ஆண் சகோதரகாரகராகிய குரு பதினென்றிற்கு ஆருவது வீட்டில் பகை ராசியில் இருக்கின்ருர். சகோதரகாரகராகிய அங்காரகன் 11-க்கு 8-இல் இருக்கிருர். ஆகையால் மூத்த ஆண் சகோதரர்களுக்குத் தோஷம் இருக்கிறது. மேலும் சந்திரனை மூன்று நைசர்க்கிகபாபிகளாகிய கேது சனி அங்காரகன் பார்க்கின்ருர்கள். சந்திரனைச் சுபர்கள் யாரும் பார்க்க வில்லை. ஆனல் சுக்கிரன் ஒரே வீட்டில் இருக்கின்ருர். இந்தச் சுக்கிரன் கூட சந்திரனுக்கு வெகு தூரத்தில், அஃதாவது சந்திரனுக்கு ஒன்பதாவது பாவத்தில் இருக்கின்ருர். சம்புஹோரா பிரகாசா என்ற கிரந்தத்தில் (சகஜ) சகோதர பாவத்தில் 58-ஆவது சுலோகத்தில், சந்திரன் மூன்று பாபி களால் பார்க்கப்பட்டுச் சுபர்களால் பார்க்கப்படாமல் இருந்தால் ஜாதகருடைய சகோதரர்கள் எல்லோரும் மரணமடைவார்கள் என்று சொல்லி இருக் கிறது. இந்தச் சுலோகம் சந்திரன் ஒரு ராசியில் இருக்கின்ற சுமார் இரண் டேகால் நாளிற்குள் பிறந்த எல்லோருக்கும் பொருந்துமாயினும், இது சந்திரலக்கின ரீதியாய்ப் பார்க்கும்போது பொருந்துமாதலால் இதையுங் கூட மற்றக் காரணங்களுடன் கவனிப்பது நல்ல தாகும்.

12. மங்களம் மூவெட் டாண்டில் மறுவிடும் வடபால் பாரி
அங்கவள் குணத்தைச் சொல்வேன் அரிமனை யொப்ப தாகும்
திங்கள்போல் வதன மொக்கும் சீலியாம் விரத மேற்பன்
எங்கள்போ லதிதிக் கன்னமீவளா நற்கு ணத்தான்.

12. ஜாதகருக்கு விவாகம் இருபத்துனன்காவது வயதில் நடக் கும். மனைவி வடக்குத் திக்கிலிருந்து வருவாள். இவளுடைய குணதிசயங் களைச் சொல்லுகிறேன். இவள் மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சு மிக்குச் சமானமானவளாயிருப்பாள். சந்திரனைப் போன்ற அழகான முகத்தை யுடையவள். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையு முடையவள். விரதங்களைப் அனுஷ்டிப்பவள். எங்களைப்போன்றவர்களுக்கும் பரதேசி களுக்கும் சாப்பாடு போடுவாள். நல்ல குணமுடையவள்.

13. மங்கையும் தீர்க்க ஜீவி மாமுனி தடுத்துச் சொல்வார்
இங்கிவன் தனக்குத் தார மிரண்டென மொழிவோம் யாங்கள்
சங்கையைச் சொல்லு மென்னச் சத்தமத் தோன் சரத்தில்
பொங்கமா யிருப்பதாலே புகன்றனம் தாரம் ரண்டு.

13. இவளுக்குத் தீர்க்க வயதுண்டு என்று சொல்லும்போது, பெரிய முனியான வசிஷ்டர் தடுத்துச் சொல்லுகிருர். ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று நாங்கள் சொல்லுகிறேம். காரணத்தைச்

சொல்லுவீரென்று கேட்க, ஏழாம்பாவாதிபதியான சனி சரராசியாகிய மகரத்தில் வலிவாய் இருக்கின்றதாலே இரண்டு மனைவிகள் என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—மனைவி விஷயம்—இங்கு ஜன்ம லக்கினமும் சந்திரலக்கினமும் ஒன்ருக விருக்கிறதைக் கவனிக்கவும். லாபாதிபதியாகிய சுக்கிரனும் களத்திராதிபதியாகிய சனியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளுகிருர்கள். ஏழிற்குடையவராகிய சனி சரராசியில் இருக்கின்ருர். ஆகையால் தமிழ் ஜாதகாலங்காரம் 689-ஆவது பாடல் பிரகாரமும், 648-ஆவது பாடல் 1, 2, 6, 7, 8 வரிகள் பிரகாரமும் இரண்டு மூன்று மனைவிகள் யோகமிருப்பது மன்றிப் பல இதர ஸ்திரீகள் யோகமு மிருக்கிறது. மேலும் லக்கினதிபதியாகிய சந்திரனும் சுக்கிரனும் கூடியிருப்பது தோஷமாகும். களத்திர காரகனுகிய சுக்கிரனை அங்காரனும் கேதுவும் பார்க்கின்ருர்கள். ஏழாவது பாவத்தையும் சனியையும் ராகு பார்க்கின்ருர். ஆகையால் முதல் தாரத்திற்கு அதிக தோஷமிருக்கின்றது. மேலும் இரண்டாந்தாரத்திய பாவம் ஒன்பதாவது பாவமாகும். அதில் ராகு இருக்கின்ருர். அதைச் சனியும் அங்காரகனும் பார்க்கின்ருர்கள். ஒன்பதிற்குரிய குரு ஒன்பதிற்கு எட்டில் பகைவீட்டில் இருந்து கொண்டு சனியால் பார்க்கப்படுகின்ருர். ஆகையால் இரண்டாந்தாரம் கூட நல்ல தேக நிலையுடன் ஜீவித்திருப்பது சந்தேகம் ஆகும். இந்தத் தமிழ் ஜாதகாலங்காரம் என்ற புத்தகம் கீரனுர் நடராஜர் அவர்களால் சமஸ்கிருத பிருஹஜ்ஜாதகம், சாராவளி, பராசரஹோரை, சர்வார்த்தசிந்தாமணி, கேரளம், ஜம்பு நாதம், ஹோராசாரம், பலதீபிகை முதலிய இன்னும் சில கிரந்தங்களை அனுசரித்து எழுதப்பட்டப் புத்தகமாகும்.

14. இருமனை தீர்க்க மாமோ யேகுமோ விவரம் சொல்வாய்
மரலியின் நாட்டை முன்னேள் முந்துவான் கர்ப்பத் தாலே
திருவாகும் காலம் தன்னைச் செப்புவீர் விவர மாக
அறுஅஞ்சு மூன்ரு மாண்டில் அந்தகன் பக்கல் சேர்வள்.

14. இரண்டு மனைவிகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்களா அல்லது இறந்து விடுவார்களா என்ற விபரத்தைச் சொல்லுவீரென்று கேட்க, முதல் மனைவிக்குக் கர்ப்பந்தரித்து அவள் எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள் என்று பதில் சொல்ல, மறுபடியும் முதல் மனைவி இறந்து போகுங் காலத்தை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு முப்பத்து மூன்ருவது வயதில் முதல் மனைவி இறந்து எமனிடம் போய்ச் சேருவாள் என்று சொல்லுகிருர்.

குறிப்பு.—முதல் மனைவி விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷ 32-0-0 முதல் ஷ 33-0-0 முடியும் வரையிலும் புதத்தசையில் ராகு புக்தியும் குரு புக்தியும் நடக்கின்றன. புதன் லக்கினத்திற்கு திருதிய விரயாதிபதியாகி முதல் களத்திரத்திற்குச் சம்மந்தப்பட்ட இரண்டாவது பாவத்தில் குடும்ப ஸ்தானத்தில் இரண்டிற்குடைய சூரியனுடன் அஸ்த மடைந்து இருக்கின்ருர். மேலும் முதல் தாரபாவமாகிய ஏழாம் வீட்டிற்கு, அஃதாவது

மனைவியின் லக்கினத்திற்கு எட்டில் ஆறுக்குடையவராகி எட்டிற்குடையவராகிய சூரியனுடன் சம்மந்தப்பட்டிருக்கின்ருர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம்பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் புதன் மனைவிக்கு மாரகாதிபதியாகிருர். மேலும் ராகு மகரத்திற்கு மாரக ஸ்தானமாகிய மூன்றில் இருந்து கொண்டு மகரத்தையும் மனைவி லக்கினுதிபதியாகிய சனியையும் பார்க்கின்ருர். மேற் சொல்லிய பாடல் பிரகாரமே (லக்கினுதிபதியாகிய சனியோடு கூடாமல் அவரைப் பார்ப்பதால்) மனைவிக்கு மாரகஞ் செய்ய ராகுவுக்கு அதிகாரம் இருக்கிறது.

15. அந்ததோர் ஆண்டுதன்னில் அணுகிடும் மேல்பால் பாரி
பந்தனி குணத்தைச் சொல்வேன் பாரபட் சங்கள் பேசாள்
நிந்தைக ளேற்கா ளாகும் நேமியில் நல்லோ ளாவன்
வந்தவர்க் கன்ன மீவள் மாரன்தன் மனத்துக் கேத்தோள்.

15. அந்த வருஷத்திலேயே ஜாதகருக்கு மேற்குத் திக்கிலிருந்து இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள். இந்த ஸ்திரீயினுடைய குணத்தைச் சொல்லுகிறேன். இவள் ஓரவஞ்சனையாக ஒரே பக்கமாகப் பேச மாட்டாள். பழி பாவங்களை அடைய மாட்டாள். பூமியில் நல்லவளாக விருப்பாள். தன்னிடம் வருபவர்களுக்குச் சாப்பாடு போடுவாள்; தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுந் தன்மையுடையவள் ஆவாள்.

குறிப்பு.—இரண்டாவது மனைவி விஷயம்.—ஜாதகருக்கு அப்போது மேலே 14-ஆவது பாடலிற் சொல்லிய பிரகாரம் குருபுக்தி நடக்கின்றது. குரு இரண்டாந்தார பாவமாகிய ஒன்பதாம் வீட்டிற்கு அதிபதியாகி, போக ஸ்தானமாகிய நான்காவதுபாவத்தில் இருப்பதால் இரண்டாவது மனைவியைக் கொடுக்கக் குருவிற்கு அமைப்பு இருக்கிறது.

16. பால்பாக்கிய முடையா ளாகும் பஞ்சைமே லிரக்க முண்டு
நீலிக்கு வயது தீர்க்கம் நிதானமாய் வார்த்தை யுண்டு
மால்மனை யொப்ப தாகும் மருவிடும் கோபம் கொஞ்சம்
காலத்தை அறிந்து ரைப்பள் கழறுவோம் புத்திர பாவம்.

16. இவள் பால் பாக்கியம் உடையவளாவள். ஏழைகளின்மேல் பரிதாபம் இவளுக்குண்டு. இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு. இவள் சாந்தமாய் வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமிக்குச் சமானமானவளாயிருப்பாள். இவளுக்குச் சிறிது கோபமுண்டாகும். அப்போதுக்கப்போதுள்ள காலத்தை அறிந்து அதற்குத் தகுந்தபடி பேசுவாள். இவளுக்குச் சந்ததியைப் பற்றிச் சொல்லுகிறேம்.

17. சுதர்களு மறுவர் தோன்றும் சோர்வுறும் சிலது என்றேம்
சதமாகும் ஆண்பால் ரண்டு சத்திமார் மூவர் தீர்க்கம்
எதுவித மாதுக்கே தான் யியம்பீனீர் புத்திர சங்கை
முதல்மனைக் கிரட்டை தோன்றும் மேவாது நஷ்ட மெய்தும்.

17. ஜாதகருக்கு ஆறு ஆண் குழந்தைகள் பிறக்கும். இவைகளில் சில குழந்தைகள் இறந்து போய் விடும். இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாய் இருப்பார்கள். எந்த மனைவிக்கு இந்தப் புத்திரபாவத்தைச் சொன்னீர்கள் என்று கேட்க, முதல் மனைவிக்கு இரண்டு குழந்தைகள் பிறக்கும். ஆனால் இவைகள் இறந்து விடும்.

18. பின்மனை தனக்குப் புத்திரர் பேசினேம் முனியே யானும்
இன்னவன் பூர்வம் தன்னை யியம்புவோம் தோகை தன்னில்
அன்னவன் சினகு லத்தில் அனுகியே வாழுந் நாளில்
துன்மைகள் ஏழை யோர்க்குச் செய்தனன் அதுஒர் தோஷம்.

18. இரண்டாவது மனைவிக்குத்தான், நான் பிள்ளைகளைச் சொன்னேன். ஜாதகருடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகிறோம். இவர் தோகை என்ற ஊரில் வைஷ்ணவகுலத்தில் பிறந்து வாழ்கின்ற காலத்தில் ஏழை மக்களுக்குக் கெடுதிகளைச் செய்தார். அதனால் ஒரு தோஷம் ஏற்பட்டது.

19. வரனின்றி மாது போகம் மருவியே கருவு தங்கத்
திருமகன் பண்டி தங்கள் செய்யவே கருவு நீங்கி
அரிவையும் மாண்டா ளென்றோம் அனுகிற்று அதுஒர் தோஷம்
பொருள்மோசம் சிலர்க்குச் செய்தான் புக்கிற்று பால னுக்கு.

19. இவர் புருஷனில்லாத ஒரு ஸ்திரீயிடம் சம்போகஞ் செய்து, அவளுக்கு அதனால் கர்ப்ப முண்டாக, அவளுக்கு வைத்தியம் செய்ய, அந்தக் கர்ப்பம் கலைந்து போய் அவளும் இறந்து விட்டாள் என்று சொல்லுகிறோம். அதனால் இவருக்கு இன்னொரு தோஷம் ஏற்பட்டது. இவர் பண விஷயத்தில் சிலரை ஏமாற்றினர். இதனால் இவருக்கு இன்னொரு தோஷம் நேர்ந்தது.

20. அந்திய காலம் தன்னில் அதிகமாய் வறுமை யுண்டாய்த்
தென்திசைக் காலன் ஊடு சென்றுமே பிரமன் லக்கம்
இந்ததோர் குலமு திப்ப னெய்திடு மேழைச் சாபம்
தானுமே தனிய னவன் தனமோசம் செய்த தோஷம்.

20. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அடைந்து இறந்து தெற்குத் திக்கிலுள்ள எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் ஏழைகள் கொடுத்தச் சாபத்தால் இந்த ஜன்மத்தில் இவர் தனியாக விருப்பார். முன் ஜன்மத்தில் பணத்தை மோசஞ் செய்த தோஷத்தால் ;

21. சல்லிய பாதை நேரும் தரணிகள் சேத மெய்தும்
வல்லியின் கருவின் தோஷங் மனைவிய நிருவ ராகும்
சொல்லுவோ மிவனின் யோகம் சிலபூமி விரயம் செய்து
சல்லியப் பாதை நீங்கும் சடைமுனி புகலு கின்றார்.

21. இந்த ஜன்மத்தில் கடனல் உபத்திரவம் ஜாதகருக்கு ஏற்படும். பூமிகள் நஷ்டமாகும். முன் ஜன்மத்தில் ஒரு ஸ்திரீயின் கர்ப்பத்தைக் கலைத்த தோஷத்தால் ஜாதகருக்கு இந்த ஜன்மத்தில் இரண்டு தாரம் உண்டாகும். இவருடைய யோகங்கள் விஷயமாய் இனிமேல் சொல்லுகிறோம். இவர் சில பூமிகளை விற்றுக் கடன் தொந்தரவை நிவிர்த்தி செய்து கொள்ளுவார் என்று சொல்ல, ஜடை முனிவர் கேட்கின்றார்.

22. எந்தக்கா லத்தில் நீங்கு மியம்புவீர் முனியே நீர்தாம்
வந்தவன் முப்பா னலில் விலகிடும் பூமி யாலே
பிந்தியும் முப்பா னென்பான் ஆண்டினில் நிதிநிட் சேபம்
சொந்தமாய் நேரு மென்றோம் அந்தநாள் முதலா மாக
அவனியில் சல்லியம் காணன் இவனுமே என்று சொன்னோம்.

22. எந்தக்காலத்தில் ஜாதகருடைய கடன் நிவிர்த்தியாகும் என்பதை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று ஜடைமுனிவர் கேட்க, ஜாதகருக்குத் தன்னுடைய முப்பத்துநான்காவது † வயதில் பூமிமூலமாகக் கடன் நிவிர்த்தியாகிவிடும். பிறகு முப்பதொன்பதாவது வயதில் தனமும் புதையலும் ஜாதகருக்குச் சொந்தமாக வந்து சேரும் என்று சொல்லுகிறோம். அந்தக்காலம் முதற்கொண்டும் அதற்குப் பிறகு இவருக்குக் கடன் ஏற்படாது.

† குறிப்பு.—கடன் நிவிருத்திவிஷயம்.—ஜாதகருக்கு வயது ௵ 33–0–0 முதல் ௵ 34–0–0 முடிவுவரையிலும் புத தசையில் குரு புக்தியில் பெரும்பாலும் பின் பாகம் நடக்கிறது. கடனிற்குரிய பாவம் ஆறும் பாவமாகும். குரு 6–9-க்குடையவராய் நான்கில் பூமிஸ்தானத்தில் இருக்கிறர். 9-ஆவது வீட்டை பூமி ஆதிபத்தியமுடைய அங்காரகன் பார்க்கின்றார். ஆகையால் குருவுக்கு ஆறும் ஆதிபத்தியத்தைச் சார்ந்தக் கடனை 9-ஆம் ஆதிபத்தியத்தைச் சேர்ந்த பாக்கியத்தால் 4-ம் ஆதிபத்தைச் சேர்ந்த பூமி மூலமாய் நிவிர்த்தி செய்ய அதிகாரம் இருக்கிறது. புதன் இரண்டிலிருந்து அவர் தசை நடந்தால் அதில் ருண நிவிர்த்தி என்று தசாபுக்தி பலனைச் சொல்லுகிற ஜாதக சிந்தாமணி என்ற கிரந்தத்திலும் தெசாபுக்தி சிந்தாமணி என்ற புத்தகத்திலும் சொல்லி இருக்கிறது.

23. மனமது தீர னாகும் வஞ்சனை எவர்க்கு மெண்ணன்
தரையினல் சீவிப் பானும் தந்தைக்குத் தாழ்வாய் வாழ்வன்
பெருமையும் புகழு முண்டு புண்ணிய மனத்தா னாகும்
குறையிலா வாழ்வா னாகும் கொல்லரு மதிக்க உய்வன்.

23. ஜாதகர் தைரியமான மனதையுடையவர். யாருக்குங்கெடுதியை நினைக்கமாட்டார். பூமியினல் ஜீவிப்பார். தன்னுடைய தகப்பனாரைவிட மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருக்குப்பெருமையும் கீர்த்தியு முண்டாகும். புண்ணியஞ் செய்கிற மனத்தை உடையவர். யாதொரு கஷ்டமும் இல்லாமல் சுகமாய் வாழ்வார். கம்மாளர் தன்னை மதிக்கும்படியாக வாழ்வார். அஃதாவது கம்மாளர்களால் ஆபரணங்களைச் செய்துகொள்வார்.

24. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உவமையாய்ப் பேசு வாளாம்
காதலி நடக்கை நன்மை கணவன்தன் மனதுக் கேத்தோள்
சீதள குணத்தா ளாகும் தீங்கதை ஒருவர்க் கெண்ணாள்.

24. ஜாதகருடைய தாயின் குணாதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் மாமரத்தின் துளிரின் நிறத்தைப்போல ஒருவிதமான சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவள். இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவாள். சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் பேசுவாள். நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உள்ள மனைவியாக விருப்பாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்ளுவாள். சீதளமான குணமுடைய தேகத்தையுடையவள். யாருக்கும் கெடுதியை நினைக்கமாட்டாள்.

25. துணைவர்க ளில்லா வாழ்வள் செப்புவோ மிவள்முன் ஜன்மம்
கனமுள வேங்க டத்தில் கலந்தனள் மறை குலத்தில்
அணைவான மதலை யுண்டாய் அவள்வாழ்நாள் வினையைக்
[கெண்மோ
சினையுடன் அடைக்க லான்தன் சித்திர இல்லம் வாசம்.

25. இவள் தன்னுடன் பிறந்த சகோதரர்கள் இல்லாமல் தனியாய் வாழ்வள். இவளுடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகிறோம். பெருமையான திருப்பதி க்ஷேத்திரத்தில் பிராமண குலத்தில் முன்ஜன்மத்தில் பிறந்தாள். இவள் தனக்கு உதவியானப் பிள்ளைகளையுடையவளாய் வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து நேர்ந்தப் பாவத்தைக் கேளுங்கள். ஓர் அடைக்கலாங்குருவி என்ற ஊர்க்குருவி தன்னுடை அழகான கூண்டில் முட்டை குஞ்சுகளுடன் வாசஞ் செய்து கொண்டிருக்கும் போது ;

26. கூடுவைக் கலைக்கும் போது குஞ்சுகள் மாண்ட வென்றோம்
கேடுகள் நேர்ந்த தென்றோம் கோதைக்கு அந்தி யத்தில்
நாடிய துணைக ளின்றி நமன்பதிக் காளா யின்னேள்
தேடியே இக்கு லத்தில் ஜனித்தன ளென்று சொல்வோம்.

26. அவள் அந்த ஊர்க்குருவியின் கூண்டைக் கலைத்து அழிக்கும் போது அதன் குஞ்சுகள் இறந்துவிட்டன என்று சொல்லுகிறோம். அதனால் இவளுக்குக் கடைசி காலத்தில் கெடுதிகள் உண்டாயின என்று சொல்லுகிறோம். இவள் தன்னுடைய சகோதரர்கள் இல்லாமல் இறந்து எமபட்டணம் போய்ச் சேர்ந்தாள். பிறகு இந்த ஜாதியில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கிறாள் என்று சொல்லுகிறோம்.

27. அத்திரி மறுத்துச் சொல்வார் அருமறை குலமு தித்தாள்
குத்தமாய்க் குலம்தாழ் வாகக் குலவுங்கா ரணங்கள் சொல்வாய்
வித்தகி பூர்வம் தன்னில் விரதங்கள் முட்டுச் செய்து
சுத்தமு மில்லா த தாலே ஜனித்தளா மென்று சொல்வோம்.

27. அத்திரி ரிஷி என்பவர் அதன்மேல் தடுத்துக் கேட்கின்றார். அருமையான வேதங்களை ஓதுகின்ற பிராமண குலத்தில் முன் ஜன்மத்தில் பிறந்தவள். இந்த ஜன்மத்தில் குறைந்த ஒரு தாழ்ந்த ஜாதியில் பிறந்ததற்குக் காரணங்களைச் சொல்லுவீரென்று கேட்க, செல்வமும் அறிவும் பெற்றிருந்த இவள் தன்முன் ஜன்மத்தில் விரதங்களை அனுஷ்டிப்பதில் குற்றங்களையும் குறைவுகளையும் செய்தாள். சுத்தமாயில்லாததாலும் இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்திற் பிறந்தாளென்று சொல்லுகிறோம்.

28. மறுஜன்மம் வான்மி யூரில் வருகுவாள் சைவச் சேயாய்ப்
பெருமையும் புகழும் பெற்றுப் பூவையும் வாழ்வா ளாகும்
இருபது ஐந்து ஆண்டி லேகுவாள் காலன் னூடு
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

28. இவள் பின்ஜன்மத்தில் திருவான்மியூரில் சைவ குலத்தில் வந்து பிறப்பாள். இவள் பெருமையையும் கீர்த்தியையும் அடைந்து வாழ்வாள். ஜாதகருக்கு இருபத்தைந்தாவது† வயதில் இவள் இறந்து எமபட்டணம் போய்ச்சேருவாள். கருப்பு மதம்பிடித்த யானை முகத்தையுடைய விநாயக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

† குறிப்பு.—மாதுரு மரணவிஷயம்.—ஜாதகருக்கு வயது ௵ 24-0-0 முதல் ௵ 25-0-0 முடியும் வரையில் புதன் தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. இங்கு மாதுரு லக்கினம் துலாமாகும். இதற்குப் பராசர ஹோரை, ஜாதகசந்திரிகா 56-ஆவது சுலோகப் பிரகாரம் சூரியன் மாரகாதிபதியாகிறார். இவருடன் மாரகஸ்தானமாகிய பதினொன்றில் புதன் கூடி இருக்கின்றார். ஆகையால் தாண்டவமாலை 22-ஆவது பாடல், சந்திரகாவியம் 9-ஆவது பாடல், ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் புதனுக்குச் சூரியனைவிட அதிக மாரகாதிபத்தியம் தாயைக் கொல்ல நேரிடுகிறது. சுக்கிரன் ஒன்றிற்கும் எட்டிற்கும் உடையவராய்ச் சந்திரனுடன் கூடியிருக்கின்றார். ஆகையால் துய்யகோளம் எட்டாம் பாவம், 14-ஆவது பாடல் பிரகாரம் 10, 8, 1-க்குடையவர், சனி இவர்களில் மிகவும் பலவீனமானவரான சுக்கிரன் மாரகாதிபதியாகின்றார். இங்குச் சந்திரனும் சனியும் ஆட்சி. சுக்கிரன் பகை வீட்டில் இருக்கிறார். ஆகையால் சுக்கிரன்தான் மிகவும் பலவீனமானவர்.

29. தந்தையின் பூர்வம் சொல்வேன் சத்தியின் தலத்தி லேதான்
விந்தையாய்க் கோகு லத்தில் விளங்கியே பெருமை பூண்டு
வந்தவர்க் கன்ன மீந்து மார்க்கத்தில் தாகம் வைத்து
முன் வினை யில்லாதாகி ஒதுங்கினன் காலன் னூடு.

29. ஜாதகருடைய தகப்பனாரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் மலையத்துவஜ பாண்டியன் அரசுசெய்த காலத்தில் இவருக்குப் பார்வதியம்மை பெண்ணாய் வந்து பிறந்து அரசு செய்த ஸ்தலமாகிய மதுரையில் ஆச்சரியமாக ஓர் இடையர் குலத்தில் பிறந்து

பெருமையை யடைந்து தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடுபோட்டு ஜனங்கள் போக்குவரத்து பாட்டையில் நீர்மோர் பந்தல் வைத்து முன் ஜன்மத்திய பாவம் ஒன்றும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

30. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று சொல்வோம்
மறு ஜன்மம் வேதாரண்யம் வருகுவான் பிரம்ம சேயாய்க்
கருமகா லங்கள் தன்னைக் கழறுவோ முப்பா னென்றில்
உறைகுவான் காலன் னூடு உத்தமி கேட்டி டாயே.

30. இவர் பிறகு பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகிருேம். இவர் பின் ஜன்மத்தில் வேதாரண்யம் என்னும் க்ஷேத்திரத்தில் பிராமணக்குலத்தில் வந்து பிறப்பார். இவருக்கு மரணகாலத்தைச் சொல்லுகிருேம். இவர் ஜாதகருக்கு முப்பத்தோராவது † வயதில் இறந்து எமபட்டினத்திற்குச் சென்று அங்குச் சிலகாலம் வசிப்பார் என்று சொல்லுகிருேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

† குறிப்பு.—**பிதுர் மரணவிஷம்.**—ஜாதகருக்குவயது ஃ 30–0–0 முதல் ஃ 31–0–0 முடியும் வரையிலும் புத தசையில் ராகுபுக்தி நடக்கின்றது. இங்கு பிதுர்லக்கினம் மீனம். இதற்குப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை பிரகாரம் புதன் மாரகாதிபதியாகின்ருர். இந்தப் புதன் மாரகஸ்தானமாகிய ஏழாம் ராசியாகிய கன்னிக்கு அதிபதியாகி ஆருவது வீட்டில் பிதுர்காரகனுகிய சூரியனுடன் கூடி இருக்கின்ருர். ஆகையால் புதன் பிதாவை மாரகஞ் செய்ய அதிகாரமுடையவராயிருக்கின்ருர். மேலும் மீனலக்கினத்திற்குச் சனி கூட மாரகாதிபதியாகின்ருர். அவரை ராகுபார்க்கின்ருர். இராகு பிதுர்லக்கினத்திலேயே இருக்கின்ருர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் (கூடாமல் ராகு சனியைப் பார்ப்பதால்) ஜாதகருடைய பிதாவைத் தன் புக்தியில் மாரகஞ்செய்ய இராகுவுக்கு அதிகாரம் இருக்கிறது

31. பாலகன் மரண காலம் பகருவோ மறுபான் ரண்டில்
சாலவே தனசு மாதம் தசமியாம் வளர்பக் கத்தல்
ஏலவே உடலம் ஏகு மியம்புவோம் பின்ஜன் மத்தைச்
சீலமா மலைநா டன்னில் ஜனிப்பனும் ரெட்டி வமிசம்.

31. ஜாதகருடைய மரணகாலத்தைச் சொல்லுகிருேம். இவர் அறுபத்திரண்டாவது † வயதில் மார்கழி மாதத்தில் வளர் பிறையில் தசமி திதியில் இறந்துவிடுவார். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிருேம். சுத்தமாயுள்ள மலை நாட்டில் ஓர் ஊரில் ரெட்டியார் குலத்திற் பிறப்பார்.

குறிப்பு.—**ஜாதகருடைய மரணகால விஷயம்.**—ஜாதகருக்கு வயது ஃ 61–0–0 முதல் ஃ 62–0–0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் புதன் புக்தி நடக்கின்றது. துய்யகேரளம் எட்டாம் பாவம் 4-ஆவது, 5-ஆவது பாடல்கள்

பிரகாரம் வயது ஃ 66½-க்குள் முடிவு பெருகின்ற மத்திம ஆயுளாகும் கடகலக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை 50-ஆவது சுலோகம் பிரகாரம் சுக்கிரனும் புதனும் மாரகர்களாகின்ருர்கள். இந்திரஜித்தின் கடகலக்கின ஜாதகத்திற்குப் பதினென்றிற்குடைய சுக்கிரன் மாரகஞ் செய்து விட்டபடியால் கடகலக்கினத்திற்குச் சுக்கிரன் பெரியமாரகர் என்று சொல்லுவது வழக்க முண்டு. இங்கு, சுக்கிரன் லக்கினதிபதியாகிய சந்திரனுடன் கூடியிருப்பதுடன் அஷடமாதிபதியாகிய சனியையும் பார்க்கின்ருர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் சுக்கிரனுக்கு ஜாதகரை மாரகஞ்செய்ய அதிகாரம் ஏற்படுகிறது. புதன் மேற் சொல்லியபடி மாரகாதிபதி. இவர் மாரகஸ்தானமாகிய இரண்டாமிடத்தில் அஸ்தமடைந்திருக்கின்ருர். ஆகையால் புதனுக்குத் தன்புக்தியில் ஜாதகரை மாரகஞ்செய்ய அதிகாரம் இருக்கின்றது.

32. குழவியின் ஜனன காலம் குருதசை ஆண்டு ஒன்று
தழைத்திடும் செல்வ மேன்மை சனிதசை விசேஷ யோகம்
நழுவிடும் பூமி தானும் நலமாகப் பண்ணை செய்வன்
நதிபிறை சடையோன் தேவி நவின்றது குன்ரு தாகும்.

32. ஜாதகருடைய ஜனனகாலத்தில் குருதசை இருப்பு ஒரு வருஷமாகும். இந்தக்காலத்தில் செல்வமும் பெருமையும் ஓங்கி வளரும். பிறகு சனிதசாகாலத்தில் அதிகயோகமுண்டாகும். ஆனல் சில பூமிகள் கையைவிட்டுப்போய்விடும். இவர் விவசாயத்தொழிலை அனுக்கூலத்துடன் செய்துவருவார். கங்காதேவியையும் சந்திரனையும் தன் சடையில் வைத்துள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 64

1. சந்திரன் கெண்டை[1] யாகச் சேய்[2] கேது வீணை[3] புக்கப்
புந்தியும்[4] சீய மாகப்[5] பொன்[6] பானு[7] கன்னி யாக
மந்தனும்[8] புகருந்[9] தேளில்[10] மலைநாகம்[11] தனசு வாக
இந்தவாறு கோளும் நின்று லக்கினம் கடக மாக ;

சந்திரன்			அங்காரகன் கேது
	இராசி சக்கரம்		லக்கினம்
			புதன்
ராகு	சனி சுக்கிரன்		சூரியன் குரு

ரேவதி-4ஆ-ம் பாதம், புதன் தசை இரு 4-0-0.

1. சந்திரன் மீனத்திலும், அங்காரகனும் கேதுவும் மிதுனத்திலும், புதன் சிம்மத்திலும், குருவும் சூரியனும் கன்னியிலும், சனியும் சுக்கிரனும் விருச்சிகத்திலும், இராகு தனுசிலும் ஆக, இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து லக்கினம் கடகமாக விருந்தால் பலனைச் சொல்லு வீரென்று ;

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும்.—மேஷத்தில் கேதுவும், ரிஷபத்தில் சூரியனும் அங்காரகனும், கடகத்தில் சுக்கிரனும், கன்னியில் குருவும், துலாத்தில் ராகுவும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் புதனும் மிதுனத்தில் சந்திரனும் ஆகும்.

2. மங்கையும் கேட்கும் போது மாமுனி புகலு கின்றூர்
இங்கிது பெண்பால் ஜன்ம மில்லமும் வடபால் நோக்கம்
கங்கையாம் வாரிகீழ்ப் பால் கஜமுண்டு கெடியு முண்டு
துங்கமா மறவர் வாசச் சேத்திரம் வாடை யாகும்.

---

[1] மீனம் [2] அங்காரகன் [3] மிதுனம் [4] புதன் [5] சிம்மம் [6] குரு [7] சூரியன் [8] சனி [9] சுக்கிரன் [10] விருச்சிகம் [11] இராகு.

2. பார்வதியம்மை கேட்கும்போது வசிஷ்ட மாமுனிவர் சொல்லு கின்றூர். இந்தக் குழந்தை பெண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத்திக்கைப் பார்த்திருக்கும். கங்கையம்மன் கோயிலும், கடலும் அல்லது யானைத் தொழுவமும், யானையும், கோட்டையும் கிழக்குத் திக்கில் இருக்கும். மலையும், பெருமைவாய்ந்த படைவீரர்கள் வசிக்கும் இடமும் வடக்குத்திக்கில் இருக்கும்.

3. இந்திர நகர மொப்பாமிப்பாவை விச்வச் சேயாய்
முந்தியே உதிப்பாளாகும் மொழிகிறே மிவளின் யோகம்
தந்தைதாய்த் துணைவர் யோகம் தன்வரன் புத்திர யோகம்
முன்பின்ஜன்மங்கள் யாவும் உரைக்கிறே மிந்நூல் தன்னில்.

3. ஜாதகி பிறந்த ஊர் தேவேந்திரப்பட்டணத்திருச் சமானமாகும். இவள் விச்வகர்ம கம்மாள ஜாதியில் முன்னே பிறப்பவள் ஆகும். இவளுடைய யோகத்தைச் சொல்லுகிறேம். இவளுடைய தகப்பனுர் தாயார் சகோதரர்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், இவளுடைய புருஷன் சந்ததிகள் ஆகிய இவர்களின் யோகங்களையும், முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகள் எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறேம்.

4. தந்தையின் துணைவர் நஷ்டம் தனியனுய் வாழ்வா னம்மா
தந்தையின் சேதி சொல்வேன துலாராசி அம்மி நாளில்[1]
வந்தவன் மாநி றத்தன் வர்ணித்தோர்க் குதவி செய்வன்
நிந்தையு மிரண்டு மாகும் செம்பொன்னு வேலை செய்வன்.

4. தகப்பனுடன் பிறந்தவர்கள் இறந்து விடுவார்கள். இவர் தனியாக இருந்துவாழ்வார் என்று சொல்லுகிறேம். பார்வதியம்மையே! இவருடைய விஷயங்களைச் சொல்லுகிறேன். இவர் துலாராசி லக்கினத்தில் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவர். மாநிறமுள்ள தேகத்தையுடையவர், தன்னைப்பற்றிப் பெருமையாய்ப் புகழ்ந்து பேசினவர்களுக்கு உபகாரஞ் செய்வார். நல்லதையுஞ் செய்வார். கெட்டதையுஞ் செய்வார். தட்டார பொன்வேலை செய்வார்;

5. செலவுக ளதிக முள்ளான் தந்தையூர் வாழா னுகும்
நலமதை எவர்க்கும் செய்வன் நல்லோர்க்கு நல்ல னுவன்
பலர்களை நேசம் கொள்வன் பகவானின் பக்தி கொஞ்சம்
தவமது இல்லா னுகும் தைரிய மனத்தா னுகும்.

5. இவர் அதிகமான செலவு செய்வார். தன்னுடைய தகப்பனுர் ஊரில் வாசஞ்செய்யமாட்டார். எல்லோருக்கும் நல்லதைச் செய்வார். நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். அனேகர்களைச் சிநேகஞ் செய்துகொள்ளுவார். கடவுகளின் மேல் கொஞ்சம் பக்தியுடையவர். தபசு, நோன்பு முதலிய புண்ணிய காரியங்களைச் செய்யமாட்டார். தைரியமான மனதையுடையவர் ஆவார்.

---

[1] ஆயில்யம்

6. மங்கைமார் தம்மால் துன்பம் மறுவிடும் வாத தேகி
சிங்கம்போல் கோபம் சாந்தம் சென்னியா ருடையான் பத்தி
அவசரம் கொள்ள ளுகும் யாரையு முறவு கொள்வன்
சங்கையன் றேரைச் சாரான் தைரிய மனத்தா ளுகும்.

6. இவருக்கு ஸ்திரீகளால் உபத்திரவங்களும் கஷ்டங்களும் உண்டாகும். இவருக்கு வாத தேகமுண்டு. இவருக்குக் கோபம் சிங்கத்திற்கு வருவதைப் போல வந்து உடனே சாந்தமாகிவிடும். இவருக்குச் சங்கீதம் பாடிப் புகழ்பவர்களின் பேரில் ஆசையுண்டு, அல்லது பாட்டுகளுக்கு அதிபதியாகிய பாமகள் என்ற சரஸ்வதியின்பேரில் இவர் பக்தியுடையவர். அவசரமாக விருக்கமாட்டார். அஃதாவது நிதானமாகவிருப்பார். எல்லோரையும் சிநேகஞ் செய்துகொள்ளுவார். கோபக்காரர்களுடன் அல்லது பயங்காளிகளுடன் சேரமாட்டார். தைரியமான மனத்தையுடையவர்.

7. சொன்ன இக்குணத்தா னுக்குத் தோகையிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கின்னுேள் பிறப்பளா மிந்தப் பாவை
கன்னியின் குணத்தைச் சொல்வேன் கல்வியாள் ஊக சாலி
மன்னவன் மனத்துக் கேத்தோள் வருவோரை ஆத ரிப்பள்.

7. இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுக்கு முதலியுள்ள இரண்டு மனைவிகளில் இரண்டாவது மனைவிக்கு இந்தப் பெண் குழந்தை பிறக்கும். ஜாதகியினுடைய குணதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் வித்தையையுடையவள். புத்திசாலி. தன்னுடைய புருஷனது, மனதிற்குத் தகுந்தாற்போல் நடந்துகொள்ளுபவள். தன்னிடம் வருகிறவர்களைக் காப்பாற்றுவாள்.

8. சுகமுள வார்த்தை சொல்வள் சொல்வோர்க்குத் தாக மீவள்
பகையென்று மனத்தில் வைய்யாள் பகரமாம் குடும்பி யாவள்
உவமையாய்ப் பேசு வாளாம் உண்மையாம் மனத்தா ளாகும்
அகமதை விட்டு நீங்காள் அம்பிகை புகன்றி டோமே.

8. இவள் இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவாள். தன்னிடம் வந்து தாகவிடாய் இருக்கின்றது என்று சொல்லுகிறவர்களுக்குத் தாகந்தீர ஜலம், மோர் முதலியவைகளைக் கொடுப்பாள். தன்னுடைய மனத்தில் விரோதத்தை வைத்துக் கொள்ளமாட்டாள். பிரகாசமான, செழிப்பான குடும்பத்தையுடையவள். ஒன்றோடொன்றை ஒத்திட்டு அழகாகப் பேசுவாள். உண்மையைப் பேசுகின்ற நல்ல மனதுடையவள். தான் பிறந்த வீட்டைவிட்டுப் புருஷன் வீட்டிற்குப் போகாமல் (பின்னால் வருகின்ற இருபத்திரண்டாவது பாடலில் கண்டுள்ள பிரகாரம் தன்னுடைய வீட்டிலேயே தன்னுடைய புருஷனுடன்) இருந்து வாழ்வாள் என்று, பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம்.

9. தன்துணை மூன்று தோன்றும் தங்காது என்று சொல்வோம்
என்னகா ரணத்தி னாலே யியம்பினீர் அந்தச் சங்கை
மந்தனும்[1] புகரு[2] மஞ்சில் மருவின பலத்தால் சொன்னோம்
அன்னையு மெட்டா மாண்டில் அந்தக னுலகம் சேர்வள்.

9. ஜாதகியுடன் மூன்றுபேர் பிறப்பார்கள். அவர்கள் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகிறோம். இவ்விதமான விஷயத்தை எந்தக் காரணத்தினால் நீர் சொன்னீர் என்று கேட்க, சனியும் சுக்கிரனும் ஐந்தாமிடத்தில் † இருக்கின்ற வலிவை யனுசரித்துச் சொல்லுகிறோம். ஜாதகியினுடைய தாயாரும் இவருக்கு எட்டாவது வயதில் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுவாள்.

† குறிப்பு—சகோதர விஷயம்.—மூத்த சகோதர ஸ்தானம் பதினோராமிடம். இதற்குரிய சுக்கிரன் சனியுடன் கூடி இருக்கிறார். சனி பதினொன்றைப் பார்க்கின்றார். இது மூத்தோருக்குத் தோஷத்தை விளைவிக்கக் கூடியதாகும். மேலும் இளைய சகோதரபாவமாகிய மூன்றில் சூரியன் இருப்பதால் முன்னே பிறந்த சகோதரர்கள் இறப்பார்கள் என்றும் ஜாதகிக்கு எத்தனை சகோதரர் பிறந்தாலும் அத்தனையும் இறந்துவிடும் என்றும் சம்புஹோராபிரகாசா என்ற புத்தகத்தில் சகோதரபாவத்தில் 57ஆ-வது சுலோகத்தில் சொல்லி இருக்கின்றது. மூன்றாவது பாவத்தை அங்காரகனும் பார்த்திருப்பது அந்தப் பாவத்திற்குப் பலதீபிகை 15-ஆவது அத்தியாயம் 26-ஆவது சுலோகப் பிரகாரம் அனுகூலமான தல்ல.

மாதுருபாவம்.—லக்னத்திற்கு மாதுருஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் சனியுடன் கூடி இருக்கின்றார். சந்திரலக்னத்திற்கு மாதுருஸ்தானத்தில் அங்காரகனும் கேதுவும் இருக்கின்றார்கள். மாதுரு ஸ்தானாதிபதியாகிய புதனைக்கேதுவும் சனியும் பார்க்கின்றார்கள். ஆகையால் மாதாவுக்குத் தோஷம் அதிகமாக விருக்கின்றது. அங்காரகனுடன் சம்மந்தப்பட்ட கேது தன்தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அதிகாரமுடையவராகின்றார். ஜாதகருக்கு வயது ஷ 7-0-0 முதல் ஷ 8-0-0 வரையிலும் கேது தசையில் ராகு, குரு புக்திகள் நடக்கின்றன ராகு 4-ஆவது பாவத்தைப் பார்த்திருப்பதாலும் மாரகாதிபதியாகிய குரு வீட்டிலிருப்பதாலும் ஜாதக சந்திரிகா 56, 23-ஆவது சுலோகப் பிரகாரம் ராகுமாரகாதிபதியாகின்றார்.

10. மூன்மாதா ஒன்று என்றீர் மொழிகுவீர் அவட்குப் புத்திரர்
கனம்புத் திரனுமே காணாள் காதலி தீர்க்க ஜீவி
மன்னவன் மனம்போல் வாழ்வாள் மறுஅன்னை பதின்மூன் [றுண்டில்
சொன்னனே குடகில் நேரும் சுதர்களின் விருத்தி சொல்வோம்.

10. ஜாதகிக்குப் பெரிய தாயார் ஒருத்தி உண்டு என்று சொன்னீரே. அவளுக்குப் புத்திரர்கள் எத்தனை என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, அவளுக்கு நிலையான புத்திரர் கிடையாது. அவள் நீடித்த ஆயுளையுடையவள். அவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி

1 சனி. 2 சுக்கிரன்.

நடந்துகொள்ளுவாள். ஜாதகிக்கு இன்னொரு தாயார் தனது பதின் மூன்ருவது † வயதில் குடகிலிருந்து அல்லது மேற்குத்திக்கிலிருந்து வருவாள். அவளுக்குக் குழந்தைகள் பிறந்து விருத்தியாகும்.

† குறிப்பு மூன்ருவது தாயின் விஷயம்.— ஜாதகிக்கு வயது ௵ 12-0-0 முதல் ௵ 13-0-0 முடியும் வரையில் சுக்கிரதசையில் சுக்கிர புக்தி நடக்கிறது. தகப்பனுருக்கு மூன்ருவது தாரபாவம் மீனத்திற்குப் பதினேராவது பாவமாகிய மகரம் ஆகும். மகரத்திற்குரிய சனியுடன் கூடிய சுக்கிரதசை சுக்கிர புக்திகாலத்தில் ஜாதகியின் பிதாவுக்கு மூன்ருவது விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது.

தகப்பனுருக்கு மூன்று தாரவிஷயம்.—பிதுர் லக்கினம் மீனம். இதற்கு ஏழாம் வீட்டு அதிபதியாகிய புதன் மறைவிடஸ்தானமாகிய ஆறில் தன் வீட்டிற்குப் பன்னிரண்டில் இருந்து கொண்டு லாபாதிபதியாகிய சனியால் பார்க்கப்படுகின்ருர். சனியுடன் களத்ரகாரகனுகிய சுக்கிரன் ஸம்பந்தப்பட்டிருக்கிருர். அங்காரகன் ஏழாவது பாவத்தைப் பார்க்கிருர். ஆறுக்குடைய சூரியன் ஏழில் இருக்கின்ருர். களத்திரசம்மந்தமான பாவமாகிய இரண்டிற்குடைய அங்காரகன் கேதுவுடன் கூடியிருக்கின்ருர். லாபாதிபதியாகிய சனி ஏழாமதிபதி யாகிய புதனைப் பார்ப்பதால் ஜாதகாலங்காரம் 689-ஆம் பாடல் பிரகாரம மூன்று மனவி யோகமுண்டு. சுக்கிரனும் சனியும் கூடியிருப்பதால் அனேக ஸ்திரீ சம்மந்த யோகமுண்டு. பிதுர் லக்கினுதிபதியாகிய குருவை இரண்டாந்தார பாவமாகிய விருச்சிகத்திற்குடைய அங்காரகன் பார்ப்பதால் இரண்டாந்தாரம் வரக்கூடிய யோகமுண்டு. ஆகையால் பிதாவுக்கு மூன்று தார யோக அமைப்பு இருக்கிறது. முதல் தார பாவமாகிய கன்னியில் குரு இருப்பதால் முதல் மனைவி நீண்ட ஆயுளை யுடையவளாவாள். இரண்டாந்தார பாவமாகிய ஒன்பதாம் வீடாகிய விருச்சிகத்தின் அதிபதி விருச்சிகத்திற்கு எட்டில் கேதுவுடன் இருப்பதாலும் இந்த விருச்சிகத்தில் சனி இருப்பதாலும் இரண்டாந் தாரத்திற்கு அதிக ஆயுள் கிடையாது மூன்ருந் தார பாவமாகிய பதினேராவது வீடாகிய மகரத்திற்குரிய சனி மகரத்திற்குப் பதினென்றில் சுக்கிரனுடன் கூடி வலுவாய் இருப்பதுடன் மகரத்தையே பார்க்கின்ருர். மேலும் குருவும் மகரத்தைப் பார்க்கிருர். ஆகையால் மூன்ருவது மனைவி நீண்ட ஆயுளை அடைவதற்கு அமைப்புள்ளவளாக இருக்கின்ருள்.

11. மதலைகள் ஆண்பால் ரண்டு மங்கை மொருத்தி யாகு
மதிபதி வயது தீர்க்கம் வரனுக்கு ஏற்றமாது
இதுநிற்க அன்னைசேதி யியம்புவோம் நற்குணத்தாள்
சதியிலா மனத்தா ளாகும் சாதமு மன்பா யீவள்.

11. ஜாதகியின் மூன்ருவது தாயாருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் இருக்கும். மூன்ருவது தாய்க்கு நீண்ட ஆயுளுண்டு. அவள் தன்னுடைய புருஷனுக்குத் தகுந்த மனைவியாக விருப்பாள். இனிமேல் ஜாதகியைப் பெற்றத் தாயாருடைய குணாதிசயங்களைச் சொல்லுகிருேம். இவள் உயர்ந்த குணத்தையுடையவள். வஞ்சனை இல்லாத மனத்தை உடையவளாவாள். சாப்பாடும் ஆசையுடன் போடுவாள்.

12. மாரன்தன் மனதுக் கேத்தோள் மங்கைக்குத் துணைஆண் நஷ்டம்
காரிழை ஒன்றே தீர்க்கம் கழறுவோ மிவள்முன் ஜன்மம்
பாரினி லுயர்வ தான பட்சியின் நகரம் தன்னில்
ஆரிய குலமு தித்து அருமையாய்க் குடும்பி யாகி ;

12. ஜாதகியின் தாயார் தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவாள். இவளுக்கு ஆண் சகோதரன் இறந்து விடுவான். ஒரு சகோதரி நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிருேம். பூமியில் சிறந்ததான பட்சிதீர்த்தம் என்று சொல்லப்படுகிற திருக்கழுக்குன்றத்தில் பிராமண குலத்திற் பிறந்து சிறந்த குடும்பம் உடையவளாகி ;

13. இருவினை யில்லாளாகி எகினுள் காலன் னுடு
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
வரும்ஜன்மம் வான்மீ யூரில் வருவளா மிக்குலத்தில்
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

13. இருவினையாகியப் பாவம் புண்ணியம் இவைகள் இல்லாதவளாகி இறந்து எமபட்டணத்திற்குச் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகிருேம். இவள் பின் ஜன்மத்தில் திருவான்மியூரில் இந்த ஜன்மத்திலும் பிறந்த குலத்திலேயே பிறப்பாள். கறுப்பு மதயானை முகத்தை யுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

14. தந்தையின் முன்ஜன்மத்தைச் செப்புவோம் விரிஞ்சி தன்னில்
அந்தவன் வேளான் வம்ச மணுகியே அரசு செய்து
முந்திய பூமி உண்டாய் மேதினில் வாழுந் நாளில்
வந்ததோர் வினையைச் சொல்வேன் மங்கையே கேட்டி டாயே.

14. ஜாதகியின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகிருேம். விரிஞ்சிபுரத்தில் வேளாளர் குலத்திற் பிறந்து இராஜாங்கத்தில் உத்தியோகஞ் செய்து இராஜாங்க அதிகாரத்தைச் செலுத்தி மேன்மையான சிறந்த பூமிகளை யுடையவராகிப் பூமியில் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த ஒரு பாவத்தைச் சொல்லுறேன். பார்வதியம்மையே ! கேட்பீராக.

15. அன்னிய விதவை மாது அணுகினன் தாயில் லத்தில்
துன்குண முடைய வேறேன் தோழிமேல் மோகம் கொள்ளக்
கன்னிகை யிசையா ளாகிக் காதலி வாழுந்நாளில்
இன்னவள் தனியாய் ஓர்நாள் எகினள் என்று சொல்வோம்.

15. அன்னிய ஜாதியைச் சேர்ந்த ஒரு விதவை ஸ்திரீ தன்னுடைய தாயார் வீட்டிற்கு வந்திருந்தாள். கெட்ட குணமுடைய ஒரு அன்னியன் அந்த ஸ்திரீயின் மேல் மோகிக்க அவள் அவனுக்கிசையாதவளாகி ஒழுங்காக வாழ்கின்ற காலத்தில் அவள் ஒரு நாள் தனியாகப் போனுள் என்று சொல்லுகிறோம்.

16. மாதுமேல் மோகம் கொண்டோன் மறைதலால் பின்னுல் சென்று
காதலால் பலவந் தத்தால் கணவன்போல் போகம் துய்த்தான்
வேதனை மனத்தா ளாகி விளம்பினுள் துணைவர் பக்கல்
நாரியின் மொழியைக் கேட்டு உரகன்போல் உரைத்தான் சேதி

16. அவள்மேல் மோகங்கொண்டவன் மறைவாக அவள் பின்னுல் போய் அவளைப் பலவந்தப்படுத்தி அவளுடைய புருஷனைப் போல் அவளிடத்தில் சம்போகஞ் செய்தான். அவள் துன்பத்தை அடைந்தமனமுடையவளாகி நடந்த சங்கதியைத் தன்னுடைய சகோதரனிடஞ் சென்று சொன்னுள். அவளுடைய வார்த்யைதைக்கேட்டு நெஞ்சுறைப்புள்ளவன் போல் தைரியமாய் முன் ஜன்மத்தில் அரசு செய்திருந்த ஜாதகியினுடைய தகப்பனுரிடத்தில் சொன்னுள்.

17. பாதகம் செய்தோன் தன்னைப் பக்கமாய் வரவ ழைத்து
சொர்ணமும் அவனுல் பெற்றுத் தோகைமேல் தோஷம் சொல்ல
வரைந்தனம் மாதுர் சேதி சரியான மனத்த ளாகிச்
செப்புவாள் சாபம் தானும் சங்கரி கேட்டி டாயே.

17. அதன் மேல் ஜாதகியினுடைய தகப்பன் குற்றஞ் செய்தவனை தன்னிடம் வரவழைத்து விசாரித்தார். பிறகு அவனிடம் பணத்தை லஞ்சமாகப் பெற்றுக்கொண்டு அவள் பேரிலேயே குற்றத்தைச் சாட்டிவிடவே அவள் சொன்ன விஷயத்தை நாங்கள் சொல்லுகிறோம். அவள் ஒரு நிலையான மனதுடையவளாகிச் சாபத்தைச் சொன்னுள், பார்வதியம்மையே! கேட்பீராக.

18. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் ஜன்மம் தன்னில்
உன்னைப் போல் துணையு மின்றி யெய்தாது தந்தைஆஸ்தி
உன்யனை மூவ ருரும் உலகினில் வாழ்வா யென்ன
தன்மையா யந்தச் சாபம் தோன்றிற்று என்று சொல்வோம்.

18. ஒரு ஸ்திரீயின்மேல் பழியைச் சாற்றின பாபியாகிய உனக்குப் பின் ஜன்மத்தில் உன்னைப்போன்ற துணை, அஃதாவது ஆண் சகோதரன் இல்லாமலும், உனக்கு உன்னுடைய தகப்பனுருடைய சொத்து இலலாமலும், உனக்கு மூன்று மனைவிகள் ஏற்பட்டும் உலகத்தில் நீ வாழக் கடவாய் என்று சாபங்கொடுத்தாள். இந்தச் சாபம் ஜாதகியினுடைய தகப்பனுருக்கு இந்த ஜன்மத்தில் கெடுதியாக வந்து சம்பவித்தது என்று சொல்லுகிறோம்.

19. ஆகையால் முன்னுழ்சாபம் அனுகிடுமிச் சென் மத்தில்
தோகையர் மூவ ராரும் துணைவரும் நஷ்ட மெய்தும்
எகிடும் தந்தை ஆஸ்தி யில்லமும் இல்லா ருரும்
போகவாரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

19. ஆகையால் ஜாதகியினுடைய தகப்பனுருக்கு முன் ஜன்மத்திய பாபங்களும் சாபங்களும் இந்த ஜன்மத்தில் வந்துநேரும். இவருக்கு மனைவிமார் மூன்று பேராவர். இவருக்குச் சகோதரர்கள் இறந்து விடுவார்கள். தகப்பனுருடைய சொத்துக்கள் இவருக்குக் கிடைக்காமல் போய் விடும். இவருக்கு வீடும் கிடையாது. ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய கடலையும் நாகலோகத்தையும் உடைய பூமிதேவியைப் பெற்றெடுத்தப் புண்ணிய மாதாவாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

20. மறுஜன்மம் தணிகை தனனில் வருகுவான் மறை குலத்தில்
கருமகா லங்கள் தம்மை மக் கழறுவீர் முனியே நீர்தாம்
பிருகு[1]தன் தசையிலேதான் புகலுவோம் தந்தை கண்டம்
அரிவைக் குமிருபா னெட்டில் அணுகிடும் தந்தை கண்டம்
கரிமதவானை பெற்ற காதலி கேட்டி டாயே.

20. ஜாதகியின் தகப்பனுர் பின் ஜன்மத்தில் திருத்தணிகை க்ஷேத்திரத்தில் பிராமண குலத்தில் வந்து பிறப்பார். இவருக்கு மரண காலத்தைச் சொல்லுவீர் முனியே நீர்தாம் என்று கேட்க, சுக்ர தசையில் ஜாதகியினுடைய தகப்பனுருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகிறோம், அஃதாவது ஜாதகிக்குத் தன்னுடைய இருபத்தெட்டாவது வயதில் தன்னுடைய தகப்பனுருக்கு மரணம் சம்பவிக்கும். கருப்பான மதயானை முகத்தையுடைய விநாயக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—பிதுர் மரண விஷயம்.—ஜாதகிக்கு வயது வருஷம் 27 முதல் வருஷம் 28 முடியும் வரையில் சுக்ர தசையில் புத புக்தி நடக்கின்றது, பிதுர் லக்கினம் மீனம். இதற்கு மாரகாதிபதியாகிய சனியுடன் சம்மந்தப்பட்ட சுக்கிரன், பராசரஹோரை ஜாதகசந்திரிகை 67-ஆவது, 23-ஆவது சுலோகப் பிரகாரம் அதிக மாரகாதிபதியாகியும் மூன்று எட்டிற்குடையவராயும் இருப்பதால் சுக்கிரன் பிதுர்மாரகம் செய்ய அதிகாரமுடையவராயிருக்கின்றுர். புதன் மீன லக்னத்திற்கு மேற்கண்ட கிரந்தங்கள் ரீதியாய்ப் பிதுர் மாரகாதிபதியாகி இருக்கின்றுர். இவர் வீட்டில் பிதுர் லக்கினுதிபதியாகிய குரு இருக்கின்றதால் புதனுக்குப் பிதுர் லக்கினுதிபதியினுடைய சம்மந்தமும் ஏற்படுகின்றது. ஆகையால் புதனுக்குத் தன்னுடைய புக்தியில் பிதாவை மாரகஞ் செய்ய அதிகாரம் ஏற்படுகின்றது.

21. மங்கைக்குப் பதினு ருண்டுள் மங்களம் நேரு மென்றேரும்
அங்கவன் குணத்தைச் சொல்வேன் அறிவுளா னுகை சாலி
துங்கமாம் மனத்தா னுரும் சொல்லதைக் காப்பா னுரும்
சங்கையென் றுரைச் சாரான் தந்தையரா் ஜிதத்தை வேண்டான்.

---

[1] சுக்ரன்.

21. ஜாதகிக்குப் பதினாறு வயதிற்குள்ளே விவாகம் நடக்கும் என்று சொல்லுகிறோம். இவளுடைய புருஷனுடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றேன். அவன் கல்வி புக்தி இவைகளையுடையவன். விவேக முள்ளவன். மேன்மையான உயர்ந்த மனத்தையுடையவன். தன்னுடைய வார்த்தையைக் காப்பாற்றுவான். கோப முடையவர்களை அல்லது பயங் கொள்ளிகளை அல்லது சந்தேகமான மனத்தையுடையவர்களைச் சினேகஞ் செய்து கொள்ளமாட்டான். தன் தகப்பனுருடைய ஆஸ்தியைவேண்டாம் என்று சொல்லிவிடுவான்.

குறிப்பு.—விவாக விஷயம்.— ஜாதகிக்கு வயது வருஷம் 15 முதல் 16 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் சூரியபுக்தி சந்திரபுக்தி ஆகிய இந்தப் புக்திகள் நடக்கின்றன. சுக்கிரன் காம போகஸ்தானமாகிய நான்கிற்கு அதிபதியாகி ஐந்தாவது பாவத்தில் புருஷ ஸ்தானாதிபதியாகிய சனியுடன் கூடி இருப்பதால் சுக்கிரனுக்கு ஜாதகிக்கு விவாகஞ் செய்துவைக்க அதிகாரம் இருக்கின்றது. சந்திரன் லக்கினாதிபதியாகிப் பெரும்பாலும் பூர்ண சந்திரனுமாகி லக்கினத்திற்கு ஒன்பதிலும் சுக்கிரனுக்கு ஐந்திலும் இருந்துகொண்டு குரு சூரியன் இவர்களால் பார்க்கப்படுவதால் ஜாதக சிந்தாமணி, தசாபுக்திசிந்தாமணி, விருத்த பாராசர்யம், ஜயமுனிசூத்திரம், தசாபுக்திபலன் என்ற புத்தகங்களின் பிரகாரம் சூரியனைவிடச் சந்திரனுக்கு ஜாதகிக்கு விவாகம் செய்துவைக்க அதிகாரம் இருக்கிறது.

22. மாதுபா லனுகிவாழ்வன் வளமான குடும்ப மேற்பன்
காதலன் தீர்க்க ஜிவி காளைகள் பலத்தைச் சொல்வேன்
மேதினில் ஆண்பா லொன்று மெல்லிமார் மூவர் தீர்க்கம்
ஒதுவே னிவள்முன் ஜன்மம் உத்தமி கேட்டிடாயே.

22. ஜாதகியின் புருஷன் ஜாதகியின் வீட்டிற்கு வந்துசேர்ந்து அவளுடன் அவள் வீட்டில் வசித்துக்கொண்டு இருப்பார். அவர் செழிப்பான குடும்பத்தையுடையவராவார். அவர் நீண்ட ஆயுளையுடையவர். அவருக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். பூமியில் ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தைகள் மூன்றும் அவருக்குத் தீர்க்கவயதுடையவர் களாய் இருப்பார்கள். ஜாதகியினுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

23. பிருதிவி தலத்தி லேதான் பிறந்தனள் வைச்சியப் சேயாய்ச்
பெரிதான குடும்பி யாகிப் பேதையும் வாழுந் நாளில்
வரன்தம்பி மனைவி பேரில் வருணித்தான் சிலேடை வார்த்தை
அரிவையும் மனது வாடி அறைந்தசா பத்தைக் கேண்மோ.

23. ஜாதகி பிருதிவிஸ்தலமாகிய காஞ்சீவரத்தில் வைசிய குலத்திற் பிறந்தாள். இவள் பெரிய குடும்பமுள்ளவளாகி வாழுகின்ற காலத்தில் தன்னுடைய புருஷனுடைய இளைய சகோதரனின் மனைவியின் மேல் கெட்ட எண்ணத்துடன் இரண்டுவித அர்த்தங்களைத் தரக்கூடிய வார்த்தைகளைத் தனக்குப் பெருமையாகவும் அவளுக்கு இகழ்ச்சியாகவும் விவரித்துச் சொன்னாள். அவள் தன் மனது புண்ணாகிச் சொல்லிய சாபத் தைக் கேட்பீராக.

24. தங்கையென் றெண்ணாப் பாவி செப்பினள் நிந்தை வார்த்தை
மங்கைக்குப் பின்ஜன் மத்தில் மருவாது துணைவர் தாமும்
சங்கையாய்த் தாய்ச்சுகங்கள் சாராவே யென்று சொல்லத்
தங்கிற்று அந்தச் சாபம் சங்கரி கேட்டி டாயே.

24. அவள் என்னைத் தன்னுடைய தங்கை என்று எண்ணாமல் பாவியாகி என்மேல் அபவாதமான பழியான வார்த்தைகளைச் சொன்னாள். அவளுக்குப் பின் ஜென்மத்தில் சகோதரங்கள் இல்லாமலும் தாயினால் அவளுக்குச் சுகம் இல்லாமலும் இருக்கக்கடவது என்று ஜாதகியின் புருஷனின் தம்பியின் மனைவி சொல்ல அந்தச் சாபமானது ஜாதகியை வந்து சேர்ந்தது. பார்வதியம்மையே! கேட்பீராக.

25. மாதுவு மந்தி யத்தில் வரன்முன்னல் மரண மாகி
வேதனல் வரையப் பட்டு விளம்புவா ளிவளே யென்றோம்
காதலிக் கன்பா னெட்டில் கணவனு மரிப்பா னுகும்
போதக வானைப் பெற்றப் புண்ணிய சாலி கேளாய்.

25. ஜாதகி தன்னுடைய முன் ஜென்மத்தில் கடைசி காலத்தில் தன்னுடைய புருஷனுக்கு முந்தியே இறந்து பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவளுக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் இவளுடைய புருஷன் இறந்து விடுவார். இளம் யானையின் முகத்தையுடைய விநாயக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—புருஷன் மரணம்.—ஜாதகிக்கு வயது வருஷம் 57 முதல் வருஷம் 58 முடியும் வரையிலும் இராகு தசையில் குருபுக்தி நடக்கிறது. புருஷன் லக்கினம் மகரமாகும். மகரத்திற்கு, பராசரஹோரை, ஜாதக சந்திகை 62–63-ஆவது சுலோகப் பிரகாரம் குருமாரகராகின்ருர். குருவின் வீட்டிலுள்ள ராகு பராசரஹோரை ஜாதகசந்திரகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் மார்கராகின்ருர். மேலும் இந்த ராகு மாங்கில்யஸ்தானமாகிய எட்டாமிடமாகிய குடும்பத்தைப் பார்க்கின்ருர். ஆகையால் ராகுவுக்கு ஜாதகியின் புருஷனை மாரகஞ்செய்ய அதிகாரம் வருகிறது. குரு மேற்சொல்லிய பிரகாரம் ஏற்கனவே புருஷனுக்கு மாரகாதிபதியாக வருகிருர். இந்தக் குரு மகரத்திற்கு அஷ்டமாதிபதியாகிய சூரியனுடன் சம்மந்தப்பட்டிருக் கிருர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் குருவுக்கு ஜாதகியின் புருஷனை மாரகஞ்செய்ய அதிகாரம் தன் புக்தியில நேரிடுகிறது. மேலும் இரண்டில் புதன் இருந்தபோதிலும் இரண்டைச் சனியும் கேதுவும் பார்ப்பதால் ஜாதகிக்கு அந்தியகாலத்தில் விதவைத் தன்மை நேரிட அமைப்பு இருக்கிறது.

26. அறுபது ஒன்று ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமக ளுடலம் ஏகும் செப்புவோ மிவள்பின் ஜன்மம்
பிருதிவி தலத்தி லேதான் பிறப்பளாம் வேளான் வமிசம்
அரிமதவானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

26. ஜாதகிக்கு அறுபத்தோராவது வயதில் ஐப்பசி மாதத்தில் மரணம் நேரிட்டு இவள் தேகம் அழிந்துவிடும். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவள் காஞ்சீபுரத்தில் வேளாள குலத்தில் வந்து பிறப்பாள். கறுப்பு மதயானே முகத்தை உடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—ஜாதகியின் வயது விஷயம்:— ஜாதகிக்கு வயது வருஷம் 60 முதல் வருஷம் 61 முடியும் வரையிலும் ராகு தசையில் சனி புக்தி நடக்கின்றது. கடகலக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை 50-ஆவது சுலோகப்பிரகாரம் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகராகிறார்கள். சூரியன் சில கிரந்தங்களில் மாரகன் என்றும் சிலவற்றில் மாரகன் அல்லனென்றும் சொல்லி இருக்கிறது. பத்திற்குடைய அங்காரகன் பன்னிரண்டில் கேதுவுடன் இருந்து பலவீனமடைந்திருப்பதால் துய்ய கேரளம் எட்டாம் பாவம் 4–5-ஆவது பாடல் பிரகாரம் ஜாதகிக்கு மத்திம ஆயுளாகும். மத்திம ஆயுள் என்பது வருஷம் 33–1/3 முதல் 66–2/3 வருஷம் வரையிலும் ஆகும். இங்கு ராகு தசை வயது 54 முதல் வயது 72 வரையிலும் இருக்கின்றது. மாரகர்களாகிய சனி புதன் சுக்கிரன் இவர்களுடைய தசை வருஷம் 33–1/3-க்குமேல் வருஷம் 66–2/3-க்குள் வரவில்லை. ஆகையால் வருஷம் 66–2/3-கருள்ளே நடக்கிற ஆறிலுள்ள ராகுதசை பராசரஹோரை ஜாதக சந்திரிகை 26–23-ஆவது சுலோக பிரகாரம் ஜாதகிக்கு மாரகஞ் செய்ய அதிகாரமுடையதாக விருக்கிறது. அதாவது 6-க்குடையவரான குருவிற்கு 26-ஆவது சுலோகப் பிரகாரம் வந்த மாரக அதிகாரத்தை அவர் 23-ஆவது சுலோகம் பிரகாரம் ராகுவிற்குக் கொடுத்துவிடுகிறார். மேலும் குரு சில கொள்கைபடி இரண்டிற்குடையவராய் மாரகாதிபதியாகி இருக்கிற சூரியனுடன் சேர்ந்திருப்பதால் 23-ஆவது சுலோகம் பிரகாரம் குரு சூரியனுடைய மாரகத்தை ஏற்றுக்கொண்டு ராவுகுக்குக் கொடுத்துவிடுகிறார். இதுவுமன்றி இந்த ராகு ஆயுள் ஸ்தானமாகிய எட்டைப் பார்த்திருக்கின்றார். ஆகையால் ராகு மாரகாதிபதி ஆகின்றார். ஏற்கனவே சனி மாரகாதிபதியாகின்றார். ஆகையால் ஜாதகிக்கு ராகுதசையில் சனிபுத்தியில் மரணம் நேரிடுகிறது.

27. காதலி ஜனிக்கும் காலே கடைநாளில் கடைப் பாதத்தில்
தூதுவன் திசைநா லாண்டும் செப்பினேம் பூர்வபாகம்
ஒதுவேன் பின்பால் சேதி உமைய வளருளி னுலே
மாவர் தம்மைக் காக்கும் மங்கையே கேட் டி டாயே.

27. ஜாதகி பிறக்கின்ற காலத்தில் ரேவதி நட்சத்திரத்தில் நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய புதமகாதசையில் நான்கு வருஷம் இருப்பு என்று சொல்லி முதல் பாகத்தைச் சொல்லி முடிக்கிறேம், பின்னுல் அடுத்த பாகத்தில் மற்ற விஷயங்களே, பார்வதி தேவியாகிய உம்முடைய கிருபையாலே சொல்வேன். முனிவர்களேக் காப்பாற்றும் பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 65

1. சந்திரன் மேடமாகச் சனிவீணை[1] கேது கெண்டை[2]
மந்திரி[3] புகரும்[4] சீயம்[5] மால்[6] பணி[7] பானு[8] கன்னி
செந்தீயும்[9] கோல[10] தாக ஜன்மமும் கடகமாக
இந்தவாறுகோளும் நின்றுலி யம்புவீர் பலனேத்தானே.

கேது	சந்திரன்		சனி
	இராசி சக்கரம்		லக்கினம்
			குரு சுக்கிரன்
		அங்காரகன்	சூரியன் புதன் ராகு

அசுவினி 1-ஆம் பாதம், கேது தசை வருஷம் 6.

1. சந்திரன் மேஷத்திலும், சனி மிதுனத்திலும், கேது மீனத்திலும், குருவும் சுக்கிரனும் சிம்மத்திலும். புதனும் ராகுவும் சூரியனும் கன்னியிலும், அங்காரகன் துலாத்திலும் இருந்து ஜென்ம லக்கினம் கடகமாகவிருந்து இவ்விதமாகக் கிரகநிலை இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர்.

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும். மேஷத்தில் சந்திரனும், ரிஷபத்தில் அங்காரகனும், குருவும் சுக்கிரனும், கடகத்தில் சூரியனும் ராகுவும், துலாத்தில் சனியும், மகரத்தில் கேதுவும், கும்பத்தில் புதனும் ஆகும்.

2. காதலிகேட் கும்போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினில் ஆண்பால் ஜன்மம் விளம்புவோம் தந்தை யில்லம்
ஆதவன் குடக்கு வீதி அந்தகன்வாடை யாகும்
சீதளபிறைஅணிந்தோனவனும் வடகீழாகும்.

2. இவ்விதமாகப் பார்வதியம்மையார் கேட்கும்போது, கௌசிக முனிவர் சொல்லுகின்றார். இந்தக் குழந்தை பூமியில் ஆண் குழந்தையாகப் பிறக்கும், இதன் தகப்பனுருடைய வீட்டைப்பற்றிச் சொல்லு

1 மிதுனம். 2 மீனம். 3 குரு. 4 சுக்கிரன். 5 சிம்மம். 6 புதன். 7 ராகு. 8 சூரியன். 9 அங்காரகன். 10 துலாம்.

கிறோம். வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டைவாடையில் இருக்கும். குளிர்ச்சியான சந்திரனைத் தன்னுடைய ஜடையில் அணிந்துள்ள சிவபெருமானுடைய கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும்.

3. மாரியும் வடமே லாகும் மாகாளிவதன்மே லாகும்
வாரணம் கோஷ்டம் மேற்கில் மாரியும் கீழ்ப்பா லாகும்
கூறின அடையா ளத்துள் குழவியும் ரேஷ்டனுக
வீரியன் வன்னிய சேயாய் விளங்குவானிந்தப் பாலன்.

3. மாரியம்மன் கோயில் வடமேற்குத் திக்கில் இருக்கும். மாகாளியம்மன் கோயில் அதற்கு மேற்கில் இருக்கும். யானைத்தொழுவம் முருகர் கோயில் விஷ்ணு கோயில் ஆகிய இவைகள் மேற்கிலும், மாரியம்மன் கோயில் கிழக்குத் திக்கிலும் இருக்கும். இங்குச் சொல்லிய அடையாளங்கள் உள்ள இடத்தில் ஜாதகர் ஜேஷ்ட குமாரனுகப் பிறப்பார். இவர் வலிவான வன்னிய குலத்தில் வந்து பிறப்பார்.

4. தந்தையின் துணைஆண்காணுன் சத்திமா ரிருவ ராகும்
அந்தவர் சேதி சொல்வேன் அயல்சுகமடையாராகும்
நிந்தைகள் வற்கா ராகும் நுவலுவோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகருடைய தகப்பனுருக்கு ஆண் சகோதரங்கள் கிடையாது, இரண்டு சகோதரிகள் இருப்பார்கள். அவர்களுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். அவர்கள் அன்னிய விடத்தில் சுகத்தை அடைய மாட்டார்கள். பழி இகழ்ச்சி நிந்திப்பு இவைகளை அடையமாட்டார்கள். அவர்களுடைய இதர விஷயங்களைப் பின்னுல் சொல்லுகிறேன். ஜாதகருடைய தகப்பனுரின் விஷயங்களை இனிமேல் சொல்லுகிறேன்.

5. மால்நிறம் வாத தேகி வடிவினில் குள்ள னுவன்
சிலம்போல் வெளி மயக்கன் சித்திர வேலை செய்வன்
காலிகளற் பமெய்தும் கட்டுவன் சிலர்க்கு இல்லம்
வேலன்மேல் பக்தி பூண்பன் வித்தையு மற்ப மெய்தும்.

5. ஜாதகருடைய தகப்பனுர் மகாவிஷ்ணுவின நிறமாகிய நீல மேக நிறத்தையுடைய தேகத்தையுடையவர். வாதகுண முடைய தேகத்தை யுடையவர். இவர் உருவத்தில் குள்ளமாக இருப்பார். வெளிக்கு நல்லொழுக்கமும் நல்ல குணமும் உடையவர்போலத் தோன்றி மயக்குவார். அழகான சித்திர வேலைகளைச் செய்வார். இவருக்குக் கால்நடைகள் அற்பமாகவிருக்கும். இவர் சிலருக்கு வீட்டைக் கட்டிக்கொடுப்பார். முருகர்மேல் பக்தியுள்ளவர். இவருக்குக் கல்வி கொஞ்சமாகவிருக்கும்.

6. உரோமங்களதிகமில்லான் நுவலுப தேசம் கொள்வன்
தீமையை ஒருவர்க்கெண்ணுன் ஜனசகாயங்கள் செய்வன்
தாமத குணத்தா னுகும் தைரிய மில்லா நெஞ்சம்
நேமங்களில்லா னுகும் நினைத்தகா ரியமு டிப்பன்.

6. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய தேகத்தில் மயிர் அதிகமாகவில்லாதவர். சொலலிக்கொள்ளக்கூடிய அளவு உபதேசம் பெற்றுக்கொள்ளுவார். யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார். ஜனங்களுக்கு உபகாரஞ்செய்வார். சாந்தமான குணமுடையவர். இவர் தைரியமான மனத்தையுடையவரல்லர். இவருக்கு நியமம் தூய்மை நல்லமுறைமை நல்லநடத்தை இவைகள் கிடையா. இவர் தான் எண்ணின காரியத்தைச் செய்துமுடிப்பார்.

7. தரணிகள் அற்ப மாகும் சந்தேக குணத்தா னுகும்
விரைவினில் நடக்க வல்லன் விமலிசொல் கடவா னுகும்
உரைக்கிறே மிவன்முன் ஜன்மம் ஒதுருதலத்தி லேதான
வரநதி குலமுதித்து மானிலம் கிருஷி செய்து ;

7. ஜாதகருடைய தகப்பனுருக்கு பூமிகள் கொஞ்சமாக விருக்கும். இவர் சந்தேகமான மனத்தை யுடையவர். வேகமாக நடக்குஞ் சாமர்த்திய முள்ளவர். தன்னுடைய மனைவியின் வார்த்தையை மீறி நடந்து கொள்ள மாட்டார். இவருடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகிறோம். இவர் சிதம்பர க்ஷேத்திரத்தில் கங்கை குலம் என்று சொல்லப்படுகிற வேளாளர் குலத்திற் பிறந்து பெரிய விசாலமான பூமிகளைப் பயிரிட்டு வாழ்கின்ற காலத்தில் ;

8. வந்ததோர் வினையைச் சொல்வேன் மறைமாது கற்பு முள்ளாள்
அந்தவள் பேரில் நிந்தை அடாமொழி சொல்லும் போது
நிந்தையும் கலக்க முற்றுச் செப்புவாள் சாபம் தானும்
எந்தன்மேல் வீணுய் நீநிந்தையியம்பினப் பாவிக்கே தான்.

8. இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைச்சொல்லுகிறேன். ஒரு பிராமண ஸ்திரீ கற்புடையவளாக விருந்தாள். அவள்மேல் இவர் பழியான ஒரு தகாதவார்த்தையைச் சொல்லும்போது நிந்திக்கபபட்ட அவள் தன் மனதும் கலக்க முடையவளாய்ச் சாபத்தைச் சொல்லுகிறுள். என் மேல் வீணுகப் பழியைச் சாற்றின பாவியாகிய உனக்குத்தான் ;

9. பின்வரும் ஜன்மம் தன்னில் பெண்சு தரில்லா தாயும்
அண்ணன்தம்பிகளு மின்றி அம்பிகை மாத ராலே
சொன்னசொல் அடைவாய் நீயும் செப்பியே தெருதூள் விட்டாள்
கன்னிகை கற்பின் சாபம் கலந்தது பால னுக்கு.

9. உன்னுடைய மறு ஜன்மதில் பெண் குழந்தைகள் இல்லாமலும், தமயனும் தம்பிகளும் இல்லாமலும் எனக்குள்ள பார்வதியின் கிருபையாலே நான் சொல்லியபடி என்னுடைய சாபத்தை நீ அடைந்து வாழக் கடவாய் என்று சொல்லித் தெருவிலுள்ள மண்ணை எடுத்துத் தூற்றினுள். அந்தப் பதிவிரதையான பிராமண ஸ்திரீயின் சாபம் இவருக்கு வந்து நேர்ந்தது.

10. ஆகையா லிச்சென் மத்தில் அவள்சுதர் கன்னி காணுன்
தோகையாம் துணைவ ராலே சின்னச் சொலலுண்டு பின்னும்
ஏகனுய் வாழ்வா னுகும் எழிலான குடும்பமில்லான்
போகவாரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

10. ஆகையால் ஜாதகருடைய தகப்பனுருக்கு இந்த ஜன்மத்தில் பெண் குழந்தை கிடையாது. இவருடைய சகோதரிகளால் இவருக்கு இகழ்ச்சியான வார்த்தைகளும் அவமானமும் நேரிடும், பின்னுல் இவர் தனியாக விருந்து வாழ்வார். இவர் அழகான குடும்பத்தை யுடையவராவார். ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய கடலேயும் நாகலோகத்தையும் உடைய பூமிதேவியைப் பெற்றெடுத்தப் புண்ணிய மாதாவாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

11. சொன்னஇக் குணத்தா னுக்குச் சுதனுமே உதிப்பா னுகும்
அன்னவர் குணத்தைச் சொல்வேன் யானையின் நிறத்தா னுகும்
பன்னியே பேசு வானும் பலகலே அதிக மில்லான்
உன்னத வார்த்தை சொல்வன் உண்மையாம் மனத்தானுகும்.

11. இது வரையிலும் சொல்லப்பட்டக் குணங்களேயுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களேச் சொல்லுகிறேன். இவர் யானையினுடைய நிறமாகிய ஒருவித கறுப்பு நிறமுள்ள தேகத்தையுடையவர். சாமர்த்தியமாகவும் சுறுக்கமாகவும் பேசுவார். பலவிதமான சாஸ்திரங்களே அதிகமாகப் படித்தவரல்லர். மேன்மையான சிறந்த வார்த்தைகளேச் சொல்லுவார். நேர்மையான கபடில்லாத மனத்தை யுடையவராகும்.

12. தந்தைபோல் தொழிலும் செய்வன் தரணிகள் அற்ப மெய்தும்
பந்தினர் மதிக்க வாழ்வன் பலசகா யங்கள் செய்வன்
முந்தின கோப மேற்பன் மொழியதைக் காப்பானுகும்
விந்தையாய் வார்த்தை யுள்ளான் விகடங்கள் கூரு னுகும்.

12. ஜாதகர் தன்னுடைய தகப்பனுரைப் போலவே அவருடைய வேலையைச் செய்வார். இவருக்குப் பூமிகள் கொஞ்சமாக விருக்கும். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னே மதிக்கும்படியாக வாழ்வார். பிறருக்குப் பலவிதமான உதவிகளேச் செய்வார். முன் கோபத்தையுடையவர். தன்னுடைய வார்த்தைகளேத் தவருமல் காப்பாற்றுவார். ஆச்சரியமான நூதனமான வார்த்தைகளே உபயோகிப்பார். வேடிக்கையான வார்த்தைகளே உபயோகிக்கமாட்டார்.

13. அன்னமும் குறைவு ருதான் அவன்கரம் பத்ம ரேகை
தன்துணே காணு னுகும் சாற்றுவீ ரந்தச் சங்கை
துன்மையாய் மூன்றில் ராகு தொடந்ததால் சொன்னேம் யாங்கள்
கன்னெென மொழியை யொக்கும் காதலி கேட்டி டாயே.

13. ஜாதகருக்குச் சாப்பாடு குறைவு ஏற்படாது. இவருடைய கையில் தாமரை ரேகை என்ற ஒருவித ரேகை உண்டு. இவருக்குச் சகோதரர்கள் கிடையாது. இதற்குக் காரணங்களேச் சொல்லுவீர் என்ற கேட்க, மூன்றுவது பாவத்தில் இராகு கெடுதியை விளேவிக்கக்கூடியவராயிருப்பதால் * நாங்கள் இவ்விதபலனேச் சொன்னேம். சர்க்கரைக்குச் சமானமான இனிமையான வார்த்தைகளே உபயோகிக்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—சகோதர விஷயம்—மூன்றுவது பாவத்தில் சூரியன் இருப்பதால் சம்பு ஹோராபிரகாசா 58-ஆவது சுலோகப் பிரகாரம் மூத்த சகோதரர்களுக்குத் தோஷமுண்டு. 57-ஆவது சுலோகப் பிரகாரம் எத்தனே சகோதரர்கள் பிறந்தாலும் அத்தனேயும் இறந்துவிடும். மூன்றுமதிபதியாகிய புதனுடன் சூரியன் கூடியிருப்பதால் மணிகண்டகேரளம் சகோதரகாண்டம் 9-ஆவது பாடல் பிரகாரம் பின் சகோதரத்திற்குத்தோஷமுண்டு. மூத்த சகோதரஸ்தானமாகிய பதினேராவது வீடாகிய ரிஷபத்தைக் கேதுவும் அங்காரகனும் பார்க்கின்றுர்கள். பதினென்றுக்குடைய சுக்கிரனேச் சனி பார்க்கிறுர். மூத்தோர் காரகராகிய குரு தனக்கு விரோதியாகிய சுக்கிரனுடன் கூடிச் சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றுர். மேலும் இங்கு இப்பாடலில் சொல்லியபடி ராகுவும் மூன்றில் இருக்கின்றுர். ஆகையால் சகோதரர்களுக்கு அதிகமான தோஷங்கள் இருக்கின்றன.

14. மங்கள மீரெட்டா ண்டில் மருவிடும் வடபால் மாரி
அங்கவள் குணத்தைச் சொல்வேன் அறிவுளாள் அவசரத்தாள்
சங்கையா மனத்தா ளாகும் சாதமு மன்பாயீவள்
தங்கீடும் நாபி நோயும் சிலவேளே யென்றுரைப் போம்

14. ஜாதகருக்கு விவாகம் பதினுருவது* வயதில் மாரியம்மன் உள்ள வடக்குத்திக்கில் மழை காலத்தில் நேரிடும். மனேவியின் குணத்தைச் சொல்லுகின்றேன். இவள் புத்திசாலியானவள். அவசரமாக விருப்பாள். அச்சமான சந்தேகமான மனத்தையுடையவள். பிரியத்துடன் சாப்பாடு போடுவாள். அவளுக்கு வயிற்றில் ரோகம் சில சமயங்களில் உண்டாகும் என்று சொல்லுகிறேம்.

* குறிப்பு.—விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷை 15-0-0 முதல் ஷை 16-0-0 முடிகிறவரையிலும் சுக்கிரதசையில் ராகு புக்தி நடக்கின்றது. பத்திற்குடையவராகிய அங்காரகனும் லக்கினுதிபதியாகிய சந்திரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளுகிருர்கள். மேலும் கீர்த்தி ஸ்தானம் என்ற பத்தாவது ஸ்தானத்திற்கு அதிபதியாகிய அங்காரகனும் சனியும் லக்கினத்திற்கு நான்கு ராசிக்குள்ளே இருக்கின்றுர்கள். அஃதாவது அங்காரகன் முன்னே நான்கு ராசிக்குள்ளும் சனி பின்னே நான்கு ராசிக்குள்ளுமான பன்னிரண்டிலும் இருக்கின்றுர்கள். ஆகையால் ஜாதகசிந்தாமணி 974-ஆவது பாடல் பிரகாரம் ஜாதகருக்கு வாலிபத்தில் விவாகமுண்டு. சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்கிற்குடையவராகியும், களத்திரக்காரகனுமாகியும் ஒன்பதிற்குடைய குருவுடன் சம்மந்தப்பட்டு இரண்டில் களத்திர ஸ்தானுதிபதியாகிய சனியால் பார்க்கப்பட்டுமிருக்கின்றுர். ஆகையால்

ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க இவருக்கு அதிகாரம் இருக்கிறது. போககாரகனுகிய ராகு களத்திர விஷயத்தில் சம்பந்தப்பட்ட இரண்டாவது பாவத்திற்குரிய சூரியனுடன் கூடி மூன்றுக்குடையவரான புதனுடனும்கூடி இருக்கின்ருர். ஆகையால் ராகுவுக்கு விவாகஞ் செய்து வைக்க அதிகாரம் இருக்கின்றது. [சிலர் கீர்த்திஸ்தானம் லக்கினம் என்றும் போகஸ்தானம் மூன்று என்றும் சொல்லுவார்கள். இப்படியானுலும் 974-ஆவது பாடல் பொருந்தும்.]

15. பொய்யது புகலா ளாகும் புண்ணிய மனத்தா ளாகும்
வையமேல் நல்லோ ளாவள் மாந்தளிர் மேனி யாவள்
நையவே கூரு ளாகும் நாயசன் மனதுக் கேத்தோள்
ஐயமே லிச்சை யுண்டு அவளுக்கு வயது தீர்க்கம்.

15. ஜாதகருடைய மனைவி பொய் சொல்லமாட்டாள். இவள் புண்ணியத்தைச் செய்யும்படியான மனத்தை உடையவள். பூமியில் நல்லவள் என்று பெயரெடுப்பாள். மாமரத்தின் துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவித மான சிவப்பு நிறமான தேகத்தையுடையவள். இகழ்ச்சியும் துன்பமும் உண்டாகும்படியாய் அல்லது பரிகாசமாய்ப் பேசமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்ளுவாள். பிச்சை கொடுப்பதில் ஆசையுடையவள். இவள் நீண்ட வயதுடையவளாவாள்.

16. ஜெயமுனி கூறு கின்ருர் சேயனுக் கிரண்டு தாரம்
நயமாக நேரு மென்றேம் நவிலுவீ ரந்தச் சங்கை
வியமதில் காரிதங்க விளம்பினேம் தாரம் ரண்டு
கயல்விழி முதல்மா தும்தான் கனக்குமோ நசிக்குமோ.

16. ஜெயமுனி என்பவர் மறுத்துச் சொல்லுகின்ருர். ஜாதகருக்கு இரண்டு தாரங்கள் நன்மைக்காக நேரிடும் என்று சொல்லுகிறேம் அதற்குக் காரணத்தைச் சொல்வீர் என்று கேட்க, விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில் சனி இருப்பதால் ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று சொல்லுகிறேம் என்று சொல்ல, கெண்டைமீனின் கண் களைப் போன்ற அழகான கண்களையுடைய முதல் மனைவி தீர்க்க வயதுள்ளவளாக விருப்பாளா அல்லது இறந்து விடுவாளா என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கிருர்.

* குறிப்பு.—மனைவி விஷயம்—களத்திரஸ்தானமாகிய ஏழாமிடத்திற் குரிய சனி லக்கினத்திற்குப் பன்னிரண்டிலும் தன் வீட்டிற்கு ஆறிலும் இருக் கின்ருர். அங்காரகன் ஐந்திற்குடையவராய்ப் புத்திரஸ்தானுதிபதியாகி ஏழாவது பாவத்தை பார்க்கின்ருர். கேதுவும் ஏழாவது பாவத்தைப் பார்க் கின்ருர். முதல் தார விஷயமாய்ச் சம்மந்தமுள்ள இரண்டாம் பாவத்திற் குறிய சூரியன் மூன்றில் இராகுவுடன் கூடி இருக்கின்ருர். இரண்டாம் வீட்டைச் சனியும் பார்க்கின்ருர். லாபாதிபதியாகிய சுக்கிரனை ஏழுக்குடைய

¹ சனி

வராகிய சனி பார்க்கின்ருர். இந்தக் காரணத்தினுலும் மேலே முந்தி சொல்லப்பட்ட காரணங்களாலும் ஜாதகாலங்காரம் 689-ஆவது பாடல் பிரகாரமும் ஜாதகருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்கள் ஏற்படும் யோகம் இருக்கிறது.

17. முதல்மாதும் தீர்க்க மெய்தும் உத்தமி யிருக்க வேறு
வதிபதி வருகும் சேதி வறிவீப்பீர் முனியே நீர்தாம்
புதல்வர்க ளின்றி வேறு பேதையும் வருவா ளாகும்
இதுகாலம் புகலு மென்ன இருபத்தே ழாண்டுள் நேரும்.

17. ஜாதகருடைய முதல் மனைவி தீர்க்கமான வயதுடைய வளாயிருப்பாள் என்று சொல்ல, முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இன்னெரு மனைவி நேரிடுவதற்குக் காரணத்தைச் சொல்லுவீர். முனிவரே ! என்று கேட்க ஜாதகருக்கு முதல் மனைவியால் குழந்தைகள் இல்லாததால் இன்னெரு மனைவி வந்து நேரிடுவாள் என்று சொல்லுகிறேம். * இந்த இரண்டாது மனைவி வந்து சம்பவிக்கின்ற காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் இரண்டாவது மனைவி ஏற்படுவாள்.

*குறிப்பு.—மனைவி விஷயம்—16-ஆவது பாடலின்கீழ் சொல்லிய காரணங் களை இன்னெரு தடவை வாசித்து விட்டு அவைகளுடன் பின் வருங் காரணங் களையும் சேர்த்து வாசிக்கவும். இரண்டாவது தாரபாவம் ஒன்பதாவது வீடாகிய மீனம். இதற்குரியவரான குரு லக்கினுதிபதியாகிய சந்திரனைப் பார்க்கின்ருர். இந்தக் காரணத்தினுலும் இரண்டாவதுதார அமைப்பு இருக்கிறது. மேலும் முதல்தாரபாவ அதிபதியாகிய சனி உபயராசியில் மிதுனத்தில் இருக்கின்ருர். ஆகையால் தமிழ் ஜாதகலங்காரம் 648-ஆவது பாடல் 3-ஆவது 4-ஆவது வரிகள் பிரகாரம் ''மாதர் சாவின்றிப் பலருளராம்''. முதல் தாரத்திற்குச் சம்மந்தப்பட்ட சூரியனை நைசர்க்கிக புதன்கூடியும் சுக்கிரனைநைசர்க்கிக, ஆதிபத்திய சுபராகிய குருவும் கூடி இருக்கின்ருர்கள். ஆகையால்முதல்தாரத்திற்கு நீடித்தஆயுள் இருக்க அமைப்பு இருக்கின்றது. முதல்தார பாவமாகிய ஏழாவது வீட்டைப்புத்திரபாவாதிபதியாகிய அங்கார கன் பார்க்கின்ருர். ஏழுக்குடையவரும் ஐந்திற்குடையவரும் கூடினுலும் ஒருவரை மற்றெருவர் பார்த்தாலும் ஒருவர் வீட்டில் மற்றெருவர் இருந் தாலும் புத்திரதோஷமும் களத்திரதோஷமும் உண்டென்று சாஸ்திரங்களில் சொல்லி இருக்கின்றது. இங்கு அங்காரகன் ஏழைப்பார்ப்பதால் சந்ததியால் தாரத்திற்குப் பங்கமும் தோஷமும் உண்டு. ஜாதகாலங்காரம் 566-ஆவது பாடலைப் பார்க்கவும். ஆகையால் பிள்ளையில்லாததால் இரண்டாவது தாரம் நேரிடுகிறது.

18. உத்தர திசையில் நேரும் உரைக்கிறேம் புத்திர பாவம்
சுத்தமா யாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
சத்தியாம் முதல்ம னைக்குச் சந்ததி காணுறுதண்ணம்
மத்ததைச் சொல்லு மென்ன கோதை யின்வினையாம் தாயே.

18. ஜாதகருக்கு இரண்டாவது மனைவி வடக்குத்திக்கில் இருந்து வந்து நேரிடும். இவளுக்குச் சந்ததியைப் பற்றிச் சொல்லுகிறோம். ஆண் குழந்தைகள் இரண்டும், பெண் குழந்தைகள் இரண்டும் குற்றமில்லாதவர்களாய்ப் பிறந்து தீர்க்காயுளுடையவர்களாயிருப்பார்கள். முதல் மனைவியாகிய அந்த ஸ்திரீக்குக் குழந்தைகள் இல்லாமல் இருப்பதற்குக் காரணங்களைச் சொல்லுவீரென்று கேட்க, அவள் தன்னுடைய முன் ஜென்மத்தில் செய்த பாவத்தாலே பார்வதியம்மையே ! அவளுக்குச் சந்ததி கிடையாது.

குறிப்பு.—முதல் மனைவி விஷயம்:—(1) முதல் மனைவி ஸ்தானம் ஏழாமிடமாகிய மகரம். இந்த மகரலக்கினத்திற்குப் புத்ரஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் மகரத்திற்கு எட்டில் இருந்து கொண்டு சனியால் பார்க்கப்படுகின்றார். புத்திர காரகராகிய குரு மகரத்திற்கு எட்டில் மறைந்து சனியால் பார்க்கப்பட்டிருக்கிறார். மகரலக்கினத்திற்குப் புத்திரஸ்தானமாகிய லாபத்தை அங்காரகனும் கேதுவும் பார்க்கின்றார்கள். ஆகையால் முதல் மனைவிக்குச் சந்ததிகிடையாது.

(2) இரண்டாவது மனைவி விஷயம்:— ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் 2-வது மனைவி நேரிடும் என்று 17-ஆவது பாடலில் சொல்லி இருக்கிறது. ஜாதகருக்கு வயது ௵ 26-0-0 முதல் ௵ 27-0-0 முடியும் வரையிலும் சூரிய தசையில் சந்திர–அங்காரக புக்திகள் நடக்கின்றன. இரண்டாந் தாரபாவம் ஒன்பதாவதுவீடாகிய மீனமாகும். இந்தவீட்டிற்கதிபதியாகிய குரு சூரியனுடைய வீட்டிலிருக்கின்றார். சூரியன் ஒன்பதைப் பார்த்திருக்கின்றார். ஆகையால் சூரியனுக்குத் தன் தசையில் இரண்டாவது தாரத்தைக்கொடுக்க அதிகாரம் இருக்கிறது. லக்கினாதிபதியாகிய சந்திரனைக் குரு பார்ப்பதால் தனக்குண்டான இரண்டாந்தார அதிகாரத்தைக் குரு மேலே, முன்னே சொல்லியுள்ள பிரகாரம், கொடுக்கவே, சந்திரனுக்குத்தன் புக்தியில் இரண்டாந்தாரத்தைக் கொடுக்க அதிகாரம் வருகிறது.

19. என்ன ஊழ் செய்தா ளத்தை யியம்புவீர் முனியே நீர்தாம்
கன்னியின் பூர்வம் சொல்வேன் கஞ்சனைப் பூசை செய்து
உன்னத பட்சி தன்னில் உதித்தன னிக்கு லத்தில்
முன்னமே குடும்பி யாகி முதல்வியும் வாழுநாளில்

19. ஜாதகருடைய மனைவி என்ன பாவத்தைச் செய்தாளோ ; அதைச் சொல்லுவீர், முனிவரே ! நீங்கள், என்று கேட்க, முனிவர் அவளுடைய பூர்வ ஜன்மத்தைச் சொல்லுகிறார். அவள் பிரமதேவனைப் பூஜை செய்து மேன்மையான சிறந்த பக்ஷிஸ்தலம் என்று சொல்லப்படுகிற திருக்கழுக்குன்றத்தில் இந்த ஜன்மத்தில் சிறந்த குலமாகிய வன்னிய ஜாதியில் பிறந்து மேன்மையான குடும்பத்தில் முதன்மையானவளாக விருந்து வாழுகின்ற காலத்தில் ;

20. தன்னுடக் கொல்லை தன்னில் தங்கிற்றுக் கருப்பான் சாமி
முன்னோர்கள் தோத்த ரிப்பார் முதல்குல தெய்வ மென்று
கன்னியும் கருவத்தாலே கருமுனி தனைத்தொ ழாமல்
மௌனமாய் நின்ற ளென்றோம் மாமுனி புகலும் சாபம்.

20. அவளுடைய வீட்டின் கொல்லையில் வாசஞ் செய்து கொண்டிருந்த பெண்களின் (கர்ப்பப்பையினுள்ள கருவை நாசஞ் செய்வதால் கருப்பான் சாமி என்று சொல்லப்பட்ட) முனீசுவரனை அவளுடைய முன்னோர்களாகிய பெரியோர்கள் தங்களுடைய முதன்மை யானக் குலதெய்வமென்றுக் கருதிப் பூஜை செய்து வந்தார்கள். அவள் தன்னுடைய அகங்காரத்தினாலும் இறுமாப்பினாலும் இந்தக் கருமுனியாகிய முனீசுவரனைப் பூஜை செய்யாமல் சும்மா இருந்து விட்டாள் என்று சொல்லுகிறோம். அந்தப் பெரிய முனீசுவரனும் சாபத்தை அவளுக்குக் கொடுக்கின்றார்.

21. என்னையே தொழாத பாவி யீன்றதோர் சுதரைக் கொல்வேன்
வரும்ஜன்மம் தன்னில் புத்திரர் உதிக்காத வண்ணம் நானும்
உன்பக்கல் வாசமாவேன் உரைத்து வேறுசாகை செல்லத்
துன்மைகள் நேர்ந்த தென்றோம். வேறு ஒன்று செப்புவோம்

21. என்னைக் கும்பிடாமலும் வணங்காமலும் இருக்கின்ற பாபியாகிய நீ பெற்ற பிள்ளைகளை நான் கொன்று விடுவேன். இதுவுமன்றி உன்னுடைய மறு ஜன்மத்தில் நான் உன்னைப் பிடித்துக் கொண்டு உன்னுடன் கூடவே இருந்து வாசஞ் செய்து கொண்டு உனக்குப் பிள்ளைகள் பிறக்காதபடியும் செய்து விடுவேன் என்று அவளைப் பார்த்து அந்த முனீசுவரன் சொல்விட்டு வேறே ஓர் இடத்திற்குப் போய்விடவே, அந்தச் சாபத்தால் அவளுக்குக் கெடுதிகள் இந்த ஜன்மத்தில் உண்டாயின என்று சொல்லுகிறோம். இதுவுமன்றி இன்றொரு சாபத்தைச் சொல்லுகிறோம்.

22. இறப்பினில் கூடு கட்டி யிருக்கிற பட்சி தன்னைக்
குறிப்பாக அதைக் கலைத்தாள் குஞ்சுகள் மாண்ட வென்றோம்
மறுவிற்று அதுஓர் தோஷம் மைத்துனன் மதலைக்காக
அரிவைவஞ் சனையும் செய்தாள் அடைந்தது அதுஓர் தோஷம்.

22. வீட்டிறப்பிலும் இறவாணத்திலும் கூண்டு கட்டி வசித்திருந்த ஒரு பக்ஷியின் கூட்டை வேண்டுமென்றே அவள் கலைத்து விடவே அதிலிருந்த அதனுடைய குஞ்சுகள் இறந்தன. இதனாலுண்டான இன்னொரு சாபம் அவளை வந்து அடைந்தது. இதுவுமன்றி அவள் தன்னுடைய புருஷனுடைய சகோதரனின் குழந்தைக்குக் கொடுமைகளைக்கபடமாகச் செய்தாள். இதனால் அவளுக்கு இன்னொரு சாபம் வந்து நேர்ந்தது.

23. ஆகையால் மூன்று தோஷம் அடைந்தது பாவைக் கேதான்
பாவைக்குச் சுதர்கள் தோஷம் செய்தஊழ் விலக்க வேண்டி
பாகமாய்க் கிரியையொன்று பகருவீர் முனியே நீர்தாம்
நாகம்போல் முனிதோ ஷத்திற்கு நவிலுவோம் கிரியை யொன்று.

23. ஆகையால் அவளுக்கு மேற்சொல்லிய மூன்று விதமான சாபங்கள் வந்து சேர்ந்தன. அதனால் அவளுக்குப் புத்திர தோஷம் ஏற்பட்டு விட்டது. அவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் செய்த பாவங்களை நிவிர்த்தி செய்வதற்காகத் தகுந்த ஒரு சாந்தியை முனிவரே ! நீரே

சொல்லுமென்று கேட்கவே, நாகப்பாம்பின் கொடிய விஷத்தைப் போன்ற முனீசுவரனுடைய கொடிய சாபத்தை நிவிர்த்திசெய்ய ஒரு சாந்தி சொல்லுகிறோம்.

24. கருமசாந் திகளும் செய்து காதலி பீசம் தன்னைக்
கருவங்க ரேகில் கீறிக்காதலி பூசை வைத்துத்
திருமக ளணிவா ளாகில் சேயர்கள் விருத்தியாகும்
திருகென்று செய்யா ளாகில் சுதர்காணுள் முனியும் வாசம்.

24. அவள் பூர்வகர்மங்களை விலக்குவதற்குரிய சாந்திகளைச் செய்து ஒரு காரியத் தகட்டில் பீஜாக்ஷரத்தை எழுதி அதைப் பூசையில் வைத்து அதை அவள் அணிந்து கொள்ளுவாளாகில் அவளுக்குக் குழந்தைகள் உண்டாகி விருத்தியாவார்கள். வஞ்சனையாலும் கள்ளத்தாலும் அவள் இவ்விதமாகச் செய்யாவிட்டால் அவளுக்குக் குழந்தைகள் உண்டாக மாட்டார்கள். மேலும் அவளிடத்தில் முனீசுவரன் வாசஞ் செய்து கொண்டிருப்பார்.

25. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் தவளை தென்பால்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினன் மிலேச்ச னுகக்
காதலி மதலை யுண்டாய்க் கனமுடன் வாழுந் நாளில்
தீதுகள் ஏழைக்கேதான் செய்தனன் என்று சொல்வோம்.

25. ஜாதகருடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். தவளை என்றதற்குத் தெற்கு திக்கில் பூமியில் உள்ள ஒரு பெரிய கிராமத்தில் மிலேச்ச ஜாதியில் பிறந்து மனைவி குழந்தைகள் இவர்களை உடையவராகிப் பெருமையுடன் வாழ்கின்ற காலத்தில் இவர் ஏழைக்களுக்குக் கெடுதிகளைச் செய்தார் என்று சொல்லுகிறோம்.

26. ஏழைகள் மனவெ றுப்பா லியம்பின சாபம் கேண்மோ
தாழ்படச் செய்த பாவிதங்கும்பின் ஜன்மம் தன்னில்
சூழாது துணைவர் தாமும் சுதருமே தோஷ மெய்தும்
பாழ்மனை யிரண்டு மாயும் மானிலம் தன்னில் வாழ்வாய்.

26. ஏழை ஜனங்கள் மனம் நொந்து வெறுத்துக் கொடுத்தச் சாபத்தைக் கேட்பீராக. எங்களுக்குந் தாழ்ந்த நிலைமையும் இகழ்ச்சியும் நேரும்படியாகக் கெடுதிகளைச் செய்த பாவியாகிய உனக்குப் பின் ஜன்மத்தில் சகோதரர்கள் கிடையா. குழந்தைகளுக்குத் தோஷமுண்டாகக்கடவது, உனக்குக் கெட்ட மனைவிகள் இருவர் உண்டாகி நீ இந்தப் பெரிய பூமியில் வாழக் கடவாய் என்று ஏழைகள் இவரைப் பார்த்துச் சொன்னார்கள்.

27. இன்னமும் பலவாறு சொன்னு ரெய்திற்று அந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தில் மறையோருக் குதவி செய்து
தென்திசை காலன் பக்கல் சென்றுமே பிரமன் லக்கம்
இந்நிலந் தனிலு திப்பா னெய்திடு மேழைச்சாபம்.

27. அந்த ஏழை ஜனங்கள் இன்னமும் பலவிதமாகச் சொல்லி இவருக்குச் சாபங் கொடுத்தார்கள். அந்தச் சாபங்கள் இவரை இந்த ஜன்மத்தில் வந்து அடைந்தன. ஜாதகர் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் பிராமணர்களுக்கு உபகாரஞ் செய்து இறந்து தெற்குத் திக்கிலுள்ள எமனிடஞ் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்தப் பூமியில் வந்து பிறந்தார். அந்த ஏழை ஜனங்களின் சாபம் இவரை வந்து அனுகும்.

28. தன்துணை காணு ருகும் சந்ததி அற்ப மாகும்
பின்மனை நேரு மென்றேம் பேசுவோ மிவனின் யோகம்
இன்னவன் ஜனனம் தொட்டு இருபது யேழாண் டுக்கும்
பொன்பூமி அல்ப மெய்தும் புகழிலா குடும்ப மென்றேம்.

28. ஜாதகருக்குச் சகோதரர்கள் கிடையா. குழந்தைகளும் கொஞ்சமாக விருக்கும். இரண்டாவது மனைவியும் ஏற்படுவாள். இவருடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுவோம். இவருடைய ஜனனகாலம் முதற்கொண்டு இருபத்தேழு வயது வரையினும் தனம் பூமி இவைகள் கொஞ்சமாக ஏற்படும். குடும்பம் மேன்மையானதாக விருக்காது என்று சொல்லுகிறோம்.

29. சொன்னதோர் ஆண்டு மேலாய்த் தொல்புவி சேர்த்த லுண்டு
பொன்சேர்க்கை பலரும் நேசம் பூர்வமாம் பொருளும் சேரும்
அன்னியர் மதிக்க வாழ்வான் ஆண்மையாய்க் குடும்ப மெய்தும்
இன்னமும் விவர மாக இயம்புவோம் பின்பா கத்தில்.

29. ஜாதகருக்கு முந்தி சொல்லியுள்ள இருபத்தேழு வயதிற்கு மேலே பூமி வந்து சேரும். தனம் வந்து சேரும். அனேகர் சினேகமாவார்கள். பூர்வீகமான பொருளும் வந்து சேரும். அயலார்கள் இவரை மதிக்கும் படியாகப் பெருமையுடன் வாழ்வார். இவருடைய குடும்பமும் மேன்மையாகவும் சிறப்புடையதாகவும் இருக்கும். பின் பாகத்தில் விஷயங்களை அதிக விபரமாகச் சொல்லுகிறோம்.

30. மாதுரு குணத்தைச் சொல்வேன் மனமது தளர்ச் சியுண்டு
சூதிலாள் பித்த தேகி சொல்லது சுருக்க மாகும்
பாதக மன மில்லாதாள் பர்த்தாவுக் கினியளாகும்
வேதனை கொஞ்ச முண்டு வித்தகி தீர்க்க ஜீவி.

30. ஜாதகருடைய தாயின் குணதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் இளகிய மனத்தையுடையவள். கபடமில்லாதவள். பித்ததேகத்தையுடையவள். இவள் கொஞ்சமாகப் பேசுவாள். கெட்ட மனமில்லாதவள். புருஷனுக்கு இஷ்டமானவள். இவளுக்குக் துன்பங்கள் கொஞ்சம் இருக்கும். இவள் நீண்ட ஆயுளையுடையவள்.

31. தன்துணே ஆண்பால் ரண்டு சத்திமா ரவ்வாறு தீர்க்கம்
இன்னவள் முன்ஜன் மத்தை யியம்புவோம் காரைக் காலில்
அன்னவன் மறவர் வமிசம் அனுகியே சுதர்க ளுண்டாய்
முன்வினே யில்லா தாகி யொதுங்கினள் காலன்னுடு.

31. ஜாதகருடைய தாயாருக்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரர்களும் உண்டு. இவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகிறேம். இவள் காரைக்காலில் மறவர் குலத்திற் பிறந்து குழந்தைகளே யுடையவளாகவும் முன் ஜன்மத்திய பாவம் இல்லாதவளாகவும் இறந்து எமபட்டணத்திற்குச் சென்ருள்.

32. வேதனுல் வரைப் பட்டு விளங்கி ளுளிந்த மாது
ஓதுவே னிவள்பின்ஜன்மம் உம்பர்வாழ் அருணே தன்னில்
போதன முடையா னுக்குப் பிறப்பளாம் வேளான் வமிசம்
பாதியாய் வடிவு கொண்ட பார்வதி கேட்டி டாயே.

32. இவள் பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள். இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றேன், தேவர்கள் வசிக்கின்ற திருவண்ணுமலேயில் அறிவில் சிறந்த ஒரு வேளாளனுக்குப் பிறப்பாள். சிவபெருமானுடைய தேகத்தில் பாதிபாகத்தையுடைய பார்வதியம்மையே! கேட்பீராக.

33. எண்ணஞ்சு நாலா மாண்டி லியம்புவோம் தந்தை கண்டம்
திண்ணமா யிவன்பின் ஜன்மம் திருகச்சூர் தன்னிலேதான்
வண்ணமாய்ச் சைவச் சேயாய் வருகுவா னென்று சொல்வோம்
அண்ணலேப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

33. ஜாதகருக்குப் நாற்பத்துநான்காவது வயதில் இவருடைய தகப்பனுர் இறந்துவிடுவார். தகப்பனுர் தன்னுடைய மறு ஜன்மத்தில் திருக்கச்சூரில் அழகான வடிவமுள்ள ஒரு சைவராக வந்து பிறப்பார் என்று சொல்லுகிறேம். சிவபெருமானேப் பூஜை செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—தகப்பனுருடைய மரணகால விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ நாற்பத்து மூன்று முதல் ஷூ நாற்பத்திநான்கு முடிகிற வரையிலும் அங்காரக தசையில் ராகு-குரு-புக்திகள் நடக்கின்றன. பிதுர்ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய மீனம் ஆகும். இதற்கு இரண்டிற்கும் ஒன்பதிற்கும் உடையவரான அங்காரகன் பிதுர்லக்கினத்திற்கு எட்டில் இருக்கின்ருர். மீனலக்கினத்திற்கு அங்காரகன் கொல்லமாட்டார் என்று பராசரஹோரை ஜாதக சந்திரிகை 66-ஆவது, 67-ஆவது சுலோகங்களில் சொல்லியிருந்தும் இங்கு அங்காரகன் தன் தசையில் பிதாவைமாரகஞ் செய்து விடுவார் என்று சொல்லி இருக்கின்றதைக் கவனிக்கவும். பொதுவாய் ஜாதகருக்கு மூன்றிற்குடையவரும் பத்திற்குடையவரும் பிதுர்கர்மாதிபதிகள் என்று சொல்லுவது வழக்கமுண்டு. ஏனென்ருல் பிதுர் ஸ்தானமாகிய ஒன்பதிற்கு மாரகாதிபதிகளாகிய இரண்டிற்கும் ஏழிற்கும் உடையவர் பத்திற்கும் மூன்றிற்கும் உடையவராவர். இங்கு அங்காரகன் பத்திற்குடையவராக நேரிடுகின்ருர். இந்தக் காரணத்தைக்கொண்டு அங்காரகன் பிதுர்மாரகன் என்று சொல்லி இருக்கிறதைப்போலத் தோற்றுகிறது. மீனலக்கினத்திற்கு புதன் மாரகாதிபதி என்று மேற்கண்ட சுலோகங்களில் கன்டிருக்கின்றது. இராகு புதன் வீட்டில் இருக்கின்ருர். புதனுடனும் பிதுர்காரனுகிய சூரியனுடனும் சம்பந்தப்பட்டு மீனத்திற்கு ஏழாவது மாரகஸ்தானத்தில் இருக்கின்ருர். ஜாதகச் சந்திரிகை 23-ஆவது, 12-ஆவது சுலோகப் பிரகாரம் பிதாவுக்கு மாரகத்தைச் செய்யக் குருவைவிட அதிக அதிகாரம் உடையவராக இராகு இருக்கின்ருர்.

34. அதற்குமே லாறு ஆண்டில் அன்னேக்குக் கண்ட மெய்தும்
இதநிறக உதித்தோ னுக்கு இயம்புவோ மறுபா னெட்டில்
சதிதரும் தேளின் மாதம் காலன்தன் பக்கல் சேர்வ
னதிபன்பின்ஜன்மம் தன்னே வரைகிறேம் தாயே கேளும்.

34. ஜாதகனுக்கு நாற்பத்துனன்கு வயதிற்குமேல் ஆருவது வருஷமாகிய ஐம்பதாவது வயதில் தன்னுடைய தாயாருக்கு மரணமுண்டாகும். ஜாதகருக்கு மரணகாலத்தைச் சொல்லுகிறேம். இவர் தனக்கு அறுபத்தெட்டாவது வயதில் கெடுதியையுண்டாக்குகின்ற கார்த்திகை மாதத்தில் ஜாதகர் இறந்து எமனிடம் போய்ச் சேருவார். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—(1) தாய் மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ 49 முதல் ஷூ 50 முடியும் வரையிலும் இராகு தசையில் ராகுபுக்தி நடக்கின்றது. தாயாருடைய லக்கினமாகிய துலாத்திற்குப் பராசாஹோரை ஜாதகசந்திரிகை 56-ஆவது சுலோகப் பிரகாரம் சூரியன் மாரகராகின்ருர். துலாத்திற்குப் பன்னிரண்டில் சூரியனுடன் இருக்கின்ற ராகு ஜாதக சந்திரிகை 23-ஆவது 12-ஆவது சுலோகப் பிரகாரம் மாதாவை மாரகஞ்சும் அதிகாரத்தைச் சூரியனிடமிருந்து வாங்கிக் கொள்ளுகிருர்.

(2) ஜாதகர் மாரக விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ 67 முதல் 68 முடியும் வரையிலும் குருதசையில் குருபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குச் சுக்கிரன் மாரகர். இவருடன் சம்பந்தப்பட்ட குரு ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் மாரகராகிருர். மணிகண்டகேரளம் அரிஷ்டகாண்டம் 18-ஆவது பாடல், பிரதிஅரிஷ்டகாண்டம் 40-ஆவது பாடல், தூய கேரளம் எட்டாம் பாவம் 4, 5-ஆவது பாடல் பிரகாரமும் அட்டமன் 12-இல் இருந்தால் வயது தீர்க்கம என்ற விதிபிரகாரமும் இந்த ஜாதகம் பூர்ணயுள் ஜாதகமாகும். அதனுல் சுக்கிரதசையில் மாரகம் நேரிடாமல் குருதசையில் மாரகம் நேரிட அமைப்பு இருக்கிறது.

35 உத்தரம் தணிகை தன்னில் உதிப்பனும் க்ஷத்திரிய சேயாய்
மெத்தனக் குடும்பி யாகி வித்தகன் வாழ்வா னுகும்
புத்திரன் ஜனனகாலம் புரவிநாள் முதல்பா தத்தில்
சுத்தமாய்க் கேதா ருண்டுற் செப்பினேம் பூர்வ பாகம்.

35. ஜாதகர் வடக்குத் திக்கில் திருத்தணிகை க்ஷேத்திரத்தில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து மேன்மையான குடும்பமுடையவராகி வாழ்வார். ஜாதகர் பிறக்குங்காலத்தில் அசுவினி நட்சத்திரத்தில் ஒராவது பாதமாகும். இதற்குரிய கேதுமகா தசையில் இருப்பு ஆறு வருஷமாகும். இதுவரையிலும் பூர்வபாகமாகிய முதல் பாகத்தைச் சொன்னோம்.

36. முன்மனை தனக்குச் சாந்தி மொழிந்திட்டீர் ஒருவர்க் கன்னம்
புத்திர னுண்டாமோ காணுதோ தேவியும் சொல்வாய்
சொன்னதோர் சாந்தி செய்யில் சுதர்தோன்றும் சந்தே கம்தான்
பின்பாகம் விவரம் சொல்வேன் பேதையே கேட்டி டாயே.

36. முதல் மனைவிக்குச் சாந்திகள் நீங்கள் சொன்னீர்கள். ஒருவருக்கு அன்னதானம் செய்துவந்தால் புத்திரன் பிறப்பானே அல்லது கிடையாதோ என்ற விஷயத்தைச் சொல்லுவீர் என்று பார்வதி கேட்கும்போது, முனிவர் சொல்லுகிறார். நாங்கள் சொல்லிய சாந்திகளைச் செய்தால் குழந்தைகள் பிறக்கும். செய்யாவிட்டால் குழந்தைகள் பிறப்பது சந்தேகமானதாகும். இதனுடைய விவரத்தைப் பின் பாகத்தில் சொல்லுகிறேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—24-ஆவது பாடலைப் பார்க்கவும்.

ஜாதகம் 66

1. கடகலக் கினம தாகக் கனகனும் [1] ஜன்மம் தங்க
முடவனும் [2] நவத்தி லாக மெய்ஞ்ஞானி [3] ஆறி லாகச்
சுடரவன் [4] புதனு மெட்டில் சேய்புகர் [5][6] தசம மாக
உடுபதி [7] ராகு வீராறு உரைப்பீர்கள் பலனை என்று ;

சனி	அங்காரன் சுக்கிரன்		சந்திரன் ராகு
சூரியன் புதன்	இராசி சக்ரம்		லக்கினம் குரு
கேது			

1. லக்கினம் கடகமாகி, ஜன்ம லக்கினத்தில் குருவும், ஒன்பதில் சனியும், ஆறில் கேதுவும், எட்டில் சூரியனும் புதனும், பத்தில் அங்காரகனும் சுக்கிரனும், பன்னிரண்டில் சந்திரனும் ராகுவும் இருந்தால், பலாபலன்களைச் சொல்லுவீரென்று ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சுக்கிரனும், மிதுனத்தில் சூரியனும், சிம்மத்தில் சனியும், கன்னியில் அங்காரகனும் கேதுவும், துலாத்தில் சந்திரனும், விருச்சிகத்தில் குருவும், தனுசில் புதனும், மீனத்தில் ராகுவும் ஆகும்.

மிருக சீரஷம் 3-ம் பாதம் அங்-தசை ஷூ 2-8-0.

2. சங்கரி கேட்கும் போது ஜயமுனி கூறுகின்றார்
இங்கிவை [1] ஆண்பால் ஜன்மம் இல்லமும் கீழ்ப் பால் நோக்கம்
ஐங்கர னீச னுத்தரம் ஆளிவா கனத்தோன் மீனம்
சங்குச்சக் கரனும் தென்மேல் தனல்காளி அதன்மேல் தங்கும்.

2. பார்வதியம்மை கேட்கும் போது ஜயமுனிவர் சொல்லுகிறார். இந்தக் குழந்தை ஆண் குழந்தையாக ஜனனமாகும். பிறந்த வீடு கிழக்குத் திக்கு பார்த்ததாக விருக்கும். வடக்குத் திக்கில் விநாயகர்

---

[1] குரு [2] சனி [3] கேது [4] சூரியன் [5] அங்காரகன் [6] சுக்கிரன் [7] சந்திரன்

கோயிலும் வடகிழக்குத் திக்கில் சிவன் கோயிலும் தென் மேற்குத் திக்கில் மகாவிஷ்ணுவின் கோயிலும் இதற்கு மேற்கில் காளியம்மன் கோயிலும் இருக்கும்.

3. இத்தகை அடையா ளத்து லிலகிய கூரை யில்லம்
வித்தக னிரண்டாம் ஜன்மம் விளங்குவான் கங்கை சேயாய்ப்
பெத்ததாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இப்படிப்பட்ட அடையாளங்கள் உள்ளவிடத்தில் ஒரு கூரை வீட்டில் ஜாதகர் இரண்டாவது பிள்ளையாக வேளாளர் குலத்தில் வந்து பிறப்பார். இவருடைய தாய் தகப்பன் இவர்களுடைய யோகங்களையும், மக்கள் இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம் மறு ஜன்மம் ஆகிய இவைகளெல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம்.

4. தந்தையின் துணைஆண் மூன்று சத்திமா ரவ்வா றுரும்
அந்தஆண் வேறுய்ச் செல்வர் அவர்பலன் பின்பால் சொல்வேன்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மீகை யாளன்
கந்தன்தன் நாமம் கொண்டோன் கார்நிறம் சமதே கத்தன்.

4. தகப்பனுருடன் பிறந்தவர்கள் ஆண் மூன்றும் பெண் மூன்றும் ஆகும். இந்த ஆண் சகோதரர்கள் இவரை விட்டுப் பிரிந்து வேருக விருந்து வாழ்வார்கள். இவர்களுடைய பலாபலன்களைப் பின்னுல் சொல்லுகிறேன். ஜாதகருடைய தகப்பனின் விஷயங்களைச் சொல்லுகிறோம். தகப்பனுர் தயாளகுணமுடையவர். கொடையாளியாக விருப்பார். முருகருடைய பெயரையுடையவர். கறுப்பு நிறமுள்ளவர். நடுத்தரமானத் தேகத்தை யுடையவர்.

5. பயிர்த் தொழில் புரிவா னுகும் பாரு களற்ப மென்றேம்
நயம்படக் கூறு வானும் நாற்காலி பலித மில்லான்
அயலார்பொன் னிச்சை யில்லான் யாவர்க்கும் நல்லோ னுவன்
தயையுள மனத்த னுகும் தனமது பெருக்க முள்ளான்.

5. ஜாதகருடைய தகப்பனுர் விவசாயத் தொழிலைச் செய்வார். பூமிகள் கொஞ்சமாக விருக்கும் என்று சொல்லுகிறோம். இனிமையாகப் பேசுவார். இவருக்குக் கால் நடைகள் விருத்திகிடையாது. இவர் பிறருடைய சொத்தில் ஆசையில்லாதவர். எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். தயாளகுணமுள்ள மனத்தையுடையவர். பணமும் சம்பத்தும் அதிகமாகுந் தன்மையுடையவர்.

6. உரோமங்க ளதிக முள்ளான் நுவலுப தேசம் கொள்வான்
காமனை விருப்பம் கொள்வன் கட்டுரை புகலா னுகும்
தீமையாங் குணமில் லாதான் ஜனசகா யங்கள் செய்வன்
தாமத குணமும் கொஞ்சம் சந்தேக மனத்தா னுகும்.

6. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய தேகத்தில் மயிர் அதிகமாக வுடையவர். சொல்லுதற்குரிய, அ∴தாவது மதிப்பிடத்தக்க உபதேசங்களைப் பெறுவார். மன்மதன் மேல் அதிக ஆசையுள்ளவர். அ∴தாவது இவர் அதிக காமமுடையவராக விருப்பார். கட்டு வார்த்தைகளைப், பொய் வார்த்தைகளைச் சொல்லமாட்டார். கெட்ட குணமில்லாதவர். ஜனங்களுக்கு உதவி செய்வார். நிதானமான சாந்தமான குணமும் கொஞ்சம் இருக்கும். சந்தேகமான மனத்தை உடையவர்.

7. பித்ததே கத்தா னுகும் பேச்சதைக் காப்பா னுகும்
சுத்தவான் அடக்க வார்த்தை க்ஷேத்திரம் பொன்னுல் செய்வன்
நத்திஞேர்க் குதவி செய்வன் நாயகி வர்க்கம் நாஸ்தி
சுத்தம்போல் வெளிம யக்கன் செப்புவோ மிவன்முன்ஜன்மம்.

7. ஜாதகருடைய தகப்பனுர் பித்தமான தேகத்தையுடையவர். தான் சொல்லிய வார்த்தைகளைக் காப்பாற்றுவார். சுத்தமாக விருப்பார். சாந்தமான வார்த்தைகளை உபயோகிப்பார். பணம் சம்பாதித்து வீட்டைக் கட்டுவார். தன்னிடம் வந்து எதையாகிலும் விரும்பினர்களுக்கு உபகாரஞ் செய்வார். இவருடைய மனைவியின் பந்துக்கள் நாசமடைவார்கள். தான் பரிசுத்தமாய் இருப்பதைப் போலக் காட்டிப் பிறரை மயங்கும்படியாய்ச் செய்வார். இவருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம்.

8. பிருதிவி தலத்துக் கீழ் பால் பேரூரில் செங்குந்த சேயாய்
உறைந்துமே நெசவு செய்து ஓராறு முகத்தோன் பத்தி
அரனடி தொண்டு பூண்டு அடைந்தோரை ஆத ரித்து
மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டு ;

8. காஞ்சிபுரத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு பெரிய ஊரில் செங்குந்தர் என்று சொல்லப்பட்டக் கைக்கோள ஜாதியில் பிறந்து நெசவுத் தொழிலைச் செய்து ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளின் மேல் பக்தியுடையவராய் சிவபெருமானுடைய பாதங்களையும் தொண்டர்களையும் பூஜை செய்து தன்னிடம் வந்தவர்களைக் காப்பாற்றிப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குச் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு.

9. வந்தவ னென்று சொல்வோம் வரைந்தஇக் குணத்தா னுக்கு
இந்தவ னுதிப்பா னுகு மியம்புவோ மிவன்கு ணத்தை
முந்தின கோப மேற்பன் மொழியதைக் காப்பா னுகும்
சிந்தையும் நல்ல தாகும் ஜனசகா யங்கள் செய்வன்.

9. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறோம். இப்படிப்பட்டக் குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகிறோம். இவர் முன்கோப முடையவர். தன்னுடைய வார்த்தைகளைக் காப்பாற்றுவார். நல்ல மனத்தை யுடையவர். ஜனங்களுக்கு உதவிசெய்வார்.

10. அஞ்சின வார்த்தை கூறுன் அடாவடி கொஞ்ச முண்டு
வஞ்சியர் மோக னுவன் மாடுகள் பணையோ் விருத்தி
பஞ்சுபோல் ரோம முள்ளான் பதர்குண மில்லா னுகும்
கஞ்சமாம் ரேகை யுள்ளான் கந்தன்மேல் பத்தி பூண்பன்.

10. ஜாதகர் பயத்தை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்ல மாட்டார். முரட்டுத்தனமாகவும் அவசரமாகவும் கொஞ்சம் நடந்து கொள்ளுவார். பெண்களின் மேல் காம ஆசையுடையவர். இவருக்கு மாடு களும் பயிர் செய்யும் உழவு மாடுகளும் ஏர்களும் நிலங்களும் விருத்தி யாகும். மிருதுவான மயிரை உடையவர். அவசரமான குணமில்லாதவர். தன்னுடைய கையில் தாமரை ரேகையை உடையவர். முருகர் மேல் பக்தி உடையவர்.

11. கல்வியு முடைய னுகும் காலிகள் விருத்தி யுண்டு
நல்லவன் நல்ல வர்க்கு நடையது துருசு முண்டு
சல்லியம் பூர்வ மேற்பன் சடிதியில் நிவிர்த்தி செய்வன்
எல்லையில் வேறூர் சேர்ப்பனேகுவான் தலவா சங்கள்.

11. ஜாதகர் வித்தையுடையவராவர். இவருக்குக் கால்நடைகள் விருத்தி யாகும். இவர் நல்லவராக நடந்து கொள்ளுவார். வேகமாக நடக்கக் கூடியவரல்ல. இவர் முதலில் கடன் வாங்குவார். அதைச் சீக்கிரத்தில் கொடுத்துவிடுவார். இதர கிராமங்களில் பூமியைச் சேர்ப்பார். தீர்த்த யாத்திரைகளைச் செய்வார். தெய்வஸ்தலங்களுக்குப் போவார்.

12. உண்டியில் வறுமை காணுன் உறுதியா மனத்தா னுகும்
பண்டுநாள் பூமி கொஞ்சம் பாலகன் விருத்தி செய்வன்
அண்டர்கள் பூசை பூண்பன் ஆள்கார ருடைய னுவன்
வண்டிவா கனமு மேற்பன் மாற்றுனை உறவு கொள்வன்.

12. ஜாதகர் தன்னுடைய போஜன விஷயத்தில் கஷ்டம் அனுப விக்காதவர். தைரியமான, நிலையான மனதைத்யுடையவர். பழைய காலத் திய பூமிகளைக் கொஞ்சம் விருத்தி செய்வார். தேவர்களைப் பூஜை செய்வார். வேலையாட்களை உடையவர். வண்டியும் வாகனமும் உடையவர். பகைவரைச் சிநேகஞ் செய்து கொள்ளுவார்.

13. தன்துணை முன்பெண் ஒன்று சாற்றுவோம் பால னுக்குக்
கன்னியின் சேதி சொல்வேன் கசடற மொழிவா ளாகும்
பின்ன மில்லாத தேகி பொய்யது புகலா ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் ஆளன்தன் மனத்துக் கேத்தோள்.

13. ஜாதகருக்கு மூத்த சகோதரி ஒருத்தி உண்டு என்று சொல்லு கிருேம். இவளுடைய குணுதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் குற்றமில் லாமல் சுத்தமாகப் பேசுவாள். யாதொரு பங்கமும் குறைவுமில்லாத தேகத்தை யுடையவள். இவள் பொய் சொல்லமாட்டாள். பிறர் இவளை மதிக்கும்படியாக வாழ்வாள். தன்னுடைய புருஷனுடைய் மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவாள்.

14. சொல்லது சுகமே யாகும் சுத்தமு முடையா ளாகும்
வல்லியும் வறுமை காணுள் வரனுமே தென்பால் நேரும்
தல்லிபோல் ஆத ரிப்பாள் சாதமு மன்பா யீவள்
அல்லலில் லாமல் வாழ்வள் அம்பிகை யாளே கேளாய்.

14. இவள் சுருக்கமாகப் பேசுவாள். சுத்தமாக விருப்பாள். தரித் திரமும் கஷ்டமும் அடையாதவள். இவளுக்குப் புருஷன் தெற்குத் திக்கி லிருந்து வருவார். இவள் தாயாரைப் போலக் காப்பாற்றுவாள். இஷ்டத் துடன் சாப்பாடு போடுவாள். கஷ்டங்களில்லாமல் வாழ்வாள். பார்வதி யம்மையே! கேட்பீராக.

15. மங்கைக்குச் சுதர்கள் தோஷம் மாமுனி சாபத் தாலே
தங்கிடு மென்று சொல்வோம் ஷண்முக னருளி னுலே
அங்கது வினைகள் நீங்கி அனுகிடும் சுதர்கள் தாமும்
சிங்கம்போல் ஆண்பா லொன்று செல்விமா ரிருவர் தீர்க்கம்.

15. இவளுக்குச் சந்ததிகள் தோஷத்தை அடையும். பெரிய முனி யாகிய முனீசுவரனுல் இவளுக்குப் புத்திர தோஷமுண்டாகும் என்று சொல்லுகிருேம். ஆனுல் இந்தத் தோஷம் முருகக்கடவுளின் கிருபையால் நிவிர்த்தியாகி இவளுக்குக் குழந்தைகள் உண்டாகும். சிம்மத்தைப்போல வீரியத்தையுடைய ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள்.

16. மாதுக்குச் சிலது துன்பம் மருவிடும் பின்பால் சொல்வேன்
காதலன் பின்பெண் ரண்டு காளையு மொருவன் தீர்க்கம்
ஓதுவேனவர்கள் சேதி உத்தர பாகம் தன்னில்
போதக வானை பெற்ற புண்ணி சாலி கேளாய்.

16. இவளுக்குச் சில கெடுதிகள் உண்டாகும். இவைகளைப் பின் னுல் சொல்லுகிறேன். ஜாதகருக்கு இளைய சகோதரிகள் இருவரும் இளைய சகோதரன் ஒருவனும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இவர் களுடைய விஷயங்களைப் பின் பாகத்தல் சொல்லுகிறேன். இளம் யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் புண்ணிய மாதாவாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

17. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அரிபோலே கோப மேற்பள்
மன்னவன் மனதுக் கேத்தோள் மாநிறம் பித்தச் சூடு
கன்னென மொழியு முண்டு கலவர புத்தி யேற்பள்
சொன்னசொல் சுகமே யெய்தும் சோர்வோர்க்குத் தாக மீவள்.

17. ஜாதருடைய தாயின் குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் சிங்கத்தைப் போலக் கோபத்தையுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்ளுவாள். மா நிறமுள்ளவள். பித்தச்சூடான தேகத்தையுடையவள். இனிமையான மதுர மான பேச்சையுடையவள். கலக்கமான நிலையில்லாத புத்தியையுடையவள்.

இவள் பேசுகிற வார்த்தைகள் சுகத்தையுண்டாக்கக் கூடியனவாகவிருக்கும். களைத்தவர்களுக்கும் இளைப்புற்றவர்களுக்கும் தாகவிடாய்த் தீர தாகங் கொடுப்பாள்.

18. தன்துணை காணு ளாகும் ஜனிக்கினு மதுதீ தாகும்
என்னகா ரணத்தி னாலே யிவள்துணை தோஷம் சொன்னீர்
சந்திரன் ராகு ஈராறில் தங்கின பலத்தால் சொன்னோம்
அன்னவன் முன்ஜன் மத்தை அறிவிப்போம் தாயே யாங்கள்.

18. ஜாதகருடைய தாயாருக்குக் கூடப் பிறந்தவர்கள் கிடையாது. ஒரு சமயம் பிறந்திருந்தாலும் அவர்கள் இறந்துவிடுவார்கள். அல்லது துன் பத்தை அடைவார்கள். எந்தக் காரணத்தினுல் இவளுடைய சகோதரர்களுக் குத் தோஷத்தைச் சொன்னீர்? சந்திரனும் இராகுவும் பன்னிரண்டாவது வீட்டில் பலமாயிருப்பதால் இவ்விதமாகச் சொன்னேம்*. எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! இவளுடைய முன் ஜன்மத்தை நாங்கள் சொல்கிறோம்.

* குறிப்பு.—மாதுர் லக்கினம் துலாம். இதற்கு இளைய சகோதர ஸ்தான மாகிய மூன்றுவது பாவத்தில் கேது இருக்கின்றார். ராகு இந்த பாவத்தைப் பார்க்கின்றார். மூன்றிற்குடைய குரு மூன்றிற்கு எட்டாவது பாவத்திலும் அம் சையில் மூன்றிற்குப் பன்னிரண்டில் வக்கிரமாகவும் இருக்கின்றார். இந்தக் குருவை அங்காரகன் தனுசிற்கு விரயாதிபதியாகிப் பார்க்கின்றார். மூத்த சகோதர பாவமாகிய பதினொன்றிற்குடைய சுக்கிரன் இந்தப் பாவலக்கினத் திற்குப் பன்னிரண்டில் அங்காரகனுடன் இருக்கின்றார். பதினோராவது பாவத் தைச் சனி மூன்றுவது பார்வையுடன் பார்க்கின்றார். மூத்த ஆண் சகோதர காரகனுகிய குரு மூத்த சகோதர ஸ்தானத்திற்கு மூன்றில் இருக்கின்றார். இவரை மூத்த சகோதர ஸ்தானத்திற்கு விரயாதிபதியாகிய அங்காரகன் பார்க்கின்றார். ஆகையால், மாதாவின் இளைய, மூத்த சகோதரர்களுக்கு அதிக தோஷங்கள் இருக்கின்றன.

19. தவளையின் மலைக்கு மேல்பால் சார்ந்ததோர் சிறுவூர் தன்னில்
இவளுமே செக்கான் வமிச மெய்தியே மதலை யுண்டாய்
நவனியில் வறுமை யின்றி நாயகி வாழுந் நாளில்
தவசியே வந்த ஊழைச் சாற்றுவோம் தாயே கேளும்.

19. திருவண்ணுமலைக்கு மேற்கில் அதற்கு அடுத்த ஒரு சிறிய கிராமத் தில் ஜாதகருடைய தாயார் செக்காட்டியின் குலத்தில் வந்து பிறந்து குழந்தைகளை உடையவளாகித் தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் வாழு கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகிறோம். தபசு செய்கின்ற எங்கள் தயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

20. இறப்பினில் கூடு கட்டி யிருக்கிற பட்சி தன்னைக்
குறிப்பாக அதைப் பிடித்துக் கூடுவைக் கலைத்தா ளென்றோம்
சிறகுக ளில்லாக் குஞ்சு சென்றது காலன் னடு
மருவிற்று அந்தத் தோஷம் வரைகிறோம் வேறு ஒன்று.

20. ஜாதகருடைய தாயார் வீட்டின் கூறையை அடுத்துள்ள இற வானத்தில் கூண்டு கட்டியிருந்த ஒரு பக்ஷியை வேண்டுமென்றே ஒரு நோக்கத்துடன் பிடித்து அந்தக் கூண்டைக் கலைத்து விட்டாள் என்று சொல்லுகிறோம். அதனுல் இறகுகள் இல்லாமல் இருந்த குஞ்சுகள் இறந்து விட்டன. ஆகையால் இந்தத் தோஷம் இவளை வந்து அனு கிற்று. இதுவுமன்றி இன்னெரு தோஷத்தைச் சொல்லுகிறோம்.

21. மைத்துனன் மனைவி தன்னை வஞ்சனை வார்த்தை சொல்லிச்
சித்தமே கலங்க வைத்தாள் சேடியும் மனது வாடிக்
குத்தங்கள் என்மேல் சொன்ன கோதைக்கு மறு ஜன்மத்தில்
சுத்தமாய்த் துணையு மின்றி தொல்புவி தன்னில் வாழ்வாள்.

21. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மைத்துனனுடைய பெண்சாதி யின் மேல் கபடமாக ஒரு பொய்யான வார்த்தையைச் சொல்லி அவளுடைய மனத்தைக் கலங்கும்படியாகச் செய்தாள். அவள் தன்னுடைய மனது நொந்து என் பேரில் பழிகளைச் சாட்டிய ஸ்திரீ அவளுடைய மறு ஜன்மத்தில் கொஞ்சங்கூடச் சகோதரர்கள் இல்லாமல் இந்தப் பழமையான பூமியில் வாழக் கடவது என்று சொன்னுள்.

22. இன்னமும் பலவாறு சொன்னு ளெய்திற்று அந்தச் சாபம்
கன்னிகை அந்தி யத்தில் கனமிலாக் குடும்பி யாகித்
தென்திசைக் காலன் னடு சிரநான்கோன் வரையப் பட்டு
இந்நிலம் தனினு தித்தா ளெய்திடும் பூர்வ தோஷம்.

22. அவள் இன்னமும் அநேக விதமாகச் சாபங் கொடுத்தாள். அந்தச் சாபம் ஜாதகருடைய தாயாரை வந்து அடைந்தது. இவள் முன் ஜன் மத்தில் தன்னுடைய கடைசி காலத்தில் பெரிய குடும்பியாகவில்லாம லிருந்து இறந்து தெற்குத் திக்கிலுள்ள எமபட்டணத்திற்குச் சென்று நான்கு சிரசுகளையுடைய பிரம தேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத் தில் இந்தப் பூமியில் வந்து பிறந்தாள். இவளைப் பூர்வ சாபங்கள் வந்து அடையும்.

23. துணைகளு மில்லா ளாகும் செப்புவோ மிவள்பின் ஜன்மம்
வினைதீர்க்கும் மறைகட் கீசன் மேவிய நகரம் தன்னில்
சினமிலாக் குலத்தில் வந்து ஜனித்துமே வறுமை யின்றி
வனிதையும் வாழ்வா ளாகும் மங்கையே கேட்டி டாயே.

23. ஜாதகருடைய தாயாருக்குச் சகோதரர்கள் கிடையாது. இவளு டைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறோம். வினைகளை ஒழிக்கின்ற வேதங் களுக்கு அதிபதியான பரம சிவன் எழுந்தருளிய சிதம்பரம் என்னும் பட்டணத்தில் கோபமில்லாத ஒரு குலத்தில் இவள் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் வாழ்வாள் என்று சொல்லுகிறோம். பார்வதி யம்மையே ! கேட்பீராக.

24. ஆறஞ்சு ஆண்டு தன்னில அன்னைக்குக் கண்ட மெய்தும்
கூறெணு மார கங்கள் குறிக்கிரேம் முப்பா னேழில்
தீரமா யுடலம் ஏகும் செப்பின மொழி குன்ருது
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

24. ஜாதகருக்கு முப்பதாவது வயதில் * இவருடைய தாயாருக்குக் கண்டம் வந்து சம்பவிக்கும். ஆனல் அவளுக்கு மரணம் நேரிடாது. அவள் ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் * இறந்து அவளுடைய தேகம் மறைந்து போய்விடும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவருமல் நடக்கும். பூமியில் தவங்கள் செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—மாதுர் விஷயம்:—மாதுர் லக்கினம் துலாம். இந்தத் துலா லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை 56-ஆவது சுலோகம் பிரகாரம் குருவும் சூரியனும் மாரகராகின்ருர்கள். ஜாதகருக்கு வயது ஷூ 29-0-0 முதல் ஷூ 30-0-0 முடியும் வரையிலும் குரு தசையில் சுக்கிரபுத்தி நடக்கின்றது. குரு மேற் சொல்லியபடி மாரகராகின்ருர். சுக்கிரன் மாரகஸ்தானமாகிய எட்டாமிடத்திற்கு உடையவராகி மாரகஸ்தானங்களாகிய இரண்டு ஏழு இவைகளுக் குடையவராகிய அங்காரகனுடன் கூடியிருக்கின்ருர். மாதுர்லக்கினத்தையும் அங்காரகன் பார்க்கின்ருர். ஆகையால் குருதசையில் சுக்கிர புத்தியில் மாதாவுக்குக் கண்ட அமைப்பு இருக்கிறது. சுக்கிரன் லக்னுதிபதியாகி லக்கினத்தைப் பார்ப்பதால் மாரகஞ் செய்வதற்கு அமைப்பு இல்லை. ஜாதகருக்கு வயது ஷூ 36-0-0 முதல் ஷூ 37-0-9 முடியும் வரையிலும் குருதசையில் ராகுபுத்தியும் சனிதசையில் சனிபுத்தியும் நடக்கின்றது. ராகு புதன் வீட்டில் சந்திரனுடன் இருக்கின்ருர். புதன் மாரகராகிய சூரியனுடன் கூடியிருக்கின்ருர். ஆகையால் ராகு ஜாதகசந்திரிகை 12, 23-ஆம் சுலோகங்கள் பிரகாரம் மாரகராகின்ருர். குரு தசையில் ராகு புத்தியில் மாதாவுக்கு மாரக அமைப்பு இருக்கிறது. சனிதசையில் மாரக அமைப்பு இல்லை.

25. முப்பது மூன்று ஆண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
செப்புவோ மிவன்பின் ஜன்மம் திருக்கழுக் குன்றம் தென்பால்
ஒப்புடன் பாலை ஓரம் உதிப்பனும் வைசியச் சேயாய்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழி குன்ருது.

25. ஜாதகருக்கு முப்பத்துமூன்ருவது வயதில் அவருடைய தகப்பனுர் இறந்து விடுவார். தகப்பனருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிரேம். இவர் திருக்கழுக்குன்றத்திற்குத் தெற்கில் சமுத்திரக் கரை ஓரத்தில் வைசியராய்ப் பிறப்பார். பாம்பைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்கின்ற சிவ பெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

* குறிப்பு.—தகப்பன் மாரகம்.—தகப்பனருடைய ஸ்தானமாகிய ஒன்பதாவது பாவமாகிய மீனம் பிதுர்லக்கினமாகும். இந்த லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகை பிரகாரம் சனி புதன் சூரியன் இவர்கள் மாரகராகின்ருர்கள். சனி பிதுர்லக்கினத்திலிருக்கின்ருர். குரு இவரைப் பார்க்கின்ருர். ஒரு பாவத்திற்கு அந்த பாவ அதிபதி அந்தப் பாவகாரர் இவர்களுடைய தசை புத்தி நடக்கின்ற காலத்தில் அந்தப் பாவத்திற்குரிய மனுஷ ஜன்மத்திற்கு மாரகம் நேரிடும் என்றும் சில நாடி சாஸ்திரங்களில் சொல்லியிருக்கின்றது. இவ்விதக் காரணங்களாலே குரு பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக ஆகின்ருர். ஜாதகருக்கு வயது ஷூ 32 முதல் ஷூ 33 வரையிலும் குருதசையில் சூரிய சந்திர புக்திகள் நடக்கின்றன. ஏற்கனவே மீனலக்கினத்திற்குச் சூரியன் கூட மாரகர் என்று முந்தி சொல்லியிருக்கின்ரேம். ஆகையால் குருதசையில் சூரிய புக்தி கடைசியில் பிதாவுக்கு மாரக அமைப்பு இருக்கின்றது.

26. மன்னவன் மணத்தின் காலம் வரைகிரே மிருபான் ரண்டில்
கன்னிகை மேல்பால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தை
அன்னியர் மதிக்க வாழ்வள் அற்புத வார்த்தை சொல்வள்
பொன்பணி சேர்ப்பா ளாகும் பொய்யது புகலா ளாகும்.

26. ஜாதகருடைய விவாகம் நடக்குங் காலத்தைச் சொல்லுகிரேம். இவருக்கு இருபத்திரண்டாவது வயதில் * மனைவி மேற்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணுதிசயங்களைச் சொல்லுகிரேம். பிறர் இவளை மதிக்கும்படியாக இவள் வாழ்வாள். ஆச்சரியமான வார்த்தைகளைச் சொல்லுவாள். தனத்தையும் ஆபரணங்களையும் சேர்த்து வைப்பாள். பொய் சொல்லமாட்டாள்.

* குறிப்பு.—மனைவி விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ 21-0-0 முதல் ஷூ 22-0-0 முடியும் வரையிலும் குருதசையில் குருபுத்தி நடக்கின்றது. இந்தக் குரு ஒன்பதிற்குடையவராய் ஏழாவது பாவமாகிய களத்திர பாவத்தையும் களத்திர ஸ்தானுதிபதியாகிய சனியையும் பார்க்கின்ருர். ஆகையால் குருதசையில் குரு புத்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கின்றது.

27. சீலமு டையா ளாகும் சிறுத்தோர்க்கு அன்ன மீவள்
காலத்தை அறிந்து ரைப்பள் கட்செவி போலே கோபம்
பாலிகை வயது தீர்க்கம் பகரமாம் குடும்பி யாவள்
மால்மனை யொப்ப தாகும் வருவோரை ஆத ரிப்பாள்.

27. ஜாதகருடைய மனைவி நல்ல ஒழுக்கங்களையுடையவள். ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவாள். காலத்திற்குத் தகுந்தாற் போலப் பேசுவாள். இவளுக்கு நல்ல பாம்பிற்கு வருவதைப் போலக் கோபம் வரும். இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு. அலங்காரமான குடும்பத்தையுடையவள். மகா விஷ்ணுவின் மனைவியாகிய இலக்ஷிமிக்குச் சமான மானவள். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள்.

28. சுதர்களு மாண்பா லைந்து தோகையு மொருத்தி தீர்க்கம்
இதுநிற்க உதித்தோன் பூர்வ மியம்புவோம் பெண்ணை யோரம்
சதியிலாப் பேரூர் தன்னில் ஜனித்தனன் வன்னிய சேயாய்
நிதிமிக உடைய ஞகி நிமிலியு மதலே யுண்டாய் ;

28. ஜாதகருக்கு ஐந்து ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாயிருப்பார்கள். இனி மேல் ஜாதகருடைய பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பெண்ணை நதிக்கரையிலுள்ள அழிவிலாத ஒரு பெரிய ஊரில் வன்னிய குலத்தில் பிறந்து அதிகச் செல்வமுடையவராகியும் மனைவியையும் குழந்தைகளை யும் உடைவராகியும் ;

29. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிக்கு அன்ன மீந்து
முருகர்தம் பக்தி யாயும் மூஷிகன் பூசை செய்து
மறையவர் தொண்டு பூண்டு மறலியின் நாடு சென்று
பிரமனால் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்.

29. தருமஞ் செய்வதில் ஆசையுடையவராகிப் பரதேசிகளுக் குச் சாப்பாடு போட்டும் முருகக் கடவுளின் மேல் பக்தியுடையவராகியும் பெருச்சாளி வாகனத்தையுடைய விநாயகக் கடவுளைப் பூஜை செய்தும் முனிவர்களையும் பிராமணர்களையும் பூஜை செய்து தொழுது பிறகு இறந்து எமபட்டணத்தையடைந்து பிரமதேவனல் எழுதப்பட்டு ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார்.

30. வந்தவன் யோகச் சேதி வரைகிறே மினிமே லாக
ஐந்தாண்டு முதலா மாக அம்புலி போலே யோகம்
சிந்தையும் கலக்கம் நீங்கும் செய்நிலம் பலிதம் விருத்தி
விந்தையா யில்லம் செய்தல் விளம்புவோம் சல்லியம் காணுன்.

30. ஜாதகருடைய யோக விஷயங்களை இனிமேல் சொல்லு கிறோம். இவருக்கு ஐந்து வயது முதற் கொண்டே வளர்பிறைச் சந்திரனைப் போல யோகம் விருத்தியாகும். மனத்திலுள்ள கஷ்டங்கள் நிவிர்த்தி யாகும். பயிரிடுகின்ற பூமிகள் நல்ல பலிதத்தைத் தரும், விருத்தியாகும். இவர் ஆச்சரியமாக ஒரு வீட்டைக் கட்டுவார். கடன்கள் இவருக்குக் கிடையாது.

31. தனமது கையி ருப்புச் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
இனமதிப் புடைய வாழ்வ னெய்திடும் சென்னி பூமி
நினைவது நேரு மென்றேம் நேராது சல்லியப்பாதை
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

31. ஜாதகர் தன்னுடைய கையில் பணத்தைச் சேர்த்து வைத் திருப்பார். இவருக்குக் கால்நடைகள் விருத்தியாகும். பந்துக்கள் இவரை மதிக்கும்படியாக இவர் வாழ்வார். வாழைமரம் வளரும்படியான நஞ் சை பூமிகள் வந்து சேரும். ஞாபகக்குறிப்பு ஏற்படுத்தப்படும். இவருக்கு

கடனல் உண்டாகும் உபத்திரவம் கிடையாது. மேன்மை தங்கிய மத யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதி யம்மையே ! கேட்பீராக.

32. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
ஞாலத்தோன்[1] 'புகரும்'[2] பத்தில் நவத்தோனு முச்ச மாக
மாலவன்[3] தனக்கு அஞ்சில் மதி[4] நிற்க கேது ஆறில்
சாலவே இருப்ப தாலே செப்பினேம் பேரி யோகம்.

32. ஜாதகருக்குச் சொல்லிய யோகங்களுக்குக் காரணங்களைச் சொல்லு வீர். அங்காரகனும் சுக்கிரனும் பத்திலும், ஒன்பதிற் குடையவரான குரு கடகத்தில் உச்சமாகவும், புதனுக்கு ஐந்தில் சந்திரனும், கேது ஆறிலும் இருப்பதால் பேரியோகம் என்ற ஒருவிதயோகம் உண்டென்று சொல்லு கிறோம்.

* குறிப்பு:—பேரியோக விஷயம்—இந்த யோகத்தைப்பற்றிப் பராசரஹோ ரை 22-ஆவது அத்தியாயம் ஜாதகபாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம், ஜாதக சிந்தாமணி 2125 முதல் 2131 வரையிலுள்ள பாடல்கள், ஜாதகாலங் காரம் 342-ஆவது பாடல் ஆகிய இவைகளைப் பார்க்கவும். இங்கு அங்காரக னுக்குக் கேந்திரத்தில் சுக்கிரனும் குருவும் இருந்து சுக்கிரன் வலுத் திருப்பதால் ஜாதகசிந்தாமணி 2125-ஆவது பாடல் 5- ஆவது 6-ஆவது வரிகள் பிரிகாரம் பேரியோக அமைப்பு இருக்கிறது. குரு கேந்திரத்திலிருப்பதால் பராசரஹோரைப் பிரகாரம் கூட பேரியோகமிருக்கிறது. குருவுக்கு எட்டில் சூரியன் இருப்பதால் ஜாதகசிந்தாமணி 2126-ஆவது பாடல் பிரகாரம் பேரி யோக அமைப்பு இருக்கிறது.

33. இந்திர யோக மொன்று இருவகை யோகத் தாலே
செந்திரு விலாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் சிலது சேதி
கந்தனை யீன்ற மாதே கழறினமொழிகுன் றுது.

33. இந்திரயோகம் * என்ற இன்னொரு யோகம் இருக்கிறது. இந்த இரண்டுவித யோகங்களாலே ஜாதகர் இலக்ஷ்மியின் அழகும் பிரகாச மும் தன் வீட்டில் குடியிருப்பும் அடைந்து வாழ்வாராகும். சில விஷ யங்களைப் பின் பாகத்தில், அஃதாவது இரண்டாவது பாகத்தில் சொல்லு கிறோம். முருகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப்போகாமல் நடக்கும்.

* குறிப்பு—இந்திர யோக விஷயம்:—இந்த யோகத்தைப்பற்றி ஜாதகபாரி ஜாதம் 7-ஆவது அத்தியாயம் 68-ஆவது சுலோகம், ஜாதகசிந்தாமணி 1987-ஆவது 1994-ஆவது பாடல்களையும், ஜாதகாலங்காரம் 333-ஆவது, 362-ஆவது பாடல்களையும் பார்க்கவும். இங்குப் பதினொன்றிற்குடையவரான சுக்கிரனும் ஐந்திற்குடையவரான அங்காரகனும் பரிவர்த்தனை அடையாமல் கூடியிருப்பதால் இந்திரயோகம் ஏற்படுகிறது.

[1]. அங்காரகன் [2]. சுக்கிரன் [3]. புதன் [4]. சந்திரன்

34. அன்பத்து மூன்று ஆண்டில் ஆனிமா தத்தி லேதான்
இன்னவ னுடலம் ஏகு மியம்புவோ மின்பின் ஜன்மம்
சன்னமா பூரத்தி லேதான் கலப்பனும் கோகு லத்தில்
பொன்மிக உடையா னுகிப் புகழுடன் வாழ்வா னம்மா.

34. ஜாதகர் தனக்கு ஐம்பத்து மூன்றுவது வயதில்* ஆனி மாதத்தில் இறந்து இவருடைய தேகம் அழிந்துவிடும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறோம். நேர்த்தியான அழகான மாயவரத்தில் யாதவர் வமிசத்தில் வந்து பிறந்து, அதிக தனவானுகவிருந்து கீர்த்தி யுடன் வாழ்வார் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே !

* குறிப்பு:—ஜாதகருக்கு வயது ௵ 52–0–0 முதல் ௵ 53–0–0 வரையில் சனிதசையில் ராகு புத்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசர ஹோரை 14-ஆவது அத்தியாயம், ஜாதக சந்திரிகை 50-ஆவது சுலோகம் பிரகாரம் சனி மாரகராகின்றார். சனிதசை நான்கவாது தசையாக வருகிறது. சனிக்குச் சந்திரலக்னுதிபத்தியம் வரவில்லை. அ:.தாவது சனி வீட்டில் சந்திரனிருக்கவில்லை. ஆகையால் ஜாதகாலங்காரம் 975-ஆவதுபாடல் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரமும் சனி தசை மாரகஞ் செய்ய அமைப்பு உடையதாகவிருக்கின்றது. கடகலக்கினத்திற்குப் புதன்கூட மகராதிபதியாவர், இவர் எட்டில் இருக்கின்றார். இவர் வீடாகிய மிதுனத்தில் ராகு லக்கினுதிபதியாகிய சந்திரனுடன் கூடி பன்னிரண்டில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது 23-ஆவது சுலோகம் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் ராகுவுக்குத் தன்புக்தியில் மாரகஞ் செய்ய அதிகாரம் ஏற்படுகிறது.

35. அத்திரி மறுத்துச் சொல்வார் அவனுக்குச் சகட தோஷம்
குத்தமா யிருப்ப தாலே கூறினீர் வயது தீர்க்கம்
சுத்தமாய் நாலாண் டுக்குள் சேயற்குக் கண்ட மென்றோம்
வித்தகர் பராசர் சொல்வார் வேந்தனும் ஜன்மம் தங்க ;

35. அத்திரி முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்குச் சகட தோஷம் இருக்கின்றதே ! நீர் எவ்விதமாக அவருக்கு வயது தீர்க்கம் என்று சொல்லுகின்றீர்? ஜாதகருக்கு நான்கு வயதிற்குள் கண்டம் வந்து ஜாதகர் இறந்து விடுவார் என்று நான் சொல்லுகிறேன், என்று அத்திரி முனிவர் சொல்ல அறிஞராகிய பராசர முனிவர் சொல்லுகிறார். குரு ஜன்ம லக்கினத்தில் இருப்பதாலே ;

குறிப்பு.—சகட தோஷம்.—சகடயோகத்தைப்பற்றி ஜாதகபாரிஜாதகம் 7-ஆவது அத்தியாயம் 108-ஆவது சுலோகம், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 10-ஆவது சுலோகம், பிருஹஜ்ஜாதகம் 12-ஆவது அத்தியாயம் 3-ஆவது சுலோகம், சாராவளி 21-ஆவது அத்தியாயம் 15-ஆவது சுலோகங்களைப் பார்க்கவும். இங்கு குரு கேந்திரத்தில் இருப்பதால் குருவுக்குப் பன்னிரண்டில் சந்திரனிருக்கும் சகட யோகம் பங்கப்படுகிறது.

[1] குரு

36. என்னநேர்ய் வந்த போது மிரவிமுன் பனிபோல் நீங்கும்
மன்னவன் ஜனன காலம் மான்தலை[1] மூன்றும் பாதம்
துன்சேயின்[2] தசைரண்டாகும் திங்களும் எட்டுமாகும்
இன்னவன் தனக்கு ரோக மெய்திடும் விசேஷ மாக.

36. ஜாதகருக்கு எவ்விதமான நோய்கள் வந்த போதிலும் அவைகள் சூரியனுக்கு எதிரில் பனி பறந்து போய் விடுவது போல நிவிர்த்தியாகிவிடும். ஜாதகர் பிறக்கும்போது மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் மூன்றும் பாதம் ஆகும். அப்போது அங்காரகனுடைய தசை இரண்டு வருஷமும் எட்டு மாதங்களும் இருப்பு ஆகும். ஜாதகருக்கு இந்தத் தசை காலத்தில் அதிக ரோகங்கள் உண்டாகும்.

37. செலவுக ளதிக முண்டு ஜனபந்து சூத மெய்தும்
நலமிலாகாலி யென்றோம் நல்கிடும் தந்தை நோயாம்
குலவினோர் பகையு மாகும் கொடுமையே சுகமி ராது
மலையிறை மகளே யாங்கள் வழுத்துவோம் பின்பால் சேதி.

37. செலவுகள் அதிகமாக நேரிடும், பந்து ஜனங்களுக்குள் சூதகங்கள் வந்து நேரிடும். கால்நடைகள் விருத்தியாகா. ஜாதகருடைய தகப்பனுருக்கு நோய் வந்து சம்பவிக்கும். சிநேகிதர்கள் விரோதிகளாவார்கள். எல்லாம் கெடுதியாகவே நடக்கும். எதிலும் சுகம் இருக்காது. பர்வத ராஜனுன இமயமலையின் மகளாகிய பார்வதியம்மையே ! மற்ற விஷயங்களைப் பின்னுல் இரண்டாவது பாகத்திற் சொல்லுகிறோம்.

[1] மிருகசீரஷம் [2] அங்காரகன்

ஜாதகம் 67

1. கடகலக் கினமதர்க்க் கலே[1]ரண்டில் ராகு நாலில்
சுடரவன் [2] புதன்சேய் [3] ஆறில் சுக்கிரன் அஞ்சி லாக
முடவனும் [4] கேது பத்தில் மந்திரி [5] யிருக்க வீராறில்
முடனுகம் [6] நாலாம் பாதம் மொழிகுவீர் பலனே யென்று ;

	சனி கேது		குரு
	இராசி	சக்கரம்	லக்கினம்
			சந்திரன்
சூரியன் புதன் அங்காரகன்	சுக்கரன்	ராகு	

மகம் 4-ஆம் பாதம்

கேதுதசை இரு 0-0-20 நாள்

1. கடகம் ஜன்ம லக்கினமாகிச் சந்திரன் இரண்டிலும், ராகு நான்கிலும் சூரியன் புதன் அங்காரன் இவர்கள் ஆறிலும், சுக்கிரன் ஐந்திலும், சனியும் கேதுவும் பத்திலும், குரு பன்னிரண்டிலும் இருந்து, மகம் நான்காவது பாதத்தில் ஜனம் நேரிட்டால் பலனைச் சொல்லுவீர் என்று ;

குறிப்பு—இந்த ராசிச் சுக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலைபொருத்த முடையதாகும்:—ரிஷபத்தில் ராகுவும், கடகத்தில் சந்திரனும் அங்காரகனும், சிம்மத்தில் சூரியனும், துலாத்தில் குருவும் சனியும், விருச்சிகத்தில் சுக்கிரனும் கேதுவும், தனுசில் புதனும் ஆகும். அங்காரகன் அஸ்தமன மாகவும், குரு சுக்கிரன் சனி இவர்கள் வக்கிர மாகவும் இருக்கின்றார்கள்.

2. சுந்தரி கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
இந்தச்சேய் ஆணும் ஜன்ம மில்லமும் கீழ்ப்பால் வாடை
தென்வட வீதி யாகும் சிங்கவா னத்தாள் கீழ்ப்பால்
நந்திவா கனத்தோன் மாரி நல்கிடும் வடபா லாக.

---

[1] சந்திரன் [2] சூரியன் [3] அங்காரகன்
[4] சனி [5] குரு [6] மகம்

2. பார்வதியம்மையார் கேட்கும்போது அத்திரி முனிவர் என்பவர் சொல்லுகின்றார். ஜனனமான இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்கு வீதியில் கிழக்குத் வாடையில் இருக்கும். சிம்ம வாகனத்தையுடைய காளியம்மன் கோயில் கிழக்குத் திக்கிலும் ரிஷப வாகனத்தையுடைய சிவபெருமானுடைய கோயிலும் மாரியம்மன் கோயிலும் வடக்குத் திக்கிலும் இருக்கும்.

3. இத்தகை அடையா ளத்து ளியம்பினேம் தந்தை யில்லம்
வித்தகன் கங்கை சேயாய் விளங்குவா னென்று சொல்வோம்
பெத்ததாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோமிந் நூல் தன்னில்.

3. இவ்விதமான அடையாளங்கள் உள்ள இடத்தில் தகப்பனுருடைய வீட்டில் இந்த ஜாதகர் வேளார் குலத்தில் வந்து பிறப்பார் என்று சொல்லுகிறோம். இவரைப் பெற்றெடுத்த தாயார் தகப்பன் இவர்களுடைய யோகங்களையும், இவருடைய மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம், பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சுத்தமாகச் சொல்லுகிறோம்.

4. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றவே பலமு ருது
தந்தையும் தனியா மென்றோம் சாற்றுவீ ரந்தச் சங்கை
மந்தனும் [1] கேது பத்தில் மறுவின பலத்தால் சொன்னோம்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகருடைய தகப்பனுருடைய வர்க்கத்தார் என்ற சகோதர சகோதரிகள் முதலானவர்கள் அதிகமாக விருக்க மாட்டார்கள். தகப்பனுர் தனியாக விருப்பார் என்று சொல்லுகிறோம், இதற்குக் காரணத்தைச் சொல்லுமென்று கேட்க சனியும் கேதுவும் பத்தில் இருக்கின்ற பலத்தினுலே இவ்விதமாகச் சொன்னோம். இனிமேல் ஜாதகருடைய தகப்பனுரின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம்.

குறிப்பு.—பிதுர் வர்க்க விஷயம்—பிதுர் லக்கினம் ஒன்பதா மிடமாகிய மீனம் ஆகும். இதற்குக் குடும்பஸ்தானமாகிய மேஷத்தில் இரண்டு பாபிகளாகிய சனியும் கேதுவும் இருப்பதால் பிதுர்வமிசம் பலமில்லை என்று சொல்லியிருக்கின்றார்.

5. கல்விமான் மாநி றத்தன் கார்நிறம் உணச்சல் தேகி
நல்லவ னுகி வாழ்வன் நற்புத்தி யுடைய னுகும்
தொல்லையும் சுகமு மேற்பன் சோம்பலும் இல்லா னென்றோம்
தல்லிபோல் ஆத ரிப்பன் தரணியா லுய்வ னுகும்

5. தகப்பனுர் வாசித்தவர். மாநிறமானவர், மேகத்தின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான நிறத்தை யுடைய ஒல்லியான தேகத்தை யுடையவர், நல்லவராக விருந்து வாழ்வார். நல்ல குணங்களை யுடையவர். கஷ்ட-

---

[1] சனி

ங்களேயும் சுகங்களேயும் ஆக இவ் விரண்டையும் உடையவர். சோம்பலில்லாதவர் என்று சொல்லுகிறேம். தாயைப் போலக் காப்பாற்றுபவர். பூமியால் ஜீவிப்பார்.

6. பித்தச்சூ டைய ளுகும் பிறர்குற்றம் புகலா னென்றேம்
நத்தினேர்க் குதவி செய்வன் நாதனுர் பக்தி பூண்பன்
சித்தமே கறுப்பு மில்லான் தீங்கதை எவர்க்கு மெண்ணுன்
சுத்தவான் சொல்காப்பானும் தோகைக்கு மிஷ்ட ளுவன்.

6. தகபபனுர் பித்தச் சூடான தேக முடையவர். அயலார் மேல் குற்றங்களேச் சாட்டமாட்டார். தனக்குக் கெடுதலேச் செய்தவர்களுக்கும் உபகாரஞ் செய்வார். கடவுளின் மேல் பக்தியை யுடையவர். மனத்தில் யாதொரு களங்கமும் குற்றமும் இல்லாதவர். யாருக்குங் கெடுதியை நினேக்க மாட்டார். பரிசுத்தமானவர். மனேவிக்குப் பிரியமானவர்.

7. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் தாயே கேளும்
பெண்ணேயி னேரம் தன்னில் பேரூரில் முத்திரிய னுக
அன்னவ னுதித்து மேலும் அழகான குடும்பி யாகி
துன்னுமால் நாமம் கொண்டு செட்டுகள் செய்து வின்னேன் ;

7. தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக. பெண்ணேயாற்றின் கரையின் ஓரத்திலுள்ள ஒரு பெரிய ஊரில் இவர் முத்திரியனுகப் பிறந்து அழகான மேன்மையான குடும்ப முடையவராகி மகாவிஷ்ணுவினுடைய பெயரைப் பெற்று வியாபாரங்கள் செய்து கொண்டு இவர்.

8. சுகமுடன் வாழுந் நாளில் துணேவனே விரோதம் பேசி
அகமது பிரிதல் செய்து அத்தமு மீயா னுகி
பகைசெய்தான் இவனே யென்றேம் பின்துணே வருத்த முற்றுத்
தகமையாய்ப் பாக மீயாச் சண்டாளப் பாவிக் கேதான்.

8. சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் இவர், அஃதாவது தகப்பனுர் தன்னுடைய சகோதரனுடன் விரோதமான வார்த்தைகளேச் சொல்லி வீட்டை அபகரித்துக்கொண்டு அவனுக்குப் பாகம் ஒன்றுங் கொடுக்காமல் அவனிடம் பகைத்துக் கொண்டார் என்று சொல்லுகிறேம். இவருடைய இளேய சகோதரன் வருத்தத்தை யடைந்து தகுந்தப்படி ஒழுங்காய்ப் பாகத்தைக் கொடுக்காதச் சண்டாளனுை உனக்கு.

9. பின்வரும் ஜன்மம் தன்னில் பொருந்தாது துணேகள்யாவும்
பொன்கடன் உடைய னுகிப் பூமியில் வாழ்வா யென்ன
அன்னவன் சாபம் தானும் அணுகிற்று என்று சொல்வோம்
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

9. பின்னுல் நேரிடப் போகின்ற ஜன்மத்தில் உனக்கு எல்லாச் சகோதரர்களும் இல்லாமலும் பணத்தைக் கடன் வாங்கி அதனுல் கடன்காரனுகவிருந்து பூமியில் வாழக்கடவாய் என்று சொல்லவே, அவனுடைய

அந்தச் சாபம் வந்து தகப்பனுரை அடைந்தது என்று சொல்லுகிறேம். மேன்மையான யானே முகத்தையுடைய விநாயகக் கடவுளேப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

10. மாரனுக் கந்தி யத்தில் வளவு[1]மே நினியில் போக்கித்
தீரமில் லாதா னுகி ஷண்முகன் பக்தி கொண்டு
பாரினில் மரண மாகிப் பிரம்மனுல் வரையப் பட்டுப்
பாரினில் உதிப்பா னுகும் பற்றுவோம் துணேயின் சாபம்.

10. தகப்பனுர் தன்னுடைய முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் பூமியில் வீடு[1] கொல்லே இவைகளே இழந்து அதனுல் தைரியமில்லாதவராக விருந்து முருகக் கடவுளின் பேரில் பக்தியுடையவராயுமிருந்து பிறகு இறந்து பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இப் பூமியில் வந்து பிறந்தார். இவருடைய முன் ஜன்மத்திய சகோதரனுடைய சாபம் இவரை இந்த ஜன்மத்தில் வந்தடையும் என்று சொல்லுகிறேம்.

11. தனியனுய் வாழ்வா னுகும் செப்பின குணத்தா னுக்கு
வினேயிலா இவ னுதிப்பான் விளம்புவோ மிவள்கு ணத்தைச்
சினமுண்டு உடனே தாழ்வு தேகமும் உணச்சல் நீட்சி
கனமிலாக் குடும்ப பூர்வம் கார்நிற முடைய னுகும்,

11. தகப்பனுர் தனியாக விருந்து வாழ்வார். இப்படிப்பட்ட குணங்களுடைய தகப்பனுருக்கு யாதொரு பாபமுமில்லாத இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணுதிசயங்களேச் சொல்லுகிறேம். இவருக்குக் கோபம் வரும். ஆனுல் அஃது உடனே அடங்கிப்போகும். இவருடைய தேகம் நீண்டு மெலிந்திருக்கும். முன்னே இவருடைய குடும்பம் மேன்மையானதாக விருக்காது. இவர் மேகத்தின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான கறுப்பு நிறமுடையவர்.

12. வித்தையும் கொஞ்ச முண்டு வீண்வம்பு புகலா னுகும்
சத்தியம் கூறு னுகும் தரணியா லுய்வா னுகும்
சித்தமே கறுப்பு மில்லான் தீங்கதை யெவர்க்கு மெண்ணுன்
நந்தினேர்க் குதவி செய்வன் நாற்காலி பலித மற்பம்.

12. ஜாதகருக்குப் படிப்பு கொஞ்சமாகவிருக்கும். வீணுக உபயோக மில்லாத சண்டையை விளேவிக்கக் கூடிய கெட்ட சொற்களேச் சொல்ல மாட்டார். சத்தியம் செய்கிறேன் என்று சொல்லமாட்டார். பூமியால் ஜீவனஞ் செய்வார். மனத்தில் யாதொரு களங்கமும் குற்றமு மில்லாதவர். யாருக்கும் கெடுதியை நினேக்க மாட்டார். தனக்குக் கெடுதலேச் செய்தவர்களுக்கு உபகாரஞ் செய்வார். கால்நடைகளின் பலன் கொஞ்சமாக விருக்கும்.

[1] வீடு, கொல்லே.

13. கரமதில் விஷ்ணு ரேகை கமலரே கையுமே யுண்டு
பொருள்பின்னல் சேர்ப்பா னுகும் பூமியை விருத்தி செய்வன்
அறுமுகன் பக்தி பூண்பன் அற்பபுத் திகளும் கொஞ்சம்
நெறியதைத் தவறுதல் செய்வன் நிமிலியே கேட்டி டாயே.

13. ஜாதகருடைய உள்ளங்கையில் விஷ்ணுரேகையும், தாமரை ரேகையும் இருக்கும். இவர் பிற்காலத்தில் சொத்தைச் சேர்த்து வைப்பார். பயிரிடும் பூமிகளை விருத்தியாக்குவார். முருகக் கடவுளின் மேல் பக்தியை யுடையவர். தாழ்ந்த புத்தியுங் கொஞ்சமுடையவர். நல்ல நடவடிக்கை நல்லொழுக்கம் இவைகளிலிருந்து சில சமயம் தவறி விடுவார். பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

14. பாரியும் வந்த பின்பு பாலகன் தனக்கு யோகம்
கூறுவோம் தாயே யாங்கள் கோதையும் எந்தக் காலம்
நேருவாள் விவரம் சொல்வாய் நிமலனுக் கிருபா னுட்
சேருவாள் வடபால் தன்னில் செல்வதி அன்னே வர்க்கம்.

14. ஜாதகருக்கு மனைவி வந்து சேர்ந்த பிறகு யோகம் உண்டு என்று எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகிறோம். ஜாதகருக்கு மனைவி எந்த வயதில் வருவாள் என்ற விவரத்தைச் சொல்லு வீர் என்று கேட்க, ஜாதகருக்கு இருபத்துநான்கு வயதிற்குள் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சேருவாள். இவள் ஜாதகருடைய வம்சத்தைச் சேர்ந்தப் பணக்காரியாய் இருப்பாள்.

குறிப்பு.—விவாக விஷயம்—ஜாதகருக்கு வயது ஷெ 23–0–0 முதல் ஷெம் 24–0–0 வரையிலும் சூரிய தசையில் சனி புதன் இவர்கள் புக்தி கள் நடக்கின்றன. 2, 7, 9, 11, மனைவி விஷயமாய்ச் சம்மந்தப்பட்ட வீடுகள் ஆகும். சூரியன் இரண்டிற்குடையவராய் ஒன்பதிற்குடைய குருவாலும் போககாரகராகிய ராகுவாலும் பார்க்கப்பட்டிருக்கின்றூர். சனி ஏழிற்குடைய வராயிருக்கின்றூர். இவரையும் போககாரகனுகிய ராகு பார்த்திருக்கின்றூர். ஆகையால் சூரிய தசையில் சனிபுக்தியில் விவாஹமாக அமைப்பு இருக்கிறது.

15. அவள்குணம் புகலக் கேண்மோ அழகுளாள் சிவந்த மேனி
பவமன மில்லா ளாகும் பஞ்சைமே லிரக்க முண்டு
உவமையாய் வார்த்தை சொல்வள் உறுதியா மனத்தா ளாகும்
நவநீதம் விருத்தி யுண்டு நாகம்போல் கோப முண்டு.

15. ஜாதகருடைய மனைவியின் குணுதிசயங்களைச் சொல்லக் கேட்பீராக. அவள் அழகுள்ளவள். சிவந்த நிறமுள்ள தேகத்தையுடையவள். பாப மான மனத்தை உடையவளல்ல. ஏழைகளின்மேல் பச்சாதாபம் அன்பு இவைகளையுடையவள். உபமானம் உபமேயம் இவைகளை உபயோகப்படுத்தி அலங்காரமாகவும் இனிமையாகவும் பேசுவாள். திடமான நிலையான மனத்தையுடையவள். நல்ல வெண்ணெயைத் தருகின்ற பசுக்கள் விருத்தி யாகும். இவளுக்குப் பாம்பிற்கு வருவதைப்போலக் கோபம் வரும்.

16. சீலமும் கொஞ்ச முண்டு ஜனஉப காரி யாகும்
காலத்தை அறிந்து சொல்வள் கணவன்தன் மனதுக் கேத்தோள்
பாலிகை வயது தீர்க்கம் பராசரும் மறுத்துச் சொல்வார்
நீலனும்[1] ஏழோ னுகி நின்றிடம் தசம மாக;

16. ஜாதகருடைய மனைவி சிறிது நல்லொழுக்கமுள்ளவளாக இருப்பாள். ஜனங்களுக்கு உபகாரஞ் செய்வாள். அப்போதைக்கப்போதுள்ள கால நிலைமையை அனுசரித்து அதற்குத் தகுந்தாற்போல பேசுவாள். தன்னு டைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவாள். இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு என்று சொல்ல, பராசர முனிவர் தடுத்துச் சொல்லுகிறூர். சனியும் ஏழுக்குடையவராகிப் பத்தாவது பாவத்தில் இருப்பதால்.

17. எப்படி வயது தீர்க்க மியம்புவீர் முனியே நீர்தாம்
செப்புவேன் மதியின் காலம் சிலகண்டம் கர்ப்பத் தாலே
தப்பிதம் நேரு மென்றேும் சண்டனைக் காணு ளாகும்
அப்பணி சடையோன் தேவி அவளுமே தீர்க்கஜீவி.

17. இவளுக்கு எவ்விதமாக நீண்ட ஆயுளுண்டு? முனிவரே! நீரே அதைச் சொல்லுவீர் என்று கேட்க, சந்திர தசை காலத்தில்* கர்ப்பத் தால் சில கண்டம் நேரிட்டுக் குற்றங்கள் நேரிடும். ஆனுல், இவள் எமனைத் தரிசிக்கமாட்டாள், அஃதாவது அப்போது இறக்கமாட்டாள். அழகிய பாம்பைத் தன்னுடைய ஜடையில் தரித்துக்கொண்டுள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! இவள் தீர்க்கஜீவியாய் இருப்பாள்.

*குறிப்பு.—மனைவியின் கண்ட விஷயம்:—மனைவியின் லக்கினம் ஏழாம் பாவமாகிய மகரமாகும். இந்த மகர லக்கினத்திற்குப் பராசர ஹோரை 13-ஆவது அத்தியாயப் பிரகாரமும் ஜாதகசந்திரிகை 62-ஆவது 63-ஆவது சுலோகங்கள் பிரகாரமும் அங்காரகன் சந்திரன் குரு இவர்கள் மார கராகின்றூர்கள். இங்குச்சந்திரதசை காலத்தில் மனைவிக்குக் கண்டம் சொல்லியிருக்கின்றூர். மகரத்திற்குச் சந்திரன் ஏழிற்குடையவராகி எட்டில் இருக்கின்றூர். ஆகையால் மனைவிக்குக் கண்டத்தைக் காட்டச் சந்திரனுக்கு அதிகாரம் இருக்கின்றது. பெண்களுக்குப் புத்திர ஸ்தானம் ஒன்பதாமிடமும் ஐந்தாமிடமும் என்கிறூர்கள். மகரத்திற்கு ஒன்பதிற் குடையவரான புதனுடன் கூடிய அங்காரகன் சந்திரனுடைய வீடாகியக் கடகத்தைப் பார்ப்பதால் சந்திரதசையில் கர்ப்பத்தால் மனைவிக்குக் கஷ்டம் என்று இங்கு கண்டிருக்கிறது.

18. சுதர்களும் தவத்தால்தோன்றும் சுக்கிரன் அஞ்சினில் நிற்கப்
புதல்வர்கள் விருத்தி தோஷம் பிசாசுகள் குற்றத் தாலே
அதற்கொரு கிரியை சொல்வேன் ஆளிவா கனத்தாளுக்கு
அதிபதி விரதம் கொண்டு வாரமும் வகைமாய் வந்து;

---

[1]. சனி

18. சுக்கிரன் ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் சந்ததிகள் † தவம் செய்வதால் உண்டாகும். பிசாசு பேய் முதலியவற்றின் செய்கையால் பிள்ளைகள் விருத்தியாவதற்குத் தோஷங்கள் ஏற்படும். அதற்காக ஒரு சாந்தியைச் சொல்லுகிறேன். ஆளிவாகனத்தாளாகிய துர்க்கை, காளி இவர்களைப் பூஜித்து விரதமிருந்து ஒருவார காலம் சுற்றி வந்து கடைசி தினத்தில் இந்த அம்மனுக்கு அபிஷேகம் முதலியவை செய்து சுக்கிர வார விரதத்தை.

†குறிப்பு—சந்ததிகள் விஷயம்—சந்ததி சம்மந்தமான வீடுகளும், கிரகங்களும் 5, 7, 9, இந்த வீடுகளும், இந்த வீடுகளுக்குடையவர்களும் குருவுமாவார்கள். ஐந்தில் பெண் கிரகமாகிய சுக்கிரன் இருக்கின்றார். ஐந்திற்குடைய அங்காரகன் ஆறில் தனக்குப் பகைவராகிய, சந்ததி விஷயத்தில் இடைஞ்சல் செய்யக்கூடிய புதனுடன் இருக்கின்றார். குரு பன்னிரண்டில் மறைந்து இருக்கின்றார். ஆனால், அங்காரகனைப் பார்த்திருக்கின்றார். ஏழாவது வீட்டைச் சனி பார்த்திருக்கின்றார். ஆகையால் புத்திர தோஷம் அதிகம் இருக்கின்றது.

19. கடைநாளில் அபிஷேகித்துக் காதலி சுக்கிர வாரம்
அடவுடன் விரதம் கொள்ள அக்காற்று விலகி யேதான்
உடன்சுதர் தோன்று மென்றேம் உரைக்கிறே மாண்பால் ரண்டு
விடவிழி பெண்பால் ரண்டு விருத்தியாம் பால னுக்கு.

19. கடைசி தினத்தில் இந்தக் காளி தேவதைக்கு அபிஷேகம் முதலியவை செய்து சுக்கிரவார விரதத்தை அனுஷ்டித்து வந்தால் அந்தப் பேய் பிசாசுகள் விலகி உடனே குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லுகிறேம். ஆண் குழந்தைகள் இரண்டும் விஷக்கண்களையுடைய பெண் குழந்தைகள் இரண்டும் ஜாதகருக்கு விருத்தியாகி வருவார்கள் என்று சொல்லுகிறேம்.

20. இன்னவன் முன்ஜன் மத்தை எடுத்துநானுரைக்கக் கேளாய்
பொன்முக ராற்றி னேரம் பேரூரில் வன்னிய சேயாய்
அன்ன வனுதித்து மேலும் ஆண்மையாய்க் குடும்பி யாகித்
தன்னிடம் வருபவரைக் காத்து தருமத்தி லிச்சை யுண்டாய்.

20. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றி நான் எடுத்துச்சொல்லுகிறேன். நீர் அதைக் கேட்பீராக. பொன்முகராறு என்ற ஆற்றின்கரையோரத்திலுள்ள ஒரு பெரிய ஊரில் வன்னியராக இவர் பிறந்து மேன்மையான வலிவுள்ள ஒரு குடும்பஸ்தராகவிருந்து தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றிக்கொண்டு தர்மத்தில் ஆசையுடையவராகி.

21. அறுமுகன் பக்தி யாகி அந்தக லனுலக டைந்து
பிரமனல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உரைக்கிறே மிவனின் யோகம் உலகினில் வறுமை காணன்
தரைசேர்ப்பன் சல்லியம் கொள்ளான் சாதமும் குறைவு றுதான்.

21. முருகக் கடவுளின்மேல் பக்தியுடையவராகி வாழ்ந்து பிறகு இறந்து எமனுடைய பட்டணத்திற்குச் சென்று பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்த ஜாதகர் வந்து பிறந்திருக்கின்றார். இவருடைய யோகத்தைச் சொல்லுகின்றேம். பூமியில் இவருக்குக் கஷ்டங்களும் தரித்திரமும் உண்டாகா. பூமிகளைச் சேர்ப்பார். கடன் வாங்கமாட்டார். எப்போதும் சாப்பாட்டிற்குக் குறைவு கிடையாது.

22. இல்லமும் முப்பாண டின்மே லெய்துவான் சித்திர மாக
எல்லைகள் வேறூர் நேரு மிடுக்கங்கள் அதன்மேல் காணன்
சல்லிய மில்லா வாழ்வன் தானியம் பெருக்க மாகும்
அல்லலைத் தவிர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

22. ஜாதகருக்கு முப்பது வயதிற்குமேலே அழகான சித்திரங்கள் உள்ள வீடு வந்து நேரிடும், இவர் வேறு கிராமத்திலே பூமிகளை வாங்குவார். இதற்குமேல் இவருக்குக் கஷ்டங்கள் கிடையா, கடன்படாமல் வாழ்வார். தானிய வகைகள் அதிகப்படும். எங்களுடைய கஷ்டங்களை நிவிர்த்தி செய்கின்ற எங்களுடைய ஆத்துமாவைப்போல அருமையான தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

23. தன்துணை ஆண்பால் மூன்று சத்தி மா ரிருவர் தீர்க்கம்
அன்னவர் சேதி யாவும் அறிவிப்போம் பின்பா கத்தில்
இன்னவன் அன்னை சேதி யியம்புவோ மிக்கு ணத்தாள்
முன்கோபம் கொஞ்ச முண்டு மொழியது சுகமே யாகும்.

23. ஜாதகருக்குக் கூடப் பிறந்த ஆண் மூன்று பேரும், பெண்கள் இரண்டு பேரும் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார்கள். அவர்களுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் பின்பாகத்தில் சொல்லுகிறேம். ஜாதகருடைய தாயின் விஷயங்களைச் சொல்லுகிறேம். இவளுடைய குணதிசயங்கள் எப்படிப்பட்டவையென்றால் இவளுக்கு முன் கோபங் கொஞ்சம் இருக்கும். இவளுடைய வார்த்தைகள் இன்பமாகவும் சுகமாகவும் இருக்கும்.

24. பாரினில் நல்லோ ளாவள் பதர்குண மில்லா ளாகும்
மாரன்தன் மனதுக் கேத்தோள் வருவோரை ஆத ரிப்பள்
தீரமா மனத்தா ளாகும் தேவிக்குத் துணைஆண் ரண்டு
நாரிகள் நால்வ ராகும் நவினுவோ முத்தர மில்லம்.

24. ஜாதகருடைய தாயார் பூமியில் நல்லவளாக அவசரமான படபடப்பான குணமில்லாதவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவள். தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுபவள். திடமான உறுதியான மனத்தையுடையவள், இவளுக்குச் சகோதரர்கள் இரண்டு ஆண்களும் நான்கு பெண்களும் உண்டு. இவளுடைய வீடு வடக்குத்திக்கில் இருக்கும்.

25. மாதுலன் ஒருவ னுக்கு மனைவிக ளிருவ ராகும்
வேறதாய் வேட்ட கத்தில் மேவுவா ளென்று சொல்வோம்
தீரமாய்ப் பின்பா கத்தில் செப்புவோ மவர்கள் சேதி
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

25. ஜாதகருடைய அம்மான் ஒருவனுக்கு இரண்டு மனைவிகளுண்டு. இவர் தன்னுடைய குடும்பத்தை விட்டுப் பிரிந்து மாமியார் வீட்டிற்குப் போய்ச்சேர்ந்து விடுவார் என்று சொல்லுகிறோம். இவர்களுடைய விஷயங்களைப் பின்பாகத்தில் வலிவாயும் விபரமாகவும் சொல்லுகிறோம். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

26. மாதுரு முன்ஜன் மத்தை வரைகிறே மில்லம் மேற்கில்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினள் அருகர் வம்சம்
காதலி சுகமாய் வாழ்ந்து காலன்தன் பதிக்குச் சென்று
வேதனுல் வரையப் பட்டு விளங்கினு ளிவளே யென்றோம்.

26. ஜாதகருடைய தாயின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், மேற்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் சமணர் குலத்தில் பிறந்து இவள் சுகமாக வாழ்ந்து இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறோம்.

27. பின்ஜன்மம் வாழை நாட்டில் பிறப்பளா மிக்கு லத்தில்
கன்மகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர் தாம்
மன்னனு முப்பா னெட்டில் மாதுரு கண்ட மெய்தும்
தென்முனி புகலு கின்றார் சந்திரன் தசைமுற் பாகம் ;

27. ஜாதகருடைய தாயார் மறு ஜன்மத்தில் வாழை நாட்டில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலத்திலேயே அஃதாவது வேளாளர் குலத்திலேயே பிறப்பாள். முனிவரே ! நீர் ஜாதகருக்குத்தாயார் தந்தை கர்மகாலங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வயதில்* தன் தாயார் இறந்து விடுவாள். இதற்கு அகஸ்தியர் சொல்லுகின்றார். சுக்கிரனுடைய தசையில் முதல் பாகத்தில் ;

*குறிப்பு.—தாய்மாரக விஷயம்—தாயின் லக்கினம் துலாம். ஜாதகருக்கு வயது வருஷம் 37–0–0 முதல் வருஷம் 38–0–0 வரையிலும் அங்காரக தசையில் ராகு, குரு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. தாயின் லக்கினம் துலாம். இதற்கு அங்காரகன் மாரகன் என்று பராசரஹோரையின் சில பதிப்புகளில் சொல்லி இருக்கின்றது. அங்காரகன் இரண்டிற்கும் ஏழிற்கும் உடையவராகி மூன்றில் இருக்கின்றார். இவர் துலாத்திற்கு மாரகராகிய சூரியன் குரு இவர்களுடைய சம்பந்தமும் பார்வையும் அடைந்திருக்கின்றார். ஜாதகசந்திரிகை 23 ஆவது சுலோகப் பிரகாரம் அங்காரகனுக்குத் தாயை மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது. ராகு மாதுர்லக்கினத்திலேயே இருந்துகொண்டு சந்திரனைப் பார்ப்பதால் இவருக்குத் தன் புத்தியில் தாயாருக்கு மாரகஞ்செய்ய குருவைவிட அதிகமான அதிகாரம் இருக்கின்றது.

28. இருபது எட்டு ஆண்டி லெய்திடும் கண்ட மொன்று
வரும்வினை நிவர்த்தியாகி ஆறஞ்சு ரண்டு ஆண்டில்
அரிவைக்குக் கண்டம் நேரும் அக்காலம் நமனைக் காணுள்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

28. ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில்†தாயாருக்கு ஒரு கண்டம் வரும். இந்தக் கண்டம் நிவர்த்தியாகி மறுபடியும் இன்னொரு கண்டம் ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில்* தாயாருக்கு நேரிடும். ஆனால், அப்போது அவள் எமனைத் தரிசிக்கமாட்டாள். அதாவது இறந்துவிடமாட்டாள். கருப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

†குறிப்பு.—தாயாருக்குக் கண்ட விஷயம்—ஜாதகருக்கு வயது வருஷம் 27–0–0 முதல் வருஷம் 28–0–0 வரையிலும் சந்திர தசையில் அங்காரகன் ராகு இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. ராகு மாதுருஸ்தானத்திலிருந்துகொண்டு சந்திரனைப் பார்ப்பதால் மாதாவுக்குக் கண்டம் நேரிட அமைப்பு இருக்கின்றது. மேலும் வயது வருஷம் 31-0–0 முதல் 32-0-0 முடியும் வரையிலும் சந்திர தசையில் சனிபுக்தி, புதன்புக்தி இவை நடக்கின்றன. சனி ஏழில் இருந்துகொண்டு மாதுருலக்கினத்தைப் பார்ப்பதால் சனிபுக்தியில் மாதாவுக்கு ஒரு கண்ட அமைப்பு இருக்கின்றது.

29. ஆருறு ஒன்று ஆண்டில் அணுகிடும் தந்தை கண்டம்
வேறு ஜன்மத்தைச் சொல்வேன் விருஞ்சிநாடதற்கு உத்தரம்
பேரூரில் இக்குலத்தில் பிறப்பனு மென்று சொல்வோம்
தீரமாய்த் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

29. ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் அவருடைய தகப்பனார் இறந்து விடுவார். தகப்பனாரின் மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேன் விருஞ்சிநாட்டிற்கு வடக்கில் ஒரு பெரிய ஊரில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலத்தில், அஃதாவது வேளாளர் குலத்தில் பிறப்பார் என்று சொல்லுவோம். வலிவாயும் தைரியமாயும் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

†குறிப்பு—தகப்பனாருடைய மரண விஷயம்—ஜாதகருக்கு வயது வருஷம் 36–0–0 முதல் வருஷம் 37-0-0 வரையிலும் சந்திரதசையில் சூரிய புக்தி கொஞ்ச நாளும், அங்காரக தசையில் அங்காரக புக்தியும் ராகுபுக்தியும் நடக்கின்றன. பிதுர்லக்கினம் மீனம். பராசரஹோரை பிரகாரம் சந்திரன் மீன லக்கினத்திற்கு மாரகனல்ல. மீன லக்கினத்திற்கு மாரகர்கள் சனி, புதன், சூரியன, சுக்கிரன் இவர்கள் ஆவார். அங்காரகன் ஏற்கெனவே மாரகன் அல்ல. ஆனால், இவர் மாரகருடைய சமமந்தம் அடைந்து பிதுர்ஸ்தானத்தைப்பார்ப்பதுடன் பிதுர்ஸ்தானதிபதியாகிய குருவையும் பார்க்கின்றார்.

இதுவுமன்றி பிதுர்காரகனுகிய சூரியனுடனும் சம்பந்தப்பட்டிருக்கின்ருர். ராகு பிதுர்மாரகனுகிய சுக்கிரன் வீட்டில் இருந்துகொண்டு பிதுர்காரகனுகிய சூரியனேயும் பார்க்கின்ருர். ஆகையால், அங்காரக தசையில் ராகு புக்தியில் பிதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது.

30. உதித்த பேய் எழுப தாண்டில் உயர்கூனி மாதம் தன்னில்
விதியது முடியு மென்ரேம் விளம்புவோம் பின்ஜன் மத்தைச்
சதியிலா தணிகைக் கீழ்ப்பால் சிறுவூரில் ரெட்டி வம்சம்
நிதிமிக உடையா னுக்கு நேருவ னென்று சொல்வோம்.

30. ஜாதகருக்கு எழுபதாவது வயதில்* பங்குனி மாதத்தில் ஆயுள் முடிந்துவிடும் என்று சொல்லுகிரேம். இவருடைய மறுஜன்மத்தைச் சொல்லுகிரேம். குற்றமில்லாத திருத்தணிகைக்குக் கிழக்குத் திக்கில் ஒரு சிறிய கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்தில் தனம் அதிகமாக வுடையவருக்கு வந்து பிறப்பார் என்று சொல்லுகிரேம்.

குறிப்பு.—ஜாதகருக்கு மாரக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ்ரூ 69-0-0 முதல் ஷ்ரூ 70-0-0 முடியும் வரையிலும் குருதசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் பராசரஹோரை 13-ஆவது அத்தியாயம் பிரகாரம் புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகராகின்ருர்கள். குரு ஏற்கனவே மாரகாதிபதி அல்ல. ஆனல் இவர் மாரகாதிபதியாகிய புதன் வீட்டில் இருந்து கொண்டு லக்கினத்திற்குப் பன்னிரண்டாவது வீட்டில் இருக்கின்ருர். ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் குருவுக்கு மாரகாதிபத்திய அமைப்பு நேரிடுகிறது. ஏற்கனவே கடகத்திற்குச் சுக்கிரன் பெரிய மாரகராகின்ருர். ஆகையால் குருதசையில் சுக்கிர புத்தியில் ஜாதகருக்கு மாரகம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

31. ஜனித்திடு காலம் தன்னில் சிகிதசை யிருபா னுளும்
குனித்தனம் பூர்வ பாகம் கூறுவோம் அதன்மேல வெள்ளி
வினையிலா பூர்வம் சொல்வோம் விளம்புவோம் பின்பால் சேதி
கனமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே.

31. ஜாதகர் பிறக்குங் காலத்தில் கேதுதசையில் இருபது நாளாகும். இதுவரையிலும் பூர்வபாகமாகிய முதல் பாகத்தைச் சொன்னேம். கேது தசைக்குப் பிறகு சுக்கிரதசை நடைபெறும். பாபங்கள் ஒன்றுமில்லாத பூர்வ பாகத்தைச் சொன்னேம். இனிமேல் மற்ற விஷயங்களைப் பின் பாகத்தில் சொல்லுகிரேம். மேன்மை பொருந்திய மதயானை முகத்தை யுடைய விநாயகக் கடவுளைப்பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகம் 68

			சந்திரன்
	இராசி சக்கரம்		லக்கினம் சனி ராகு
சூரியன் புதன் கேது			
சுக்கிரன்	குரு	அங்காரகன்	

புனர் பூசம்—3-ம் பாதம். குரு தசை ஷ்ரூ 7-7-0.

1. கடகலக் கினம தாகக் காரியும்[1] ராகு தங்க
உடுபதி[2] யீரா ருக ஒருகண்ணேன்[3] ஆறி லாகச்
சுடரவன்[4] புதனும் கேது சப்தமமாம் பொன்னு[5] மஞ்சில்
அடவுடன் சேயு[6] நாலில் அணுகினல் பலன் னெவ்வாறு ;

1. ஜன்ம லக்கினம் கடகமாகி, அதில் சனியும் ராகுவும் சந்திரன் பன்னிரண்டிலும், சுக்கிரன் ஆறிலும், சூரியன் புதன் கேது இவர்கள் ஏழிலும், குரு ஐந்திலும், அங்காரகன் நான்கிலும் இருந்தால், எவ்வித மான பலாபலன்கள் உண்டாகும் என்று ;

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் சூரியனும் சுக்கிரனும், மிதுனத்தில் சந்திரனும் கேதுவும், சிம்மத்தில் புதனும், துலாத்தில் குருவும், சனியும், அங்காரகனும், தனுசில் ராகுவும் ஆகும். சனி வக்கிரமாக விருக்கின்ருர்.

2. மங்கையும் கேட்கும் போது மாமுனி புகலு கின்ருர்
இங்கிவை ஆண்பால் ஜன்ம மில்லமும் கீழ்ப்பால் நோக்கம்
தங்கிடும் தென்பால் சந்து சங்கரன் கோஷ்டம் கீழ்ப்பால்
ஐங்கரன் மேல்பால் தங்கும் ஆளிவா கனத்தாள் நிற்கும்.

2. பார்வதி அம்மையார் கேட்கும்போது மாமுனியாகிய வசிஷ்டர் சொல்லுகின்ருர். இப்படிப்பட்ட கிரக அமைப்பிற்கு ஆண்குழந்தை ஜனனமாகும். பிறந்த வீடு கிழக்குத் திக்கைப் பார்த்திருக்கும்.

[1] சனி. [2] சந்திரன். [3] சுக்கிரன்.
[4] சூரியன். [5] குரு. [6] அங்காரகன்.

தெற்குத் திக்கில் ஒரு சந்து இருக்கும். கிழக்குத் திக்கில் பரமசிவன் கோயிலும், மேற்குத் திக்கில் விநாயகக் கடவுளின் கோயிலும் இருக்கும். காளியம்மன் கோயில் மேற்குத் திக்கிலிருக்கும்.

3. இன்னமும் பலதே வாசம் மிலகிய பேரூ ராகும்
அன்னவன் பிரம்ம சேயாய் அருளுவா னென்று சொல்வோம்
மன்னவன் குடும்பச் சேதி வனாகிரே மிந்நூல் தன்னில்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

3. இவைகளுமன்றிப் பிறந்த ஊரில் அனேக தேசத்தார்கள் வாசஞ் செய்வார்கள். இந்த ஊர் ஒரு பெரிய பட்டணமாகும். ஜாதகர் பிராமண குலத்திற் பிறப்பார் என்று சொல்லுகிறோம். இவருடைய குடும்பத்தின் விஷயங்களை இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம். மேன்மை யான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதி யம்மையே! கேட்பீராக.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாக
அந்தஆண் முன்னே ளுகும் அறைகிறே மவன்கு ணத்தைச்
சிந்தையும் நல்ல தாகும் சிவந்தமெய் வாத தேகி
நந்தியும் பனையோர் விருத்தி நவின்றிடான் கட்டு வார்த்தை.

4. ஜாதகருடைய தகப்பனுருக்கு ஓர் ஆண் சகோதரரும் நீண்ட ஆயுளையுடையவர் என்று சொல்லுகிறோம். இந்தச் சகோதரன் மூத்த சகோதரனுகும். இவருடைய குணுதிசயங்களைச் சொல்லுகிறோம். இவர் நல்ல மனத்தையுடையவர். சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவர். வாத தேகத்தையுடையவர். ரிஷபம் பசு பயிரிடும் நிலங்கள் பயிர் செய்யும் ஏர் ஆகிய இவைகள் விருத்தியாகும். பொய் வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லமாட்டார்.

5. சிவாலய பூசை பூண்பன் சிலர்க்குப தேசம் செய்வன்
தவசிக ளுறவு கொள்ளான் தன்கட னில்லா னுகும்
அவனியோர் மதிக்க வாழ்வன் அறுமுக நாமம் கொண்டோன்
நவனியில் பாரி ஒன்று நற்சுதர் காண ளுகும்.

5. இவர் சிவன் கோயிலில் பூஜை செய்யும் தொழிலையுடையவர். சிலருக்கு உபதேசத்தைச் செய்து வைப்பார். முனிகளுடைய சினேகத்தை அடையமாட்டார். கடன்படமாட்டார். பூமியிலுள்ளவர்கள் இவரை மதிக்கும் படியாக வாழ்வார். முருகக் கடவுளின் பெயரை உடையவர். இவருக்கு மனைவி ஒருத்தியாகும். பிள்ளைகள் கிடையாது.

6. உடன்கூடி வாழ்வா ளுகும் உரைக்கிறோம் தந்தை சேதி
விடவிழி மார்கள் மோகன் விமலனை பூசை செய்வன்
தடபுடல் செய்கை யுண்டு சல்லியப் பாதை காணன்
உடன்துணை சொல்தட் டாதான் உண்மையை வெளிகாட் டாதான்.

6. ஜாதகருடைய தகப்பனுருடன்கூடவிருந்து வாழ்வார். இனிமேல் தகப்பனுருடைய விஷயங்களைச் சொல்லுகிறோம். இவர் விஷக்கண்களை யுடைய பெண்களின்மேல் காம ஆசையுடையவர். சிவபெருமானைப் பூஜை செய்யுந் தொழிலை யுடையவர். இடம்பமாகவும் அவசரமாகவும் படாடோப மாகவும் காரியங்களைச் செய்வார். கடனுல் ஏற்படும் துன்பமில்லாதவர். தன்னுடைய சகோதரனுடைய வார்த்தைக்குத் தவறி நடக்கமாட்டார். உண்மையை வெளியே காண்பிக்காமலும் சொல்லாமலும் ரகசியமாய் வைத்திருப்பார்.

7. அரவனும் நாமம் கொண்டோன் ஆசாரன் வெளிம யக்கன்
தரையதை விருத்தி செய்வன் தன்மனம் கபட முண்டு
இருநிறம் அந்தம் வாயு எய்திடும் சோதி குற்றம்
பொருளாசை சொல்புரட்டன் புயங்கம்போல் கோப முண்டு.

7. தகப்பனுர் பாம்பின் பெயரை உடையவர். ஆச்சாரமும் நல்லொழுக்க மும் உடையவர். வெளிப் பார்வைக்கு மயக்குந் தன்மையுடையவர். பூமியை விருத்தி செய்வார். கபடமானமனத்தை யுடையவர். இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறமான அழகான தேகத்தை யுடையவர். வாயு நோய் வந்து அணுகும். நாக்குப்பூச்சியால் தோஷமும் துன்பமும் உண்டாகும். இவருக்குப் பொருள்களின்மேல் ஆசையுண்டு. சொன்ன பேச்சைப் புரட்டி விடுவார். இவருக்கு பாம்பிற்குக் கோபம் வருவதைப் போலக் கோபமுண்டாகும்.

8. தீரமில் லாத நெஞ்சம் ஜனஉப காரி யாவன்
காரிய சமர்த்த னுவன் கஞ்சமாம் ரேகை யுண்டு
கூறின குணத்தா னுக்குக் குழவியும் குவல யத்தில்
மாரன்தன் குணத்தைச் சொல்வேன் மால்நிற முடைய னுகும்.

8. இவருக்குத் திடமான உறுதியான மனது கிடையாது. இவர் ஜனங்களுக்கு உபகாரஞ் செய்வார். காரியங்களைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியமுள்ளவர். இவருடைய உள்ளங்கையில் கமலரேகை என்ற ஒருவித தாமரைரேகை இருக்கின்றது. இங்கு சொல்லப்பட்ட குணங்களை யுடைய தகப்பனுக்கு இந்தப் பூமியில் ஜாதகர் பிறப்பார் என்று சொல்லு கிறோம். ஜாதகருடைய குணுகுணங்களைச் சொல்லுகின்றேன். மகா விஷ்ணுவின் நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நீலமும் கறுப்பும் கலந்த நிறமுடையவர்.

9. இருவிதக் கல்வி கற்பன் யாவர்க்கும் நல்லோ னுவன்
அறிவுளான் சில னுவன் அஞ்சின வார்த்தை கூறுன்
குறைசொ லான் பொருள்மே லிச்சை பொய்யது பேசா னுகும்
தரையதை விருத்தி செய்வன் சாதிப்பான் சிலது சங்கை.

9. ஜாதகருக்கு இரண்டுவிதமான படிப்பு உண்டு. எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். புத்தியுள்ளவர். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையுமுடையவர். பயப்படும்படியாக வார்த்தைகளைக் சொல்ல

மாட்டார். பிறர் மேல் குற்றங்களைச் சொல்லமாட்டார். பொருளின்மேல் ஆசை யுடையவர். பொய் சொல்ல மாட்டார். பூமியைப் பயிரிட்டு விருத்தி செய்வார். சில விஷயங்களில் ஒரே பிடிவாதஞ் செய்து வெல்லுவார்.

10. அன்னமும் குறவு றுதான் அரன் பூசை செய்வா னுகும்
அன்னியர் மதிக்க வாழ்வன் அடாவடி கூரு னுகும்
அன்னியர்க் குதவி செய்வன் அற்பரை உறவு கொள்ளான்
அன்னவன் யோக சாலி அயல்குற்றம் புகலா னுகும்.

10. ஜாதகருக்கு எப்போதும் சாப்பாட்டுக் குறைவு ஏற்படாது. சிவ பெருமானைப் பூஜை செய்யுந் தொழிலையுடையவர். பிறர் இவரை மதிக்கும்படியாகப் பெருமையாக வாழ்வார். அடாவடியாக முரட்டுத்தன மாகப் பேசமாட்டார். பிறருக்கு உபகாரஞ் செய்வார். தாழ்ந்த குண முடையவர்களுடன் சிநேகஞ் செய்யமாட்டார். இவர் யோகமுடையவர். பிறர்மேல் குற்றங்களைச் சாட்டமாட்டார்.

11. தன்துணை ஆண்பால் ரண்டு சத்தியு மவ்வாறு தீர்க்கம்
சொன்னஆண் முன்னே ராகும் செப்புவோம் முன்னேன் சேதி
கன்னென மொழியு முண்டு கல்விமா னீகை யாளன்
பின்னமில் லாத தேகன் பேச்சதை அதிக மேற்பன்.

11. ஜாதகருடன் பிறந்த இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இந்த இரண்டு ஆண் சகோதரர்களும் ஜாதகருக்கு மூத்த சகோதரர்களாகும். முதல் மூத்த சகோதரனுடைய விஷயத்தைச் சொல்லுகிறேம். இவர் இனிமையாகப் பேசுவார். படித்தவர். பிறருக்குக் கொடுக்குந் தன்மை யுடையவர். உடம்பில் யாதொரு அங்கவீனமுமில்லாதவர். அதிகமாக பேசக் கூடியவர். வார்த்தையின்மேல் அதிகமான மதிப்பை வைக்கக் கூடியவர்.

12. வறுமைஎப் போதும் காணுன் வள்ளலைப் பூஜை பூண்பன்
இருபாரி அனுகு மென்றேம் ஏவலா ளுடைய னுகும்
பெரும்சுத ராண்பால் ரெண்டு பேதைய ரவ்வாறு தீர்க்கம்
திருகிலா ஒன்றுய் வாழ்வன் தீர்க்கமாம் வயது முண்டு.

12. ஜாதகருடைய முதல் மூத்த சகோதரன் கஷ்டங்களும் தரித்திர மும் எப்போதும் இல்லாதவர். கடவுளைப் பூஜை செய்வர். இவருக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டு என்று சொல்லுகிறேம். இவருக்கு வேலைக்காரர்களுண்டு. இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். கள்ளமும் வஞ்சனையுமில்லாமல் ஜாதகருடன் கூடவிருந்து வாழ்வார். இவருக்கு நீண்ட ஆயுளுண்டு.

13. அத்திரி முனிவர் சொல்வர் அறைந்தினீர் புத்திர விருத்தி
வித்தகி யெம்மா துக்கு மேவிடும் விவரம் சொல்வீர்
சத்தியா முதல் மாதும்மே சந்ததி யின்றி மாள்வள்
பத்தினி யிளையா ளுக்குப் பகருவோம் விருத்தி தானே.

13. நீங்கள் இவருக்குப் புத்திர விருத்தியைப்பற்றிச் சொன்னீரே! இவ்விதமாக எந்த மனைவிக்குச் சந்தானம் உண்டாகும் என்ற விவரத்தைச் சொல்லுவீர் என்று அத்திரி முனிவர் கேட்க, முதல் மனைவி குழந்தைகளைப் பெருமலேயே இறந்து விடுவாள். இரண்டாவது மனைவி குழந்தைகளைப் பெறுவாள் என்று சொல்லுகிறேம்.

14. அதற்குப்பின் துணைவன் தானும் அறிவுளான் கல்விமானும்
குதர்க்கமாய்ப் பேசா னுகும் குணமது நல்ல தாகும்
சதியிலா மனத்த னுகும் தாட்சிண்யன் கனத்த புத்தி
பிதுராஸ்தி அடையா னுகும் பூமியில் வறுமை காணுன்.

14. ஜாதகருடைய இரண்டாவது மூத்த சகோதரர் புத்திசாலியா யிருப்பார். படித்தவராவர். முறைகெட்ட தர்க்கத்துடன், அஃதாவது அநியாயமாய்க் காரணங்கள் இல்லாமல் வாதாடமாட்டார். நல்ல குணங்களை யுடையவர். கெட்ட மனதில்லாதவர். தயையுள்ளவர். பெரும் புத்தி யுடையவர். பிதாவின் சொத்தைத் தான் அடையமாட்டார். பூமியில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அனுபவிக்கமாட்டார்.

15. அன்னியர் ஆர்ஜி த்தை அனுசரித் திவனும் வாழ்வன்
கனம்புத்திர னில்லா னுகி காளேயு மவன்பால் சென்று
பொன்பணி பூமி யாவும் பெறுவானும் வயது தீர்க்கம்
மன்னவன் தனக்குப் பாரி மருவிடும் ஒன்றே யாக.

15. பிறருடைய சொத்தை அடைந்து அனுபவித்து இவர் வாழ்வார். புத்திரனில்லாத ஒருவருக்கு இவர் சுவீகாரபுத்திரனுகச் சென்று அவருடைய தனம் ஆபரணம் பூமி இவைகளை அடைவார். இவருக்குத் தீர்க்க ஆயுளுண்டு. இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு.

16. சுதர்களும் ஆண்பா லொன்று தோகையர் மூவர் தீர்க்கம்
பதராகு மற்ற வெல்லாம் பகராமாம் குடும்ப மேற்பன்
இதுவிவ ரங்க ளெல்லாம் விளம்புவோம் மறுபா கத்தில்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

16. இவருக்கு ஓர் ஆண்குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். மற்றக்குழந்தைகள் எல்லாம் உபயோகம் இல்லாமல் போய்விடும். இறந்துவிடும். அலங் காரமான மேன்மையான குடும்பத்தை யுடையவர். இந்த விஷயங்களை எல்லாம் இன்னொரு பாகத்திற் சொல்லுகிறேம். முனிவர்களையும் பரதேசி களையும் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

17. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினே ழாண்டில்
வேல்விழி மேல்பால் நேரும் விளம்புவோ மவன்கு ணத்தைக்
காலத்தை அறிந்து ரைப்பள் கண்முக வசிய முண்டு
மால்மனை யொப்ப தாகும் மங்கள வார்த்தை யுண்டு.

17. ஜாதகருக்குக் கலியாணம் நடக்குங் காலத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவருக்குப் பதினேழாவது வயதில் * வேலைப்போன்ற கண்களையுடைய அழகிய மனைவி மேற்குத்திக்கிலிருந்து வந்து நேருவாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். அந்த அந்தக்காலத்திற்குத் தகுந்தாற்போலப் பேசுவாள். கண்களும் முகமும் வசீகரமாகவும் அழகாகவும் இருக்கும். மகாவிஷ்ணுவின் மனைவியாகிய லக்ஷ்மியைப்போல விருப்பாள். நல்ல சுபகரமான வார்த்தைகளையே உபயோகிப்பாள்.

* குறிப்பு.—ஜாதகருடைய விவாகம்—ஜாதகருக்கு வயது ௵ 16-0-0 முதல் ௵ 17-0-0 வரையிலும் சனிதசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. சனி ஏழாம் பாவமாகிய களத்திர பாவத்திற்குடையவராகி லக்கினத்தில் போககாரகனாகிய ராகுவுடன்கூடி குடும்பாதிபதியாகிய சூரியனாலும் குருவாலும் பார்க்கப்பட்டிருக்கின்றார். சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்கிற்குடையவராகவும் களத்திரகாரகனாகவும் இருக்கின்றார். ஆகையால் சனிதசையில் சுக்கிரபுத்தியில் விவாக அமைப்பு இருக்கின்றது.

18. தோகைபோல் சாய லொக்கும் சொல்லது சுருக்க மாகும்
நாகரிகங்க ளுண்டு நடைநன்மை யோக சாலி
தாகமென் றோர்க்குமீவள் தன்வரன் மனதுக் கேத்தோள்
போகபாக் கியங்க ளேற்பள் பூவையும் தீர்க்கஜீவி.

18. ஜாதகருடைய மனைவி மயிலைப்போன்ற ரூபமுடையவள். சுருக்கமாகப் பேசுவாள். நாகரிகங்களையுடையவள். நல்ல நடவடிக்கை யுள்ளவள். யோகத்தையுடையவள். தாகவிடாய் இருக்கின்றது என்று சொல்லுகிறவர்களுக்குத் தாகந் தீர நீர்மோர் கொடுப்பாள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளக்கூடியவள். போகங்களையும் செல்வங்களையும் அடைவாள். இவள் நீண்ட ஆயுளை உடையவள்.

19. சுத்தம அஷ்ட மத்தோன் சனியாகி பொன்னோன் [1] பார்க்கப்
பத்தினி ஒன்றே தீர்க்கம் பகரொணு தாரம் ரண்டு
வித்தகி யவன்முன் னாலே மேவுவாள் காலன் னூடு
சுத்தமாம் தாரம் ஒன்றே செப்பினே மவர்க்கிவ் வாறு.

19. ஏழிற்கும் எட்டிற்கும் உடையவர் சனியாகி இவர் குருவால் பார்க்கப்படுவதால் ஜாதகருக்கு ஒரே மனைவிதான். அவள் தீர்க்க ஜீவியாயிருப்பாள்*. இவருக்கு இரண்டு தாரம் நேரிடும் என்று சொல்லக்கூடாது. மனைவி ஜாதகருக்கு முந்தியே இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். குற்றமில்லாமல் இவருக்கு ஒரேதாரம் என்று சொல்லுகிறோம்.

[1] குரு.

* குறிப்பு.—மனைவி விவரம்—முதல் மனைவி சம்பந்தமான பாவங்களும் கிரகங்களும் இந்த ஜாதகத்திற்கு 7-ஆவது, 2-ஆவது பாவங்களும், சனியும் சூரியனும் சுக்கிரனும் முறையே ஆகும். சனி லக்கினத்தில் ராகுவுடன்கூடி சூரியன் புதன் கேது குரு இவர்களால் பார்க்கப்பட்டிருக்கின்றார். சனி சரராசியில் இருப்பது முதல் களத்திரத்திற்குப் பிரதிகூலமானது. இரண்டாவது களத்திரபாவமாகிய ஒன்பதிற்குடைய குரு லக்கினாதிபதியாகிய சந்திரனைப் பார்க்காமல் லக்கினத்தைப் பார்த்திருக்கின்றார். குருவிற்கு இரண்டாந்தாரத்தைக் கொடுக்கும் அமைப்பு கொஞ்சமாக வந்திருக்கின்றது. புதன் திரிதிகை விரயாதிபதியாகிச் சூரியனுடன் சேர்ந்து ஏழில் இருக்கின்றார். 7-ஐ அங்காரகன் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகருக்குக் கொஞ்சம் தாரதோஷமிருக்கின்றது. அதனால் தாரம் ஜாதகருக்கு முன்னே இறந்துவிடுவாள் என்று இங்கு சொல்லி இருக்கின்றது. ஜாதகருக்கு வயது ௵ 43-7-0 முதல் ௵ 50-7-0 வரையிலும் கேது தசை நடக்கின்றது. கேது தசையில் மனைவிக்கு மரணம் நேரிடலாம். ஜாதகருக்குப் பூர்ணயுள் ௵ 62 ஆகும். நான்கில் அங்காரகன் போகஸ்தானத்தில் இருப்பதாலும் குரு 9-க்குடையவராய் லக்கினத்தைப் பார்ப்பதாலும் விவாகமான இரண்டாந்தாரம் ஏற்படாமல் ஒரு ரகசியமான சேர்க்கைஸ்திரீ ஏற்படலாம்.

20. சுதர்களு மாண்பால் மூன்று தோகையு மிருவர் தீர்க்கம்
இதுநிற்க இவன்முன் ஜன்மம் மியம்புவோ நவபா ஷாணம்
அதுநகர் தன்னில் வேளாண் அனுகியே கிருஷி செய்து
நிதிமிக உடையா னுகி நீத்தோர்க்கு அன்ன மீந்து;

20. ஜாதகருக்கு மூன்று ஆண்குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்கள். இப்படியிருக்க இனிமேல் ஜாதகரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் நவபாஷாணம் என்ற பட்டணத்தில் வேளாளர் குலத்திற் பிறந்து விவசாயஞ் செய்து அதிகப் பணமுடையவராகி ஏழைகளுக்கும் உலகப்பற்றை விட்டுவிட்டப் பரதேசிகளுக்கும் சாப்பாடுபோட்டு ;

21. பலதல வாசம் சென்று பவமது மில்லா தாகிக்
குலவினன் காலன் னூடு குறைதலை வரையப் பட்டுத்
தலைவனு முதிப்பா னுகும் ஜயமுனி மறுத்துச் சொல்வார்
நிலம்விருத்தி செயுங்கு லத்தில் நேர்ந்தனள் பூர்வ மென்றீர்.

21. பலவிதமான, அநேகவிதமான திவ்ய க்ஷேத்திரங்களுக்குப் போய் பாவம் ஒன்றும் இல்லாதவராகி இறந்து எமபட்டணத்திற்குச் சென்று பிரமதேவனால் எழுதப்பட்டு ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறப்பார் என்று சொல்ல, ஜயமுனிவர் தடுத்துக்கேட்கின்றார். முன்ஜன்மத்தில் ஜாதகர் வேளாளர் குலத்தில் பிறந்தவர் என்று சொன்னீர்.

22. இந்ததோர் ஜன்மம் தன்னி லீசனைப் பூசை செய்யும்
முந்தின குலம் எவ்வாறு உதித்தகா ரணங்கள் சொல்வாய்
அந்தவன் முன்ஜன் மத்தில் அதிதிக்கட் கன்ன மீந்து
விந்தையாய்த் தலங்கள் சென்று வித்தகன் வாழ்ந்த தாலே ;

22. ஜாதகர் இந்த ஜன்மத்தில் பரமசிவனைப் பூஜைசெய்யும்படியான முதன்மையான குலமாகிய பிராமண குலத்தில் வந்து பிறப்பதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகர் முன் ஜன்மத்தில் பணக்காரனாக விருந்து பரதேசிகளுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாடுபோட்டு ஆச்சரியமாக அனேக ஸ்தலங்களுக்குப்போய் அறிஞராக விருந்து வாழ்ந்ததால் ;

23. உதித்தன னென்று சொல்வோம் உரைக்கிறே மிவனின் யோகம்
மதித்திடக் குடும்பி யாவன் மாநிலம் விருத்தி செய்வன்
நிதிமிக பெருக்கம் செய்வன் நேமியில் வறுமை காணன்
பதியது வேறு செய்வன் புதன்தசை தன்னி லேதான்.

23. ஜாதகர் இந்த ஜன்மத்தில் இவ்விதமாகப் பிராமண குலத்திற் பிறந்தார் என்று சொல்லுகிறோம். இனிமேல் இவருடைய யோகங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவரைப் பிறர் மதிக்கத்தகுந்த குடும்பமுடையவராவர். பெரிய பூமிகளைப் பயிர்செய்து விருத்திசெய்வார். செல்வத்தை மிகவும் அதிகமாக்குவார். பூமியில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அனுபவிக்கமாட்டார். புதன்தசை காலத்தில் வேறு ஒருவீடு கட்டி அதில் வாசஞ்செய்வார்.

24. ஜாதகன் தனக்கு யோகம் சார்ந்தகா ரணங்கள் சொல்வாய்
ஆதவன் [1]தனக்கீ ராறு அசுரர்மந் திரியும் [2] நிற்க
மாதவன் [3]அஞ்சில் தங்க மங்கலன் [4]நாலிலாகப்
போதவே வேசி யோகம் புரந்தரன் யோக மொன்று.

24. ஜாதகருக்கு யோகங்கள் உண்டாவதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, சூரியனுக்குப் பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பதாலும், குரு ஐந்தில் இருப்பதாலும், அங்காரகன் நான்கில் இருப்பதாலும் வேசியோகம் * என்ற ஒரு யோகமும் இந்திரயோகம் என்ற ஒருவித யோகமும் இருக்கின்றது.

* குறிப்பு.—யோக விஷயங்கள்—(1) வேசியோகம்.—சூரியனுக்குப் பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பதால் வேசியோகம் ஏற்படுகிறது என்று சொல்லுகிறார். இந்த யோக விஷயமாக ஜாதகாலங்காரம் 277ஆ-வது பாடல், ஜாதகசிந்தாமணி 2049-ஆவது 2050-ஆவது பாடல்கள், பலதீபிகை அத்தியாயம் 6, சுலோகம் 8, ஜாதகசாரதீபிகை 51-ஆவது அத்தியாயம். 1-ஆவது சுலோகம், ஜாதக பாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 121-ஆவது சுலோகம்

---

[1] சூரியன். [2] சுக்கிரன்.
[3] குரு-தவம் என்ற 9-க்குடையவர். [4] அங்காரகன்.

ஆகிய இவைகளைப் பார்க்கவும். (சில புத்தகங்களில் வேசியோகத்தையும் வாசியோகத்தையும் ஒன்றிற்கொன்று மாற்றிப்போட்டிருப்பதையுங் கவனிக்கவும்.)

(2) இந்திர யோகம்.—இந்த யோகவிஷயமாய் ஜாதகாலங்காரம் 333-ஆவது, 362-ஆவது பாடல்கள், ஜாதகபாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 68-ஆவது சுலோகம், ஜாதகசிந்தாமணி 1994-ஆவது, 1987-ஆவது பாடல்கள் இவைகளையும் பார்க்கவும். இந்த ஜாதகத்தில் நான்காவது பாவத்தில் அங்காரகன் இருப்பதால் ஜாதகாலங்காரம் 333-ஆவது பாடலை அனுசரித்து இந்திரயோகம் இருப்பதாகச் சொல்லி இருப்பதைப்போலத் தோற்றுகிறது.

25. கமலயோ கங்க ளொன்று கழறிறோம் மூன்று யோகம்
அமைந்திடும் பூமி பொன்னும் அறுதியாம் பொருளும் நேரும்
இமையவர் போலே வாழ்வன் ஏகமாம் தாரம் தானும்
சிவன்தனைப் பூசை செய்யும் செல்வதி மேலுங் கேளே.

25. கமலயோகம் * என்ற ஒருவித யோகமும் இருக்கின்றது. ஆகையால் மூன்றுவிதமான யோகங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறோம். ஜாதகருக்குப் பூமிகளும் தனமும் வந்து சேரும். அறுதியான பொருளும் வந்துசேரும். தேவர்களைப்போல வாழ்வார். இவருக்கு ஒரே தாரந்தான் உண்டு. சிவபெருமானைப் பூஜைசெய்கின்ற பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லப்போகிறதைக் கேட்பீராக.

* குறிப்பு.—கமலயோக விஷயம்—இந்த யோக விஷயமாய் ஜாதக சிந்தாமணி 2035-ஆவது பாடலைப் பார்க்கவும். இந்தப்பாடல் பிரகாரம் லக்கினத்திற்குக் கேந்திரஸ்தானங்களாகிய ஒன்று நான்கு ஏழு பத்து இந்தப் பாவங்களில் இராகு கேது நீங்கலாகவுள்ள மற்ற ஏழு கிரகங்களும் இருந்தால் கமலயோகம் ஏற்படுகிறது. ஆனல் இங்கு சனி அங்காரகன் சூரியன் புதன் ஆகிய நான்கு கிரகங்கள்தான் கேந்திரங்களில் இருக்கின்றன. இதைக்கொண்டு கமலயோகம் இருப்பதாகச் சொல்லி இருப்பதைப் போலத் தோற்றுகிறது. ஐந்திலுள்ள குருவைப்பற்றியும் மூன்றுவித யோகங்களைப்பற்றிப் பேசும்போது சொல்லியிருப்பதையுங் கவனிக்கவும்.

26. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
சாதிப்பாள் சிலது சங்கை சந்தேக மனத்தா ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உரகம்போல் கோபம் கொஞ்சம்
மேதினில் நல்லோ ளாவள் விசனமே காண ளாகும்.

26. ஜாதகருடைய தாயின் குணதிசயங்களைச் சொல்லுகிறேன். மாமரத்தின் துளிரின் நிறம்போன்ற ஒருவிதமான சிகப்பு நிறமுடையவள். சில காரியங்களைச் செய்துமுடிப்பாள். சந்தேகமான மனத்தை யுடையவள். இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவாள். பாம்பைப்போலக் கொஞ்சம் கோபம் திடீரென்று வந்து சீறுவாள். பூமியில் நல்லவளாக விருப்பாள். துன்பமே அடையாதவளாவள்.

27. இல்லமும் மேல்பால் என்றே மிவள்துணே ஆண்பால் ரண்டு
சொல்லுவோம் தீர்க்க மாகத் தோகையின் பூர்வம் கேளாய்
எல்லேயா லுயர்வ தான எழில்கொங்கு நாட்டி லேதான்
புல்கினள் செக்கான் வமிசம் பெரிதான குடும்பி யாகி.

27. ஜாதகருடைய தாயாரின்வீடு மேற்குத்திக்கிலிருக்கும் என்று சொல்லுகிறேம். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு ஆண் சகோதரர்கள் நீண்ட ஆயுளேயுடையவர்களாக விருப்பார்கள். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். கேட்பீராக. உயரமான பூமியையுடைய மேன்மை தங்கிய அழகில் கொங்குநாட்டில் செக்காடுவர் குலத்தில், அஃதாவது ஒரு செட்டியார் வமிசத்தில் பிறந்து ஒரு பெரிய குடும்பஸ்தளாகி ;

28. அறமதி லிச்சை யுண்டாய் அச்சேது பதிக்குச் சென்று
சிறியோர்க்கு அன்ன மீந்து சென்றனள் காலன் ஞூடு
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
பராசரும் மறுத்துச் சொல்வார் பாவைமுன் செக்கான் வமிசம்.

28. தருமத்தில் ஆசையுடையவளாகிச் சேதுஸ்தலத்திற்குப்போய் ஏழைகளுக்குச் சாப்பாடுபோட்டுப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குச் சென்று பிரமதேவனல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகிறேம். பராசரமுனிவர் தடுத்துக்கேட்கின்ருர். இவள் முன்ஜன்மத்தில் செக்காடும் செட்டியார் குலத்தில்.

29. வந்தவளிச் சென் மத்தில் மறை குல முதிப்ப தென்ன
முனஜன்மம் சேது புண்ணியம் மேவினு ளிக்கு லத்தில்
பின்ஜன்மம் தில்லே தன்னில் பிறப்பளா மிக்கு லத்தில்
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே. .

29. பிறந்தவள் இந்த ஜன்மத்தில் பிராமணஜாதியில் பிறந்ததற்குக் காரணம் என்ன என்று கேட்க, இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் சேதுஸ்தலத்திற்குப்போன புண்ணியத்திளுல் இந்த ஜன்மத்தில் பிராமணகுலத்தில்வந்து பிறந்திருக்கின்ருள். மறுஜன்மத்தில் சிதம்பரத்தில் இதே பிராமண குலத்தில்வந்து பிறப்பாள். மேன்மையான யானே முகத்தையுடைய விநாயகக்கடவுளேப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

30. தந்தைமுன் ஜன்மம் சொல்வேன் தாம்பிர பரணி தன்னில்
பிந்திய குலமு தித்துப் பெரிதான செட்டுச் செய்து
வந்தவர்க் கன்ன மீந்து விேயது யில்லா தாகித்
தென்திசை நாடு சென்று சிரநான்கோன் வரையப் பட்டு ;

30. ஜாதகருடைய தகப்பனுரின் முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். தாம்பிரபரணியில் தாழ்ந்த ஒரு குலத்திற் பிறந்து பெரிய வியாபாரஞ் செய்து வந்தவர்களுக்குச் சாப்பாடு போட்டுப் பாவம் ஒன்றும் இல்லாதவராகி இறந்து தெற்குத்திக்கிலுள்ள எமபட்டணத்திற்குப்போய் நான்கு முகங்களேயுடைய பிரமதேவனுல் எழுதப்பட்டு ;

31. வந்தவ னென்று சொல்வோம் விேயின்றி வந்தோ னுக்கு
அந்திய காலம் தன்னில் அவன்சோதி ஒப்ப தாயும்
விந்தையாய் வாயு மாதை மேலான காரணம் சொல்
பந்தனே வேசி சாபம் பற்றிற்று என்று சொல்வோம்.

31. இந்த ஜென்மத்தில் வந்து பிறந்தவரென்று சொல்லுகிறேம். முன் ஜன்மத்திய பாபம் ஒன்றும் இல்லாமல் வந்து பிறந்தவருக்குக் கடைசி காலத்தில் நாக்குபூச்சியைப் போன்ற ஒருவித கிரிமியால் ஆச்சரியமாய் வாயு ரோகம் ஏற்படும். இதற்குத் தகுந்த உயர்ந்த காரணத்தைச் சொல்லுமென்று கேட்க, ஒரு வேசி மகளுடைய சாபம் இவரை வந்து அடைந்தது என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—ஏழாவது பாடலே வாசிக்கவும். அவ்விடத்தில் "சோதி குற்றத்தால்" வாயு ரோகம் வரும் என்று சொல்லி இருக்கிறதைக் கவனிக்கவும்.

32. மூவேழு ஆண்டு தன்னில் மேவிடும் தந்தை கண்டம்
சேவலன் அருளி ஞலே செப்புவோம் பின்ஜன் மத்தை
ஆவலாய்த் தக்கோ லத்தில் அருளுவான் க்ஷத்திரிய சேயாய்
மேவியே செட்டுச் செய்வன் வித்தகி கேட்டி டாயே.

32. ஜாதகருக்கு இருபத்தோராவது வயதில் இவருடைய தகப்பனர், இறந்து விடுவார். முருகக் கடவுளின் கிருபையால் தகப்பனுருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேம். ஆசையுடன் தக்கோலத்தில் க்ஷத்திரிய வமிசத்தில் வந்து பிறப்பார். மேலான வியாபாரத்தைச் செய்வார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—பிதுர் மாரகவிஷயம்—ஜாதகருக்கு வயது ஷூ 20–0–0 முதல் ஷூ 21–0–0 முடியும் வரையிலும் சனி தசையில் சந்திர புக்தி, அங்காரகன் புத்திகள் நடக்கின்றன. பிதுர் லக்கினம் மீனம். மீன லக்கினத்திற்குப் பராசர ஹோரை 13-ஆவது அத்தியாயம், தாண்டவமாலே, சந்திரகாவியம், ஜாதக சந்திரிகை 67-ஆவது சுலோகம் இவைகள் பிரகாரம் சனிமாரகராகின்ருர். இவர் பிதுர் காரகனுகிய சூரியனேப் பார்க்கின்ருர். ஆகையால் இவருக்குப் பிதாவை மாரகஞ்செய்ய அதிகாரம் இருக்கின்றது. அங்காரகன் இரண்டிற்கும் ஒன்பதிற்கும் உடையவராகி மாரகஸ்தானமாகிய எட்டாவது வீட்டில் மீன லக்கினத்திற்குப் பராசரஹோரை பிரகாரம் மாரகாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருக்கின்ருர். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப்பிரகாரம் சந்திரனேவிட அங்காரகனுக்கும் பிதாவை மாரகஞ் செய்ய அதிகாரம் இருக்கின்றது. தாண்டவமாலே, சந்திரகாவியம், ஜாதக சந்திரிகை இவைகள் எல்லாம் பிருஹத்பராசரஹோரை என்ற பராசாஹோரையை அனுசரித்து எழுதிய கிரந்தங்களாகும்.

33. முப்பது ஆறு ஆண்டில் விளம்புவோ மன்னே கண்டம்
செப்புவோம் ஜாத கர்க்குச் சுக்கிரன் தசையில் கண்டம்
அப்போது அறுபான் ரண்டில் ஆனிமா தத்தி லேதான்
ஒப்புவான் கால ஞூடு உத்தமி கேட்டி டாயே.

33. ஜாதகருக்கு முப்பத்தாருவது வயதில் இவருடைய தாயாருக்கு மரணம் நேரிடும். ஜாதகருக்குச் சுக்கிரதசையிடு மாரகம் நேரிடும். இவருக்கு அறுபத்திரண்டாவது வயதில் ஆனி மாதத்தில் மரணம் நேரிட்டு இவர் எமபட்டணம் போய்ச் சேருவார். பார்வதியம்மையே கேட்பீராக.

1. குறிப்பு.—தாய்மாரக விஷயம்—ஜாதகருக்கு வயது ஷை 35–0–0 முதல் ஷை 36-0-0 முடியும்வரையிலும் புத தசையில் சந்திரபுக்தி அங்காரக புக்திகள் நடக்கின்றன. மாதுரு லக்கினம் துலாம். துலாத்திற்குப் பராசர ஹோரை ஜாதகசந்திரிகை பிரகாரம் சூரியன் மாரகாதிபதி. புதன் பன்னிரண்டிற்குடையவராகிச் சூரியனுடன் கூடி இருக்கின்ருர். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் புதனுக்குத் தாயாரை மாரகஞ் செய்ய அதிகாரம் இருக்கிறது. துலாத்திற்கு அங்காரகன் மாரகஸ்தானங்களாகிய இரண்டு ஏழிற்குடையவராகி லக்கினத்திலேயே இருக்கின்ருர். இவர் எட்டாம் பாவமாகிய ரிஷபத்தையும் பார்த்திருக்கின்ருர். சில கிரந்தங்களில் அங்காரகன் துலாலக்கினத்திற்கு மாரகஞ் செய்வார் என்று கண்டிருக்கின்றது.

2. ஜாதகர் மாரகம்.—ஜாதகருக்கு வயது ஷை 61–0–0 முதல் ஷை 62–0–0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் குருபுக்தி நடக்கின்றது. கடகலக்கினத்திற்குப் பராசஹோரை ஜாதகசந்திரிகை 50-ஆவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் மாரகராகின்ருர். இந்திரஜித்து கடகலக்கினத்திற் பிறந்து அவரைச் சுக்கிரன் மாரகஞ் செய்துவிட்டபடியால் கடகலக்கினத்திற்குச் சுக்கிரன் பெரும் மாரகராகக் கருதப்பட்டு வருகின்ருர். இவர் ஆறில் இருந்து கொண்டு லக்கினுதிபதியாகிய சந்திரனையும் பார்க்கின்ருர். ஆகையால் இவர் துய்யகேரளம் எட்டாவது பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் (சந்திரனைப் பார்ப்பதாலும்) மாரகராகின்ருர். மேலும் குரு ஆறுக்குடையவராய் அனுஷநட்சத்திரத்தில் சனியின் காலில் இருந்து கொண்டு லக்கினத்தையும் அஷ்டமாதிபதியாகிய சனியையும் பார்க்கின்ருர். ஆகையால், துய்யகேரளம் எட்டாவது பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் (பார்ப்பதால்) குரு மாரகராக ஆகின்ருர். குரு ஆறுக்குடையவ ராகையால் குமாரசாமியம் பிரகாரங்கூட மாரகராகின்ருர்.

34. பின்ஜன்மம் தணிகை உத்திரம் பேரூரில் க்ஷத்திரிய சேயாய்
மன்னனு முதித்து மேலும் வாரணம் புரவி யோடு
அன்நக ரரசு செய்வனறைந்த மொழிகுன் ருது
கன்னென மொழியி ஞளே காளைபோல் ஜனன காலம்.

34. ஜாதகர் மறு ஜன்மத்தில் திருத்தணிகைக்கு வடக்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் க்ஷத்திரிய குலத்திற் பிறந்து யானை குதிரை இவைகளை வைத்துக்கொண்டு அந்தப் பட்டணத்தை அரசாளுவார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். இனிமையான வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே! ரிஷபத்தைப்போல ஆண்மையுடன் பிறந்த இந்த ஜாதகருக்கு ஜனனகாலத்தில் ;

35. பொன்[1]தசை ஆண்டு ஏழும் புகழ்திங்க ளவ்வா றென்றேும்
இன்னவன் பிணிஅ னேகம் இனஞ்சூதம் காலி பீடை
முன்பாகம் விவரம் சொன்னேும் மொழிகிறேும் பின்பால் சேதி
மன்னிய பத்தோன் நாளில் வந்ததால் பலனெவ் வாறு.

35. குருதசை இருப்பு ஏழு வருஷமும் ஏழு மாதமும் ஆகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்கு அநேக ரோகங்கள் வரும். இனத்தில் சூதங்கள் நேரிடும். கால் நடைகளுக்குக் கஷ்டங்கள் வந்து சம்பவிக்கும். இது வரையிலும் முன் பாகத்தின் விவரங்களைச் சொன்னேும். இதர விஷயங்களைப் பின்னுல் சொல்லுகிறேும். பத்திற்குடையவராகிய அங்காரகன் நானில் வந்திருப்பதால் என்ன பலன் நேரிடும் என்று கேட்க ;

36. பூர்வமாம் பொருளும் நேரும் புகலுவீர் காலம் தன்னைத்
தீரமாய்ப் புந்தி காலம் செப்புவோம் முப்பான் மேலாய்
வேறொரு பாகம் தன்னில் விளம்புவோ மந்தச் சங்கை
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகருக்குப் பூர்விகமான முன்னேர்களுடைய சொத்துவந்து சேரும் என்கிருர். இந்தச் சொத்து வருங்காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, புதன்தசை காலத்தில் முப்பது வயதிற்குமேல் நேரிடும் என்று உறுதியாய்ச் சொல்லுகிறேும். இந்த விஷயங்களை இன்னொரு பாகத்தில் சொல்லுகிறேும். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

[1]. குரு.

ஜாதகம் 69

1. கடகலக்கினம் தாகக் கதிர்[1]மூன்றில் கேது பத்தில்
விடம்[2] புகர்[3] புதன்சேய்[4] நாலில் வெண்மதி[5] யெட்டி லாக
முடவனும்[6] குருவு மாறில் மேவிய கிரகம் நின்ருல்
அடவுடன் பலன்க ளெவ்வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

	கேது		
சந்திரன்	இராசி சக்கரம்		லக்கினம்
குரு சனி		புதன் சுக்கிரன் அங்கார. ராகு	சூரியன்

சதயம் 1-ஆம் பாதம். ராகு தசை இரு 15-6-26.

1. ஜன்மலக்கினம் கடகமாகிச் சூரியன் மூன்றிலும், கேதுபத்திலும், இராகு சுக்கிரன் புதன் அங்காரகன் இவர்கள் நான்கிலும், வளர்பிறைச் சந்திரன் எட்டிலும், சனியும் குருவும் ஆறிலும் இருந்தால், பலாபலன்கள் எவ்விதமாக உள்ளன ! முனிவரே ! நீர் சொல்லுவீர் என்று கேட்க ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொறுத்தமுடையதாகும்—ரிஷபத்தில் அங்காரகனும் ராகுவும், கடகத்தில் குருவும், சிம்மத்தில் சனியும், துலாத்தில் புதனும், விருச்சிகத்தில் சுக்கிரனும் கேதுவும், தனுசில் சந்திரனும், மீனத்தில் சூரியனும் ஆகும்.

2. பிருகுவும் புகலு கின்ருர் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலும் மேல்பால் நோக்கம்
திருமாலும் மேல்பா லாகும் சிவனுமே அதின்மேல் தங்கும்
முருகன்தன் கோஷ்டம் வாயு மோதக ஹஸ்தன் தென்கீழ்.

2. பிருகுமஹாரிஷி சொல்லுகின்ருர். ஜனனமான குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் இருக்கும். தெரு வாயில் மேற்குத் திக்கைப் பார்த்திருக்கும். மகா

1. சூரியன். 2. ராகு. 3. சுக்ரின். 4. அங்காரகன். 5. சந்திரன். 6. சனி.

விஷ்ணுவின் கோயில் மேற்குத் திக்கிலிருக்கும். இதற்கு மேற்கில் சிவன் கோயில் இருக்கும். வடமேற்குத் திக்கில் முருகருடைய கோயில் இருக்கும். விநாயகருடைய கோயில் தென்கிழக்குத் திக்கில் இருக்கும்.

3. பலஜாதி அவ்வூர் வாசம் பெரியதோர் நகர மாகும்
தலைவனு மைந்தாம் ஜன்மம் ஜனிப்பன்செங் குந்த சேயாய்
நலமுள அன்னை தந்தை நாயகன் துணைவர் யோகம்
குலவிய முன்பின் ஜன்மம் கூறுவோ மிந்நூல் தன்னில்.

3. ஜாதகர் பிறந்த ஊரில் அனேக ஜாதியார்கள் வாசஞ் செய்வார்கள். அந்த ஊர் ஒரு பெரிய பட்டணமாகவிருக்கும். ஜாதகர் ஐந்தாவது கர்ப்பத்தில் பிறப்பார். இவர் செங்குந்தர் ஜாதி என்ற கைக்கோலர் ஜாதியில் பிறப்பார். இவருடைய தாயார் தகப்பனர் சகோதரர் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிருேம்.

4. தந்தையின் துணைதே சத்தில் ஆணென்று கன்னி அவ்வாறு
இந்தவாறு விருத்தி யென்ருே மியம்பின ஆண்பெண் ணும்தான்
பிந்திய துணைவனுகப் பேசுவோ மவன்கு ணத்தைச்
சிந்தையும் நல்ல தாகும் சிறப்பான கல்வி கற்பன்.

4. ஜாதகருடைய தகப்பனரின் சகோதரர்களில் பூமியில் ஆண் ஒன்றும் பெண் ஒன்றும் ஆகும். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகிருேம். இவர்கள் தகப்பனருக்கு இளையவர்களாவார்கள். இளைய சகோதரனின் குண குணங்களைப்பற்றிச் சொல்லுகிருேம். இவருக்கு மனது நல்ல மனதாகும். மேன்மையான வித்தையைப் படிப்பார்.

5. தந்தையால் சுகமில் லாதான் தரித்திரம் பூர்வ மாகும்
தந்தையி னுஸ்தி காணன் தனமது பெருக்க மில்லான்
தன்பந்து மதிக்க வாழ்வன் சகலர்க்கு மிவன்சொல் மேன்மை
தந்தமும் தரள மொக்கும் தார்மிக குணத்தானுகும்.

5. இவருக்குத் தன்னுடைய தகப்பனரினல் சுகங்கள் கிடையாது. முன் வயதில் இவருக்குத் தரித்திர நிலைமையுண்டு. தகப்பனருடைய சொத்து இவருக்குக் கிடையாது. அதிகச் செல்வமில்லாதவர். தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியான அந்தஸ்துடன் வாழ்வார். எல்லோருக்கும் இவருடைய வார்த்தைகள் மேன்மையாகவும் பாராட்டத்தக்கனவாகவும் இருக்கும். பற்கள் முத்தைப்போல வெண்மையாகவும் அழகாகவும் இருக்கும். புண்ணியமான நல்ல குணமுடையவராவார்.

6. கல்வியும் சிலர்க்குச் சொல்வன் கருதிடான் கட்டு வார்த்தை
இல்லையென் றுரைக்க மாட்டா னிடர்செய்யான் யாவ ருக்கும்
நல்லவ னுகி வாழ்வன் நாயகி ஒன்றே தீர்க்கம்
சொல்லது சுருக்க மாகும் சுதர்முன்னுல் நஷ்ட மெய்தும்.

6. இவர் சிலருக்கு வித்தையைக் கற்றுக் கொடுப்பார். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் எண்ணி உபயோகிக்க மாட்டார். யாருக்கும் இல்லை யென்று சொல்லமாட்டார். யாருக்குங் கெடுதிகளைச் செய்யமாட்டார். நல்லவன் என்று பெயரெடுத்து வாழ்வார். இவருக்கு ஒரே மனைவி தீர்க்காயுளுடையவளாயிருப்பாள். இவர் சுருக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவார். முன்னால் பிறக்கும் குழந்தைகள் இறந்து விடும்.

7. பின்சுதர் விருத்தி தீர்க்கம் பேசுவோம் ஆண்பா லொன்று
கன்னிமா ரிருவர் தீர்க்கம் கழறுவோம் பின்பால் சேதி
தன்தந்தை குணத்தைச் சொல்வேன் தருமமாம் குணத்தா னுகும்
ஊகவான் நுணுக்கம் தேர்வன உயர்வான கல்வி கற்பன்.

7. பின்னால் பிறக்குங் குழந்தைகள் நீண்ட ஆயுளையுடையனவாக விருக்கும். ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையனவாக விருக்கும். இவர்களுடைய விஷயங்களைப் பின்னால் சொல்லுகிறோம். ஜாதகருடைய தகப்பனாரின் குணதிசயங்களை இனிமேல் சொல்லுகிறேன். இவர் தருமஞ் செய்யுங் குணமுடையவர். இவர் புத்திசாலி. மிகவும் நுட்பமானவைகளை அறியும் கூர்மையான புத்தியை யுடையவர். மேன்மையான உயர்ந்த கல்வியைக் கற்றறிந்தவர்.

8. பாகமாய்ப் பேசு வானும் பதர்குண மில்லா னுகும்
நாகரிகங்க ளுண்டு நடைநன்மை பொறுமை யுண்டு
தாகமென் றோர்க்கு மீவன் ஷண்முகன் பத்தி பூண்பன்
ஆதியில் வறுமை யுண்டு அலைமீது துரும்பு போல.

8. இவர் பக்குவமாகவும் திறமையாகவும் பேசுவார். அற்பமான குணமில்லாதவர். நாகரிகங்களுடையவர். நல்ல நடவடிக்கையை யுடையவர். பொறுமையாக விருப்பார். தாகவிடாய் இருக்கின்றது என்று சொல்லுகிறவர்களுக்கு நீர் மோர் கொடுப்பார். முருகக் கடவுளின்மேல் பக்தியுடையவர். முன்வயதில் கஷ்டங்களும் தரித்திரமும் உண்டு. இவர் சமுத்திரத்தின் அலையில் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் துரும்பைப் போல் முன் வயதில் அதிக கஷ்டப்படுவார்.

9. பாதியின் வயது மேலாய்ப் பகருவோம் யோகம் தானும்
போதிப்பான் சிலர்க்கு ஞானம் பெரியோர்க ளுறவு கொள்வன்
பாதியாய் வடிவு கொண்ட பார்வதி கேட்டி டாயே.
.. ..

9. இவருக்குப் பாதி வயதிற்கு மேலே யோகமுண்டென்று சொல்லுகிறோம். இவர் சிலருக்கு ஞானத்தை உபதேசிப்பார். பெரிய மனிதர்களின் சினேகிதத்தை அடைவார். சிவபெருமானின் தேகத்தில் பாதி வடிவமாயுள்ள பார்வதியம்மையே ! கேட்பீராக.

10. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளா னிருநி றத்தன்
உன்னதக் கல்வி கற்பன் உயர்வான புத்தி யேற்பன்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பா னென்று சொல்வேன்.

10. இது வரையிலும் சொல்லிவந்த குணங்களையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களை இனிமேல் சொல்லுகிறேன். இவர் அழகுள்ளவர். இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமுள்ள தேகத்தையுடையவர். மேன்மையான, உயர்ந்த வித்தையை யுடையவர். உயர்ந்த புத்தியுடையவர், தான் சொல்லும் வார்த்தையே உயர்ந்தது மேன்மையானது என்று சொல்லி பிடிவாதஞ் செய்து வெல்வார் என்று சொல்லுகிறேன்.

11. தந்தையால் சுகமில் லாதான் தறிபடக் கூறு னுகும்
பிந்திய தந்தை யாலே புதல்வனும் உய்வா னுகு
மெந்திடம் பெருமை யேற்பன் இருவிதக் கல்வி யுண்டு
மந்தன்[1]போல் ஒருகால் ஊனன் வயதுமே தீர்க்க மெய்தும்.

11. ஜாதகருக்குத் தன்னுடைய தகப்பனரால் சுகம் கிடையாது. இவர் வெட்டி வெட்டிப் பேசமாட்டார். தன்னுடைய சிறிய தகப்பனரால் ஜீவனஞ் செய்வார். எந்த இடம் போனலும் இவருக்கு மதிப்பும் பெருமையுமுண்டு. இரண்டுவிதமான வித்தையுடையவர். சனி பகவானைப் போல ஒரு கால் குறைவாயுள்ளவர் * இவருக்கு நீண்ட ஆயுளுண்டு.

* குறிப்பு.—ஒருகால் விஷயம்.—பின்னால் வருகின்ற 28-ஆவது 30-ஆவது பாடல்களைப் பார்க்கவும்.

12. தன்துணை முன்பெண் ரண்டு தங்கிடும் தீர்க்க மாக
பிந்திய துணைகள் காணுன் பேசுவீ ரந்தச் சங்கை
மந்தனும்[1] மூன்றைப் பார்க்க மார்த்தாண்டன்[2] மூன்றி லாக
இந்தவாறுபலத்தி னுலே யியம்பினேம் துணையும் காணுன்.

12. ஜாதகருக்கு இரண்டு மூத்த சகோதரிகள் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். பின் சகோதரங்கள் கிடையா. இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, சனி மூன்றுமிடத்தைப் பார்ப்பதாலும், சூரியன் மூன்றில் இருப்பதாலும்* இவ்விதமான கிரக பலத்தாலும் பின் சகோதரர்கள் கிடையா என்று சொன்னேம்.

* குறிப்பு.—சகோதர விஷயம்—சூரியன் மூன்றில் இருந்தாலும் மூன்றைப் பார்த்தாலும் முன்னே பின்னே பிறந்தச் சகோதரர்களுக்கு நாசமுண்டு என்று சம்புஹோராபிரகாசாவில் சகோதரபாவவிசாரத்தில் 57-ஆவது 58-ஆவது சுலோகங்களில் கண்டிருப்பதைப் பார்க்கவும்.

---

1. சனி 2. சூரியன்

13. இதுவலால் ஆண்டுக் குள்ளே ஏகுவான் தந்தை தானும்
ததிகயிறு[1] திசையி லேதான் சிகண்டியின்[2] புத்தி தன்னி
லதிபன்தன் தந்தை கண்டம் வரைந்ததிம் மொழி குன்றுது
அதிதியை ஆத ரித்த அம்பிகை யாளே கேளாய்.

13. இதுவுமன்றி ஜாதகர் பிறந்த ஒரு வருஷத்திற்குள்ளே இவருடைய தகப்பனர் இறந்துவிடுவார். இராகு தசையில் குரு புக்தியில் தகப்பனர் இறந்து விடுவார் என்று சொல்லுகிறேம். நாங்கள் சொல்லுகின்ற வார்த்தை தவறிடாது, பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—தகப்பனர் விஷயம்—ஜாதகருக்கு வயது ஷ 0-3-8 முதல் ஷ 2-8-2 வரையிலும் இராகுவில் குரு புக்தி நடக்கின்றது. பிதுர்ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய மீனம் ஆகும். ஒன்பதிற்குடைய குரு ஆறில் சனியுடன்கூடி அவருக்கு மிகவும் நெருக்கத்தில் இருக்கின்றர். குரு மூலம் நான்கிலும் சனி பூராடம் ஒன்றிலுமாக மிகவும் நெருங்கி இருக்கின்றர்கள். பிதுர்காரனுகிய சூரியனையும் சனி பார்க்கின்றர். சூரியன் மூன்றில் மறைந்து இருப்பது பிதாவுக்குத் தோஷமானது. சூரியன் ஒன்பதைப் பார்ப்பதும் பிதாவுக்குத் தோஷமானது. பிதாவுக்கு ஆயுள் ஸ்தானமாகிய துலாத்தில் அங்காரகன் ராகு இருப்பது பிதாவுக்குத் தோஷம். பிதுர் லக்கின மாகிய மீனத்திற்கு எட்டில் ராகு இருப்பதுடன் எட்டிற்குடையவராகிய சுக்கிரனுடன் கூடியும் பிதுர் லக்கினதிபதியாகிய குருவையும் பார்க்கின்றர். ஆகையால் பாராசரஹோரைப் பிரகாரமும், ஜாதகசந்திரிகை பிரகாரமும், துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-வது பாடல் பிரகாரமும் ராகு பிதாவுக்கு மாரகஞ் செய்ய அதிகாரமுடையவராகின்றர்.

14. அன்னையின் குணத்தைச் சொல்வே ணடக்கமாம் வார்த்தை
[யுண்டு
அன்னமு மனபா யீவள் அயல்குற்றம் புகலா ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் ஆளன்தன் மனதுக் கேத்தோள்
அன்னவள் வந்த பின்பு ஆளனுக் கதிக யோகம்.

14. ஜாதகருடைய தாயின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் அடக்கமாகவும் அமைதியாகவும் பேசுவாள். சாப்பாடு ஆசையுடன் போடுவாள். பிறர் மேல் குற்றமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். பிறர் இவளை மதிக்கும்படியான நிலையிலிருந்து வாழ்வாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்வாள். இவள் தன்னுடைய புருஷனிடம் வந்த பிறகு புருஷனுக்கு அதிக யோகமுண்டாகும்.

15. இல்லமும் தென்பா லாகும் இவன்துணை ஆண்பால் நான்கு
வல்லிமா ரிருவ ராகுமாண்துணை சிலது சேதம்
சொல்லுவோம் பின்பால் சேதி தோகைமுன் ஜன்மம் கேளாய்
எல்லெயி லுயர்வ தான எழில் கொங்கு நாட்டி லேதான்.

1. இராகு 2. குரு

15. இவளுடைய வீடு தெற்குத் திக்கிலிருக்கும். இவளுடன் கூடப் பிறந்த சகோதரர்கள் ஆண் சகோதரர்கள் நான்கும் பெண் சகோதரங்கள் இரண்டுமாகும். ஆண் சகோதரர்களில் சிலர் இறந்துவிடுவார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னல் சொல்லுகிறேம், இவளுடைய, அஃதாவது தாயாருடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகிறேம். கேட்பீராக. பூமியில் மேன்மையானதும் உயரமானதுமான அழகிய கொங்கு தேசத்தில் ;

16. பிறந்தனன் செக்கான் வமிசம் பெரிதான குடும்பி யாகி
அரிவையும் வாழுந் நாளில் ஆளனும் தானு மாகப்
பெரிதான தலங்கள் சென்று பெம்மானின் அடிப ணிந்து
திருமகள் கடைவீ திக்குச் சென்றன னென்று சொல்வோம்.

16. செக்காடும் செட்டியார் குலத்தில் பிறந்தாள். பெரிய குடும்பமுடையவளாகி இவள் வாழுகின்ற காலத்தில் இவளும் இவளுடைய புருஷனும் இருவருமாக பெரிய ஸ்தலங்களுக்குப்போய்ச் சிவனையும் திருமாலையும் தரிசித்துத் தோத்திரஞ் செய்துவிட்டுப் பிறகு கடைத்தெருவுக்குப் போனர் என்று சொல்லுகிறேம்

17. குங்குமம் மஞ்சள் சீப்பு கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயா தாகிச் சர்வமான் போல்ம றைந்தாள்
அங்கவன் வணிபன் பார்த்து அம்மாதைக் காணு னகி
மங்கின மனத்தா னுகி வரைகிறுன் சாபம் தானும்.

17. இவள் அஃதாவது தாயார் குங்கும மஞ்சள் சீப்பு இவைகளை வாங்கிக்கொண்டு இவைகளின் கிரயத்தைக் கடைக்காரனுக்குக் கொடுக்காமல் மானைப்போல வேகமாகச் சென்று சீக்கிரம் மறைந்துவிட்டாள். அவ்விடமிருந்த வியாபாரி இவளைத் தேடிப் பார்த்து இவள் கண்ணிற்குப் புலப்படாமல் போய்விடவே வியாபாரி தன்னுடைய மனத்தில் விசனமடைந்து சாபத்தைக் கொடுக்கிறன்.

18. இனமது ஆகா முன்னம் ஏகுவான் வரனு மேதான்
வனிதை பின் ஜன்மம் தன்னில் மாரனு மத்தில் மாண்டு
தினமன சஞ்ச லத்தால் தேவியும் வாழ்வா யென்னக்
கனமன மாகச் சொல்ல மேவிற்று அந்தச் சாபம்.

18. தகுதியான காலத்திற்கு முன்பே உன்னுடைய புருஷன் இறந்துவிடக்கடவது. உன்னுடைய பின் ஜன்மத்தில் உன் புருஷன் மத்திய வயதில் இறந்து நீ தினந்தோறும் மனச்சஞ்சலத்துடன் இருந்து வாழக்கடவாய் என்று சொல்லி இவளுக்கு அந்த வியாபாரி சாபங் கொடுத்தான். இவ்விதமாக அவன் தன்னுடைய மனப் பூர்த்தியாகச் சொல்லவே அந்தச் சாபம் இவளை வந்து அணுகிற்று.

19. மாதுவுக் கந்த ஆண்டில் மாரனும் மரித்து மேதான்
வேதனை மனத்த னாகி மேவினுள் காலன் னுடு
விரதவன் வரையப் பட்டு வந்தன னென்று சொல்வோம்
காதலி முன்னூழ்ச் சாபம் கலந்திடு மிச்சென் மத்தில்.

19. இவளுடைய முன் ஜன்மத்தில் அதே வருஷத்தில் அதாவது குங்கும மஞ்சள் சீப்பு இவைகளைக் கிரயம் கொடுக்காமல் வாங்கின வருஷத்தில் இவளுடைய புருஷன் இறந்து மனம் நொந்தவளாகி இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகிறோம். இவளுடைய முன் ஜன்மத்திய பாபங்களும் சாபமும் இந்த ஜன்மத்தில் இவளை வந்து அடையும்.

20. மத்திய வயதில் மாரன் மரிப்பனு மென்று சொல்வோம்
வித்தகி மனது வாடி விசனமாய் வாழ்வா ளாகும்
சத்தபின் ஜன்மம் சொல்வேன் தக்கோல நகரி லேதான்
சுத்தமாய் வேளாண் வமிசம் தோன்றுவா ளென்று சொல்வோம்.

20. ஆகையால் ஜாதகருடைய தாயாருக்குத் தன் புருஷன் மத்திய வயதில் இறந்துவிடுவான் என்று சொல்லுகிறோம். அதன் பிறகு இவள் மனது நொந்து துக்கமடைந்து காலத்தைக் கழிப்பாள். இவளுடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். தக்கோலம் என்ற பட்டணத்தில் நல்லொழுக்கமுள்ள ஒரு வேளாளர் குலத்தில் வந்து பிறப்பாள் என்று சொல்லுகிறோம்.

21. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் தணிகை தன்னில்
முந்தின ரெட்டி வமிச முதித்துமே பெருமை பூண்டு
இந்தவன் வாழுந் நாளில் எய்தின வினையைச் சொல்வேன்
பிந்தினோர் கற்ப மாகப் பொருளதை யீந்து மின்னேன் ;

21. ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் திருத்தணிகையில் மேன்மையான ஒரு ரெட்டியார் குலத்தில் பிறந்து பெருமையை யடைந்து வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகிறேன். இவர் தன்னுடைய இளைய சகோதரர்களுக்குக் கொஞ்சமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு ;

22. தரணியைப் பிரித்துக் கொண்டான் சாற்றுவார் சாபம் தானும்
பொருளதை அற்ப மீந்து பூமியைப் பறித்த பாவி
வரும்ஜன்மம் தந்தை ஆஸ்தி மருவாமல் வனவா சங்கள்
தரித்திர முடையா னுயும் ஜனித்தபா லடையா தாயும் ;

22. தன்னுடைய தகப்பனருடைய சொத்துக்களாகிய பூமியைப் பாகம் பிரித்துக்கொண்டார். அந்த இளைய சகோதரர்கள் இவருக்குச் சாபத்தைக் கொடுக்கின்றார்கள். கொஞ்சமாகப் பணத்தைக் கொடுத்து விட்டுப் பூமியை அபகரித்துக்கொண்ட பாவியாகிய உனக்குப் பின் ஜன்மத்தில் உன்னுடைய தகப்பனருடைய ஆஸ்தி உனக்குக் கிடைக்காமல் வனவாசங்களை அடைந்து திரிந்தும், தரித்திரமுடையவராகியும், தாய் பால் ஜனித்த இடம், பங்கு இவைகளை அடையாமலும் ;

23. உலகினில் வாழ்வா யென்ன உரைந்தது அந்தச் சாபம்
தலைவனு மந்தி யத்தில் ஷண்முகன் பக்தி பூண்டு
குலவினன் காலன் னூடு குறைதலை வரையப் பட்டு
நிலமதி னுதித்தா னென்றோம் நேர்ந்திடு மேழை சாபம்.

23. நீ உலகத்தில் வாழக்கடவது என்று சொல்லவே, அவர்களுடைய சாபம் இவரை வந்து அடைந்தது. இவர் முன் ஜென்மத்தில் கடைசி காலத்தில் முருகக் கடவுளின்மேல் பக்தியுடையவராகி இறந்து எம பட்டணத்திற்குச் சென்று பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜென்மத்தில் இந்தப் பூமியில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறோம். ஏழைகளாகிய சகோதரர்கள் கொடுத்த சாபம் இவரை வந்தடையும்.

24. ஆதியில் வறுமை எற்பள் அவன்தந்தை யில்லம் நாஸ்தி
பாதியின் வயது மேலாய்ப் படைப்பனு மில்ல மென்றோம்
ஓதுவே னிவன்பின் ஜன்மம் உத்தரம் காளத்தி தன்னில்
சூதிலா சைவச் சேயாய்த் தோன்றுவா னிவனே யென்றோம்.

24. இவர் முதலில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடைவார். இவருடைய தகப்பனரின் வீடு பாழாகிப் போய்விடும். இவருக்குப் பாதி வயதிற்கு மேற்பட்டு ஒரு வீட்டை இவர் அடைவார் என்று சொல்லுகிறோம் இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். வடக்குத் திக்கில் காளஹஸ்தியில் கள்ளங்கபடில்லாத ஒரு சைவராக இவர் பிறப்பார் என்று சொல்லுகிறோம்.

25. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பத்தொன் பாண்டில்
காதலி தென்பால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தை
வேதனை ஒருவர்க் கெண்ணுள் விகடவார்த் தைகளும் கூருள்
சூதிலாள் கோபம் கொஞ்சம் துறவிபோல் வார்த்தை யுண்டு.

25. ஜாதகருக்கு விவாகம் நடக்கின்ற காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பத்தொன்பதாவது வயதில் மனைவி தெற்குத் திக்கிலிருந்து வந்து நேருவாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். யாருக்கும் தீங்குகளை நினைக்கமாட்டாள். விகடமான, அஃதாவது தொந்தரவை உண்ணுபண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். கபடமும் வஞ்சனையு மில்லாதவள். கொஞ்சங் கோபமுள்ளவள். துறவிகளைப் போல உலகப் பற்றில்லாதவர்களைப் போலப் பேசுவாள்.

குறிப்பு—விவாக விஷயம்—ஜாதகருக்கு வயது ௵ 18–0–0 முதல் ௵ 19–0–0 முடியும் வரையிலும் குரு தசையில் சனிபுக்தி நடக்கின்றது. குரு ஒன்பதிற்குடையவராகி களத்திரஸ்தானாதிபதியாகிய சனியுடன்கூடி போககாரனாகிய ராகுவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். சனி களத்திராதிபதியாகிப் போககாரனாகிய ராகுவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஆகையால் குருதசையில் சனிபுக்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது. சுக்கிரனுடன் சம்மந்தப்பட்ட அங்காரகன் ஏழைப் பார்ப்பதால் மனைவி அங்காரகனுக்குரிய தென்திக்கிலிருந்து வரக்கூடும்.

26. சீலியாம் விரத மேற்பாள் ஜனஉப காரி யாகும்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவுக் கினிய ளாகும்
வேல்விழி வந்த பின்பு வித்தகன் தனக்கு யோகம்
நீலியும் தீர்க்க ஜீவி நிமலிநன் நடக்கை யுண்டு.

26. ஜாதகருடைய மனைவி நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையும் உடையவள். விரதங்களை அனுஷ்டிப்பாள். ஜனங்களுக்கு உதவி செய்வாள். கெட்ட மனமில்லாதவள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமாயுள்ளவள். வேலைப்போன்ற அழகிய கண்களையுடைய இவள் தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு புருஷனுக்கு யோகம் வரும். இவள் நீண்ட ஆயுளை யுடையவள். இவள் நல்ல நடவடிக்கைகளை யுடையவள்.

27. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் ரண்டு
சத்தியு மவ்வா ருகும் செப்புவோ மிவன்மூன் ஜன்மம்
சித்தர்வாழ் அருணை தன்னில் ஜனித்தனன் வடுகச் சேயாய்
முந்தின குடும்பி யாகி முதல்வனும் வாழுந் நாளில் ;

27. ஜாதகருக்குச் சந்ததியைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு ஆண் குழந்தைகள் இரண்டும் பெண் குழந்தைகள் இரண்டும் உண்டு. இவருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். சித்தர்கள் வசிக்கின்ற திருவண்ணாமலையில் தெலுங்கர் குலத்தில் உதித்து மேன்மையான குடும்பஸ்தராகி வாழ்கின்ற காலத்தில் ;

28. தன்மனை வார்த்தை கேட்டுத் தாயதை எத்தும் போது
அன்னவள் வருத்த முற்று அறைந்தசா பத்தைக் கேண்மோ
துன்மைகள் செய்த பாவி தோன்றும்பின்ஜன்மம் தன்னில்
உன்காலி லூன மாயும் உன்தந்தை சுகமு மின்றி ;

28. ஜாதகர் தன்னுடைய மனைவியின் பேச்சைக் கேட்டுத் தன் தாயாரை வஞ்சனையுடன் உதைக்கும் போது, அவள் தன் மனது நொந்து விசன மடைந்து சொல்லிய சாபத்தைக் கேட்பீராக. எனக்குக் கெடுதிகளை விளைவித்த பாவியாகிய உனக்கு உன் மறு ஜன்மத்தில் காலில் ஊனம் ஏற்படும், உன்னுடைய தகப்பனருடைய சுகம் உனக்கு இல்லாமலும் ;

29. தரணியில் வாழ்வா யென்னத் தாய் சாபம் சேர்ந்த தென்றோம்
திருமகன் அந்தி யத்தில் செல்வமும் குறைவு நேர்ந்து
வறுமைக ளுடைய னுகி மரலியின் பதிக்குப் புக்கிப்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்.

29. நீ பூமியில் வாழக் கடவாய் என்று தாயார் சொல்ல, இந்தத் தாயாருடைய சாபம் ஜாதகரை வந்தடைந்தது என்று சொல்லுகிறோம். ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் கடைசி காலத்தில் தன்னுடைய செல்வங்கள் குறைவுபட்டு தரித்திரத்தையுங் கஷ்டங்களையு மடைந்து பிறகு இறந்து எமபட்டணதிற்குச் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார்.

30. ஆகையால் தாயின் சாபம் அணுகிடு மிச்சென் மத்தில்
போகிடு மொருகா லூனம் பிதா மொழிகாணு ருகும்
தோகைபோ லிவனின் யோகம் செப்புவோம் கல்வியாலும்
பாகமாய் வார்த்தை யாலும் பாலகன் ஜீவிப்பானும்

30. ஆகையால் ஜாதகருக்கு இந்த ஜன்மத்தில் முன்ஜன்மத்தில் தன் தாய் கொடுத்தச் சாபம் வந்து சம்பவிக்கும். ஜாதகருக்கு ஒரு கால் † ஊனமாகப் போய் விடும். தன்னுடைய தகப்பனருடைய வார்த்தையைக் கேட்டு ஆனந்திக்கும் அமைப்பு இல்லாதவராவர். இறகைப்போல வளருகின்ற இவருடைய யோகங்களைச் சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய படிப்பாலும், பக்குவமான சாமர்த்தியமான பேச்சுக்களாலும் ஜீவனஞ் செய்வார்.

† குறிப்பு—கால் ஊனமாகும் விஷயம்—முந்தி சென்ற பதினோராவது பாடலைப் பார்க்கவும். தமிழ் ஜாதகாலங்காரத்தில் 413-ஆவது பாடல் பின் வருமாறு ஆகும்.

"கண்ட பன்னிரண்டாம் வீட்டோன் கனத்திரி கோணமேறிற்,
கொண்டகேந் திரத்தி னிற்க வவனுேடு கூடி ராகு,
அண்டியே நிற்கப்பாவ ரவர்களைப் பார்த்திருக்க,
எண்டிசை யுலகி லங்க வீனனு யிருப்பனென்னே."

இதன் பொருள் :—பன்னிரண்டாவது வீட்டிற் குடையவர் கேந்திர கோணங்களில் இருந்து ராகுவுடன் கூடி இவர்களைப் பாபர் பார்க்க ஜாதகர் அங்கவீன முள்ளவர். இந்த ஜாதகத்தில் பன்னிரண்டிற் குடையவரான புதன் நான்காவது கேந்திரத்தில் இராகுவுடன் கூடியிருந்து இவர்களிருவருடனும் நைசர்க்கிக பாபராகிய அங்காரகன் கூடியிருக்கின்றார். ஆகையால் ஜாதகாலங்கார பாடல் பிரகாரம் ஜாதகருக்கு அங்கவீனம் நேரிடும் அமைப்பு இருக்கின்றது. பின்வருகின்ற உதாரண ஜாதகத்தைக் கவனிப்போம் :—லக்கினம் விருச்சிகம். நாலில் அங்காரகன். ஐந்தில் புதன். ஆறில் சூரியன் சனி குரு, ஏழில் சுக்கிரன் கேது. பத்தில் சந்திரன். லக்கினத்தில் ராகு. இந்த ஜாதகத்தில் பன்னிரண்டிற் குடையவரான சுக்கிரன் ஏழில் கேதுவுடன் கூடி ராகுவாலும், அங்காரகனுலும் பார்க்கப்பட்டிருக்கின்றார். இவருக்கு இடது பாதம் பிறக்கும்போது மடங்கிக் கோணலாக விருந்து தைல வைத்தியம் செய்து உருவவே பாதம் படிந்து விட்டது. ஆனுல் பாதம் இளைத்து நேர்ந்து சப்பையாய்ப் போய் ஊனமாகி விட்டது. இவர் உயிருடன் இருக்கின்றார். இவருக்கு இப்போது வயது எழுபத்து மூன்று நடக்கிறது. இவ்விரண்டு ஜாதகங்களிலும் சனி பன்னிரண்டைப் பார்ப்பதைக் கவனிக்கவும். பன்னிரண்டா மிடம் இடது பாதமாகும்.

31. பின்தந்தை உதவி யாகும் போஜன வறுமை காணன்
பொன்பூமி சேர்ப்பா ருகும் பொன்தசை தன்னிலே தான்
அன்னைக்கு முப்பான மூன்றில் அணுகிடும் கண்ட மென்றேய
உன்னத வாணைபெற்ற உத்தமி கேட்டி டாயே.

31. ஜாதகருக்குச் சிறிய தகப்பனால் உதவி ஏற்படும், இவர் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டத்தை அடைய மாட்டார். தனம் பூமிகள் இவைகளைக் குருமகாதசையில்சேர்ப்பார். இவருடைய தாயாருக்கு மூப்பத்து மூன்றுவது வயதில் மரணம் நேரிடும். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதி யம்மையே ! கேட்பீராக.

† **குறிப்பு.—தாய் மாரக விஷயம்**—ஜாதகருக்கு வயது ஷ்ரூ 32-0-0 முதல் ஷ்ரூ 33-0-0 வரையிலும் சனிதசையில் சனிபுத்தி நடக்கின்றது. மாதுரு லக்கினம் துலாம். துலாத்திற்கு மாரகாதிபதி பராசரஹோரை ஜாதக சந்திரிகைகளின் பிரகாரம் குரு ஆகின்றார். சனி குருவுடன் கூடியிருப்பதுமன்றி மாதுர்காரகராகிய சந்திரனையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் சனி மாதாவுக்கு மாரகாதிபதியாகின்றார்.

32. பாலகன் கண்டம் சொல்வேன் புததசைக் கால மாகும்
சாலவே அறுபா னைந்தில் தனுர்மாதம் உடலம் ஏகும்
வேலன்பின் ஜன்மம் சொல்வேன் வேள்விசெய் பட்சி தன்னில்
ஞாலங்கள் விருத்தி செய்யும் நற்குல முதிப்பா னம்மா

32. ஜாதகருக்கு மரண காலத்தைச் சொல்லுகிறேன். புததசை காலத்தில் மரணம் நேரிடும். அறுபத்தைந்தாவது வயதில் மார்கழி மாதத்தில் † ஜாதகர் இறந்து அவருடைய தேகம் அழிந்து விடும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேன். யாகங்களைச் செய்கின்ற பக்ஷிஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்தில் பூமியைப்பயிரிட்டு விருத்தி செய்கின்ற வேளாளருடைய நல்ல குலத்திற் பிறப்பார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

† **குறிப்பு.—ஜாதகர் மாரக விஷயம் :**—ஜாதகருக்கு வயது ஷ்ரூ 64-0-0 முதல் ஷ்ரூ 65-0-0 வரையிலும் புததசையில் குருபுக்தி சனிபுத்திகள் நடக்கின்றன். மார்கழி மாதத்தில் குருபுக்திதான் நடக்கின்றது. கடகலக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை தாண்டவமாலை இவைகள் பிரகாரம் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். மாரகாதிபதியும் அஷ்டமாதிபதியு மாகிய சனியுடன் குரு சம்பந்தப்பட்டு லக்கினத்திற்கு ஆறில் இருப்பதால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம் பிரகாரம் புததசையில் குருபுக்தியில் ஜாதகருக்கு மாரக அமைப்பு இருக்கிறது.

33. அத்திரி புகலு கின்றார் ஆரனும் [1]நாலில் தங்க
வித்தகர் பலனெவ் வாறு விளம்புவீர் முனியே நீர்தாம்
வெத்திவேல் தனைப் பூசிப்பன் வைத்தியம் மந்திரம் செய்வன்
அத்துவித மறிவா னுகும் அரசருக்கு இவன்சொல் மேன்மை.

33. அத்திரி முனிவர் கேட்கின்றார். அங்காரகன் நான்கில் இருப்பதால் எவ்விதமான பலாபலன்கள் நடக்கும் என்பதை முனிவரே ! நீர் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகர் முருகக் கடவுளைப் பூஜை செய்வார்.

[1] அங்காரகன்

வைத்தியமும் மாந்திரீக வேலையும் செய்வார். அத்துவைதம் அறிவார். அஃதாவது பரமாத்துமாவும் ஜீவாத்துமாவும் ஒன்றென்ற கொள்கையை அறிவார். அரசர்களிடத்தில் இவருடைய வார்த்தை மேன்மையாகவும் மதிக்கத்தக்க தாகவும் இருக்கும்.

34. தேறின புத்தி யுண்டு திகைத்தோர்க்குத் தாக மீவன்
பூர்வமாம் பொருளும் நேரும் பொன்னவன்[1] தசையி லேதான்
திறவான வறுமை காணுன் செல்வனும் தீர்க்க ஜீவி
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

34. இவருக்கு உயர்ந்த, தேர்ச்சியடைந்த புத்தியுண்டு. ஏழைகளுக்கும் இரப்போர்களுக்கும் தாகவிடாய் தீர நீர்மோர் கொடுப்பார். இவருக்குப் பூர்வீகச் சொத்தும் குருதசையில் வந்து சேரும். பெரிய கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அனுபவிக்கமாட்டார். இவர் நீண்ட ஆயுளையுடையவர். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதி யம்மையே ! கேட்பீராக.

35. ஜனித்திடுங் காலம் தன்னில் செக்கு[2] நாள் முதல்பா தத்தில்
பணி[3]தசை மூவைந் தாண்டும் பகருவோம் திங்க ளாறும்
தினமது இருபா னுறும் செப்பினேம் பூர்வ பாகம்
கனமத வரனை பெற்ற காதலி கேட்டி டாயே.

35. ஜாதகர் பிறக்குங் காலத்தில் சதய நட்சத்திரத்தில் முதல பாதமாகும். இதற்குரிய ராகுதிசை இருப்பு பதினைந்து வருஷமும் ஆறு மாதமும் இருபத்தாறு நாள்களும் ஆகும், இவ்விதமாக முன்பாகத்தைச் சொன்னேம். மேன்மை தங்கிய மதயானை முகத்தை யுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

[1] குரு. [2] சதையம். [3] ராகு.

ஜாதகம் 70

1 பொன்[1] மேடம் சேயும்[2] வீணை[3] புதன்புகர்[4] பரிதி[5] நண்டில்[6]
சந்திரன் தேள தாகச்[7] சனிமானில்[8] ராகு சீயம்[9]
இன்னவாறு கிரகம் நின்றால் லக்கினம் கடக மாகப்
பண்ணுவீர் பலனை யென்று பார்வதி கேட்கலு ற்றாள்.

	குரு		அங்காரகன்
கேது	இராசி		லக்கினம் சூரியன் புதன் சுக்கரன்
சனி	சக்கரம்		ராகு
	சந்திரன்		

விசாகம். 4-ஆம் பாதம். குரு தசை ஞு 1-6-0.

1. குரு மேடத்திலும், அங்காரகன் மிதுனத்திலும், புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் கடகத்திலும், சந்திரன் விருச்சிகத்திலும், சனி மகரத்திலும், ராகு சிம்மத்திலும் ஆகக் கிரகங்கள் இருந்து லக்கினம் கடகமானல் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கின்றார்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர இரக நிலை பொருத்த முடையதாகும்—மேஷத்தில் அங்காரகனும், மிதுனத்தில் குருவும் கேதுவும், கடகத்தில் சந்திரனும், சிம்மத்தில் சூரியனும் சனியும், துலாத்தில் சுக்கிரனும், தனுசில் புதனும் ராகுவும் ஆகும். புதனும் சுக்கிரனும் அஸ்தமனமாக விருக்கின்றார்கள். சனி வக்கிரகதியில் இருக்கின்றார்.

2. பிருகுமே புகலு கின்றார் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
வருமில்லம் வடக்கு வாடை வாசலு மெமனின் பார்வை
பெருவயி றப்பன் கீழ்ப்பால் புலிவாக னத்தா ளுத்ரம்
அரன்கோஷ்ட மதற்குத் தென்கீழ் ஆதிமால் அதற்குத் தென்மேல்.

1. குரு. 2 அங்காரகன். 3 மிதுனம். 4 சுக்கிரன். 5 சூரியன். 6 கடகம். 7 விருச்சிகம். 8 மகரம். 9 சிம்மம்.

2. பிருகு மகாரிஷி சொல்லுகின்றார். பிறக்குங் குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடவண்டை வாடையில் தெற்குப் பார்த்த வாயிலை யுடைய தாகும். விநாயக் கடவுளின் கோயில் கிழக்குத் திக்கில் இருக்கும். காளியம்மன் கோயில் வடக்குத் திக்கிலிருக்கும். இதற்குத் தென் கிழக்கில் சிவன் கோயில் இருக்கும். இதற்குத் தென் மேற்கில் மகா விஷ்ணுவின் கோயில் இருக்கும்.

3. இன்னமும் பள்ளி வாச லிலகிடும் தென்மேல் திக்கில்
சொன்னஇவ் வடை யாளத்துள் தோன்றுவான் நான்காம் ஜன்மம்
அன்னவன் மிலேச் சஜை அருளுவா னென்று சொன்னோம்
உன்னத வானைபெற்ற உத்தமி கேட்டி டாயே.

3. மேலும் மகா விஷ்ணு சயனித்திருக்கும் கோயிலும் மண்டபமும் பள்ளிக்கூடங்களும் இடைச்சேரியும் தென் மேற்குத் திக்கில் இருக்கும். இங்கு சொல்லப்பட்ட அடையாளங்களுள்ள விடத்தில் ஜாதகர் நான்காவது கர்ப்பமாகப் பிறப்பார். இவர் மிலேச்சஜை, அஃதாவது தாழ்ந்த குலத்தில் வந்து பிறப்பார் என்று சொல்லுகிறோம். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

4. தந்தையின் துணைவ ராறி லாண் ஒன்று கன்னி மூன்று
இந்தவாறுவிருத்தி யென்றே மியம்பின ஆண்பா லும்தான்
பின்னவ னுகச் சொல்வோம் பேசுவோ மவன்கு ணத்தைத்
தன்னுடல் மெலிந்து நிற்கும் ஜனித்தநாள் வேறாய்ச் செல்வன்

4. ஜாதகருடைய தகப்பனாரின் ஆறு சகோதரர்களின் ஆண் சகோதரர் ஒருவரும், பெண் சகோதரிகள் மூவரும் நீண்ட வயதுடையவர்களாகி விருத்தியாவார்கள். இங்குச் சொல்லப்பட்ட ஆண் சகோதரர் இளைய சகோதரராகும் என்று சொல்லுகிறோம். இந்த இளைய சகோதரனின் குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவருடைய உடம்பு ஒல்லியாக விருக்கும். பிறந்ததும் வேறாகப் போய் ஜீவிப்பார்.

5. சுகம்துக்கம் கலந்து வாழ்வன் தொல்புவி கிருஷி செய்வன்
அகமதை விட்டு நீங்கல் அடாவடி கொஞ்ச முண்டு
உகமையாய் வார்த்தை சொல்வன் உறுதியா மனத்தா னுகும்
ஜகமதில் தந்திர வாதி தீரனு மீகை கொஞ்சம்.

5. இவர் சுகங்களையும் துக்கங்களையும் கலந்தாற் போல அனுபவிப்பார். பழைய பூமிகளைப் பயிரிட்டு ஜீவனஞ் செய்வார். இவர் வீட்டை விட்டு வெளியே போய் விடுவார். அடாவடியாக, அஃதாவது காரணங்களில்லாமல் முரட்டுத்தனமாய்க் கொஞ்சம் நடந்து கொள்ளுவார். உபமானம் உபமேயம் இவைகளை உபயோகப்படுத்தி அலங்காரமாக வார்த்தைகளைச் சொல்லுவார். நிலையான கெட்டியான மனத்தை யுடையவர். பூமியில் உபாயங்கற்ற சாமர்த்திய மானவர். தைரிய முடையவர். கொடுக்குந் தன்மை கொஞ்சம் உள்ளவர்.

6. தந்தை யினுர்ஜி தத்தைத் தானவன் விரயம் செய்வன்
வந்திடு மனைவி யென்ரேும் மாந்தரு மாண்பால் ரண்டு
சந்ததம் பெண்பால் ரண்டு சாற்றுவோம் தீர்க்க மாகத்
தந்தைநாள் மட்டும் யோகம் தரித்திரம் அதன்மே லாக

6. இவர் தகப்பனுருடைய சொத்தை எல்லாம் ஒழித்து விடுவார். இவருக்கு மனைவிவந்து வாய்ப்பாள் என்று சொல்லுகிரேும். இவருக்குக் குழந்தைகளில் ஆண் இரண்டும் பெண் இரண்டும் நீண்ட வயதுடையவர்கள் என்று சொல்லுகிரேும். தகப்பனுர் உயிருடன் இருக்கின்றவரையிலும் இவருக்கு யோக முண்டு. அதற்கு மேல் தரித்திரம் ஏற்படும்.

7. இன்னமும் சிலது சேதி யியம்புவோம் பின்பா கத்தில்
தந்தையின் குணத்தைச் சொல்வேன் தானிள மனத்தா னுகும்
விந்தையாய் வார்த்தை கூறுவன் விளைபுலம் சேர்ப்பா னுகும்
பந்துவு மதிக்க உய்வன் பலவிதச் செட்டுச் செய்வன்

7. இன்னமும் சிலவிஷயங்களைப் பின் பாகத்தில் சொல்லுகிரேும். இனிமேல் ஜாதகருடைய தகப்பனுரின் குண குணங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் இளகிய, அஃதாவது தயாளமான மனத்தை யுடையவர். ஆச்சரியப்படும்படியாக வார்த்தைகளைச் சொல்லுவார். விளைகின்ற பூமிகளைச் சேர்த்துவைப்பார். பந்துக்கள் இவரை மதிக்கும்படியான நிலையில் வாழ்வார். பலவிதமான வியாபாரங்களையும் செய்வார்.

8. இருநிறம் சமதே கத்தான் இன்பச் சொலிகை வானும்
திருகிலாக் குணத்தா னுகும் தேவிமா ரிரண்டு என்ரேும்
பொருளது சேர்ப்பா னுகும் புண்ணிய மனத்தா னுகும்
பரைபள்ளு சேர்ப்பா னுகும் பகவானின் பக்தி பூண்பன்.

8. இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறமான தேகத்தை யுடையவர். தாட்டியும் ஒல்லியுமில்லாத நடுவான தேகத்தையுடையவர். இனிமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். கொடுக்குந்தன்மை யுடையவர். கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளில்லாத குணமுடையவராவர். இவருக்கு மனைவிகள் இருவர் நேருவர் என்று சொல்லுகின்ரேும். சொத்தைச் சேர்த்து வைப்பார். புண்ணியஞ் செய்கின்ற நல்ல குணமுடையவர். தானியங்களையும் தோப்புகளையும் ஆள்களையும் சேர்ப்பார். கடவுளின் மேல் பக்தியுடையவராவார்.

9. வடிவினில் குள்ள னுவன் மாமிச வணிபம் செய்வன்
தடபுடல் செய்கை யுண்டு சகடுவா கனமு மேற்பன்
படிமிசை நல்லோ னுவன் பசித்தோர்க்கு அன்ன மீவன்
விடவாக் குடைய னுவன் வீண்வம்பில் செல்லா னுகும்.

9 இவர் உருவத்தில் குள்ளராக விருப்பார், மாமிச வியாபாரஞ் செய்வார். டம்பமாகவும் அவசரமாகவும் பட்டாடோபமாகவும் காரியங்களைச் செய்வார். வண்டியும் வாகனங்களும் உடையவர். பூமியில் எல்லோ

ருக்கும் நல்லவனுக விருப்பார். பசியோடு இருப்பவர்களுக்குச் சாப்பாடு போடுவார். விஷமான வாக்கையுடையவர், அஃதாவது இவர் ஏதாகிலும் சொன்னுல் அது பலித்துவிடும். வீண் சண்டைக்குப் போகமாட்டார்.

10. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிரேும் மதுரை நாட்டில்
நன்னிய சிறுவூர் தன்னில் நல்கினுன் வைசியச் சேயாய்
உன்னதச் செட்டுச் செய்து உயர்வோர்கள் பக்தி யுண்டாய்த்
தென்திசை சேது சென்று தேறினேர்க் கன்ன மீந்து ;

10. ஜாதகருடைய தகப்பனுரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிரேும். மதுரையில் ஒரு சிறிய நல்ல பேட்டையில் வைசிய குலத்தில் ஆணுகப் பிறந்து மேன்மையான வியாபாரஞ் செய்து பெரிய மனுஷர்களின் மேல் விசுவாசமாகவிருந்து தெற்குத் திக்கிலுள்ள சேதுஸ்தலத்திற்குப் போய்ச் சுத்தமானவர்களுக்கு, அஃதாவது பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு ;

11. இருக்கிற காலம் தன்னி லெய்தின வினையைக் கேண்மோ
அர்வையும் கங்கை மாது அவளுமே விதவை யாகிப்
பொருளது விசேஷ முண்டு பாதுகாத் தருள்வா யென்று
உரைத்தனள் வணிகன் தன்பால் உன்மனம் போலே செய்வேன் ;

11. வாழுகின்ற காலத்தில் இவருக்குச் சம்பவித்த பாபத்தைக் கேட்பீராக. ஒரு வேளாள குலத்திற் பிறந்த ஸ்திரீயானவள் விதவையான பிறகுத் தன்னுடைய அதிகமான சொத்தை இவரிடஞ் சென்று காப்பாற்றித் தருவாய் என்று சொல்ல உண்மையாய் அவ்விதமாகவே செய்கிறேன்.

12. என்றுமே செட்டி சொல்ல ஈந்தனள் பொருளை எல்லாம்
அன்றுநாள் முதலா மாக அம்மாது லாபம் வாங்கித்
தின்றுமே வந்து பின்பு தேவியும் ஆண்டின் மேலாய்க்
குன்மநோய் பேதி யாலே கூற்றன்தன் பதிக்குச் செல்ல ;

12. என்று இந்தச் செட்டியாரும் சொல்லவே, அவள் எல்லாச் சொத்துக்களையும் இவரிடம் கொடுத்து வைத்தாள். அதுமுதற்கொண்டு அவள் லாபமோ வட்டியோ வாங்கிக்கொண்டு ஜீவனஞ் செய்துவந்து பிறகு ஒரு வருஷத்திற்குப் பிறகு குன்மரோகத்தாலும் பேதியாலும் இறந்து பிறகு எமபட்டணத்திற்குப் போய்

13. வேதனுல் வரையப் பட்டு விளங்கி னுளிக்கு லத்தில்
போதனம் வாங்க வேண்டி பின்பாரி யாகத் தோன்றும்
சூதான வசியம் தோன்றும் தீவினை யில்லா தாகித்
தீதான காலன் னுடு சென்றுமே பிரமன் லக்கம் ;

13. பிரமதேவனுல் இந்த ஸ்திரீ எழுதப்பட்டு இந்தக் குலத்தில் வந்து பிறந்தாள். இவள் தான் முன் ஜன்மத்தில் கொடுத்து வைத்த பெரிய செல்வத்தைத் திரும்பி வாங்கும் நிமித்தமாக இவருக்கு இரண்டா

வது மனைவியாக வந்து நேரிடுவாள். சூதாகவும் இவள் இவரைத் தன்வச மாகச் செய்து கொள்ளுவாள். இவர் முன்ஜன்மத்தில் கெட்ட வினைகள் இல்லாமல் இறந்து கெடுதியை விளைவிக்கக்கூடிய எமபட்டணத்திற்குச் சென்று பிரமதேவனால் எழுதப்பட்டு ;

14. வந்தவ னிவனே யென்றேும் மருவிடு மிரண்டு தாரம்
இந்தவாறு மன்ன னுக்கு இவனுமே வுதிப்பா னுகும்
அந்தவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் சிவந்த மேனி
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் உணைச்சல் நீட்சி.

14. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகிறேம். ஆகையால் இவருக்கு இரண்டு மனைவிகள் வந்து நேரு வார்கள். இப்படிப்பட்ட குணத்தையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் வந்து பிறப்பார். இவருடைய குணுதிசயங்களை இனிமேல் சொல்லுகிறேன். இவர் அழகானவர். சிவப்பான நிறமுடைய தேகத்தையுடையவர். தான் சொல்லுகின்ற வார்த்தைகளே மேன்மையானவை, உண்மையானவை என்று வாதஞ்செய்து சொல்லி வெல்லுந்தன்மை உடையவர். நீண்ட மெலிந்த தேகமுடையவர்.

15. வித்தையு மிரண்டு நேரும் வேந்தனல் ஜீவனங்கள்
உத்தமன் செய்வானுகும் உயர்வான குடும்ப மேற்பன்
பத்தினி மார்கள் நேயன் பரஉப கார னுவன்
சுத்தத்தார் மதிக்க உய்வன் துருசான கோபி யாவன்.

15. ஜாதகர் இரண்டு விதமான படிப்பு உள்ளவர். அரசர் மூல மாக ஜீவனஞ் செய்வார். மேன்மையான குடும்பத்தையுடையவர். மனைவி களிடத்தில் பிரியமாயிருப்பார். மனைவிகளும் இவரிடத்தில் ஆசையாயிருப் பார்கள். பிறருக்கு உதவிசெய்வார். பந்துக்கள் இவரை மதிக்கும்படியான நிலையில் இவர் வாழ்வார். சீக்கிரத்தில் கோபத்தை அடையக்கூடியவரா வார்.

16. தந்தையின் பூமி மேலாய்த் தானவன் சேர்ப்பா னுகும்
தன்தனம் சேர்ப்பா னுகும் சதுஷ்பாதம் விருத்தி செய்வன்
தந்தைசொல் கடவா னுகும் சகராசர் பேட்டி கொள்வன்
இந்திர போக மேற்ப னிலமு மிரண்டு செய்வன்.

16. ஜாதகர் தன்னுடைய தகப்பனுர் வைத்த பூமியைவிட அதிக மான பூமிகளைச் சேர்ப்பார். தன்னுடைய பணத்தையுஞ் சேர்த்து வைப்பார். கால்நடைகளை விருத்தியாக்குவார். தகப்பனுருடைய வார்த்தைக்கு அத்து மீறி நடக்க மாட்டார். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார் தேவர்களுடைய போகத்தையுஞ் சுகத்தை அடைவார். இரண்டு வீடுகளைக் கட்டுவார்.

17. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் முன்ஆண் ஒன்று
நவனியில் கன்னி ஒன்று நாட்டுவோம் தீர்க்க மாகத்
தவசியே முன்னேன் சேதி சாற்றுவோ மிருசிவப்பன்
அவனியோர் மதிக்க வாழ்வன் அவனுக்குச் சமமாம் கல்வி.

17. ஜாதகருடைய சகோதரர்களைப்பற்றி இனிமேல் சொல்லு கிறேம். இவனுக்கு முன்னே ஓர் ஆணும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயு ளுடையவர்களாய் இருப்பார்கள் என்று சொல்லுகிறேம். பார்வதியம் மையே ! ஜாதகருடைய மூத்த சகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகிறேம். இவர் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமுள்ள தேகத்தையுடையவர். பூமியில் உள்ளவர்கள் இவரை மதிக்கும்படியான நிலையிலிருந்து வாழ்வார். இவருக்கு அதிகமும் குறைவும் இல்லாத நடுநிலைமையான வித்தை யுண்டு.

18. பலவணி பங்கள் செய்வன் பாரது விருத்தி யுண்டு
பலமுள குடும்ப மேற்பன் போஜன வறுமை காணுன்
நிலையதைக் காக்க வல்லன் நிமிஷத்தில் கோபி யாவன்
விலைமாதர் மோகம் கொள்ளான் வீண்பழி ஏற்கா னுமே.

18. இவர் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். பூமி விருத்தி யாகும். நல்ல பலிதத்தைத் தரும். பெரிய மேன்மையான குடும்பத்தை உடையவர். சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டப்படமாட்டார். தன்னுடைய அந்தஸ் தையும் ஜீவனத்தையுங் காப்பாற்றிக்கொள்ளுவார். வெகு சீக்கிரத்தில் கோபத்தை அடைந்துவிடுவார். வேசிகளிடத்தில் காம ஆசையில்லாதவர். வீணை குற்றங்களை அடையமாட்டார், செய்யவுமாட்டார்.

19. வயதுமே தீர்க்க மெய்தும் மனைவியு மொன்றே யாகும்
பயமிலான் எதிரிக் கஞ்சான் பாலர்கள் ஆண்பால் மூன்று
வியமிலாப் பெண்பால் ரண்டு விளம்புவோம் சல்லியம் கொள் [ளான்
செயம்செய்வ னெடுத்த வேலை செல்வதி கேட்டி டாயே.

19. இவருக்கு நீண்ட ஆயுளுண்டு. ஒரே மனைவி உண்டு. இவர் பயப்படாதவர். சத்துருவிற்கு பயப்படமாட்டார். இவருக்கு ஆண் கள் மூன்றும் பெண்கள் இரண்டும் நிலையாக இருக்கும் என்று சொல்லு கிறேம். கடன் வாங்கமாட்டார். தான் ஆரம்பித்துச் செய்யுங் காரியங்களைப் பூர்த்திசெய்து ஜயிப்பார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

20. பின்துணை ஆண்பா லொன்று பேதையு மவ்வாறு தீர்க்கம்
அன்னவர் சேதி யாவும் அறிவிப்போம் பின்பா கத்தில்
இன்னவாறு பிறகு சொல்ல இயம்புவார் பராசர் தாமும்
அன்னையு மிரண்டு என்றீர் அறிவிப்பீர் அவள்தன் சேதி ;

20. ஜாதகருக்கு இளைய சகோதரன் ஒருவனும் இளைய சகோதரி ஒருத்தியும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர்களுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் பின்பாகத்தில் சொல்லுகிறேம். இவ்வித

மாகப் பிருகு மஹாரிஷி சொல்லவே பராசர முனிவர் கேட்கின்றார். ஜாதகருக்குத் தாய்மார்கள் இரண்டு பேர் என்று சொன்னீரே அவளுடைய விஷயங்களைச் சொல்லுவீர் என்று கேட்க ;

21. குணமது நல்ல தாகும் குரூரத்தை வெளிக்காட் டாதாள்
பிழைசெய்யாள் யாவருக்கும் புருடன்தன் மனம் போல் வாழ்வள்
துணைவர்கள் ஆண்பால் ரண்டு தோகையர் மூன்று என்றேரும்
சினமிலா வாழ்வா ளாகும் தேவியில் வட மேலாகும்.

21. (பெரிய) தாயார் நல்ல குணமுடையவள். தன்னுடைய கொடுமையான குணத்தைக் வெளிக்குக் காண்பித்துக் கொள்ளமாட்டாள். யாருக்குங் கெடுதிகளைச் செய்யமாட்டாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்துகொண்டு வாழ்வாள். இவளுக்குக் கூடப்பிறந்தவர்கள் ஆண்கள் இருவரும், பெண்கள் மூவரும் என்று சொல்லுகிறோம். கோபமில்லாமல் வாழ்வாள். இவளுடைய வீடு வடக்குத் திக்கில் இருக்கும்.

22. சுதர்களும் ஆண்பால் ரண்டு தோகையு மிரண்டு என்றேரே
மதிபனு முதிக்கா முன்னம் ஆணென்று கன்னி ஒன்று
இதுவிரண்டும் தீர்க்க மெய்து மிவன்பின்னு லிரண்டு தீர்க்கம்
பதர்மற்ற மூன்று மென்றேரும் பகர்ந்தனம் தாயே யாங்கள்.

22. இவளுக்குக் குழந்தைகள் ஆண் இருவரும் பெண் இருவரும் என்று சொல்லுகிறோம். ஜாதகர் பிறப்பதற்கு முன்னே பெரிய தாயாருக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்து நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். ஜாதகர் பிறந்த பிறகு பெரிய தாயாருக்கு இரண்டு குழந்தைகள் நீண்ட ஆயுளையுடையவர்களாகவிருப்பார்கள். மூன்று குழந்தைகள் பதரைப்போல உபயோகமில்லாமல் இறந்துபோய் விடுவார்கள் என்று சொல்லுகிறோம். எங்களுடைய தாயாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகிறோம்.

23. இருபது நாலாண் டின்மே லிவர்களும் வேறுய்ச் செல்வர்
அதுபலன் பின்பால் சொல்வேன் அம்பிகை யாளே கேளாய்த்
திருமகள் அன்னை சேதி செப்புவோ மினிமே லாகக்
குறையென்றோர்க் குதவி செய்வள் குணமது நல்ல தாகும்.

23. ஜாதகருக்கு இருபத்து நான்கு வயதிற்குமேலே பெரிய தாயாரும் அவளுடைய குழந்தைகளும் வேறு குடும்பமாகப் பிரிந்துபோய் வாழ்வார்கள். இந்த விஷயத்தைப்பற்றிப் பின்னுல் சொல்லுகிறேன் பார்வதியம்மையே ! கேட்பீராக. ஜாதகருடைய தாயாருடைய விஷயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகிறேன். கஷ்டமாகவிருக்கின்றதென்று சொல்லிக் கொள்ளுபவர்களுக்கும் தேவை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ளுபவர்களுக்கும் இவள் உதவி செய்வாள். நல்ல குணமுடையவள்.

24. முன்கோபி வெளிக்காட் டாதாள் மாதுவும் வந்த பின்பு
சந்திரன் பிறைபோல் யோகம் தன்வான் தனக்கு இஷ்டம்
அன்னியர் குற்றம் சொல்லாள் ஆளனுக்கினியாள்ளாகும்
தன்மனம் கபட மில்லாள் சலித்தோர்க்குதவி செய்வள்.

24. இவள் முன்கோபமுடையவள். மனத்தில் உள்ளதை வெளியே காண்பித்துக் கொள்ளமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு புருஷனுக்கு வளர்பிறைச் சந்திரனைப் போல யோகம் நேரிட்டு அதிகரிக்கும். பிறர்மேல் குற்றத்தைச் சாட்டமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள். தன்னுடைய மனத்தில் கள்ளம் வஞ்சனை முதலியவைகள் இல்லாதவள். ஏழைகளுக்கும் இளைத்தவர்களுக்கும் துக்கப் படுபவர்களுக்கும் உதவி செய்வாள்.

25. இல்லமும் மேல்பால் என்றே மிவள்துணை ஆண்பால் ரண்டு
வல்லியும் ஒன்று தீர்க்கம் வரைகிறோம் தாயே கேளும்
அல்லலில்லாமல் வாழ்வள் யாவர்க்கு நல்லோ ளாவள்
சொல்லது சுபமே யாகும் செப்புவோ மிவள்தன்பூர்வம்.

25. இவளுடைய வீடு மேற்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகிறோம். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகிறோம். எங்கள் தாயாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக. இவள் கஷ்டங்களை இல்லாமல் வாழ்வாள். எல்லோருக்கும் நல்லவளாக இருப்பாள். இவள் சுபகரமாகப் பேசுவாள். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம்.

26. பிருதிவி கீழ்ப்பா லாகப் பேரூரில் செங்குந்த வமிசம்
அரிவையும் உதித்து மேதான் ஆண்மையாய் குடும்பி யாகி
வருவோரை ஆத ரித்தும் மாரனும் மதலே யுண்டாய்
முருகன்தன் பத்தி கொண்டு மேதினில் பவமில் லாமல் ;

26. இவள் காஞ்சீபுரத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் செங்குந்தர் வமிசம் என்ற கைக்கோலர் குலத்தில் வந்து பெண்ணுகப் பிறந்து மேலான வலிவு பொருந்திய ஒரு குடும்பஸ்தையாகித் தன்னிடம் வந்தவர்களைக் காப்பாற்றிப் புருஷனையும் பிள்ளையையும் உடையவளாகி முருகக்கடவுளின் மேல் பக்தியையுடையவளாகிப் பூமியில் யாதொரு பாபமுமில்லாதவளாகி.

27. காலன்தன் நாடடைந்து கஞ்சனுல் வரையப்பட்டு
ஞாலம்மேல் மஸ்தான் வமிசம் நாயகி உதித்துமேலும்
ஏலவே வறுமை காணு ளியம்புவோ மிவள்பின் ஜன்மம்
சாலவே விரிஞ்சிதன்னில் ஜனிப்பளாம் சைவச் சேயாய்.

27. இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் எழுதப் பட்டு இந்தப் பூமியில் மஸ்தான் வமிசத்தில் வந்து பிறந்து கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் வாழ்வாள். இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறோம். விரிஞ்சிபுரத்தில் சைவகுலத்தில் இவள் பிறப்பாள்.

28. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினு றுண்டில்
வேல்விழி மேல்பால் தன்னில் மேவுவா ளான்னே வர்க்கம்
நீலியின் குணத்தைச் சொல்வேன் நிலையதைக் காப்பா ளாகும்
பாலிகை யோக சாலி பால்பாக்கிய முடைய ளாகும்.

28. ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகிறோம். இவருக்குப் பதினுறுவது வயதில் * வேலைப்போன்ற அழகிய கண்களையுடைய மனைவி தன்னுடைய தாயார் வமிசத்திலிருந்து மேற்குத் திக்கிலிருந்து வந்து நேருவாள். இவளுடைய குணத்தைச் சொல்லுகிறேன். தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளுவாள். இவள் யோகமுடையவள். பாக்கியமுடையவள் ஆகும்.

* குறிப்பு.—விவாக விஷயம்—ஜாதகருக்கு வயது வருஷம் 15-0-0 முதல் வருஷம் 16-0-0 முடிகிறவரையிலும் சனிதசையில் அங்காரக புக்தி. ராகு புக்திகள் நடக்கின்றன. சனி களத்திரஸ்தானுதிபதியாகி களத்திரகாரகனுகிய சுக்கிரனுலும் குடும்பாதிபதியாகிய சூரியனுலும் பார்க்கப்படுகின்றார். ராகு போககாரகனுகிக் குடும்ப ஸ்தானத்தில் இருக்கின்றார். ஆகையால், சனி தசையில் இராகு தன்புக்தியில் அங்காரகனைவிட ஜாதகருக்கு விவாகம் செய்து வைக்க அதிக அதிகாரமுடையவராக விருக்கின்றார்.

29. முப்பது ஆண்டு தன்னில் மெல்லியும் கர்ப்பத்தாலே
தப்பாத காலனுடு சாருவா ளென்று சொல்வோம்
மைப்படி வேறு மாது மருவுவாள் அந்த ஆண்டில்
ஒப்பான வயது தீர்க்கம் உரைத்தன மந்த மாது.

29. ஜாதகருடைய மனைவி ஜாதகருக்கு முப்பதாவது வயதில்* கர்ப்பமாகி அதனுல் தவருமல் இறந்து எமபட்டணம் போய்ச் சேருவாள் என்று சொல்லுகிறோம். அதே வருஷத்தில் இன்னொரு மனைவி ஜாதகருக்கு வந்து நேருவாள். இந்த இரண்டாவது மனைவிக்கு நீண்ட ஆயுள் உண்டு என்று சொல்லுகிறோம்.

* குறிப்பு.—மனைவியின் மரண விஷயம்.—இதைப் பற்றி பின்னுல் வருகின்ற அடுத்த பாடலின் கீழ் பார்க்கவும்.

30. இருமனை அனுகும் போதுசேதி யியம்புவீர் முனியே நீர்தாம
கரியவன் [1] ஏழில் தங்கக் கரும்பாம்பு [2] இரண்டில் மேவ
உரைத்திட்டோம் தாரம் ரண்டு உத்தமன் பூர்வம் தன்னில்
மறுவிற்று வினைகள் தாமும் வரைகுவீ ரந்தச் சங்கை ;

30. இரண்டு மனைவிகள் * வந்து நேரிடுவதற்குக் காரணங்களை நீர் சொல்லுவீர் என்று கேட்கும்போது, சனி ஏழில் இருப்பதாலும், இராகு இரண்டில் இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று சொல்லுகிறோம். ஜாதகருக்குத் தன்னுடைய முன் ஜென்மத்தில் வந்து சம்பவித்த பாவங்களும் தோஷங்களும் உண்டு. அந்த விஷயங்களைச் சொல்லுவீர் என்று கேட்க ;

[1] சனி. [2] இராகு.

* குறிப்பு.—இரண்டு மனைவிகள் விஷயம்—முதல் மனைவி விஷயமாக ஏழாவது பாவம், இரண்டாவது பாவம் இந்த பாவங்களின் அதிபதிகள் சுக்கிரன் இவர்களைக் கவனிக்கவேண்டும். ஏழுக்குடைய சனி ஏழிலேயே ஆட்சியாய் இருக்கின்றார். இவர் சரத்திலிருப்பதால் ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடல் பிரகாரம் இரண்டு மனைவியோகம் இருக்கின்றது. சனியை விரோதியும் குடும்பாதிபதியுமாகிய சூரியனும், திருதிய விரயாதிபதியாகிய புதனும் பார்க்கின்றார்கள். இது முதல்தாரத்திற்குப் பிரதிகூலமானது. சுக்கிரனும் சனியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வது பல ஸ்திரீகளின் சம்மந்தத்தை உண்டுபண்ணக் கூடியதாகும். மேலும் களத்திராதிபதியாகிய சுக்கிரனும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வதால் ஜாதகாலங்காரம் 689-ஆவது பாடல் ஜாதகசிந்தாமணி 984-ஆவது பாடல் ஆகிய இவைகள் பிரகாரம் மூன்று மனைவி யோகமிருக்கின்றது. மேலும் சனியையும் ஏழையையும் அங்காரகன் பார்க்கின்றார். இரண்டில் ராகு இருக்கின்றார். இரண்டிற்குடைய சூரியன் தன் பாவத்திற்குப் பன்னிரண்டில் திருதிய விரையாதிபதியாகிய புதனுடன் கூடி இருக்கின்றார். இவரைச் சனியும் பார்க்கின்றார். இவைகள் பிரதிகூலமானவை. இரண்டாவது மனைவி பாவமாகிய ஒன்பதாவது பாவத்திற்குடைய குரு இரண்டாவது பாவத்தைப் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகருக்குத் தார தோஷம் அதிகமாகவிருக்கின்றது. சனி ஆட்சியாய் இருப்பதாலும், விரயாதிபதி புதனுகவிருப்பதாலும், ஒன்பதிற்குடையவர் குருவாகி இரண்டைப் பார்ப்பதாலும் உடனே இரண்டு தாரங்கள் நேரிடாமல் சில வருஷங்கள் கழித்து இரண்டுதாரம் நேரிடும் அமைப்பு இருக்கின்றது. ஜாதகருக்கு வயது வருஷம் 29-0-0 முதல் வருஷம் 30-0-0 வரையிலும், புதன்தசையில் அங்காரக ராகு புக்திகள் நடக்கின்றன. அங்காரகன் புத்திரஸ்தானுதிபதியாகிச் சனியைப் பார்த்திருக்கின்றார். ஆகையால் இந்தக் காலத்தில் கர்ப்பவேதனையால் முதல் மனைவி இறந்துவிடுவாள் என்று முன்னே சென்ற 29-ஆவது பாடலில் சொல்லி இருக்கிறது. போககாரகராகிய ராகு புக்தியில் இரண்டாவது மனைவி வருவாள் என்றும் கண்டிருக்கின்றது.

31. ஜாதகன் பூர்வம் தன்னைத் தாளெடுத் தியம்பக் கேண்மோ
மாதவர் போற்று கின்ற மதுரைமா நகர்க்கு மேல்பால்
மேதினில் சிறுவூர் தன்னில் விளங்கினன் வடுக னுகப்
போதவே தனங்கள் பெற்றுப் புகழ்ச்சியாய் வாழுந் நாளில் ;

31. இனிமேல் ஜாதகருடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுவதைக் கேட்பீராக. பெரிய தவசிகளும் முனிவர்களும் போற்றிப் புகழ்கின்ற மதுராபுரிபட்டணத்திற்கு மேற்குத் திக்கில் பூமியில் ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் தெலுங்கர் குலத்தில் பிறந்தார், இவர் செல்வத்தை அடைந்து பெருமையாய் வாழுகின்ற காலத்தில் ;

32. வந்தஊழ் தன்னைச் சொல்வேன் மாதுவும் விரோத முற்றுத்
தன்துணை மோசத் தாலே தன்னிடம் நீதி சொல்ல
இந்தவன் அந்த மாதுக் கிடுக்கங்கள் நிவிர்த்தி செய்து
விந்தையாய்ப் போகம் துய்த்து மெல்லியின் பொருளைப் பறித்து ;

32. ஜாதகருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீயானவள் தன்னுடைய சகோதரத்தினுல் ஏமாந்து விரோதத்தை யடைந்து ஜாதகரிடம் சென்று நியாயஞ் சொல்லுமென்று கேட்க, ஜாதகர் அந்த ஸ்திரீக்கு நேர்ந்த துன்பங்களைப் போக்கிப் பிறகு அவளிடம் ஆச்சரியமாய்ச் சினேகஞ் செய்துகொண்டு அவளிடத்தில் சம்போகஞ் செய்துகொண்டு அவளுடைய சொத்தை அபகரித்துக்கொண்டு ;

33. இருக்கின்ற காலம் தன்னி லிவன்பாரி அதை யறிந்து
திருகுக ளனந்த மாகச் செய்தனள் அந்த மாது
வரனிடம் சொல்லும் போது மாரனும் கேட்கா னின்றுன்
அரிவையும் மனவெ றுப்பால் அறைவளாம் சாபம் தானும்.

33. வாழுகின்ற காலத்தில் ஜாதகருடைய மனைவி இதைத் தெரிந்துகொண்டு கபடமாகவும் வஞ்சனையாகவும் அனேக விதமான கஷ்டங்களை உண்டு பண்ணினுள். அந்த ஸ்திரீ இதை ஜாதகரிடம் சொல்லவே, இவர் இது விஷயமாய் ஒன்றும் கேட்காமலும் கவனியாமலும் இருந்ததால் அந்த ஸ்திரீ மனம் நொந்து கஷ்டப்பட்டுச் சாபத்தைக் கொடுத்தாள்.

34. நயமுள வார்த்தை சொல்லி நற்பொருள் பரித்துப் பாவி
தயையிலா விருந்தாய் நீயும் ஜனிக்கும்பின் ஜன்மம் தன்னில்
வியமாகும் முதல்ம னைதான் மேவிடு மிரண்டாம் பாரி
பயமன தாகச் சொல்லிப் பாவையும் காலத்தால் மாண்டாள்.

34. இனிமையாக வார்த்தைகளைச் சொல்லி நல்ல சொத்துக்களை அபகரித்துக் கொண்ட பாவியாகிய நீ என்மேல் கிருபையும் இரக்கமும் இல்லாமல் இருந்துவிட்டாய். ஆகையால் நீ இனிமேல் பிறக்கும் மறு ஜன்மத்தில் உனக்கு முதல் மனைவி இறந்து போய் இரண்டாவது மனைவியை நீ அடையக்கடவாய் என்று அந்த ஸ்திரீ ஜாதகரைப் பார்த்துப் பயந்த நொந்த மனமுடையவளாகச் சொல்லிவிட்டு நாளடைவில் இறந்து விட்டாள்.

35. அந்ததோர் தோஷம் தானும் அணுகிற்றுப் பால னுக்குத்
தென்திசை காலனுடு சேர்ந்துமே மறையோன் பக்கம்
இந்ததோர் குலமு திப்பா னெய்திடும் மாது சாபம்
விந்தையாய்ப் பாரி ரண்டு விளம்புவோம் பால னுக்கு.

35. ஆகையால் அந்த ஸ்திரீயின் சாபம் ஜாதகருக்கு இந்த ஜன்மத்தில் வந்து சம்பவிக்கும். ஜாதகரும் முன் ஜன்மத்தில் இறந்து தெற்குத் திக்கிலுள்ள எமபட்டணத்திற்குப் போய் பிரதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்தில் பிறந்தார். அந்த ஸ்திரீயினுடைய சாபம் ஜாதகருக்கு வந்து சம்பவிக்கும், ஆகையால் ஆச்சரியமாக ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் வந்து நேரிடுவார்கள் என்று சொல்லுகிறேம்.

36. புத்திர னிருநான் காகப் புவித்திடு மென்று சொல்வோம்
செத்திடும் சிலது தானும் தீர்க்கமாம் ஆண்பா லொன்று
வித்தகிமார்கள் மூன்று விளப்புவோம் தீர்க்க மாக
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தவை தப்பா வாமே

36. ஜாதகருக்குச் சந்ததிகள் எட்டுபேர் உண்டாவார்கள் என்று சொல்லுகிறேம். இவர்களில் சிலபேர் இறந்துபோவார்கள். ஓர் ஆண் பிள்ளையும் மூன்று பெண்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். சிவபக்தர்களை உண்டாக்கிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லியவைகள் தவறிடாமல் நடக்கும்.

37. எந்தமா துக்குப் புத்திர ரியம்பினீர் விவரம் சொல்வாய்
முந்தின மாதுக் கேதான் மொழிந்தனம் பெண்பா லொன்று
பிந்தின மாதுக் கேதான் பேசுவோம் மற்ற தெல்லாம்
இந்திர னிறைஞ்சு மாதே யியம்பின மொழி குன்றுது.

37. எந்த மனைவிக்குச் சந்ததிகளைச் சொன்னீர். அதை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, முதல் மனைவிக்கு ஒரு பெண் குழந்தை இருக்கும் என்று சொன்னேம். இரண்டாவது மனைவிக்கு மற்றக் குழந்தைகளைச் சொல்லுகின்றேம். இந்திரன் வணங்கிப் பூஜை செய்கின்ற பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்

38. ஜாதகன் யோகச் சேதி சாற்றுவோம் தாயே கேளும்
கியாதியு மதிக மேற்பன் ஜனராசர் தன்னு லுய்வன்
நீதியா யிருபான் ரண்டில் நேர்ந்திடு மரசு தானும்
சூதிலா அன்பாறும் செய்குவன் ராச யோகம்.

38. ஜாதகருடைய யோகங்களைப் பற்றிய விஷயங்களைச் சொல்லுகிறேம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக. ஜாதகர் அதிக கீர்த்தியை அடைவார். பெரிய அரசர்களால் ஜீவனஞ் செய்வார். நியாயமாய் இவருக்கு இருபத்திரண்டு வயதில்* இராஜாங்கத்தில் அரசாளும் வேலை கிடைக்கும். ஐம்பத்தாறு வயது வரையிலும் குற்றமில்லாமலும் உபாயமாகவும் வேலை செய்வார். இவருக்கு ராஜயோகம் இருக்கிறது.

* குறிப்பு.—வேலை விஷயம்—பத்தாவது பாவத்தில் குருவும், லக்கினத்தில் சூரியனும், பத்திற்குடையவர் அங்காரகனுமாகவும், லக்கினத்தைச் சனியும் பார்த்தும் இருக்கின்றனர். குரு, சூரியன், அங்காரகன், சனி, இவர்கள் இராஜாங்க சம்மந்தமான கிரகங்களாகும். ஆகையால் ஜாதகருக்கு இராஜாங்க சம்மந்தமான ஜீவனம் ஏற்படும் அமைப்பு இருக்கின்றது. இவருக்கு வயது வருஷம் 21-0-0 முதல் வருஷம் 22-0-0 முடியும் வரையில் புததசையில் புத புக்தி நடக்கிறது. புதன் சூரியனுடன் கூடி இருக்கின்றர், புதன் வீட்டில் பத்துக்குடைய அங்காரகன் இருக்கின்றர். லாபத்தை உண்டுபண்ணக் கூடிய சுக்கிரன் புதனுடன் கூடி இருக்கின்றர். ஆகையால் புதன் புக்தியில் ஜீவன லாபம் ஏற்பட அமைப்பு இருக்கிறது. பிருஹஜ்ஜாதகத்தில் 23-ஆவது அத்தியாயம் 14-ஆவது சுலோகத்தில் சூரியன் சந்திரன் அல்லது குரு இவர்களில் யாராகிலும் ஒருவர் சந்திரனுடைய நவாம்சாதிபதியாகி இவர்களில் ஒருவர் நீசராசிப் பகைராசியில் அல்லது தங்களுடைய ராசியில் இருந்தால் ஜாதகர் பிறரிடத்தில் வேலை செய்வார் என்று சொல்லி இருக்கிறது. இங்குச் சந்திரனுடைய நவாம்சாதிபதியாகிய சந்திரனே இராசிச்சக்கரத்தில் விருச்சி

கத்தில் நீசமடைந்திருக்கிறுர். ஆகையால் இந்தச் சுலோகத்திற் சொல்லிய பிரகாரம் ஜாதகர் ஒருவரிடத்தில் வேலே செய்யும் அமைப்பு இருக்கிறது. ஜாதகருக்கு வயது வருஷம் 55-0-0 முதல் வருஷம் 56-0-0 வரையிலும் சுக்கிர தசையில் குரு புக்தி நடக்கின்றது. ஏழிற்குடையவர் பன்னிரண்டிற்குடையவர் இவர்களுடைய தசாபுக்தி காலங்களிலும் இவருடன் சம்மந்தப்பட்டவர் களின் தசாபுக்திகளிலும் வேலையை விட்டுப் பென்ஷனே சன்மானமோ ஜாதகர் அடைவார் என்று ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லியிருக்கின்றது. இங்கு சுக்கிரன் பன்னிரண்டிற்குடைய புதனுடன் கூடி ஏழிற்குடைய சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றுர். குருவினுடைய வீடாகிய மீனத்தையும் சுக்கிர னுடைய வீடாகிய துலாத்தையும் சனி பார்க்கின்றுர். ஆகையால் சுக்கிரதசை யில் குருபுக்தியில் சன்மானம்பெறும் அமைப்பு இருக்கின்றது.

39. ஐந்தாண்டில் வேறு இல்லம் அணுகிடும் பால னுக்குத்
தந்தைநாள் பூமி மேலாய்ச் சேர்ப்பனும் சோலே கூவல்
இந்தவன் தேடும் செம்பொ னியம்புவோ மையாயிரம் பொன்
சுந்தரன் தனக்குச் சொன்னேம் தோகையே கேட்டி டாயே.

39. ஜாதகருக்கு ஐந்து வயதில் இன்னெரு வீடு கிடைக்கும். இவர் தன்னுடைய தகப்பனுர் சம்பாதித்த பூமியைவிட அதிகமான பூமியைச் சம்பாதிப்பார். தோப்புகளேயும் கிணறுகளேயும் உடையவராவர். இவர் சம்பா திக்கின்ற தனம் ஐயாயிரம் பொன் ஆகும் என்று சொல்லுகிறேம். இந்த ஜாதகருக்கு இப்பலாபலன்களே நாங்கள் சொல்லுகிறேம். பார்வதி யம்மையே! கேட்பீராக.

40. இருபது ஒன்ப தாண்டி லியம்புவோம் தந்தை கண்டம்
வரும் ஜன்மம் தென்பால் நாகூர் மருவுவா னிக்குலத்தில்
பெருமையாய்த் தனமும் சேர்த்துப் பிரபல முடனே வாழ்வன்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

40. ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது வயதில் † இவருடைய தகப்பனுர் இறந்து விடுவார். தகப்பனுர் பின் ஜன்மத்தில் தெற்குத் திக்கி லுள்ள நாகூரில் இந்த ஜன்மத்திற் பிறந்த ஜாதியிலேயே பிறந்து பெருமையுடன் வாழ்ந்து செல்வத்தை அடைந்து அதிக கீர்த்தியையும் அடைவார். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

† குறிப்பு.—பிதுர் மாரக விஷயம்—ஜாதகருக்கு வயது வருஷம் 28-0-0 முதல் வருஷம் 29-0-0 வரையிலும் புததசையில் சந்திர புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். மீனலக்கினத் திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை தாண்டவ மாலே சந்திரகாவியம் இவைகள் ரீதியாய் சனி புதன் சுக்கிரன் இவர்கள் மாரகராகின்றுர்கள். புதன் மீனத்திற்கு மாரகஸ்தான மாகிய ஏழிற்குடையவராய்ப் பிதுர் காரகனுகிய சூரியனுடன் கூடி இருக்கின்றுர். மேலும் பிதாவுக்கு அஷ்ட மாதிபதியாகிய சுக்கிரனுடன் கூடி இருக்கின்றுர். ஆகையால் துய்யகேரளம்,

எட்டாம்பாவம், 20-ஆவது பாடல் பிரகாரம் அஷ்டமாதிபதியுடன் கூடிய புதன் பிதாவுக்கு மாரகாதிபதியாகின்றுர். சந்திரன் நீசமாகி பிதுர் லக்கினுதி பதியாகிய குருவினுடைய காலாகிய விசாகத்தில் குருவிற்கு எட்டில் இருப்பதால் இவருக்குப் பிதாவை மாரகஞ் செய்ய அதிகாரம் வருகிறது.

41. முப்பது ஒன்ப தாண்டில் விளம்புவோ மன்னே கண்டம்
செப்புவோம் ஜாதகர்க்குச் சிறுகண்டம் ஒன்று ரண்டு
ஒப்புடன் ஆண்டில் நேரும் உயர்குரு தசமம் நிற்கத்
தப்பிதம் நிவிர்த்தி யாகிச் சாற்றுவோ மறுபா னேழும்,

41. ஜாதகருக்கு முப்பத் தொன்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகிறேம். மேலும் ஜாதகருக்குச் சிறிய கண்டங்கள் ஒராவது இரண்டாவது வயதுகளில் உண்டாகும், ஆனல் குரு பத்தில் இருப்பதால் குற்றங்களும் தோஷங்களும் விலகி ஜாதகர் அறுபத்தேழுவயது வரையிலும் ஜீவித்து இருப்பார் என்று சொல்லுகிறேம்.

42. கும்பமாதத்தி லேதான் குழவி னுடலம் வாடும்
பின்ஜன்மம் அவ்வூர் தன்னில் பிறப்பனும் பௌத்திர னுக
அன்னவன் ஜனன காலம் அந்தணன் தசை யிருப்புச்
சொன்னனே ஆண்டு ஒன்றும் திங்களும் ஆறுமாகும்

42. ஜாதகர் அறுபத்தேழாவது வயதில் மாசி † மாதத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய் விடும். இவர் மறுஜன்மத் தில் அதே ஊரில் பௌத்த மதத்திற் பேரனுகப் பிறப்பார். இவருடைய ஜனன காலத்தில் குரு தசையில் இருப்பு ஒரு வருஷமும் ஆறு மாதமும் என்று சொல்லுகின்றேம்.

† குறிப்பு.—ஆயுள் விஷயம்—ஜாதகருக்கு வயது (கும்பமாதமாகிய மாசி மாதம் முடியும் வரையிலும்) அறுபத்தேழாவது வயது நடக்கும் போது சுமார் 66 வருஷமும் எட்டுமாதமும் ஆகிறது. அப்போது சூரிய தசையில் குருபுக்தி நடக்கின்றது. லக்கினுதிபதியாகிய சந்திரன் வளர் பிறையாகி ஐந்தில் இருக்கின்றுர். விருச்சிகம் சந்திரனுக்கு நீசவீடாகும் அம்சையில் ஆட்சியாய் இருக்கின்றுர். பலதீபிகையில் ஏழாவது அத்தி யாயத்தில் நீசபங்கத்தைப் பற்றிப் பல விதிகள் சொல்லப்பட்டிருப்பதில் 29-ஆவது சுலோகம் பிரகாரம் சந்திரன் உச்சமாகும் ராசியாகிய ரிஷபத்திற் குரிய சுக்கிரன் லக்கின கேந்திரத்தில் இருப்பதால் நீசபங்க மேற்படுகிறது, இது யோக விஷயமான போதிலும் சந்திரன் ஒருவாராகக் கொஞ்சம் பலத் துடன் இருப்பதாகக் கருதக்கூடும். நைசர்க்கிக சுபர்களாகிய குருவும் சுக்கி ரனும் லக்கின கேந்திரத்தில் இருக்கின்றுர்கள். புதனும் லக்கின கேந்திரத் தில் இருக்கின்றுர். லக்கினுதிபதியாகிய சந்திரனும் கோணத்திலிருக்கின்றுர். இவைகள் ஆயுளுக்கு அனுக்கூல மானவை. எட்டிற்குடையவரான சனி ஏழில் இருப்பதால், ''அட்டமன் நாலு பத்து ஏழ் வயதுமே அற்பமாகும்''

என்ற விதிப்படி ஆயுளுக்குப் பிரதிகூலமான போதிலும், இப்படிப்பட்ட 4, 7, 10-இல் உள்ள அஷ்டமாதிபதியை 5, 9-க்குடையவர் பார்த்தால் ஆயுளுக்கு அநுகூலமானது என்று சொல்லி இருப்பதாலும், 5-க்குடைய அங்காரகன் சனியைப் பார்ப்பது ஆயுளுக்கு அநுகூலமானது ஆகும். கேது எட்டிலிருப்பது ஆயுளுக்குப் பிரதிகூலமானது. சூரியனுக்கு ஐந்தில் சந்திரன் இருந்தால் ஆயுள் எழுபத்தெட்டு என்று புலிப்பாணி ஜோதிடத்தில் 102-வது பாடலில் சொல்லி இருக்கிறது. மணிகண்டகேரளம் அரிஷ்டகாண்டம் 18-ஆவது பாடல், பிரதிஅரிஷ்டகாண்டம் 40-ஆவது பாடல் பிரகாரமும் மேற் சொல்லிய காரணங்களாலும் ஜாதகருக்குப் பூர்ணயுள் உண்டு. பராசர ஹோரை சில பதிப்புப் பிரகாரமும் ஜாதகசந்திரிகைபிரகாரமும் புதன் மாரகாதிபதி ஆகின்றார். குரு ஆறுக்குடையவராகிச் சந்திரனுக்கு ஆறில் அசுவினியில் கேது காலில் இருக்கின்றார். குருவிற்குத் தன்புக்தியில் மாரகஞ் செய்ய அதிகாரம் இருக்கிறது. ஆனால் சனிக்குத் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அதிக அதிகாரம் இருக்கின்றது.

43. பலவிதப் பிணியு முண்டு பந்துவில் சூத முண்டு
நிலமது பலிதம் நஷ்டம் நினைத்தகா ரியங்க ளாகும்
குலவிடும் வழக்குக் கொஞ்சம் கூறினோம் பூர்வ பாகம்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் றுத.

43. இந்தக் காலத்தில் ஜாதகருக்குப் பலவிதமான நோய்கள் வரும். பந்துக்களில் சூதகங்கள் நேரிடும். பூமிகள் நல்ல பலனைக் கொடாமல் நஷ்டத்தை உண்டு பண்ணும். நினைத்த காரியங்கள் (தகப்பனுருக்குக்) கூடி வரும். வியாஜ்யம் கொஞ்சம் வந்து நேரிடும். இதுவரையிலும் பூர்வ பாகமாகிய முதல் பாகத்தைச் சொன்னோம். இமயமலைக்கு அரசனாகிய பர்வ ராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் இதுவரையிலும் சொல்லி வந்த வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 71

1. *சந்திரன் சனியும் தேளில்*[1] *சல்லியன்*[2] *பருதி*[3] *வீணை*[4]
மந்திரி[5] *மேட மாக மங்கலன்*[6] *சேய்*[7] *மாசப்*
புந்தியும் [8]*நந்தி யாகப்* [9]*பிலராகு கடகம் புக்கப்*
பிந்திய இரியு[10]*மானில்* [11]*பேசுவோம் கடகம் ஜன்மம்.*

	குரு	புதன்	சூரியன் சுக்கிரன்
	இராசி சக்கரம்		லக்கனம் ராகு
கேது			அங்காரகன்
	சந்திரன் சனி		

கேட்டை 4-ஆம் பாதம். புத தசை சுமார் வரு 2.

1. (இ-ள்.) சந்திரனும் சனியும் விருச்சிகத்திலும், சுக்கிரனும் சூரியனும் மிதுனத்திலும், குரு மேஷத்திலும், அங்காரகன் சிம்மத்திலும், புதன் ரிஷபத்திலும் பலமான ராகு கடகத்திலும், கேது மகரத்திலும் இருந்தால் ஜன்ம லக்கினம் கடகம் என்று சொல்லுவோம். (எ-று.)

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடைய தாகும் :—மேஷத்தில் சுக்கிரனும், மிதுனத்தில் கேதுவும், சிம்மத்தில் புதனும், துலாத்தில் குருவும் அங்காரகனும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் சூரியனும், புதனும் ராகுவும், மீனத்தில் சந்திரனும் ஆகும்.

2. வந்தசெய் ஆனும் ஜன்மம் வந்தஇல் கீழ்மேல் வீதி
தென்வாடை கீழ்ப்பால் மாயோன் தேவிமா காளி தங்கும்
விந்தையாய் அனுமான் தென்கீழ் விளம்புவோம் நதியும் தெற் [கில்
சந்ததம் பலதே வாசம் சாற்றிய பேரூர் தன்னில் ;

[1] விருச்சிகம் [2] சுக்கிரன் [3] சூரியன்
[4] மிதுனம் [5] குரு [6] அங்காரகன்
[7] சிம்மம் [8] புதன் [9] ரிஷபம்
[10] கேது [11] மகரம்

2. பிறந்த குழந்தை ஆண் குழந்தை ஆகும் பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தென்வாடையில் இருக்கும். கிழக்குத் திக்கில் மகா விஷ்ணுவின் கோயில் இருக்கும். காளியின் கோயிலும் இருக்கும். தென் கிழக்குத்திக்கில் ஆச்சரியமான அனுமார் கோயிலும் இருக்கும். தெற்குத் திக்கில் ஒரு நதி ஓடும். பல தேசத்தவர்கள் வாசஞ் செய்கின்ற ஒரு பெரிய பட்டணத்தில் ;

3. உதிப்பனுமவனே யம்மா உறும்தந்தை தாயின் யோகம்
மதித்திட அவனின் யோகம் வரும்துணை களத்திர புத்திரர்
சதியிலா முன்பின் ஜன்மம் சாற்றுவோம் நவக் கோ ளாய்ந்து
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்

3. ஜாதகர் ஜனன மாவார். பார்வதியம்மையே! தாயார் தகப்பனுர் இவர்களுடைய யோகங்களையும் ஜாதகருடைய யோகம், சகோ தரர்கள் மனைவி சந்ததிகள் ஆகிய இவர்களின் யோகங்களையும், முன் ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகள் யெல்லாவற்றையும் ஒன்பது கிரகங் களைப் பரிசீலனையும் ஆராய்ச்சியும் செய்து சொல்லுவோம். பரதேசிகளைக் காப் பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சன்மார்க்கன் பொறுமை [சாலி
சிந்தையு மற்பனுவன் சீலவா னிருநி றந்தான்
தன்தன மதிகம் சேர்ப்பன் தரணிக ளதிகம் சேர்ப்பன்
நிந்தையு மில்லா னுகும் நேமியில் செட்டுச் செய்வன்.

4. ஜாதகருடைய தகப்பனுரின் குணதிசயங்களைப் பற்றிச்சொல்லு கிறேன். நல்ல குணத்தையும் நடவடிக்கையையும் உடையவர். சாந்த மானவர். ரகசியத்தை உடைய மனத்தையுடையவர். நல்ல ஒழுக்க முடைய வர். இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறமுள்ள தேகத்தை யுடையவர். தானே பணத்தை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். அதிகமான பூமிகளையும் சேர்த்துவைப்பார். கெட்டபெயர் நிந்தனை இகழ்ச்சி இவைகளை அடையாதவராகும். பூமியில் வியாபாரஞ் செய்வார்.

5. உரோமங்க ளதிக மில்லான் நுவலுப தேசம் கொள்வன்
சேமமாம் குடும்பி யாவன் செய்நன்றி மறவா னுகும்
தாமத குணத்தா னுகும் சாந்தமுன் கோப முண்டு
பூமிகள் விருத்தி செய்வன் பிதுராஸ்தி கொஞ்ச முள்ளான்.

5. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய தேகத்தில் அதிக மாக மயிரில்லாதவர். உபதேசஞ் செய்து கொள்வார். க்ஷேமமான சுகமான குடும்பஸ்தராவார். பிறர் செய்த நன்றியை மறவாதவராகும். நிதானமான குணத்தை யுடையவர். முன் கோபமுண்டு, ஆனல் அஃது உடனே சாந்த மாகிவிடும். பூமிகளைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். கொஞ்சமான தந்தையின் சொத்தை யுடையவர்.

6. ஆதியில் துணைவர் வேருய் அனுகிடு மொருவர் தானும்
நீதியாய்த் தன்னே டொற்று நேமியில் செட்டுச் செய்வன்
போதன முடையா னுகும் புதுமனை கிருகம் செய்வன்
ஆதியில் வறுமை கொஞ்சம் அனுகிடு மென்று சொல்லே.

6. முதலில் தகப்பனுருடைய சகோதரர்கள் வேருக ஜீவிப்பார் கள். ஒரு சகோதரர் இவருடன் ஒற்றுமையாயிருந்து பூமியில் வியாபாரஞ் செய்வார். அறிவையும் செல்வத்தையு முடையவர். புதிய மனையில் ஒரு வீட்டைக் கட்டுவார். முதலில் இளம்பிராயத்தில் கஷ்டங்களும் தரித்திரமும் சம்பவிக்கும் என்று சொல்ல வேண்டும்.

7. பிந்திநாள் யோகம் வாய்க்கும் புகலுமிக் குணத்தா னுக்குத்
தன்துணை ஆண்பா லைந்து தையலர் ஒருத்தி யாகும்
பின்னையும் சிலநாள் தன்னில் போய்விடும் சிலது என்ருேம்
சொன்ன இக் குணத்தா னுக்குச் சுந்தர னுதிப்பா னுமே.

7. தகப்பனுருக்குப் பிந்திய வயதில் யோகம் வந்து சம்பவிக்கும். இப்படிப்பட்ட குணங்களை யுடையவர்களுக்குக் கூடப் பிறந்தவர்கள் ஐந்து ஆண் சகோதரர்களும், ஒரு பெண் சகோதரியும் ஆகும். இவர்களில் சிலர் கொஞ்சகாலம் கழித்து இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிருேம். இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார்.

8. பாலக னிரு நிறப்பன் பற்றிய சமவ ளர்த்திச்
சீலவான் அன்ன மீவன் ஜனஉப காரி யாகும்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நற்கல்வி விவேகி யாவன்
கோலமாம் தைரி யத்தன் குஞ்சர நடையு மாவன்.

8. ஜாதகர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறமுள்ள தேகத்தை யுடையவர். சமமான நடுத்தரமான வளர்ச்சியை யுடைய தேக முள்ளவர். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையு முடையவர். ஜனங் களுக்குச் சாப்பாடு போடுவார். ஜனங்களுக்கு உதவி செய்வார். பூமிகளைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். நல்ல படிப்புள்ளவர். புத்திசாலியானவர். தைரியமுள்ளவர். யானையைப் போன்ற கம்பீரமான நடையை உடையவர்.

9. சித்திர வீடு முள்ளான் சேயிழைப் பிரிய னுகும்
உத்தம னுகி வாழ்வன் ஓங்கிய செல்வ முள்ளான்
நித்திரை கொஞ்ச முள்ளான் நீர்தனில் தோய வல்லன்
ஜனித்தநாள் முதலாமாகக் குலவிடும் யோகம் என்ருேம்.

9. ஜாதகர் சித்திரங்கள் அமைந்த அழகான வீட்டையுடையவர். மனைவியின்மேல் ஆசையுடையவர். நல்ல உத்தமான குணமுடையவராக விருந்து வாழ்வார். அதிகரிக்கும்படியான அதிக செல்வ முடையவர். கொஞ்சமாகத் தூங்குபவர். நல்ல க்ஷேத்திரங்களிலுள்ள தீர்த்தங்களில் நீராடுவார். பிறந்தகாலம் முதற்கொண்டு இவர் இறக்கும் வரையிலும் இவருக்கு யோகம் உண்டாகும்.

10. வறுமைக ளில்லா ளுகும் வாக்குகள் தவறு னென்றேம்
திருமகள் வாச முள்ளான் சேர்ப்பனும் காலாள்தானும்
மறையவ ருறவு கொள்வன் மாலின்மேல் பத்தி யாவன்
பெருமையாய்க் குடும்பி யென்றேம் பேசுவோம் துணைவர் தம்மை.

10. ஜாதகர் கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாதவராவர். தான் சொன்ன வார்த்தைகளைத் தவருமல் காப்பாற்றுவார் என்று சொல்லுகிறேம். இலக்ஷ்மீ தன்னுடைய வீட்டில் குடி இருந்து வருவாள். கால்நடைக்காரர்களை வேலையாட்களாக வைத்திருப்பார். பிராமணர்களுடைய சினேகிதத்தை யுடையவர். மகாவிஷ்ணுவின்மேல் பக்தியுடையவர். மேன்மையும் பெருமையும் உடைய குடும்பஸ்தராவர் என்று சொல்லுகிறேம். இவருடைய சகோதரர்களைப்பற்றி இனிமேல் சொல்லுகிறேம்.

11. ஆண்துணை யிரண்டு மாகும் அக்கன்னி ஒன்றே யாகும்
பூணுவோம் மூன்றும் தீர்க்கம் போய்விடு மிரண்டு என்றேம்
காணவே மூத்தோன் சேதி கழறுவோம் மாஞ்சி வப்பன்.
தோன்றின முதலா மாகத் தொடர்ந்திடும் யோகம் தானே.

11. ஜாதகருடன் பிறந்த ஆண் சகோதரர்கள் இருவரும் பெண் சகோதரம் ஒருத்தியு மாக இம்மூவரும் நீண்ட ஆயுளை உடையவர்கள் ஆவார்கள். இவர்களில்லாமல் இரண்டு சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறேம். இவருடைய மூத்த சகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேம். இவர் மாநிறமுள்ளவர். இவர் பிறந்த நாள் முதற் கொண்டு இவருக்கு யோகம் தொடர்ந்தாற் போல உண்டாகும்.

12. நன்னடை மிருது வார்த்தை நற்றந்தை தாய்மேல் இஷ்டம்
பன்னியே பேச வல்லான் பாரினில் கீர்த்தி யேற்பன்
அன்னவன் தனக்குப் பாரி அனுதிடு மொன்றே யாகும்
தன்னிலே சுதர்ஆண் ஒன்று சாற்றுவோம் கன்னி ரண்டு.

12. இவர் நல்ல நடவடிக்கை யுடையவர். மெதுவாகவும் இனிமையாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். இவருக்குத் தாயார் தகப்பனர் இவர்களின்மேல் ஆசையுண்டு, சாமர்த்தியமாகவும் சுருக்கமாகவும் பேசும் திறமை உள்ளவர். பூமியில் புகழும் பெருமையும் அடைவார். இவருக்கு ஒரே ஒரு மனைவி தான் நேரிடும். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் பெண் குழந்தைகள் இரண்டும் உண்டென்று சொல்லுகிறேம்.

13. இருசுதர் தோன்றி யேதான் யமபதம் சேரு வானும்
இருசுதர் பெண்பாலாக எய்திடும் சுகமாயாக
மறுதுணை யிவன் பின் ளுக வந்தவ னிவனின் சேதி.
உறைகிறே மிருசி வப்பன் உள்மனம் கபடு கொஞ்சம்.

13. இவர் இரண்டு குழந்தைகள் பிறந்த பிறகு இறந்து எமனுடைய நாட்டையும் பதத்தையும் அடைவார். இந்த இரண்டு குழந்தைகளும் பெண்குழந்தைகளாகவும் சுகமாகவும் பிறக்கும். இன்றெரு சகோதரன் ஜாதகருக்கு இளைய சகோதரனுகும். இவருடைய விஷயங்களைச் சொல்லுகிறேம். இவர் இரண்டு நிறங்கள் கலந்த மாநிறமுள்ள தேகத்தையுடையவர். இவருடைய மனத்தின் உள்ளே கொஞ்சம் கபடமும் வஞ்சனையும் உண்டு.

14. கல்விமான் ஊகை வானும் கண்முகம் வசிய முள்ளான்
நல்லவன் நல்ல வர்க்கு நலமறிந் துரைக்க வல்லன்
சொல்லதைக் காப்பா ளுகும் சோம்பலும் கொஞ்ச முள்ளான்
புல்லியர் நேசம் கொள்ளான் புகலுமுன் கோபி யாவன்.

14. இவர் வித்தையுடையவர். புத்திசாலியானவர். இவருடைய கண்களும் முகமும் பிறரை வசியப்படுத்தக் கூடிய கவர்ச்சியோடு கூடிய தன்மையுடையனவாகும். இவர் நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். நல்லதைத் தெரிந்துகொண்டு பேசுந்திறமை உள்ளவர். தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். கொஞ்சம் சோம்பலான குணத்தையுடையவர். தாழ்ந்தவர்களுடைய சினேகத்தை அடையமாட்டார். பேசுவதற்கு முன்னே கோபத்தை உடையவராவர். அஃதாவது முன்கோபம் உடையவர் என்று சொல்லுகிறேம்.

15. தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
சந்ததம் வணிப மோங்கும் சகலரும் வசியம் கொள்வன்
கந்தன்மேல் பக்தி கொள்வன் காலாள்கள் உடைய ளுகும்
விந்தையாய்ப் பேசவல்லன் மெல்லிய மோக வானும்.

15. இவர் தன்னுடைய தகப்பனருடைய காலத்திய நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். எப்போதும் வியாபாரம் ஓங்கிவளர்ந்துவரும். எல்லோரையும் தன் வசமாக்கிக் கொள்ளுவார். முருகக்கடவுளின்மேல் பக்தி உடையவர். கால்நடையாட்களை வேலைக்காரர்களாக உடையவர். ஆச்சரியகரமாய்ப் பேசுந்திறமையுடையவர். ஸ்திரீகளின்மேல் காம ஆசை உடையவர்.

16. மனைவியு மொன்றே யாகும் மைந்தர்கள் ஆண்பால் ரண்டு
கனமுள பெண்பா லவ்வாறு கழறுவோம் தீர்க்க மாகப்
பிழையாகும் நான்கு என்றேம் பிரியாமல் ஒன்றுய் வாழ்வன்
தனயன்சொல் தட்டா ளுகும் சந்திரன் பிறைபோல் யோகம்.

16. இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு. குழந்தைகள் இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண்குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாய் இருப்பார்கள் என்று சொல்லுகிறேம். நான்கு குழந்தைகள் இறந்துவிடும் என்று சொல்லுகிறேம். இவர் பாகம் பிரித்துக் கொள்ளாமல் ஒன்றுக ஏககுடும்பமாக விருந்து வாழ்வார். அண்ணன் பிள்ளைகளுடைய வார்த்தைகளுக்குத் தடை ஒன்றுஞ் சொல்லமாட்டார். இவருக்கு வளர்பிறை சந்திரனைப் போல யோகம் விருத்தியாகிக் கொண்டுவரும்.

17. பெருகிடும் சுகமாய் வாழ்வன் பேசுவோ மணத்தின் காலம்
இருபது ஒன்று ஆண்டு எய்திடு முள்ளூர் கீழ்ப்பால்
வரும்பாரி சிவந்த மேனி மாதுவும் மெலிந்த தேகி
மருமமும் கொஞ்ச முள்ளாள் அவள்பித்தச் சூடாம் தேகி.

17. விருத்தியாகிக் கொண்டுவரும். சுகமாகவும் சௌக்கிய மாகவும் வாழ்வார். இனிமேல் ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். இருபத்தோராவது வயதில் † விவாகம் நடக்கும். மனைவி உள்ளூரிலேயே கிழக்குத்திக்கிலிருந்து வந்து நேருவாள். இவள் சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவள். மெல்லிய ஒல்லிய தேகத்தையுடையவள். கொஞ்சம் இரகசியமுள்ளவள். பித்தச்சூடான தேகத்தை உடையவள் ஆவள்.

† குறிப்பு.—விவாக விஷயம்—ஜாதகருக்கு வயது ஷ 20-0-0 முதல் ஷ 21-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் குருபுக்தி நடக்கின்றது. போகஸ்தானமாகிய நான்காவது வீட்டிற்குச் சுக்கிரன் அதிபதியாகி குடும் பாதிபதியாகிய சூரியனுடன் கூடியிருக்கின்ருர். குரு ஒன்பதிற்குடையவராகி நான்காவது பாவத்தைப் பார்க்கின்ருர். ஆகையால் சுக்கிரதசையில் குரு புக்தியில் விவாகம் நடக்க அமைப்பு இருக்கின்றது.

18. சோம்பலும் கொஞ்ச முண்டு துணைவிக ளிருவ ராகும்
தாம்பூலப் பிரிய முள்ளாள் ஜனபந்து புகழ வாழ்வள்
தேம்பிய மனத்தா ளாகும் சிறியோர்க்கு அன்ன மீவள்
பாம்புபோல் குண முள்ளாளாம் பாவைக்கு வயது தீர்க்கம்.

18. மனைவி கொஞ்சம் சோம்பலான குணத்தை உடையவள். இவளுடன் கூடப்பிறந்த சகோதரிகள் இருவராகும். வெற்றிலைபாக்கின் மேல் அதிக ஆசையுடையவள். தன்னுடைய ஜனங்களும் பந்துக்களும் இவளைப் போற்றும்படியான நிலையிலிருந்து வாழ்வாள். இளகிய இரக்க முள்ள மனத்தை உடையவள். ஏழைகளுக்கும் சிறியவர்களுக்கும் சாப்பாடு போடுவாள். பாம்பைப்போல குணத்தையுள்ளவள் இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு.

19. அத்தரி சொல்லும் போது அறைகிருர் புயண்டர் தாமும்
சுத்தமாய்த் தாரம் ரண்டு செப்பலா மிவனுக் கேதான்
சத்திக ளிரண்டு என்று சாற்றினீர் காரணம் சொல்
குத்தமா யேழில் கேது குலவியே சனியும் பார்க்க.

19 இவ்விதமாக அத்திரிமகாரிஷி அவர்கள் சொல்லும்போது புஜண்டமகரிஷி சொல்லுகிருர். ஜாதகருக்கு இரண்டுதாரம் என்று உண்மையாய்ச் சொல்லலாம். மனைவிகள் இரண்டுபேர் என்று நீர் சொன்னீர். அதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று புஜண்ட மகரிஷியைக் கேட்க, ஏழாவது பாவத்தில் கேது இருக்கின்ற தோஷத் தாலும், இவரைச் சனியும் பார்ப்பதாலும்;

20. உரைத்தனம் தாரம் ரண்டு உயர்குறு முனிவர் சொல்வார்
நிறைந்திடும் குருவும் பத்தில் நேர்த்தியாய் நாலைப் பார்க்கச்
சிறந்திடு மனைவி யொன்று ஜயமுனி கூறு கின்ருர்
விரத்திலி ரண்டோன் நாலோன் இருவரும் விரயம் புக்க. ;

20. இரண்டுதாரம் என்று சொல்லுகிறேம் என்று புஜண்டமக ரிஷி சொல்லுகிருர். குரு பத்தாவது பாவத்தில் இருந்து கொண்டு நான் காவது பாவத்தைப் பார்ப்பதால் ஜாதகருக்கு மேன்மையான ஒரே ஒரு மனைவி உண்டு. இவ்விதமாக அகஸ்திய மகரிஷி சொல்லவே, ஜயமுனி சொல்லு கின்ருர். இரண்டிற்குடையவரும் நாலிற்குடையவரும் விரய மடைந்து பன்னிரண்டில் இருப்பதால்;

21. இருமனை அனுகு மென்று எண்ணங்காண என்று சொல்லத்
திருமுக மாது சொல்வாள் திருகுகள் வேண்டாமையா
வருமனை யொன்றே யாகும் அவளோநந் தி போலாய் வாழ்வள்
உறைகுவீர் புத்திர பாவம் உரைக்கிருர் புத்திரர் தம்மை.

21 இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்பது என் னுடைய அபிப்பிராயமாகும் என்று ஜயமுனிவர் சொல்ல பார்வதியம்மை சொல்லுகின்ருர். வஞ்சனை கள்ளம் கபடு கோபம் இவைகள் ஒன்றும் தேவையில்லை. ஜாதகருக்கு ஒரே ஒரு மனைவிதான் நேரிடும். ஆனல் அவள் ஒனனைப்போல் வாழ்வாள். இவ்விதமாகப் பார்வதியம்மையார் சொல்லிவிட்டுப் புத்திரபாவத்தைப் பற்றிக்கேட்க பதில் சொல்லுகின்ருர்.

22. புத்திரர் விருத்தி தன்னைப் புகலுவோமா ண்பா லொன்று
சித்தமாய்ப் பெண்பால் ரண்டு செப்புவோம் தீர்க்க மாக
இத்தகை முனிவர் கூற இயம்புவார் பராசர் தாமும்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளங்காது என்று சொன்னேம்.

22. புத்திரவிருத்தியைப் பற்றிச் சொலலுகிறேம். ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண்குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்று உறுதியாய்ச் சொல்லுகிறேம். இவ்விதமாக முனிவர் சொல்லவே பராசரர் மறுத்துச் சொல்லுகின்ருர். ஜாதகருக்குப் புத்திரர்கள் விருத்தி யாக மாட்டார்கள் என்று சொல்லுகின்ருர்.

23. காரணம் யாது என்ன காரியும்[1] மதியு[2] மஞ்சில்
தீரமா யிருப்ப தாலே தோன்ருது சுதர்கள் தாமும்
மாறியே புயண்டர் சொல்வார் மதிமகன்[3] மதியை பார்க்கப்
பாரிய குருவும் சேயை[4] பார்த்ததால் சுதராண் ஒன்று ;

23. காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, சனியும் சந்திரனும் ஐந்தாவது பாவத்தில் வலுவாய் இருப்பதால் குழந்தைகள் பிறக்கா. இவ்விதமாகச் சொல்ல புஜண்டமகரிஷி மறுத்துச் சொல்லுகிருர். புதன் சந்திரனைப்பார்ப்பதாலும், குரு அங்காரகனைப்பார்ப்பதாலும் ஓர் ஆண் குழந்தை ;

---

[1] சனி [2] சந்திரன் [3] புதன் [4] அங்காரகன்

24. தோன்றிடும் முப்பான் மேலே ஜயமுனி கூறு கின்ருர்
அறைந்த தோர் புதனும் ஐந்தை அணுகியே பார்த்த தாலே
சார்ந்திடு மாயோ னலே ஜனித்திடும் சுதர்களளென்ருேம்
ஆன்றவன்முன்னூழ்த் தோஷம் அணுகிற்றுச் சுதர்தோஷங்கள்.

24. ஜாதகருக்கு முப்பதுவயதிற்கு மேலே உண்டாகும். ஜய முனிவர் சொல்லுகின்ருர். புதன் ஐந்தாவது வீட்டைப் பார்த்ததாலே மகா விஷ்ணுவின் கிருபையாலே குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லுகிருேம். ஜாதகருக்கு முன் ஜன்மத்திய வினையாலும் பாவத்தாலும் புத்திர தோஷங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

25. முன்வினை சொல்லு மென்ன மொழிகிருர் முனிவர் தாமும்
அன்னவன் கடையூர் தன்னில் அருகர்தம் குலமு தித்து
உன்னத மனைவி மைந்தர் உயர்வான பூமி யுண்டாய்த்
தன்னிலே வாழுந் நாளில் சாற்றுவோ மூழி தானே.

25. ஜாதகருடைய முன் ஜன்மத்திய வினைகளையும் பாவங்களை யும் சொல்லுவீர் என்று கேட்க, முனிவரும் சொல்லுகின்ருர். ஜாதகர் முன் ஜன்மத்தில் திருக்கடையூரில் சமணர்குலத்திற் பிறந்து மேன்மை யான மனைவி, பிள்ளைகள், உயர்ந்த நிலங்கள் இவைகளை உடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லு கிருேம்

குறிப்பு :—மீதி பாடல்கள் கிடைக்கவில்லை.

ஜாதகம் 72

1, மதி[1]மேடம் குருவும் மேரு[2] மழைக்கோளுங்[3] கேது சீயம்[4]
புதன்ரவி[5] வளையலாகப்[6] பூமகன்[7] கருங்கோள்[8] மைந்தன்[9]
நதிகுடம்[10] தன்னில் புக்க லக்கினம் கடக மாக
இதுவிதக் கிரகம் நின்று லியம்புவீர் பலனைத் தானே.

	சந்திரன்		
சனி அங்காரகன் ராகு	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் புதன்
			சுக்கிரன் கேது
குரு			

அசுவினி–1–ஆம் பாதம். கேது தசை ஷை 6–7–0

1. சந்திரன் மேஷத்திலும், குரு தனுசிலும், சுக்கிரனும் கேதுவும் சிம்மத்திலும், புதனும் சூரியனும் கடகத்திலும், அங்காரகனும் ராகு வும் சனியும் கும்பத்திலும் இருந்து லக்கினம் கடகமாகி இவ்விதமாகக் கிரகங் கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று;

குறிப்பு.—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கிரகநிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் சந்திரனும் குருவும், ரிஷபத்தில் அங்காரகனும், மிதுனத்தில் சுக்கிரனும் சனியும், கடகத்தில் கேது வும், தனுசில் சூரியனும், மகரத்தில் ராகுவும், மீனத்தில் புதனும் ஆகும்.

2. மங்கையும் கேட்கும் போது அத்திரி சொல்லு கின்ருர்
இங்கிவை ஆண்பால் ஜன்ம மில்லமும் கீழ்மேல் வீதி
துங்கமாம் வடக்கு வாடை தென்மேல்பால் சந்து முண்டு
சிங்கவா கனத்தாள் மேல்பால் தந்தியும் தங்கு மென்ருேம்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது அத்திரி மகாமுனிவர் சொல்லு கின்ருர் : இந்தக் குழந்தை ஆண்குழந்தையாக ஜனனமாகும். பிறந்த

1 சந்திரன் 2 தனுசு 3 சுக்கிரன்
4 சிம்மம் 5 சூரியன் 6 கடகம்
7 அங்காரகன் 8 இராகு 9 சனி 10 கும்பம்

வீடு கிழக்குமேற்குத் தெருவில் வடவண்டைவாடையில் இருக்கும். தென்மேற்குத்திக்கில் ஒரு சந்து இருக்கும். காளியம்மன் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். இந்த மேற்குத்திக்கிலேயே விநாயகக் கடவுளின் கோயி லும் இருக்கும் என்று சொல்லுகிறோம்.

3. மாலவன் மேற்கில் தங்கும் மங்கைபா ஞ்சாலி தெற்கில்
சாலவே பேரூர் தன்னில் சாற்றுவோம் பலதே வாசம்
ஏலவிவ் விடையா ளத்துள் எழிலுள கங்கை சேயாய்
ஞாலம் மே லுதிப்பா னுகும் நாயகி கேட்டி டாயே.

3. மகாவிஷ்ணுவின் கோயில் மேற்குத்திக்கில் இருக்கும். திரௌபதி யம்மன் கோயில் தெற்குத்திக்கில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு பெரிய ஊர் ஆகும். இதில் அனேக தேசத்தவர்கள் வாசஞ் செய்வார்கள். சொன்ன இந்த அடையாளங்கள் உள்ள இடத்தில் அழகிய வலுவான வேளாள குலத்தில் ஆண்குழந்தையாய்வந்து இந்தப் பூமியில் இந்த ஜாதகர் பிறப்பார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

4. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பா லொன்று
எந்தையே தீர்க்க மெய்து மிதுவன்றி மற்ற வெல்லாம்
நொந்திடு மென்று சொன்னேம் நுவலுவோ மவன்கு ணத்தை
நிந்தையு முடைய னுகும் நிருபர்க ளிஷ்டம் கொள்வான்.

4. ஜாதகருடைய தகப்பனேடு கூடப் பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லு கிறோம். ஓர் ஆண் சகோதரர் நீண்ட ஆயுளையுடையவராக விருப்பார். இவரல்லாமல் மற்றச் சகோதரங்கள் எல்லாம் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறோம். இந்தச் சகோதரனுடைய குண குணங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் நிந்தனை, பழி, இகழ்ச்சி, இவைகளை அடைவார். அரசர்களுடைய விசுவாசம் உள்ளவர்.

5. மாநிறம் உணச்சல் தேகி வாயுரோ கத்தா னுகும்
தேன்மொழி கூறு வானும் தேவியர் மோக னுவன்
பான்மையாய்ப் பேச வல்லான் பரஉப காரி யாவன்
ஈனமாம் குணங்க ளில்லா னிகபர மன்பு பூணன்.

5. இவர் மாநிறமுள்ள மெலிந்த, ஒல்லியான தேகத்தை யுடையவர். வாயுரோகத்தையுமுடையராவர். தகுதியாகவும், தன்மை யாகவும் பேசுந்திறமை யுடையவர். பிறருக்கு உதவி செய்பவராவர். தாழ்ந்த இழிவான குணங்களில்லாதவர். பூலோக பரலோக வனுபவம் உள்ளவர். ஆசை தயை இவைகள் இல்லாதவர்.

6. கல்வியும் கொஞ்ச முள்ளான் காலினில் வாயுப் பீடை
சொல்லது சுகமே யாகும் தந்தமும் குறைவு முண்டு
வல்லியு மொருத்தி யாகும் மைந்தராண் காணு னுகும்
புல்கிடும் பெண்பால் ரண்டு புகலுவோ மிவனுக் கேதான்

6. இவர் கொஞ்சமான வித்தையை யுடையவர். காலில் வாயு ரோகமுள்ளவர். இனிமையாகவும் சுகமாகவும் பேசக்கூடியவர், பற்கள் குறைவாக உள்ளவர். இவருக்குத் தாரம் ஒன்றேயாகும். இவருக்கு ஆண் குழந்தை கிடையாது. இரண்டு பெண் குழந்தைகள் இருக்கும் என்று சொல்லுகிறோம்.

7. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சன்மார்க்கன் பொறுமை [சாலி
வந்தவர்க் கன்ன மீவ னரசரால் பெருமை பூண்பன்
தன்தனம் அதிகம் சேர்ப்பன் தரணிகள் சேர்ப்பா னுகும்
சிந்தையில் கபடு முள்ளான் சீலனு மூகசாலி.

7. இனிமேல் தகப்பனருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகி றோம். இவர் நல்லொழுக்கமும் ஞானமார்க்கமும் உள்ளவர். பொறுமை யுள்ளவர். சாந்தமானவர். தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். அரசர்களால் பெருமையையும் கௌரவத்தையும் அடைவார். தன்னுடைய சுயார்ஜிதப் பொருளை அதிகமாகச் சேர்த்து வைப்பார். நிலங் களைச் சேர்த்து வைப்பார். மனத்தில் கள்ளம் வஞ்சனை இவைகளை உடையவர். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையு முள்ளவர். அறிவுள்ளவர். புத்தி சாலி.

8. இருவிதக் கல்வி கற்பன் ராஜபூ ஜிதனு மாவன்
பெருமவர் நேசம் கொள்வன் பூமியில் கீர்த்தி யேற்பன்
குறுமுனி போலே செய்கை கூறுவோம் வறுமை யில்லான்
அரன்பத்தி கொள்வா னுகும் அனுகிடும் மாமி ரண்டு.

8. (தகப்பனர்) இரண்டு விதமான வித்தைகளைப் படித்தவர், தெரிந்தும் கொள்ளுவார். அரசர்களால் போற்றப்பட்டவரும் பூஜிக்கப்பட்டவரு மாவார். பெரிய மனிதர்களுடைய சினேகத்தையுடையவர். பூமியில் புகழை அடைபவர். அகஸ்திய முனிவரைப் போலவே காரியங்களைச் செய் வார் என்று சொல்லுகிறோம். கஷ்டமும் தரித்திரமும் இல்லாதவர். சிவ பெருமானின்மேல் பக்தியுடையவர். இரண்டு மாமியார்களை அடைபவர் ஆவார்.

9. சுகபுசிப் புடைய னுகும் சூழ்வினை நிவிர்த்தி செய்வன்
சிறுமைஎன் றுரைக் காப்பன் சேர்ந்திடு மூலச் சூடு
நறுமலர்க் கந்த மிஷ்டன் நல்லோர்க்கு நல்ல னுவன்
மறுமமும் வெளிக்காட் டாதான் மாநிறம் யோக சாலி.

9. (தகப்பனர்) சுகமான போஜனத்தையுடையவராவர். தன்னை வந்து அடைகின்ற பாவங்களை நிவிர்த்தி செய்து கொள்ளும் சக்தியுடையவர். கஷ்டங்கள், தரித்திரம் இவைகள் இருக்கின்றன வென்று சொல்கின்றவர் களைக் காப்பாற்றுபவர். இவரை மூலச்சூட்டு வியாதி அணுகும். வாசனையுள்ள புஷ்பம், சந்ததனக் குழம்பு, வாசனைத்திரவியம் இவை களின்மேல் ஆசையுடையவர். நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து

கொள்ளுவார். தன்னுடைய மனத்திலுள்ள ரகசியங்களைப் பிறருக்குத் தெரியும்படியாய் வெளியே காண்பித்துக் கொள்ளாதவர். மாநிறமான தேகத்தையுடையவர். யோகமுள்ளவர் ஆவார்.

10. இந்நெறி யுடையா னுக்கு இருதார மீனையா ளுக்கு
அன்னவ னுதிப்பா னுகும் அவள்துணை ஆண்பாலொன்று
முன்னவனுக்ச் சொல்வேன் மொழிகுவன் அவன்கு ணத்தைப்
பின்னமில் லாத தேகன் பெருமுனி போலே வாழ்வன்.

10. இப்படிப்பட்டக் குணங்களை யுடையவரான தகப்பனுருக்கு இரண்டு மனைவிகள் நேரிடும். ஜாதகர் சிறிய மனைவிக்குப் பிறந்தவராகும். இளைய மனைவிக்கு ஒர் ஆண் சகோதரன் உண்டு. இந்தச் சகோதரன் மூத்த வனுவான். இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகிறேன். இவருக்கு அவய வக் குறைவு ஒன்றுங் கிடையாது. வசிஷ்ட மகாமுனிவரைப் போலவே இவர் வாழ்வார்.

11. அரசரால் ஜீவிப்பானும் ஆசாரன் பலபேர் நேயன்
மறுமமும் பொறுமை யுண்டு வறுமுகன் பத்தி கொள்வன்
இருவிதக் கல்வி யுள்ளா னிருடிகள் போல வாழ்வன
பெரும்பொரு ளிச்சை யுள்ளான் புண்ணிய மனத்தானுமே.

11. இவர், அ·.தாவது ஜாதகருடைய அம்மான் இராஜாங்கத்தா ரால் ஜீவனஞ் செய்து வருவார். ஆசாரம் நெல்லொழுக்கங்கள் இவை களை உடையவர். அநேகரிடத்தில் விசுவாசமுள்ளவர். இவர்களும் இவரி டத்தில் பிரியமாயிருப்பார்கள். இவர் தன்னுடைய மனத்தில் ரகசியத்தை யுடையவர். சாந்தமானவர். முருகக் கடவுளின் மேல் பக்தியுடையவர். இரண்டு விதமான வித்தையை யுடையவர், ரிஷிகளைப் போலவே வாழ்வார். பெரிய செல்வத்தின் மேல் ஆசையுடையவர். புண்ணியமான நல்ல மனத்தை யுடையவராவர்.

12. குருவுப தேச முள்ளான் குவலய நல்லோ னுவன்
மறுமனை விரும்பா னுகும் மனைவியுமொன்றே யாகும்:
பெரும்சுதர் ஆண்பால் ரண்டு பெண்ணது மவ்வா றுகும்
தீரமாம் நான்கு தாமும் நிலைக்காவே மற்ற வெல்லாம்.

12. ஜாதகருடைய அம்மான் குருவிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டவராவர். பூமியில் நல்லவராக விருப்பார். இன்னொரு மனைவியை அடையாதவர். இவருக்கு ஒரே மனைவிதான் நேரும். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு. இவர்கள் நான்குபேரும் நீண்ட ஆயுளை உடையவராவர், மற்றக் குழந்தை நிலைத்திராமல் இறந்துவிடும்.

13. ஜாதகன் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருசி வப்பன்
மேதினில் உணச்சல் தேகி வித்தையு மிரண்டு கற்பன்
காதியு முடைய னுகும் கனராசர் பேட்டி கொள்வன்
நீதிநன் னடக்கை யுள்ளான் நிந்தைகள் எற்கா னுகும்.

13. ஜாதகருடைய குணதிசயங்களைப்பற்றி நாங்கள் சொல்லுகி றோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்த நிறமான மாநிறத்தையுடைய வர். பூமியில் மெலிந்த ஒல்லியான தேகத்தையுடையவர். இரண்டு வித மான கல்வியைக் கற்றுக்கொள்ளுவார். கீர்த்தியும் பெருமையும் உள்ள வராவர். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். நீதி உள்ளவர். நல்ல ஒழுக்கமும் நடவடிக்கையும் உடையவர். நிந்தனை பழி இகழ்ச்சி இவைகளை அடையாதவராவார்.

14. கல்வியால் பெருமை பூண்பன் கனத்தவர் நேசம் கொள்வன்
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
சொல்லது காப்பா னுகும் துறவிமேல் விருப்ப முள்ளான்
இல்லறம் புதிதாய்ச் செய்வன் இன்பமாய் வார்த்தை கூறுவன்.

14- ஜாதகர் தன்னுடைய வித்தை மூலமாய்ப் பெருமையையும் புகழையும் அடைவார். பெரிய மனிதர்களுடைய விசுவாசத்தை அடை வார். நல்லவர்களுக்கு நல்லவராகவும் நல்லபடியாகவும் நடந்து கொள்ளுவார். முரடர்களுக்குத் திண்ணியராகவும் வலிவுடையவராகவும் ஆவார். தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்று வார். இல்லறத்தைத் துறந்தவர்களிடத்திலும் பரதேசிகளிடத்திலும் அன்புள்ளவராவார். ஒரு வீட்டைப் புதியதாய்க் கட்டுவார். இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவார்.

15. தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
சிந்தையும் மர்ம முள்ளான் சிலேடையாய் வார்த்தை சொல்வன்
முந்திய கல்வி ரண்டு மெய்திடும் தீர நெஞ்சம்
தன்தன முடையா னுகும் தக்கோர்கள் நேசம் கொள்வன்.

15. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய நிலங்களைப் பயிரிட்டு விருத்தி செய்வார். தன்னுடைய மனத்தில் இரசியமானதை உடையவர், அலங்காரமாகவும் இரண்டு அர்த்தங்கள் உண்டாகும்படியாகவும் வார்த்தை களைச் சொல்லுவார், மேன்மையான இரண்டு விதமான வித்தையை யுடையவர். தைரியமான மனத்தை யுடையவர். தன்னுடைய சுயார்ஜிதமான பணத்தையுடையவர். தகுந்தவர்கள் பெரியோர்கள் இவர்களுடைய் சினே கத்தை அடைவார்.

16. வித்தையில் புராண நூலில் மிகுதியாய் கற்பா னுகும்
சித்தமாய் அரசர் மூலம் ஜீவன முடைய னுகும்
பத்தினி நேய னுகும் பத்மரேகையு முள்ளா னுகும்
புத்திமா னுக சாலி பூமியோர் மெச்ச வாழ்வன்.

16. ஜாதகர் படிப்பில் புராணங்கள் முதலிய சாஸ்திரங்களை அதிகமாகப் படிப்பார் நிச்சயமாய் அரசர்கள் மூலமாகத் தொழிலையுடைய வராவர். மனைவியின் மேல் ஆசையுடையவர். மனைவியும் இவர்மேல் ஆசையுடையவளாகும். இவருடைய கையில் பத்மரேகை என்ற கமலரேகை

தாமரைரேகை உடையவராவர். புத்தியுள்ளவர். நுட்பமான அறிவுள்ளவர். பூமியிலுள்ளவர்கள் போற்றும்படியாகவும் கொண்டாடும்படியாகவும் வாழ்வார்.

17. நடையது சொகுசு முள்ளான் நற்றத்தை மேலாய் வாழ்வன்
அடைமொழி அதிகம் கூறுவன் அதிகார முடைய னாகும்
விடவுரை பக்கம் ராகும் விஷவாக்கு விவேகியாவன்
கடன்கொள்ளான் காலிவிருத்தி கட்டுவார்த் தைகளும் சொல்வன்.

17. ஜாதகர் அழகான நல்ல நாகரிகமுள்ள நடவடிக்கையுடைய வர். தன்னுடைய தகப்பனுருக்கு மேலான நிலைமையில் அந்தஸ்தில் இருந்து வாழ்வார். விசேஷ குணங்களைத் தெரிவிக்கக்கூடிய பண்புச் சொற்களை அதிகமாக உபயோகப்படுத்துவார். அதிகாரமும் செல்வாக்கும் உடையவராவார். இராகு என்ற பாம்பைப் போலவே விஷவார்த்தைகளை தன்னுடைய பக்கத்தில் உள்ளவரின்மேல் உபயோகப்படுத்துபவர். நுட்பமான புத்தியையுடையவராவார். கடன்வாங்கமாட்டார். கால்நடைகளின் விருத்தியுள்ளவர். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லுவார்.

18. மந்திரம் பண்டி தங்கள் வாரங்க ளறிவா னாகும்
இந்திர ஜாலம் கற்ப னெதிரியை மயக்கம் செய்வன்
தந்திர வாதி யாகும் சாதமும் லகுவா யுண்பான்
கந்தனும் குலதெய் வங்கள் கருத்தினில் கொள்வா னென்றோம்.

18. ஜாதகர் மந்திரங்கள் வைத்தியம் பாண்டித்துவம் நாடக வகைகள் தெய்வப்பாடல் இவைகளை அறிந்தவராகும். இந்திர ஜாலங்களைக் கற்றுக்கொள்ளுவார். தன்னுடைய எதிரியை மயங்கும்படியாகச் செய்து விடுவார். தந்திரமும் உபாயமும் சாமர்த்தியமும் உள்ளவர். ஆகாரத்தைக் கொஞ்சமாகவும் சீக்கிரமாகவும் சாப்பிடுவார். முருகரைத் தன்னுடைய குடும்ப தெய்வமாக எண்ணி நடந்து கொள்ளுவாராகும்.

19. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபா னலில்
கன்னிகை வடகீழ் தன்னில் காதலி மாதுர் வர்க்கம்
அன்னவள் வருவா ளாகும் அவள்குணம் மெலிந்த தேகி
உன்னத மிருசிவப்பள் உள்மனம் கபடு முண்டு.

19. ஜாதகருக்கு விவாகம் நேரிடுங்காலத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு இருபத்துநான்காவது வயதில் தாயார் வர்க்கத்திலிருந்து வடகிழக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணதியங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் மெலிந்த இளைத்த தேகத்தையுடையவள். இரண்டு நிறங்கள் கலந்துள்ள உயர்ந்த மாநிறமான நிறத்தை உடையவள். மனதிற்குள்ளே இரகசியமான வஞ்சகமுள்ளவள்.

குறிப்பு—விவாக விஷயம்.—ஜாதகருக்கு வயது ௵ 23 முதல் ௵ 24 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் புதன்புக்தி இருக்கின்றது. சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்கிற் குடையவராகியும் களத்திரகாரகனுமாகிக் குடும்பஸ்தானத்தில் இருந்துகொண்டு களத்திர ஸ்தானமாகிய ஏழிற் குடைய சனியாலும் போககாரகனுகிய ராகுவாலும் பார்க்கப்பட்டிருப்பதாலும் விவாகஞ் செய்து வைக்கச் சுக்கிரனுக்கு அதிகாரம் இருக்கிறது. புதன் குடும்பாதிபதியாகிய சூரியனுடன் சம்பந்தப்பட்டுச் சந்திரனுக்குப் போகஸ்தானமாகிய நான்கில் இருக்கின்றார். ஆகையால் புதனுக்குத் தன்னுடைய புக்தியில் விவாகஞ் செய்து வைக்க அதிகாரமிருக்கின்றது.

20. வித்தையள் புத்தி மானும் வீணப வாத மில்லாள்.
குத்தமில் லாதா ளாகும் கோபமும் பின்னுல் தாழ்வு
பத்தினி வந்த பின்பு பாலனும் யோக மாவன்
சுத்தமு முடையா ளாகும் சொல்லது தவரு ளென்றோம்.

20. மனைவி வாசித்தவளும் அறிவுடையவளுமாவாள். அனுவசியமான பழி பாவங்கள் இல்லாதவள். தவறுகளையும் பாவங்களையும் செய்யாதவளாவாள். முன்னே கோபம் வரும். உடனே அது தணிந்து குறைந்துவிடும். மனைவி ஜாதகரிடம் வந்து சேர்ந்த பிறகு ஜாதகருக்கு யோகமுண்டாகும். சுத்தமாக மனைவி இருப்பாள். தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றிக் கொள்ளுவாள்.

21. மனைவியும் வந்த பின்பு வந்திடும் ராஜயோகம்
கனமுள குடும்பி யாவள் கனத்ததோர் பணியும் சேர்ப்பள்
வினையான புத்தி யில்லாள் வீணவம்பில் செல்லா ளாகும்
மனமது இரக்க முள்ளாள் மங்கையே மேலும் கேளே.

21. மனைவி தன்னிடம் வந்து சேர்ந்த பிறகு ஜாதகருக்கு இராஜயோகம் உண்டாகும். இவர் மனைவி பெரிய குடும்பஸ்தையாவாள். உயர்ந்த ஆபரணங்களைச் சேர்த்து வைப்பாள். கெடுதியான புத்தியில்லாதவள். வீண் சண்டைச் சச்சரவுகளில் தலையிடமாட்டாள். தன்னுடைய மனம் இரக்கமும் தயையையும் உடையதாகும். பார்வதியம்மையே ! நாங்கள் இன்னம் அதிகமாகச் சொல்லுவதைக் கேட்பீராக.

குறிப்பு.—ஜாதகருடைய மனைவியின் வயதைப்பற்றியும் ஜாதகருக்கு ஒரு மனைவியா இரண்டு மனைவியா என்ற விவரத்தைப்பற்றியும் வெளிப்படையாகச் சொல்லாததால் இந்த சாஸ்திரப் பிரகாரம் ஒரே தாரந்தான் என்று கருதவேண்டியதாகவிருக்கிறது.

22. மதலைகள் ஆண்பா லொன்று மங்கையு மிரண்டு மாகும்
சதமாகு மிரண்டு தாமும் ஜயமுனி கூறு கின்றார்
பதிக்குமுக் கரத்தோ[1] னெட்டில் பணி சனி யுடனே கூடச்
சுதர்களெவ் விதங்களில் தீர்க்கம் சொல்லுவீர் முனியே நீர்தாம் ;

---

[1] அங்காரகன் [2] இராகு

22. ஜாதகருக்குக் குழந்தைகளில் ஆண் ஒன்றும், பெண்கள் இரண்டும் ஆகும். இவர்களில் இரண்டு பேர் நீண்ட ஆயுளையுடையவர்களாய் நிலைத்திருப்பார்கள். இவ்விதமாகச் சொல்லவே ஜய முனிவர் சொல்லுகின்றார். புத்திரஸ்தானாதிபதியாகிய அங்காரகன் லக்கினத்திற்கு எட்டில் இராகு சனி இவர்களுடனே சேர்ந்திருப்பதால் குழந்தைகள் எவ்விதமாக நீண்ட ஆயுளையுடையவர்களாகும்! அதற்குக் காரணத்தை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க:

23. ஐந்தினுக் குடையோ னெட்டு ஆட்சிமாருடனே கூட
விந்தையாய்ச் சுதர்கள் தோன்றும் விருத்தரும் சொல்லு கின்றார்
முந்திய சுதர்கள் ரண்டும் மேவிடும் எமப திக்கு
எந்தவாறு சொல்லு மென்ன இரணிய[1] னறில் நிற்க;

23. ஐந்தாவது வீட்டிற்குடையவரான அங்காரகன் இருக்கின்ற வீட்டிற்குடையவரான சனி எட்டில் ஆட்சியாய் இருந்துகொண்டு அங்காரகனுடனே கூடியிருப்பதால் குழந்தைகள் ஆச்சரியமாய்ப் பிறப்பார்கள். இவ்விதமாகச் சொல்ல, விருத்தர் என்பவர் சொல்லுகின்றார். முதல் இரண்டு குழந்தைகளும் இறந்து எமபட்டணம் போய்ச் சேர்ந்துவிடும். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, குரு ஆறில் இருப்பதாலும்;

24. அதற்கு ஒன்பானில் வெள்ளி[2] அனுகியே கேது தங்கக்
குதர்க்கங்கண் முதலில் தோஷம் கூறுவோ மிவனுக் கேதான்
மதிக்குமே[3] ஒன்பான் தன்னில் மன்னவ[4] னிருப்பதாலே
சுதரொன்று பெண்ணி ரண்டு தோன்றிடும் தீர்க்கமாக.

24. குருவிற்கு ஒன்பதில் சுக்கிரன் இருந்துகொண்டு இவருடன் கேது கூடியிருப்பதாலும் முதலில் பிறக்கும் குழந்தைகளுக்குத் தோஷம் உண்டு என்று சொல்லுகிறோம். ஜாதகருக்குச் சந்திரன் இருக்குமிடத்திலிருந்து ஒன்பதாவது வீட்டில் குரு இருப்பதால் ஆண் குழந்தை ஒன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் நீண்ட ஆயுளையுடையவர்களாகவிருப்பார்கள்.

25. அன்னையின் குணத்தைச் சொல்லு அழகுளாள் பொறுமை சாலி
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் கோபம் கொஞ்சம்
பன்னியே பேச வல்லாள் பஞ்சைமே லிரக்க முள்ளாள்
கன்னென மொழியே சொல்வள் காதலி யோக சாலி.

25. இனிமேல் ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் அழகுள்ளவள். பொறுமையை உடையவள். தான் சொல்லும் வார்த்தைகளே உயர்ந்தவைகள் என்றும் உண்மை என்றும் சொல்லி வாதாடி ஜயிக்குந் தன்மையுடையவள். இவளுக்குக் கொஞ்சங் கோபமுண்டு. சுருக்கமாகவும் திறமையாகவும் பேசுஞ் சக்தியும் சாமர்த்தியமும் உள்ளவள். ஏழைகளிடத்தில் தயையும் இருபையும் உடையவள். இனிமையான வார்த்தைகளையே சொல்லுவாள். இவள் யோகத்தையுடையவளாவாள்.

[1] குரு [2] சுக்கிரன் [3] சந்திரன் [4] குரு

26. பாக்கிய முடையளாகும் பஞ்சைமே லிரக்க மாவள்
நாக்குகள் தவரு ளாகும் நளினமாய் வார்த்தை சொல்வள்
தீக்குண மில்லா ளாகும் திருமக ளொப்ப தாகும்
சீக்கிர நடையு மாவள் தேவியு மிளம னத்தாள்.

26. தாயார் செல்வத்தை யுடையவளாவாள். ஏழைகளிடத்தில் இருபையையும் தயையையும் உடையவள். தான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவாள். இனிமையாய் வார்த்தைகளைச் சொல்லுவாள். கெட்டகுணமில்லாதவளாவாள். இவள் இளகிய மிருதுவான மனத்தையுடையவளாவாள்.

27. அவள்துணை ஆண்பால் ரண்டு அம்பிகை ஒருத்தி தீர்க்கம்
இவளுடைய பூர்வம் தன்னை யியம்புவோ மினிமே லாகத்
தவசிகள் வாழு கின்ற தண்டகா ரண்யத்தில் தோன்றிப்
பவமுள வைசியச் சேயாய் பரவையும் பிறந்தா ளென்றோம்.

27. தாயாருடன் கூடப் பிறந்த இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளையுடையவர்கள். இவளுடைய முன் ஜன் மத்தைப் பற்றி இனிமேல் சொல்லுகிறோம். தவஞ் செய்கின்ற ரிஷிகள் வசிக்குமிடமாகிய தண்டகாரண்யத்தில் பாவத்தையுடைய வைசிய ஸ்திரீயாய்ப் பிறந்தாள் என்று சொல்லுகிறோம்.

28. வரனுமே அதற்கு உத்தரம் வாலங்கா டதனில் தோன்றிப்
பெருமையும் புகழு முண்டாய்ப் புத்திர ரில்லா ளாகித்
திருமகள் வாழுந் நாளில் செய்தவூழ் வினையைக் கேண்மோ
அரன்கோயில் விஷேச காலம் அனேகரும் வருகும் போது;

28. இவளுடைய புருஷன் இவளுடைய ஊருக்கு வடக்கில் ஆலங்காட்டில் பிறந்தும் இவள் பெருமையும் கீர்த்தியும் உண்டாகிக் குழந்தைகள் இல்லாமல் வாழுகின்ற காலத்தில் இவள் செய்த பாவத்தைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. ஒரு விசேஷமான உற்சவ காலத்தில் சிவபெருமானுடைய கோயிலுக்கு அநேக ஜனங்கள் போகின்ற காலத்தில்.

29. வரனுடன் செல்லும் போது மஞ்சள்குங் குமங்கள் சீப்புப்
பெருமையாய் வாங்கிக் கொண்டு பொருளது மீயா ளாகி
விரைவினில் சென்று ளென்றோம் விளம்புவான் வைசியன் தானும்
தருபொரு ளீயாப் பாவி ஜனித்திடும் மறு ஜன் மத்தில்;

29. இவளும் தன்னுடைய புருஷனுடன் போகின்றபோது மஞ்சள் பலவித வர்ணங்களுள்ள குங்குமம் சீப்பு இவைகளைப் பெருமையாக ஒரு வர்த்தகனிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொண்டு அவைகளுக்காகக் கிரைய பணத்தைக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டு வேகமாகப் போய் மறைந்துவிட்டாள் என்று சொல்லுகிறோம். வர்த்தகராகிய செட்டியார் தேடிப் பார்த்துவிட்டுச் சொல்லுகின்றார். கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்காமல் போய்விட்ட பாபியானவள் தான் பிறக்கின்ற பின் ஜன்மத்தில் ;

30. மறுமனை யாகத் தோன்றி மத்திய வயதில் மஞ்சள்
திருமுத்திரை விலகு மென்று செப்பினன் வைசியன் தானும்
உறைந்திடு மந்தத் தோஷம் உத்தமி அந்தி யத்தில்
வரன் மாண்டு பின்னல் சென்று மலரயன் வரையப் பட்டு.

30. இரண்டாவது மனைவியாகவமைந்து தனக்கு மத்திய வயது காலத்தில் தன்னுடைய மாங்கலியத்தையும் மஞ்சளையும் இழந்து விதவையாக வாழக்கடவள் என்று சொன்னர். இந்தச் சாபத்தாலே இவள் முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் இவளுடைய புருஷன் இறந்து அதன் பிறகு இவளும் இறந்து பிரம தேவனல் எழுதப்பட்டு ;

31. வந்தவளிவளே யென்றேம் வைசியின் சாபம் தானும்
பிந்தியு நேரு மென்றேம் புகலுவோ மறும ணம்தான்
விந்தையாய் மத்தியத்தில் அமங்கலி யாகவாழ்வாள்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழி குன்றுது.

31. இந்த ஜன்மத்தில் இவள் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறேம். முன் ஜன்மத்திய செட்டியாருடைய சாபம் இவளை வந்து அணுகும் என்று சொல்லுகிறேம். இவள் இரண்டாவது மனைவியாக வாய்ப்பாள் என்று சொல்லுகிறேம். இவள் ஆச்சரியமாக மத்திய வயது காலத்தில் விதவையாக விருந்து வாழ்வாள், முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப் போகாமல் நடக்கும்.

32. மறுஜன்மம் வேலன் காட்டில் மாதுவு மிக்கு லத்தில்
உறைகுவாள் சுகமுண் டாகி உத்தமி வாழ்வாளாகும்
பெருமையாய்க் குடும்பி யாகிப் பூஷண மதிகம் பெற்றுத்
திருமக ளொப்பதாகத் தேவியும் வாழ்வா ளாமே.

32. இவள் பின் ஜன்மத்தில் வேலன் காட்டில் இந்த ஜன் மத்திற் பிறந்த வேளாள குலத்தில் வந்து பிறப்பாள். சுகங்களை உடையவளாகி வாழ்வாள். மேன்மையான குடும்பம் உடையவளாகி ஆபரணங்களை அதிகமாக வடைந்து இலட்சுமிக்குச் சமமானவளாகவிருந்து இவள் வாழ்வாள்,

33. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் விரிஞ்சி கீழ்பால்
முந்திய சிற்றூர் தன்னிலுந் தித்தனன் வடுகர் வமிசம்
அந்தவன் கிராமச் செட்டு அதிகார முடைய னுகித்
தன்தன மதிக முண்டாய்த் தரணியில் வாழுந் நாளில்

33. ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். விரிஞ்சிபுரத்திற்குக் கிழக்கில் மேன்மையான ஒரு சிறிய கிராமத்தில் தெலுங்குகாரர் குலத்தில் பிறந்து தன் கிராமத்திய வியாபாரத்தைச் செய்து கொண்டு கிராம அதிகாரங்கள் உடையவராகி தன்னுடைய சுயார்ஜித சொத்து அதிகமாகவடைந்து பூமியில் வாழ்ந்த காலத்தில்

34. வேறெருரு விதவை மாது மேவினுள் தாயினில் லத்தில்
நாரியும் சலங்கள் கொள்ள நடந்தனன் அந்தக் காலம்
வீரனும் ஒருவன் சென்று மெல்லி மேல் மோகங் கொண்டு
கூறினன் சிலேடை வார்த்தை கோதையு மிசையாளாகி

34. இன்னொரு ஜாதியைச் சேர்ந்த ஸ்திரி தன்னுடைய தாயார் வீட்டிற்கு வந்திருக்குங் காலத்தில் ஜலம் கொண்டுவர வெளியே சென்றபோது தைரியமான ஒருவன் அவளிடம் போய் அவளிடத்தில் காம ஆசையுடையவனுகி அலங்காரமான இரண்டு அர்த்தங்களையுடைய வார்த்தைகளாகிய சிலேடையான வார்த்தைகளைச் சொன்னன், அந்த ஸ்திரி அதற்குச் சம்மதிக்காதவளாகவே

35. அதற்கவன் பலவந்தத்தால் அவளேயே போகம் துய்தான்
மதிமுக மாது தானும் வரைந்தனள் துணைவரோடு
அதிகமாய்க் கோபமுற்று அதிகாரியுடனே சொல்லச்
சதிசெய் தோன் தனைய ழைத்துத் தனமதை யவனுற் பெற்று ;

35. இவன் பலவந்தஞ் செய்து அவளிடத்தில் போகஞ் செய்தான். அதற்கு மேல் அந்த அழகிய ஸ்திரீ நடந்த விஷயங்களைத் தன்னுடைய சகோதரர்களிடத்தில் சொன்னள். பிறகு சகோதரர்கள் அதிக கோபம் உடையவர்களாகி அதிகாரியிடம் சொல்லவே, இந்த அதிகாரியாகிய ஜாதகருடைய தகப்பன் குற்றஞ் செய்தவனை வரவழைத்து அவனிடமிருந்து பொருளை லஞ்சம் வாங்கிக்கொண்டு;

36. மாதுமேல் குற்றம் சாட்ட மங்கையும் மனம் கலங்கி
ஓதுவாள் சாபம் தானும் உற்றதை விசாரி யாமல்
அநீதியாய்ப் பொருள்கைக் கொண்டு நிமலிமேல் குற்றம் சொன் [னுய்
போதவே மறு ஜன் மத்தில் பெண்துணை யில்லா தாகி

36. அந்தவிதவை ஸ்திரீயின் பேரிலேயே குற்றத்தைச் சாட்டிவிடவே, அவள் தன்னுடைய மனம் கலக்கமடைந்து, நொந்து, சாபத்தைச் சொல்லுகின்றுள். உண்மையை நன்றுய் விசாரித்துத் தெரிந்து

கொள்ளாமல் அநியாயமாய்ப் பொருளை லஞ்சமாகக் கையில் வாங்கிக் கொண்டு ஒரு ஸ்திரீயின் பேரில் அபவாதத்தைச் சொன்னாய் நீ. ஆகையால் நீ உன்னுடைய பின் ஜன்மத்தில் உனக்குச் சகோதரியில்லா மலும்.

37. மனைவியு மிரண்டு மாகி மங்கைபுத் திரியு மின்றி
வினையான வாயு நோயால் மேதினில் மரண மாவாய்
சினமுடன் மாது சொல்லி ஜலத்தினில் மாண்டா ளென்றோம்
கனமுட னந்தத் தோஷம் கலந்தது அவனுக் கேதான்.

37. இரண்டு மனைவிமார்களை யடைந்து, ஸ்திரீயும், புத்திரியும் இல்லாமலிருந்து, முன் பாபத்தினாலுண்டான வாயு நோயினால் பூமியில் நீ இறந்துவிடக் கடவாய் என்று கோபத்துடன் அந்த விதவை ஸ்திரீ சொல்லிவிட்டுப் பிறகு ஜலத்தில் விழுந்து முழுகி இறந்து விட்டாள் என்று சொல்லுகிறோம். வலுவான இந்தத் தோஷம் இவருக்கு (தகப்பனாருக்கு) வந்து சம்பவித்தது.

38. அந்திய காலம் தன்னில் அனுயாச மரண மாகிச்
சந்ததம் பிரம னாலே தரணியில் வரையப் பட்டு
வந்த வனிவனே யென்றோம் வரைகிறோம் பின் ஜன் மத்தை
கந்தன்வாழ் தணிகை தன்னில் காதலன் க்ஷத்திரிய சேயாய்

38. தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசிக்காலத்தில் இறந்து பிரமதேவனால் எழுதப்பட்டு இந்தப் பூமியில் வந்துபிறந்தார் என்று சொல்லுகிறோம். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லு கிறோம். முருகக்கடவுள் எழுந்தருளி இருக்கும் திருத்தணியில் இவர் க்ஷத்திரியராக.

39. உதிப்பனு மிவனே யென்றோம் உரைக்கிறோ மீரைந்தாண்டில்
சதிசெயும் காலன் பக்கல் சாருவா னென்று சொன்னோம்
மதிமுக மாதுரு க்கு வாறஞ்சு ஆண்டு தன்னில்
விதியது முடியு மென்றோம் விளம்பின மொழி குன்றாது.

39. பிறப்பார் என்று சொல்லுகிறோம். இவர் ஜாதகருக்குப் பத்தாவது வயதில் * இறந்து எமனிடம் போய்ச் சேருவார் என்று சொல்லுகிறோம். அழகான தாயாருக்கு ஜாதகருடைய முப்பதாவது வயதில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறி டாமல் நடக்கும்.

* குறிப்பு.—தகப்பனார் மரணவிஷயம்—ஜாதகருக்கு வயது ௵ 9–0–0 முதல் ௵ 10–0–0 வரையிலும் சுக்கிர தசையில் சுக்கிரபுக்தியும் சூரிய புக்தியும் நடக்கின்றன. பிதுர்ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய மீனம். சனியும் அங்காரகனும் மீனத்தை மிகவும் நெருங்கி இருக்கின்றார்கள். ஒன்பதிற்குடைய பிதுர்ஸ்தானாதிபதியாகிய குரு லக்கினத்திற்கு ஆறில் இருந்துகொண்டு ராகுவால் பார்க்கப்படுகிறார். பிதுர்காரகனாகிய சூரியன் விரயாதிபதியாகிய புதனுடன் கூடியிருக்கின்றார். பிதுர் ஸ்தானாதிபதியாகிய

குருவும் பிதுர்காரகனாகிய சூரியனும் ஒருவருக்கொருவர் ஆறெட்டில் இருக்கின்றார்கள். ஆகையால் பிதாவுக்குத் தோஷம் இருக்கிறது. ஜாதகருடைய இளம்பிராயத்திலேயே தகப்பனார் இறந்துவிடும் அமைப்பு இருக்கிறது. மீனலக்கினத்திற்குச் சுக்கிரன் புதன் சூரியன் இவர்கள் பராசரஹோரை, ஜாதகச்சந்திரிகை, தாண்டவமாலை இவைகளின் பிரகாரம் மாரகாதிபர்கள். சுக்கிரன் மூன்றிற்கும் எட்டிற்கும் உடையவராகி ஆறில் இருக்கின்றார். ஆகையால் சுக்கிரன், தன் தசையில் பிதுரை மாரகஞ்செய்ய அதிகாரமுடைய வராய் இருக்கின்றார். மீனத்திற்குச் சூரியனும் மாரகாதிபதியாகி பிதுர் காரகனாகவே இருக்கின்றார். ஆகையால் தன் புக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய சூரியன் அதிகார முடையவராக விருக்கின்றார். ஆகையால் பிதாவுக்குச் சுக்கிர தசையில் சூரிய புத்தியில் மாரகம் நேரிட அமைப்பு இருக்கின்றது.

குறிப்பு.—தாயார் மரணவிஷயம்—ஜாதகருக்கு வயது ௵ 29–0–0 முதல் ௵ 30–0–0 முடியும் வரையிலும் சூரிய தசையில் குரு புக்தியும் சனிபுக்தியும் நடக்கின்றன. மாதுருலக்கின மாகிய துலாத்திற்குச் சூரியனும், குருவும் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை, சந்திர காவியம் இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாகின்றார்கள். சூரியன் மாதுர்காரகனாகிய சந்திர னுடைய வீட்டில் இருக்கின்றார். குரு மாதுர்காரனாகிய சந்திரனையும், மாதுர் ஸ்தானாதிபதியாகிய சுக்கிரனையும் பார்க்கின்றார். சனிகூடச் சந்திரனையும் சுக்கிரனையும் பார்கின்றார் ஆனால் இவர் துலாத்திற்கு நான்கு ஐந்திற்குடையவராய் ஐந்தில் இருக்கின்றார். ஆகையால் இவரை விட குருவுக்கு மாதாவுவை மாரகஞ் செய்ய அதிக அதிகாரம் இருக்கிறது. ஆகையால் சூரிய தசையில் குரு புக்தியில் மாதாவுக்கு மரணம் நேரிட அமைப்பு உண்டு.

40. ஜாதகன் முன் ஜன் மத்தைச் சாற்றுவோ மிவ்வூர் கீழ்பால்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினன் செங்குந்த னாகப்
போதவே தனங்கள் பெற்றுப் புத்திரர் மனைவி யுண்டாய்
நீதியாய்ச் செட்டுச் செய்து நேர்ந்திடு மார்க்கம் தன்னில்.

40. ஜாதகருடைய பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் இந்த ஜென்மத்திற் பிறந்த ஊருக்குக் கிழக்கே பூமியில் ஒரு பெரிய ஊரில் செங்குந்தர் என்ற கைக்கோளர் ஜாதியில் பிறந்தார், செல்வத்தை யடைந்து புத்திரர் மனைவி இவர்களை யுடையவராகி நியாயமார்க்கத்தில் வியாபாரஞ் செய்து, போக்கு வரவு வழியில்.

41. தாகப்பந் தலும மைத்து ஜனஉப கார னையும்
தோகைவா கனத்தோன் பத்தி சுந்தரன் கொண்டு மேதான்
ஆகம மறிந்து இன்னேன் அந்தகன் பக்கல் சென்று
பாகமாய்ப் பிரம னாலே பாரினில் வரையப் பட்டு

41. ஜனங்களுடைய தாக விடாயைத் தீர்ப்பதற்காக நீர்மோர்ப் பந்தலை ஏற்படுத்தி ஜனங்களுக்கு உதவி செய்பவராகி, மயில் வாகனத்தை யுடையவராகிய முருகக்கடவுளின் மேல் பக்தியுடையவராகி ஆகம

சாஸ்திரங்களை நன்முக இவர் தெரிந்து கொண்டவராகி பின்னுல் இறந்து எமனிடத்திற்குச் சென்று அதன் பிறகு பிரமதேவனுல் பக்குவமாக எழுதப் பட்டு இந்தப் பூமியில்

42. வந்தவ ; னிவனே யென்றேும் வரைகிறே மிவனின் யோகம்
அந்தணர் நேச முள்ளான் அரசர் பூசிதமு மாவன்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமிக ளதிகம் சேர்ப்பன்
முந்திய கீர்த்தி யேற்பன் முதல்வியே மேலுங் கேளே.

42. ஜாதகர் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறேம். இவருடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் பிராமணர்களுடைய விசுவாசத்தை உடையவர். இராஜாக்கள் இவரைப் போற்றுவார்கள், மதிப்பார்கள். செல்வத்தில் நொந்து கெட்டுப்போனவர்களைக் காப்பாற்றுவார். நிலங்களை அதிகமாகச் சேகரிப்பார். மேன்மையான புகழை அடைவார். தலைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்லப் போவதைக் கேட்பீராக,

43. ஐயந்து ஆண்டு மேலாய் அரசரால் ஜீவிப் பானும்
நையவே கூறு ஞகும் நல்கிடும் சகடு தானும்
தையலர் மோகவானும் சாத்மீக குணத்தானுகும்
வையமேல் அன்ன தானம் மனங்களிப்பு டனே செய்வன்.

43. ஜாதகர், தனக்கு இருபத்தைந்து வயதிற்கு மேலே இராஜாக்கள் மூலமாக ஜீவன முடையவராவர். துன்பத்தை உண்டு பண்ணும்படியாகப் பேசமாட்டார். வண்டி இவருக்குத் தானகவே வந்து சேரும். ஸ்திரீகளிடம் காம ஆசையை யுடையவராவார். சாத்விக குணம் என்று சொல்லப்பட்ட எட்டுவிதமான நல்ல மேன்மையான குணங்களையுடையவர். பூமியின் மேல் சந்தோஷமான மனத்துடன் அன்னதானஞ் செய்வார்.

44. சித்திர வீடு செய்வன் ஜய முனி கேட்க லுற்றுர்
எத்திசை எந்தக் கால மிவன்சித்திர வீடு செய்வன்
சுத்தமாய்ச் சொல்லு மென்னச் சுதனுக்கு இருபா னேழில்
சித்தமாய் வீதி மேற்கில் சேர்ந்திடும் கிருகம் தானே.

44. ஜாதகர், சித்திரங்க ளுள்ள அழகான வீட்டைக் கட்டுவார். இவ்விதமாகச் சொல்ல ஜயமுனிவர் கேட்கின்றுர். எந்த வயதில் எந்தத் திசையில் இவர் வீட்டைக் கட்டுவார் என்பதை உண்மையாகச் சொல்லும் என்று கேட்க இவருக்கு இருபத்தேழாவது வயதில் தனது தெருவின் மேற்குத் திக்கில் வீடு வந்து சம்பவிக்கும்.

குறிப்பு — வீடுகட்டும் விஷயம்—ஜாதகருக்கு வயது ஷ்டு 26–0–0 முதல் ஷ்டு 27–0–0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் கேது புக்தியும், சூரிய தசையில் சூரிய சந்திர புக்திகளும் நடக்கின்றன. வீடு விஷயமாய் நான்காம் பாவத்தைக் கொண்டும் சுக்கிரனைக்கொண்டும் சொல்லவேண்டும் நான்கிற்குடையவராகிய சுக்கிரன் இரண்டில் இருந்து கொண்டு ஐந்திற்கும் பத்திற்குமுடைய அங்காரகனுலும் ஒன்பதிற்குடைய குருவாலும் பார்க்கப்படு

கின்றுர். கேது சுக்கிரனுடன் கூடி நான்காவது பாவத்தைப் பார்ப்பதுமின்றி குரு அங்காரகன் இவர்களாலும் பார்க்கப்படுகின்றுர். ஆகையால் சுக்கிர தசைகேது புக்தியில் ஜாதகருக்கு வீடு வந்து சேரக் கூடிய அமைப்பு இருக்கிறது.

45. இதுவன்றி அன்னிய தேசமேகுவான் சிலது காலம்
நதிபல தீர்த்தம் தோய்வன் நராதிபர் தம்மால்யோகம்
துதிசெய்தோர் தம்மைக்காப்பானும் சோலைகள் துறவு செய்வன்
பாதிபானில் திருவுமோங்கும் பகைவரை வசியம் கொள்வன்.

45. இதுவுமல்லாமல் ஜாதகர் சில காலம் வெளிதேசம் போய் இருப்பார். அநேக ஸ்தலங்களுக்குச் சென்று பலவித தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். இராஜாக்களால் ஜாதகருக்கு யோகம் உண்டாகும். தன்னைப் போற்றினவர்களை ஜாதகர் காப்பாற்றுவார். தோப்புக்களையும், கிணறுகளையும் இவர் உண்டு பண்ணுவார். சூரிய தசையின் பாதி பாகத்தில் செல்வம் அதிகமாகும். இவர் எதிரிகளைத் தன்பக்கமாக வசியப்படுத்திக்கொள்ளுவார்.

46. ஐம்பது ஒன்பா ளுண்டில் அழகிய தேளின் மாதம்
பின்பக்கம் துதியை தன்னில் புகலுவோம் காலன் பக்கல்
இன்பமாய்ப் பின்ஜன் மத்தை யியம்புவோ மவ்வூர் தன்னில்
மூன்குல முதிப்பா ஞகும் முதல்வியும் கேட்க லுற்றுள்.

46. ஜாதகர் தனது ஐம்பத் தொன்பதாவது வயதில்* கார்த்திகை மாதத்தில் தேய்பிறையில் துதியைத் திதியில் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேருவார். இவருடைய சுகமான மறுஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் அதே கிராமத்தில் பிராமணர் ஜாதியில் வந்து பிறப்பார். இவ்விதமாகச் சொல்லவே, தலைவியாகிய பார்வதியம்மையார் கேட்கின்றுர்.

* குறிப்பு.—ஜாதகர் மரணம்—ஜாதகருக்கு வயது ஷ்டு 58–0–0 முதல் ஷ்டு 59–0–0 முடியும் வரையிலும் ராகுதசையில் புதன் புக்தி நடக்கிறது. கார்த்திகை முடியும் வரையிலும் வயது சுமார் ஷ்டு 58–4½ மீ ஆகிறது. கடக லக்கினத்திற்குச் சுக்கிரன் சனி புதன் இவர்கள் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை, தாண்டவமாலை, சந்திரகாவியம் இவைகளின் பிரகாரம் மாரகராகிறுர்கள். ராகு எட்டில், எட்டிற்குடைய சனியுடன் கூடி இருந்து லக்கினுதிபதியாகிய சந்திரனைப்பார்க்கின்றுர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் இராகு தன் தசையில் ஜாதகருக்கு மாரகஞ் செய்ய அதிகாரமுடையவராகின்றுர். புதன் கடக லக்கினத்திற்கு ஏற்கனவே மாரகாதிபதியாகி மூன்று பன்னிரண்டிற்குடையவராகி லக்கினத்தில் உயிரா திபதியாகிய சூரியனுடன் இருப்பதால் இவருக்குத் தன்னுடைய புக்தியில் ஜாதகருக்கு மரணத்தைக் கொடுக்கும் அதிகார அமைப்பு இருக்கிறது. ஆகையால் ஜாதகருக்கு இராகு தசையில் புதன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு ஏற்படுகிறது.

47. இச்சென்மம் தன்னிலே தானிவன் பொரு ளிச்சை வைத்தும்
மிச்சமாய்க் கட்டு வார்த்தை வினையான மனத்தா னுயும்
கச்சணி மாது மேலே கனத்ததோர் மோகம் கொண்டும்
நச்சணி கண்டன் பத்தி நாயகன் கொள்ளா ததாலும் ;

47. ஜாதகர் இந்த ஜன்மத்தில் பொருள்களின் மேல் ஆசையுடைய வராயும், பொய்யான வார்த்தைகள் புனைந்த வார்த்தைகள் ஆகிய இவைகளைக் கொஞ்சமாக உபயோகப்படுத்தியும், கெட்ட மனத்தையுடையவ ராயும், ரவிக்கையை அணிந்து கொள்ளும்படியான ஸ்திரிகளின் மேல் அதிகக் காம ஆசையுடையவராகியும், விநாயகக் கடவுளின் மேல் ஆசை யுடையவராகி அவரைத் தொழாமலிருந்ததாலும், ஜாதகர் இவ்விதமான கெட்ட குணங்களையுடையவராயிருந்தும் ;

48. மறைக் குல முதிப்பா னென்றீர் வருகும்காரணங்க ளென்ன
உமைகுவீர் விவர மாக உத்தம னிச்சென் மத்தில்
மறையவன் நேசம் கொண்டு வாக்குகள் தப்பாத தாலும்
திருப்பணி அனந்தம் செய்தும் தீரனு மறத்தி லிச்சை ;

48. பின்ஜன்மத்தில் பிராமணர் ஜாதியில் பிறப்பார் என்று சொன்னீரே, இதற்குக் காரணங்களை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகர் இந்த ஜன்மத்தில் பிராமணர்களின் மேல் ஆசை யுடையவராகி தன்னுடைய வார்த்தைகளைத் தவறி நடக்காமலிருந்ததா லும், அநேகவிதமான தெய்வத்தொண்டுகளைச் செய்ததாலும் தைரியமாய்த் தர்மத்தின் மேல் ஆசையை ;

49. வைத்ததால் மறுஜன் மத்தில் மறை குல முதிப்பா னுகும்
வித்தகன் ஜனன காலம் மேவுசெம் பாம்பு தன்னில்
சுத்தமா யாண்டு ஆறும் சேர்ந்திடுந்திங்க ளேழும்
சித்தசன் தனக்கு ரோகம் செறிந்துபின் நிவிர்த்தி யாகும்.

49. உடையவராய் இருந்ததாலும் பின்ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகிறோம். இந்த அறிவுடையவர் பிறந்த காலத்தில் கேது தசையில் நிச்சயமாய் ஆறுவருஷங்களும், ஏழு மாதங் களும் இருப்பு இருந்தன. இந்தக் காலத்தில் இவருக்கு நோய்கள் சம்பவித்துப் பிறகு நிவிர்த்தியாகிவிடும்.

50. தந்தைதாய் தனது ரோகம் சகோதரி துன்பம் சூதம்
தன்தனம் செலவு நேரும் சஞ்சல புத்தி யாகும்
பந்துவின் சூதகம் நேரும் பகருவோம் விவரம் ரண்டில்
இந்திர னிரைஞ்சு மாதே யிப்பலன் தப்பா தாமே.

50. ஜாதகருடைய தகப்பனுருக்கும் தாயாருக்கும் நோய்கள் உண்டாகும். சகோதரர்க்குக் கஷ்டம் ஏற்படும். சூதகங்கள் நேரிடும். தன்னுடைய பொருள் செலவாகும். மனக்கவலை ஏற்படும். பந்துக்களில் சூதகங்கள் உண்டாகும். மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். இந்திரன் வணங்கித் தொழுகின்ற பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய இந்தப் பலன்கள் தவறிப்போகாமல் நடக்கும்.

ஜாதகம் 73

1. சந்திரன் நந்தி யாகச்[1] சனிசுரா[2] புகரும்[3] வில்லு[4]
புந்தியும்[5] கேது கோலில்[6] பொன்[7] குசன்[8] கன்னி யாக
விந்தையாய் ராகு மேடம் விருச்சிக மிரவி[9] நிற்க
வந்த இச் சென்மம் நண்டு வரைகுவீர் பலனைத் தானே.

	ராகு	சந்திரன்	
	இராசி		லக்கினம்
சனி	சக்கரம்		
சுக்கிரன்	சூரியன்	புதன் கேது	குரு அங்காரகன்

கிருத்திகை 4-ஆம் பாதம் சூரியதசை இரு 0-6-0.

1. சந்திரன் ரிஷபத்திலும், சனி மகரத்திலும், சுக்கிரன் தனுசினும், புதனும் கேதுவும் துலாத்திலும், குருவும் அங்காரகனும் கன்னியினும், ராகு மேஷத்திலும், சூரியன் விருச்சிகத்திலும், இருந்து ஜன்ம லக்கினம் கடகமாகப் பிறந்தவருக்குப் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் சனியும், ராகு வும், மிதுனத்தில் அங்காரகனும் சுக்கிரனும், கன்னியில் சூரியனும் குரு வும், துலாத்தில் கேதுவும், மீனத்தில் சந்திரனும் புதனும் ஆகும்.

2. உமையவள் கேட்கும் போது உரைக்கிறர் புயண்டர் தாமும்
அடைந்திடு மாண்பால் ஜன்மம் அந்தகன் வாடை யாகும்
இமைவர் கோன்கு டக்குவீதி யாளியின் கோஷ்டம் தெற்கில்
நவமதில் மாயோன் மேற்கில் நாட்டுவோம் மஸ்தா னுண்டு.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது புஜண்ட மகரிஷி சொல்லுகிறுர். பிறந்த குழந்தை ஆண்குழந்தையாகும். பிறந்த வீடு தெற்கு வாடை யில் இருக்கும். தேவர்களுக்கு அரசனுகிய தேவேந்திரனுடைய திக்காகிய கிழக்குத் திக்கிலும், குடகுத் திக்கு என்ற மேற்குத்திக்கிலும் தெருவு

[1] ரிஷபம் [2] மகரம் [3] சுக்கிரன்
[4] தனுசு [5] புதன் [6] துலாம்
[7] குரு [8] அங்காரகன் [9] சூரியன்

ஒடும், அஃதாவது பிறந்த வீதி கிழக்கு மேற்கு வீதியாகும். யானைத் தொழுவம் தெற்கிலுண்டு. மகா விஷ்ணுவின் கோயில் மேற்கிலுண்டு. முஸ்லிம் மசூதியுமுண்டு.

3. சாலையு மோடை தெற்கில் சங்கரன் கந்தன் கீழ்ப்பால்
சோலைகள் அருகில் தங்கும் செப்புவோம் சமவூர் தன்னில்
வேலனும் ஆறும் ஜன்மம் விளம்புவோமிவனே யென்றோம்
கோலமா யின்னேன் யோகம் கூறுவோ மிந்நூல் தன்னில்.

3. மரங்களின் சாலையும் ஓடையும் தெற்கிலுண்டு. சிவபெருமானுடைய கோயிலும் முருகனுடைய கோயிலும் கிழக்குத் திக்கில் இருக்கும். தோட்டங்கள் அருகில் இருக்கும். பெரியதும் சிறியதுமல்லாத ஒரு சமமான நடுத்தரமான ஊரில் ஆறுவது கர்ப்பத்தில் ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகிறோம். இவருடைய யோகவிஷயங்களைப்பற்றி இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம்.

4. தந்தையின் வர்க்கம் தனைச் சாற்றஆண் பலத்தைக் காணோம்
வந்திடும் கன்னி ரண்டு வரைகிறோம் தீர்க்க மாக
அந்தவள் உள்ளூர் தன்னில் அனுசியே வாழ்வா ளாகும்
எந்தையே தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகருடைய தகப்பனாின் வர்க்கம் என்ற பந்துக்களைப்பற்றிப் பேசுங் காலத்தில் ஆண் சகோதரர்கள் கிடையா. இவருக்கு இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர்கள் உள்ளூரிலேயே புருஷன்மார்களை விவாகஞ் செய்துகொண்டு வாழ்ந்து வருவார்கள். இனிமேல் தகப்பனாருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம்.

5. வித்தையு மல்ப மாகும் வீண் வம்பில் செல்லா னாகும்
உத்தம னாகி வாழ்வான் உள்மனம் கபட மில்லான்
அதிதிபோல் நடையு மாவன் யாவர்க்கு நல்லோ னவன்
சித்தினி சாதி யாவன் செய்நன்றி மறவா னாகும்.

5. தகப்பனாருக்குக் கல்வி கொஞ்சமாகவிருக்கும். அனாவசிய மாகச் சண்டை சச்சரவுகளில் தலையிடமாட்டார். நல்ல மார்க்கத்தில் இருந்து வாழ்வார். தன்னுடைய மனதிற்குள்ளே கள்ளம், வஞ்சனை இவைகள் இல்லாதவர். பரதேசிகளைப்போலச் சன்மார்க்கக் குணத்தை யுடையவர். எல்லோருக்கும் நல்லவராவார். நால்வகைப் பெண்களுள் பதுமினிவகைப் பெண்ணிற்கு அடுத்தவகைப் பெண்ணாகிய சித்தினி * ஜாதிப் பெண்ணின் குணங்களை ஜாதகர் உடையவராவார். தனக்குப் பிறர் செய்த உபகாரத்தை மறக்கமாட்டார்.

* குறிப்பு.—சித்தினி ஜாதி விஷயம் :—இது விஷயமாய் நெம்பர் 58-வது ஜாதகம் 33-வது பாடல், நெம்பர் 56-வது ஜாதகம் 7-வது பாடல் இவைகளின்கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தை வாசிக்கவும்.

6. ஆதியில் வறுமை யுள்ளான் அணுகிடும் பின்னால் வாயு
நீதியாய் நடக்கை யுள்ளான் நிதானமாய் வார்த்தை சொல்வன்
பத்தினி வயதின் மேலாய்ப் பாக்கிய முடைய னவன்
மாதவர் தம்மைப் பேணான் மனைவியால் பெருமை யுள்ளான்.

6. தகப்பனார் முதலில், அஃதாவது இளம் பிராயத்தில் தரித்திரமும் கஷ்டங்களுமுடையவர். பின்வயதில் வாயு ரோகம் வந்து சம்பவிக்கும். நியாயமான நடவடிக்கை யுள்ளவர். நல்லொழுக்கமுள்ளவர். கொஞ்சமாகவும் சுருக்கமாகவும் பேசுவார். தனக்கு மனைவி வந்த வயதிற்குப் பிறகு செல்வமுடையவராவார். முனிவர்களை விரும்பவும் மாட்டார். தொழவும் மாட்டார். மனைவி மூலமாகப் பெருமையையும் மேன்மையையும் அடைவார்.

7. பலருக்கும் பந்தி னர்க்கும் பாலகன் வணங்கி வாழ்வன்
நலமாகக் கூறு வானும் நற்றந்த ரோகி யாவன்
கலகங்கள் கூறு னாகும் காதலி பட்ச முள்ளான்
விலைமாதர் விருப்பம் கொள்ளான் வித்தகி கேட்டி டாயே.

7. ஜாதகரின் தந்தை அநேகரையும் பந்துக்களையும் வணங்கி மதித்து வாழ்ந்து வருவார். இனிமையாகவும் நன்மையாகவும் பேசுவார். பல் நோய் உடையவராவார். சண்டை சச்சரவை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். மனைவியின்மேல் ஆசையுடையவர். போகஸ்திரீகளின் மேல் ஆசையில்லாதவர். பார்வதியம்மையே ! கேட்பீராக.

8. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே யுதிப்பா னாகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் சிவந்த மேனி
பன்னியே பேச வல்லான் பாருகள் சேர்ப்பா னாகும்
உன்னத கல்வி கொஞ்சம் உள்மனம் கபடு முண்டு.

8. இப்படிப்பட்ட குணதிசயங்களை யுடைய தகப்பனாருக்கு ஜாதகர் பிறப்பார். இவருடைய குணகுணங்களைச் சொல்லுகிறேன். இவர் அழகுள்ளவர். சிவப்பான தேகத்தையுடையவர். சுருக்கமாகவும் திறமையாகவும் பேசுஞ் சாமர்த்தியமுள்ளவர். நிலங்களைச் சேகரிப்பார். மேன்மையான வித்தை கொஞ்சமாகவிருக்கும். மனத்திற்குள்ளே கள்ளமும் வஞ்சனையும் இருக்கும்.

9. போஜனம் கொஞ்ச முண்டு பதார்த்தங்கள் அதிகம் கொள்வன்
காசுமே லாசை யுள்ளான் காதலி மார்கள் மோகன்
பேசினில் சோரா னாகும் பித்ததே கத்தா னென்றோம்
பாசமா யெவர்க்கும் நேயன் பந்துவை ஆதரிப்பன்.

9. ஜாதகர் கொஞ்சமாகச் சாப்பிடுவார். பதார்த்தங்களை அதிகமாகச் சாப்பிடுவார். பணத்தின்பேரில் ஆசையுடையவர். ஸ்திரீகளின் மேல் காம ஆசையுடையவர். பேசுவதில் இளைப்பு அடையாதவர். பித்தமான தேகத்தையுடையவர் என்று சொல்லுகிறோம். இவரிடத்தில் எல்லோரும் சினேகிதமாய் இருப்பார்கள். தன்னுடைய பந்து ஜனங்களைக் காப்பாற்றுவார்.

10. தந்திர வாதி யாகும் தைரிய னூகவானும்
நிந்தையு முடைய னாகும் நுவனுவான் கட்டு வார்த்தை
தந்தையி னார்ஜிதத்தைத் தானவன் விருத்தி செய்வன்
சொந்தமாய்ப் பூமி சேர்ப்பன் துணைவரை ஆத ரிப்பன்.

10. ஜாதகர் தந்திரம் உபாயம் இவைகளை யுடையவராவர். தைரிய முள்ளவர். நுட்பமான புத்தியை யுடையவர். பழி நிந்தனை இவைகளை அடைவார். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லுவார். பிதுரார்ஜித சொத்தை விருத்தியாக்குவார். சுயார்ஜிதமாகப் பூமிகளைச் சேகரிப்பார். தன்னுடன் கூடப் பிறந்தவர்களைக் காப்பாற்றுவார்.

11. இவன்துணை எழுவ ராகும் இவைகளில் ஆண்பா லொன்று
பவமுள கன்னி ஒன்று பகருவோம தீர்க்க மெய்தும்
நவனிபால் துணைவர் சேதி நாட்டுவோம் சிவந்த மேனி
பவமுள உணக்சல் தேகி பஞ்சமே விரக்க மில்லாள்.

11. ஜாதகருடைய சகோதரர்கள் ஏழுபேராவார்கள். இவர்களில் ஓர் ஆண் சகோதரனும், ஒரு பெண் சகோதரியும் நீண்ட வயதுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறோம். சகோதர்களின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். சகோதரி சிவப்பான நிறமுள்ள தேகத்தையுடையவள். மெலிந்த ஒல்லியான தேகத்தை யுடையவள். ஏழைகளின் மேல் தயை இல்லாதவள்.

12. அஞ்சின வார்த்தை சொல்லாள் அதிகபாட் டாளி யாகும்
வஞ்சிக்கு பாலன் மேற்கு வரைந்தனம் சுதராண் மூன்று
தஞ்சமாய்த் தீர்க்க மெய்தும் சுகதுக்க மிரண்டு முள்ளாள்
நஞ்சுண்டோன் பாகத் தாளே நாயகி கேட்டி டாயே.

12. சகோதரி பிறர் பயப்படும்படியான வார்த்தைகளைச் சொல்ல மாட்டாள். அதிகமாகக் கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவள். தான் விரும்பின புருஷன் தனக்கு மேற்குத் திக்கிலிருந்து வருவார். இவளுக்கு மூன்று ஆண் பிள்ளைக் குழந்தைகள் நீண்ட ஆயுளை யுடையவர்களாயிருப்பார்கள். இவள் சுககஷ்டம் ஆக இரண்டையும் சேர்த்து அனுபவிக்கக்கூடியவள். ஆலகால விஷத்தைச் சாப்பிட்ட பரமசிவனுடைய இடது பாகத்தைப் பெற்றவராகிய பார்வதி யம்மையே ! கேட்பீராக.

13. ஆண்துணை சேதி சொல்வேன் அவனிரு நிறத்தா னாகும்
தேன்மொழி கூறு வானும் தீரனு மூக சாலி
மானனை யார்க்கு நேயன் மாநிலம் விருத்தி செய்வன்
இளமனம் குணமில்லா தானிருவிதக் கல்வி கற்பன்.

13. ஜாதகருடைய சகோதரனின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறமுள்ள தேகத்தை யுடையவராவார். இன்பமான வார்த்தைகளைச் சொல்லுவார். தைரிய முள்ளவர். நுட்பமான அறிவை யுடையவர். மானைப் போன்றவர்களாகிய

ஸ்திரீகளுக்கு இஷ்டமானவர். பெரிய நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். இளகிய இரக்கமான மனத்தையும் குணத்தையும் உடையவரல்லர். இரண்டு வகையான வித்தையைக் கற்றுக்கொள்ளுவார்.

14. சுயம்தொழில் விருத்தி செய்வன் சாயல்நேத் திரமு மாவன்
அயலார் பொனிச்சை யில்லான் அறம்செய்வன் பூமி சேர்ப்பன்
கயவரைச் சேரா னாகும் கண்முகம் வசிய முள்ளான்
ஜெயம்செய்வ னெடுத்த வேலை சிறப்பான குடும்பி யாவன்.

14. ஜாதகருடைய சகோதரன் நல்ல தொழிலைச் செய்து அதில் விருத்தியடைவார். சாயலான கண்ணை யுடையவர். அஃதாவது ஒன்னரைக் கண்ணன் ஆவார். பிறருடைய சொத்தின் மேல் ஆசையில்லாதவர். தருமங்களைச் செய்வார். நிலங்களைச் சேகரிப்பார். கீழ் மக்களுடனும் தாழ்ந்தவர்களுடனும் சேரமாட்டார். இவருடைய கண்களும் முகமும் பிறரைக் கவரத்தக்கனவாகவும் அழகாகவும் விருக்கும். தான் ஆரம்பித்துச் செய்யும் வேலையைப் பூர்த்திசெய்து ஜயத்தை அடைவார். மேன்மையான, பெருமையான குடும்பஸ்தனுக ஆவார்.

15. நினைத்தது முடிக்க வல்லன் நிதானமாய் வார்த்தை சொல்வன்
சினமது முன்னுவுண்டு சுகபுசிப் புடைய னாகும்
இனமதற் கிசைவ னாகும் எளியோரை ஆத ரிப்பன்
தனமது சேர்ப்பா னாகும் சல்லியம் கொள்ளா னென்றோம்.

15. ஜாதகருடைய சகோதரர் தான் எண்ணின காரியத்தைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியத்தை யுடையவர். சாந்தமாகவும் மெதுவாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். முன்கோபத்தை யுடையவர். சுகமான போஜனத்தைச் சாப்பிடக்கூடியவர். பந்துக்களுடன் ஒத்துத் தாழ்ந்து போகக் கூடியவர். ஏழைகளையும் சக்தியற்றவர்களையுங் காப்பாற்றுவார். செல்வத்தைச் சேகரிப்பார். கடன் வாங்கமாட்டார் என்று சொல்லுகிறோம்.

16. வடதிசை மனைவி வாய்க்கும் வரைகிறோம் புத்திர பாவம்
திடமதாய் ஆண்பால் ரண்டு தேவியு மவ்வாற் றீர்க்கம்
அடவுடன் துணைவ ரோடு அனுகியே வாழ்வா ராகும்
கடல்போலே குடும்பி யாவன் காதலி கேட்டி டாயே.

16. ஜாதகருடைய சகோதரனுக்கு வடக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சேருவாள். இவரது புத்திரபாவத்தைச் சொல்லுகிறோம். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். இவர் தன்னுடைய சகோதரனுடன் கூடி ஏக குடும்பமாக விருந்து வாழ்வார். சமுத்திரத்தைப் போலப் பெரிய குடும்பஸ்தராவார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

17. அன்னையும் சிவந்த மேனி அழகுளாள் வாத தேகி
பின்னமில் லாதா ளாகும் புருஷனுக் கினிய ளாகும்
அன்னையு மிரண்டு மாகும் அவள்வந்த பின்பு யோகம்
அன்னவள் மூர்க்கம் கொஞ்சம் அவசர மனத்தா ளாமே.

17. ஜாதகருடைய தாயார் சிவப்பான தேகமுடையவள். அழகுள்ள வள். வாத தேகத்தை யுடையவள். அவயவத்தில் யாதொரு பங்கமும் குறைவும் இல்லாதவள். தன்னுடைய புருஷனுக்கு இவள் இஷ்டமானவ ளாவாள். இவளுக்கு இரண்டு தாய்மார்கள் உண்டு. இவள் புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு அவனுக்கு யோகமுண்டாகும். இவள் கொஞ்சம் முரட்டுக்குணத்தையுடையவள். அவசரமான குணத்தையுமுடையவளாவள்.

18. புத்திர ஆசை யுள்ளாள் பூஷண மதிக மில்லாள்
நத்தினோர்க் குதவி செய்வள் நலமறிந் துரைக்க வல்லாள்
வித்தகி அறம்செய் யாதாள் விளம்புமுன் கோபி யாவள்
பத்தினி யல்ப ரோகி பார்வதி கேட்டி டாயே.

18. ஜாதகருடைய தாயார் குழந்தைகளின் மேல் ஆசையுள்ள வள். ஆபரணங்கள் அதிகமாக வில்லாதவள். தன்னிடம் வந்தடைந்தவர் களுக்கு உபகாரத்தைச் செய்வாள். நல்லதைத் தெரிந்துகொண்டு பேசுந் திறமையுடையவள். தருமங்களைச் செய்யமாட்டாள். முன் கோபத்தையுடைய வள் என்று சொல்லுகிறோம். இவளுக்குக் கொஞ்சம் ரோகமுண்டு. பார்வதி யம்மையே ! கேட்பீராக.

19. துணைவர்கள் காணு ளாகும் தோன்றினும் தீதே யாகும்
அணையவே அவள்தன் பூர்வம் அறைகிறோம் கேளும் தாயே
தணிகையின் மலைக்கு மேற்கில் சார்ந்திடும் சிற்றூர் தன்னில்
மிணிகொளு முத்திரியவமிசம் ஜனித்தன ளிவளேயம்மா.

19 ஜாதகருடைய தாயாருக்குச் சகோதரர்கள் கிடையாது. பிறந் தாலும் இறந்துபோய்விடும். இவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லு கிறோம், எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக. திருத்தணி மலைக்கு மேற்குத்திக்கில் அதை அடுத்தாற்போலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஒரு மேன்மையான முத்திரிய ஜாதியில் இவள் வந்து பிறந்தாள். பார்வதி யம்மையே ! கேட்பீராக.

20. வரன்சு தருள்ளா ளாகி வாழ்கிற நாளி லேதான்
உறைந்தவூழ் தன்னைச் சொல்வே னுயர்குல மறையோன் [பெற்ற
வரும்சேய்க்குப் பாலில் லாமல் மங்கைபால் ஆவின் பாலைத்
தருகென்று வினவும் போது சத்தியும் மனவெ றுப்பால்.

20. ஜாதகருடைய தாயார் புருஷன் குழந்தைகள் இவர்களை யுடையவளாகி வாழுகின்ற காலத்திலே இவளுக்கு வந்து சம்பவித்த பாவத்தை, வினையைச் சொல்லுகின்றேன். முதற்குலமாகிய பிராமண குலத் திற் பிறந்தவர் ஒருவர் தன்னுடைய குழந்தைக்குப் பால் இல்லாமல் இவ ளிடஞ்சென்று பசுவின் பாலைக் கொடு என்று கேட்கும்போது இவள் இஷ்டமில் லாமல் மனக் கஷ்டத்துடன் ;

21. இருந்துமே தராமல் விட்டா ளியம்புவார் மறையோர் தாமும்
பெரும்சுதர் தன்பா லீயாப் பாவிக்கு மறுஜன் மத்தில்
பெறுந்தாயு மில்லா தாகிப் பூமியில் வாழ்வா யென்று
மறையவர் சொல்லி யேதான் வந்தன ரில்லம் தன்னில்.

21. பால் இருந்தும் அதைக் கொடாமல் சும்மாய் இருந்து விட்டாள். அதன் மேல் இந்தப் பிராமணர், நான் பெற்றப் பிள்ளைக்குப் பால் கொடுக்காத பாவியாகிய உனக்குப் பின் ஜன்மத்தில் உன்னைப்பெற்றெடுத்தத் தாயார் உயிருடன் இல்லாதவளாகி நீ பூமியில் வாழக்கடவாய் என்று பிரா மணர் சொல்லி விட்டுத் தன் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தார்.

22. அதுவன்றி வேறு தோஷம் அறையவே மாட்டோ மம்மா
அதிபதி வரன்முன் னேதான் வயிறுநோய் தன்னல் மாண்டு
குறைதலை கஞ்சன் தன்னல் முயற்சியாய் வரையப் பட்டு
விறைவினில் வடுகர் வமிசம் விளங்கினு னிவனே யென்றோம்.

22. இந்தத் தோஷம் இல்லாமல் இன்னொரு தோஷத்தை நாங் கள் சொல்லமாட்டோம். பார்வதியம்மையே ! இவள் தன்னுடைய புருஷ னுக்கு முன்னல் வயிற்று நோயால் இறந்து எமனிடஞ் சென்று பின்னல் பிரமதேவனல் எழுதப்பட்டுச் சீக்கிரத்தில் தெலுங்கர் குலத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம்.

23. இந்ததோர் ஜன்மம் தன்னில் இவன்தாய்க்குத் தோஷ மெய்தும்
பிந்திய ஜன்மம் தன்னைப் பேசுவோம் காஞ்சி தன்னில்
சிந்தையாய்ச் சௌராஷ்டர வமிசம் ஜனிப்பாளாம் சுகமுள் ளாளா [ய்த்
தந்தியைப் பெற்ற மாதே தயாபரி மேலுங் கேளே.

23. இந்த ஜன்மத்தில் இவளுடைய தாயாருக்குத் தோஷம் உண்டா கும், அஃதாவது தாயார் இறந்துவிடுவாள். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிரர் குலத்தில் வந்து மனக் கலக்கத்துடன் பிறப்பாள். சுகத்தை அடைவாள். யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்தவரும், இருபை யுடைய வருமாகிய பார்வதியம்மையே ! இன்னும் கேட்பீராக.

24. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் பட்சி தன்னில்
இந்தவன் தீயின் வமிச மெய்தியே கிருஷி யாலே
சந்ததம் சீவித் தேதான் தன்மனைமதலை யுண்டாய்
விந்தையாய் வாழுந் நாளில் விளம்புவோ மூழி தானே.

24. ஜாதகருடைய தகப்பனரின் பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பட்சி ஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்தில் வன்னியர் குலத்திற் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்துகொண்டு மனைவி மக்க ளுடையவராய் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகிறோம்.

25. மனையவள் வார்த்தை கேட்டு அன்னையை யிகழ்ச்சி பேசிப்
பிணையாகக் காலால் எத்தப் புகலுவா ளன்னை தாமும்
இனிவரும் ஜன்மம் தன்னி லிடைநாளின் நடுவில் காலில்
பிணிகண்டு தந்தம் பாழாய்ப் போய்விடு மென்று சொல்லி ;

25. தகப்பனுர் தன்னுடைய மனைவியின் பேச்சைக் கேட்டுத் தன்னுடைய தாயாரைத் தூஷித்து இழிவாகப் பேசிவிட்டுப் பின்னுல் சமுதையைப் போலத் தன்னுடைய காலால் அவளை எட்டி உதைக்க, அவள் சொல்லுகிருள், உனக்குப் பின்னுல் வரப்போகின்ற ஜன்மத்தில் மத்திய காலத்தில் நடுவில் காலில் ரோகமுண்டாகியும், உன்னுடைய பற்கள் கெட்டுப்போயும் விடும் என்று சொல்லி ;

26. மனவெறுப் பதனுல் சொல்ல மறுவிற்று அந்தத் தோஷம்
வினையாக வேறு ஒன்று விளம்புவோம் கேளும் தாயே
அனையவே ஆல யத்தில் அர்ச்சனை மலரை யின்னேன்
துணிவுடன் மிதித்தா னம்மா சேர்ந்தது அதுவோர் தோஷம்.

26. மனக் கஷ்டத்துடன் சொல்லவே, அவளுடைய சாபம் ஜாதகரை வந்து இந்த ஜன்மத்தில் வந்து அடைந்தது. இன்னெரு பாவத்தையும் சொல்லுகிரோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக. ஒரு கோயிலில் கடவுளுக்கு அர்ச்சனை செய்த புஷ்பத்தை ஜாதகர் வேண்டுமென்றே தைரியத்துடன் துணிச்சலாக மிதித்தார். பார்வதியம்மையே! இந்த ஒரு பாபமும் ஜாதகரை வந்து அணுகிற்று.

27. அந்திய காலம் தன்னில் அவன்தரித் திரனே யாகிப்
பிந்தியும் வேதம் கோஷ்டம் பிரியமாய்த் தீபம் பார்த்துக்
கந்தமா மலரெ டுத்துக் கடவுளர்க் களித்து வந்து
அந்தகன் பக்கம் சென்று அயனுமே வரையப் பட்டு ;

27. ஜாதகர் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் ஏழையாகிப் போய்ப் பிறகு வேதங்களை ஓதுகின்ற ஒரு கோயிலில் ஆசையுடன் விளக்கு வைத்து ஏற்றிப் பார்த்து வாசனையுடைய புஷ்பங்களைக் கொண்டு வந்து கடவுள்களுக்கு அர்ச்சனைக்காகக் கொடுத்துவந்து பின்னுல் இறந்து எமனிடஞ் சென்று பிரமதேவனுல் எழுதப்பட்டு ;

28. வந்தவ னிவனே யென்றேம் வரைகிறே மிச்சேன் மத்தில்
பிந்திய வயதி லேதான் புக்கிடும் காலில் பீடை
தந்தங்கள் குற்ற முண்டாம் சடைமுனி புயண்டர் சொல்லக்
கந்தனை யீன்ற மாது காதலி கேட்க லுற்றுள்.

28. இந்த ஜன்மத்தில் வந்து ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகிரேம். இந்த ஜன்மத்தில் நடக்கும் விஷயத்தைச் சொல்லுகிரேம் இவருக்குக் கடைசி வயது காலத்தில் தன்னுடைய காலில் ரோகம் உண்டாகும். பற்கள் கெட்டுப்போய்விடும் என்று ஜடைமுனிவர் புஜண்டர் சொல்ல, முருகக் கடவுளைப் பெறறெடுத்தவராகிய பார்வதியம்மையார் கேட்கின்றுர்.

29. வரும்வினை நீங்கு தற்கு வரைகுவீர் சாந்தி ஒன்று
மறுமமாய் மாதுர் சாபம் வந்ததால் நீங்கா தம்மா
குறையது குறையே யாகும் குறித்ததும் தப்பா தாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

29. ஜாதகருக்கு இவ்விதமாக வரப்போகின்ற பாவத்தைத் தடுக்க ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்க, இரகசியமாகத் தாயாருடைய சாபம் பிள்ளைக்கு வந்து நேர்ந்ததால், இந்தச் சாபம் நீங்கிப் போகாத சாபமாகும். பார்வதியம்மையே! தோஷங்கள் தோஷமாகவே வந்து நேரிடும். காலில் ரோகமும்* பற்களில் கெடுதிகளும் வந்தே தீரும். நாங்கள் சொல்லியதும் தவறிடாமல் நடந்தே தீரும். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—காலில் பீடை விஷயம் :—பன்னிரண்டாமிடமாகிய மிதுனம் கால் ஆகும். பன்னிரண்டிற்குடைய புதன் நான்கில் கேந்திரத்தில் கேதுவுடன் இருந்து கொண்டு ராகுவால் பார்க்கப்பட்டு எட்டிற்குடையவராகிய முடவனுகிய சனியால் பார்க்கப்பட்டிருப்பதாலும் பன்னிரண்டாம் வீட்டை ராகு பார்ப்பதாலும் ஜாதகருக்குக் காலில் ஊனம் நேரிட கீழ்க்கண்ட ஜாதகாலங்காரம் 413-ஆவது பாடல் பிரகாரம் அமைப்பு இருக்கிறது. இது சனி தசையில் நேரிடும்.

"கண்ட பன்னிரண்டாம் வீட்டோன் கனத்திரி கோணமேறிக்
கொண்ட கேந்திரத்தி னிற்க வவனேடு கூடி ராகு
அண்டியே நிற்கப்பாவ ரவர்களைப் பார்த்திருக்க
எண்டிசை யுலகிலங்க வீனனுயிருப்ப னென்னே."

30. மறுஜன்மம் அவ்வூர் தன்னில் மைந்தர்க்கு மைந்த னும்
உறைகுவ னிவனே பென்றேம் உரைக்கிறே மிவர்கள் காலம்
இருபது ஒன்ப தாண்டில் ஆவணி மாதம் தன்னில்
பெறும்தந்தை கண்ட மென்றேம் புண்ணிய வதியே கேளாய்.

30. ஜாதகர் பின் ஜன்மத்தில் அதே ஊரில் பிள்ளைக்குப் பிள்ளையாகப் பிறப்பார் என்று சொல்லுகிரேம். இனிமேல் தகப்பனுர் தாயார் இவர்களுடைய மரண காலத்தைச் சொல்லுகிரேம். தகப்பனுர் ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது வயதில்† ஆவணி மாதத்தில் இறந்து விடுவார் என்று சொல்லுகிரேம். புண்ணியம் செய்தவராகிய பார்வதியம்மையே கேட்பீராக.

† குறிப்பு.—பிதுர் மரணம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 28-0-0 முதல் வருஷம் 29-0-0 முடியும் வரையிலும் ராகு தசையில் கேது புக்தி நடக்கின்றது. பிதுர் லக்கினம் மீனம், மீன லக்கினத்திற்கு சனி புதன் சுக்கிரன் சூரியன் ஆகிய இவர்கள் பாராசரஹோரை, ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகர்கள் ஆவார்கள். இராகு கர்ம ஸ்தானமாகிய பத்தில் மீனத்திற்கு மாரகஸ்தான மாகிய இரண்டில் இருக்கின்றுர். கேது மீனத்திற்கு எட்டில் மாரகாதிபதி யாகிய சுக்கிரன் வீட்டில் மாரகாதிபதியாகிய புதனுடன்கூடி மாரகாதிபதியாகிய சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றுர். ஆகையால், ராகு கேதுகளுக்குப் பிதாவை மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது.

31. மாதுரு மரண காலம் வரைகிறோம் முப்ப தாண்டில்
மேதினில் ஆடி மாதம் விளம்புவோம் கண்டம் தானும்
ஓதுவேன் மணத்தின் காலம் உரைக்கிறே னினிமே லாகப்
பூதல மணிந்தோன் தேவி புகன்றது தப்பா தாமே.

31. ஜாதகருடைய தாயின் மரணகாலத்தைச் சொல்லுகிறோம். ஜாதகருக்கு முப்பதாவது வயதில்* ஆடி மாதத்தில் தாயாருக்குப் பூமியில் மரணம் நேரிடும் என்று சொல்லுகிறோம். இனிமேல் ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பூமியை அணிந்துள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

* குறிப்பு.—மாதுர் மாரகம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 29-0-0 முதல் வருஷம் 30-0-0 முடியும் வரையிலும் இராகு தசையில் கேதுபுக்தி சுக்கிரபுக்தி நடக்கின்றது. ஆடி மாதத்தில் சுக்கிர புக்தி மாத்திரம் நடக்கின்றது. மாதுரு லக்னம் துலாம். இராகு கர்ம ஸ்தானத்தில்—மாரகஸ்தானமாகிய ஏழில் இருக்கின்றார். பராசரஹோரைப் பிரகாரம் சூரியனும் குருவும் துலாத்திற்கு மாரகராகின்றார்கள். பராசரஹோரையின் சில பதிப்புப் பிரகாரம் அங்காரகன் கூட மாரகராகின்றார். இந்த அங்காரகன் வீட்டில் இராகு இருக்கின்றார். சுக்கிரன் எட்டிற்குடையவராகி மாரகாதிபதியாகிய குருவின் வீட்டில் இருக்கின்றார். சுக்கிரனே மாதுருஸ்தானாதிபதியாகவும் வருகின்றார். ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் இராகுவுக்கும் சுக்கிரனுக்கும் தாயாரை மாரகஞ் செய்யும் அமைப்பு இருக்கின்றது.

32. மணமது மிருபத் தேழில் மருவிடும் மனைவி தானும்
கனமுடன் வடபா லாகக் கழறுவோ மிவனுக் கேதான்
அணையவே வடபா லாக அணுகாது மனைவி தானும்
பிணையிலா மேற்குத் திக்கில் புகலுவோ மிவனுக் கேதான்.

32. ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில்* விவாகம் நடக்கும். மனைவி வடக்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறோம். இவ்விதமாகப் புஜண்டர் சொல்லவே, இன்னொரு முனிவர் ஜாதகருக்கு மனைவி வடக்குத் திக்கிலிருந்து நேராது. மேற்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறார்.

33. எப்படிச் சொல்லு மென்ன ஏழினில் சனியு மாட்சி
ஒப்புட னிருப்ப தாலே உரைத்திட்டோம் மனைவி மேற்கு
மெய்ப்புடன் புதனும் கோலி லேழிடம் குருவும் பார்க்கச்
செப்புவோம் வடபா லாகத் தேவியும் புகலு கின்றார்.

33. எந்தக் காரணத்தினால் இவ்விதமாக நடக்கும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்க ஏழாவது பாவத்தில் சனி ஆட்சியாகிப் பலத்துடன் இருப்பதாலே மனைவி மேற்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறோம் என்றார். புதன் துலாத்தில் இருப்பதாலும், ஏழாவது பாவத்தைக்

குரு பார்ப்பதாலும் மனைவி உண்மையில் வடக்குத் திக்கிலிருந்துதான் வருவாள் என்று சொல்லுகிறோம். இவ்விதமாகச் சொல்ல பார்வதியம்மையார் சொல்லுகிறார்.

34. இருவர்சொல் சரியே யையா ஏழிறை ¹ருட்சியாயும்
சுரிய'வ ருகி நிற்கக் களத்திரம் வடக்கே யாகும்
வருமணம் ஒன்றே யாகும் வரைகுவீர் புத்திர விருத்தி
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

34. நீங்கள் இருவரும் சொல்லியது சரிதான். ஏழிற்குடையவர் சனியாகி ஆட்சியாய் இருப்பதால் ஜாதகருக்கு மனைவி வடக்குத் திக்கிலிருந்து தான் வருவாள். இவருக்கு ஒரே விவாகந்தான் நடக்கும். புத்திரர்கள் உண்டாவதைப் பற்றிச்சொல்லுவீர் என்று கேட்க, முனிவர் சொல்லுகிறார். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த, புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு.—மனைவியின் திக்கு :—சனியின் திக்கு மேற்கு. புதனின் திக்கு வடக்கு. குருவின் திக்கு வடகிழக்கு. மகரத்தின் திக்கு வடக்கு அல்லது தென்மேற்கு ஆகும். களத்திரஸ்தானம் ஏழாமிடமாகிய மகரம். போகஸ்தானம் நான்காமிடமாகிய புதனுள்ள துலாம் ஆகும். மகரத்தின் திக்காகிய வடக்கையும் புதனின் திக்காகிய வடக்கையும் எடுத்துக்கொண்டு வடக்கு என்று சொல்லி இருப்பதாகத் தோன்றுகிறது.

35. புத்திர ளுண்பா லொன்று பெண்ணது இரண்டு மாகும்
சுத்தமாய் மூன்றும் தீர்க்கம் சோர்ந்திடு மூன்று தானும்
வித்தகன் தனக்கு மேலாய் விளம்புவோம் புத்திரர் யோகம்
அதிதியைப் பெற்ற மாதே அறைந்தஇம் மொழிகுன் றாது.

35. ஜாதகருக்கு ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தைகள் இரண்டும் ஆக இந்த மூன்று குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக இருப்பார்கள். இவைகளன்றி மூன்று குழந்தைகள் பிறந்து இறந்துவிடுவார்கள். புத்திரர்களுக்கு யோகம், ஜாதகருடைய யோகத்தைவிட அதிகமானதாக விருக்கும். தேவர்களைப் பெற்றவளையும் பரதேசிகளையும் பெற்றெடுத்தத் தாயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் சொன்னோம் எங்களுடைய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

36. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறோம் விவர மாகப்
பெண்ணையாம் நதிவ டக்காய்ப் பேரூரில் வைசியச் சேயாய்
அன்னவ னுதித்து மேலும் அனேகமாம் வணிபம் செய்து
தன்மனை மதலை யுண்டாய் தனிமனை வாழ்ந்து மேதான் ;

36. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றி விவரமாகச் சொல்லுகிறோம். பெண்ணை நதி என்ற ஆற்றிற்கு வடக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் வைசியராக ஜாதகர் பிறந்து அநேக வியாபாரங்களைச் செய்து மனைவி மக்களையுடையவராகித் தனியான குடும்பமாக வாழ்ந்து ;

¹ சனி

37. பலவிதத் தலங்கள் சென்று பஞ்சைமே லிரக்க மாகிப்
பிலமிலாக் காலன் பக்கல் நாயகன் சென்று மேதான்
அலைகடல் துயின்றோன் மைந்தன் அவன்லக்கம் வரையப் பட்டுக்
குலவினன் காஞ்சி கீழ்ப்பால் கோமளி மேலுங் கேளே.

37. அநேகவிதமான புண்ணிய ஸ்தலங்களுக்குப்போயும், ஏழைகளின் மேல் தயையும் இருபையும் உடையவராகிப் பிறகு இறந்து எமனிடஞ்சென்று, அலைகளையுடைய கடலில் நித்திரை செய்யும் மகாவிஷ்ணுவின் பிள்ளையாகிய பிரமதேவனால் எழுதப்பட்டுக் காஞ்சீபுரத்திற்குக் கிழக்கிலுள்ள ஓர் ஊரில் ஜாதகர் பிறந்தார். பார்வதியம்மையே! நாங்கள் இன்னுஞ் சொல்லுவதைக் கேட்பீராக.

38. இன்னவன் யோகச் சேதி யிம்புவோம் வறுமை யில்லான்
சந்திரன் பிறைபோல் யோகம் தங்கிடு மிவனுக் கேதான்
அன்னவன் சல்லியம் கொள்ளான் ஆளடியார்க ளுள்ளா னுகும்
தன்பொருள் சேர்ப்பா னுகும் சம்பத்து முடைய னுமே.

38. ஜாதகருடைய யோகவிஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கஷ்டமும் தரித்திரமும் இல்லாதவர். வளர்பிறைச் சந்திரனைப் போல இவருக்கு யோகம் வளர்ந்து விருத்தியாகும். இவர் கடன் வாங்கமாட்டார். அடிமையாட்களும் சேவகர்களும் உடையவராவர். தான் சம்பாதித்த சுயார்ஜிதப் பொருளைச் சேகரித்துவைப்பார். செல்வமுடையவராவார்.

39. பூமியும் பரிபா லிப்பன் புதமனை வேறு செய்வன்
தீமையை ஒருவர்க் கெண்ணன் ஜனபந்து மெச்ச வாழ்வன்
நேமியில் செட்டு ஓங்கும் நிருபர்க ளுறவு கொள்ளான்
சாமிமேல் பக்தி பூணுன் சத்தியே மேலுங் கேளே.

39. நிலங்களை வைத்துக்கொண்டு ஆண்டு வருவார். வேறே ஒரு புதிய வீட்டைக் கட்டுவார். யாருக்கும் கெடுதியைத் தன் மனத்தில் நினைக்க மாட்டார். ஜனங்களும் தன்னுடைய பந்துக்களும் இவரைப் போற்றும்படியாக வாழ்வார். பூமியில் இவருக்கு வியாபாரம் விருத்தியாகும். அரசர்களுடைய சினேகமில்லாதவர். கடவுளின்மேல் பக்தி இல்லாதவராவார். பார்வதியம்மையே! நாங்கள் இன்னமும் சொல்லுவதைக் கேட்பீராக.

40. ஆறுறு ஆண்டு தன்னில் அவன்துணை வேறாய்ச் செல்வன்
நாரியால் விரோத முற்று விநாயகர் பகையு மாவார்
பாரினில் பூமி வீடு பணம்பணி இவைக ளெல்லாம்
கூறுமெ ண்ணுயி ரம்பொன் குறித்தன மிவனுக் கேதான்.

40. ஜாதகர் தன்னுடன் கூடப்பிறந்தவரை முப்பத்தாறுவது வயதில் ஸ்திரீகளால் விரோதம் ஏற்பட்டு வேறு குடும்பமாகப் பிரிந்து வாழும்படியாய்ச் செய்வார். விநாயகக் கடவுளுக்கு விரோதியாகவுமாவார். பூமியில் வீடு நிலம் தனம் ஆபரணம் இவைகள் எல்லாம் சேர்ந்து மொத்தத்தில் மதிப்பு எண்ணுயிரம் பொன் உள்ள சொத்து இவருக்கு ஏற்படும்.

41. அறுபது நாலு ஆண்டில் அழகிய ரிடப மாதம்
குறைபக்கம் நவமி தன்னில் குறித்தனம் ஜாத கர்க்கு
மறுசன்மம் புதுவை தன்னில் வைசிய குல முதித்துப்
பெருமையாய்ச் செய்து வந்து புண்ணியன் வாழ்வா னுகும்.

41. ஜாதகருக்கு அறுபத்துநான்காவது வயதில் வைகாசி மாதத்தில் தேய்பிறையில் நவமிதிதியில் மரணம் நேரிடும் என்று சொல்லுகிறோம். இவர் பின்ஜன்மத்தில் புதுச்சேரியில் வைசிய குலத்தில் பிறந்து பெருமையுடனும் மேன்மையுடனும் புண்ணியவானுகவிருந்து வாழ்வார்.

குறிப்பு.—வயது விஷயம்:—ஜாதகருக்கு வயது ௵ 63—0—0 முதல் ௵ 64—0—0 முடியும் வரையினும் சனிதசையில் சந்திரபுக்தி நடக்கின்றது. கடகலக்கினத்திற்குச் சனி சுக்கிரன் புதன் இவர்கள் பராசரஹோரை ஜாதகசந்திரிகை தாண்டவமாலை இவற்றின் பிரகாரம் மாரகர்கள், சனி மாரகஸ்தானங்களாகிய ஏழு எட்டிற்குடையவராகி ஏழில் இருந்துகொண்டு லக்கினத்தைப் பார்க்கின்றார். மேலும் சனிதசை ஆறுவது தசையாக வருகிறது. சனிக்கு மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது. சந்திரன் லக்கினதிபதியாகி மாரகஸ்தானமாகிய பதினொன்றில் மாரகாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகம் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் அடியிற்குறித்த 14-ஆவது பாடல் பிரகாரமும் சந்திரன் இலக்கினதிபதியாய் இருந்தபோதிலும் தன் புத்தியில் மாரகஞ்செய்ய அமைப்பு உள்ளவராய் இருக்கின்றார்.

"தையலே பத்தோ னெட்டோன் தனித்தலக் கினத்தோன் காரி,
மெய்யரிந் நான்கு பேரில் வெகு பல வீன மாரோ,
தொய்யுமக்கோளை நோக்கிச் சூழ்திசை யபகாரத்தில்,
வைய கந்தனிலே பெற்ற மதலை சாவாகு மாதே."

42. பாலகன் பிறக்கும் காலே பரிதியின் தசையிலே தான்
சாலவே திங்க ளாறும் சாற்றுவோம் பலனை யாங்கள்
ஏலவே தாய்தந் தைக்கு எய்திடும் பிணியும் தானும்
ஆலத்தை உண்டோன் தேவி அறைகிறோம் விவரம் ரண்டில்.

42. ஜாதகர் பிறக்குங் காலத்தில் சூரிய மகாதசையில் இருப்பு ஆறு மாதந்தான் என்று சொல்லுகிறோம். இந்தக் காலத்தின் பலாபலன்களை நாங்கள் சொல்லுகிறோம். தாயாருக்கும் தகப்பனுருக்கும் நோய்கள் வரும். விஷத்தைச் சாப்பிட்ட சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! மற்றவிவரங்களை இரண்டாவது பாகத்திற் சொல்லுகிறோம்.

ஜாதகம் 74

1. மதி[1] மேடம் கேது சிம்மம் மங்களன் [2] குருவும் மேரு [3]
புதன்புகர் [4] மான [5] தாகப் பரிதியு [6] முடவன் [7] ராகு
சதியிலாச் சாடி [8] புக்க ஜன்மமும் வளைய லாக [9]
இதுவிதக் கோளு நின்று லியம்புவீர் பலனைத் தானே.

	சந்திரன்		
சனி சூரியன் ராகு			லக்கினம்
சுக்கிரன் புதன்			கேது
குரு அங்கா ரகன்			

இராசி சக்கரம்

அசுவினி 3-ஆம் பாதம். கேது தசை இரு 3—5—0.

1. சந்திரன் மேஷத்திலும், கேது சிம்மத்திலும், அங்காரகனும் குருவும் தனுசிலும், புதனும் சுக்கிரனும் மகரத்திலும், சூரியனும் சனியும் ராகுவும் கும்பத்திலும், ஜன்மலக்கினம் கடகத்திலும் ஆகி இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் அங்காரகனும் புதனும், மிதுனத்தில் சந்திரனும் குருவும் சுக்கிரனும், கன்னியில் கேதுவும், தனுசில் சூரியனும், மகரத்தில் சனியும், மீனத்தில் ராகுவும் ஆகும்.

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்றார்
சீர்புக ழாண்பால் ஜன்மம் ஜனித்ததில் கீழ்மேல் வீதி
கூறுவோம் தெற்கு வாடை குறித்தனம் கீழ்ப்பால் மாயோன்
மாருதி தென்கீழ் தங்கும் மாகாளி வடகீழாமே.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது பராசரமகரிஷி சொல்லுகின்றார். பெருமையும் கீர்த்தியுமுள்ள ஆண் குழந்தை பிறக்கும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடையில் இருக்கும்

[1] சந்திரன் [2] அங்காரகன் [3] தனுசு [4] சுக்கரன் [5] மகரம் [6] சூயேன் [7] சனி [8] கும்பம் [9] கடகம்

என்று சொல்லுகிறோம். மகாவிஷ்ணுவின் கோயில் கிழக்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகிறோம். அனுமார் கோயில் தென்கிழக்குத் திக்கில் இருக்கும். காளியம்மன் கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும்.

3. உத்தர மோடைக் கம்மான் உரைத்த இவ் வடையா ளத்துள்
அந்தியு மவ்வூர் வாசம் அரிநகர் வணிப மோங்கும்
பத்தினி பூஜை செய்யும் பிருதிவி தலமே யாகும்
வித்தக ஞரும் ஜன்மம் விளம்புவோ மிவனே யம்மா.

3. வடக்குத் திக்கில் ஓடைபோகும் வாராவதி உண்டு. இப்படிப் பட்ட அடையாளங்கள் அவ்வூரில் உண்டு. மேலும் இந்த ஊரில் மாலைக்காலத்தில் தெருக்களில் காவலாகத் திரியும் ஒரு தேவதையும் வாசஞ் செய்யும். இது வைஷ்ணவ ஸ்தலமுமாகும். அநேக வியாபாரங்கள் நடந்து விருத்தியாகி வரும். பத்தினியாகிய பார்வதியம்மையார் பூஜை செய்கிற பிருதிவி ஸ்தலம் என்று சொல்லப்பட்ட காஞ்சிமா நகரமாகும். ஜாதகர் ஆறாவது கர்ப்பத்தில் பிறப்பார் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே!

4. இன்னவன் ஜனன யோகம் எழில்பெரும் தந்தை யோகம்
மன்னிய அன்னை யோகம் வரும்புத்திர களத்திர யோகம்
தன்னிலே முன்பின் ஜன்மம் சாற்றுவோம் நவக்கோ ளாய்ந்து
உன்னத வானைபெற்ற உத்தமி கேட்டி டாயே.

4. ஜாதகருடைய ஜனன காலத்திய யோகத்தையும், தகப்பனுருடைய யோகத்தையும், தாயாருடைய யோகத்தையும் இனி வரப்போகின்ற மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களையும், முன் ஜென்மம், பின் ஜன்மம் ஆகிய இவைகளையும், ஒன்பது கிரகங்களையும் பரிசீலனை செய்து சொல்லுகிறோம். மேன்மையான யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

5. தந்தையின் துணைஆணைந்து பெண் ணென்று சாற்ற லாகும்
பின்னையும் சிலது சேதம் பேசுவோ மிரண்டி லேதான்
அன்னவன் தந்தை சேதி அறைகிறே மிருநி றத்தான்
உன்னத வார்த்தை சொல்வன் உயரமில் லாதா ளுகும்.

5. ஜாதகருடைய தகப்பனுருடன் கூடப்பிறந்தவர்கள் ஆண்கள் ஐந்துபேரும் பெண் ஒருவரும் என்று சொல்லுகிறோம். பிறகு இவர்களில் சிலர் இறந்து போவார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். ஜாதகருடைய தகப்பனுரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் இரண்டு நிறங்களும் கலந்த மாநிறமுள்ள தேகத்தை யுடையவர். மேன்மையான சிறந்த வார்த்தைகளைச் சொல்லுவார். உயரமில்லாதவராக விருப்பார்.

6. ஆதியில் வறுமை யுள்ளான் அதன் பின்னால் யோக முள்ளான்
நீதிவான் செட்டால் பாக்கியம் நேர்ந்திடும் பலவூர் பூமி
வேதனை ஒருவர்க் கென்னன் வீண்வம்பில் செல்லா னுகும்
காதியு மதிக முள்ளான் காலாள்க ளுடைய னுமே.

6. தகப்பனூர் இளம்பிராயத்தில் கஷ்டமும் தரித்திரமு முள்ள வர். அதற்குமேலே யோகமுடையவர், நீதியை உடையவர். வியாபாரத்தி னுல் தனம் உண்டாகும். பல கிராமங்களில் நிலங்கள் வந்துசேரும். யாருக்கும் இவர் கெடுதிகளை மனத்தில் நினைக்கமாட்டார். வீணை சண்டை சச்சரவுகளில் தலையிடமாட்டார். அதிகமான கீர்த்தியையும் புகழையும் உடையவர். கால்நடைகளையும் வேலைக்காரர்களையும் உடையவராவார்.

7. கல்விமான் கணக்கிஞகி கரமதில் பத்ம ரேகை
நல்லவ ஞகி வாழ்வன் நற்சித்திர வீடு செய்வன்
புல்லிய புத்தி யில்லான் பூமிக ளதிக முள்ளான்
சொல்லதைக் காப்பாஞகும் துணைவரால் பெருமை பூண்பன்.

7. தகப்பனூர் வித்தையை யுடையவர், நுட்பமான புத்தியுடைய வர். தன்னுடைய உள்ளங்கையில் பத்மரேகை என்ற ஒரு விதமானத் தாமரைரேகையை யுடையவர், நல்லவராகப் பெயரெடுத்து வாழ்வார். நல்ல அழகிய சித்திரங்கள் அடங்கிய வீட்டைக் கட்டுவார். தாழ்ந்த ஈன மான புத்தியில்லாதவர். அநேக நிலங்களையுடையவர். தான் சொன்ன வார்த்தைகளைத் தவருமல் காப்பாற்றுவார். தன்னுடைய சகோதரர்களால் மேன்மையையும் சிறப்பையும் பெறுவார்.

8. இளமன துடைய ஞகு மீகைவான் பொறுமை சாலி
கலவர புத்தியுள்ளான் கட்டுவார்த்தை களும் சொல்வன்
அளகேச னுடையன் நாட்டினில் கீர்த்தியும் பெருமை ஏற்பன்
தளர்விலா குடும்பி யாவன் தங்கிடும் பித்தச் சூடு.

8. தகப்பனூர் இளகிய இரக்கமுள்ள மனத்தையுடையவர். பிறருக் குக் கொடுக்குந் தன்மையையுடையவர். சாந்த மானவர். கலக்கமும், சந் தேகமுமுளுள்ள புத்தியையுடையவர். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லுவார். குபேரன், அஃதாவது செல்வத்தை யுடையவர். பூமியில் புகழையும் பெருமையையும் அடைவார். குறைவு படாத இளைக்காத குடும்பஸ்தராவார். இவருக்குப் பித்தச்சூடு தேகத்தில் இருந்து கொண்டேயிருக்கும்.

9. ஆதியில் துணைவர் வேருய் அனுகிடும் ஒருவன் தன்பால்
நீதியாய்ச் செட்டுச் செய்து நிதானமாய் வாழ்வா ஞகும்
ஓதுவன் பின்னல் சேதி உரைக்குமிக் குணத்தா னுக்குச்
சோதிபோல் தோன்று வானும் சொல்லுவோம் மிவன்குணத்தை.

9. முதலில் தகப்பனூருடைய சகோதரர்கள் இவரை விட்டுப் பிரிந்து போய் வேறே குடும்பமாக விருப்பார்கள். இவர் ஒருவருடன் கூட பாகமாகவிருந்து நிதானமாக வியாபாரஞ் செய்து ஜீவிப்பார். இவருடைய மற்ற விஷயங்களைப்பற்றிப் பின்னல் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட குணங்களுடைய தகப்பனூருக்கு இந்த ஜாதகர் ஒரு பிரகாசமான விளக்கைப் போல, குலதீபத்தைப் போலப் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகிறேம்.

10. பொய்யது பகரான் மிஞ்சி புத்திமான் பலபேர் நேயன்
தையலுக் கினிய ஞகும் தன்முகம் வடிவு முள்ளான்
ஐயமென் றேரைக் காப்பன் அருமறை நேசம் கொள்வன்
மெய்யது சிவந்த மேனி விளைபுலம் விசேஷ முள்ளான்.

10. ஜாதகர் பொய்யைச் சொல்லமாட்டார். அதிகமான நல்ல புத்தியை யுடையவர். அநேகருக்குச் சிநேகமாகவிருப்பார். மனைவிக்குப் பிரியமானவர். தன்னுடைய முகத்தில் அம்மை முதலிய அடையாள முடையவர். பிச்சை என்று சொல்லிக் கேட்பவரையும் ஏழையையும் காப் பாற்றுவார். அருமையான பிராணர்களுடைய சிநேகத்தை அடைவார். அருமையான சாஸ்திரங்களையும் படிப்பார். இவருடைய தேகம் சிவந்த நிற முடையது. பயிரிடுகின்ற நல்ல விளைவுள்ள நிலங்கள் இவருக்கு அதிகமாக உண்டு.

11. உரோமங்கள் நீட்சி யுள்ளான் நுண்ணிய புத்தி யுள்ளான்
சேமமாம் குடும்பி யாவன் தீரமா மனத்த ஞகும்
காமனை யொத்த தேகன் கட்டுவார்த் தைகளும் சொல்லான்
நேமங்கள் கொஞ்ச முண்டு நிதானங் ளறிய வல்லன்.

11. ஜாதகர் தன்னுடைய தேகத்தில் நீண்டிருக்கின்ற மயிரை யுடையவர். நுட்பமானதும் கூரியதுமான புத்தியை உடையவர். சௌக்கிய மான குடும்பத்தை யுடையவராவார். தைரியமான மனத்தையுடையவராவார். காமனுடைய தேகத்தைப்போல உள்ள அழகும் கவர்ச்சியும் பொருந்திய தேகத்தையுடையவர். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தை களையும் சொல்லமாட்டார். நியமங்களும் தெய்வ வழிபடுதலும் இவருக்குக் கொஞ்சம் உண்டு. உண்மையையும், மெய்யையும் ஆதி காரணங்களையும் தெரிந்து கொள்ளக்கூடிய சக்தியையும் சாமர்த்தியத்தையும் உடையவர்.

12. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உதாசீனம் சொல்லா ஞகும்
பண்டுபண்டார முள்ளான் பணிதிகள் சேர்ப்பா ஞகும்
அண்டர்கோன் முருகன் பத்தி அவனுமே கொள்வா ஞகும்
யெண்டிசை புகழு மேற்பன் எதிரியை நாசம் செய்வன்.

12. ஜாதகர் சுகமான நல்ல சாப்பாட்டைச் சாப்பிடுவார். தூஷண மானதும் கெட்டதுமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். பழமையான வஸ்துக்களை யும் பல பண்டங்களையும் பொக்கிஷத்தையும் துரைத்தனத்தையும் சிவனடியார்களையும் உடையவராவார், ஆபரணங்களைச் சேகரிப்பார். சிவபெரு மான்மேலும் முருகக் கடவுள்மேலும் பக்தியுடையவர். எட்டுத்திக்கு களிலும் எவ்விடத்திலும் கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். தன்னுடைய எதிரியை அழித்து விடுவார்.

13. பந்துவும் புகழ வாழ்வன் பரஉப காரி யாவன்
நந்திஆ வுடைய ஞகும் நரைமலர்க் கந்த மிஷ்டன்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குநா ணயங்க ளுள்ளான்
நொந்திடும் பேரைக் காப்பன் நீங்காத செல்வ ஞவன்.

13. ஜாதகர் தன்னுடைய பந்துக்கள் தன்னைப் போற்றும்படியாகப் பெருமையுடன் வாழ்வார். பிறருக்கு உதவியைச் செய்வார். ரிஷபமும் பசுவும் உடையவராவார். வாசனையையுடைய புஷ்பங்களின்மேலும் சந்தனக் குழம்பின் மேலும் ஆசையுடையவர். தன்னிடம் வந்தவர்களுக்கு சாப்பாடு போடுவார். தன்னுடைய வாக்கைத் தவருமல் காப்பாற்றுவார். நொந்து போனவர்களையும் ஏழைகளையும் காப்பாற்றுவார். அழியாத செல்வமுடையவராவார்.

14. இவன்துணை ஆண்பால் ரண்டு இலகிய கன்னி ஒன்று
நவமதில் விருத்தி யென்றேம் நசித்திடு மற்ற வெல்லாம்
பவமுள துணைஆண் முன்னோர் பகருவோம் மூத்தோர் சேதி
கவணங்கள் செய்வா ருகும் கல்விமான் கபடு மில்லான்.

14. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் ஒன்பது பேரில் ஆண்கள் இரண்டு பேரும், பெண் ஒருவரும் நீண்ட ஆயுளையுடையவர்களாக இருப்பார்கள். மற்றச் சகோதரர்கள் எல்லாம் இறந்து விடுவார்கள். இந்த ஆண் சகோதரர்கள் ஜாதகருக்கு மூத்த சகோதரர்களாவார்கள். மூத்த சகோதரர்களுடைய விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகிறேம். எல்லோருக்கும் மூத்த சகோதரன் மருந்துகளையும், மருந்து வகையராவில் சேர்ந்த காயக்கட்டுகளையும் செய்பவராவார். வித்தை யுடையவர். மனத்தில் கள்ளம் வஞ்சனை இவைகள் இல்லாதவர்.

15. பலபேர்க்கும் பந்தி னர்க்கும் பரிந்துப சாரம் செய்வன்
சொல்மொழி பிசகில் லாதான் துணைவரை ஆத ரிப்பன்
பலமுள யோக மெய்தும் பிறந்தநாள் முதலாமாக
நிலைமையாய்ப் பாரி ஒன்று நிகழ்துவோ மிவனுக் கேதான்.

15. ஜாதகர் அநேகருக்கும் பந்துக்களுக்கும் ஆசையுடன் உபசரணை உபகாரம் சேவை இவைகளைச் செய்வார். தான் சொல்லுகின்ற வார்த்தையில் குற்றங்களில்லாதவர். தான் சொல்லும் வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவர். தன்னுடைய சகோதரர்களைக் காப்பாற்றுவார். தான் பிறந்தகாலம் முதற்கொண்டு வலுவான பெரிய யோகத்தையுடையவர். இவருக்கு நிலையாக ஒரு மனைவி இருப்பாள் என்று சொல்லுகிறேம்.

16. புத்திரர் ஆண்பா லொன்று பெண்ணது அவ்வா றுரும்
சுத்தமா யிரண்டும் தீர்க்கம் செப்புவோ மிவனுக் கேதான்
மத்திம வயதி லேதான் மரலிதன் பதிக்குச் செல்வன்
வித்தகன் சென்ற பின்பு விரோதங்கள் குடும்பம் தன்னில் ;

16. ஜாதகருடைய மூத்த தமையனுருக்குச் சந்ததிகளில் ஆண் ஒன்றும் பெண் ஒன்றும் ஆகிய இவ்விரண்டு பேர்களும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறேம். இவர் தனக்கு நடு வயதில் இறந்து எமபட்டணம் போய்ச் சேருவார். இவர் இறந்து போன பிறகு குடும்பத்தில் விரோதங்களும் கலகங்களும் ;

17. நேரிடு மென்று சொன்னேம் நிமலியும் கேட்க லுற்ருள்
ஆரினல் விரோத மெய்தும் அதுதனை விவரம் சொல்வாய்
மாரன்தன் தந்தை ஞாதி மைந்தர்தன் பாரி யாளால்
கூறுவோம் பகையு மெய்து குடும்பமு மலைச்ச லெய்தும்.

17. உண்டாகும் என்று சொல்லுகிறேம். பார்வதியம்மையார் கேட்கின்ருர். எவரால் கலகங்களும் விரோதங்களும் உண்டாகும் என்பதை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்கவே, இவருடைய பங்காளி என்ற தகப்பனுரின் சகோதரரின் புத்திரனுடைய மனைவியால் விரோதங்களும் கலகங்களும் குடும்பத்தில் உண்டாகிக் குடும்பம் கஷ்டங்களையும் அலைச்சல் திரிச்சல்களையும் அடையும்.

18. தனமது செலவே யுண்டு ஜயமின்றி மனது துக்கம்
இனமது பகையு மெய்தும் ராஜகோ பங்க ளுண்டு
வன்னிதையா லிவ்வாறு நேரும் வந்துபின் மங்கை சாவாள்
சினமிலா அந்த ஆஸ்தி சேர்ந்திடு மிவனுக் கேதான்.

18. சொத்து செலவாகிவிடும். ஜயம் இல்லாமல் தோல்வியை யடைவார். மனதிற்குத் துன்பமும் கஷ்டமும் ஏற்படும். பந்துக்கள் விரோதிகளாகி விடுவார்கள். அரசாங்கத்தாருடைய கோபமும் நேரிடும். அந்த ஸ்தீரீயால் இவ்விதமான கஷ்டங்கள் உண்டாகும். இவ்விதமான கஷ்டங்கள் நேரிட்ட பிறகு அந்த ஸ்தீரீ இறந்து விடுவாள். அவளுடைய சொத்துக்களும் ஜாதகருக்கே வந்து சேர்ந்துவிடும்.

19. எந்தக் காலத்தி லேதா னிவ்வினை தன்னல் மாள்வள்
அந்ததோர் சேதி சொல்வாய் ஜயந்து ஆண்டு மேலாய்
வந்திடு கருவினுலே மங்கையும் சேத மெய்தும்
பிந்தியும் கலக்கம் நீங்கும் புயண்டரும் கேட்க லுற்ருர்.

19. எந்த வயதில் இவ்விதமான கஷ்டங்கள் ஏற்பட்டுப் பிறகு அந்த ஸ்தீரீ இறந்து விடுவாள் என்ற விஷயத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு இருபத்தைந்தாம் வயதிற்குப் பிறகு கர்ப்பம் தறித்து அதனுல் அந்த ஸ்தீரீ இறந்து விடுவாள். அதன் பிறகு குடும்பத்திலுள்ள கலகங்கள் நீங்கிவிடும் என்று சொல்ல, புஜண்ட மகரிஷியானவர் கேட்கின்ருர்.

20. அவள்சுதர் தமக்கு அந்த ஆஸ்திகள் சேரா தோசொல்
நவனியில் மதலை காணுள் நாயகன் மரண மாவான்
இவளுமே சொன்ன ஆண்டுடின் மேலேதான் மரண மாவன்
தவமுனி பராசர் சொல்ல ஜயமுனி கேட்க லுற்ருர்.

20. அந்த ஸ்தீரீயினுடைய பிள்ளைகளுக்கு அந்தச் சொத்துக்கள் போய்ச் சேராதா? என்ற விஷயத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அவளுக்குச் சந்ததிகள் இல்லையா. அவளுடைய புருஷன் இறந்து விடுவான்.

இவளும் முன்னே சொல்லிய வயதிற்குப் பிறகு தான் இறந்து போவாள் என்று தவங்களைச் செய்கின்ற முனிவராகிய பராசர முனிவர் சொல்ல, ஜயமுனிவர் கேட்கின்றார்.

21. என்னகோள் குற்றத் தாலே இவ்வினை நடக்கும் சொல்வாய்
பொன்னவன்[1] குஜனு[2] மாறில் பொருந்தியே யிருப்ப தாலே
இன்னவாறு தோஷம் சொன்னோமிரவியின் தசைமுன் பாதி
முன்சொன்ன பலன்கள் எய்து மொழிந்தது தப்பா தாமே.

21. எந்தக் கிரகத்தின் தோஷத்தால் இப்படிப்பட்ட செயல்கள் நடக்கும் என்பதைச் சொல்வீர் என்று கேட்க, குருவும் அங்காரகனும் கூடி ஆறில் இருப்பதால் இவ்வித தோஷங்களைச் சொன்னோம். சூரியனுடைய தசையின் முற்பாதியில் முன்னே சொல்லப்பட்ட பலாபலன்கள் நடக்கும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிவிடாமல் நடக்கும்.

22. ஆறினில் குஜனும்[2] சேர அப்பகை தன்னை வென்று
தீரமா யிவன்பின் சேரும் செப்பின மொழிகுன் றுது
கூறுவோம் விவரம் ரண்டில் கோதையின் சேதி யாவும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

22. ஆருவது வீட்டில்* அங்காரகன் இருப்பதால் அந்த எதிரியை ஜயித்து அந்தச் சொத்துக்கள் இவரை உறுதியாக வந்து அடையும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவருமல் நடக்கும். அந்த ஸ்திரீயினுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் விவரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறோம். ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—ஞாதி விஷயம் : குருவும் அங்காரகனும் ஆறில் இருப்பதால் குடும்பத்தில் கலகங்களும் விரோதமும் ஏற்பட்டு அபஜயமும் ஜயமும் ஏற்படும் என்று 16, 17, 18, 19, 20, 21, 22-ஆவது பாடல்களில் சொல்லி இருக்கிறது. பிதுர் லக்கினம் மீனம், இதற்கு இளைய சகோதர ஸ்தானம் ரிஷபம். இந்த ரிஷபத்திற்குப் புத்திர ஸ்தானம் கன்னி. இந்தக் கன்னிக்குக் களத்திர ஸ்தானம் மீனம், இந்த மீனத்திற்குடையவர் குருவாகின்றார். மேலும் பிதுர் லக்கினமாகிய மீனத்திற்கு மூத்த சகோதர ஸ்தானம் மகரம். மகரத்திற்குப் புத்திர ஸ்தானம் ரிஷபம். ரிஷபத்திற்குக் களத்திர ஸ்தானம் விருச்சிகம். விருச்சிகத்திற்கு அதிபதி அங்காரகனுகின்றார். ஆகையால் ஜாதகருடைய தகப்பனரின் சகோதரனின் புத்திரனுடைய மனைவியின் அதிபதிகள் குருவும் அங்காரனும் ஆகின்றார்கள். இவர்களைப் பற்றித் தான் கலகங்கள் சொல்லி இருக்கின்றன. ஜாதகாலங்காரத்தில் ஆறுவது பாவத்தில் 1-ஆவது பாடலாகிய 629-வது பாடலிலும் அதற்கு அடுத்தமூன்று பாடல்களிலும் சொல்லியுள்ள பிரகாரம் ஞாதிகளால் வழக்குண்டாகி முதலில் அபஜயம் ஏற்பட்டுக் கடைசியில் ஜயமும் அனுக்கூலமும் குருவும் சனியும்அங்காரகனும் ஆறில் இருப்பதால் உண்டாகும் என்று கண்டிருக்

[1] குரு [2] அங்காரகன்

கிறது. ஞாதி வீடு ஆறும் வீடாகிய தனுசு. ஞாதிகாரகன் அங்காரகனும். சூரிய தசையில் மூன்று வருஷம் செல்லுவதற்குள் அதாவது ஷ்ஷு 23-5-0-க்கு மேல் ஷ்ஷு 26-5-0-க்குள் இப்பலன்கள் நடக்குமென்று இங்கு 21-ஆவது பாடலில் சொல்லி இருக்கிறது. மேலும் இங்கு 19-ஆவது பாடலில் இருபத்தைந்து வயதிற்கு மேல் நடக்கும் என்று சொல்லி இருக்கிறது. ஆகையால் வயது ஷ்ஷு 25-க்கு மேல் ஷ்ஷு 26-5-0-க்குள் நடக்கும் என்று ஏற்படுகிறது. இக்காலத்தில் சூரிய தசையில் இராகு குரு சனி புக்திகள் நடக்கின்றன. சூரியன் குடும்பாதிபதியாகிய எட்டிற்குடையவரான சனியுடனும் ராகுவுடனும் கூடி எட்டில் இருப்பதால் குடும்பத்தில் வியாஜ்யம் ஏற்பட அமைப்பு இருக்கிறது.

23. மற்றொரு துணைவன் சேதி வரைகிறோம் தாயே கேளும்
குற்றமில் லாத நெஞ்சன் கூறுவான் சுகமாய் வார்த்தை
சுற்றுவான் விஷம முள்ளான் தோகைவா கனத்தோன் பத்தி
சித்தமாய்க் கொள்வா னுகும் செனஉப காரியாவான்.

23. ஜாதகருடைய இரண்டாவது மூத்த சகோதரருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே கேட்பீராக. இவர் கள்ளங் கபடு வஞ்சனைகள் இல்லாத மனத்தையுடையவர். சுகமாகவும் இன்பமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். பந்துக்களையுடையவர். வைராக்கிய முடையவர் மயில்வாகனத்தையுடைய முருகக் கடவுளின் மேல் பக்தியை உண்மையாயுடையவர். ஜனங்களுக்கு உதவியைச் செய்பவராவார்.

24. வித்தையும் புத்தி மானும் வியாபாரம் தொழிலே செய்வன்
நத்தினோர்க் குதவி செய்வன் நலமறிந் துரைக்க வல்லன்
பத்திலா தவர்க்கு நேயன் பாவைய ரிஷ்டம் கொள்வன்
உத்தரம் பேசா னுகும் கோமனி மேலுங் கேளே.

24. இவர் படிப்பையும் அறிவையும் உடையவராவார். வியாபாரத் தொழிலையே செய்து ஜீவிப்பார். தனக்குக் கெடுதியைச் செய்தவர்களுக்குக் கூட உதவி செய்வார். நல்லது கெட்டது அறிந்து பேசுந் திறமையும் சக்தியும் உடையவர். உலகப் பற்றில்லாதவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சினேகமானவர். ஸ்திரீகளின் மேல் ஆசையுள்ளவர். தன்னையே உயர்த்திப் பேசமாட்டார். பலமாகவும் வலீவாகவும் பேச மாட்டார். பார்வதியம்மையே ! நாங்கள் இன்னும் சொல்லுவதைக் கேட்பீராக.

25. நந்தியும் பணிசேயில்லம் நற்பணியுடைய னுவன்
நொந்திடும் பேரைக் காப்பன் நீங்காத செல்வ முள்ளான்
இந்தவ னுடனே கூடி யிசைகுவான் விரோத மெண்ணன்
அன்னவன் தசைக்குப் பாரி அறைந்தனம் மொன்றே யாகும்.

25. கால் நடைகளும், பண்ணையாட்களும், பண்ணை நிலங்களும் பிள்ளைகளும் நல்ல ஆபரணங்களும் ஆகிய இவைகளை எல்லாம் உடையவராவார். நொந்து போனவர்களையும் ஏழைகளையும் காப்பாற்று

வார். குறைவுபடாத தனத்தையுடையவராவார். ஜாதகருடன் கூடி வாழ்வார். விரோதங்களை மனத்தில் வைக்கமாட்டார். இவருக்கு மனைவி ஒருத்தியேயாகும் என்று சொல்லுகிறோம்.

26. பாரியு முள்ளூராகும் பாலர்கள் ஆண்பா லொன்று
தீரமாய்ப் பெண்பால் ரண்டு செப்பலாம் தீர்க்கமாகப்
பாரினில் இரண்டு சேதம் பகருவோ மிவனுக் கேதான்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை புகன்றிட் டோமே.

26. இவருக்கு மனைவி தன் ஊரிலிருந்தே வந்து சம்பவிப்பாள். இவருக்குக் குழந்தைகள் ஆண் ஒன்றும் பெண்கள் இரண்டும் நீண்ட ஆயுளையுடையவர்கள் என்று உறுதியாய்ச் சொல்லுகிறோம். இவருக்கு இரண்டு குழந்தைகள் இறந்து போய்விடும் என்று சொல்லுகிறோம். ஆறு முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே. நாங்கள் இவ்விதமாகச் சொல்லுகிறோம்.

27. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருபான் மூன்றில்
காதலி தெற்குத் திக்கில் கலந்திடு மென்று சொல்வோம்
ஓதுவேன் அவள்கு ணத்தை உண்மையாம் மனத்தா ளாகும்
சூதுகள் கொஞ்ச முண்டு தோகையு மாஞ்சி வப்பள்.

27. ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகிறோம். இவருக்கு இருபத்து மூன்றுவது வயதில் * மனைவி தெற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள் என்று சொல்லுகிறோம். இவளுடைய குணதிசயங்களைச் சொல்லுகிறேன். இவள் உண்மையான நல்ல மனத்தை உடையவள். கொஞ்சம் வஞ்சனைகளும் கபடமும் உண்டு. இவள் மாந்துளிரின் நிறத்தைப் போல ஒரு விதமான சிவப்பு நிறத்தை உடையவளாவாள்.

* குறிப்பு.—விவாக கால விஷயம்: ஜாதகருக்கு வயது ஷ 22–0–0 முதல் 23–0–0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில்புதன்புக்தி கேதுபுக்திகள் நடக்கின்றன. சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்கிற்குடையவராகியும் களத்திர காரனுகியும் ஏழில் களத்திர ஸ்தானத்தில் இருக்கின்ருர். ஆகையால் விவாகம் செய்துவைக்க இவருக்கு அமைப்பு இருக்கின்றது. கேது குடும்ப ஸ்தானமாகிய இரண்டில் இருந்துகொண்டு குடும்பாதிபதியாகிய சூரியனுலும் களத்திர ஸ்தானுதிபதியாகிய சனியாலும் பாக்கியாதிபதியாகிய குருவாலும் பார்க்கப்பட்டிருக்கின்ருர். ஆகையால் இவருக்குத்தன் புக்தியில் விவாகஞ் செய்து வைக்கப் புதனைவிட அதிக அமைப்பு இருக்கிறது. ஆகையால் ஜாதகருக்குச் சுக்கிரதசையில் கேதுபுக்தியில் விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கிறது.

28. பொன்பணி அதிகம் சேர்ப்பள் புருடனுக் கினிய ளாகும்
தன்சொலு மடக்க முண்டு தருமமாம் குணத்தா ளாகும்
அன்னியர் மெச்ச வாழ்வாள் ஆசாரம் யோக சாலி
புன்னியே பேசு வாளாம் பார்வதி கேட்டி டாயே.

28. ஜாதகருடைய மனைவி தனம் ஆபரணம் இவைகளை அதிகமாகச் சேர்த்து வைப்பாள். புருஷனுக்கு இஷ்டமானவளாவாள். அடக்கமாகவும் சாந்தமாகவும் பொறுமையாகவும் பேசுவாள். தருமஞ் செய்யுங் குணத்தையுடையவளாகும். பிறர் இவளைப் போற்றும்படியாகவும் மதிக்கும்படியாகவும் வாழ்வாள், நல்லொழுக்கமுடையவள், யோகமுடையவள். சுருக்கமாகவும் திறமையாகவும் பேசுவாள். பார்வதியம்மையே! கேட்பீராக.

29. சுதர்களு மிருநான் காகும் தோன்றிடும் பெண்பால் ரண்டு
சுதமுட ணுண்பா லவ்வாறு தீர்க்கமாம் நான்கு தானும்
அதமுமாம் நான்கு தானும் அது வின்றி முதலில் பீடை
விதங்களைச் சொல்லு மென்ன விளம்புவார் பராசர் தாமும்.

29. ஜாதகருக்கு எட்டுக் குழந்தைகள் பிறக்கும். இரண்டு பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் ஆக நான்கு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். நான்கு குழந்தைகள் இறந்துவிடுவார்கள். முதலில் பிறக்கும் குழந்தைகளுக்குத் தோஷமுண்டு. இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க பராசர முனிவர் பதில் சொல்லுகிருர்.

30. அஞ்சினுக் குடையோ ளுறில் அந்தண ருடனே கூட
துஞ்சிடு முதலில் புத்திரர் சுதனுமுன் ஜன்மம் தன்னில்
கொஞ்சமாம் வினையும் செய்தான் குழவிகள் தோஷ மெய்தும்
தஞ்சமாய் வந்த ஊழைச் சாற்றுவீர் விவரமாக ;

30. ஐந்திற்குடையவரான அங்காரகன் ஆறுவது வீட்டில் குருவுடனே கூடியிருப்பதால் முதலில் பிறக்குங் குழந்தைகள் இறந்து போய்விடும். ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் கொஞ்சமான பாவத்தைச் செய்தார். அதனுல் குழந்தைகளுக்குத் தோஷம் உண்டாகும். ஜாதகருக்குத் துணையாக வந்த முன் ஜன்மத்திய வினையை விவரமாக சொல்லுவீர் என்று கேட்க;

குறிப்பு.—புத்திர தோஷம் விஷயம் : புத்திர ஸ்தானமாகிய ஐந்தாவது வீட்டை ஏழிற்கும் எட்டிற்கும் உடையவரான சனி பார்த்திருக்கின்ருர். குருவை இராகு பார்க்கின்ருர். இன்னெரு புத்திர ஸ்தானமாகிய ஒன்பதாவது வீட்டை அங்காரகன் பார்க்கின்ருர். இவைகளாலும் புத்திர தோஷம் ஏற்படும்.

31. முன்ஜன்மம் காஞ்சி கீழ்ப்பா லுதித்தனன் பேரூர் தன்னில்
அன்னவன் வடுகர் வமிசம் அனுகியே செட்டுச் செய்து
தன்மனே மதலே யுண்டாய்த் தரணியில் வாழுந் நாளில்
நன்னய மறையோன் பெற்ற நற்சுதர் வயது சென்று ;

31. ஜாதகர் பூர்வ ஜன்மத்தில் காஞ்சீபுரத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் தெலுங்கர் வமிசத்திற் பிறந்து வியாபாரஞ் செய்துகொண்டு வருகிற காலத்தில் ஒரு நல்ல பிராமணர் தான் பெற்ற நல்ல ஒரு பிள்ளைக்கு தகுந்த வயது வந்துவிடவே ;

32. முப்புரி நூல்கள் செய்ய முதலின்றி இவன்பால் சென்று
செப்புவார் எந்தன் சேய்க்குச் சபதப மில்லாதாலே
கைப்பொரு ளுதவி செய்தால் கருத்ததை முடிப்பே னென்றார்
இருபிறப் பாளர் கேட்கத் தருகிறே னென்று சொல்லி ;

32. அப்பிள்ளைக்கு உபநயம் செய்து பூணுல் கலியாணம் செய்யப் பணம் இல்லாமல் ஜாதகரிடம் போய், என்னுடைய பிள்ளைக்கு உப நயனம் செய்யாமலிருப்பதால் நீர் உம்முடைய கையிலுள்ள பணத்தை எனக்குக் கொடுத்து உதவி செய்தால் என்னுடைய எண்ணமாகிய உப நயனத்தை முடித்து விடுவேன் என்று சொல்லி அந்தப் பிராமணர் ஜாதகரைக் கேட்க பணத்தைக் கொடுப்பதாகச் சொல்லி ,

33. காரிய காலம் தன்னில் கைதனை விரித்தா னென்றேம்
பாரினில் கோப முற்றுப் பகருவார் மறையோ ருந்தான்
தீரமாய்த் தாரே னென்று செப்பின பாவிக் கேதான்
வெறெரு ஜன்மம் தன்னில் விளங்காரே சுதர்கள் தாமும் ;

33. உபநயநகாலம நெருங்கிவிட்ட போது ஜாதகர் பணம் தன்னிடம் கிடையாது என்று சொல்லிக் கையை விரித்துவிட்டார் என்று சொல்லு கிறேம். அதன் மேல் அந்தப் பிராமணர் கோபமுடையவராய்ச் சொல்லுகின்றார். பணத்தைத் தருகிறேன் என்று உறுதியாய்ச் சொன்ன பாவிக்கு இன்னொரு பிறப்பில் பிள்ளைகள் விருத்தியாக மாட்டார்கள் ;

34. வேதத்தோன் சொல்லிச் சென்றான் மேவிற்று அந்தத் தோஷம்
மாரனு மந்தி யத்தில் மனைவிதன் னுடனே சித்து
பாரிய சேதுச் சென்று பலதீர்த்தம் தோய்ந்து இன்னேன்
சிறியோர்க் கன்ன மீந்து தேவதா தலங்கள் சென்று ;

34 (என்று) அந்தப் பிராமணர் சொல்லி விட்டுப் போய்விட்டார். அந்தச் சாபமானது ஜாதகரை வந்தடைந்தது. ஜாதகர் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் தன்னுடைய மனைவியுடன் பெரிய ஸ்தலமாகிய சேது ஸ்தலத திற்குப் போய் அநேக தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டுத் தெய்வ ஸ்தலங்களுக்குப் போய் ;

35. மறுபடி உள்ளூர் மீண்டு மலர்வனம் வைத்துப் பின்பு
அரனடி தொண்டு செய்து அந்தகன் பக்கல் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தனன் காஞ்சி தன்னில்
உறைந்தது முன்னூழ்த் தோஷம் உதிக்குஞ்சேய் முதலில் பீடை.

35. மறுபடியும் தன்னுடைய ஊருக்குச் சென்று பூந்தோட்டம் வைத்துப் பிறகு சிவபெருமானுக்குத் தொண்டு பூஜை இவைகளை செய்து பிறகு இறந்து எமனிடஞ் சென்று பிரமதேவனல் எழுதப்பட்டுக் காஞ்சீபுரத் தில் பிறந்தார். முன் ஜன்மத்திய வினையும் சாபமும் ஜாதகரை வந்து அடைந்தது. அதனுல் முதலில் பிறக்குங் குழந்தைகளுக்குத் தோஷ முண்டாகும்.

36. பின்சுதர் விருத்தி யென்றேம் பேதையும் கேட்க லுற்றாள்
முன்மறைச் சாபத் தாலே உதித்தசேய் தீதா காதோ
அன்னவன் முன்ஜன் மத்தில் அரனடி தொண்டு செய்தும்
உன்னத சேது புண்யம் உறைந்ததால் தோஷம் நீங்கி.

36. பின்னுல் பிறக்குங் குழந்தைகள் விருத்தியாகும் என்று சொல்லு கிறேம். அதன்மேல் பார்வதியம்மையார் கேட்கின்றார். முன் ஜன்மத்தில் பிராமணர் கொடுத்த சாபத்தால் ஜாதகருக்குப் பிறக்குங் குழந்தைகள் எல்லாம் இறந்துவிடாதோ ! சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகர் முன் பிறப்பில் சிவபெருமானுடைய அடிகளில் தொண்டு செய்தும், பூஜை செய்தும், மேன்மையான சேது ஸ்தலத்திற்குச் சென்று புண்ணியத்தை அடைந்தும் இருந்ததாலும் அந்தத் தோஷம் விலகி ;

37. கங்கையின் குலமு தித்துக் காளையின் விருத்தி தீர்க்கம்
துங்கமா மறைசா பத்தால் சுதர்முதல் பீடை யாகும்
தங்கிடும் பின்னுல் விருத்தி சாற்றிய மொழி குன்றுது
நங்கையே மாதுர் சேதி நவிலுவோம் கேளும் தாயே.

37. இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் வந்து பிறந்தார். இவருக்குப் பின்னுல் பிறக்குங் குழந்தைகள் நீண்ட ஆயுளையுடைய வர்களாவார்கள். பிராமணருடைய பெரிய சாபத்தால் முதலில் பிறக் குங் குழந்தைகள் இறந்து போய்விடும். பின்னுல் பிறக்குங் குழந்தை கள் உயிருடன் நிலைத்திருக்கும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும், பார்வதியம்மையே ! இனிமேல் தாயாருடைய விஷ யங்களைப்பற்றிச் சொல்லுகிறேம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம் மையே ! கேட்பீராக.

38. அன்னையும் சிவந்த மேனி அழகுளாள் பெருமை சாலி
பொன்பணி உடையா ளாகும் பஞ்சைமே லிரக்க மாவள்
தன்னில்லம் உள்ளூ ராகும் சாந்தமும் கோப முண்டு
அன்னவள் அல்ப ரோகி ஆளனுக் கினிய ளாமே.

38. ஜாதகருடைய தாயார் சிவப்புநிறமுள்ள தேகமுடையவள். அழகானவள். பெருமையையுடையவள். தனமும் ஆபரணங்களும் உள்ள வளாவாள். ஏழைகளின் மேல் கிருபையும் தயையும் உள்ளவளாவாள். இவளுடைய வீடு உள்ளூரிலேயே இருக்கும். பொருமையையுடையவள். சில சமயம் கோபத்தையுமுடையவள். கொஞ்சம் நோயுடையவள். தன் னுடைய புருஷனுக்கு இஷ்டமானவளாவாள்.

39. அவள்துணை ஆண்பாலொன்று அறைந்தனம் தீர்க்க மாகப்
பவமுள அதன்மே லாக பருகாது நசிக்கு மென்றேம்
இவளுடைப் பூர்வம் சொல்வே னினிமையாய் வேலங் காட்டில்
நவமதில் வன்னிய வமிசம் நாயகி உதித்தா ளென்றேம்,

39. தாயாரின் சகோதரர்களில் ஓர் ஆண் சகோதரர் நீண்ட ஆயுளே யுடையவர். மற்ற அதிகமான சகோதரர்கள் நிலேக்காமல் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகிறோம். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இனிமையை உண்டாக்குகின்ற திருவாலங் காட்டில் ஒரு நல்ல வணிக குலத்தில் இவள் பிறந்தாள் என்று சொல்லு கிறோம்.

40. தேவதா பத்தி கொண்டு சிறுத்தவர்க் கன்ன மீந்து
தாவிய பேரைக் காத்தும் சகலர்க்கு நல்லோ ளாயும்
பூவினில் ஊழில் லாமல் புக்கினன் காலன் பக்கல்
மேவின பிரம ஞலே மேதினில் வரையப் பட்டு ;

40. தாயார் தெய்வபக்தியையுடையவளாகி ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டுத் தன்னிடம் வந்தடைந்தவர்களேக் காப்பாற்றியும் எல்லோருக்கும் நல்லவளாகவிருந்தும் பூமியில் வினேயும் பாவமும் இல்லாதவளாகி இறந்து எமனிடம் போய்ப் பிறகு பிரமதேவனுல் எழுதப் பட்டுப் பூமியில் ;

41. பிருதிவி தலத்தி லேதான் பிறந்த வளிவளே யென்றோம்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வதி சுகமாய் வாழ்வள்
அறைகிறோ மிவள்பின் ஜன்மம் அக்காஞ்சி தன்னி லேதான்
உறைகுவாள் மறையோர் வம்சம் உத்தமி சுகமாய் வாழ்வள்.

41. பிருதிவி ஸ்தலம் என்று சொல்லப்பட்ட காஞ்சீபுரத்தில் இவள் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இலட்சுமி இவளிடத்திலும் இவள் வீட்டிலும் வாசஞ் செய்ய, இவள் சுகமாகவும் செல்வமுள்ள வளாகவும் வாழ்வாள். இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறோம். இந்தக் காஞ்சீபுரத்திலேயே பிராமணர் குலத்தில் பிறப்பாளாகும். பிறந்து இவள் நல்லவளாகவிருந்து சௌக்கியத்துடன் வாழ்வாள்.

42. இவன்பிதா பூர்வம் சொல்வேன் இக்காஞ்சி தென்பா லாக
நவனியில் சிற்றூர் தன்னில் நாயகன் சூத்திர ஞக
அவனியி லுதித்து மேலும் ஆளடி பணேயேர் உண்டாய்த்
தவசிகர்க் கன்ன மீந்து தன்மனே மதலே யுண்டாய் ;

42. ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைச் சொல்லுகிறேன். இந்தக் காஞ்சீபுரத்திற்குத் தெற்கில் ஒரு சிறிய கிராமத்தில் இவர் சூத்திர ஜாதியில் பிறந்து அடிமையாட்களும் பயிரிடும் நிலங்களும் ஏர் முதலியவை களும் உள்ளவராய் வாழ்ந்து முனிவர்களுக்கும் தவம் செய்பவர்களுக்கும் சாப்பாடு போட்டுத் தன்னுடைய மனேவிகுழந்தைகள் இவர்களேயுடையவராகி;

43. தென்திசை கேது புக்கிச் சென்றனன் உள்ளூர் தன்னில்
அன்னவன் மறித்துப் பின்பு அயனுமே வரையப் பட்டு
உன்னத காஞ்சி தன்னில் உதித்தனன் சுகமு ண்டாகிப்
பின்ஜன்மம் அவ்வூர் தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்.

43. தெற்குத் திக்கிலுள்ள சேது ஸ்தலத்திற்குப் போய்ப் பிறகு தன்னுடைய கிராமத்திற்குத் திரும்பி வந்து பிறகு இறந்து பிறகு பிரம தேவனுல் எழுதப்பட்டு மேன்மையான சிறந்த காஞ்சீபுரத்தில் வந்து பிறந்தார். சுகத்துடனிருப்பார். இவருடைய மறு ஜன்மம் இதே ஊரில் நேரிடும். பிராமணர் குலத்தில் பிறப்பார்.

44. அத்திரி சொல்லு கின்ருர் இவனுமுன் ஜன்மம் தன்னில்
பெத்தபுண் ணியங்க ளென்னப் பேசுவீர் விவர மாக
வித்தகன் முன்ஜன் மத்தில் மேவினுன் சேதுக் கேதான்
சுத்தமாய் மைந்து புண்ணியச் சிறப்புடன் செய்து மல்லால் ;

44. அத்தரி மகரிஷி கேட்கின்ருர். ஜாதகருடைய தகப்பனர் முன் ஜன்மத்தில் அடைந்த புண்ணியங்கள் என்னவென்பதைப்பற்றி விவரமாகச் சொல்லுவீர். இவர் முன் பிறப்பில் சேது ஸ்தலத்திற்குப் போய் அவ்விடத்தில் நல்லதான ஐந்துவிதப் புண்ணிய கார்யங்களேச் சிறப்பாகவும் விமரிசையாகவும் செய்ததுமல்லாமல் ;

45. இந்ததோர் ஜன்மம் தன்னில் யாவர்க்கும் நல்லோ னுயும்
கந்தன்மேல் பத்தி கொண்டும் காவலன் வாழ்ந்த தாலே
முந்திய குலமு திப்பான் மொழியது தப்பா தாகும்
இந்திர னிறைஞ்சு மாதே யியம்புவோம் கரும காலம்.

45. இந்தப் பிறப்பில் எல்லோருக்கும் இவர் நல்லவராக விருந்தும் முருகக்கடவுளின் மேல் பக்தியை உடையவராகியும் வாழ்ந்ததால் முதன்மையான குலமாகிய பிராமணர் குலத்திற் பிறப்பார். நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிப் போகாமல் நடக்கும். தேவேந்திரன் வணங்கிப் பூஜை செய்யும் பார்வதியம்மையே ! இனிமேல் கர்ம காலங்களேப் பற்றிச் சொல்லுகிறோம்.

46. முப்பான் மூன்றில் மார்கழி
மாதம் மெய்திடும் தந்தை கண்டம்
செப்புவோம் முப்பத்தாறு ஆண்டினிலே
சேல் மாதம் அன்னேக்குத் தோஷம்
ஒப்புடன் உதித்தோன் அறுபத்து
இரண்டில் உயர் மேட மாதத்திலே தான்
மெய்ப்புடன் நவமிகுறை பக்கம்
தன்னில் விளம்புவோம் முடலம் வாடும்.

46. ஜாதகருக்கு முப்பத்து மூன்ருவது வயதில் † இவருடைய தகப்பனர் மார்கழி மாதத்தில் இறந்து விடுவார். ஜாதகருக்கு முப்பத் தாருவது வயதில்‡ பங்குனி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகிறோம். ஜாதகர் தனக்கு அறுபத்திரண்டாவது வயதில் * மேன்மையான சிறந்த சித்திரை மாதத்தில் தேய் பிறையில் நவமி திதியில் நிச்சயமாக இறந்து இவருடைய தேகம் அழிந்து போய்விடும்.

† குறிப்பு.—(1) பிதுர் மாரகம்: ஜாதகருக்கு வயது ஷ௵ 32–0–0 முதல் ஷ௵ 33–0–0 முடியும் வரையிலும் சந்திர தசையில் ராகு குரு புக்திகள் நடக்கின்றன. மார்கழி மாதத்தில் குரு புத்தி நடக்கிறது. பிதுர் லக்கின மாகிய மீனத்திற்கு இரண்டில் சந்திரன் மாரக ஸ்தானத்தில் இருந்து கொண்டு எட்டாவது வீடாகிய துலாத்தைப் பார்க்கின்றூர். பிதுர் ஸ்தானுதிபதி யாகிய குரு சந்திரனைப் பார்க்கின்றூர். சந்திரனுக்குப் பிதாவை மாரகஞ் செய்யும் அமைப்பு ஏற்படுகிறது. குரு பிதுர் ஸ்தானுதிபதியாகி மீனத்திற் குப் பத்தில் பத்திற்குடையவராயும் இருக்கின்றூர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் குரு தன் புக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது.

‡ (2) மாதுர் மாரகம் :—ஜாதகருக்கு வயது ஷ௵ 35–0–0 முதல் ஷ௵ 36–0–0 முடியும் வரையிலும் சந்திர தசையில் சனி புத புக்திகள் நடக்கின்றன. பங்குனி மாதத்தில் சனி புக்தி நடக்கின்றது. மாதுரு லக்கினம் துலாம். இதற்குப் பராசரஹோரை சில பதிப்புப் பிரகாரம் அங்காரகன் சூரியன் குரு இவர்கள் மாரகராகின்றூர்கள். சந்திரன் அங்காரகனுடைய வீட்டில் மாதுர்லக்கினத்திற்கு ஏழில் மாரக ஸ்தானத்தில் இருந்துகொண்டு மாரகாதிபதியாகிய குருவால் பார்க்கப்பட்டிருக்கின்றூர். மேலும் சந்திரன் மாதுர்காரகாதிபதியாகி அவர் தசையே நடைபெறுகிறது. ஆகையால் மாதாவைச் சந்திரன் மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது. மாரகாதிபதியாகிய சூரியனுடன் சனி கூடிக்கொண்டு சந்திரனையும் பார்க்கின்றூர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது 27-ஆவது சுலோக ங்களின் பிரகாரம் சந்திர தசையில் சனி புக்தியில் மாதாவுக்கு மரணம் நேரிட அமைப்பு இருக்கிறது.

* (3) ஜாதகர் மராகம் :—ஜாதகருக்கு வயது ஷ௵ 61–0–0 முதல் ஷ௵ 62–0–0 முடியும் வரையிலும் ராகு தசையில் சூரிய சந்திர புக்திகள் நடக்கின்றன. 61-ஆவது வயது முடிந்து 62-ஆவது வயதில் சித்திரை மாதத்தில் சூரிய புக்திதான் நடக்கின்றது. கடக லக்கினத்திற்குச் சனி பராசரஹோரை ஜாதகசந்திரிகை தாண்டவமாலே சந்திரகாவியம் இவைகளின் பிரகாரம் மாரகாதிபதி ஆகின்றூர். ராகு இவருடன் கூடி எட்டாவது மாரகஸ்தானத்தில் இருந்துகொண்டு லக்கினுதிபதியாகிய சந்திரனைப் பார்க்கின்றூர். சூரியன் எட்டாவதான மாரக ஸ்தானத்தில் மாரகாதிபதியாகிய சனியுடன் கூடி இருக்கின்றூர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது, 23-ஆவது சுலோகங்களின் பிரகாரமும் துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் ராகு தசையில் சூரிய புக்தியில் ஜாதகருக்கு மரண அமைப்பு இருக்கிறது.

வேறு.

47. மறுஜன்மம் கோகர்ணம் மாநகர் தன்னில்
திருமகன் போன்ற க்ஷத்திரிய குலத்தில்
கரிபரி யுடையாய்க் காவலன் உதிப்பன்
பெருமையாய் வாழ்வன் பொய்யிலா சொன்ஞேம்,

47. ஜாதகர் பின் ஜன்மத்தில் கோகர்ணம் என்னும் ஒரு பெரிய பட்டணத்தில் இலக்ஷ்மியைப்போல செல்வத்தையும் யானையையும் குதிரையையும் உடைய ஒரு க்ஷத்திரிய குலத்திற் பிறப்பார். பெருமை யுடனும் கீர்த்தியுடனும் வாழ்வார். ' நாங்கள் சொல்லியது பொய்யாகாது.

வேறு.

48. பொதுயோக மிவனுக் கேதான் போற்றுவோம் கேளும் தாயே
சதியிலாத் தரும கருமர் சார்ந்துமே ஆறில் நிற்க
மதிபிறை போலே யோகம் வளர்ந்திடு மிவனுக் கேதான்
விதியது முடியு மட்டும் விளம்புவோம் வறுமை காணுன்.

48. ஜாதகருக்குப் பொதுவாக யோகத்தைச் சொல்லுகிறேம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக. குற்றமில்லாத தர்ம கர்மாதிபர்களான குருவும் அங்காரகனும் கூடி ஆறுவது பாவத்தில் இருப்பதால் வளர் பிறைச் சந்திரனைப் போல யோகம் நாளுக்கு நாள் இவருக்கு விருத்தியாகும். இவர் தன்னுடைய ஆயுளுள்ளவரையிலும் கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாமல் வாழ்வார் என்று சொல்லுகிறேம்.

49. கடனில்லான் உதவி செய்வன் கருதின முடிக்க வல்லான்
திடமுள குடும்பி யாவன் திருப்பணி யிச்சை யுள்ளான்
உடன்படான் பிழைக ளுக்கு ஒராறு முகத்தோன் பக்தி
அடவுடன் கொள்வா னுகும் அவனுலே யாவும் நன்மை.

49. ஜாதகர் கடன்படமாட்டார். பிறருக்கு உபகாரஞ் செய்வார். தான் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்கும் சக்தியும் சாமர்த்தியமும் உடையவர். கெடுதியான காரியங்களைச் செய்வதற்குச் சம்மதிக்கமாட்டார். ஆறுமுகங்களையுடையவரான முருகக் கடவுளின் மேல் பக்தியுடையவர். இக் கடவுளின் அருளால் ஜாதகருக்குச் சகல நன்மைகளும் உண்டாகும்.

50. பொன்பொருள் பூமி வீடு புகழ்நாற்பதாயி ரம்பொன்
அன்னவ னடைவா னுகும் ஐம்பது மூன்ருமாண்டில்
தன் துணை பாகம் வேண்டி சார்ந்திடும் குடும்பம் வேறு
இன்னமும் விவர மாக இயம்புவோ மிரண்டி லேதான்.

50. ஜாதகர் தனம் இதரப் பொருள்கள் நிலங்கள் வீடு இவைகள் எல்லாம் மொத்தம் நாற்பதாயிரம் பொன் · பெறக்கூடிய சொத்தைச் சம்பாதித்து வைப்பார். இவருக்கு ஐம்பத்து மூன்ருவது வயதில் * இவருடைய சகோதரர்கள் பங்கு பிரித்துக்கொள்ளவேண்டும் என்று எண்ணங்கொள்வர். அதனுல் குடும்பம் வேருகப் பிரிந்து போய்விடும். மற்ற விஷயங்களை விவரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகிறேம்.

* குறிப்பு.—பாகப்பிரிவினை விஷயம் :—ஜாதகருக்கு வயது ஷ௵ 52–0–0 முதல் ஷ௵ 53–0–0 முடியும் வரையிலும் இராகு தசையில் சனி புக்தி நடக்கின்றது. குடும்பாதிபதியாகிய சூரியனும் அஷ்டமாதிபதியும் ஏழுக் குடையவருமான சனியும் ராகுவும் எட்டில் இருந்துகொண்டு குடும்பத்தைப் பார்ப்பதால் குடும்ப பாகப் பிரிவினை ஏற்பட அமைப்பு இருக்கிறது.

51. ஜனித்திடுங் காலம் தன்னில் செம்பாம்பு தசையிருப்புக்
குனித்திடும் ஆண்டு மூன்று கூறிய திங்களை ந்தும்
வினையுண்டு ஜாத கர்க்கு மிக்கதாய் நலிக ளுண்டு
அனையவே சூத முண்டு அறைகிறோம் விவரம் ரெண்டில்.

51. ஜாதகர் பிறக்குங் காலத்தில் கேது தசையின் இருப்பு **கணிதப்** பிரகாரம் வருஷம் மூன்றும் மாதம் ஐந்தும் ஆகும். இவருக்கு இந்தத் தசையில் கஷ்டங்கள் ஏற்படும். பெரிய நோய்களும் உண்டாகும். சூதகங் களும் நேரிடும். மற்ற விஷயங்களை விவரமாக இரண்டாவது **பாகத்தில்** சொல்லுகிறோம்.

ஜாதகம் 75

1. பிறை[1] அரி[2] பொன்னேன்[3] கோலில்[4] புயங்கனும்[5] காரி[6] [மேரு[7]
தரைமகன்[8] கடக மாகச் சல்லியன்[9] புதனு மீனம்
இரவியும்[10] மேட மாக லக்கினம் கடக மாக
உரைகுவீர் பலனை யென்று உத்தமி கேட்க லுற்ருர்.

சுக்கிரன் புதன்	சூரியன்		கேது
	இராசி	சக்கரம்	லக்கினம் அங்காரகன்
			சந்திரன்.
சனி ராகு		குரு	

1. சந்திரன் சிம்மத்திலும், குரு துலாத்திலும், இராகுவும் சனியும் தனுசிலும், அங்காரகன் கடகத்திலும், சுக்கிரனும் புதனும் மீனத்திலும், சூரியன் மேஷத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் கடக மானல் பலாபலன்களைச் சொல்லுவீர்களென்று பார்வதியம்மையார் கேட்கிருர்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும். மேஷத்தில் சனியும், மிதுனத்தில் சூரியனும், கடகத்தில் சுக்கிரனும் ராகுவும், சிம்மத்தில் சந்திரனும், துலாத்தில் அங்காரகனும், மகரத்தில் கேதுவும், கும்பத்தில் குருவும் புதனும் ஆகும்.

2. பிருகுமே புகலு கின்றுர் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
வருமில்லம்கீழ் மேல் வீதி வாசலும் வடக்குப் பார்வை
அரன்கோஷ்டம் தந்தி கீழ்ப் பால் அனல்காளி தென்பா லாகும்
நரிவாக னத்தாள் தோன்றும் நன்மாரி மேல்பால் தங்கும்.

---

[1] சந்திரன். [2] சிம்மம். [3] குரு. [4] துலாம். [5] இராகு. [6] சனி. [7] தனுசு. [8] அங்காரகன். [9] சுக்கிரன். [10] சூரியன்

2. பிருகு மகரிஷி சொல்லுகின்றார். பிறக்கும் குழந்தை ஆண் குழந்தை ஆகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தெரு வாயிற் படி வடக்குத் திக்கைப் பார்த்திருக்கும். சிவபெருமானுடைய கோயிலும் விநாயகக் கடவுளின் கோயிலும் கிழக்குத் திக்கிலும், உஷ்ணத்தையுடைய காளியம்மன் கோயில் தெற்குத் திக்கிலும், திரௌபதியம்மன் கோயில் தெற்கிலும், நல்ல மாரியம்மன் கோயில் மேற்குத் திக்கிலும் இருக்கும்.

3. இத்தகை அடையாளத்து ஙிறங்குவான் ஐந்தாம் ஜன்மம்
வித்தகன் கங்கை சேயாய் மேவுவா னென்று சொல்வோம்
பெத்ததாய்த் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோமிந் நூல் தன்னில்.

3. இப்படிப்பட்ட அடையாளங்கள் உள்ள ஊரில் ஜாதகர் ஐந்தாவது கர்ப்பத்தில் வேளாளர் குலத்தில் பிறப்பார் என்று சொல்லு கிறோம். இவரைப் பெற்றெடுத்த தாயார் தகப்பனார் இவர்களுடைய யோகங்களையும், மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம், பின் ஜன்மம் இவைகளையும் உண்மையாய் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம்.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சத்தியு மவ்வா றுகும்
முந்திய துணைவ னுக விளம்புவோமவன் குணத்தை
விந்தையாய் மனைவி யாலே நிகர்கிராமச் செட்டிச் செய்வன்
சந்ததம் கிருஷி யுண்டு தன் சுதராண்பால் ரண்டு.

4. ஜாதகருடைய தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் ஆவார்கள். இந்த ஆண் சகோதரர் மூத்த சகோதரராவார். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் ஆச்சரியமாய் மனைவி மூலமாகச் சிறப்பான கிராம வியாபாரம் செய்வார். இவருக்கு எப்போதும் விவசாயத் தொழிலும் உண்டு. இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் உண்டு.

5. அவைகளும் கரங்கால் குற்றம் அறைகிறோம் பின்பால் சேதி
விதிக்கிறோம் பிதாகு ணத்தை விளைபுலம் விருத்தி செய்வன்
பதியது புதிதாய்ச் செய்வன் பாரினில் வறுமை காணன்
சதியிலா மனத்தா னுகும் தந்திர மொழியே கூறுவன்.

5. இந்த இரண்டு பிள்ளைக்கும் கைகால்கள் ஊனமாக விருக்கும்.* இனி மேல் ஜாதகருடைய தகப்பனரின் குணதிசயங்களைச் சொல்லுகிறோம். விளைகின்ற நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். வீட்டைப்புதியதாகக் கட்டுவார். கஷ்டங்களும் தரித்திரமும் பூமியில் இல்லாதவர். வஞ்சனை கபடு கள்ளம் இவைகள் இல்லாத மனத்தையுடையவர். பக்குவமாகவும் உபாயமாகவும் சாமர்த்தியமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார்.

* குறிப்பு.—பிதுர் மூத்த சகோதர ஸ்தானமாகிய பதினோராம் வீடாகிய மகரத்திற்குப் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாம் வீடாகிய ரிஷபத்திற்கு அதி பதியான சுக்கிரன் மூன்றில் 6-க்குடைய புதனுடன்கூடி மீனத்தில் உச்சமாகிச் சனி மகரத்திற்கு 9.ஆவது பாவமாகிய கன்னியைப்பார்க்கின்றார். மேலும் மூத்தசகோதரகாரகனாகிய குருவிற்குப் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாம் பாவமாகிய கும்பத்திற் குடைய சனி இராகுவுடன் கூடியிருக்கிறார். கும்பத்தை ராகுவும் அங்காரகனும் பார்க்கின்றார்கள். ஆகையால் மூத்த சகோதரனுடைய பிள்ளைகள் சுகமாக விருக்கமாட்டார்கள்.

6. புனர்பூசம் நந்தி ராசி பிறப்பனும் சல்லியம் கொள்ளான்
இனமதற் கினிய னுகும் இடரென்றோர்க் குதவி செய்வன்
சினமொன்றும் வெளிக் காட்டாதான் தேவியால் லாப முள்ளான்
மனதீர முடைய னுகும் மங்கையே கேட்டி டாயே.

6. ஜாதகருடைய தகப்பனர் புனர்பூச நட்சத்திரத்தில் ரிஷப ராசியில் பிறந்தவராயிருப்பார். கடன்பட மாட்டார். பந்துக்களுக்குப் பிரிய மானவர். கஷ்டப்படுகிறோம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபகாரஞ் செய்வார். கோபத்தை பிறருக்குத் தெரியும்படியாய் வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். இவருக்குத் தன்னுடைய மனைவியால் லாப முண்டாகும். தைரியமான மனத்தையுடையவர். பார்வதி யம்மையே ! கேட்பீராக.

7. உண்டியில் வறுமை காணன் உண்மையாம் மனத்தா னுகும்
தண்டமிழ் நுணுக்கம் தேரான் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
பண்டுநாள் பூமி விருத்தி பதர்சொல்லான் பெரியோர் நேயன்
துண்டமாய்க் கூறு னுகும் திருப்பணி வேலை செய்வன்.

7. தகப்பனர் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டப்படாதவராவார். உண்மையான நல்ல மனத்தையுடையவர். தமிழ்ப்பாஷையின் புத்தி நுட்பமான விஷயங்களை அறியாதவர். கால்நடைகளின் விருத்தி யுடையவர். பழைய காலத்திய நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். பலனில்லாததையும், அற்பமானதையும், அறிவீனமானதையும் சொல்ல மாட்டார். பெரிய மனுஷர்களுடைய சினேகத்தையுடைவராவார். கண்டிப்பாய் வெட்டி கடினமாய்ப் பேசமாட்டார். கோயில்களில் கடவுளுடைய வேலைகளையும் தொண்டுகளையும் செய்வார்.

8. சொல்லிய குணத்தா னுக்குத் சுதனுமே யுதிப்பா னுகும்
வல்லவன் குணத்தைச் சொல்வேன் வாக்கது சுத்த முண்டு
வெல்லும்சொல்லுடைய னுகும் வித்தையு மதிகம் கற்பன்
தல்லியால் பெறுமை யேற்பன் தனமிக வுடையனுகும்.

8. இங்கு சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனருக்கு ஜாதகர் பிள்ளையாகப் பிறப்பாராகும். இனிமேல் இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். சுத்தமான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார். தான் சொல்லுவதையே உண்மை என்று நிரூபித்து ஜயிக்குந் தன்மை யுடையவராவார்; அல்லது பிறரைத் தன் வசப்படுத்திக் கொள்ளும்படியாகப் பேசுந்திறமை யுடையவர். அதிகமான கல்வியைப் படிப்பார். தாயாரால் மேன்மையையும் சிறப்பையும் அடைவார். அதிக செல்வம் உடையவராவார்.

9. நினைத்தகா ரியமுடிப்பன் நிஷ்டூர் வசனம் கூறான்
வினைசெய்யான் யாவருக்கும் வினைபுலம் விருத்தி செய்வன்
கனமுள குடும்ப மேற்பன் கணக்கினிலுகை வானும்
பணியோர்கள் விருத்தி செய்வன் பரவுபகார னுமே.

9. ஜாதகர் தான் செய்ய எண்ணின காரியத்தைப் பூர்த்தி செய்து முடிப்பார். விரோதத்தை உண்டு பண்ணக்கூடிய கொடுமையான இடையூறான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். யாருக்கும் கெடுதியைச் செய்ய மாட்டார். நன்றாய் விளைகின்ற நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். மேன்மையான குடும்பத்தையுடையவராவார். கணித வித்தையில் நுட்பமான புத்தியை யுடையவர். பயிரிடும் நிலங்கள் ஏர்வகையராக்கள் ஆகிய இவைகளை அதிகப்படுத்துவார். பிறருக்கு உதவி செய்யுந் தன்மை யுடையவராவார்.

10. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ முன்பெண் ஒன்று
நவனியில் தீர்க்க மெய்தும் நவிலுவோ மவள்கு ணத்தைத்
தவசிகட் கன்ன மீவள் சத்பாத்திரி யோக சாலி
சிவதொண்டு புரிவா ளாகும் சீக்கிர கோபம் கொஞ்சம்.

10. ஜாதகருடைய சகோதரங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு முன்னே ஒரு பெண் சகோதரி பூமியில் நீண்ட ஆயுளையுடையவளாக விருப்பாள். இவளுடைய குணங்களைப் பற்றிச்சொல்லுகிறோம். தவம் செய்கிறவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடுபோடுவாள். நன்றாகத் தகுதியாக ரட்சிக்கக்கூடியவள். யோகமுடையவள். சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் பக்தியுடன் தொண்டு செய்வாள். இவளுக்குக் கொஞ்சங் கோபம் சீக்கிரத்தில் உண்டாகும்.

11. பால்பாக்கிய முடையா ளாகும் பணிதிபாத் திரங்கள் சேர்ப்பள்
ஞாலம்மேல் நல்லோ ளாவள் நலிந்தோரை ஆத ரிப்பள்
சீலியாம் விரத மேற்பள் சிறப்புள குடும்பியாவள்
காலத்தை அறிந்து ரைப்பள் காதலி கேட்டி டாயே.

11. ஜாதகருடைய மூத்த சகோதரி பால் பாக்கிய முடையவளாவாள், அஃதாவது இவளுக்குப் பசுக்கள் விருத்தியாகும். ஆபரணங்களையும் பாத்திர சாமான்களையும் சேகரிப்பாள். பூமியில் நல்லவளாக விருப்பாள். ஏழைகளையும் மெலிந்தவர்களையும் காப்பாற்றுவாள். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையும் உடையவள். விரதங்களை அனுஷ்டிப்பவள். மேன்மையான கௌரவமான குடும்பத்தையுடையவள். காலத்தைத் தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற்போல பேசுவாள். பார்வதியம்மையே கேட்பீராக.

12. மங்கையும் போன பின்பு வரனுக்கு யோக மெய்தும்
பொங்கிய குடும்ப மெய்தும் புருடனும் மேல்பால் நேரும்
நங்கைக்குச் சுதர்கள் சொல்வேன் நல்கிடு மாண்பால் ரண்டு
பங்கைய முகத்தாள் மூன்று பருகிடும் தீர்க்க மாக.

12. இவள் தன்னுடைய புருஷனிடம் போய்ச் சேர்ந்தபிறகு புருஷனுக்கு யோகமுண்டாகும். தன்னுடைய குடும்பம் நாளுக்கு நாள் விருத்தியாகி மேன்மையை அடையும். இவளுக்குப் புருஷன் மேற்குத் திக்கிலிருந்து வருவான். இவளது சந்ததிகளைப்பற்றிச் சொல்லுகிறேன், ஆண் குழந்தைகள் இருவரும் தாமரை மலரைப்போல் அழகான முகத்தை யுடைய பெண்கள் மூன்று பேரும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

13. மாதுக்கு வயது தீர்க்கம் மைந்தன் பின்கன்னி ஒன்று
தீதிலா ஆண்பாலொன்று செப்புவோம் தீர்க்கமாக
ஓதுவேன்பின் பால் சேதி உதிதத்வன் மனத்தின் காலம்
மேதினில் மூவைந்தாண்டில் மேல்திசை பாரி வாய்க்கும்.

13. இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு. ஜாதகருக்குப் பின்னால் ஒரு பெண் சகோதரமும் குற்றமில்லாத ஓர் ஆண் சகோதரமும் நீண்ட ஆயுளையுடையவர்களாய் இருப்பார்கள் என்று சொல்லுகிறோம். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறோம். ஜாதகருக்கு விவாகம் நடக்கின்ற காலத்தைச் சொல்லுகிறோம். இவருக்குப் பதினைந்தாவது வயதில் மேற்குத் திக்கிலிருந்து மனைவி வந்து நேரிடுவாள்.

குறிப்பு.—விவாக காலம். ஜாதகருக்கு வயது 14-0-0 முதல் ௵ 15-0-0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் சனி புதன் புக்திகள் நடக்கின்றன. நைசர்க்கிக சுபக் கிரகங்கள் கேந்திர கோணங்களிலும். சந்திரன் இரண்டிலும் இருப்பதால் இளம் பிராயத்தில் விவாகம் நடக்கக்கூடிய அமைப்பு இருக்கிறது. போக ஸ்தானமாதிய நான்கிற் குடையவரும் களத்திரகாரகனுமாகிய சுக்கிரன் ஒன்பதில் இருக்கின்றார். ஆகையால் விவாகம் செய்து வைக்கும் அமைப்பு இவருக்கு இருக்கின்றது. சனி ஏழிற் குடையவராகி போககாரகனுகிய ராகுவுடன் கூடி இருக்கின்றார். ஆகையால் சனிக்குத் தன் புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு இருக்கிறது.

14. கன்னிகை குணத்தைச் சொல்வேன் கணவனுக்கினிய ளாகும்
பன்னியே பேச வல்லாள் பர்த்தாவின் மனத்துக் கேத்தோள்
பொன்பணி யிச்சை யுண்டு பொய்யது வழுத்தா நெஞ்சம்
பின்னமில் லாததேகி பெரியோர் போல் வார்த்தை சொல்வள்.

14. ஜாதகருடைய மனைவியின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள்தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள். சுருக்கமாகவும் திறமையாகவும் பேசுஞ் சாமர்த்திய முள்ளவள். புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளக் கூடியவள். தனம் ஆபரணம் இவைகளின் மேல் இவளுக்கு ஆசையுண்டு. பொய்யானதைச் சொல்லக்கூடாத மனத்தை உடையவள். தன்னுடைய தேகத்தில் யாதொரு அவயவ பங்கமும் குறைவும் இல்லாதவள். பெரிய மனுஷர்களைப்போல வார்த்தைகளைச் சொல்லுவாள்.

15. மாநிறம் உளேச்சல் தேகி வருவோரை ஆத ரிப்பள்
இன்னலருறவு கொள்ளா ளிடரென்றோர்க் குதவி செய்வள்
மானமாய்ச் ஜீவிப்பா ளாம் வயதுமே தீர்க்க மென்றேம்
பான்மையாய்ப் பிருகு சொல்லப் பராசரும் தடுத்துச் சொல்வார்.

15. மனைவி மாநிறமுள்ள மெலிந்த ஒல்லியான தேகத்தையுடையவள். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள். தீமையையும் துன்பத்தையும் உண்டு பண்ணுகிறவர்களிடம் சினேகஞ்செய்து கொள்ளமாட்டாள். கஷ்டங்கள் இருக்கின்றன வென்று சொல்லுகிறவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு ஜீவனம் செய்து வருவாள். இவளுக்கு நீண்ட ஆயுள் உண்டு என்று சொல்லுகிறேம். இத்தன்மையாகப் பிருகுமக ரிஷி சொல்ல, பராசரமுனிவரும் தடுத்துச் சொல்லுகின்றார்.

16. எப்படி வயது தீர்க்க மியம்புவீ ரந்தச் சங்கை
மெய்ப்புன் மதியும்[1] ரெண்டில் வேந்தனும்[2] நாலில் தங்கச்
செப்பினேன் வயது தீர்க்கம் ஐயமுனி தடுத்துச் சொல்வார்
அப்படிச் சொல்லொ ணுது அவனுக்குத் தாரம் ரெண்டு.

16. மனைவிக்கு எந்த விதத்தில் நீண்ட ஆயுள் உண்டு. அந்தக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, மெச்சிக் கொள்ளக்கூடியதாய், அஃதாவது வலுவாய்ச் சந்திரன் இரண்டில் இருப்பதாலும் குருவும் நாலில் இருப்பதாலும் மனைவிக்கு நீண்ட ஆயுள் உண்டு என்று சொன்னேன் என்று பிருகுமகரிஷியானவர் சொல்ல, அதற்கு ஐயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். அவ்விதமாகச் சொல்லச்சாத்தியப்படாது. ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் ஏற்படுவார்கள்.

17. காரணம் யாது என்னக் காரியும்[3] ஏழோ னுகி
ஆறினி லிருப்ப தாலே அவனுடன் பணியும்[4] கூடிப்
பார்மகன்[5] ஏழைப் பார்க்கப் பகர்ந்தனம் தாரம் ரண்டு
தீரமாய் இரண்டு தாரம் தீர்க்கமோ விரயமோ சொல்.

17. இதற்குக் காரணங்கள் என்ன என்று கேட்க, சனி ஏழாம் பாவாதிபதியாகி ஆறுவது வீட்டில் இருப்பதாலும் இந்தச் சனியுடன் இராகுவும் கூடி இருப்பதாலும் அங்காரகன் ஏழாவது வீட்டைப் பார்ப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள் என்று சொல்லுகிறேம் உறுதியாய்ச் சொல்லுகின்ற இவ்விரண்டு மனைவிமார்களும் நீண்ட ஆயுளை யுடையவர்களாவார்களா அல்லது இறந்து விடுவார்களா என்பதைச் சொல்லுவீர்.

18. முதல்மனை கர்ப்பத் தாலே மடிவளாமடுத்த மாது
சதமுடன் தீர்க்க மென்றேம் சாற்றுவீர் காலம் தன்னைச்
சுதனுக்கு முப்ப தாண்டில் சோர்வுறும் முதல்ம ஊனத்தான்
ஆருண்டில் வேறு மாது அணுகிடுமென்று சொல்வோம்.

1. சந்திரன். 2. குரு.

குறிப்பு.—3 சனி ; 4 இராகு ; 5 அங்காரகன்.

18. ஜாதகருக்கு முதல் மனைவி கர்ப்பந்தரித்து அதனுல் அவள் இறந்து விடுவாள். இரண்டாவது மனைவி நீண்ட ஆயுளையுடையவள் என்று சொல்லுகிறேம் என்று சொல்லவே, இவ்விதமாக நடக்குங்காலத்தைச் சொல்லுவீரென்று கேட்க, ஜாதகருக்கு முப்பதாவது வயதில் முதல் மனைவி இறந்து விடுவாள். பிறகு ஆருவது வருஷத்தில் இன்னொரு மனைவி வந்து சம்பவிப்பாள் என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—முதல் மனைவி மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ருப 29–0–0 முதல் ருப 30–0–0 வரையினும் சந்திர தசையில் சனிபுக்தி நடக்கின்றது. முதல் மனைவி லக்கினம் ஏழாவது வீடாகிய மகரம் ஆகும். இதற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகைகளின் பிரகாரம் சந்திரன் மாரகாதிபதி ஆகிறார். இந்தச் சந்திரன் மகரத்திற்கு மாரக ஸ்தானமாகிய எட்டாவது வீட்டில் இருக்கின்றார். சனி மகரத்திற்கு இரண்டிற்குடையவராகி பன்னிரண்டாவது வீட்டில் ராகுவுடன்கூடி மூல நட்சத்திரத்தில் பாபியான கேது காலில் இருக்கின்றார். மேலும் இவர் களத்திரத்திற்கு லக்கினதிபதி யாகிறார். ஆகையால் துய்யகோளம் எட்டாவது பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் சனி தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உள்ளவராக விருக்கின்றார். ஐந்திற்கு, அஃதாவது புத்திரஸ்தானத்திற்கு அதிபதியான அங்காரகன் ஏழை பார்ப்பதால் கர்ப்பத்தால் மனைவிக்குக்கஷ்டம் நேரிடும் அமைப்பு இருக்கிறது. இரண்டாவது மனைவி லக்கினம் மீனம் ஆகும். மீனத்திற்குடைய குருவையும் போகஸ்தானமாகிய நான்கையும் அங்காரகன் பார்ப்பதால் 36-ஆவது வயதில் அங்கார தசையில் குரு புத்தியில் இரண்டாவது மனைவி வருவாள்.

19. பின்மாது குடகில் நேரும் பேசுவோம் சுதர் பலத்தைக்
கன்னிகை மூன்று மாகும் காளைகள் ளிரண்டு என்றேம்
முன்மனை தனக்குப் புத்திரர் மொழிகிறேம் கன்னி ஒன்று
சொன்னது ஆறும் தீர்க்கம் துறவியே கேட்டி டாயே.

19. ஜாதகருக்கு இரண்டாவது மனைவி மேற்குத் திக்கிலிருந்து வருவாள். இனிமேல் புத்திரபலத்தைப்பற்றிச்சொல்லுகிறேம். இரண்டாவது மனைவிக்கு மூன்று பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் உண்டாவார்கள் என்று சொல்லுகிறேம். முதல் மனைவிக்குக் குழந்தைகளைச் சொல்லுகிறேம். இவளுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. முதல் மனைவிக்கு ஒரு குழந்தையும் இரண்டாவது மனைவிக்கு ஐந்து குழந்தைகளும் ஆக மொத்தம் ஆறு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். பார்வதியம்மையே ! கேட்பீராக.

20. பாலகன் பூர்வம் தன்னைப் பகருவே னினி மேலாக
வேலங்காட் டதனிலேதான் மேவினுள் இக்கு லத்தில்
ஞாலங்கள் விருத்தி செய்து நாயகி மதலை யுண்டாய்ச்
சாலவே வாழுந் நாளில் தங்கின வினையைக் கேண்மோ.

20. இனிமேல் ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச்சொல்லுகிறேன். திருவாலங்காட்டில் இந்த ஜன்மத்திற் பிறந்த வேளாளர் குலத்திலேயே இவர் பிறந்தார். நிலங்களைப் பயிரிட்டுக்கொண்டு மனைவி மக்கள் இவர்களை

யுடையவராகி நன்ருக வாழ்ந்து வருகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகிறேம், கேட்பீராக.

21. தன்பாரி தங்கை தானும் தன்வரன் மாண்டு மேதான்
தன்னில்லம் விரவும் போது மாதுமேல் மோகங் கொண்டு
கன்னிகை போகம் செய்யக் கலந்தது கருவு தானும்
பின்னங்கள் செய்தா னென்றேம் பேதையும் கருவால் மாண்டாள்.

21. ஜாதகருடைய மனைவியின் தங்கை தன்னுடைய புருஷன் இறந்துவிட, ஜாதகருடைய வீட்டில் வந்து தங்கி இருக்கும்போது அவள் மேல் காம ஆசையை உடையவராகி இவர் அவளிடத்தில் சம்போகஞ் செய்தார். அதன்மேல் அவளுக்குக் கர்ப்பம் நேரிட்டது. அதனுல் இவர் அந்தக் கர்ப்பத்திற்குக் கெடுதிகளைச் செய்தார் என்று சொல்லுகிறேம். அதனுல் அவளும் கர்ப்பத்தாலே இறந்துபோய்விட்டாள்.

22. அது ஒரு தோஷ மாச்சு அறைகிறேம் வேறு ஒன்று
சதிசெய்தான் ஏழையோரைச் சாற்றுவார் சாபம் தானும்
நிதியது கொஞ்சம் தந்து நேசத்தைப் பரித்த பாவி
உதவாது உன்தன் பாரி உதிக்கும்பின் ஜன்மம் தன்னில்.

22. அ∴து ஒரு தோஷமாகும். இன்னெரு தோஷத்தைச் சொல்லுகிறேம். ஜாதகர் ஏழை ஜனங்களுக்குக் கெடுதியையும் மோசத்தையுஞ் செய்தார். அவர்கள் சாபத்தைக் கொடுத்தார்கள். பணம் கொஞ்சமாகக் கொடுத்து அன்பை அபகரித்த பாவியாகிய உனக்கு மறு ஜன்மத்தில் உன்னுடைய மனைவி உனக்கு உதவமாட்டாள், உயிருடன் இருக்க மாட்டாள்.

23. இருமனை நேரு மென்றேம் இனமதில் நிந்தை வார்த்தை
பெருகுடும்ப மென்று சொல்லிப் பேசினுர் அதனுல் தோஷம்
இருவித தோஷம் தானும் இவன்தனைப்பற்றி யேதான்
மாலியின் நாடடைந்து மறையவன் வரையப்பட்டு.

23. உனக்கு இரண்டு மனைவிகள் ஏற்படுவார்கள் என்று சொல்லுகிறேம். எங்களுடைய பந்துக்களிடத்தில் நீ பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று பொய்யான வார்த்தையைச் சொன்னீர் என்று சொல்லி அவர்கள் சாபங்கொடுத்தார்கள். அ∴து இன்னெரு தோஷமாகும். இந்த இரண்டு வித சாபங்களும் தோஷங்களும் இவரை வந்தடைந்து பிறகு இவர் இறந்து எமபட்டிணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் எழுதப்பட்டு.

24. உதிப்பனு மென்று சொல்வோம் உறைந்திடு மென்று சொல்வோம்
சதிசெய்த கருவின் தோஷம் தங்காது முதல்ம னேதான்
அதுதீரச் சாந்தி யொன்று அறிவீர்பீர் முனியே நீர்தாம்
அசாந்தி செய்தா லும்தான் விலகாது என்று சொல்வோம்.

24. ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகிறேம். முன் ஜன்மத்தில் கருவைக்கெடுத்தத் தோஷம் இந்த ஜன்மத்தில் வந்து இவரை அடையும் என்று சொல்லுகிறேம். அதனுல் இவருக்கு முதல் மனைவி தங்கி இராமல் இறந்துபோய் விடுவாள். இந்தத் தோஷம் நிவர்த்தியாவதற்கு ஒரு சாந்தியை, முனிவரே! நீர் சொல்லுவீர் என்று கேட்கவே, எந்த விதமான சாந்தியைச் செய்தாலும் அந்தத் தோஷமானது இவரைவிட்டு நீங்கிப் போகாது என்று சொல்லுகிறேம்.

25. வந்தது வந்தே தீரும் மறுமனை தீர்க்க ஜீவி
இந்தவன் யோகச் சேதி யியம்புவோ மினிமே லாகத்
தந்தைக்குத் தாழ்வு ருதான் தனமது பெருக்கம் செய்வன்
சொந்தமாய்ப் பூமி சேர்ப்பன் துரைராசர் பேட்டிகொள்வன்.

25. இவரை வந்து அடைந்த தோஷமானது இவருக்கு நேரிடுமே தவிர இவரைவிட்டு விலகாது. இரண்டாவது மனைவி நீண்ட ஆயுளையுடையவள். ஜாதகருடைய யோக விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகிறேம். இவர் தன்னுடைய தகப்பனுருக்குக் குறைந்த அந்தஸ்துடையவராயிருந்து வாழமாட்டார். செல்வத்தை அதிகப்படுத்துவார். சுயார்ஜிதமாய்ப் பூமிகளைச் சேகரிப்பார். பெரிய மனுஷர்கள், அரசர்கள் இவருடைய தரிசனத்தை அடைவார்.

26. பிரபல புகழு மேற்பன் புண்ணிய மனத்தா னும்
பொருள்சிலர்க் குஉ தவிசெய்வன் புண்ணிய மனத்தா னும்
அரன்பத்தி தொண்டு செய்வன் அவன்தந்தை புகழ இன்னேன்
திருமகன் தனக்கு யோகம் செப்பின காரணம் சொல்.

26. ஜாதகர் அதிகப் பரவலான கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். புண்ணியஞ் செய்கின்ற நல்ல மனதையுடையவராவார். சிவ பெருமான்மேல் பக்தி உடையவராய் அவருக்குத் தொண்டும் பணியும் செய்வார். இவருடைய தகப்பனுர் இவரைப்பற்றிப் புகழ்ந்து பேசுவார். இவருக்கு யோகத்தைச் சொல்லியதற்குக் காரணங்களைச் சொல்லுவீர்.

27. பானுவும்[1] புகரு[2] முச்சம் பாக்கியம் தசமம் தன்னில்
கரன்முடவன்[3] ராகு ஆறில் கலைமதி[4]யிரண்டில் தங்கப்
பான்வியாய் பர்வத யோகங்கள் பகர்ந்தனம் பால னுக்குத்
தேன்மொழி மாது சேர்வள் தேடுவான் மூவாயி ரம்பொன்.

27. சூரியனும் சுக்கிரனும் உச்சமாகிப் பத்திலும் பாக்கிய ஸ்தானமாகிய ஒன்பதிலும், சனியும் ராகுவும்கூடி ஆறுவது பாவத்திலும், வளர்பிறைச் சந்திரன் இரண்டாவது பாவத்திலும் இருப்பதால் ஜாதகருக்குப் பர்வத யோகங்களைச்* சொல்லுகிறேம், தேனைப்போல இனிமையான வார்த்தைகளைச் சொல்லுகிற ஒரு ஸ்திரீ ஜாதகரிடம் வந்து சேருவாள். இவர் மூவாயிரம் பொன் மதிப்புள்ள தனத்தைச் சம்பாதிப்பார்.

[1] சூரியன். [3] சனி.
[2] சுக்கிரன். [4] சந்திரன்.

*குறிப்பு—பர்வதயோகம்.—இந்த யோக விஷயமாய் ஜாதக பாரிஜாதம் 7-ஆம் அத்தியாயம் 128-ஆவது சுலோகத்தையும், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 31-ஆவது, 32-ஆவது சுலோகங்களையும், ஜாதகசாரதீபிகை 62-ஆவது அத்தியாயத்தையும், ஜாதகாலங்காரம் 297-ஆவது, 303-ஆவது, 304-ஆவது பாடல்களையும், ஜாதக சிந்தாமணி 2150-ஆவது, 2151-ஆவது, 2152-ஆவது பாடல்களையும், சதயோகமஞ்சரியையும் பார்க்கவும். இங்கு லக்கினாதிபதியாகிய சந்திரன் இருக்கின்ற சிம்மத்திற்கு அதிபதியாகிய சூரியன் உச்சமாயிருப்பதாலும் கேந்திரத்தில் இருப்பதாலும் பர்வத யோகமுண்டு. லக்கினாதிபதியாகிய சந்திரன் இருக்கிற அம்சாதிபதியாகிய சூரியன் கேந்திரத்தில் இருப்பதாலும் யோகமுண்டாகிறது. மூன்று கேந்திரங்களில் அங்காரகன் குரு சூரியன் இருப்பதாலும் இந்த யோகம் உண்டாகிறது. (சில கிரந்தங்களில் நான்கு கேந்திரங்களிலும் . . . . கிரகங்கள் என்றிருக்கிறது.) தனாதிபதியாகிய சூரியனும் லாபாதிபதியாகிய சுக்கிரனும் உச்சமாயிருப்பதால் இந்த யோகமுண்டாகிறது.

28. எதிர்த்தோரை நசிக்க வைப்பனிரு இல்லம் செய்வா னாகும்
மதிமுக மாதுர் சேதி யறிப்போ மினிமே லாகத்
துதிசெய்தோர்க் குதவி செய்வள் சோம்விடாள் காரி யத்தில்
சதியிலா மனத்தா ளாகும் தாயாஸ்தி கொஞ்சம் நேரும்.

28. ஜாதகர் தன்னுடைய எதிரிகளைத் தோற்றுப்போகும்படியாய்ச் செய்வார். இரண்டு வீடுகளைக் கட்டுவார். இனிமேல் சந்திரனைப்போல அழகான முகத்தையுடைய தாயாரின் குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவள் தன்னைப் போற்றிப் பேசினவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். தான் செய்யுங்காரியங்களில் சோம்பலும் தளர்ச்சியும் இல்லாதவள். வஞ்சனை கபடம் கள்ளம் இவைகளில்லாத மனத்தையுடையவள். இவளுக்குத் தன்னுடைய தாயார் சொத்து கொஞ்சம் வந்து சேரும்.

29. இல்லமும் உள்ளூர் உத்தரம் இவன்துணை ஆண்பால் நஷ்டம்
வல்லிமார் மூவர் தீர்க்கம் வரைகிறோம் பின்பால் சேதி
தல்லியின் பூர்வம் சொல்வேன் தண்டகா வனத்தி லேதான்
புல்கினள் விச்வச் சேயாய்ப் புருடனும் மதலை யுண்டாய்.

29. ஜாதகருடைய தாயாரின் வீடு உள்ளூரிலேயே வடக்கில் இருக்கும். இவளுக்கு ஆண் சகோதரர்கள் பிறந்து இறந்து விடுவர். மூன்று சகோதரிகள் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகிறோம். இவருடைய, அஃதாவது ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். தண்டகாரண்ணியத்தில் விச்வகர்மர் குலத்தில், அஃதாவது கம்மாள ஜாதியில் பிறந்தாள். இவள் புருஷனையும் மக்களையும் அடைந்து.

30. அறத்தினி லிச்சை யுண்டாய் அந்தகன் நகரம் புக்கிப்
பிரமனால் வரையப் படப் பிறந்தன ளென்று சொல்வோம்
அரிவையும் வறுமை காணாள் ஆண்மையாய்க் குடும்பி யாவள்
திருகிலா குணத்தா ளாகும் அல்பமாம் பித்த வாயு.

30. தருமஞ் செய்வதில் ஆசையுடையவளாகி இறந்து எமனுடைய பட்டணத்திற்குப் போய்ப் பிறகு பிரமதேவனால் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவள் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். மேன்மையானதும் வலுவானதுமான குடும்பஸ்தையாவாள். கள்ளம், வஞ்சனை, கபடம் இவைகள் இல்லாத குணமுடையவளாவாள். பித்தவாயு கொஞ்சம் உடையவள் ஆவாள்.

31. கோபமும் கொஞ்ச முண்டு கோதை பின் ஜன்மம்கேளாய்
பாவங்கள் விலக்கு கின்ற பட்சியின் நகரம் தன்னில்
தாவுவான் பிர்ம்ம சேயாய்த் தடுத்துமே அத்திரி சொல்வார்
பாவையு மிச்சென்மத்தில் பகருமுன் கோபி யாயும்.

31. ஜாதகருடைய தாயார் கொஞ்சம் கோபத்தைமுடையவள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். கேட்பீராக. பாவங்களைப்போக்கடிக்கின்ற பட்சிஸ்தலம் என்கிற திருக்கழுக்குன்றத்தில் கடவுளுக்கு அடிமையாளாக விருந்த இவள பிராமணர் குலத்தில் போய்ப் பிறப்பாள். அத்திரி மகரிஷி தடுத்துக் கேட்கின்றார். இவள் இந்த ஜன்மத்தில் முன்கோபியாகவும்.

32. வரனுக்குச் சிலது வேளை மறுத்துமே சொல்வ தாலும்
பொருளின்மே லதிக இச்சை பேதையும் கொண்ட தாலும்
மறைக்குல முதிக்கு வண்ண மரீவிப்பீர் அந்தச் சங்கை
முருகன்தன் பத்தி யாயு முயர்வோர்க்கு அன்ன மீந்தும்.

32. சில சமயம் தன்னுடைய புருஷனுடைய சொல்லைத் தடுத்துப் பேசுவதாலும் பணத்தின்மேல் அதிக ஆசையை இவள் வைத்திருப்பதாலும் இவள் பிராமணர் ஜாதியில் பிறக்கும் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, இவள் முருகக் கடவுளின்மேல் பக்தியுடையவளாகிப் பெரியவர்களுக்கும் மேதாவிகளுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடுபோட்டு ;

33. மனமது கெடுதி யின்றி மங்கையும் வாழ்வ தாலே
கனமுள பிரம்ம சேயாய்க் கலப்பளா மென்று சொல்வோம்
சினமிலாத் தந்தை பூர்வம் செப்பு வோமினிமே லாக
வினைநீக்கும் வேளூர் தன்னில் மேவினன் வைசியச் சேயாய்.

33. கெடுதியான மனமில்லாதவளாகியும் இவள் வாழ்ந்து வருவதால் மேன்மையாள பிராமண குலத்திற்போய்ப் பிறப்பாள் என்று சொல்லுகிறோம். கோபமில்லாத தகப்பனுடைய முன் ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகிறோம். இவர் பாவங்களை நிவிர்த்தி செய்கின்ற வேளூர் என்கிற ஊரில் வைசிய குலத்தில் பிள்ளையாகப் பிறந்தார்.

34. பலவணி பங்கள செய்து பாருளோர்க் குதவி செய்து
குலவினன் காலன் னாடு குறைதலே வரையப் பட்டு
நலமுள இக்கு லத்தில் நல்கினன் வறுமை காணான்
தலைவன்பின் ஜன்மம் சொல்வேன் தணிகையில் க்ஷத்திரிய
[சேயாய்.

34. இவர் அநேக வியாபாரங்களைச் செய்து பூமியில் உள்ளவர்களுக்கு உபகாரஞ் செய்து இறந்து எமபட்டணம் போய்ச்சேர்ந்து பிரமதேவனால் எழுதப்பட்டு நன்மையான இந்த வேளாளர் ஜாதியில் வந்து பிறந்தார். இவர் கஷ்டமும் தரித்திரமும் இல்லாதவர். இவருடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் திருத்தணிகையில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாக.

35. வருகுவா னென்று சொல்வோம் மாரக காலம் கேளாய்
இருபது ஒன்ப தாண்டில் லேகுவான் தந்தை யென்றேம்
மர்மமாய் முப்பா றுறில் மறலியின் பதிக்கு அன்னை
உறைகுவா ளென்று சொல்வோம் உத்தமி கேட்டி டாயே.

35. பிறப்பார் என்று சொல்லுகிறேம். மாரக காலங்களைப் பற்றிச் சொல்லுகிறேம், கேட்பீராக. ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது* வயதில் தகப்பனுர் இறந்து போவார் என்று சொல்லுகிறேம். தயார் ஜாதகருக்கு முப்பத்தாறுவது† வயதில் திடீரென்று இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள் என்று சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

* **குறிப்பு—தகப்பனுர் மரண விஷயம்.**—ஜாதகருக்கு வயது வருஷம் 28 முதல் வருஷம் 29 முடியும் வரையிலும் சந்திர தசையில் குரு சனி புக்திகள் நடக்கின்றன. பிதுர் லக்கினமாகிய மீனத்திற்குச் சூரியன் சனி புதன் சுக்கிரன் இவர்கள் பராசரஹோரை பிரகாரம் மாரகராகின்றார்கள். சந்திரன் ஆறில் சூரியனுடைய வீட்டில் இருக்கின்றார். சனி பதினொன்றிற்கும் பன்னிரண்டிற்கும் உடையவராகி மாரகாதிபதியாகிப் பிதுர்ஸ்தானத்திற்குப் பத்தில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் சந்திரனுக்கு மாரக அமைப்பு வருகிறது. சனிக்கும் தன் புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது.

† **தாயார் மாரக விஷயம்.**—ஜாதகருக்கு வயது வருஷம் 35 முதல் வருஷம் 36 முடியும் வரையிலும் அங்காரக தசையில் ராகு குரு புக்திகள் நடக்கின்றன. மாதுர் லக்கினமாகிய துலாத்திற்குப் பராசரஹோரை சில பதிப்புப் பிரகாரம் அங்காரகனும், மற்றப் பதிப்புகள் பிரகாரம் குருவும் சூரியனும் மாரகராகின்றார்கள். அங்காரகன் மாரகஸ்தானங்களாகிய 2, 7-க்குடையவராய்ப் பத்தில் இருக்கின்றார். குரு 3–6-க்குடையவராய் மாதுர் லக்கினத்திலேயே இருக்கின்றார். ஆகையால் அங்கார தசையில் குரு புக்தியில் மாதாவுக்கு மாரக அமைப்பு இருக்கிறது. குமாரசாமியத்தையும் பார்க்கவும்.

36. அறுபது ஒன்று ஆண்டில் அழகிய மீன மாதம்
திருமகனுடலம் ஏகும் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
அருணைக்குத் தென்பா லாக அணுகிய சிறுவூர் தன்னில்
வருகுவான் சைவச்சேயாய் மங்கையே கேட்டி டாயே.

36. ஜாதகருக்கு அறுபத்தோராவது* வயதில் அழகான பங்குனி மாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் அழிந்துவிடும். இவருடைய

பின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். திருவண்ணமலைக்குத் தெற்குத் திக்கில் அதை அடுத்தாற்போலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். பார்வதி யம்மையே! கேட்பீராக.

* **குறிப்பு—ஜாதகருடைய மரண விஷயம்.**—ஜாதகருக்கு வயது வருஷம் 60 முதல் வருஷம் 61 வரையிலும் குருத்தசையில் குருபுக்தி நடக்கின்றது. பங்குனி மாதத்தில்கூட குருபுக்தி நடக்கிறது. கடக லக்கினத்திற்குப் பராசர ஹோரை, ஜாதகசந்திரிகை, தாண்டவமாலை, சந்திரகாவியம் இவைகளின் பிரகாரம் சுக்கிரன் சனி புதன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். குரு, சுக்கிரன் வீட்டில் இருக்கின்றார். மாரகாதிபதிகளாகிய சனியும் புதனும் குரு வீட்டிலேயே இருக்கின்றார்கள். ஆகையால் குருவிற்குத் தன் தசையில் சுயபுக்தியில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கிறது.

37. பிறந்திடுங் காலம் தன்னில் பூரத்தின் முதல்பா தத்தில்
சிறந்தசுக் கிரனி ருப்புச் செப்புவோ மீரொன் பதாண்டும்
உறைந்திடும் திங்கள் நாலும் உரைக்கிறேம் பலனை யாங்கள்
கருமமும் பெரிய தந்தை காதலி தன்னால் நிந்தை.

37. ஜாதகர் ஜெனனமாகுங்காலத்தில் பூரநக்ஷத்திரத்தின் முதலாவது பாதம் ஆகும். இதற்குரிய மேன்மையான சுக்கிரதசையில் இருப்பு நின்றது பதினெட்டு வருஷமும் நான்குமாதமும் ஆகும் என்று சொல்லுகிறேம். இந்தக்காலத்தின் பலாபலன்களைச் சொல்லுகிறேம். பெரிய தகப்பனுரின் கர்மம் நேரிடும். மனைவியால் பழி அவமானம் இவைகள் நேரிடும்.

38. முன்துணை ஜயமு மாகும் மேதினி விருத்தி யாகும்
தன்துணை பின்னால் விருத்தி சல்லியம் கொஞ்ச மெய்தும்
அன்னைபின் மனைசு பங்கள் அவனுக்குப் பிணிஅ நேகம்
இன்னமும் விவர மாக இயம்புவோம் புத்திர பாவம்.

38. மூத்த சகோதரனுக்கு ஜயம் கிடைக்கும், நிலங்கள் விருத்தியாகும். நல்ல பலனைத்தரும். ஜாதகருக்குச் சகோதரர்கள் பின்னால் உண்டாகும். விருத்தியாகும். கடன் கொஞ்சம் வந்து நேரும், முதலில் தாயருக்கும், பின்னால் மனைவிக்கும் சுபங்கள் உண்டாகும், ஜாதகருக்கு அநேக விதமான. நோய்கள்வரும், இனிமேல் புத்திரபாவத்தைப் பற்றி இரண்டாவது பாகத்தில் விபரமாகச் சொல்லுகிறேம்.

சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னேம்
குத்தங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய்.

சப்தரிஷிகளாகிய நாங்கள் சுத்தமாகவும் உண்மையாகவும் பலாபலன்களைச் சொல்லி இருக்கிறேம். நாங்கள் சொல்லியதில் ஏதாகிலும் தப்பிதங்கள் இருந்தால் அவைகள் எல்லாவற்றையும் பார்வதியம்மையே! பொறுத்தருளுவீராக.

ஜாதகம் 76

1. சந்திரன் மேட மாகச் சனி ராகு யிரவி[1] சாடி[2]
மந்திரி[3] மேரு[4]வாக மால்[5]புகர்[6] மான[7] தாகச்
செந்தீயும்[8] தேள்[9] தாகச் செம்பாம்பு[10] அரியில்[11] புக்க
இந்தவாறு கோள்கள் நின்று லக்கினம் வளைய லாக[12].

	சந்திரன்		
சூரியன் சனி ராகு	இராசி		லக்கினம்
சுக்கிரன் புதன்	சக்கரம்		கேது
குரு	அங்காரகன்		

அசுவினி 3-ஆம் பாதம். கேதுதசை ஞ்ப 3-5-0

1. சந்திரன் மேஷத்திலும், சனி ராகு சூரியன் இவர்கள் கும்பத்திலும், குரு தனுசிலும், புதனும் சுக்கிரனும் மகரத்திலும், அங்காரகன் விருச்சிகத்திலும், கேது சிம்மத்திலும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து லக்கினம் கடகமாக விருந்தால்.

குறிப்பு:—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச்சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும். மேஷத்தில் புதனும், மிதுனத்தில் சந்திரனும்,குருவும், சுக்கிரனும், கன்னியில் கேதுவும், தனுசில் சூரியனும், மகரத்தில் சனியும், மீனத்தில் அங்காரகனும் ராகுவும் ஆகும். மேலும் இந்த ஜாதகம் நெ. 74-வது ஜாதகத்தைப் பெரும்பாலும் ஒத்திருப்பதைக் கவனிக்கவும். செவ்வாய் ஒன்றுதான் வித்தியாசப்படுகிறது. அஃதாவது இரண்டு ஜாதகரும் பிறந்தவேளையில் சில விநாடிதான் வித்தியாசம் இருக்கிறது. இருப்புத்தசைகூட முழுமாதம் வரையிலும் ஒன்றுய்த்தான் இருக்கிறது. ஒரு மாதத்திற்குட்பட்ட நாட்களில்தான் அஃதாவது சொச்ச நாட்களில் தான் வித்தியாசம் இருக்கக்கூடும்.

[1] சூரியன் [2] கும்பம் [3] குரு
[4] தனுசு [5] புதன் [6] சுக்கிரன்
[7] மகரம் [8] அங்காரகன் [9] விருச்சிகம்
[10] கேது [11] சிம்மம் [12] கடகம்

2. சொல்லுவீர் பலனை யென்று சுந்தரி கேட்கும் போது
புல்குவார் பராசர் தானும் பிறந்தது ஆண்பா லாகும்
இல்லமும் கீழ்மேல் வீதி யெமன்வாடை மேற்கில் தந்தி
அல்லலை யகற்றும் மாயோன் அணுகிடும் கீழ்ப் பாலாக.

2. பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதி கேட்கும்போது பராசர முனிவர் சொல்லுகிறார். ஜனனமான குழந்தை ஆண்குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடையில் இருக்கும். மேற்குத்திக்கில் விநாயக்கடவுளின் கோயில் இருக்கும். கஷ்டங்களையும் தொல்லைகளையும் நிவிர்த்தி செய்கின்ற மகாவிஷ்ணுவின் கோயில் கிழக்குத்திக்கில் நெருங்கி இருக்கும்.

3. வடதிசை ஓடை சம்மான் மலையெடுத் தோனும் தென்கீழ்
திடமுள பேரூ ராகும் ஜகராஜர் வாச மாகும்
அடவுட னந்தி வாசம் அனேகசெட் டுகளு மோங்கும்
மடமுண்டு சோலை யுண்டு மஹாதீர்த்த மதிக முண்டு.

3. வடக்குத்திக்கில் ஓர் ஓடையின் வாராவதி இருக்கும். தென் கிழக்குத்திக்கில் அநுமார் கோயில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு முக்கியமான சிறந்த பெரிய பட்டணமாகும். அதில் பெரிய அரசர்கள் வாசஞ் செய்வார்கள். அதில் மாலைக்காலத்தில் தெருக்களில் காவலாகத் திரியும் ஒரு தேவதை வசித்துக்கொண்டிருக்கும். பலவிதமான வியாபாரங்களும் நடந்துகொண்டும் விருத்தியாகிக் கொண்டுமிருக்கும். அதில் ஒரு மடமும் தோப்பும் இருக்கும். பெரிய தீர்த்தங்கள் அநேகமிருக்கும்.

4. இன்னமும் பலதே வாச மியம்புவோம் பிருதிவிதன்னில்
அன்னவனுதிப்பா னுகும் அவன்தந்தை தாயின் யோகம்
தன்துணை களத்திர புத்திரர்சாற்றுவோம் முன்பின் ஜன்மம்
கன்னென மொழியினுளே காதலி கேட்டி டாயே.

4. இவைகளுமல்லாமல் அந்தப்பட்டணத்தில் அநேக தேசத்தார்கள் வாசஞ் செய்வார்கள். அது பிரிதிவிஸ்தலம் என்று சொல்லப்பட்ட காஞ்சீபுரம் ஆகும். அதில் ஜாதகர் பிறப்பார். இவருடைய தகப்பனர் தாயார் இவர்களுடைய யோகங்களைப் பற்றியும், இவருடைய சகோதரர்கள், மனைவி மக்கள் இவர்களைப்பற்றியும், முன்ஜன்மம், மறுஜன்மம் இவைகளைப்பற்றியும் சொல்லுகிறேம். இனிமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

5. தந்தையின் துணைவர் ஒன்பான் சாற்றினே மாண்பா லைந்து
வந்திரும் கன்னி ரண்டு வரைந்தனம் தீர்க்க மாக
அந்தவர் வேறுய்ச் செல்வர் அவர்களில் ஒருவன் ஒன்றுய்த்
தந்தைபா லுடனி ருந்து தானவன் வேறுய்ச் செல்வன்.

5. ஜாதகருடைய தகப்பனரின் சரோதரர்கள் ஒன்பது பேர் என்று சொல்லுகிறேம். இவர்களில் ஆண் சகோதரங்கள் ஐந்துபேரும் பெண்

சகோதரங்கள் இரண்டுபேரும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். அவர்களில் நான்கு சகோதரர்கள் வேறு குடும்பமாகப்போய் வசிப்பார்கள். ஒரு சகோதரன் மாத்திரம் தகப்பனுருடன் கூட சிறிது காலம் இருந்து பின்னுல் பிரிந்துபோய் வேருக விருந்து ஜீவிப்பான்.

6. அவனுடைய சேதி யெல்லா மறைகிறேம் பின்பா கத்தில்
இவன்தந்தை குணத்தைச் சொல்வே னிருநிற முடைய னுவன்
நவனியி லுகை சாலி நயம்படக் கூறு வானும்
தவசிக ளுறவு கொள்ளான் தானவ னுயர மில்லான்.

6. அவருடைய விஷயங்களைப் பற்றி அடுத்த பாகத்தில் சொல்லுகிறேம். ஜாதகருடைய தகப்பனுரின் குண குணங்களைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் இரண்டு நிறங்கள் கலந்த நிறமுள்ள தேகத்தை யுடையவராவார். பூமியில் இவர் புத்திநுட்பமுடையவர். இனிமையாகப் பேசுவார். முனிவர்களுடையவும் தவத்தைச் செய்பவர்களுடையவும் சினேகிதத்தை அடையமாட்டார். இவர் உயரமாய் இருக்கமாட்டார்.

7. நல்லோர்க்கு நல்ல னுவன் நற்கல்வி யடக்க முள்ளான்
அல்லலென் றேரைக் காப்பன் அவனியில் கீர்த்தி ஏற்பன்
இல்லறம் புதிதாய்ச் செய்வ னின்பமாய் வார்த்தை சொல்வன்
சொல்லதைக் காப்பா னுகும் தொல்புவி அதிகம் சேர்ப்பான்.

7. தகப்பனுர் நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். நல்லபடிப்பு உள்ளவர், அடக்கமாக விருப்பார். துன்பத்தை அடைந்திருக்கின்றேம் என்று சொல்லிக் கொள்ளுபவர்களைக் காப்பாற்றுவார். பூமியில் புகழை அடைவார். வீட்டைப் புதியதாய்க் கட்டுவார். இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவார். தான் சொல்லிய வார்த்தைகளைத் தவருமல் காப்பாற்றுவார். பழைய நிலங்களை அதிகமாகச் சேகரிப்பார்.

8. வண்டிவா கனமு முள்ளான் வணிபங்கள் செய்வா னுகும்
துண்டமாம் குணங்க ளில்லான் துராசையுங் கொஞ்ச முள்ளான்
குண்டுணி கலகா் கொஞ்சம் கூறுவான் வறுமை யில்லான்
பண்டுநாள் வறுமை யுள்ளான் பந்தினர் மெச்ச வாழ்வன்.

8. ஜாதகருடைய தகப்பனுர் வண்டி முதலிய வாகனம் இவைகளை உடையவராவார். வியாபாரங்களைச் செய்வார். கடினமாயும் கண்டிப்பாயும் வெட்டி வெட்டிப் பேசுங்குணங்கள் இல்லாதவர். கொஞ்சங் கெட்ட ஆசையை யுடையவர். கொஞ்சங் கோள் சொல்லுவார். கொஞ்சங் கலகத்தையுண்டு பண்ணக் கூடிய வார்த்தைச் சொல்லுவார். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையாதவர். பழைய காலத்தில், அஃதாவது இளம்பிராயத்தில் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடைந்தவர். பந்துக்கள் இவரைப் போற்றும்படியான நிலைமையிலிருந்து மேன்மையாக வாழ்வார்.

9. சொன்ன இக்குணத்தா னுக்குச் சுந்தரனு திப்பா னுகும்
அன்னவன் துணைஆண் ஒன்று அதுவின்றிக் கன்னி அவ்வாறு
இன்னவாறு விருத்தி யென்றே மிவன்துணை மூத்தோ னுகும்
தன்னிலே அவன்கு ணத்தைச் சாற்றுவோம் கேளும் தாயே.

9. இங்கு சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருக்குச் சகோதரர்களில் ஆண் சகோதரம் ஒருவரும் பெண் சகோதரம் ஒருத்தியும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறேம். இவருடைய சகோதரன் மூத்த சகோதரராவார். இந்த மூத்த சகோதரருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

10. கல்விமா னுகசாலி கனத்ததோர் புத்தி யுள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டானீ கைவான் வெகுளி யாவன்
நல்லவன் நல்ல வற்கு நற்றெய்வ பத்தி மானும்
மல்லுக்குச் செல்லா னுகும் மாநிலம் விருத்தி செய்வன்.

10. மூத்த சகோதரர் படித்தவர். நுட்பமான புத்தியையுடையவர். பெருந்தன்மையான புத்தியையுடையவராவார். யாருக்கும் இல்லை என்று சொல்லமாட்டார். பிறருக்குக் கொடுக்குந்தன்மையுடையவர். கோபத்தை யுடையவராவார். நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். நல்ல தெய்வபக்தியுடையவராவார். சண்டைக்குப் பேகமாட்டார். பெரிய நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார்.

11. செட்டுகள் பலவாய்ச் செய்வன் செய்ந்நன்றி மறவா னுகும்
துட்டமாம் குணங்களி ல்லான் துறவிபோல் வாழ்வா னுகும்
கட்டங்க ளடைவா னுகும் காலாள்களுடைய னுகும்
இட்டகாள் அதிக முள்ளா யெதிரிக்கு அஞ்சா னுகும்.

11. மூத்த சகோதரர் அனேகவிதமான வியாபாரங்களைச் செய்வார். பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறக்காதவராவார். கெட்ட குணங்களில்லாதவர். எல்லாவற்றையும் துறந்து விட்டவரைப் போலவும் சந்நியாசிகளைப்போலவும் வாழ்வாராவர். துன்பங்களை அனுபவிக்கமாட்டார். கால் நடைக்கார வேலையாட்களையுமுடையவராவார். சிநேகிதர்கள் அதிகமாக வுள்ளவர். தன்னுடைய விரோதிக்குப் பயப்படமாட்டார்.

12. பாரியை ஒன்றே யாகும் பாவையு மவ்வு ராகும்
நாரிக்குப் புத்திர தோஷம் நவனுவோம் பெண்பால் ரெண்டு
தீராமய் விருத்தி யென்றேம் சேயனும் ஒன்றய் வாழ்வன்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

12. மூத்த சகோதரருக்கு ஒரே ஒரு மனைவியுண்டு, அவள் உன்ளூரிலேயே இருந்து வருவாள். இவளுக்குப் புத்திரதோஷம் † உண்டு; இரண்டு பெண் குழந்தைகள் நீண்ட ஆயுளையுடையவர்கள் என்று உறுதி

யாய்ச் செல்லுகிறோம். மூத்த சகோதரன் ஏககுடும்பமாக விருந்து வாழ்வார். ஆறுமுகங்களேயுடைய முருகக்கடவுளேப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

†குறிப்பு.—மூத்த சகோதர ஸ்தானம் ரிஷபம். ரிஷபலக்னத்தில் பிறந்தவர்களுக்குப் பொதுவாய்ப் புத்திர தோஷம் ஜாதகாலங்காரம் 592-ஆவது பாடல் பிரகாரம் உண்டு. அஃதாவது "எருது கும்பம் வித்தகையோரை யார்க்கு மகவில்லே விளம்புங் காலே". ரிஷபத்திற்கு ஐந்திற்குடைய புதன் ஒன்பதில் பெண்கிரகமாகிய சுக்கிரனுடன் கூடி இருக்கிறுர். புத்திரகாரகனுகிய குரு, ரிஷபத்திற்கு எட்டில் மறைந்துபோய் இருக்கிறுர். மேலும் மூத்தோர் காரகனுகிய குருவிற்கு ஐந்தாம் வீட்டில் பெண் கிரகமாகிய சந்திரன் இருக்கிறுர். இந்த ஐந்திற்குடைய அங்காரகன் குருவிற்கும் பன்னிரன்டில் மறைந்து இருக்கிறுர். ஐந்தை ராகுவும் சனியும் மூன்றும் பார்வையுடன் பார்க்கிறுர்கள். ஆகையால் ஆண் சந்ததிக்குத் தோஷம் இருக்கிறது.

13. உதித்தவன் குணத்தைச் சொல்வேன் உயர்வான குடும்பியாவன்
நதிபல தீர்த்தம் தோய்வன் நாயகன் சிவந்த மேனி
ததிநெய்பா லிஷ்டம் கொள்வன் சமர்த்தாக வார்த்தை
[சொல்வன்
அதிதிகள் பத்தி கொள்வன் அனேகவா ணிபங்கள் செய்வன்.

13. ஜாதகருடைய குணகுணங்களேப்பற்றிச் சொல்லுகிறேன். மேன்மையான குடும்பஸ்தராக இவர் இருப்பார். அநேக நதிதீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவர். தயிர், நெய் பால் இவைகளின்மேல் ஆசையுடையவர். சாமர்த்தியமாகவும் திறமையாகவும் வார்த்தைகளேச் சொல்லுவார். பரதேசிகளிடத்தில் பக்தியும் பிரீதியும் உள்ளவர். பலவிதமான வியாபாரங்களேச் செய்வார்

14. கல்வியு மிரண்டு கற்பன் கதித்த தோர் புத்தி மானும்
அல்லல்க ளுடைய ஞகும் யாரையு முறவு கொள்வன்
சொல்லது மேன்பா டாகும் தோகையர் மோகவானும்
புல்லியோர்க் குதவு வானும் போஜன சுகிய னென்றேம்.

14. ஜாதகர் இரண்டு விதமான வித்தையைக் கற்றுக்கொள்ளுவார். அதனுல் மகிழ்ச்சியை அடைவார். புத்தியுள்ளவராய் இருப்பார். துன்பங்களேயும் உடையவர். எல்லோரையும் சினேகஞ்செய்து கொள்ளுவார். தன்னுடைய பேச்சு வார்த்தைகள் மேன்மையுடையனவாக விருக்கும் ஸ்திரீகளின்மேல் காமஆசை உடையவராவார். ஏழைகளுக்கும் கீழ் மக்களுக்கும் உதவி செய்வார். சுகமான நல்ல போஜனத்தைச் சாப்பிட்டு அனுபவிக்கக் கூடியவர் என்று சொல்லுகிறேம்.

15. தண்டமிழ் நுணுக்கம் தேர்வன் தன்பந்து புகழ வாழ்வன்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குவலய மதிகம் சேர்ப்பன்
பண்டுநாள் பூமி தன்னேப் பாலகன் விருத்தி செய்வன்
அண்டர்கோன் மருகன் பத்தி அவனுமே கொள்வா னுமே.

15. ஜாதகர் இனிமையான தமிழின் நுட்பங்களில் தேர்ச்சியுடையவர், அஃதாவது தமிழில் புத்திக் கூர்மையுடையவர். தன்னுடைய பந்துக்கள் இவரைப் போற்றும்படியாகவும் மேன்மையாகவு மிருந்து வாழ்வார். ரிஷபங்களும் பசுக்களும் இவருக்கு விருத்தியாகும். நிலங்களே அதிகமாகச் சேகரிப்பார். பழைய காலத்திய நிலங்களே இவர் பயிரிட்டு விருத்தியாக்குவார். மகாவிஷ்ணுவினுடைய மருமகனுகிய முருகக் கடவுளின் மேல் பக்தியையுடையவராவார்.

16. குருவுப தேசம் கொள்வன் குவலயம் சீல ஞவன்
மர்மமும் கொஞ்ச முள்ளான் மன்னர்க ளிஷ்டம் கொள்வன்
திருமகள் வாச முள்ளான் ஜனஉப காரியாவன்
பிறந்தநாள் மரண மட்டும் பிறைபோலே யோகமுள்ளான்.

16. ஜாதகர் தன்னுடைய குருவிடத்தில் உபதேசம் பெற்றுக் கொள்ளுவார். பூமியில் நல்லொழுக்கத்தையும் நல்ல நடவடிக்கையும் உடையவராவார். கொஞ்சம் ரகசியமான மனத்தையுடையவர். அரசர்களுடைய சிநேகத்தை அடைவார். இலட்சுமி இவரிடத்தில் வாசஞ்செய்து கொண்டிருப்பாள். அஃதாவது செல்வமுடையவர். ஜனங்களுக்கு உதவியைச் செய்வார். இவர் தான் பிறந்தகாலம் முதல் தான் இறக்குங்காலம் வரையிலும் வளர்பிறைச் சந்திரனேப் போல விருத்தியாகிக்கொண்டே வருகிற யோகத்தை யுடையவராவார்.

17. இன்னவன் மணத்தின் காலமியம்புவோ மிருபான் ரெண்டில்
கன்னிகை தெற்குத் திக்கில் கழறுவோ மவளில் லத்தில்
இன்னவன் சுபமு டிப்பா னியம்புவோ மவள்கு ணத்தை
உன்னத வார்த்தை சொல்வள் உரைக்குமுன் கோபி யாவள்·

17. ஜாதகருக்கு இருபத்திரண்டாவது வயதில் விவாகம் நடைபெறும். மனேவி தெற்குத் திக்கிலிருந்து வருவாள். இவருக்கு மனேவியின் வீட்டில் விவாகம் நடக்கும். இவளுடைய குணதிசயங்களேப் பற்றிச் சொல்லுகிறேம். மேன்மையான சிறப்பான வார்த்தைகளேச் சொல்லுவாள். பேசுவதற்கு முன்னே கோபத்தை உடையவளாவாள்.

குறிப்பு—ஜாதகருடைய விவாகம்.—ஜாதகருக்கு வயது ௵ 21 முதல் ௵ 26 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் புதன் புக்தி நடக்கின்றது. சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்கிற் குடையவராகிக் களத்திர ஸ்தானமாகிய ஏழில் இருக்கின்றுர். இவர் சந்திரனுக்கும் ஏழிற் குடையவராய் இருக்கின்றுர். புதன் ஏழில் களத்திரகாரகனும் போககாரகனுமான சுக்கிரனுடன் கூடியிருக்கின்றுர். ஆகையால் இவர்கள் காலத்தில் விவாக நடக்க அமைப்பு இருக்கிறது.

18. நன்னடை மாஞ்சி வப்பள் நாயகன் மனம்போல் வாழ்வள்
பன்னியே பேசு வாளாம் பாவையும் யோக சாலி
பின்னமில் லாத தேகி பித்ததே கத்தா ளென்றேம்
அன்னமு மன்பா யீவள் அவசர மனத்தாளாமே.

18. இவள் நல்லொழுக்கமும் நன்னடிக்கையும் உடையவள். மாந்துவிரின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான சிவப்பு நிறமுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையுடன் இருந்து வாழ்வாள். சுறுக்கமாகவும் திறமையாகவும் பேசுவாள். இவள் யோகத்தை யுடையவள் யாதொரு அவயவத்திலும் குற்றமும் பங்கமும் இல்லாத தேகத்தையுடையவள், பித்ததேகத்தை உடையவளாவாள் என்று சொல்லுகிறேம். சாப்பாட்டை இஷ்டத்துடன் போடுவாள். காரியங்களை அவசரத்துடன் செய்கின்ற தன்மையையுடைய மனத்தை யுடையவளாவாள்.

19. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடும் ஆண்பால் மூன்று
மதிநுதல் பெண்பால் ரெண்டு வரைகிறே மைந்தும் தீர்க்கம்
முதலிலே சேத மெய்தும் முனிவரிவ் விதமாய்க் கூற
அதிபதி கேட்க லுற்றள் வரும்சுதர் முதலில் தோஷம்.

19. இவளுக்குக் குழந்தைகள் எட்டுப்பேர் பிறப்பார்கள். அவர்களில் ஆண் குழந்தைகள் மூன்று பேரும் சந்திரனைப்போல அழகான முகத்தையுடைய பெண்கள் இரண்டு பேரும் ஆக மொத்தம் ஐந்து பேரும் நீண்ட ஆயுளையுடையவர்கள் என்று சொல்லுகிறேம். முதலில் சில குழந்தைகள் இறந்துபோகும். இவ்விதமாக முனிவர் சொல்லும் போது பார்வதியம்மையார் கேட்கின்றார். முன்னே பிறக்கும் குழந்தைகள் இறந்து விடும் என்று சொன்னீர்.

20. காரணம் யாது என்ன ப்பூமகன்[1] அஞ்சில் நிற்கக்
காரியும்[2] பார்த்த தாலே கழறினே மந்தச் சங்கை
மாறியே புயண்டர் சொல்வார் மனையது இரண்டு என்றேம்
கூறினீர் விவரம் சொல்வாய் அனலனும்[3] பணியு[4] மெட்டில் ;

20. அதற்குக் காரணம் என்ன என்று கேட்க, அங்காரகன் ஐந்தில் இருப்பதாலும், அவரைச் சனி பார்த்ததாலும் இந்தத் தோஷத்தைச் சொன்னேம். இவ்விதமாகச் சொல்ல, புஜண்ட மகாரிஷி எதிர்த்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்று சொல்லுகிறேம். இவ்விதமாகச் சொன்னீரே அதற்குக் காரணங்களை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, சூரியனும் இராகுவும் எட்டில் இருப்பதாலும் ;

21. புந்தியு[5] புகரு[6] மேழில் பொருந்தியே யிருப்ப தாலே
வந்திடு மனைவிரெண்டு அதற்குமே மறித்துச் சொல்வார்
செந்தீயும்[7] சனியு மாட்சி திவாகர[8] னிரண்டோ னுகி ;
....

21. புதனும் சுக்கிரனும் ஏழில் கூடி இருப்பதாலும் இரண்டு மனைவி மார்கள் நேரிடுவார்கள் என்று சொல்ல, இதைத் தடுத்துச் சொல்லுகின்றார். அங்காரகனும் சனியும் ஆட்சியாய் இருப்பதாலும் சூரியன் இரண்டிற்குடையவராகி ;

---

[1] அங்காரகன், [2] சனி, [3] சூரியன், [4] ராகு, [5] புதன், [6] சுக்கிரன், [7] அங்காரகன், [8] சூரியன்.

22. அதற்கேழில் இருப்ப தாலும் அலவனும்[1] தசம மேறி
விதியனும்[2] குருவும் பார்க்க வேறுமுத் திரைகள் வேண்டான்
அதிபன்தன் மரண காலம் மனைவியு முன்னே மாண்டு
உதித்தவன் பின்னுல் மாள்வன் உடலற்றே[3] னிரண்டில் நிற்க ;

22. இரண்டிற்கு ஏழில் இருப்பதாலும்; கடகத்திற்குரிய சந்திரனும் பத்தில் இருந்து கொண்டு சனி குரு இவர்களால் பார்க்கப்படுவதாலும் இன்னெரு தாலி தரித்த மனைவியை, அஃதாவது விவாகம் செய்த மனைவியை ஜாதகர் அடையமாட்டார். ஆனுல் ஜாதகர் இறந்து போவதற்கு முன்னமே மனைவி இறந்து போய் இவர் இவளுக்குப் பின்னுல் இறந்து போவார். கேது இரண்டாவது பாவத்தில் இருப்பதால் ;

23. அதுபலன் சொல்லு மென்ன அறைகிறுர் பராசர் தாமும்
மதிமுக மாது வேறூர் மருவிடுமே பிமா னந்தான்
எதுகாலம் சொல்லு மென்ன இருபது ஏழாண் டின்மேல்
சுதரில்லா வடுக மாது தோன்றிடு மென்று சொன்னேம்.

23. அதனுல் உண்டாகும் பலனைச் சொல்லுவீர், என்று கேட்கப் பராசரமுனிவரும் சொல்லுகின்றார். சந்திரனைப் போன்ற அழகான முகத்தையுடைய ஒரு ஸ்திரீ இன்னேர் ஊரில் ஜாதகருக்கு அபிமான மனைவியாக வந்து சம்பவிப்பாள் என்று சொல்ல, எந்தக் காலத்தில் இவ்விதமாக நேரும் என்று கேட்க, ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதிற்கு மேலே பிள்ளையில்லாத ஒரு தெலுங்க ஜாதி ஸ்திரீ ஜாதகருக்கு அபிமான மனைவியாக வந்து சேருவாள் என்று சொல்லுகிறேம்.

குறிப்பு.—அபிமான மனைவி—இரண்டாவது தாரத்தின் வீடு ஒன்பதாவது வீடாகிய மீனம். இதற்கு அதிபதியாகிய குரு லக்கினதிபதியாகிய சந்திரனைப் பார்ப்பதால் ஜாதகருக்கு இரண்டாவது மனைவியை அடையும் அமைப்பு இருக்கிறது. குரு ஆருவது பாவத்திற்கும் அதிபதியாய் இருப்பதாலும் இந்தக் குருவை ராகு பார்ப்பதாலும் இந்த இரண்டாவது மனைவி பங்கமுடையதாகும், அஃதாவது அபிமான மனைவியாகும். ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் சூரியதசையில் குருபுக்தியும் 72-க்கு மேல் சனி புக்தியும் நடக்கின்றது. இவர்களது புக்தியில் அபிமான மனைவி நேரிட அமைப்பு இருக்கின்றது. பின்னுல் வருகின்ற 30-ஆவது பாடலில் 27-ஆவது வயதில் அபிமான ஸ்திரீ வருவாள் என்று சொல்லியிருப்பதையும் கவனிக்கவும்.

24. என்னகா ரணத்தி னுலே யெய்திடு மந்த மாது
முன்மனை தன்னுல் சேரும் மொழிகுவீ ரந்தச் சங்கை
இன்னவன் முன்ஜன் மத்தை யியம்புவோ மவ்வூர் கீழ்ப்பால்
தன்னிலே பேரூர் தன்னில் தனவைசிய குலமு தித்து ;

24. இந்த அபிமான ஸ்திரீ என்ன காரணத்தில் வந்து சேருவாள் என்பதைத் தெரிவிப்பீர் என்று கேட்க, முதல் மனைவியால் அவள் வந்து சேருவாள் என்று சொல்ல, அது விஷயமாய்ச் சம்பந்தப்பட்டவைகளைச்

---

[1] சந்திரன், [2] சனி, [3] கேது.

சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இந்த ஊருக்குக் கிழக்குத் திக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் ஜாதகர் பணமுடைய செட்டியார் குலத்திற் பிறந்து ;

25. பெருமையாய்ச் செட்டுச் செய்து புத்திரர் மனைவி யுண்டாய்
வருவோர்க்கு அன்ன மீந்து மஹாநதி சேது சென்று
ஒருமையாய்த் தீர்த்தம் தோய்ந்து உதவின தான மீந்து
அருமறை தமக்கு அன்னம் அளித்துமே மதுரை புக்கி ;

25. மேன்மையாய் வியாபாரஞ் செய்து மனைவி மக்களையுடைய வராகி தன்னிடத்திற்கு வருகிறவர்களுக்குச் சாப்பாடுபோட்டுப் பெரிய புண்ணிய தீர்த்தங்களுக்கும் சேது ஸ்தலத்திற்கும் போய் ஒரு மனதுடன் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து உபயோகமான தானமும் உதவிகளும் செய்து, அருமை யானவர்களும் மேன்மையானவர்களுமான சிறந்த பிரமாணர்களுக்குச் சாப்பாடுபோட்டு மதுரைக்குச் சென்று ;

26. பலவித தலங்கள் சென்று பாலக னுள்ளூர் மீண்டு
நிலமையாய் வாழுந் நாளில் நிகழ்த்துவோ மூழி தானே
நலமுள மறையோன் மாது நாயகன் தன்மேல் மோகம்
பலநாளாய் மனதி லெண்ணி பாவையு மோர்நாள் தன்னில் ;

26. பிறகு அனேக விதமான ஸ்தலங்களுக்குப் போய் பிறகு தன்னூருக்குத் திரும்பி வந்து நிலையாக விருந்து வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த வினையைப்பற்றிச் சொல்லுகிறோம். ஒரு நல்ல பிராமண ஸ்திரீ இவர்மேல் காம ஆசையை வெகுநாளாய்த் தன்னுடைய மனத்தில் உடையவளாகி ஒரு நாள் இவள் ;

27. இவனிடம் சென்று காதலி இனிமையாய்ப் பேச லுற்றாள்
அவனதுக் கிசையா னாகி அம்மறை மாது சொல்வாள்
நவனியில் மறுஜன் மத்தில் நாட்டிய பெண்போல் உன்பால்
அவனியில் வாழ வென்று அம்மாது கூறி யேதான் ;

27. இவரிடம் போய்க் காமம் மேலிட்டு இவரிடத்தில் இனிமையான காமப் பேச்சுகளைச் சொல்ல ஆரம்பித்துப் பேசினாள். இவர் இவளுடைய சொல்லிற்குச் சம்மதிக்காததால் இந்தப் பிராமண ஸ்திரீ சொல்லுகிறாள் "பூமியில் மறுஜன்மத்தில் நான் உன் மேல் நாட்டங்கொண்டவளும் காம ஆசையுடையவளுமான ஒரு ஸ்திரீயைப் போல உன்னிடம் இருந்து நான் வாழ்வேன்" என்று சொல்லிவிட்டு ;

28. தன்குல தெய்வம் தன்னைத் தானவள் தோத்த ரித்து
அன்னவள் சென்று ளென்றோம் அவனுமே அந்தி யத்தில்
குன்மநோய் தன்னுலேதான் கூற்றன் தன் பதிக்குச் சென்று
நன்னிய பிரம னாலே நாட்டினில் வரையப் பட்டு ;

28. அவள் தன்னுடைய குலதெய்வத்தை நினைத்துத் தோத்திரஞ் செய்து போய்விட்டாள் என்று சொல்லுகிறோம். ஜாதகர் கடைசி காலத்தில் குன்ம ரோகத்தால் இறந்து எமபட்டணம் போய் நல்லவரான பிரம தேவனால் அவருடைய தேகத்திலேயே எழுதப்பட்டு ;

29. வந்தவ னிவனே யென்றார் விருத்தரும் கேட்க லுற்றார்
முன்ஜன்மம் வைசியச் ரேயாயு தித்துமே வினையில் லாமல்
அன்னவன் வாழ்ந்த தாலே அவனு மிச்சென்மம் தன்னில்
சந்ததம் கங்கை சேயாய் ஜனித்த காரணங் களென்ன ;

29. இந்த ஜன்மத்தில் அவர் ஜாதகராக வந்து பிறந்து இருக் கின்றார் என்று சொன்னார். அதன் மேல் விருத்தர் என்ற ரிஷி கேட் கின்றார். இவர் முன்ஜன்மத்தில் வைசியராகப் பிறந்து பாவம் இல்லாமல் வாழ்ந்து வந்ததாலே இவர் இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்திற் பிறந்ததற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க ;

30. சேதுவின் பலத்தி னாலே ஜனித்தனன் கங்கை வமிசம்
ஓதுவே னிச்ஜன் மத்தில் உறைந்திடு மந்த மாது
மேதினில் பணிக ளுண்டாய் வித்தகி யிருபா னேழில்
காதலி வருவா ளாகும் காணுது புத்திரர் தான்.

30. இவர் சேதுஸ்தலத்திற்குச் சென்ற புண்ணிய பலத்தினால் இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்திற் பிறந்தார். முன் ஜன்மத்திய அந்தப் பிராமண ஸ்திரீ இந்த ஜன்மத்தில் ஜாதகரை வந்தடைவாள். அந்த ஸ்திரீ பூமியில் ஆபரணங்களையுடையவளாகி ஜாதகருக்கு இருபத் தேழாவது வயதில் இவரிடம் வந்துசேருவாள். ஆனால் இவளுக்குப் புத்திரர் இருக்கமாட்டார்.

குறிப்பு.—அபிமானமனைவி விஷயம்.—முன்னேயுள்ள 23-ஆவது பாட லின் கீழுள்ளக் குறிப்பைப் பார்க்கவும்.

31. அன்னையும் சிவந்த மேனி அழகுளாள் பொறுமை சாலி
தன்சொல்லு மடக்க முள்ளாள் தன்மனம் கபடு மில்லாள்
பின்னமில் லாத தேகி புண்ணிய மனத்தா ளாகும்
தன்னில்லம் உள்ளூ ராகும் தன்துணை நவமே யென்றோம்.

31. ஜாதகருடைய தாயார் சிவப்பு நிறமான தேகத்தையுடையவள். அழகுள்ளவள். பொறுமையான குணத்தையுடையவள். அடக்கமாகவும் சாந்தமாகவும் பேசக் கூடியவள். தன்னுடைய மனத்தில் கள்ளம், வஞ்சனை இவைகளில்லாதவளாவாள். யாதொரு அவயவதோஷமும் பங்கமும் இல்லாத தேகத்தை யுடையவள். புண்ணியத்தைச் செய்யுந் தன்மையுள்ள மனத்தையுடையவள். இவளுடைய தாயார் தகப்பனார் வீடு உள்ளூரிலேயே இருக்கும். இவளுடன் கூடப் பிறந்த சகோதரர்கள் ஒன்பது பேர் என்று சொல்லுகிறோம்.

32. மங்கையின் முன்ஜன் மத்தை வரைகிரேம் வேலங் காட்டில்
துங்கமாம் கௌரி வமிசம் தோன்றியே சுகமுள் ளாளாய்
எங்களுக் கன்பா ளாகி எழில்பல தீர்த்தம் தோய்ந்து
சங்கையாய் வருவோர்க்குச் சாதங்க ளளித்து யின்னேள் ;

32. தாயாருடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவள் திருவாலங்காட்டில் வேளாளர் குலத்தில் பிறந்து சுகத்யுடையவளாகி முனிவர்களிடம் பிரீதியுள்ளவளாகி அனேக திவ்ய தீர்த்தங்களுக்குப் போய் அவற்றில் ஸ்நானஞ் செய்து வயிறுசுண்டி கீளப்புடன் வருபவர்களுக்குச் சாப்பாடு போட்டு ;

33. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனல் வரையப் பட்டுச்
சாலவே காஞ்சி தோன்றிச் சார்ந்தனள் அவ்வூர் தன்னில்
கோலமாயிச்ஜன் மத்தில் கூறுவோம் அற்ப ரோகி
சீலமாய் வந்த போது செப்புவோம் யோகம் தானே.

33. இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனல் எழுதப் பட்டு காஞ்சீபுரத்தில் நன்மையுடன் பிறந்து அந்த ஊரிலேயே இருந்தாள். இந்த ஜன்மத்தில் கொஞ்சம் ரோக முள்ளவளாவாள். நல்லொழுக்கத் துடன் இருந்த போது இவளுக்கு யோகத்தைப் பற்றிச் சொல்லுகிறேம்.

34. மறுஜன்மம் அவ்வூர் தன்னில் மறைக் குலம் தனினு தித்துப்
பெருமைக ளில்லா தாகி வாழ்வளாமென்று சொன்னேம்
பெருந்தந்தை பூர்வம் தன்னைப் பேசுவோம் காஞ்சி தெற்கில்
சிறுவூரில் சூத்திர வமிசம் தோன்றின ளிவளே யம்மா.

34. ஜாதகருடைய தாயார் பின் ஜன்மத்தில் அதே ஊரில் பிராமணர் குலத்திற் பிறந்து அகங்காரம் கர்வம், இறுமாப்பு இவைகள் இல்லாத வளாகி வாழ்வாள் என்று சொல்லுகிறேம். ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் காஞ்சீபுரத்திற்குத் தெற்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் சூத்திர ஜாதியில் பிறந்தார். பார்வதியம்மையே !

35. கிருஷியால் ஜீவித் தேதான் கௌரவ குடும்பி யாவன்
அரனடி யார்க்குத் தொண்டு அன்னங்க ளளித்து வந்தும்
பெருநதி சேதுசென்று புண்ணிய தீர்த்தம் தோய்ந்து
உறைந்தனர் உள்ளூர் தன்னில் ஊழ்வினை யில்லா தாகி ;

35. தகப்பனர் விவசாயத் தொழிலைச் செய்து ஜீவித்து கௌர வமான குடும்பஸ்தனுனர். சிவனடியார்களிடத்தில் பக்தியுடையவராகி அவர்களுக்குச் சேவகஞ் செய்து அவர்களுக்குச் சாப்பாடு போட்டுப் பெரிய நதீ தீரங்களுக்கும் சேதுஸ்தலத்திற்கும் போய் அவ்விடங்களில் புண்ணிய தீர்த் தங்களில் ஸ்நானஞ் செய்து திரும்பித் தன்னூருக்கு வந்து யாதொரு பாவத் தையும் அடையாமல் ;

36. மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டுப்
பிருதிவி தலத்தி லேதான் பிறந்தனன் கங்கை வமிசம்
இருபது எட்டாண் டின்மே லிவனுக்கு யோகம் வாய்க்கும்
மறுஜன்மம் தில்லை தன்னில் மறைக் குல முதிப்பா ருகும்.

36. இறந்து எமபட்டணத்திற்குப்போய் மகாவிஷ்ணுவின் மகனுகிய பிரமதேவனல் எழுதப்பட்டுப் பிருதிவிஸ்தலம் என்று வழங்கப்பட்ட காஞ்சீபுரத்தில் வேளாளர் குலத்திற் பிறந்தார். இவருக்குத் தன்னு டைய இருபத்தெட்டு வயதிற்குமேலே யோகம் உண்டாகும். பின் ஜன்மத் தில் இவர் சிதம்பரத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பாராகும்.

37. இந்ததோர் ஜன்மம் தன்னில் என்னபுண் ணியங்கள் செய்தான்
முந்திய குலமு திக்க முயலுவீர் முனியே நீர் தாம்
அந்தவ னிச்சன் மத்தில் யாவர்க்கும் நல்லோ னுயும்
சந்ததம் தெய்வ பத்தி சத்தான மனத்தானுயும் ;

37. இவர் மறு ஜன்மதில் முதல் குலமாகிய பிராமணர் குலத்தில் பிறக்கும்படியாய் இந்த ஜன்மத்தில் என்ன புண்ணிய காரியங் களைச் செய்தார் என்பதை, முனிவரே ! நீரே சொல்லுவீர் என்று கேட்க, இவர் இந்த ஜன்மத்தில் எல்லோருக்கும் நல்லவராக விருந்தும் எப்போதும் கடவுளின்மேல் பக்தியுடையவராகியும், நல்ல மனத்தையுடையவரா கியும் ;

38. வருவதால் மறைக்கு லத்தில் வருவானு மென்று சொன்னேம்
திருமகன் முப்பான் மூன்றில் தனுர்மாதம் தந்தை கண்டம்
அறைகிரேம் மாது ருக்கு ஆறுறு ஆண்டு தன்னில்
குறைவிலாக் கூனி மாதம் கூறுவோம் கண்டம் தானே.

38. இருப்பதால் பிராமணர் குலத்திற் பிறப்பார் என்று சொல்லு கிறேம். ஜாதகருடைய முப்பத்து மூன்றுவது † வயதில் மார்கழி மாதத் தில் தகப்பனர் இறந்து போவார். தாயாருக்குக் கண்டகாலத்தைச் சொல்லுகிறேம். ஜாதகருக்கு முப்பத்தாருவது வயதில் குறைவில்லாத பங்குனி மாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகிறேம்.

† குறிப்பு.—தகப்பனர் மரண விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷ) 33—0—0 முடியும் வரையிலும் சந்திர தசையில் ராகு குரு புக்திகள் நடக்கின்றன, மார்கழி மாதத்தில் குரு புக்தி நடக்கிறது. பிதுர்லக்கினமாகிய மீனத்திற்கு இரண்டில் சந்திரன் மாரகஸ்தானத்தில் இருந்து கொண்டு எட்டாவது வீடாகிய துலாத்தைப் பார்க்கின்றர். பிதுர்ஸ்தானுதிபதி யாகிய குரு சந்திரனைப் பார்க்கின்றர். சந்திரனுக்குப் பிதாவை மாரகஞ் செய்யும் அமைப்பு ஏற்படுகிறது. குரு பிதுர்ஸ்தானுதிபதியாகி மீனத்திற்குப் பத்தில் பத்திற்குடையவராயும் இருக்கின்றர். ஆகையால் துய்யகேரளம் எட்டாம்பாவம் 14 ஆவது பாடல் பிரகாரம் குரு தன் புக்தியில் பிதுருக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது.

2. மாதுர் மரணவிஷயம்.—ஜாதகருக்கு வயது ஞ்ப 35—0—0 முதல் ஞ்ப 36—0—0 முடியும்வரையிலும் சந்திர தசையில் சனி புத புக்திகள் நடக்கின்றன. பங்குனி மாதத்தில் சனி புக்திப் நடக்கின்றது. மாதுர்லக்கினம் துலாம்; இதற்குப் பராசரஹோரை சில பதிப்புப் பிரகாரம் அங்காரகன் சூரியன் குரு இவர்கள் மாரகராகின்றார்கள். சந்திரன் அங்காரகனுடைய வீட்டில் மாதுர்லக்கினத்திற்கு ஏழில் மாரகஸ்தானத்தில் இருந்துகொண்டு மாரகாதிபதியாகிய குருவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். மேலும் சந்திரன் மாதுர்காரகாதிபதியாகி அவர் தசையே நடைபெறுகின்றது. ஆகையால் மாதாவைச் சந்திரன் மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது. மாரகாதிபதியாகிய சூரியனுடன் சனி கூடிக்கொண்டு சந்திரனையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது, 27-ஆவது சுலோகங்கள் பிரகாரம் சந்திரதசையில் சனி புக்தியில் மாதாவுக்கு மாரகம் நேரிட அமைப்பு இருக்கிறது.

*** 3 ஜாதகர் மரணவிஷயம்.**—ஜாதகருக்கு வயது ஞ்ப 61—0—0 முதல் ஞ்ப 62—0—0 முடியும் வரையிலும் ராகு தசையில் சூரிய சந்திர புக்திகள் நடக்கின்றன. 61-ஆவது வயது முடிந்து 62-ஆவது வயதில் சித்திரை மாதத்தில் சூரிய புக்திதான் நடக்கின்றது. கடக லக்கினத்திற்குச் சனி பராசரஹோரை, ஜாதக சந்திரிகை, தாண்டவமாலை, சந்திரகாவியம் இவைகளின் பிரகரம் மாரகாதிபதி ஆகின்றார். ராகு இவருடன் கூடி எட்டாவது மாரகஸ்தானத்தில் இருந்துகொண்டு லக்கினாதிபதியாகிய சந்திரனைப் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது 23-ஆவது சுலோகங்கள் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம்பாவம் 20-ஆவது பாடல் பிரகாரமும் ராகு தசையில் சூரிய புக்தியில் ஜாதகருக்கு மாரக அமைப்பு இருக்கிறது.

39. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபான் ரண்டில்
கோதிலா மேட மாதம் குறைபக்கம் நவமி தன்னில்
தீதான சூலே யாலே தேகமும் வாடு மென்றும்
ஏத்தவே பின்ஜன்மத்தைப் புகலுவோம் கேட்டி டாயே.

39. ஜாதகருடைய மரணகாலத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு அறுபத்திரண்டாவது * வயதில் குற்றமில்லாத சித்திரை மாதத்தில் தேய்பிறையில் நவமிதிதியில் கொடிய சூலைநோயால் இறந்து தேகம் அழிந்து போய்விடும் என்று சொல்லுகிறோம்.

40. உத்தரப் துவாரை தனனிலு திப்பனும் சத்திரிய வமிசம்
அத்தியு மசுவமு முடையோனுகி இவனுமே வாழ்வா னுகும்.
இத்தகை முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
வித்த கனிச்ஜன் மத்தில் விபரீத வார்த்தை சொல்லி ;

40. ஜாதகர் வடக்குத் திக்கிலுள்ள துவாரகா புரியில் க்ஷத்திரிய குலத்தில் பிறப்பார். இவர் யானை, குதிரை இவைகளை உடையவராகி வாழ்வாராவார். இவ்விதமாக முனிவர் சொல்ல பார்வதியம்மையார் கேட்கின்றார். அறிவுடையவரான ஜாதகர் இந்த ஜன்மத்தில் பிரதிகூலமான வார்த்தைகளையும் சொல்லியும் ;

41. பொருளது இச்சை யாயும் பேதையர் மோக மாயும்
திருகுகள் சிலர்க்குச் செய்து சேயனும் வாழ்வ தாலே
மறுஜன்மம் க்ஷத்திரிய சாதி வருகும் காரணங்க ளென்ன
திருமக ளிச்ஜன்மத்தில் ஜனஉப காரியாயும் ;

41. பொருள்களின் மேல் ஆசையுடையவராயும், ஸ்திரீகளின் மேல் காம ஆசையுடையவராயும், சிலருக்கு வஞ்சனைகளைச் செய்தும் இவர் வாழ்வதால் இவருக்கு அடுத்த ஜன்மத்தில் க்ஷத்திரிய குலத்தில் பிறவி நேரிடுவதற்குக் காரணங்கள் என்ன என்று கேட்கவே, இவர் இந்த ஜன்மத்தில் ஜனங்களுக்கு உதவி செய்பவராயும் ;

42. அறமதி லிச்சை வைத்தும் அறுமுகன் தனைப்பூ ஜித்தும்
மறையவர் நேசம் கொண்டும் மகாதல தீர்த்தம் தோய்ந்தும்
வருவதா லுதிப்பா னென்றோம் வரைகிறோம் யோக ச்சேதி
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

42. தருமம் செய்வதில் ஆசையுடையவராயும், ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளைப் பூஜை செய்தும் பிராமணர்களின் மேல் ஆசையுடையவராயும் பெரிய ஸ்தலங்களிலுள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தும் வருவதால் மறு ஜன்மத்தில் இவர் க்ஷத்திரிய குலத்திற் பிறப்பார் என்று சொல்லுகிறோம். இவருடைய யோக விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். மேன்மையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

43. ஜனித்தநாள் முதலாமாகச் சேயன்தன் மரண மட்டும்
தனமது மென்மே லோங்கும் சல்லியம் காணு னுகும்
இனத்துக்கு மேலாய் வாழ்வன் இளம்பிறை போலே யோகம்
வினையிலா வாழ்வா னுகு மியம்புவோ மதிலோர் சங்கை.

43. ஜாதகருக்குத் தான் பிறந்தநாள் முதற்கொண்டு தன்னுடைய மரணகாலம் வரையிலும் செல்வம் நாளுக்கு நாள் விருத்தியாகிக் கொண்டே வரும். இவர் கடன் வாங்கமாட்டார். பந்துக்களைவிட அதிகமான அந்தஸ்துடையவராக விருந்து வாழ்வாராகும் இங்கு ஒரு விசேஷத்தைச் சொல்லுகிறோம்.

44. இருபது ஆண்டு மேலாய் இவன்தந்தை துணைவ னுலே
வரும்பகை யதிக முண்டு மன்னனுல் சுகமு மாகும்
பிரிதாகும் குடும்பம் தானும் பேதை பால் பகையு முண்டு
மருமமாய்ப் பூமி கொஞ்சம் விலகிடு மென்று சொல்வோம்.

44. ஜாதகருக்கு இருபது வயதிற்குப் பிறகு இவருடைய தகப்பனுருடைய சகோதரனுல் விரோதங்கள் அதிகமாக வந்து நேரும். அரசனுல் இந்த விரோதம் நீங்கி களிப்பும் சந்தோஷமும் உண்டாகும். குடும்பம் பிரிந்து போய்விடும். ஆனுல் பெண்களுக்குள்ளே விரோதம் இருந்து கொண்டிருக்கும். ரகசியமாய்க் கொஞ்சம் பூமி இவரை விட்டு நீங்கிப் போய் விடும் என்று சொல்லுகிறோம்.

45. நீங்கின பூமிபின்னுல் நேர்ந்திடு மிவனுக் கேதான்
பாங்கியால் வந்து சேரும் பின்பாகம் விவரம் சொல்வேன்
ஆங்கவன் செட்டு ஓங்கும் அரசர் பூஜிதமு மாவன்
நீங்காத செல்வ முள்ளான் நிகர்திருப் பணியும் செய்வன்.

45. ஜாதகரை விட்டு விலகிப்போன நிலம் பின்னுல் இவருக்கே தோழியால் வந்து சேரும், விவரங்களை எல்லாம் பின்பாகத்தில் சொல்லுகிறேன். இவருடைய வியாபாரம் நாளுக்கு நாள் விருத்தியாகும். அரசர்கள் இவரை மதிப்பார்கள். எப்போதும் இவரை விட்டுப் போகாததும் குறைவுபடாததுமான செல்வத்தை உடையவ ராவார். மேன்மை யானவையும் அழகானவையுமான, ஆபரணங்களையும் செய்வார்.

46. அண்டினேர் தம்மைக் காப்பன் அதிகபூ மிகளும் சேர்ப்பன்
எண்டிசை புகழ வாழ்வ னெதிரியை வசியம் கொள்வன்
கண்டனம் பூமிவீடு கனதனம் பணிகள் யாவும்
விண்டுவன் முப்பதாயி ரம்பொன் வித்தகன் கொள்வா னுகும்.

46. ஜாதகர் தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார். நிலங்களை அதிகமாகச் சேகரிப்பார். எட்டுத் திக்குகளிலும் எவ்விடத்திலும் கீர்த்தியை யுடையவராய் இவர் வாழ்வார். தன்னுடைய சத்துருக்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளும் சாமர்த்திய முடையவர். நிலங்கள் வீடு பெரிய செல்வம் ஆபரணங்கள் ஆகிய இவைகள் எல்லாம் முப்பதாயிரம் பொன் பெறக் கூடியதாக விருக்கும்.

47. ஜனித்திடுங் காலம் தன்னில் செம்பாம்பு தனிலி ருப்புக்
குனித்திடு ஆண்டு மூன்று கூறிய திங்களைந்தும்
வினையுண்டு ஜாத கர்க்கு மிக்கதாய் நலிக ளுண்டு
அனையவே பந்து சூதம் அறைகிரேம் விவரம் ரண்டில்.

47. ஜாதகர் பிறக்கும் காலத்தில் கேது தசையில் இருப்பு கணிதப்பிரகாரம் மூன்று வருஷங்களும் ஐந்து மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்குக் கஷ்டங்கள் நேரிடும். இவருக்கு அதிகமான நோய்கள் ஏற்படும். நெருங்கின பந்துக்களில் சூதகம் ஏற்படும். மற்ற விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகிரேம்.

ஜாதகம் 77.

1. ¹பிறை²குரு கேது வில்²லில் புகர்³ராகு மிதுன மாகப்
பருகுசேய்⁴ அலரி⁵ புந்திப்⁶ புக்கிடம் கடக மாக
அம்பின நண்டு⁷ ஜன்மம் அந்தகன்⁸ சீயம்⁹ தங்க
அம்பிகை யாளும் கேட்க அத்திரி புகலு கின்ருர்.

			சுக்கிரன் ராகு
	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் புதன் அங்காரகன்
			சனி
குரு சந்திரன் கேது			

பூராடம் 4-ம் பாதம்
சுக்கிரதசை ஞ்ப 3–9–0

1. சந்திரன் குரு கேது தனுசிலும், சுக்கிரன் ராகு மிதுனத்திலும், அங்காரகன் சூரியன் புதன் கடகத்திலும் ஜலத்தையுடைய கடகம் ஜன்ம லக்கின மாகவும், சனி சிம்மத்திலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும் போது அத்திரி மக ரிஷியானவர் சொல்லுகிருர்.

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும். மேஷத்தில் சனியும், மிதுனத்தில் குருவும், கன்னியில் அங்காரகனும் கேதுவும், விருச்சிகத்தில் சந்திரனும், மகரத்தில் சுக்கிரனும், கும்பத்தில் சூரியனும் புதனும், மீனத்தில் ராகுவும் ஆகும்.

2. இந்தச்சேய் ஆணும் ஜன்மம் இல்லமும் கீழ்ப் பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் சிங்கவா கனத்தாள் கீழ்ப்பால்
நந்தியும் இல்லம் உத்திரம் அணல்காளி மாரி மாயோன்
தென்மேல்பால் தங்கு மென்ரேம் சிறு ஊராமிந்தப் பாலன் ;

¹ சந்திரன். ² தனுசு. ³ சுக்கிரன். ⁴ அங்காரகன் ⁵ சூரியன், ⁶ புதன். ⁷ கடகம். ⁸ சனி. ⁹ சிம்மம்.

2. பிறந்த இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் இருக்கும். தெரு வாசற்படி கிழக்குத் திக்கைப் பார்த்திருக்கும். துர்க்கையின் கோயில் கிழக்குத் திக்கிலும் சிவ பெருமான் கோயில் வீட்டிற்கு வடக்கிலும் காளியம்மன் கோயில் மாரியம்மன் கோயில் மகாவிஷ்ணுவின் கோயில் இவை தென் மேற்குத் திக்கிலும் இருக்கும் என்று சொல்லுகிறேம். ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜாதகர்.

3. உதிப்பனு மிரண்டாம் ஜன்மம் உயர்கங்கை குலமே யாகும்
மதிநுதல் அன்னை தந்தை வருந்துணை களத்திர புத்திரர்
சதியிலா முன்பின் ஜன்மம் சாற்றுவோ மிந் நூல் தன்னில்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. இரண்டாவது கர்ப்பத்தில் வந்து பிறப்பார். மேன்மையான வேளாளர் குலத்திற் பிறப்பார். சந்திரனைப் போல அழகான நெற்றி புருவம் இவைகளையுடைய தாயார் தகப்பனுர் சகோதரங்கள் மனைவி மக்கள் முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளை இந்த சாஸ்திரத்தில் சொல்லுகிறேம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

4. பாலகன் தந்தைக் கேதான் பகருவோம் துணை யாண்ணென்று
வேல்விழி இரண்டு தீர்க்கம் விளம்புவோம் ஒன்றாய் வாழ்வர்
சாலவே பிதாகு ணத்தைச் சாற்றுவோம் மாஞ்சி வப்பன்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நயப்புறு வார்த்தை யானே.

4. ஜாதகருடைய தகப்பனுருக்குக் கூடப் பிறந்த ஆண் ஒருவரும் வேலைப் போல கண்களையுடைய பெண்கள் இருவரும் நீண்ட ஆயுளை யுடையவர்களென்று சொல்லுகிறேம். இவர்கள் ஏக குடும்பமாய் இருந்து வாழ்வார்கள். தகப்பனுருடைய குணுதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேம். இவர் மாந்துளிரைப் போல ஒருவிதமான சிவப்பு நிறமுடைய தேகத்தை யுடையவர். நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். நயமானவும் இனிப்பானவுமான வார்த்தைகளைப் பக்குவமாக உபயோகப்படுத்துவார்.

5. இந்திரக் குடும்ப மொப்பா மேவலா ளுடைய ணுகும்
நிந்தைக ளேற்கா ணுகும் நவிலுவோ மிவன்முன் ஜன்மம்
தென்திசை தில்லை தன்னில் ஜனித்தனன் இக்கு லத்தில்
பொன்பூமி யுடையா ணுகிப் புகழான குடும்ப மேற்று ;

5. மேன்மையான குடும்பத்தைஇவர் குடும்பம் ஒத்திருக்கும், வேலை யாட்களை யுடையவராவர். இகழ்ச்சி அவமானம்பழி இவைகளை அடையாதவ ராவார். இவருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். தெற்குத் திக்கிலுள்ளத் தில்லை என்று சொல்லப்படும் சிதம்பரத்தில் இந்த ஜன்மத்திய குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்தார். தனம் நிலம் இவைகளை யுடையவராகிக் கீர்த்தி பெற்ற மேன்மையான குடும்பத்தை யடைந்து ;

6. முன்வினை இல்லா தாகி மொதுங்கினுன் காலன் ஞடு
முன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று சொல்வோம்
இந்நெறி யுடையா னுக்கு இப்பால னுதிப்பா ணுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் மிருசி வப்பன்.

6. முன் ஜன்மத்திய பாவம் ஒன்றும் இல்லாதவராகி இறந்து எம பட்டணத்திற்குப் போய் பிரம தேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றனர் என்று சொல்லுகிறேம். இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுக்கு இந்த ஜாதகர் பிறப்பார். ஜாதகருடைய குண குணங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். அழகான தேகமுடையவர். இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய தேகத்தையுடையவர்.

7. தந்தையால் சுகமில் லாதான் சர்ஜனர் உறவு கொள்வன்
பிந்திய தந்தை யாலே பெறுவனும் கல்வி தானும்
அந்தவன் மந்திரம் சொல்வான் அவனியில் செட்டுச் செய்வன்
தன்குல தாதை பக்கல் சார்ந்துமே ஜீவிப் பானும்.

7. ஜாதகர் தகப்பனுர் மூலமாய்ச் சௌக்கியத்தை அடையாதவர். நல்ல ஜனங்களுடைய சிநேகிதத்தை அடைவார். சிறிய தகப்பனுர் உதவியால் இவர் வித்தையை அடைவார். இவர் மந்திரங்களைச் சொல்லுவார். பூமியில் வியாபாரஞ் செய்வார். தன்னுடைய குலத்தை சேர்ந்தத் தந்தை பாட்டனுர் இவர்களுடைய சந்ததியார்களை அடைந்து ஜீவனஞ் செய்வாராகும்.

8. தந்தையி ஞர்ஜி தத்தைத் தானவன் விரும்பா ணுகும்
முந்தின பொருளும் சேர்ப்ப னுயர்வான குடும்பி யாவன்
எந்திடம் பெருமை யேற்பன் இலக்குமி வாசம் இந்நாள்
பிந்தியும் சொந்த இல்லம் பெறுவனும் பணியின் காலம்

8. ஜாதகர் தன்னுடைய தகப்பனுரின் சொத்தின் மேல் ஆசை இல்லாதவராவார். மேன்மையான சொத்துக்களைச் சேகரிப்பார். முயற்சி செய்கின்ற குடும்பஸ்தராவார். எந்தவிடத்திலும் இவருக்குப் புகழும் மேன்மையுமுண்டு. இவரிடத்தில் லட்சுமி இந்தக் காலத்தில் வாசஞ் செய்வாள். பின்னுல் ராகு தசைக் காலத்தில் * சொந்தமாக ஒரு வீட்டை அடைவார்.

* குறிப்பு.—ஜாதகருக்கு வயதுஞ 26-9-0-க்கு மேல் இராகு தசை வந்து ஞ 44-9-0 வரையிலும் இருக்கின்றது. இராகு, வீட்டிற்குரிய நான்காவது பாவமாகிய துலாத்திற்குடைய சுக்கிரனுடன் கூடிப் பன்னிரண்டில் இருந்துகொண்டு, பாக்கியாதிபதியும், சந்திரனுக்கு நான்கிற்குடைய வருமானகுருவாலும், லக்கினுதிபதியாகிய சந்திரனுலும் பார்க்கப்படுவதால் வீட்டை அடையும் அமைப்பு இருக்கிறது.

9. சிலதுநாள் கூட்டுச் செட்டுச் செய்து ஜீவிப் பானும்
நலமதை யெவர்க்கும் செய்வன் நாட்டினில் புகழு மேற்பன்
பலர்களால் பெருமை யேற்பன் பதர்குண மில்லா ணுகும்
பொருள்பின்னுல் பெருக்கம் செய்வன் புண்ணிய மனத்தா ணுகும்.

9. ஜாதகர் கொஞ்ச காலம் வியாபாரத்தைக் கூட்டாக இன்னொருவருடன் சேர்ந்த செய்து ஜீவனஞ் செய்வாராகும். எல்லோருக்கும் நல்லதையே செய்வார். தன் ஊரில் கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். அநேகரால் பெருமையாகப் பாராட்டப்படுவார். அற்பமான தாழ்ந்த குணமில்லாதவர். இவர் தன் பின் வயதில் சொத்துக்களை அதிகப்படுத்துவார். புண்ணியமான காரியங்களைச் செய்யக்கூடிய மனத்தையுடையவராவார்.

10. தன்துணை முன்நாரி மங்கும்முன் ஆண்பா லொன்று
அன்னவன் தீர்க்க ஜீவி அதன்பின்னுல் தோன்றும் தீதாம்
பின்துணை ஆண்பால் சேதி பேசுவோம் மால்நி றத்தன்
பன்னியே பேசு வானும் பாரது விருத்தி செய்வன்.

10. ஜாதகருக்கு முன்னே பிறக்கும் பெண் சகோதரம் இறந்து போய்விடும். மூத்த சகோதரன் ஒருவர் நீண்ட ஆயுளையுடையவர். அவருக்குப் பிறகு ஜாதகருக்கு முன்னே பிறப்பவர்கள் இறந்து போய் விடுவார்கள். ஜாதகருக்குப் பின்னுல் உண்டான ஆண் சகோதரனின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறேம். இவர் மகா விஷ்ணுவின் நிறமான மேகவர்ண நிறத்தையுடையவர். சுறுக்கமாகவும் திறமையுடனும் உறுதியாகவும் பேசுவார். நிலத்தைப் பயிரிட்டு விருத்தி செய்வார்.

11. கடன்படான் இடுக்க மில்லான் கருதிடான் கட்டு வார்த்தை
உடன்துணை சொல்தட் டாதான் உறுதியில் லாத நெஞ்சம்
தடபுடல் செய்கை யுண்டு தாட்சிண்யன் கனத்த புத்தி
அடவிலாப் பாரி ஒன்று மருவிடும் தீர்க்க மாக.

11. ஜாதகருடைய இளையசகோதரர் கடன் வாங்கமாட்டார். கஷ்டங்கள் இல்லாதவர். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லமாட்டார். தன்னுடைய சகோதரனுடைய பேச்சைத் தள்ளி அதற்கு மாறுபாடாக நடந்து கொள்ளமாட்டார். நிலையான மனமில்லாதவர். சபல புத்தியுள்ளவர். டம்பமாகவும் அவசரமாகவும் முரட்டுத்தனமாகவும் காரியங்களைச் செய்வார். தாட்சிண்யமுடையவர். தயாள குணமுடையவர். பெரிய புத்தியையுடையவர். மேன்மையான மனைவி ஒருத்தி வந்து இவருக்கு வாய்ப்பாள். அவள் நீண்ட ஆயுளையுடைவளாவாள்.

12. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
அதிபனும் தீர்க்க ஜீவி வறுமையெப் போதும் காணுன்
அவன்பிதா பின்னேன் தன்பால் ஒத்து பிரியாமே வாழ்வான்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

12. ஜாதகருடைய இளைய சகோதரருக்கு ஆண் குழந்தைகள் இரண்டு பேரும் பெண் குழந்தைகள் இரண்டு பேரும் நீண்ட ஆயுளையுடையவர்களாகவிருப்பார்கள். இவரும் நீண்ட ஆயுளையுடையவர்களாகவிருப்பார். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் எப்போதும் அடையமாட்டார்.

இவர் தன்னுடைய தகப்பனுருடைய இளைய சகோதரனை அடுத்து அவருடன் ஒற்றுமையாய்ப் பிரியாமல் இருந்து வாழ்வாராகும். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

13. பாலகன் மனத்தின் காலம் பகருவோ மிருபான் ரண்டுள்
நீலியும் வடகீழ் நேரும் நிகர்கங்கை வர்க்கம் தன்னில்
வேல்விழி குணத்தைச் சொல்வேன் விரதங்களுள்ளா ளாகும்
பால்பாக்கிய முடையா ளாகும் பசித்தோர்க்குத் தாக மீவள்.

13. ஜாதகருக்கு விவாகம் நடகின்ற காலத்தைத் தெரிவிக்கின்ரேம். இவருக்கு இருபத்திரண்டு வயதிற்குள்ளே * மனைவி வடகிழக்குத் திக்கில் வேளாளர் குலத்திலிருந்து வந்து நேரிடுவாள். இவளுடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். விரதங்களைச் செய்யாமல் விட்டு விடமாட்டாள், பால் பாக்கியம் உடையவளாவாள். பசியோடுள்ளவர்களுக்கு நீர் மோர் முதலியவைகளைக் கொடுப்பாள்.

* குறிப்பு.—விவாக விஷயம்.—ஜாதகருக்கு வயது ஷூ 21–0–0 முதல் 22–0–0 முடியும் வரையிலும் அங்கார தசையில் ராகுபுக்தி குருபுக்தி இவைகள் நடக்கின்றன. அங்காரகன் ஐந்திற்கும் பத்திற்கும் உடையவராய் லக்கினத்திலிருந்து கொண்டு களத்திர ஸ்தானமாகிய ஏழாவது வீட்டையும் போகஸ்தானமாகிய நான்காவது வீட்டையும் பார்ப்பதுடன் குடும்பாதிபதியாகிய சூரியனுடனும் சந்திரனுக்கு ஏழிற்குடைய புதனுடனும் கூடியிருக்கின்ருர். ராகு களத்திரகாரகனும் போகஸ்தானுதிபதியுமாகிய சுக்கிரனுடனும் கூடிச் சந்திரனுக்கு ஏழில் இருக்கின்ருர். ஆகையால் அங்காரகன் தசையில் ராகு புக்தியில் விவாகம் ஏற்பட அமைப்பு இருக்கிறது.

14. மங்கையும் தீர்க்க ஜீவி வருவோரை ஆத ரிப்பள்
மங்கையும் வந்த பின்பு நாயகன் தனக்கு யோகம்
பொங்கின குடும்ப மேற்பள் புவிதனில் நல்லோ ளாவள்
அங்கவள் தீர்கசீவி அம்பிகை யாளே கேளாய்.

14. ஜாதகருடைய மனைவி நீண்ட ஆயுளையுடையவள். தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு புருஷனுக்கு யோகமுண்டாகும். விருத்தியாகின்ற மேன்மையான குடும்பத்தை அடைவாள். பூமியில் நல்லவளாக இருப்பாள். இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு. பார்வதியம்மையே ! கேட்பீராக.

15. மதலைகள் ஆண்பால் மூன்று மங்கையு மிருவர் தீர்க்கம்
அதிபன்தன் முன்ஜன்மத்தை வரைகிறேம் புதுவை தன்னில்
நிதிமிக உடையா னுக்கு நேர்ந்துமே செட்டுச் செய்து
விதவித தலங்கள் சென்று வினையதைக் புகலக் கேண்மோ.

15. ஜாதகருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு. அவர்கள் நீண்ட ஆயுளையுடையவர்களாகவிருப்பார்கள். ஜாதகருடைய பூர்வஜன்மத்தைச் சொல்லுகிறேம். இவர் புதுச்சேரியில் அதிகப்

பணக்காரனுக்குப் பிறந்து வியாபாரஞ் செய்து பலவிதமான புண்ணிய ஸ்தலங்களுக்குப் போயும் இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகிறோம், கேட்பீராக.

16. கன்னிமேல் கலகம் சொல்லிக் கணவனை விட்டு நீக்க
அன்னவள் வருத்த முற்று அறைந்தசா பத்தைக் கேண்மோ
பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் ஜன்மம் தன்னில்
என்னைப்போல் மனைவி யின்றி யீன்றதாய்ச் சுகமு மின்றி ;

16. இவர் ஓர் இளம் பிராயமான ஸ்திரீயின் மேல் கலகத்தை உண்டு பண்ணக்கூடிய விபரீதமானதும் குற்றமானதுமான வார்த்தைகளைச் சொல்லி அவளை அவளுடைய புருஷனைவிட்டு நீக்கிவிடவே அவள் துன்பத்தையும் மனக்கவலையையுமடைந்து கொடுத்த சாபத்தைக் கேட்பீராக. ஒரு ஸ்திரீயின் மேல் பழியைச் சாட்டின பாவியாகிய உனக்கு உன்னுடைய மறு ஜன்மத்தில் என்னைப் போல மனைவி இல்லாமலும் பெற்றத் தாயாருடைய சுகங்கள் இல்லாமலும் ;

17. இல்லமும் விட்டு நீங்கி யேகுவாய் வெளியூர் தன்னில்
வல்லியும் சொல்லிச் சென்றாள் மருவிற்று அந்தச் சாபம்
நல்லதோர் தலங்கள் சென்று நமன்பதிக் காளா யின்னோன்
புல்குவா னிக்கு லத்தில் பூர்வமாம் சாபத் தாலே ;

17. நீ உன்னுடைய வீட்டை விட்டு வெளியூருக்குப் போய்விடக் கடவாய் என்று இவரைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அவளுடைய சாபம் ஜாதகரை அணுகிற்று. ஜாதகர் முன் ஜன்மத்தில் நல்ல புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய் இறந்து எமனிடத்திற்குச் சென்று இந்த ஜன்மத்தில் இந்த வேளாளர் குலத்திற் பிறந்தார். பூர்வ ஜன்மத்திய சாபத்தாலே ;

18. தந்தைதாய்ச் சுகமில் லாதான் தன்துணை கன்னி காணுன்
ஆயவே தந்தை யில்ல மடையாமல் வேறூர் வாசம்
நேயன்தன் குலத்தோ னுலே நிமலனும் ஜீவிப் பானும்
தீயரைச் சம்ம ரிக்கும் தேவியே கேட்டி டாயே.

18. ஜாதகர் தன்னுடைய தாயார் தகப்பனார் இவர்களால் சுகமடையாதவர். தன்னுடன் கூடப்பிறந்த சகோதரிகளும் இல்லாதவர். தன்னுடைய தகப்பனுருடைய வீட்டைத் தான் அடையாமல் இன்னொரு ஊருக்குப் போய் அவ்விடத்தில் வாசஞ் செய்வார். இவர் தன்னுடைய குலத்தைச் சேர்ந்த ஒருவரால் ஜீவனஞ் செய்வார். கெட்டவர்களைச் சம்மாரம் செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

19. மாதுரு நற்கு ணத்தாள் மனமது கபடு மில்லாள்
தீதான புத்தி யில்லாள் ஜனஉப காரி யாகும்
மேதினில் நல்லோ ளாவள் வறுமைப் போதும் காணுள்
பாதக மில்லா ளாகும் பர்த்தாவுக் கினிய ளாகும்.

19. ஜாதகருடைய தாயார் நல்ல குணமுடையவள். வஞ்சனை கள்ளம் இவைகள் இல்லாத மனத்தை உடையவள். கெட்டபுத்தியில்லாதவள். ஜனங்களுக்கு உதவியைச் செய்பவளாவாள். பூமியில் நல்லவளாகவிருப்பாள். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் எப்போதும் அடையமாட்டாள். கெடுதியான மனத்தை உடையவளல்லள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவளாவாள்.

20. இல்லமும் வடபா லாகும் இவள்துணை ஆண்பால் ஒன்று
வல்லியு மில்லா ளாகும் வரைகிறே மிவளின் பூர்வம்
எல்லையில் உயர்வ தான எழில்பட்சி தன்னி லேதான்
புல்லினுள் வன்னிய சேயாய்ப் புகழான குடும்பி யாகி ;

20. இவளுடைய வீடு வடக்குத்திக்கில் இருக்கும். இவளுடன் கூடப் பிறந்தவர்கள் ஆண் சகோதரர் ஒருவராவர். இவளுக்குச் சகோதரி கிடையாது. இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். பூமியில் உயரமாயுள்ளதும் மேன்மையாயுள்ளதுமான அழகியப் பட்சிஸ்தலம் என்று சொல்லப்பட்ட திருக்கழுக்குன்றத்தில் வணிகர் குலத்தில் பெண்ணுகப் பிறந்து புகழும் பெருமையுமுள்ள ஒரு குடும்பஸ்தையாகி ;

21. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் நகரம் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தன ளென்று சொல்வோம்
வரும்ஜன்மம் விரிஞ்சி தன்னில் வருவளாம் வணிபன் வம்சம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

21. தருமஞ்செய்வதில் ஆசையுடையவளாகி இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனுல் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவள் மறுஜன்மத்தில் விரிஞ்சிபுரத்தில் வணிகர் குலத்தில் வந்து பிறப்பாள். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

22. பரிதியின் தசையி லேதான் பகருவோம் தந்தை கண்டம்
திருமகன் தன்னைப் பெற்ற தேவியவ் வாண்டில் மாள்வள்
உரைக்கிறே மேழா மாண்டில் உறங்குவார் தந்தை தாயும்
வரும்ஜன்மம் தந்தைக் கேதான் வரைகிறோம் தாயே கேளும்.

22. ஜாதகருடைய தகப்பனுருக்குச் சூரியதசையில் மரணம் நேரிடும் என்று சொல்லுகிறோம். தகப்பனுர் இறந்துபோகும் வருஷத்திலேயே ஜாதகருடைய தாயாரும் இறந்துபோவாள். ஜாதகருக்கு ஏழாவது வயதில் * தகப்பனுரும் தாயாரும் இறந்துவிடுவார்கள். தகப்பனுருடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

*குறிப்பு.—தகப்பனுர் தாயார் மாரகங்கள்.—ஜாதகருக்கு வயது ௵ 6 முதல் ௵ 7 முடியும் வரையினும் சூரியதசையில் குருபுக்தி சனி புக்திகள் நடக்கின்றன. பிதுர்ஸ்தானமாகிய ஒன்பதிற்குடைய குரு ஆறுவது வீட்டில் கேதுவுடனும் சந்திரனுடனும் கூடி இருக்கின்றர். பிதுர்காரகனுகிய சூரியன் அங்காரகனுடனும் விரையாதிபதியாகிய புதனுடனும்

கூடி இருக்கின்றார். பிதுர்ஸ்தானாதிபதியாகிய குருவும் பிதுர்காரகனாகிய சூரியனும் ஒருவருக்கொருவர் ஆறு எட்டில் இருக்கின்றார்கள். இவைகள் தோஷத்தை விளைவிக்கக்கூடியவை. சந்திரனுக்கு ஒன்பதில் சனியும் சந்திரனுக்குப் பிதுர்ஸ்தானத்திற்குரியவரும் பிதுர் காரகனுமான சூரியன் எட்டில் விரையாதிபதியாகிய அங்காரகனுடனும் இருக்கின்றார். சந்திர னுக்கு ஒன்பதாவது வீட்டை ராகுவும் பார்க்கின்றார். இவைகயெல்லாம் பிதாவுக்குத் தோஷத்தை உண்டுபண்ணக்கூடியவையாகும். ஆகையால் ஜாதகருக்கு தகப்பனார் நீண்டகாலம் உயிருடன் இருக்கமாட்டார். மீன லக்கினத்திற்குச் சனி புதன் சூரியன் சுக்கிரன் இவர்கள் பாராசரஹோரை ஜாதகசந்திரிகை பிரகாரம் மாரகாதிபர்கள் ஆகையால் சூரியதசையில் சனிபுக்தியில் பிதுர்மரணம் நேரிட அமைப்பு இருக்கிறது. மாதுர் லக்கினம் துலாம். இதைச் சனி அங்காரகன் கேது இவர்கள் பார்க்கின்றார்கள். துலாத்திற் குடைய சுக்கிரன் லக்கினத்திற்குப் பன்னிரண்டில் ராகுவுடன் மறைந்துபோய் இருக்கின்றார். சந்திரன் கேதுவுடன் இருக்கின்றார். சந்திர னுக்கு நான்கிற் குடையவரான குரு கேதுவுடன் கூடி இருக்கின்றார். மீனத் திற்கு ஆயுள் ஸ்தானாதிபதியாகிய சுக்கிரன் ராகுவுடன் கூடி இருக்கின்றார். இந்த ஆயுள் ஸ்தானத்தை அங்காரகனும் கேதுவும் பார்ப்பது பிரதிகூல மானது. சனி பார்ப்பது இந்த விதத்தில் அனுகூலமானது. ஆகையால் ஜாதகரின் மாதா வெகுகாலம் இருக்க அமைப்பு கிடையாது. துலாத்திற்கு மாரகாதிபதிகள் சூரியன் குரு (பாராசரைஹோரை சில பதிப்புபிரகாரம்) அங்காரகன் ஆகின்றார்கள். சூரியன் அங்காரகனுடனும் கூடி இருக்கின்றார். சனி துலாத்திற்குப் பதினொன்றில் இருந்துகொண்டு மாதுர் லக்கினத்தை யும் பார்க்கின்றார். ஆகையால் சூரியதசையில் சனிபுக்தியில் மாதவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது. ஜன்மலக்கினத்திற்கு பிதுர்ஸ் தானமும் சந்திரனுக்கு மாதுர்ஸ்தானமும் ஒன்றாக நேரிடுவதைக் கவனிக் கவும். மாதுர்ஸ்தானாதிபதி மாதுர்காரகன் பிதுர்ஸ்தானாதிபதி இவர் களுக்குச் சம்மந்தம் இருப்பதையுங் கவனிக்கவும்.

23. சிறுபாக்கம் தன்னி லேதான் ஜனிப்பனும் ரெட்டி வமிசம்
பொருள்பூமி அதிக முண்டாய்ப் பெரிதான குடும்பி யாகி
உறைகுவா னென்று சொல்வோம் உரைத்தனம் மொழிகுன்றாது
அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளே கேளாய்.

23. சிறுபாக்கம் என்ற ஊரில் ரெட்டியாருடைய குலத்தில் ஜாதகருடைய தகப்பனார் மறுஜன்மத்தில் பிறப்பார். தனமும் நிலமும் அதிகமாக உடையவராகிப் பெரிய குடும்பஸ்தராகி வாழ்வார் என்று சொல்லு கிறோம். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப்போகாமல் நடக்கும். அருமையான வேதங்களின் தீர்மானம் என்ற உப நிஷத்துக்களில் விளங்கு கின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

24. அன்பது எட்டு ஆண்டில் அணுகிய மகர மாதம்
இன்னவ னுடலமேகும் மியம்புவோ மிவன்பின் ஜன்மம்
பொன்முக ராற்றி னோரம் பேரூரில் வைசியச் சேயாய்
அன்னவ னுதிப்பா னுகும் அம்பிகை யாளே கேளாய்.

24. ஜாதகர் தனக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் தைமாதத் தில் * இறந்து இவருடைய தேகம் அழிந்துபோய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். பொன்முகராற்றின் கரையோரத்தில் ஒரு பெரிய ஊரில் வைசியகுலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார் என்று சொல்லுகிறோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

* குறிப்பு.—ஜாதகர் மரணம்—வயது ௵ 57–0–0 முதல் ௵ 58–0–0 முடியும் வரையிலும் குருதசையில் சந்திர அங்காரக புக்திகள் நடக்கின்றன. தைமாதத்தில் அங்காரகபுக்தி நடக்கின்றது. ஆயுள்பாவத்தை ஆராய்ச்சி செய்யுங்கால் லக்கினாதிபதியாகிய சந்திரன் ஆறில்மறைந்துவிட்டார். எட்டிற் குடைய சனி இரண்டில் குருபார்வையையும் ராகு பார்வையையும் அடைந்து இருக்கின்றார். சனி பகைவீட்டில் இருக்கின்றார். பத்திற்குடையவரான அங்கா ரகன் லக்கினத்தில் நீசமாக விருக்கின்றார். பத்தைக் குரு பார்க்கின்றார். லக்கினத்தில் நைஸர்கிக பாபிகளாகிய சூரியனும் அங்காரகனும் இருக்கின் றார்கள். புதனும் இருக்கின்றார். நைஸர்கிக சுபர்களாகிய குருவும் சுக்கிரனும் மறைந்துவிட்டார்கள். சந்திரனும் மறைந்துவிட்டார். எட்டைக் கேதுவும் சனியும் அங்காரகனும் பார்க்கின்றார்கள். ஆகையால் மணிகண்டகேரளம் அரிஷ்டகாண்டம் 18-ஆவது பாடல், பிரதி யரிஷ்டகாண்டம் 40-ஆவது பாடல், துய்யகேரளம் எட்டாம் பாவம் 4-ஆவது, 5-ஆவது பாடல்கள் பிரகாரம் ஜாதக ருக்கு மத்திமாயுளில் பூர்ணயுளாகும். அஃதாவது 55⅓ முதல் 66⅔௵ வரையிலும் ஆகும். குருதசை ஆறாவது தசையாக வருகிறது. ஆறாவது தசை குருதசையாக வந்தால் மாரகஞ்செய்யும் என்பது ஜாதகாலங்காரம் 975-ஆவது பாடல் பிரகாரமுள்ள ஒரு கொள்கையாகும். குருவிற்கு தனுசு சந்திர லக்கினாதிபத்தியம் வந்ததால் அந்த வீட்டைச் சார்ந்த தசையின் முற்பாதியில் மாரகஞ்செய்ய அதிகாரம் கிடையாது. கடகலக்கினத்திற்குப் பராசர ஹோரைப் பிரகாரம் புதன் சுக்கிரன் சனி இவர்கள் மாரகாதிபர்கள். குரு லக்கினாதிபதியான சந்திரனுடன்கூடி எட்டிற்குடையவரான சனியையும் மாரகாதிபதியான சுக்கிரனையும் பார்க்கின்றார். ஆகையால் குரு துய்ய கேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் பிரகாரம் மாரகராகின்றார். அங்கார கன் மாரகாதிபதியாகிய புதனுடன்கூடி நீசமாகி லக்கினத்திலிருந்து கொண்டு எட்டைப் பார்ப்பதால் மாரகாதிபதி யாகின்றார்.

25. பிறந்திடுங் காலம் தன்னில் பூராடம் கடைப்பாதத்தில்
சிவந்தசுக் கிரனி ருப்புத் திரிதிய ஆண்டு மாகும்
உரைந்திடு திங்க ளொன்பான் உரைத்தனம் பூர்வ பாகம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

25. ஜாதகர் ஜெனித்த காலம் பூராட நட்சத்திரத்தில் கடைசி பாத மாகிய நான்காவது பாதமாகும். அதற்குரிய சுக்கிர மகா தசையில் செல்லுப்போய் இருப்பு நின்ற வருஷம் மூன்றும் மாதம் ஒன்பதுமாம் என்று சொல்லுகிறோம். இவ்விதமாகப் பூர்வபாகமாகிய முதல்பாதத்தைச் சொன்னோம். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே! கேட்பீராக.

26. ஆருண்டிலி லில்லம் வேறு அறைகிறேம் தாதை ஆஸ்தி
தீரமாய்ப் பாகம் ரண்டாய்ச் செப்புவோம் பால னுக்குப்
பாருக ளதிகம் சேர்க்கை பந்துவின் மதிப்புக்கொள்ளல்
கூறுவோம் பின்பால் சேதி கோமளி கேட்டி டாயே.

26. ஜாதகருக்கு ஆருவது வயதில் இவர் வேறே ஒரு வீட்டிற்குப் போய்விடுவார். தகப்பன் பாட்டனுர் இவர்களுடைய சொத்தில் இரண்டு பாகத்தில் ஒருபாகம் ஜாதகருக்கு வந்து சேரும். இவருக்கு நிலங்கள் அதிகமாக வந்துசேரும். பந்துக்கள் இவரை மதிப்பார்கள். மற்ற விஷயங்களைப் பின்னுல் பின்பாகத்தில் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 78

1. சந்திரன் ராகு மீனம் சல்லியன்[1] புதனும் வீணை[2]
பொன்[3]கோலில்[4] சேயும்[5] மேரு[6] புரவியோன்[7] அலவன்[8] புக்க
மந்தனும்[9] மான[10] தாக வண்டியும்[11] ஜனன மாக
இந்ததோர் பலன்க ளெவ்வாறு இயம்புவீர் முனியே நீர்தாம்.

சந்திரன் ராகு			சுக்கிரன் புதன்
	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன்
சனி			
அங்காரகன்		குரு	கேது

உத்தரட்டாதி 4-ஆம் பாதம். சனி தசை 1–2–0

1. சந்திரனும் ராகுவும் மீனத்திலும், சுக்கிரனும் புதனும் மிதுனத்திலும், குரு துலாத்திலும், அங்காரகன் தனுசிலும், சூரியன் கடகத்திலும், சனி மகரத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் கடகமானுல் பலாபலன்கள் எவ்விதமாகவிருக்கும் என்பதை, முனிவரே ! நீர் சொல்லுவீராக.

குறிப்பு.—இந்த ராசிசக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் புதனும், மிதுனத்தில் அங்காரகனும் கேதுவும், சிம்மத்தில் சனியும், கன்னியில் சூரியனும், விருச்சிகத்தில் சந்திரனும் குருவும், தனுசில் ராகுவும், மீனத்தில் புதனும் ஆகும். அங்காரகனும் சனியும் வக்கிரகதியில் இருக்கின்றுர்கள்.

2. பிருகுவும் புகனு கின்றுர் பிறந்தது மாண்பால் ஜன்மம்
வருமில்லம் கீழ்மேல் வீதி வாசனு உத்தர நோக்கம்
பெருவயி றப்பன் கீழ்ப்பால் பிரிதிவி தலமே யாகும்
முருகன்தன் கோஷ்ட முத்தரம் முக்கண்ண ைருகில் தங்கும்.

[1] சுக்கிரன். [2] மிதுனம். [3] குரு. [4] துலாம். [5] அங்காரகன். [6] தனுசு. [7] சூரியன். [8] கடகம். [9] சனி. [10] மகரம். [11] கடகம்.

2. பிருகு மகரிஷி சொல்லுகின்றார் பிறந்த குழந்தை ஆண் குழந்தை ஆகும். பிறந்தவீடு கிழக்கு மேற்குத் தெருவில் இருக்கும். தெரு வாயிற்கால் வடக்குத்திக்கைப் பார்த்தாற்போல் இருக்கும். பெரிய வயிற்றையுடைய விநாயகக்கடவுளின் கோயில் கிழக்குத்திக்கில் இருக்கும். பிரிதிவிஸ்தலம் என்று சொல்லப்பட்ட காஞ்சீபுரம் பிறந்த ஊராகும். முருகக் கடவுளுடைய கோயில் வடக்குத்திக்கில் இருக்கும். பரமசிவனுடைய கோயில் அருகாமையில் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாசம் அரசர்கள் தென்பால் தங்கும்
சொன்னயிவ் வடையா ளத்துள் தோன்றுவான் தசம ஜன்மம்
அன்னவன் வைசியச் சேயாய் ஆயிரம் கோத்தி ரத்தில்
மன்னனும் வருவா னுகும் வரைகிறேம் குடும்பச் சேதி.

3. இன்னமும் அனேக தேவர்கள் தேசத்தார்கள் இந்தப்பட்டணத்தில் வாசஞ் செய்வார்கள். அரசர்கள் தெற்குத்திக்கில் இருப்பார்கள். இங்குச் சொல்லப்பட்ட அடையாளங்களுக்குள்ளுள்ளவிடத்தில் ஜாதகர் பத்தாவது கர்ப்பத்தில் பிறப்பார். இவர் வைசியகுலத்தில் ஆயிரம்கோத்திரம் என்னும் கோத்திரத்தில் வந்து பிறப்பாராகும். இவருடைய குடும்பத்தின் விஷயங்களைச் சொல்லுகிறோம்.

வேறு.

4. தந்தைகுணம் மாநிறத்தான் சமதேகத்தான்
சமர்த்தாக வார்த்தைசொல்வன் வணிபம் செய்வன
சிந்தையினில் கபடமில்லான் ஊசைகாயன்
செய்நன்றி மறவாதான் தீர்க்க நெஞ்சம்
கந்தன்மேல் பத்தியுள்ளான் பூமி சேர்க்கான்
கட்டுரையான் மனைவியிஷ்டன் காம னொப்பான்
அந்தவன் பூசநாளாம் தேளின்[1] ராசி
அனுகுவான் துணைதோஷம் அறிவித் தோமே.

4. ஜாதகருடைய தகப்பனுரின் குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் மாநிறமான சமமான தேகத்தையுடையவர். இவர் சாமர்த்தியமாக வார்த்தைகளைச் சொல்லுவார். வியாபாரஞ்செய்வார். மனத்தில் கள்ளம் வஞ்சனை இவைகள் இல்லாதவர். ஜனங்களுக்கு உதவியைச் செய்வார். பிறர் இவருக்குச்செய்த உதவியை மறந்துவிடாதவர். திடமான உறுதியான மனத்தை யுடையவர். முருகக்கடவுளின்மேல் பக்தியையுடையவர். நிலங்களைச் சேகரிக்கமாட்டார். பொய்வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் சொல்லமாட்டார். மனைவியின்மேல் ஆசையையுடையவர். மன்மதனைப்போல அழகாகவிருப்பார். இவர் பூச நட்சத்திரத்தில் விருச்சிக ராசியில் பிறப்பார். இவருக்குச் சகோதரதோஷம் உண்டு என்று சொல்லுகிறோம்.

[1] விருச்சிகம்.

வேறு.

5. மரமாட்டும் தொழிலுடையான் வருவோரை
ஆதரிப்பன் வெகுளி யாவன்
குருவுபதேசம் கொள்வன் குணமிரண்டு
வாயுநோய் குலவும் கொஞ்சம்
விரைவில்நடை செலவுசெய்வன் வெஞ்சினத்தை
வெளிக்காட்டாதான் விருந்தோர் நேயன்
கரமதனில் பிர்ம்மவரி காணுமென்றேம்
சகடுமுளான் கடந்தோர் புத்தி.

5. தகப்பனுர் மரத்தைக் கடாவுதல் என்ற தொழிலைச் செய்பவராவார். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவார். கோபத்தையுடையவர். குருவிடத்தில் உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளுவார். நல்லகுணம் கெட்டகுணம் ஆகிய இரண்டுவிதமான குணங்களை யுடையவர். இவருக்குக் கொஞ்சம் வாயுரோகமிருக்கும். சீக்கிரமாகவும் வேகமாகவும் நடப்பார், செலவு செய்பவர். கடுமையான கோபத்தைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார். விருந்தாளிகளிடத்தில் நேசமாக விருப்பார். தன்னுடைய உள்ளங்கையில் பிரம்மரேகை என்ற ஒருவிதமான ரேகையை யுடையவ ரென்று சொல்லுகிறோம்.

6. இந்நெறி யுடையா னுக்கு இவனு யுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைக் கேண்மோ அழகுளான் சிவந்த மேனி
தன்சொலு மடக்க முண்டு தானிள மனத்தா னுகும்
அன்னிய ருறவு கொள்ளான் அடாவடி தன்னில செல்லான்.

6. இப்படிப்பட்ட குணங்களை யுடையவருக்கு இந்த ஜாதகர் பிறப்பாராகும். இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகிறோம். கேட்பீராக. இவர் அழகானதும், சிவப்பானதுமான நிறமுடைய தேகத்தை யுடையவர். தன்னுடைய வார்த்தைகளை அடக்கமாகவும், சாந்தமாகவும் சொல்லுந் தன்மையை யுடையவர். இளகியதும் தயைக் குண முடையதுமான மனதையுடையவராவார். பிறருடைய சினேகதத்தை அடையக்கூடியவரல்ல. அநியாயமாகவும், முரட்டுத்தனமாகவும் நடந்து கொள்ளமாட்டார்.

7. தந்தையி னுர்ஜிதத்தில் தானவன் வாசம் செய்யான்
கந்தன் மேல் விருப்பம் கொள்வன் கண்முகம் வசியமுள் [ளான்
அந்தவ னுத்தரத்தில் அனுகியே வாழ்வா னுகும்
விந்தையாய்ச் செட்டுச் செய்வன் விலைமாதர் மோகம் கொள்ளான்.

7. ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய சொத்தாகிய வீட்டில் வாசஞ் செய்யமாட்டார். முருகக் கடவுளின் மேல் பத்தியையுடையவர். ஜாதருடைய கண்களும் முகமும் பிறரை வசியஞ் செய்து கொள்ளும் படியானவைகளாகவும் கவர்ச்சிக்கும்படியான்த் தன்மையை யுடையவ

வாகவுமிருக்கும். இவர் வடக்குத் திக்கில் போய் வாழ்வாராகும். ஆச்சரியமாச் வியாபாரஞ் செய்வார். பணத்திற்கு ஆசைப்பட்டுவருகின்ற ஸ்திரீகளாகிய தாசிகளின் மேல் காம ஆசை இல்லாதவராவார்.

8. பலருக்கும் பந்தி னர்க்கும் பரிந்துப சாரம் செய்வன்
நிலையதைக் காப்பா ருைம் நிதம்சீலன் பெருமை யுண்டு
தலம்தீர்த்தம் தோய்வா ருைம் சார்ந்திடு மாமி மூன்று
நலமதை யெவர்க்கும் செய்வன் நற்கரம் பத்ம ரேகை.

8. ஜாதகர் பலருக்கும், பந்துக்களுக்கும் முன்வந்து ஆசையுடன் உபசரணை உபகாரம் ஊழியம் இவைகளைச் செய்வார். தன்னுடைய அந்தஸ்தையும் தொழிலையும் காப்பாற்றிக்கொள்ளுவார். எப்பொழுதும் நன்னடக்கையும் நல்லொழுக்கமும். கீர்த்தியும் உடையவர். புண்ணிய ஸ்தலத்திலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வார். இவருக்கு மூன்று மாமிமார்கள் இருப்பார்கள். எல்லோருக்கும் நல்லதையே செய்வார். தன்னுடைய அழகான நல்ல கையில் பத்மரேகை என்ற தாமரை ரேகையை உடையவர்.

9. சிலது நாள் வெளிதே சத்தில் சென்றுபின் உள்ளூர் சேர்வன்
விலகுநாள் சொல்லு மென்ன வித்தகனீரெட் டின்மேல்
குலவுவான் ஆரு நின்மேல் குடியினில் வாசம் செய்வன்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன்றுது.

9. ஜாதகர் வெளி தேசத்திற்குக் கொஞ்சநாள் போயிருந்து பின்னுல் மறுபடியும் தன்னூருக்கு வந்து சேருவார். இவ்விதமாக நேரு கின்ற காலத்தைச் சொல்லுவீரென்று கேட்க, பதினறு வயதிற்குமேல் வெளியூருக்குப் போய் அவ்விடமிருந்து முப்பத்தாருவது வயதிற்கு மேல் உள்ளூருக்குத் திரும்பி வந்து தன்வீட்டில் வாசஞ்செய்வார். இமய மலைக்கு அரசனுகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப்போகாமல் நடக்கும்.

10. அன்னியர் உதவி யாலே அவனுமே ஜீவிப் பானும்
பொன்பொருள் அலைச்சல் நேரும் புகழது ஏற்பா ருைம்
தன்னினத் தவரு மெச்ச ஜதகன் வாழ்வா ருைம்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா னுமே.

10. ஜாதகர் பிறருடைய உதவியால் ஜீவனஞ்செய்வார். தனமும் சொத்துக்களும் உண்டாகும். திரிச்சல்களும் கஷ்டங்களும் உண்டாகும். இவருக்குக் கீர்த்தி உண்டாகாது. தன்னுடைய பந்துக்கள் இவரைப் போற்றும்படியான நிலையிலிருந்து வாழ்வாராகும். அவயவக் குற்றங்களும் பங்கமும் இல்லாத தேகத்தையுடையவர். அன்னியர்களின் மேல் குற்றத்தையும் பழியையும் சொல்லாதவ ராவார்.

11. தன்துணை தசமே தோன்றும் தவறிடும் கன்னி நான்கும்
அந்தவர் சிலவே துன்பம் அறிவிப்போம் பின்பால் சேதி
அன்னவன் துணைஆண தோஷம் அறிவிப்பீர் முனியே நீர்தாம்
உன்னத மூன்றில் கேது உறைந்ததுமே சேய்[1] மாறில்;

11. ஜாதகருக்குச் சகோதரர்கள் பத்துப்பேர் பிறப்பார்கள். இவர்களில் நான்கு சகோதரிகள் இறந்துவிடுவார்கள். இருப்பவர்களில் சிலருக்குக் கஷ்டங்கள் நேரிடும். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னுல் சொல்லுகிறோம். ஜாதகருடைய ஆண் சகோதரங்களுக்குத் தோஷமுண்டு என்று சொல்லுகின்றீரே ! அதற்குக் காரணங்களை, முனிவரே ! நீரே சொல்லுமென்று கேட்க, மூன்றுவது பாவத்தில் கேது வனுவாய் இருப்பதாலும், அங்காரகன் ஆருவது வீட்டிலும் ;

12. இருப்பதால் துணைஆண தோஷ மியம்பினேம் முனியே கேளும்
திருமகன் மணத்தின் காலம் செபுவோ மூவெட் டாண்டில்
அறிவையும் உள்ளூர் கீழ்ப்பால் அணுகிடும் குணத்தைச் சொல்வேன்]
மருமமில் லாதா ளாகும் மாநிறம் கபடு மில்லாள்.

12. இருப்பதால் ஜாதகருடைய ஆண் சகோதரர்களுக்குத் தோஷத்தைச் சொல்லுகிறோம். முனிவரே ! கேட்பீராக. ஜாதகருக்குக் கலியாணமாகுங் காலத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு இருபத்துநான்காவது *வயதில் உள்ளூரிலேயே கிழக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணுதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இரகசியத்தைத் தன் மனத்தில் வைத்துக்கொண்டிருக்க மாட்டாள். மாநிறமுள்ள தேகத்தையுடையவள். வஞ்சனை கள்ளம் இவைகளைத் தன்னுடைய மனத்தில் வைத்திருக்காதவளாவாள்.

* குறிப்பு :—விவாக காலம்—ஜாதகருக்கு வயது ஷ 23–0–0 முதல் 24–0–0 முடியும் வரையிலும் கேது தசையில் குருபுக்தி சனிபுக்திகள் நடக்கின்றன. கேது புதனுடைய வீட்டில் இருக்கின்றார். போக ஸ்தானமும் நாலாவது வீடுமாகிய துலாத்திற்குடைய களத்திரகாரனுகிய சுக்கிரனுடன் புதன் கூடி இருக்கின்றார். புதனை ஒன்பதிற்குடைய குருவும் நாலாவது பாவத்திலிருந்து பார்க்கின்றார். சனி ஏழாவது பாவத்தில் களத்திரஸ்தானுதிபதியாகி போகக்காரனுகிய இராகுவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஆகையால் கேதுதசையில் சனிபுக்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கிறது.

13. தோகைபோல் சாய லொக்கும் சொல்லு முன கோபியாவள்
நாகரி கங்க ளுண்டு நாயகன் மனதுக் கேத்தோள்
பாகமாய்ப் பேச வல்லாள் பரிந்துப சாரம் செயவள்
ஊகையாள் பித்த தேகி உண்மையாம் மனத்தா ளாமே.

[1] அங்காரகன.

13. மனைவி மயிலைப் போல நடை நொடி பாவனையுள்ளவள். பேசுவதற்கு முன்னமே கோபத்தையுடையவள். நல்ல நாகரிகங்களை யுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல நடந்துகொள்ளுவாள். பக்குவமாகவும் சாமர்த்தியமாகவும் பேசுஞ் சக்தியும் திறமையுமுடையவள். இவள் முன்னுக்கு வந்து ஆசையுடன் பிறருக்கு உபசரணை உதவி ஊழியம் இவைகளைச் செய்வாள். புத்திசாலி யானவள். பித்தமான தேகத்தையுடையவள். உண்மையாக நடந்து கொள்ளும்படியான மனத்தையுடையவளாவாள்.

14. வந்தபின் யோகம் வாய்க்கும் வயதுமே தீர்க்க மெய்தும்
சந்ததி உதிக்கில் தீதாம் சாற்றுவீ ரந்தச் சங்கை
மைந்தர்தாம் தோன்றி னூனு மதியுடன் ராகு கூட
இந்தவார் தோஷத் தாலே யியம்பினேம் புத்திர தோஷம்.

14. மனைவி புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு யோக முண்டாகும். இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு. குழந்தைகள் பிறந்தால் அவைகளுக்குக் கெடுதி உண்டாகும். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, புத்திரஸ்தானாதிபதியாகிய அங்காரகன் ஆறுவது வீட்டிலும், சந்திரன் ராகுவுடன் கூடியும் இருப்பதால் புத்திர தோஷம் உண்டு என்று சொல்லுகிறோம்.

15. அத்திரி தடுத்துச் சொல்வார் அவனுக்குத் தாரம் ரண்டு
சுத்தமாய் நேரு மென்றோம் செப்புவீ ரந்தச் சங்கை
சத்தமன் சனியே யாகி சரத்தினி லிருப்ப தாலும்
வித்தகன் தனக்குத் தாரம் மேவிடு மிரண்டே யாக.

15. அத்திரி மகரிஷியானவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டு. இந்த இரண்டு மனைவிகளும் நிச்சயமாய் வந்து சம்பவிப்பார்கள் என்று சொல்லுகிறோம். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, ஏழிற்குடையவர் சனியாகி சர ராசி லிருப்பதால் ஜாதகருக்கு இரண்டு தாரங்கள் உண்டாகும்.

16. குறுமுனி புகலு கின்றார் கூறினேம் தாரம் ஒன்று
பிருகுக்கு அஞ்சில் பொன்னேன் பிறையது தசமம் தங்கக்
கரியவ னாட்சியாகக் கவிக்கேழில் சேயும் தங்க
மருவாது வேறு தாரம் மாமுனி தோஷத் தாலே ;

16. குறுமுனியாகிய அகஸ்திய மகாமுனிவர் சொல்லுகின்றார். ஜாதகருக்கு ஒரே ஒரு தாரம்தான் என்று சொல்லுகிறோம். சுக்கிரனுக்கு ஐந்தாவது வீட்டில் குருவிருப்பதாலும்,சந்திரன் பத்தாவது வீட்டிலிருப்பதாலும், சனி ஆட்சியாயிருப்பதாலும், சுக்கிரனுக்கு ஏழாவது வீட்டில் அங்காரகன் இருப்பதாலும் இன்னொரு மனைவி வந்து நேராது. ஆனால் பெரிய முனீசுவரருடைய தோஷத்தால் ;

17. பிறக்கும்சேய் நசிக்கும் என்றோம் பேதை முன் சென்மம் தன்னில்
மருவிற்று வினைய நேகம் வரைகுவீர் அந்தச் சங்கை
திருமகள் பூர்வம் கேளாய் திருவானைக் காவல் தன்னில்
உறைந்தனள் வன்னிய சேயாய் உயர்வான குடும்பி யாகி ;

17. ஜாதகருக்குப் பிறக்குங் குழந்தைகள் இறந்து போய்விடும். மனைவிக்கு முன் ஜன்மத்தில் அனேக பாவங்கள் வந்து சம்பவித்தன. அந்தக் காரணங்களையும் பாவங்களையும் சொல்லுவீர் என்று கேட்க, மனைவியினுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். கேட்பீராக, திருவானைக்காவல் என்னும் க்ஷேத்திரத்தில் இவள் வணிகர் குலத்தில் பெண்ணாகப் பிறந்து மேன்மையான குடும்பஸ்தையாகி ;

18. வினையதைப் புகலக் கேண்மோ வித்தகி கொல்லை தன்னில்
சினமுள கருப்பன் வாசம் தொழுவராம் முன்னோ ரெல்லாம்
வனிதையும் பூசிக் காமல் மருமமாய் நின்றா ளென்றோம்
வினையான முனியின் சாபம் புக்கிற்றுப் பாவைக்கே தான்.

18. மனைவி வாழுகின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைக் கேட்பீராக. இவள் தன்னுடைய வீட்டுப் புழக்கடையில் ஒரு கோபமுள்ளதும் கருவுகளைக்கலைக்கின்றதுமான முனீசுவரன் வாசஞ் செய்து கொண்டிருந்தார். இவளுடைய பெரியோர்களெல்லாம் அவரைத் தொழுது பூஜைசெய்து வந்தார்கள். இவள் இந்த முனீசுவரனைப் பூஜை செய்யாமல் கபடமாக இருந்து விட்டாள் என்று சொல்லுகிறோம். அதன் மேல் இந்த முனீசுவரன் சாபத்தைக் கொடுக்கவே இந்தச் சாபம் இவளை வந்து அடைந்தது.

19. கன்றுக்குப் பால்விடாமல் கறந்தன ளது வோர் தோஷம்
முன்னோர்க்குக் மகவு பாலை யுதவாத சாபம் ஒன்று
இன்னவார் தோஷம் தானுமி லடிடும் பாவைக் கேதான்
குன்றிய மனத்த ளாகிக் குழவிகள் முனியால் மாண்டு ;

19. இவள் கன்றுக்குட்டிக்குப் பாலைவிடாமல் எல்லாப் பாலையும் கறந்து விட்டாள். இது ஒரு தோஷமாக ஏற்பட்டுவிட்டது. முதல் குலத்தோராகிய பிராமணருடைய குழந்தைக்குப் பாலைக் கொடுக்காமல் இவள் இருந்து விட்டாள். இதுவுமொரு சாபமாக நேரிட்டு விட்டது. இவ்விதமான தோஷங்கள் எல்லாம் இவளை வந்து அடைந்தன. இவள் நொந்தும், துன்பமுள்ளதுமான மனத்தையுடையவளானாள். இவளுடைய குழந்தைகள் முனீசுவரருடைய செயலால் இறந்து ;

20. மனமது வருத்த முற்று மறலியின் பதிக்குச் சென்று
வினையுள செக்கான் வமிசம் மேவுவா ளிந்த மாது
முனிசாப மிச் சென்மத்தில் மேவிடும் சுதர்கள் தோஷம்
சினமுள முனியின சாபம் தீரவே கிரியை சொல்வீர்.

20. இவள் தன்னுடைய மனது நொந்து, இறந்து எமபட்டணத் திற்குப்போய் முன் ஜன்மத்திய பாவங்களுடன் செக்காடும் வைசியர் குலத்தில் வந்து பிறந்தாள். முன் ஜென்மத்திய முனீசுவரருடைய சாபம் இந்த ஜன்மத்தில் இவளை வந்து அடையும், அதனால் குழந்தைகளுக்குத் தோஷம் உண்டாகும், அந்தக் கோபமுள்ள முனீசுவரருடைய சாபத்தை நிவர்த்தி செய்ய ஒரு சாந்தியைச் சொல்லுவீர்.

21. கரும சாந்திகளும் செய்து காதலி பீஜம் தன்னை
இரணிய ரேக்கில் ஊறியிவளுமே அணிவாளாகில்
திருகான பூமியின் சாபம் தீர்ந்திடும் சுதர்கள் விருத்தி
குறை யென்று செய்யாளாகில் குழவிகள் விருத்தி சேதம்.

21. இவள் கர்மசாந்திகளைச் செய்து பீஜாக்ஷரங்களை ஒரு பொன் ரேக்கில் எழுதித் தன் தேகத்தில் தரித்துக் கொள்வாளாகில் இந்தப் பூமியில் உண்டான வஞ்சனையான சாபம் நீங்கிவிடும். குழந்தை களும் பிறந்து விருத்தியடைவார்கள், இதில் ஒன்றும் பிரயோஜனம் இருக்காது என்று எண்ணி இதைச் செய்யாமல் இருந்துவிட்டால் குழந்தைகள் விருத்தியாகா.

22. சாந்தியின் விவரம் தன்னைச் சாற்றுவீர் முனியே நீர் தாம்
யேந்திய கலச மொன்பான் இருபிம்பம் சமித்து தானியம்
சூர்ந்துமே ஆடை சாற்றி கோமளி மூலம் தன்னை
யேந்திழைக் காடை சாத்தி இசைகுவாய் சாஸ்திரம் தான்.

22. சாந்தியைச் செய்கின்ற விவரங்களை முனியே ! நீங்கள் சொல்லு வீர் என்று கேட்க, ஒன்பது கலசங்களைத் தயாரித்து சமித்துக்களையும் தான்யங்களையும் உபயோகப்படுத்தி இரண்டு பிம்பங்களை ஆடையுடன் அலங்கரித்து இவள் நல்ல ஆடைகளை உடுத்திக்கொண்டு மூலாதாரத்தை உபயோகித்துச் சாஸ்திரங்கள் பிரகாரம்

23. அக்கினி வளத்தி யேதான் சத்தியை அபிஷேகித்து
தக்க பின்னுளில் சத்தி பூசையால் சகஸ்திரம் சொல்லி
மைக்குழல் மாதணிந்து மங்கள வார நோன்பு
முக்கிய மாண்டு கொள்ள முனிதோஷம் விலகியேதான்.

23. அக்கினிகுண்டம் ஒன்றை வளர்த்தி அபிஷேகம் செய்து பிறகு சக்தியைப் பூஜை செய்து சகஸ்திரநாமங்களைச் சொல்லி அணிந்து கொள்ளுவாளாகில் செவ்வாய்க் கிழமை விரதம் ஒரு வருஷம் இருந்தால் அந்த மூனீசுவரருடைய சாபம் நீங்கி.

24. சுதர்களும் வினையாலஆணொன்று தோகையு மிரண்டு தீர்க்கம்
இது நிற்க உதித்தோன் பூர்வம் யியம்புவோ மினிமேலாக
பதியினிலுயர்வதான பர்வத குன்ற நாட்டிலே தான்
நதிகுல மதனி லுதித்து நாயகி மதலை யுண்டாய்.

24. ஒரு ஆண்குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் இவள் செய்த சாந்தியால் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள், இது இப்படி இருக்க, இனிமேல் ஜாதகருடைய முன்செனமத்தைப்பற்றி சொல்லுகிறோம், பூமியில் உயரமாயிருக்கின்ற மலைகளும் குன்றுகளும் உள்ள தேசத்தில் கங்கைகுலம் என்கிற வேளாளர் குலத்திற் பிறந்து மனைவியையும் மக்களையும் உடையவராகி

25. வாழ் நாளில் வினையைக் கேண்மோ வளவது துணைக்குப் பாகம்
தாழ்படயீன்றுளென்றோம் சாற்றுவான் துணைவர் தானும்
ஆழியில் பின் செனமத்தில் அனுகாது துணை ஆனும் தானும்
வாழிடம் விட்டு நீங்கி மறு நகர் வன வாசங்கள்.

25. ஜாதகர் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைக் கேட்பீராக. இவர் தன்னுடைய சகோதரனுக்குப் பங்கு பாகத் தில் பாகத்தைக் குறைவாகக் கொடுத்தார் என்று சொல்லுகிறோம், அதன் பேரில் சகோதரன் சொல்லுகின்றான், உனக்குப் பின் ஜென்மத்தில் ஆண் சகோதரம் இருக்காது. வசிக்கின்ற விடத்தை நீ விட்டுவிட்டு இன்னொரு பட்டணத்திற்கு சென்று

26. செல்லு வாயிதுவுமன்றிச் சுதர்களும் தோஷ மெய்தும்
நில்லாது துணைமனைக்கு நின் சாதி உதவி யின்றி
அல்லலாய் வாழ்வாய் நீயும் அறிவித்தான் துணைவனுந்தான்
புல்கிற்று அந்தத் தோஷம் புதல்வனு மந்தியத்தில்.

26. போய்விடுவாய், இதுவுமல்லாமல் உன்னுடைய குழந்தை களுக்குத் தோஷங்கள் நேரிடும், உன்னுடைய மனைவிக்கும் சகோதரன் உயி ருடன் இருக்கமாட்டார் *" உன்னுடைய ஜாதியார் உனக்கு உபகாரஞ் செய்ய மாட்டார்கள், நீ கஷ்டத்துடன் வாழக்கடவாய் " என்று சகோதரன் முன் ஜென்மத்தில சொன்னார், அந்தச் சாபம் இவரை வந்த அனுகியது, இவர் முன் ஜென்மத்தின் கடைசி காலத்தில்

* குறிப்பு :—மனைவிக்குக் கூட சகோதரர்கள் இருக்கமாட்டார்கள் என்று இருபத்தெட்டாவது பாடலிலும் சொல்லி இருப்பதைக் கவனிக்கவும்.

27. குடும்பமும் குறைவு நேர்ந்து அந்தகன் பதிக்குச் சென்று
அடவுடன் பிரமன் லக்கம் அனுகுவானிந்த பாலன்
விடம்போலே ஞாதி சாபம் மேவிடு மிச்சென் மத்தில்
தடமது விட்டு நீங்கும் தனமது காண ருகும்.

27. இவருடைய குடும்பத்தில் குறைவுகளும் கஷ்டங்களும் உண்டாகி இறந்து எமப்பட்டணத்திற்குப் போய் பிரமதேவனால் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜென்மத்தில் வந்து பிறப்பார். விஷத்தைப் போலப் பங்காளியின் சாபம் இந்த ஜென்மத்தில் இவரை வந்து அடையும். இவர் தன்னுடைய வீட்டையும் இடத்தையும் விட்டு வெளியே போய்விடுவார். இவருக்குத் தனமும் இருக்காது.

28. பாரியும் துணைகள் காணுள் பாலர்கள் தோஷ மெய்தும்
வேறூரில் வாச மெய்தும் விளம்புவோ மிவன்தாய்ச் சேதி
கூறுவாள் சுகமாய் வார்த்தை குலமதிப் புடைய ளாகும்
காரிழை பாட்டாளி யாகும் கனத்தபுத் திகளு மேற்பள்.

28. ஜாதகருடைய மனைவிக்கும் சகோதரர்கள் இருக்கமாட்டார்கள். குழந்தைகளுக்கும் தோஷங்கள் உண்டாகும். ஜாதகர் வெளியூரில் வாசஞ் செய்வார். இனிமேல் ஜாதகருடைய தாயாரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். அவள் இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவாள். பந்துக்கள் இவளை மதிக்கும்படியான நிலையிலிருப்பாள். இவள் கஷ்டப்பட்டு வேலை செய்யக்கூடியவள். மேன்மையான உயர்ந்த புத்தியையும் அறிவையும் உடையவள்.

29. தன்துணை ஆண்பால் ரண்டு தையலு மொன்றே யாகும்
பிந்தியும் சிலது துன்பம் பேசுவோ மிவன்தன் பூர்வம்
கந்தன்வாழ் தோகை தன்னில் கலந்தனள் ரெட்டி வமிசம்
நிந்தைக வில்லா தாகிநீத்தோர்க்கு அன்ன மீந்து.

29. தாயாரின் சகோதரர்களில் ஆண் இருவரும், பெண் ஒருத்தியும் ஆகும். இவளுக்குப் பின்னல் கொஞ்சங் கஷ்டங்கள் உண்டாகும். இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றி சொல்லுகிறோம். முருகக்கடவுள் தோன்றியுள்ள மயில் என்ற மைலத்தில் ரெட்டியாருடைய குலத்தில் பிறந்தாள். பாவம், பழி, அபவாதம் இவைகளில்லாதவளாக விருந்து உலகப்பற்றை விட்டுவிட்டவர்களாகிய பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு;

30. மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருகான செக்கான் வமிசம் செனித்தன ளென்று சொல்வோம்
வரும்செனமம் புலியூர் தன்னில் வருகுவாள் சைவச் சேயாய்க்
கர்மத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

30. இறந்து எமப்பட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டுச் செக்காடும் செட்டியார் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகிறோம். இவள் மறு ஜன்மத்தில் புலியூரில் சைவகுலத்தில் பிறப்பாள். கறுப்பான மதயானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

31. பூர்வமாம் தந்தைக் கேதான் புகலுவோம் பட்சி தன்னில்
திரமாய் வன்னிய சேயாய் ஜெனித்துமே வாழுந் நாளில்
காரிழை ஏழை பேரில் கலக்கமாய் வார்த்தை சொல்லி
ஊரைவிட் டோட்ட லுற்றுன் உரைக்கிறுள் மாது தானும்.

31. ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் பட்சி ஸ்தலமாகிய திருக்கழுக்குன்றத்தில் வனுவான

ஒரு வன்னியர் குலத்தில் ஆணுகப் பிறந்து வாழ்கின்ற காலத்தில் இவர் ஓர் ஏழை ஸ்திரீயின் மேல் பழியான வார்த்தைகளைச் சொல்லி அவளை ஊரைவிட்டுத் துரத்திவிட்டார். அதன்மேல் அவள் சொல்லியதாவது.

32. மறுஜன்மம் தோன்றி யேதான் அண்ணனும் பிகளு மின்றி
அரிவையர் துணைவரி ன்றி அலைச்சலாய் குடும்பியாகித்
திருகாக வாழ்வாய் நீயும் செப்பினு ளந்த மாது
உறைந்தது அந்தத் தோஷம் உத்த மனந்தியத்தில்;

32. நீ மறு ஜன்மத்தில் பிறந்து உனக்கு அண்ணனும் தம்பிகளும் இல்லாமலும் பெண் சகோதரங்களும் இல்லாமலும் திரிச்சலும் கஷ்டங்களும் உடைய குடும்பஸ்தராகி துன்பத்துடனும் நீ வாழக்கடவாய். என்று அந்த ஸ்திரீ சொன்னுள். அவளுடைய அந்தத் தோஷமானது தகப்பனுரை வந்து அடைந்தது. இவர் தன்னுடைய கடைசி காலத்தில்.

33. தந்தமும் பிணியு மாகிச் சண்டன்தன் பதிக்குச் சென்று
முந்திய பிரமன் லக்கம் மேவினு னிக்கு லத்தில்
தன்துணை தோஷ மெய்தும் சலிப்பாக வாழ்வா னுகும்
பிந்திய ஜன்மம் சொல்வோம் பேதையே கேட்டி டாயே.

33. பல் நோய் உடையவனாகி இறந்து எமபட்டனத்திற்குப் போய் மேன்மையான பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜாதியில் வந்து பிறந்திருக்கின்றுர். இவருக்குச் சகோதரர்கள் தோஷத்தை யுடையவர்களாவார்கள். அஃதாவது இறந்துவிடுவார்கள். துக்கத்துடன் வாழ்வாராகும். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

34. ஆலங்கா டதற்குக் கீழ்ப்பால் அணுகிய பேரூர் தன்னில்
ஏலவே யிக்கு லத்தில் லெய்துவா னென்று சொல்வோம்
ஞாலம் மேல் பதின்மூன் றுண்டுள் நமன்பதி செல்வா னுகும்.
சாலவே யிருபா னென்பான் தாயவள் மரிப்பாளாமே

34. தகப்பனுர் திருவாலங்காட்டிற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் இந்த ஜன்மத்தில் உதித்த குலத்திலேயே, அஃதாவது வைசியர் ஜாதியிலேயே பிறப்பார் என்று சொல்லுகின்றேம். இவர் ஜாதகருக்குப் பதின்மூன்றுவது வயதிற்குள்ளாகவே* இறந்து எமபட்டணத்திற்குப்போய் விடுவார். தாயானவள் ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது வயதில் † இறந்து விடுவாள்.

*** குறிப்பு.—தகப்பனுர் மரணம்**—ஜாதகருக்கு வயது ஷூ 12–0–0 முதல் ஷூ 13–0–0 முடியும் வரையிலும் புதன்தசையில் ராகு புக்தி நடக்கின்றது. பிதுர்லக்கினம் மீனம். இதற்கு பாராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் புதன் மாரகாதிபதி. இவர் மீனத்திற்கு எட்டிற்குடையவராகிய சுக்கிரனுடன் கூடியிருக்கின்றுர். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாவது பாவம்

20-ஆவது பாடல் பிரகாரமும் புதன் மாரகாதிபதி ஆகின்றூர். ராகு பிதுர் ஸ்தானத்திலேயே இருக்கின்றூர். ஆகையால் புதன்தசையில் ராகு புக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது.

† (2) மாதுர் மரணம் .—மாதுர் லக்கினமாகிய துலாத்திற்குச் சூரியனும் குருவும் மாரகாதிபதிகள். வயது ஷ 28-0-0 முதல் ஷ 29-0- முடியும் வரையிலும் சுக்கிரதசையில் சுக்கிர சூரிய புக்திகள் நடக்கின்றன. துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் சுக்கிரன் எட்டிற்குடையவரானதால் மாரகாதிபதியாகிறர். ஆகையால் சுக்கிரதசையில் சூரியபுக்தியில் மாதாவுக்கு மரணமேற்படும்.

35 அறுபது எட்டு ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமக னுடலம் ஏகும் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
உரையூரில் சைவச் சேயாய் உதிப்பானு மென்று சொல்வோம்
பெருவயி றுேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

35. ஜாதகருக்கு அறுபத்தெட்டாவது வயதில் ஐப்பசி மாதத்தில் * மரணம் நேரிட்டு அவருடைய தேகம் அழிந்துவிடும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகிறேம். இவர் உரையூரில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகிறேம். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

* குறிப்பு.—ஜாதகர் மரண விஷயம்—ஜாதகருக்கு வயது ஷ 67-0-0 முதல் ஷ 68-0-0 முடியும் வரையிலும் அங்காரக தசையில், சூரிய புக்தியும் சந்திர புக்தியும் நடக்கின்றன. ஐப்பசி மாதத்தில் சூரிய புக்தி நடக்கிறது. கடக லக்கினத் திற்குப் புதன் சுக்கிரன் சனி இவர்கள் பராசர ஹோரை ஜாதக சந்திரிகை பிரகாரம் மாரகாதிபதி ஆகின்றுர்கள். அங்காரகன் ஆருவது பாவத்தில் இருந்து கொண்டு லக்கினதிபதியாகிய சந்திரனைப் பார்க்கின்றூர். இவரே பத்திற்குடையவருமாக இருக்கின்றூர். மேலும் மாரகாதிபதிகளாகிய புதன் சுக்கிரன் இவர்களைப் பார்க்கின்றூர். துய்யகேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரமும் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் அங்காரகன் மாரகாதிபதி ஆகின்றூர். சூரியன் இரண்டிற்குடையவராய் லக்கினத்தில் இருந்துகொண்டு எட்டிற்குடைய சனியைப் பார்க்கின்றூர். ஆகையால் சூரியனுக்கும் மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது. (மாரகாதிபதியுடன் சம்மந்தப்பட்டவர் கொல்லுவார் என்பதில் “ சம்மந்தம் ” என்பது கூடுவதும் பார்ப்பதும் ஆகும்.)

36. பாரியுமிவன்பின் னுலே பகருவோ மார கங்கள்
கூறுவோ மிவன்பின் ஜன்மம் குற்றுல நகரம் தன்னில்
காரிழை க்ஷத்திரிய சேயாய்க் கலப்பளா மென்று சொல்வோம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகருடைய மனைவிக்கு இவருக்குப் பின்னுலே மரணம் நேரிடும். இவளுடைய மறுஜென்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம்.

குற்றுலம் என்ற பட்டணத்தில் இவள் க்ஷத்திரிய குலத்தில் பெண் குழந்தையாய்ப் பிறப்பாள் என்று சொல்லுகிறேம். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே ! கேட்பீராக.

37. ஜாதகன் பொதுயோ கத்தைச் சாற்றுவோம் வணிபம் செய்வன்
காதியும் பின்னு லேற்பன் களைத்தோர்க்கு அன்ன மீவன்
பாதியின் வயது மேலாய்ப் பாக்கியம் சேர்ப்பா னுகும்
தீதிலாக் குணத்தானுகும் சேர்ந்தவர் தம்மை காப்பன்.

37. ஜாதகருடைய பொதுவான யோகத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் வியாபாரம் செய்வார். பின் வயதில் பெருமையை அடைவார். இளைப்பை அடைந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். பாதி வயது சென்ற பிறகு தனத்தைச் சேகரிப்பார். குற்றமில்லாததும், கெடுதலைச் செய்யாததுமான, குணத்தையுடையவராவார். தன்னை வந்தடைந்தவர்களைக் காப்பாற்றுவார்.

38. வறுமைபின் வயதில் காணுன் வணிபங்கள் பெருக்கம் செய்வன்
திருமகன் ஜனன காலம் சனிதிசை ஆண்டு ஒன்றும்
மருவிடும் திங்கள் ரண்டும் வரைந்தனம் பூர்வ பாகம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

38. ஜாதகர் தன்னுடைய ஆயுளின் பின் பாகத்தில் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். வியாபாரங்களை அதிகமாகச் செய்து விருத்தியாக்குவார். இவர் பிறந்த காலத்தில் சனி மகா தசை இருப்பு வருஷம் ஒன்றும் மாதங்கள் இரண்டும் ஆகும். இவ்விதமாகப் பூர்வபாகமாகிய முதல் பாகத்தைச் சொன்னேம். அருமையான வேதங்களின் முடிவு என்கிற உபநிஷத்துக்களில் விளங்குகின்ற பார்வதிம்மையே ! கேட்பீராக.

ஜாதகம் 79

1. சந்திரன் மேட மாகச் சனிகேது சாடி [1] யாக
மந்திரி [2] நந்தி [3] யாக மங்கலன் [4] தேள [5] தாகப்
புந்தியும் [6] ராகு சீயம் [7] புகர் [8] வண்டி [9] பானு [10] கன்னி
வந்தது பரணி ரண்டாம் பாதமும் கடகம் ஜன்மம்,

	சந்திரன்	குரு	
சனி கேது	இராசி சக்கரம்		லக்கினம் சுக்கிரன்
			புதன் ராகு
	அங்காரகன்		சூரியன்

பரணி 2-ஆம் பாதம். சுக்கிர தசை ஞூ 13-8-0.

1. சந்திரன் மேஷத்திலும், சனி கேது கும்பத்திலும், குரு ரிஷபத்திலும், அங்காரகன் விருச்சிகத்திலும், புதன் ராகு சிம்மத்திலும், சுக்கிரன் கடகத்திலும், சூரியன் கன்னியிலும், ஜன்ம லக்கினம் கடகமாகவும் இருந்து ஜன்ம நட்சத்திரம் பரணி இரண்டாம் பாதமாகவிருக்கப், பிறந்த ஜாதகருக்கு ;

குறிப்பு.—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின் வரும் அம்சைச் சக்கர கிரகநிலே பொருத்த முடையதாகும். ரிஷபத்தில் குருவும், மிதுனத்தில் ராகுவும், கன்னியில் சந்திரனும் புதனும், துலாத்தில் சனியும், தனுசில் கேதுவும், மகரத்தில் சூரியனும், மீனத்தில் அங்காரகனும் சுக்கிரனும் ஆகும். சனி வக்கிரமாக விருக்கின்ருர்.

2. சொல்லுவீர் பலனே யென்று சுந்தரி கேட்கும் போது
புல்குவார் பராசர் தாமும் புறந்திடு மாண்பால் ஜன்மம்
இல்லமும் வடதென் வீதி இந்திரன் வாடை யாகும்
செல்லது பூர்வ இல்லம் சேத்திரம் வாடை யாகும்.

---

[1] கும்பம். [2] குரு. [3] ரிஷபம்.
[4] அங்காரகன். [5] விருச்சிகம். [6] புதன்.
[7] சிம்மம். [8] சுக்கிரன். [9] கடகம். [10] சூரியன்.

2. பலாபலன்களேச் சொல்லுவீரென்று பார்வதியம்மையார் கேட்கும் போது பராசர முனிவர் சொல்லுகின்ருர். பிறக்கும் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் கிழக்கு வாடையில் இருக்கும். அது பழைய வீடாகும். அது வீடுகள் வாடையாக விருப்பதில் இருக்கும்.

3. இந்திர நகர மொப்பா மிப்பாலன் சேஷ்ட ஞகும்
தந்தையின் தாயின் யோகம் சகோதரர் களத்திர புத்திரர்
முந்திய ஜன்மம் யாவும் உரைக்கிறோ மிந்நூல் தன்னில்
தந்தியை வளர்த்த எங்கள் தயாபரி கேட்டி டாயே.

3. பிறந்த ஊர் தேவேந்திரப் பட்டணத்தைப் போல விருக்கும். ஜாதகர் ஜேஷ்ட குமாரஞக விருப்பார். தகப்பனுர் தாயார் இவர்களுடைய யோகங்களேயும், சகோதரர்கள் மனேவி குழந்தைகள் இவர்களுடைய யோகங்களேயும், முன் ஜன்மம் ஆகிய இவைகளேப்பற்றியும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறேம். யானே முகத்தையுடைய விநாயக கடவுளே வளர்த்துக் காப்பாற்றிய கிருபையுடைய எங்களுடைய கடவுளாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

4. தந்தையின் துணையாண் நான்கு சத்திமார் மூவ ராகும்
தந்தையின் சேதி கேளாய் சிவந்தமெய் யூக சாலி
தன்மனே தன்ஞல் யோகம் தடமது மில்லா ஞகும்
தன்தனம் சேர்ப்பா ஞகும் தையரிய மனத்தா ஞகும்.

4. ஜாதகருடைய தகப்பனுரின் சகோதரர்களில் நான்கு ஆண் சகோதரங்களும் மூன்று பெண் சகோதரங்களும் இருப்பார்கள். தகப்பனுருடைய விஷயங்களேப்பற்றிச் சொல்லுகிறேம் கேட்பீராக. இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தை யுடையவர். நுட்பமான அறிவுடையவர். தன்னுடைய மனேவியால் இவருக்கு யோக முண்டாகும். இவர் வீடு இல்லாதவராவார். தான் சுயார்ஜிதமான தனத்தைச் சேகரிப்பார். தைரியமான மனதை யுடையவராவார்.

5. இருவிதக் கல்வி கற்ப னிடரென்றேர்க் குதவி செய்வன்
பெரும்புத்தி யுடைய ஞகும் பிதுராஸ்தி காண ஞகும்
தரைபின்ஞல் சேர்ப்பா ஞகும் சலத்தொழில் வணிபம் செய்வன்
அறுமுகன் பத்தி கொள்வன் அல்பபுத் திகளும் கொஞ்சம்.

5. தகப்பனுர் இரண்டு விதமான வித்தையைப்படிப்பார். கஷ்டத்தை அனுபவிக்கின்றேம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபகாரஞ் செய்வார். மேன்மையான புத்தியையும் பெருந்தன்மையையும் உடையவர். பிதுர் சொத்து இல்லாதவராவார். இவர் நிலங்களேப் பின்ஞல் சம்பாதித்துச் சேகரிப்பார். ஜலசம்மந்தமானத் தொழிலேயும் வியாபாரத்தையுஞ் செய்வார். ஆறுமுகக் கடவுளாகிய முருகக் கடவுளின் பேரில் பக்தியை யுடையவர். கொஞ்சம் அற்பமான புத்தியும் இருக்கும்.

6 லாகிரித் தொழிலும் செய்வன் நல்லோர்க்கு நல்ல னுவன்
தோகையின் வர்க்கத் தாரால் சுதனுமே ஜீவிப் பானும்
பாகமாய்ப் பேசு வானும் பாரபட் சங்களும் பேசான்
நாகம்போல் கோபம் சாந்தம் நற்சுக புசிப்பு முள்ளான்.

6. வெறியை உண்டுபண்ணக் கூடிய வஸ்துக்களாகிய கள், சாராயம், பிராந்தி, கஞ்சா, பீர் இவைகள் சம்பந்தமானத் தொழிலைச் செய்வார். நல்லவர்களுக்கு நல்லவராகவிருப்பார். தன்னுடைய மனைவியின் பந்துக்கள் மூலமாக இவர் ஜீவனஞ் செய்வார். பக்குவமாகவும் சாமர்த்தியமாகவும் பேசுவார். பாரபட்சங்களுடையவராய் ஒருவர் பக்கமாகவும் ஒருவர் சார்பாகவும் மற்றொருவருக்குப் பிரதிகூலமாகவும் பேசமாட்டார். பாம்பைப்போல் இவருக்குக் கோபம் சீறிவரும். உடனே அஃது அடங்கித் தணிந்துவிடும். நல்ல சுகமான போஜனங்களைச் சாப்பிடுபவராவார்.

குறிப்பு.—5-ஆவது பாடலில் "சலத் தொழில்வணிபம்" என்று சொல்லி இருப்பதால் ஜலரூபமான லாகிரி வஸ்துக்களில் முக்கியமாக வியாபாரம் செய்வார். ஆகையால் அபினி இராது.

7. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் பனங்காட் டூரில்
துன்மதி வைசியச் சேயாய் ஜனித்துமே செட்டுச் செய்து
தன்மனை மதலை யுண்டாய்த் தான்வாழ்நாள் வினையைக் கேண்மோ
பின்னோர்க்குப் பொருளைத் தந்து பூமியைப் பறித்துக் கொண்டான்.]

7. தகப்பனாரின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் பனங்காட்டூரில் நிந்தையையுடைய வைசியராகப் பிறந்து வியாபாரஞ் செய்து தனக்கு மனைவி மக்கள் இவர்களை உடையவராகி வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகிறேம். கேட்பீராக. இவர் தாழ்ந்த ஜாதியாருக்குக் கொஞ்சமாகப் பணத்தைக் கொடுத்து அவர்களுடைய நிலங்களை அபகரித்துக்கொண்டார்.

8. தனமிலா ஏழை யோர்கள் சாற்றுவார் சாபம் தானும்
தனமது அல்ப மீந்தும் தனமதைப் பறித்த பாவி
இனிவரும் ஜன்மம் தன்னி லில்லமு மில்லா தாகி
வனவாச மாக வாழ்வாய் வரைந்துமே தெருத்தூள் விட்டாள்.

8. பணமில்லாத ஏழைமக்கள் சாபத்தை இவருக்குக் கொடுக்கின்றார்கள். கொஞ்சமாகப் பணத்தைக் கொடுத்து மிகுதியான பணத்தை அபகரித்துக் கொண்ட பாவியாகிய உனக்கு மறுஜன்மத்தில் வீடு இல்லாமல் வனவாசமாகவிருந்து வாழ்வாய் என்று சொல்லித் தெருவிலுள்ள மண்ணை எடுத்துத் தூவினார்கள்.

9. அந்ததோர் சாபம் தானும் அணுகிற்று அவனுக் கேதான்
அந்திய காலம் தன்னில் அறுமுகன் பத்தி யாகித்
துன்காலன் நாடு சென்று சிரநான்கோன் வரையப் பட்டு
வந்தவ னென்று சொல்வோம் மருவிடு முன்னூழ்ச்சாபம்.

9. ஜாதகருடைய தகப்பனாரை அந்தச் சாபம் வந்து அணுகிற்று. முன் ஜன்மத்தில் தனக்குக் கடைசி காலத்தில் இவர் ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளின் மேல் பக்தியையுடையவராகி இறந்து கெட்ட எம பட்டணத்திற்குப் போய் நான்கு சிரசுகளை யுடையவரான பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகிறேம். முன் ஜன்மத்திய சாபமும் பாவமும் இவரை இந்த ஜன்மத்தில் வந்து அடையும்.

10. இல்லமு மில்லா னுகும் இவன்பாரி வர்க்கத் தாரால்
வல்லவன் வாழ்வா னுகும் வறுமையைப் போதும் காணுன்
சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றினு னிந்தப் பாலன்
புல்குவோ மிவன்கு ணத்தைப் பேதையே கேட்டி டாயே.

10. தகப்பனார் வீடு இல்லாதவராவார். இவர் தன்னுடைய மனைவியின் பந்துக்களின் உதவியால் ஜீவனஞ் செய்வார். கஷ்டங்களையும் தரித்திரத்தையும் ஒருபொழுதும் அடையமாட்டார். இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் வந்து பிறந்து இருக்கின்றார். இவருடைய குணாதிசயங்களைச் சொல்லுகிறேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

11. மாந்தளிர் மேனி யாவன் வர்ணித்தோர்க் குதவி செய்வன்
காந்தம்போல் புத்தி யுண்டு கண்முகம் வசிய முண்டு
சாந்தமும் கோப மேற்பன் தக்கோர்கள் நேசம் கொள்வன்
சேர்ந்தவர் தம்மைக் காப்பன் சீலம்போல் வெளிம யக்கன்.

11. மாமரத்தின் துளிரின் நிறத்தைப்போல ஒரு விதமான சிவப்பு நிறமான தேகத்தையுடையவராவார். தன்னைப்பற்றிப் பெருமையாகவும் புகழ்ந்தும் பேசுகின்றவர்களுக்கு உபகாரஞ் செய்வார். காந்தக்கல்லைப் போலப் பிறரைத் தன்வசப்படுத்திக் கொள்ளுகின்ற புத்தியையும் குணத்தையு முடையவர். பிறரைத் தன்னுடைய அழகான கண்களாலும் முகத்தாலும் தன்வசப்படுத்திக் கொள்ளும் தன்மை யுடையவர். சாந்தமும் கோபமுமாகிய இரண்டுமுடையவர். தகுதியான பெரிய மனுஷர்களுடைய சிநேகத்தையு மடைவார். தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார். நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையு முடையவர்போல வெளிக்குக் காட்டிக்கொண்டு பிறரை மயக்கித் தன் வசப்படுத்திக் கொள்ளும் சக்தியை உடையவர்.

12. வித்தையு மிரண்டு கற்பன் விவேகியா மெவர்க்கு நல்லன்
பத்தினிக் கிஷ்ட னுகும் பரவுப கார னுகும்
வெத்திச் சொல் லுடையா னுகும் மேலவர் பத்தி கொள்வன்
சத்தியம் கூறு வானுகும் சகராசர் பேட்டி கொள்வன்.

12. இரண்டு விதமான கல்வியைப் படிப்பார். புத்தியுள்ளவர். எல்லோருக்கும் நல்லவராவார். மனைவிக்குப் பிரியமுள்ளவராவார். பிறருக்கு உதவியைச் செய்பவராவார். தான் சொல்லுகின்ற வார்த்தை

ஜயத்தை அடையக் கூடியனவாக விருக்கும். பெரியோர்களின் மேலும் வானோர்களின் மேலும் பக்தியையுடையவர். உண்மையைப் பேசுவார். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார்.

13. அன்னியப் பாஷை யாலே அரசுமே செய்வா ஞகும்
பொன்பணி யேற்பா ஞகும் பெரிதான குடும்பி யாவன்
மன்னர்க்கு மிவன்சொல் மேன்மை வளமான தலங்கள் செல்வன்
கன்னியர் மோக ஞவன் கனத்தபுத் திகளு மேற்பன்.

13. அன்னிய பாஷையாகிய ஆங்கிலம் முதலிய பாஷைகளைப் படித்து அதனாலேயே அரசாங்கத்தில் வேலையில் இருந்து அதிகாரத்தைச் செலுத்துவார். தனம் ஆபரணம் இவைகளை அடைவார். பெரிய குடும்பி யாவார். அரசர்களுக்கு இவருடைய வார்த்தை மேன்மையாக விருக்கும். சிறந்த நல்ல பெரிய ஸ்தலங்களுக்கு செல்வாக்குடன் போவார். ஸ்த்ரீ களின்மேல் காம ஆசையையுடையவராவார். பெரியதானதும் உயர்ந்தது மான புத்தி யுடையவராவர்.

14. எந்தக்கா லத்தில் ராஜயோகமு மெய்தும் சொல்வாய்
சந்திரன் தசையில் நேரும் சேய்[2]தசை அந்தம் நீங்கும்
பிந்தியும் அரசர் மூலம் பெரிதான செட்டுச் செய்தல்
அந்தவன் மரண மட்டும் அசைவிலாச் செட்டுச் செய்வன்.

14. ஜாதகருக்கு எந்தக் காலத்தில் இராஜயோக முண்டாகும் என்பதைச் சொல்லுவீர். இது சந்திரனுடைய தசைக் காலத்தில் உண்டாகும். அங்காரகனுடைய தசையின் முடிவில் அஃது இவரை விட்டு விலகிவிடும். அதன்பிறகு இராஜாக்கள் மூலமாகப் பெரிய வியாபாரஞ் செய்வார். இவர் தன்னுடைய மரணகாலம் வரையில் தொடர்ச்சியாகவும் குறைவில்லாமலும் வியாபாரஞ் செய்வார்.

குறிப்பு.—இவருக்கு வயது ௵ 19-8-0-ல் சந்திரதசை ஆரம்பித்து ௵ 36-8-0 வரையிலும் அங்காரகதசை இருக்கிறது.

15. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்க ளந்தச் சங்கை
பாகமாய்த் தர்ம கர்மர் பார்வையா யிருப்ப தொன்று
பாகனும் [1] சனியும் பார்வை பஞ்சமம் சேயும் [2] ஆட்சி
தோகையே தர்ம கர்ம்மர் யோகமென் றுரைக்க லாகும்.

15. ஜாதகருக்கு யோகம் எந்தக் காரணங்களினல் சொன்னீர்? அவைகளைச் சொல்லுவீர் என்று கேட்க பக்குவமாகத் தர்மகர்மாதிபர் களாகிய குருவும் அங்காரகனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளு வது ஒரு காரணமாகும். புதனும் சனியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்வதாலும், அங்காரகன் ஐந்தாவது வீட்டில் ஆட்சியாய் இருப்பதாலும், இதர காரணங்களாலும், தர்ம கர்மயோகம் உண்டு என்று பார்வதி யம்மையே! சொல்லக்கூடும்.

---

[1] புதன் [2] அங்காரகன்

குறிப்பு.—தர்ம கர்மயோக விஷயம் :—தர்மாதிபதியாகிய ஒன்பதிற்கு டையவரும் (இங்கு குருவும்) கர்மாதிபதியாகிய பத்திற்குடையவரும் (இங்கு அங்காரகனும்) ஒருவருடன் மற்றொருவர் கூடியிருந்தாலும், ஒருவரை மற் றொருவர் பார்த்தாலும் (இங்கு பார்க்கின்றார்கள்), ஒருவர் வீட்டில் மற்றொரு வர் இருந்தாலும் " தர்மகர்ம " யோகம் என்று சொல்லப்படும். இது விஷயமாய்ப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை, தாண்டவமாலை, சந்திர காவ்யம் இவைகளில் யோக அத்தியாயத்தில் பார்க்கவும். ஆறு எட்டு பன்னிரண்டிற்குடையவர் ஒருவருடன் மற்றொருவர் கூடியிருப்பதும், ஒரு வரை மற்றொருவர் பார்ப்பதும் யோகத்திற்கு அனுகூலமானது. இங்கு எட்டிற்குடையவரான சனியும் பன்னிரண்டிற்குடையவரான புதனும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுகின்றார்கள். பத்திற்குடையவர் (இங்கு அங்காரகன்) ஐந்தில் இருப்பது விசேஷமானது. பத்தும் ஐந்தும் ராஜ்ய ஸ்தானங்கள் என்று சொல்லப்படும்.

16. இதுவின்றிப் பத்ம யோக மியம்புவோ மிருவி தத்தால்
அதிகாரம் சிலநாள் செய்வன் அதின்பின்பு செட்டுச் செய்வன்
நிதியது பெருக்கம் செய்வன் நேர்ந்திடு மில்ல மென்றோம்
எதுகாலம் இல்லம் நேரு மெட்டாண்டில் நேரு மென்றோம்.

16. இந்த யோகமும் அல்லாமல் "பத்ம" யோகம் என்ற இன்னொரு யோகத்தையும் சொல்லுகிறோம். இந்த இரண்டுவித யோகத் தாலே ஜாதகர் சில காலம் இராஜாங்கத்தில் அதிகாரஞ் செலுத்தும் வேலையில் இருப்பார். அதற்குப் பிறகு வியாபாரஞ் செய்வார். செல்வத்தை அதிகமாக ஆக்கிக்கொள்ளுவார். இவருக்கு வீடும் வந்து சேரும். எந்தக் காலத்தில் வீடு வந்து இவருக்குச் சம்பவிக்கும் என்பதைச் சொலலுவீர் என்று கேட்க, எட்டாவது வயதில் வந்து சேரும் என்று சொல்லுகிறோம்.

குறிப்பு.—பத்மயோக விஷயம்—பத்மம் அல்லது கமலம் என்ற தாமரையாகும். பத்மயோகம் என்றாலும் கமலயோகம் என்றாலும் ஒரே யோகமாகும். இவைகளைப் பற்றி ஜாதகாலங்காரம் 343-ஆவது பாடல், சாராவளி அத்தியாயம் 21,14,28-ஆம் சுலோகங்கள், பிருஹஜ்ஜாதகம் 12-ஆவது அத்தியாயம் 5-ஆவது 14-ஆவது சுலோகம், ஜாதக சிந்தாமணி 2035-2135 முதல் 2143-ஆவது பாடல்கள் வரையிலுள்ள பாடல்கள், ஜாதகபாரி ஜாதம் 7-ஆவது அத்தியாயம் 199-ஆவது 176-ஆவது சுலோகங்கள் இவற்றைப் பார்க்கவும். நான்கு கேந்திரங்களில் கிரகங்கள் இருந்தால் பத்ம யோகமுண்டு. இங்கு இரண்டு கேந்திரங்களில்தான் சுக்கிரனும் சந்திரனும் இருக்கின்றார்கள்.

17. தன்துணை யாண்பால் ஒன்று தங்கிடும் கன்னி ரண்டு
இன்னவர் தீர்க்கம் சொன்னே மேகிடும் மற்ற வெல்லாம்
பின்பாக மவர்கள் சேதி பேசுவோம் விவர மாக
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

17. ஜாதகருக்குச் சகோதரர்களில் ஆண் ஒன்றும் பெண் இரண்டும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகிறோம். மற்ற சகோதரர்கள் எல்லாம் இறந்து போய்விடுவர். இந்தச் சகோதரர்களின்

விஷயங்களைப்பற்றி பின்பாகத்தில் விவரமாகச் சொல்லுகிறேம். மேன்மையான யானை முகத்தை யுடைய விநாயகக் கடவுளைப்பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

18. மாதுரு குணத்தைச் சொல்வேன் மால்மனை யொப்ப தாகும்
காதலி சுகமாய் வார்த்தை கல்விமான் பொறுமை சாலி
சூதுளாள் நடையும் நன்மை சோர்வோர்க்குத் தாக மீவள்
வேதனை யொருவர்க் கெண்ணள் வித்தகி வயது தீர்க்கம்.

18. ஜாதகருடைய தாயாரின் குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவள் லக்ஷ்மியைப் போல விருப்பாள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். கல்வியறிவுள்ளவளாவள். பொறுமையையுடையவள். வஞ்சனை சூது இவைகள் இல்லாதவள். நல்லொழுக்கமும் நன்னடக்கையும் உள்ளவள். களைத்துப் போனவர்களுக்குத் தாகவிடாய் தீர நீர் மோர்களைக் கொடுப்பாள். யாருக்குந் தீங்குகளைச் செய்ய எண்ணமாட்டாள். இவள் நீண்ட ஆயுளையுடையவளாவாள்.

19. மங்கையால் வரனுக் கேதான் மருவிடும் யோகம் தானும்
எங்கள்போல அதிதிக் கன்ன மீவளாம் பொறுமை சாலி
சங்கையென் றோரைச் சாராள் தன்துணை ஆண்பால் ஐந்து
நங்கைமார் நால்வ ராகும் நாயகி கேட்டி டாயே.

19. இவளால் தன்னுடைய புருஷனுக்கு யோகங்கள் உண்டாகும். இவள் எங்களைப் போன்ற முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடுவாள். பொறுமையையுடையவள். அச்சம் ஐயம் சந்தேகம் இவைகளையுடையவர்களுடன் சேரமாட்டாள். இவளுடன் கூடப்பிறந்த ஆண் சகோதரங்கள் ஐந்து பேரும் பெண் சகோதரங்கள் நால்வரும் ஆகும். பார்வதியம்மையே ! கேட்பீராக.

20. மாதுலர் யோக வான்கள் வடதிசை அரசன் போலே
மேதினில் வாழ்வா ராகும் மேன்மையாய்க் குடும்பி யாவர்
போதன முடையா ராகும் புகலுவோம் பின்பால் சேதி
ஒதுவேன் பின்பா கத்தில் உத்தமி கேட்டி டாயே.

20. ஜாதகருடைய அம்மான்மார்கள் யோக முள்ளவர்களாக விருப்பார்கள். வடக்குத்திக்கு அரசனுகிய குபேரனைப் போல் பூமியில் செல்வவான்களாகவிருந்துவாழ்வார்கள். மேன்மையானதும் பெருமையுள்ளதுமான குடும்பஸ்தர்களாகவும் அறிவுடையவர்களாகவும் விருப்பார்கள். அவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னல் சொல்லுகிறேம். பின் பாகத்தில் சொல்லுகிறேன். பார்வதியம்மையே ! கேட்பீராக.

21. அன்னையின் முன்ஜன் மத்தை அறிவிப்போம் பேரூர் தன்னில்
கர்ணமாம் குலமு தித்துக் கௌரவ குடும்பி யாகித்
தன்சுத ரதிக முண்டாய் ஷண்முகன் பத்தி யாகிப்
பின்னோர்க்குத் தாக மீந்து புண்ணிய மனத் தாளாகி ;

21. ஜாதகருடைய தாயின் பூர்வஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேம். ஒரு பெரிய ஊரில் கருணீகர் குலத்தில் பிறந்து பெருமையுள்ள குடும்பினியாகித் தனக்கு அநேகக் குழந்தைகளையுடையவளாகி முருகக் கடவுளின் மேல் பக்தியை யுடையவளாகி ஏழைகளுக்குத் தாகவிடாய் தீர நீர் மோர்களைக் கொடுத்துப் புண்ணியமானகாரியங்களைச் செய்யும் மனத்தை யுடையவளாகி ;

22 வினையது மில்லா ளாகி மேவினள் காலன் ஞடு
கனமுள பிரமன் லக்கம் கலந்தன ளிக்கு லத்தில்
சினமிலா முப்பான் ஒன்றில் செல்லுவாள் காலன் ஞடு
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

22. பாவம் ஒன்றும் இல்லாதவளாகவிருந்து இறந்து எமபட்டினத்திற்குப் போய் மேன்மை தங்கிய பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் இந்தக்குலத்தில் வந்து பிறந்திருக்கின்ருள். இவள் ஜாதகருக்கு முப்பத் தோராவது வயதில் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். விடாமல் தவங்களைச் செய்துகொண்டிருக்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு.—மாதுர் மாரக விஷயம்—ஜாதகருக்கு வயது ௵ 30–0–0 முதல் ௵ 31–0–0 முடியும் வரையிலும் அங்காரக தசையில் அங்காரகபுக்தி ராகு புக்திகள் நடக்கின்றன. மாதுருலக்கினம் துலாம். இதற்குப் பராசர ஹோரையின் சில பதிப்புக்கள் ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் அங்காரகனும் சூரியனும் குருவும் மாரகராகின்ருர்கள். அங்காரகன் துலாத்திற்கு இரண்டு ஏழிற்குடைய மாரகராய் இரண்டில் இருக்கின்ருர். எட்டாம் வீடாகிய ரிஷபத்தையும் பார்க்கின்ருர். ஆகையால், இவருக்குத் தாயாரை மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது. இராகு மாரகராகிய சூரியன் வீட்டில் மாரக ஸ்தானமாகிய இரண்டில் இருந்து கொண்டு மாதுருலக்கினமாகிய துலாத்தையும் பார்க்கின்ருர். ஆகையால் ஜாதகசந்திரிகை 12-ஆவது, 23-ஆவது சுலோகப் பிரகாரம் இராகுக்கு தன் புக்தியில் மாதாவை மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது.

23. பின்ஜன்மம் வேலங் காட்டில் பிறப்பளாம் க்ஷத்திரிய சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப் பூவையும் வாழ்வா ளென்றேம்
மன்னவன் தந்தைக் கேதான் மடிவுண்டு முப்பா ஞறில்
கன்னல்போல் மொழியி னளே கழறுவோ மிவன்பின் ஜன்மம்.

23. தாயார் மறு ஜன்மத்தில் திருவாலங்காட்டில் க்ஷத்திரிய குலத்தில் பெண்ணைகப் பிறந்து தனம் சொத்து இவைகளையுடையவளாகி இவள் வாழ்வாள் என்று சொல்லுகிறேம். ஜாதகருடைய தகப்பனருக்கு ஜாதகருடைய முப்பத்தாருவது * வயதில் மரணம் நேரிடும். சர்க்கரையைப் போல இனிமையான வார்த்தைகளை உபயோகிக்கின்ற பார்வதியம்மையே ! இவருடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம்.

குறிப்பு.—தகப்பனர் மரண விஷயம்—ஜாதகருக்கு வயது ஞு 35-0-0 முதல் 36-0-0 முடியும் வரையிலும் அங்காரகனுடைய தசையில் சுக்கிர புக்தி சூரியபுக்தி இவைகள் நடக்கின்றன. பிதுர்லக்கினமாகிய மீன லக்கினத்திற்குப் பாராசரஹோரை ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் சூரியன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆகின்றார்கள். அங்காரகன் மீனத்திற்கு மாரகஸ்தானமாகிய இரண்டாம் வீடாகிய மேஷத்திற்கு உடையவராகி லக்கினத்திற்கும் பத்திற்கும் உடையவரான குருவைப் பார்க்கின்றார். சனி அங்காரகனைப் பார்க்கின்றார். ஆகையால் தூய்ய கேரளம் எட்டாம் பாவம் 14-ஆவது பாடல் பிரகாரம் அங்காரகனுக்குப் பிதாவை மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது. சூரியன் மாரகாதிபதியாகிய புதனுடைய வீட்டில் இருந்துகொண்டு மீனத்தைப்பார்ப்பதால் தன் புக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது.

24. உத்தரம் கோகர் ணத்தில் உதிப்பனும் சைவச் சேயாய்
மெத்தன குடும்பி யாகி வித்தகன் வாழ்வா னும்
சத்தியே ஜாத கர்க்குச் செப்புவோ மணத்தின் காலம்
பத்தொன்ப தாண்டு தன்னில் பாவையு மன்னே வர்க்கம் ;

24. ஜாதகருடைய தகப்பனர் வடக்குத்திக்கிலுள்ள கோகர்ணம் என்ற ஓர் ஊரில் மறு ஜன்மத்தில் வைசிய குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார். மேன்மையான குடும்பஸ்தராகியே வாழ்வாராகும். பார்வதி யம்மையே! ஜாதகருக்கு விவாகம் நேரிடும் காலத்தைச் சொல்லுகிறோம். இவருக்குப் பத்தொன்பதாவது * வயதில் மனைவி தாயார் பந்துவிலிருந்து ;

*குறிப்பு.—விவாக விஷயம்—ஜாதகருக்கு வயது ஞு 18-0-0 முதல் ஞு 19-0-0 முடியும் வரையிலும் சூரிய தசையில் புதன் கேது சுக்கிரன் இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. களத்திர விஷயமான பாவங்களில் ஒன்றாகிய இரண்டாவது பாவத்திற்குடையவரான சூரியன் ஒன்பதாவது பாவத்தைப் பார்ப்பதுடன் ஒன்பதாவது பாவாதிபதியாகிய குருவால் பார்க்கப் பட்டிருக்கின்றார். மேலும் போககாரகனுகிய ராகு சூரியன் வீட்டில் இரண்டில் இருக்கின்றார். சுக்கிரன் போகஸ்தானமாகிய நான்கிற்குடையவராகி லக்கினத் திலிருந்து கொண்டு களத்திரஸ்தானத்தைப் பார்க்கின்றார். ஆகையால் சூரியதசையில் சுக்கிர புக்தியில் விவாக அமைப்பு இருக்கிறது.

25. வருகுவாள் குணத்தைச் சொல்வோம் மாந்தளிர் மேனி யாகும்
திருகிலாள் நற்கு ணத்தாள் சீலமு முடையா ளாகும்
பெரும்புத்தி கல்வி மானும் பிழையதை ஒருவர்க் கெண்ணுள்
நரைமல ரிஷ்டம் கொள்வாள் நாயகன் மனத்துக் கேத்தோள்.

25. வந்து நேருவாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் மாமரத்தின் துளிரினுடைய நிறத்தைப் போன்ற ஒரு விதமான சிவப்பு நிறமுள்ள தேகத்தை யுடையவளாவாள். கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளை உடையவளல்லள். நல்ல குணத்தை யுடையவள். நல்லொழுக்கமும் நன்னடக்கையு முடையவளாவாள், மேன்மையானதும் பெரியதுமான புத்தியை யுடையவள். வித்தையை யுடையவள். யாருக்குங் கெடுதியைச்செய்ய நினைக்கமாட்டாள். வாசனையுள்ள புஷ்பங்களின்மேல் ஆசையுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளும் தன்மை யுடையவளாவாள்.

26. அன்னம்போல் வடிவு மொக்கும் யாவர்க்கும் நல்லோ ளாவள்
கன்னிகை தீர்க்க ஜீவி கருதிடாள் கட்டு வார்த்தை
தன்சுதர் முதலில் நஷ்டம் தீர்க்கமா மதன் பின்னுக
மன்னன்போல் ஆண்பா லொன்று மங்கைமார் அவ்வாறு தீர்க்கம்.

26. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப் போல அழகான உருவமுடையவள். எல்லாருக்கும் நல்லவளாகவிருப்பாள். இவள் நீண்ட ஆயுளை உடையவள். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையும் உபயோகிக்க எண்ணமாட்டாள். இவளுக்கு முதலில் பிறக்குங் குழந்தைகள் நஷ்டமாகும். அதற்குப் பின்னுல் பிறக்குங் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையனவாகவிருக்கும். அரசனைப் போல ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள்.

27. பாலகன்முன் ஜன்மந் தன்னைப் பகருவோம் திருவ லத்தில்
சீலமாம் மறைக் குலத்தில் ஜனித்துமே கிருஷி செய்து
பாலிகை மதலை யுண்டாய்ப் பகரமாம் குடும்பி யாகிக்
காலன்தன் நாடு சென்று கஞ்சனுல் வரையப் பட்டு ;

27. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவர் திருவலம் என்ற ஊரில் நல்லொழுக்கமும் நல்ல நடவடிக்கையுமுள்ள ஒரு பிராமணர் குலத்தில் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்து மனைவி மக்களையுடையவராகிப் பிரகாசமானதும் மேன்மையானதுமான குடும்பஸ்த ராகி வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ;

28. உதிப்பனு மென்று சொல்வோம் உரைக்கிறார் அத்திரி தாமும்
முதற்குல முதித்தோன் தானும் மேவுமிச் சென்மம் தன்னில்
நதிகுல முதிக்கும் வண்ணம் நவிலுவீர் முனியே நீர்தாம்
சதுர்வேதம் விரும்பாததாலே ஜனித்தன னென்று சொல்வோம்.

28. இந்த ஜாதகர் இந்த ஜன்மத்தில் பிறப்பார் என்று சொல்லுகிறோம். அதன் மேல் அத்திரி மகரிஷி கேட்கின்றார். முன் ஜன்மத்தில் முதல் குலமாகிய பிராமணர் குலத்திற் பிறந்தவரான இந்த ஜாதகர் இந்த ஜன்மத்தில் கங்கை குலம் என்ற வேளார் குலத்திற் பிறப்பதற்குக் காரணத்தை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க, நான்கு வேதங்களையும் ஜாதகர் கற்க விரும்பாமல் இருந்ததால் இந்த ஜன்மத்தில் இவ்விதமாகப் பிறந்தார் என்று சொல்லுகிறோம்.

29. அறுபது ஐந்து ஆண்டில் அணுகிய தேளின் மாதம்
திருமகனுடலம் ஏகும் ஜயமுனி மறித்துச் சொல்வார்
குருவுக்கிராறில் திங்கள் குலவினல் சகடை தோஷம்
அறுரண்டு ஆண்டுக் குள்ளே அணுகிடும் கண்டம் தானே.

29. ஜாதகருக்கு அறுபத்தைந்தாவது வயதில் தேள் மாதமென்ற கார்த்திகை மாதத்தில் மரணம் நேரிட்டு அவருடைய தேகம் அழிந்து விடும். இவ்விதமாகச் சொல்ல ஜய முனிவர் தடுத்துச் சொல்லுகின்ருர். குருவுக்குப் பன்னிரண்டில் சந்திரன் இருப்பதால் சகட யோகத்தோஷம் ஏற்படுகிறது. அதனுல் ஜாதகருக்குப் பன்னிரண்டு வயதிற் குள்ளவே மரண கண்டம் நேரிடுமல்லவா.

† குறிப்பு.—சகடயோகம்—இது விஷயமாக ஜாதகாலங்காரம் 263-ஆவது பாடலேயும், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 10 அல்லது 14-ஆவது சுலோகத்தையும், ஜாதகபாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 108-ஆவது சுலோகத்தையும், பிருஹஜ்ஜாதகம் 12-ஆவது அத்தியாயம் 3-ஆவது சுலோகத்தையும், சாராவளி 21-ஆவது அத்தியாயம் 15-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். குருவிற்கு 6, 8, 12-இல் சந்திரன் இருந்தால் சகடயோகம் உண்டாகின்றது என்று சொல்லி இருக்கின்றது. இவ்விதமாக விருக்கும் போது சந்திரன் லக்கினத்திற்குக் கேந்திரத்தில் இருந்தாலும், சிலர் குரு லக்கினத்திற்குக் கேந்திரத்திலிருந்தாலும், இந்தச் சகடயோகத்திற்குப் பங்கம் உண்டாகி விடுகிறது என்று சொல்லுகிருர்கள். இன்னுஞ் சிலர் சந்திரன் பிரகாசமில்லாத சந்திரனுக விருந்து 6, 8, 12-இல் இருந்தால் சகடயோகம் என்கிருர்கள். இங்குச் சந்திரன் தேய்பிறையாக இருந்த போதிலும் பிரகாசமுடையவராயும் கேந்திரத்திலிருப்பவராயும் இருக்கின்ருர். (பராசரரும் வராஹமிஹிரரும்) எல்லாக்கிரகங்களும் லக்கினத்திலும் ஏழிலும் இருந்தால் சகடயோகம் உண்டாகிறது என்று சொல்லி இருக்கிருர்கள். இ∴து இன்னெரு மதமாகும்.

30. புகருமே[1] ஜன்மம் தங்கப் பேசொண மார கங்கள்
வரும்வினை அதிக மாக மரலியைக் காண ருகும்
அறுபது ஐந்து ஆண்டும் அப்பாலன் உய்வானுகும்
கரிமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே

30. சுக்கிரன் லக்கினத்தில் இருப்பதால் மாரகங்கள் சொல்லக்கூடாது. ஆனல் அதிகமாகக் கஷ்டங்களும் நோய்களும் உண்டாகும். தவிர ஜாதகருக்கு எமதரிசனம் நேரிடாது. ஜாதகர் தனது அறுபத்தைந்து வருஷம் வரையினும் ஜீவித்திருப்பார். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

† குறிப்பு—ஜாதகர் மரணவிஷயம்—ஜாதகருக்கு வயது ௵ 64—0—0 முதல் ௵ 65—0—0 முடியும் வரையிலும் குரு தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. கடக லக்கினத்திற்குப் புதன் சுக்கிரன் சனி இவர்கள் பராசர ஹோரை, ஜாதகசந்திரிகை இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாகின்ருர்கள். குரு மாரகாதியாகிய சுக்கிரன் வீட்டில் மாரகஸ்தானமாகிய பதினென்றில் இருக்கின்ருர். குருதசை ஆருவது தசையாகவும் வந்து நேரிடுகின்றது. ஆகையால் ஜாதகாலங்காரம் 975-ஆவது பாடல் பிரகாரமும் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரமும் குரு மாரகாதிபதி ஆகின்ருர். கடக லக்கினத்தில் பிறந்த இந்திரஜித்துக்கும் சுக்கிரன் மாரகாதிபதி ஆனுர் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் குரு தசையில் சுக்கிர புக்தியில் ஜாதகருக்கு மாரகம் நேரிட அமைப்பு இருக்கிறது.

[1] சுக்கிரன்.

31. பாலகன் ஜனிக்கும் காலே பரணியி னிரண்டாம் பாதம்
சாலவே புகரி[1] ருப்புச் சாற்றுவோம் பதின்மூன் ருண்டும்
ஏலவே திங்கள் எட்டு மெய்திடும் பூர்வ பாகம்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தனம் மொழி குன்ருது

31. ஜாதகர் ஜனன மாகுங் காலத்தில் ஜன்ம நட்சத்திரம் பரணியில் இரண்டாவது பாதமாகும். இதற்குரிய சுக்கிர மகாதசை வருஷம் 20-க்கு இருப்பு நின்ற வருஷம் பதின்மூன்றும், மாதங்கள் எட்டும் ஆகும். இது வரையிலும் பூர்வபாகமான முதல் பாகமாகும். ஆலகாலவிஷத்தை உண்ட பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

[1] சுக்கிரன்.

ஜாதகம் 80

1. மதி[1] துலாம் சேயும்[2] மேரு[3] மந்தனும்[4] மீன மாக
புதன்பானு[5] நந்தி[6] யாகப் புகர்[7] மேடம் குருவும் வீணை[8]
ததிகயிர்[9] கடக மாகச் சிகி[10] மானில்[11] அலவன்[12] ஜன்மம்
இதுபலன் எவ்வா றென்று ஈச்வரி கேட்கும் போது

சனி	சுக்கிரன்	சூரியன் புதன்	குரு
	இராசி சக்கரம்		லக்கினம் ராகு
கேது			
அங்காரகன்		சந்திரன்	

விசாகம் 1-ஆம் பாதம். குருதசை இரு 12-7-0

1. சந்திரன் துலாத்திலும், அங்காரகன் தனுசிலும், சனி மீனத்திலும், புதனும் சூரியனும் ரிஷபத்திலும், சுக்கிரன் மேஷத்திலும், குரு மிதுனத்திலும், இராகு கடகத்திலும், கேது மகரத்திலும், ஜன்மலக்கினம் கடகமாகவும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாகவிருக்கும் என்று பார்வதியம்மையார் கேட்கும் போது ;

குறிப்பு.—இந்த ராசிசக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும். மேஷத்தில் சூரியனும், சந்திரனும் குருவும், ரிஷபத்தில் புதனும், கடகத்தில் சனியும் சுக்கிரனும், சிம்மத்தில் ராகுவும், தனுசில் அங்காரகனும், கும்பத்தில் கேதுவும் ஆகும்.

2. அத்திரி முனிவர் சொல்வார் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லம் சொல்வேன் மேல்வாடை வடதென் வீதி
அத்தலே மாரி மேற்கில் அதன்கீழ்ப் பால் தீபாஞ் சாலி
சத்திவேல் மாயோ னுத்தரம் விளங்கிடும் வடகீழ் தந்தி.

2. அத்திரி மகரிஷியானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். இவர் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகிறேன். வடக்குத் தெற்குத் தெருவில் மேலண்டை வாடையில் ஜாதகனது வீடு இருக்கும்.

---

[1] சந்திரன் [2] அங்காரகன் [3] தனுசு
[4] சனி [5] சூரியன் [6] ரிஷபம்
[7] சுக்கிரன் [8] மிதுனம் [9] ராகு
[10] கேது [11] மகரம் [12] கடகம்

மாரியம்மன் கோயில் மேற்குத் திக்கிலும். இதற்குக் கிழக்குத் திக்கில் நெருப்பில் பிறந்தவளாகிய திரௌபதியம்மன் கோயிலும், பார்வதியம்மன் முருகக்கடவுள் மகாவிஷ்ணு ஆகிய இவர்களுடைய கோயில்கள் வடக்குத் திக்கிலும், வடகிழக்குத் திக்கில் விநாயகக் கடவுளின் கோயிலும் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாசமிலங்கிய பேரூ ராகும்
மன்னர்கள் வாச மாகும் மாரன்செங் குந்தச் சேயாய்
அன்னவ னிரண்டாம் ஜன்மம் வருவனென்று சொல்வோம்
தன்னிலே குடும்பச் சேதி சாற்றுவோ மினிமேலாக

3. ஜாதகர் பிறந்த ஊரில் பல தேவர்கள் தேசத்தார் வாசஞ் செய்வார்கள். இந்த ஊர் பெரிய நகரமாகும், இதில் அரசர்கள் வசித்துக் கொண்டிருப்பார்கள். ஜாதகர் செங்குந்தர் குலம் என்ற கைக்கோளர் குலத்தில் இரண்டாவது கர்ப்பத்தில் வந்து பிறப்பார் என்று சொல்லுகிறோம். இனி மேல் இவருடைய குடும்ப விஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறோம்.

4. தந்தையின் துணை ஆண் மூன்று சத்தியு மொருத்தி என்றோம்
இந்தவ னுதிக்கா முன்னமிவர்களும் வேறுய்ச் செல்வர்
அந்தவர் குற்ற மேற்பர் அயல்சுக முடையா ராகும்
நிந்தைக ளேற்கா ராகும் நவிலுவோம் பிதாகுணத்தை

4. தகப்பனுரோடு கூடப் பிறந்தவர்களில் மூன்று ஆண் சகோதரங்களும் ஒரு பெண் சகோதரமும் உண்டு என்று சொல்லுகிறோம். இவர் பிறப்பதற்கு முன்னமே இவர்கள் வேறு குடும்பமாகப் போய் விடுவார்கள். இவர்கள் குற்றத்தை யுடையவராவர். பிறருடைய உதவியால் சுகத்தை அடைவார். பழி பாவங்களை இவர் அடையமாட்டார். தகப்பனுருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

5. தந்தையின் குணத்தைச் சொல்வேன் தரணியைப் பரிபா லிப்பன்
தன்குலத் தொழிலும் செய்வன் சகலர்க்கு நல்லோ னுவன்
தந்தமும் தரள மொக்கும் சாதமும் குறைவு றுதான்
தந்தியையொத்த தேகன் தன்மனம் கபட மில்லான்.

5. தகப்பனுருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். நிலங்களைப் பயிரிடுவார். தன்னுடைய குலத்துத் தொழிலையும் செய்வார். எல்லோருக்கும் நல்லவராக நடந்து கொள்வார். இவருடைய பற்கள் முத்தைப் போல வெண்மையாகவும் அழகாகவும் இருக்கும், சாப்பாடு விஷயத்தில் யாதொரு கஷ்டமும் இல்லாதவர். யானையைப்போலக் கறுத்ததும் பருத்ததுமான தேகத்தையுடையவர். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம் வஞ்சனை இவைகள் இல்லாதவராவர்.

6. கடன் கொள்வன் நிவிர்த்தி செய்வன் கட்டுவார்த்தைகளைச் [சொல்லான்
உடன்படான் பிழைகளுக்கு உண்மையை வெளிக்காட்டாதான்
படையின்முன் செல்லா னுகும் பலவிதச் செட்டுச் செய்வன்
திடமதாய்க் குடும்பத் தில்தான் துணைவியாலவமா னத்தான்.

6. தகப்பனுர் கடன்வாங்குவார், அதனைக் கொடுத்து விடுவார். பொய்யான வார்த்தைகளையும் புனைந்த வார்த்தைகளையுஞ் சொல்லமாட்டார். தவறுகளைச் செய்ய இஷ்டப்படமாட்டார். உண்மையான ரகசியத்தைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக நடந்து கொள்ளமாட்டார். சண்டையில் முன்னே பரிந்து போகமாட்டார். அநேக விதமான வியாபாரங்களைச் செய்வார். தன்னுடைய சகோதரியால் குடும்பத்தில் ஒரு பெரிய அவமானத்தை அடைபவராவார்,

7. மாமிக ளிரண்டே யாகும் வஸ்திரச் சொத்துச் செய்வன்
பூமியும் சேர்ப்பா னுகும் புது இல்லம் பின்னுல் செய்வன்
தாமத குணமும் கொஞ்சம் ஜனித்தநாள் வறுமை யுண்டு
நியமங்க ளில்லா னென்றும் நீத்தோர்க ளுறவு கொள்ளான்.

7. தகப்பனுருக்கு இரண்டு மாமியார்கள் இருப்பார்கள். இவர் வஸ்திரம் முதலிய வஸ்துக்களை உண்டாக்குவார். நிலங்களைச் சேகரிப்பாராகும். புதிய ஒரு வீட்டைப் பிற்காலத்தில் கட்டுவார். கொஞ்சம் தாமததமானதும் நிதானமானதுமான குணத்தையுடையவர். பிறந்த காலத்தில் கஷ்டங்களையும் தரித்திரத்தையுமுடையவர், கடவுளை வழிபடுதல் முதலியவைகள் இல்லாதவர் என்று சொல்லுகிறேம். உலகப்பற்றை விட்டுவிட்டவர்களுடையவும் பரதேசிகளுடையவும் சினேகத்தை அடையமாட்டார்.

8. நல்லவன் நல்ல வர்க்கு நாகம்போல் கோபம் கொஞ்சம்
வெல்லுவான் எதிரி தன்னை வீண்வழக் கோரம் பேசான்
எல்லைமேல் புகழு மேற்பன் இதிகாச மறியா னுகும்
அல்லல்கள் அடையா னுகும் அம்பிகை யாளே கேளாய்.

8. தகப்பனுர் நல்லவர்களுக்கு நல்லவராக நடந்து கொள்ளுவார். இவருக்கு நல்ல பாம்பிற்குச் சீறிவரும் கோபத்தைப் போலக்கொஞ்சம் கோபமுண்டு. சத்துருக்களை ஜயித்து விடுவார். வழக்கிலும் தகராறுகளிலும் வீணுகவும் பக்ஷபாதமாகவும் ஒரு பக்கமாகவே பேசமாட்டார். பூமியில் இவருக்குக் கீர்த்தியும் பெருமையும் உண்டாகும். இதிகாசம் என்று சொல்லப்பட்ட கலைஞானமாகிய அறுபத்து நான்குள் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதவராவார். புறக்கஷ்டங்களையும் அகத்துன்பங்களையும் அடையமாட்டார், பார்வதியம்மையே ! கேட்பீராக.

9. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோகைமா ரிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கின்னேன் பிறப்பனு மிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அரிமக னெப்ப தாகும்
கன்னியர் மோக னுவன் கஞ்சமா நிறத்தனுகும்.

9. இங்குச் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இரண்டு மனைவிமார்களில் * இரண்டாவது மனைவிக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். மகாவிஷ்ணுவின் மகனுகிய பிரமனுக்குச் சமானமானவர். ஸ்திரீகளின் மேல் காம ஆசையை யுடையவராவார். தாமரை மலரைப்போன்ற ஒரு வித சிகப்பான நிறமுடைய தேகத்தை யுடையவராவார்.

* குறிப்பு.—தகப்பனுருடைய லக்கினம் ஒன்பதாவது வீடாகிய மீனம். இதற்குக் களத்திர ஸ்தானமாகிய கன்னிக் குடையவரான புதன் ஆறுக் குடையவரான சூரியனுடன் கூடி மூன்றுவது வீட்டில் இருந்துகொண்டு சனியாலும் ராகுவாலும் பார்க்கப்பட்டிருக்கின்றுர். ஏழாமிடம் சனியாலும் ராகுவாலும் பார்க்கப்பட்டிருக்கின்றது. சனி பதினென்றிற்குடைய வராய்ப் புதனைப் பார்ப்பதால் ஜாதகாலங்காரம் 689-ஆவது பாடல் பிரகாரம் ஒன்றிற்கு மேற்பட்ட களத்திரமுண்டு. இவ்விதக் காரணங்களால் இரண்டு தாரமுண்டு.

10. கல்வியு மிரண்டு கற்பன் கசடர்க ளுறவு கொள்ளான்
எல்லையை விருத்தி செய்வ லேவலா ளுடையனுகும்
இல்லையென் றுரைக்க மாட்டா னெடுத்த காரியமு டிப்பன்
சொல்லது அதிக மேற்பன் சோம்பிடான் காரி யத்தில்.

10. ஜாதகர் இரண்டுவிதமான வித்தைகளைப் படிப்பார். கீழ் மக்களுடைய சினேகத்தை அடையமாட்டார். நிலங்களைப் பயிரிடுவார் வேலையாட்களை யுடையவராவார். தன்னைவந்து கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உபகாரஞ் செய்வார். தான் செய்ய ஆரம்பித்த காரியத்தை முடிக்குஞ் சக்தியை யுடையவர். தனது வார்த்தை மேன்மை யானதாக விருக்கும். அதிகமாகவும் பேசுவார். தான் செய்கிற காரியத்தில் தளர்ச்சியையும் சோம்பலையும் காண்பிக்கமாட்டார்.

11. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தனம்வீணுச் செலவு செய்யான்
வந்தவர்க் கன்ன மீவன் வணிபங்கள் செய்வா னுகும்
விந்தையாய்ப் பேசு வானும் வேலன்மேல் பத்தி கொள்வன்
நந்தியா விருத்தி யுண்டு நற்றல வாசம் செய்வன்

11. ஜாதகர் தன்னுடைய தகப்பனுரின் அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்தை யுடையவராகவிருந்து வாழ்வார். பணத்தை அனுவசியமாகச் செலவு செய்யமாட்டார். தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். வியாபாரங்களைச் செய்பவராவார். ஆச்சரியமாகப் பேசுவார். முருகக் கடவுளின் மேல் பக்தியை யுடையவர். எருதுகளும் பசுக்களும் விருத்தி யாகும். இவர் நல்ல புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவார்.

12. தன்துணை யான்பா லொன்று தங்கும்பின் தீர்க்க மாகக்
கன்னிமார் மூவர் தீர்க்கம் கனக்காவே மற்றவெல்லாம்
முன்மாதா ஒன்று என்றீர் மொழிகுவீர் அவட்குப் புத்திரர்
சந்திர வதனம் போன்ற தையலு மொருத்தி தீர்க்கம்.

12. ஜாதகருடைய சகோதரங்களில் இளைய ஆண் சகோதரமும் மூன்று பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். மற்றச் சகோதரிகளெல்லாம் இறந்துவிடுவார்கள். பெரியதாயார் ஒன்றுண்டு என்று சொன்னீரே! அவளுடைய புத்திரர்களைப் பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க, அவளுக்குச் சந்திரனைப்போல அழகான முகத்தையுடைய ஒரு பெண் குழந்தை நீண்ட ஆயுளை யுடையதாக விருக்கும்.

13. மங்கையின் குணத்தைச் சொல்வேன் மாநிறம் சமதே கத்தாள்
பொங்கின குடும்பி யாவள் புண்ணிய மனத்தா ளாகும்
நங்கைக்கு வரனு முள்ளூர் நல்கிடு மிரண்டா மாதாய்
அங்கவள் தனக்குப் புத்திரர் ஆணென்று கன்னி அவ்வாறு;

13. இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவள் மாநிற முள்ளதும் சமமானதுமான தேகத்தை யுடையவள். மேன்மையானதும் உயர்ந்ததுமான குடும்பஸ்தையாக விருப்பாள். புண்ணியமான காரியங்களைச் செய்யும் மனத்தை யுடையவளாவாள். இவளுக்குப் புருஷன் உள்ளூரிலேயே இருந்து வருவான். இவள் இரண்டாவது மனைவியாக வாய்ப்பாள். இவளுக்குக் குழந்தைகளில் ஆண் குழந்தை ஒன்றும் பெண்குழந்தை ஒன்றும்;

14. தீர்க்கமா மென்று சொல்வோம் சீலியாம் தெய்வ பக்தி
ஏற்கவே யோக சாலி எப்போதும் வறுமை காணுள்
சாக்கிரதை உடையா ளாகும் சர்ப்பம்போல் கோபம் கொஞ்சம்
ஆர்க்கவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

14. ஆகிய இவர்கள் நீண்ட ஆயுளை யுடையவர்களாய் இருப்பார்கள் என்று சொல்லுகிறோம். நல்லொழுக்கமும் நன்னடக்கையும் உடையவளாவாள். தெய்வ பக்தியுடையவள். ஏற்கனவே யோகசாலியாக விருப்பாள். ஒருபோதும் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அடையமாட்டாள். ஜாக்கிரதையுடன் இருப்பாள். நாகப்பாம்பிற்கு வருவதுபோலச் சீறிவருகிற கோபத்தை கொஞ்சமாக உடையவள். அதிக ஆவலுடன் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

15. இன்னமும் விவரமாக இயம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் குணத்தைச் சொல்வேன் அரவுபோல் கோப மேற்பள்
மன்னவன் மனத்துக் கேத்தோள் வருவோரை ஆதரிப்பள்
பின்னமில் லாத தேகி பொருத்தமாய்ப் பேசு வாளாம்.

15. இவளுடைய குணங்களைப் பற்றி விவரமாகப் பின் பாகத்தில் சொல்லுகிறோம். ஜாதகருடைய தாயாரின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். நாகப்பாம்பிற்கு வருவதுபோலச் சீறிவருகின்ற கோபத்தை யுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல நடந்துகொள்ளுந் தன்மையை யுடையவள். தன்னிடம் வருகிறவர்களைக் காப்பாற்றுவாள். அவயவ பங்க ஒன்றும் இல்லாத தேகத்தை யுடையவள் நியாயமாகவும் ஒழுங்காகவும் தகுதியாகவும் பேசுபவளாவாள்.

16. மாதுவும் வந்த பின்பு விளைவுமே பெரிய தாகும்
காதலி நடையும் நன்மை கண்முகம் வசிய முண்டு
பாதக மனமில் லாதாள் பலருக்கு நல்லோ ளாவள்
கோதறும் குணத்தா ளாகும் குலமதிப் பாக வாழ்வள்.

16. தாயார் தன்னுடைய புருஷனிடம் வந்துசேர்ந்த பிறகு விளைவுகள் அதிகப்படும். இவளுடைய நடவடிக்கை நல்லதாக விருக்கும். இவளுடைய கண்களும் முகமும் பிறரைத் தன் வசப்படுத்திக்கொள்ளும்படியான அழகிய தன்மை யுடையனவாக விருக்கும். கெட்ட மனமில்லாதவளாவாள். பலருக்கு நல்லவளாக விருப்பாள். குற்றமில்லாதக் குணத்தை யுடையவளாவாள். தன்னுடைய பந்துக்கள் இவளை மதிக்குந் தன்மையில் இருந்துகொண்டு வாழ்வாள்.

17. இல்லமும் அருகில் தென்பால் இவள்துணை ஆண்பால் ஒன்று
வல்லிமார் நால்வ ரென்றோம் மடிவுண்டு சிலவே பின்பால்
சொல்லுவோ மன்னை பூர்வம் சீவக நாட்டி லேதான்
புல்கினுள் வன்னிய சேயாய்ப் புத்திர ருள்ளாளாகி;

17. தாயாருடைய வீடு தெற்குத் திக்கில் அருகில் இருக்கும். இவளுடன் கூடப்பிறந்தவர்களில் ஆண் சகோதரம் ஒருவரும், பெண் சகோதரங்கள் நான்கும் ஆம் என்று சொல்லுகிறோம். பின்னல் சில சகோதரர்கள் இறந்துவிடுவார்கள். தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவள் ஜீவக நாட்டில் வன்னிய குலத்தில் பெண்ணுகப் பிறந்து குழந்தைகளை யுடையவளாகி;

18. அரசர்பால் தொழிலும் செய்து அச்சென்ம வினையில் லாமல்
குறைதீர்க்கும் சேதுச் சென்று கோதையும் பேதி யால்
மரலியின் நாடு சென்று மலரயன் வரையப் பட்டு
அருமுக னடிமை வர்க்கம் அருளினு லிந்த மாது.

18. அரசாங்கத்தில் வேலை செய்து முன் ஜன்மத்தில் பாவம் ஒன்றும் இல்லாதவளாகிக் குறைகளையும் பாவங்களையும் நீக்குகின்ற சேது மகாஸ்தலத்திற்குப் போய் இவள் பேதிகண்டு இறந்து எமபட்டினத்திற்குப் போய் பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஆறுமுகங்களை யுடைய முருகக் கடவுளின் பக்தர்களின் குலத்திற் பிறந்தாள்.

19. மங்கையும் வறுமை காணுள் வரைகிறே மிவள்பின் ஜன்மம்
துங்கமாம் காஞ்சி தன்னில் ஜனிப்பளா மிக்கு லத்தில்
பொங்கின குடும்ப மேற்பள் புகன்றது தப்பா தாகும்
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

19. தாயார் கஷ்டங்களும் தரித்திரமும் இல்லாதவள். இவளுடைய ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். மேன்மையானதும் உன்னதமானதுமான நிலையிலுள்ள காஞ்சீரபுரத்தில் இந்த ஜன்மத்தில் முன் பிறந்த குலமாகிய செங்குந்தர் குலத்தில் பிறப்பாள். மேன்மையானதும்

வளமானதுமான குடும்பத்தை உடையவளாக விருப்பாள். நாங்கள் சொல்லியது தவருமல் நடக்கும். ஐந்து கைகளையுடைய விநாயகக் கடவுளைப் பெற்று வளர்த்த பார்வதியம்மையே! கேட்பீராக.

20. தந்தைமுன் ஜன்மம் சொல்வேன் தாமிர பரணி தன்னில்
பிந்தின வேளாளனுகும் பிறந்துமே கிருஷி செய்து
அந்தவன் வாழுந் நாளில் அனுகின வினையைக் கேண்மோ
முந்துமால் தமக்குத் தந்த மலர்களை மனைக்குத் தந்தான்.

20. ஜாதகருடைய தகப்பனுரின் பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறேன். தாமிரபரணியில் ஓர் ஏழை வேளாளனுகப் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்துகொண்டு இவர் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைக் கேட்பீராக. முந்திய வழக்கம்போல மகாவிஷ்ணுவிற்குக் கொடுத்துவந்த புஷபங்களை வழக்கம்போல் மகா விஷ்ணுவிற்கே கொடுக்காமல் தன்னுடைய மனைவிக்குக் கொடுத்தார்.

21. பாரியை போகம் துய்த்தான் பற்றிற்று அதுவோர் தோஷம்
வேறொரு மாதின் பேரில் வியர்த்தமாய் வார்த்தை சொல்ல
நாரியும் மனது வாடி நவின்றசா பத்தைக் கேண்மோ
கூறிஞய் வீணய் வார்த்தை குலவும்பின் ஜன்மம் தன்னில் ;

21. இவ்விதமாகத் தகப்பனுர் செய்து பிறகு தன்னுடைய மனைவியுடன் சம்போகஞ் செய்தார். இப்படிச் செய்தது ஒரு தோஷமாகும். இன்னெரு ஸ்திரீயின் மேல் இவர் தப்பிதமானதும் நிந்தையானதும் பழியானதுமான வார்த்தைகளைச் சொல்ல அவள் தன்னுடைய மனம் நொந்து கொடுத்தச் சாபத்தைக் கேட்பீராக. என்மேல் நீ அனுவசியமாகவும் காரணமில்லாமலும் அபாண்டமானதுமான வார்த்தைகளைச் சொன்னுய். உன்னுடைய மறு ஜன்மத்தில் ;

22. உன்துணை யாலே நிந்தை உலகினில் வசையு மேற்பாய்
பின்னையும் பாரி ரண்டாய்ப் புக்கிடு மென்று சொல்லி
இன்னமும் விசேஷம் சொன்னு னெய்திற்று அந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தி லறுமுகன் தொண்டு பூண்டு ;

22. உன்னுடைய சகோதரியாலே உனக்கு அவமானமும் பழியும் வந்து சேர்ந்து அதனுல் நீ பூமியில் இகழ்ச்சிச் சொல்லை அடையக் கடவாய். பின்னுல் உனக்கு இரண்டு மனைவிமார்கள் வந்து சம்பவிப்பார்கள், என்று அந்த ஸ்திரீ சொல்லி இன்னும் பலவிதமாகச் சொல்லி சாபங்கொடுத்தாள். அவளுடைய சாபம் இவரை வந்து அடைந்தது. இவர் முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளுக்குத் தொண்டு தொழில்களைச் செய்து ;

23. சேதுவின் பதிக்குச் சென்று சென்றனன் காலன் ஹூடு
மாதவன் வரையப்பட்டு வந்தவ னென்று சொல்வோம்
காதலி சாபம் போலே கலந்திடும் பாரி ரண்டு
தீதுண்டு துணைவிக்கேதான் செல்லுவாள் வேறூர் பக்கல்.

23. சேது ஸ்தலத்திற்குப்போய்ப் பிறகு இறந்து எமபட்டணத் திற்குப் போனர். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார் என்று சொல்லுகிறேம். அந்த ஸ்திரீயினுடைய சாபத்தைப் போலவே தகப்பனுருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள். தன்னுடைய சகோதரிக்குக் கெடுதல் நேரிடும். இவள் இன்னேர் ஊருக்குப் போய்விடுவாள்.

24. ஆதியில் வறுமை யுண்டு அழகான குடும்பம் பின்னுல்
ஓதுவே னிவன்பின் ஜன்மம் உயர்வதாம் அருணை தன்னில்
மாதவர் குலமு திப்பன் மறுத்துமே பிருகு சொல்வர்
சூதான செட்டுச் செய்தான் சுருதியி னில்லம் எவ்வாறு ;

24. தகப்பனுருக்கு இளம் பிராயத்தில் கஷ்டங்களும் தரித்திரமும் உண்டாகும். பிற்காலத்தில் மேன்மையான குடும்பம் ஏற்படும். அ:·:தாவது பின்னுல் குடும்பம் நல்ல அந்தஸ்தை அடையும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். சிறப்புள்ள திருவண்ணுமலையில் பிராமணர் குலத்திற் பிறப்பார். இப்படிச் சொல்ல, பிருகு மகரிஷியானவர் தடுத்துக் கேட்கின்றுர். கபடமாகவும் வஞ்சனையாகவும் வியாபாரஞ் செய்து வந்த இவருக்கு வேதங்கள் தங்கியிருக்கும் படியான பிராமணர் குலத்தில் எவ்விதமாக ;

25. பிறக்கும்கா ரணங்கள் சொல்வாய்ப் புனிதனிச் ஜன்மம் தன்னில்
அறுமுகன் பத்தி யாயும் ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
பெரிதான தலங்கள் சென்றும் பேச்சதைக் காத்த லாலும்
உறைகுவான் மறைக் குலத்தில் உத்தமி கேட்டி டாயே

25. இவர் பிறப்பார், இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க ; புண்ணியவானுகிய தகப்பனுர் இந்த ஜன்மத்தில் ஆறு முகங்களையுடைய முருகக் கடவுளின்மேல் பக்தியுடையவராகியும், ஆபத்துக் காலத்தில் சிலரைக் காப்பாற்றியும், பெரிய புண்ணிய ஸ்தலங்களுக்குப் போயும், தன்னுடைய சொல்லைத் தவருமல் காப்பாற்றியதாலும் பிராமணர் குலத்திற் பிறப்பார். பார்வதியம்மையே ! கேட்பீராக.

26. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினே ழாண்டில்
நீலியும் உள்ளூர் நேரும் நிமலியும் அன்னை வர்க்கம்
பாலிகை குணத்தைச் சொல்வேன் பதர்குண மில்லா ளாகும்
மால்மனை யொப்ப தாகும் வருவோரை ஆத ரிப்பள்

26. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகிறேம். இவருக்குப் பதினேழாவது வயதில் மனைவி உள்ளூரில்—தாயாருடைய பந்துக்களிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். அறிவீனமானதும் அற்பமானதும் உபயோக மில்லாதது மான குணத்தையுடையவளல்ல, மகாவிஷ்ணுவின் மனைவியாகிய லட்சுமிக்குச் சமானமானவள். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள்.

குறிப்பு.—விவாகக்காலம் :—ஜாதகருக்கு வயது ஷ 16–0–0 முதல் ஷ 17–0–0 வரையிலும் சனி தசையில் புதபுக்தி நடக்கின்றது. முதல் மனைவி சம்மந்தமான கிரகங்கள் ஏழிற்குடைய சனியும் இரண்டிற்குடைய சூரியனும் களத்திர காரகனுகிய சுக்கிரனும் ஆகும். சனிக்குத் தன் தசையில் விவாகஞ் செய்ய அமைப்பு இருக்கிறது. புதன் இரண்டிற்குடைய சூரியனுடன் சம்மந்தப்பட்டுக் களத்திரஸ்தானுதிபதியாகிய சனியாலும் போககாரகனுகிய ராகுவாலும் பார்க்கப்பட்டிருப்பதால் புதனுக்குத் தன்னுடைய புத்தியில் விவாகம் செய்துவைக்க அமைப்பு இருக்கின்றது.

27 கன்னிகை யோக சாலி கணவனுக் கினிய ளாகும்
மன்னவன் மனத்துக் கேத்தோள் வஞ்சக மனமில் லாதாள்
அன்னவள் யோக சாலி அற்புத வார்த்தை சொல்வள்
முன்கோப முடைய ளாகும் மொழிவராம் பிருகு தாமும்.

27. மனைவி யோகத்தை யுடையவளாவாள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள். புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற் போல நடந்துகொள்ளுந் தன்மையுடையவளாவாள். கபடமானதும் கள்ளமானதுமான மனத்தை உடையவளல்லள். இவள் யோகத்தை யுடையவள். ஆச்சரியமான வார்த்தைகளைச் சொல்லுவாள். முன்கோபத்தை யுடையவளாவாள். பிருகு மகரிஷியானவர் இதற்குமேல் சொல்லுகின்றார்.

28. இருமனை ஜாதகற்கு எய்திடு மென்று சொல்வோம்
வருமாறு புகலு மென்ன மைந்தனு[1] மேழோ னுகி
உறையிடம் உபய மாக ஒரேழில் கேது தங்கத்
திருமகன் தனக்குத் தாரம் செப்பினே மிரண்டு மாக.

28. ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்று சொல்லுகிறோம். இவர் இவ்விதமாகச் சொல்ல, காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, சனி ஏழுக்குடையவராகி உபய † ராசியாகிய மீனத்திலிருப்பதாலும், ஏழாவது வீட்டில் கேது இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்று சொல்லுகிறோம்.

† குறிப்பு.—உபயராசி விஷயம் :—ஏழாம் வீட்டிற்கதிபதி சரராசி உபய ராசி இவைகளில் இருந்தால் ஜாதகருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட மனைவிகள் ஏற்படுகிற யோகம் உண்டு என்று ஜாதகாலங்காரம் 648-ஆவது பாடலில் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். இரண்டாவது மனைவி வீடு ஒன்பதாவது வீடாகும். ஒன்பதிற்குடையவராகிய குரு லக்கினுதிபதியாகிய சந்திரனைப் பார்த்திருப்பதால் இரண்டாவது மனைவி வரும் யோக அமைப்பு ஜாதகருக்கு இருக்கிறது. ஜாதகருடைய தகப்பனுரது லக்கினம் மீனம். இதற்கு இரண்டாவது மனைவி வீடு ஒன்பதாவது வீடாகிய விருச்சிகம். இதற்கு அதிபதியாகிய அங்காரகன் பிதுர்லக்கினுதிபதியாகிய குருவைப் பார்க்கின்றார். ஆகையால் தகப்பனுருக்குக்கூட இரண்டாவது மனைவி இதனுல் வருகிற

[1] சனி

யோகம் இருக்கின்றது. இன்னுஞ் சில காரணங்களால் தகப்பனுருக்கு இரண்டு மனைவி உண்டு என்று இந்த ஜாதகத்தின் ஒன்பதாவது பாடலில் கண்டிருப்பதையுங் கவனிக்கவும்.

29. தென்முனி புகலு கின்றார் செப்பினேம் தாரம் ஒன்று
மா்மத்தைச் சொல்லு மென்ன மார்த்தாண்டன்[1] லாபம் தங்கக்
கன்மத்தில் புகரு[2]ம் நிற்கக் காதலி ஒன்றே தீர்க்கம்
துன்சனி தோஷத் தாலே யிவர்தந்தை மனைவி ரண்டாம்

29. இதன்மேல் தென்திசை முனிவராகிய அகஸ்திய மகரிஷி சொல்லுகின்றார், ஒரே தாரம் என்று சொல்லுகிறோம். அதற்குக் காரணம் சொல்லுவீர் என்று கேட்க, சூரியன் பதினோராவது வீட்டில் இருப்பதாலும், பத்தாவது வீட்டில் சுக்கிரன் இருப்பதாலும் ஒரே மனைவி தான் உண்டு. அவள் நீண்ட ஆயுளையுடையவளாவாள், கெடுதியான சனியினுடைய தோஷத்தினுல் இவருடைய தகப்பனுருக்கு இரண்டு மனைவிகள் உண்டு.

30. ஆகையால் பால னுக்கு அணுகாது தாரம் ரண்டு
பாகமாய்ப் புத்திர பாவம் பகருவோ மாறு தோன்றும்
தோகைய திருவ ராகும் சுதர்களு மவ்வா றென்றோம்
ஏகிடு மற்ற வெல்லாம் மீச்வரி கேட்டி டாயே.

30. இவ்வித காரணங்களால் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிட மாட்டார்கள். பக்குவமாகப் புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். இவருக்கு ஆறு குழந்தைகள் பிறப்பார்கள். இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களும் உயிருடன் இருப்பார்கள். மற்றக் குழந்தைகள் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகிறோம். பார்வதியம்மையே! கேட்பீராக

31. முன்னிவ னிருந் ஜன்மம் மொழிகிறோம் கொச்சி தன்னில்
துன்மதி வைசிய னுகச் ஜனித்துமே செட்டுச் செய்து
அன்னையும் தந்தை மிக்க அறமதி லிச்சை யுண்டாய்
உன்னத தலங்கள் சென்று ஊழது மில்லானுகி ;

31. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறோம். இவர் கொச்சியில் வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து, வியாபாரஞ் செய்து, தன்னுடைய தாயார் தந்தையார் இவர்களைவிட அதிகமாகத் தருமஞ் செய்வதில் ஆசையுடையவராகி மேன்மையான சிறந்த தெய்வீக ஸ்தலங்களுக்குப்போய் பாவம் ஒன்றும் இல்லாதவராகி,

32. மாலியின் பதிக்குப் புக்கி மால்மகன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா னுகும் செப்புவோ மிவனின் யோகம்
பொருளது பெருக்கம் செய்வன் பெருமையாய்க் குடும்பி யாவன்
தரையதை விருத்தி செய்வன் ஜாதகன் ஏழைக் கீவன்.

[1] சூரியன் [2] சுக்கிரன்

32. இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிறகு மகாவிஷ்ணுவின் குமாரராகிய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகின்ரேம். இவருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிரேம். இவர் செல்வத்தையும் சொத்தையும் அதிகப் படுத்துவார். பெருமையுள்ளதும் மேன்மையானதுமான குடும்பஸ்தராவார். நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். இவர் ஏழைகளுக்குக் கொடுத்து உதவி செய்வார்.

33. பலவித வணிபம் செய்வன் பெரியோரை உறவு கொள்வன்
பதியது மூன்று மாகும் பகருவீர் யோகம் எவ்வாறு
'மதிக்கேழில் புகரும்[2] தங்க மங்கலன்[3] குருவும் பார்வை
புதன்பரி யோனும்[4] லாபம் புகன்றதால் யோகம் சொன்னேம்.

33. ஜாதகர் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். பெரிய மனிதர்களுடைய சிநேகத்தை அடைவார். மூன்று வீடுகள் நேரிடும். இருப்பிடம் மூன்றுகவிருக்கும். எவ்விதமாக யோகத்தைச் சொன்னீர் என்று கேட்கச் சந்திரனுக்கு ஏழில் சுக்கிரன் இருப்பதாலும், அங்காரகனும் குருவும் (கர்மாதிபதியும் தர்மாதிபதியுமாக, அஃதாவது தர்மகர்மாதிபதிகளாகி) ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்ளுவதாலும்,புதனும் சூரியனும் பதினேராவது வீட்டில் இருப்பதாலும் யோகம் சொல்லுகிரேம்.

34. லக்கினம் நாலு ஏழு பத்தினில் கிரகம் நின்றும்
லக்குமி போன்று எழில் பருவத யோகங் நேரும்
சிக்கெனப் பொருளும் சேர்ப்பன் செட்டுக்கள் பலவாய்ச் செய்வன்
நக்கன்மேல் பத்தி பூண்பன் நற்புக ழேற்பா னென்ரேம்.

34. லக்னத்திற்கு முதலாவது நான்காவது ஏழாவது பத்தாவது வீடுகளில் கிரகங்கள் இருப்பதாலும் லட்சுமியோகத்தைப்* போலவும் அழகிய பர்வத ‡ யோகங்களைப் போலவும் யோகங்கள் இருக்கின்றன. ஆகையால் ஜாதகர் சிக்கனமாகவிருந்து சொத்துக்களைச் சேகரிப்பார். பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். சிவபெருமானின்மேல் பக்தியுடையவர். நல்ல கீர்த்தியை அடைபவராவார்.

*குறிப்பு.—இலட்சுமியோக விஷயம்—இலட்சுமி யோகத்தைப்பற்றிச் ஜாதகசிந்தாமணி 2068-ஆவது பாடல், ஜாதக அலங்காரம் 359-ஆவது பாடல், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம், 17-ஆவது அல்லது 21-ஆவது சுலோகம், ஜாதக பாரிஜாதம் 7-வது அத்தியாயம், 152-ஆவது சுலோகம் இவைகளைப் பார்க்கவும். ‡ பர்வதயோகத்தைப்பற்றி ஜாதகாலங்காரம் 297,303, 304, 344-ஆவது பாடல்கள், ஜாதகபாரிஜாதம் 7-ஆவது அத்தியாயம் 128-ஆவது சுலோகம், ஜாதகசிந்தாமணி 2150, 2151, 2152 பாடல்கள், பலதீபிகை 6-ஆவது அத்தியாயம் 31,32 அல்லது 35,36-ஆவது சுலோகங்கள், ஜாதக சாரதீபிகை 62-ஆவது அத்தியாயம் 23-ஆவது சுலோகம் ஆகிய இவைகளைப் பார்க்கவும். இந்த ஜாதகத்திற்குப் பர்வதயோகமும் லட்சுமியோகமும்

[1] சந்திரன் [2] சுக்கிரன் [3] அங்காரகன் [4] சூரியன்

அமைந்திருக்கின்றன. நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் இருப்பதாலும் லக்கினதிபதியாகிய சந்திரன் இருக்கும் வீட்டிற்குடையவராகியச் சுக்கிரன் லக்கினத்திற்குக் கேந்திரத்திலிருப்பதாலும் பர்வதயோகம் இருக்கின்றது. லக்கினதிபதியாகிய சந்திரன் கேந்திரத்திலிருப்பதால் ஜாதகசிந்தாமணி 2068-ஆவது பாடல் பிரகாரம் ஒருவித லட்சுமியோகம் ஏற்படுகிறது. மேலும் லக்கினராசிக்கு முன் பின ராசிகளுக்குடையவர்களாகிய சூரியனும் புதனும் கூடி பதினென்றில் இருப்பதையுங் கவனிக்கவும்.

35. இருபது நாலு ஆண்டி லியம்புவோம் தாதை கண்டம்
திருநிலா முப்பா ணண்டில் செல்லுவான் அன்னை தாமும்
அறுபது ஆண்டு தன்னில் ஐப்பசி மாத மாகும்
மரலியின் பதியை யின்னேன் வாங்குவானென்று சொல்வோம்.

35. ஜாதகருக்கு இருபத்து நான்காவது † வயதில் தகப்பனர் இறந்துவிடுவார். ஜாதகருக்கு முப்பாதவது ‡ வயதில் தாயார் இறந்து விடுவாள். அறுபதாவது * வயதில் ஐப்பசி மாதத்தில் ஜாதகர் இறந்து எமபட்டணத்திற்குப் போவார் என்று சொல்லுகிரேம்.

† குறிப்பு.—தகப்பனர் மரணம் :—ஜாதகருக்கு வயது ஞூ 23-0-0 முதல் ஞூ 24-0-0 முடியும்வரையிலும் சனிதசையில் சூரியபுக்தி சந்திரபுக்திகள் நடக்கின்றன. பிதுர்லக்கினமாகிய மீனத்திற்குச் சனி புதன் சுக்கிரன் சூரியன், இவர்கள், பராசரஹோரை ஜாதகசந்திரிகை தாண்டவமாலை சந்திர காவியம் ஆகிய இவைகளின் பிரகாரம் மாரகாதிபதிகளாகின்ருர்கள். சனி மீனத்திற்குப் பதினென்றிற்கும் பன்னிரண்டிற்கும் உடையவராகி லக்னத்திலிருந்துகொண்டு ஆயுள் விஷயத்தில் சம்மந்தப்பட்ட பத்தாம் வீட்டையும் பார்க்கின்ருர். சூரியன் மாரகாதிபதியும் ஆறுக்குடையவருமாகி மூன்றில் மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி இருக்கின்ருர். ஆகையால் சனிதசையில் சூரியபுக்தியில் பிதாவுக்கு மாரக அமைப்பு இருக்கிறது.

‡ மாதுர் மாரகம்.—ஜாதகருக்கு வயது ஞூ 29-0-0 முதல் ஞூ 30-0-0 முடியும் வரையிலும் சனிதசையில் ராகு புக்தி, குரு புக்தி இவைகள் நடக்கின்றன. மாதுரு லக்கினமாகிய துலாத்திற்குச் சூரியன் குரு இவர்கள் பராசரஹோரை ஜாதக சந்திரிகை இவைகளின் பிரகாரம் மாராகாதிபதிகளாகின்ருர்கள். சனி மாரகாதிபதியாகிய குருவினுடைய வீட்டில் இருந்துகொண்டு துலாத்திற்கு ஆறில் இருக்கின்ரூ. ஆயுள் விஷயத்தில் சம்மந்தமுள்ள துலாத்திற்கு எட்டாவது வீடாகிய ரிஷபத்தையும் பார்க்கின்ருர். ஆகையால் ஜாதகசந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் சனி மாரகாதிபதியாகின்ருர். குரு எற்கனவே மாரகாதிபதியாகி லக்கினத்தைப்பார்க்கின்ருர். ஆகையால் குரு தன்புக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கின்றது.

*ஜாதகர் மாரகம்.—ஜாதகருக்கு வயது ஞூ 59-0-0 முதல் ஞூ 60-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் சூரிய புக்தி சந்திரபுக்தி இவைகள் நடக்கின்றன. கடகலக்கினத்திற்குச் சுக்கிரன் புதன் சனி இவர்கள் மாரகாதிபதிகள். சுக்கிரன் லக்கினதிபதியாகிய சந்திரனைப் பார்த்திருக்கின்ருர்.

ஆகையால் சுக்கிரன் பராசரஹோரை ஜாதகசந்திரிகை துய்யகேரளம் எட்டாம் பாவம் 20-ஆவது பாடல் இவைகளின் பிரகாரம் மாரகாதிபதியாகின்ருர். சூரியன் மாரகஸ்தானமாகிய இரண்டிற்குடையவராகி மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி மாரகஸ்தானத்தில் இருக்கின்ருர். ஆகையால் ஜாதக சந்திரிகை 23-ஆவது சுலோகப் பிரகாரம் மாரகம் செய்வார்.

36. பிருகுவும் புகலு கின்ருர் புதல்வனும் தீர்க்க மென்றீர்
குருதசை ஆதி காலம் குழவிக்குக் கண்ட மெய்தும்
பிறை[1] புகர்[2] கேந்திர மாகப் போய்விடும் பிணிகள் யாவும்
வரும் ஜன்மம் காஞ்சி தன்னில் வருகுவனும் சைவச் சேயாய்.

36. பிருகு மகரிஷியானவர் தடுத்துக் கேட்கின்ருர். ஜாதகருக்கு வயது தீர்க்கம் என்று சொன்னீரே! குருதசையின் முதல் பாகத்தில் ஜாதகருக்குக் கண்டம் நேரிடும் என்கிறேன். இப்படிச் சொல்லவே, சந்திரனும் சுக்கிரனும் கேந்திரத்தில் இருப்பதால் எல்லா நோய்களும் நிவிர்த்தியாகிவிடும். ஜாதகர் மறுஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

37. பிறந்திடுங் காலம் தன்னில் பொன்தசை யீரா ருண்டும்
உறைந்திடும் திங்க ளேழும் உரைக்கிறேம் பலனை யாங்கள்
வரவுக்குச் செலவ னேகம் மாரனும் பிணியால் வாடும்
வருவதாம் துணைபின் னுக வரைகிறேம் பின்பால் சேதி.

37. ஜாதகர் ஜனனமான காலத்தில் குருமகாதசையில் இருப்பு நின்ற வருஷம் பன்னிரண்டும் மாதங்கள் ஏழும் ஆகும். இக்காலத்திய பலாபலன் களை நாங்கள் சொல்லுகிறேம். வரும்படிக்கு மேல் அதிகமான செலவு ஏற்படும். ஜாதகர் ரோகத்தால் கஷ்டப்படுவார். இவருக்குப் பின்னுல் சகோதரர்கள் உண்டாவார்கள். மற்ற விஷயங்களைப் பின்னுல் பின்பாகத்தில் சொல்லுகிறேம்.

[1] சந்திரன் [2] சுக்கிரன்

ஜாதகம் 81

1. திங்களும் [1]சீய [2]மாகச் சிகி[3]கன்னி குருவும் தேளில்[4]
மங்கலன்[5] வீணை [6]யாக மால்[7] பானு [8] நந்தி [9] புக்கப்
பங்கய மகனும்[10] சாடி [11] பணி[12]மீனம் அலவன் [13] ஜன்மம்
சுங்கனும் [14] கடக மாகச் செப்புவீர் பலனைத் தானே.

ராகு		சூரியன் புதன்	அங்கா ரகன்
சனி	இராசி சக்கரம்		லக்கினம் சுக்கிரன்
			சந்திரன்
	குரு		கேது

மகம் 2-ம் பாதம், கேது தசை ஙு 4–9–0

1. சந்திரன் சிம்மத்திலும், கேது கன்னியிலும், குரு விருச்சிகத்திலும், அங்காரகன் மிதுனத்திலும், புதனும் சூரியனும் ரிஷபத்திலும், சனி கும்பத்திலும், ராகு மீனத்திலும், சுக்கிரன் கடகத்திலும், ஜன்ம லக்கினம் கடகத்திலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

2. உமையவள் கேட்கும் போது உரைக்கிருர் பராசர் தாமும்
அந்தவாண்பால் ஜன்மம் அவன் தந்தை யில்லம் சொல்வேன்
எமனுத்திரம் வீதி யாகும் இந்திரன் வாடையாகும்
ஜமதக்கினி வடகீ ழாகும் சிங்கவாக னத்தாள் கீழ்ப்பால்

2. பார்வதியம்மையார் கேட்கும்போது பராசர மகரிஷியானவர் சொல்லுகின்ருர். ஆண் குழந்தை பிறக்கும். இவருடைய தகப்பனுரின் வீட்டைப்பற்றிச் சொல்லுகிறேன். வீடு வடக்குத் தெற்குத் தெருவில் கிழக்கு வாடையில் இருக்கும். ஜமதக்கினி என்ற ஒரு முனிவருடைய ஆச்ரமம் வடகிழக்குத் திக்கில் இருக்கும். காளியம்மன் கோயில் கிழக்குத்திக்கில் இருக்கும்.

[1] சந்திரன் [2] சிம்மம் [3] கேது [4] விருச்சிகம்
[5] அங்காரகன் [6] மிதுனம் [7] புதன் [8] சூரியன்
[9] ரிஷபம் [10] சனி [11] கும்பம் [12] இராகு
[13] கடகம் [14] சுக்கிரன்

3. அறுமுகன் கோஷ்டம் தென்பால் அணுகிய சிறுவூராகும்
வருவனும் சேஷ்ட னுக வடுகர்தன் குலமே தோன்றும்
பெறுமன்னே தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
திருமகன் முன்பின் சென்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளின் கோயில் தெற்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு சிறிய கிராமமாகும். ஜாதகர் தெலுங்கருடைய ஒரு குலத்தில் ஜேஷ்டகுமாரகனுகப் பிறப்பார். இவருடைய பெற்ற தாயார் தகப்பனுர் இவர்களுடைய யோகங்களையும், மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களையும், இவருடைய முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகிறோம்.

4. தந்தையின் துணையாண் மூன்று சத்திமார் தோஷ மெய்தும்
அந்தஆண் மத்தில் சேதம் அறைகிறோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மிருநி றத்தான்
சிந்தையில் கபடு மில்லான் செட்டுக்கள் சிலவே செய்வன்.

4. தகப்பனுருடைய ஆண் சகோதரங்கள் மூன்று பேர் ஆகும். பெண் சகோதரங்கள் இறந்துவிடுவார்கள். இந்த ஆண் சகோதரங்கள் கூட மத்திமவயதில் இறந்து விடுவார்கள். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னல் சொல்லுகிறேன். ஜாதகருடைய தகப்பனுரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறேன். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மா நிறத்தையுடையவர். மனத்தில் கள்ளம் வஞ்சனை கவடு இவைகள் இல்லாதவர். சில வியாபாரங்களைச் செய்வார்.

5. தரணியை விருத்தி செய்வன் சதுஷ்பாத முடைய னுகும்
அரிபத்தி கொஞ்ச முண்டு அறமதி லிச்சையில்லான்
இருசொல்லு முடைய னுகுமீகையும் கொஞ்ச முண்டு
விரைவினில் நடக்க வல்லான் வீண்வம்பில் செல்லா னுகும்.

5. தகப்பனுர் நிலங்களைப் பயிரிட்டு விருத்தியாக்குவார். கால்நடைகளையுடையவராவார். மகாவிஷ்ணுவின்மேல் கொஞ்சம் பக்தியை யுடையவர். தருமம் செய்வதில் ஆசையில்லாதவர். இரண்டுவிதமான சொற்களையுடையவர். அஃதாவது உண்மையையும் பொய்யையுங்கலந்து பேசுவார். பிறருக்குக் கொடுக்கின்ற குணத்தையுங் கொஞ்சம் உடையவர். வேகமாக நடக்கின்ற சக்தியையுடையவர். வீண்சண்டை சச்சரவுகளில் பிரவேசிக்க மாட்டார்.

6. சுகதுக்கம் கலந்து வாழ்வன் துணைப் பெண்பால் தோஷ மென் [றீர்
வகையதைப் புகலு மென்னப் பரிதியும்[1] லாபம் தங்கத்
தகைமையாய்ப் பெண்பால் தோஷம் சாருமே வினையால் தாயே
உரிமையாயந்தச் சங்கை உரைகுவீர் முனியே நீர்தாம்.

[1] சூரியன்

6. சுகங்களையும் துக்கங்களையும் கலந்தாற்போல அனுபவித்து வாழ்வார். இவருக்குப் பெண் சகோதர தோஷம் உண்டு என்று சொன்னீரே ! அதனுடைய விவரத்தைச் சொல்லுவீர் என்று கேட்க சூரியன் பதினேராவது * வீட்டில் இருப்பதால் பெண் சகோதரங்களுக்குத் தோஷமுண்டாகும். இது பூர்வ ஜென்மத்தின் பாவத்தால் உண்டாகும் என்று சொல்ல, அந்த விஷயத்தை, முனிவரே ! நீரே சொல்லுவீராக.

*குறிப்பு.—பதினேராவது வீடானது தகப்பனுர் பாவத்தின் ராசியாகிய மீனத்திற்குச் சகோதரஸ்தானமாகிய மூன்ருவது வீடாகும். இந்த வீடு பெண் ராசியாய் இருப்பதைக் கவனிக்கவும். மூன்றில் சூரியன் இருந்தால் எத்தனை சகோதரர் பிறக்குமோ அத்தனைபேரும் இறந்துவிடுவார்கள் என்று சம்பு ஹோராபிரகாசிகாவில் சகோதரபாவத்தில் 57, 58-ஆவது சுலோகங்களில் சொல்லி இருக்கிறது.

7. முன்னவன் ஜன்மம் ரொல்வேன் முக்கூடல் தன்னி லேதான்
வன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி
அன்னவன் வாழுந் நாளில் அணுகின வினையைக் கேண்மோ
கன்னிகை யொருத்தி பேரில் கழறினுன் சிலேடை வார்த்தை.

7. தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் முக்கூடல் என்ற ஊரில் வன்னியர் குலத்திற் பிறந்து மனைவி மக்களை உடையவராகி வாழ்கின்றகாலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைக் கேட்பீராக. ஒரு ஸ்திரீயின்மேல் அலங்காரமாகவும் இரண்டு அர்த்தங்கள் உண்டாகும்படியாகவும் சில குற்றமான வார்த்தைகளைச் சொன்னுர்.

8. மாதுவும் மனம்க லங்கி வரைகிருள் சாபம் தானும்
தீதான வார்த்தை யென்மேல் செப்பின பாவிக் கேதான்
போதவே பின்ஜன் மத்தில் பெண்துணை யில்லா தாயும்
மேதினில் வாழ்வா யென்று விளம்பியே தெருத்தூள் விட்டாள்.

8. அந்த ஸ்திரீ மனம் நொந்து கவலைப்பட்டுச் சாபத்தைக் கொடுக்கின்றுள். குற்றமான வார்த்தைகளை என்மேல் சொல்லிய பாவியாகிய உனக்கு, பின்ஜென்மத்தில் பெண் சகோதரம் இல்லாமல் பூமியில் வாழக்கடவாய் என்று சொல்லித் தெருவிலுள்ள மண்தூளை வாரித் தூற்றினுள்.

9. மங்கையின் சாபம் தானும் மருவிடு மிச் ஜன் மத்தில்
சங்கையாய்த் துணைப் பெண் தோஷம் சார்ந்திடும் வாயு பாதை
அங்கவன் பின்ஜன் மங்கேள் அருணைமா நகரி லேதான்
தங்கங்கள் வேலை செய்யும் ஜனிப்ப னுமிக்கு லத்தில்.

9. அந்த ஸ்திரீயினுடைய சாபமானது தகப்பனுரை இந்த ஜன்மத்தில் வந்து அடையும். இந்தக்காரணத்திஞல் இவருடைய சகோதரிக்குத்

தோஷமுண்டாகும். வாயு பாதையும் உண்டாகும். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிக் கேட்பீராக. திருவண்ணுமலே என்ற பெரியப் பட்டணத்தில் தங்க வேலேசெய்யும் கம்மாளர் குலத்தில் பிறப்பார்.

10. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
புல்குவோ மிவன்கு ணத்தைப் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்
தல்லிதந் தைக்குக் கர்மம் தான்செய்வன் இருசி வப்பன்
வல்லியர் மோக வானும் மாநிலம் கிருஷி செய்வன்.

10. இவ்விதமாகச் சொல்லப்பட்டக் குணங்களேயுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணுதிசயங்களேப் பற்றிச் சொல்லுகிறேம். இவர் தன்னேப்பற்றிப் புகழ்ந்து பேசுகின்றவர்களேக் காப்பாற்றுவார். இவர் தன்னுடைய தாயார் தகப்பனுர் இவர்களுக்குக் ஈமக்கிரியைகளேச் செய்வார். மாநிறமுள்ள தேகத்தையுடையவர். பெண்களின்மேல் காம ஆசையை உடையவராவார். பெரிய பூமிகளேப் பயிரிடுவார்.

11. முகமதில் வடிவும் காணும் முனிவுண்டு உடனே தாழ்வு
அகமது புதிதாய்ச் செய்வன் அஞ்சின வார்த்தை கூறுவன்
பகையென்று மனத்தில் வையான் பலதொழில் புரிவா னுகும்
ஜகமதில் நல்லோ னுவன் சீக்கிர நடையு மாவன்.

11. ஜாதகருடைய முகத்தில் அழகானக் குறிகள் இருக்கும். இவருக்குக் கோபம் வரும். அஃது உடனே தணிந்தும் குறைந்தும் போய்விடும். இவர் ஒரு வீட்டைப் புதியதாகக் கட்டுவார். பயப்படும்படியான கெட்டவார்த்தைகளேச் சொல்லுவார். தன்னுடைய மனத்தில் விரோதம் அல்லது குரோதத்தை வைத்துக்கொண்டிருக்கமாட்டார். அநேகவிதமான வேலேகளேச் செய்வார். பூமியில் நல்லவரென்று பெயரெடுப்பார். வேகமாக நடக்கக்கூடியவராவார்.

12. சொல்லிடும் வசன மெல்லாம் சுத்தமாம் சொகுசா யுண்பன்
வெல்லுவான் எதிரி தன்னே வீண்வழக் கோரம் சொல்லான்
சல்லிய மென்ரு லச்சம் தனத்தின்மே லிச்சை யுண்டு
மல்லில்முன் செல்லா னுகும் மருவிடும் சகடு தானே.

12. ஜாதகர் சுத்தமான நல்ல வார்த்தைகளேச் சொல்லுவார். நாகரிகம் உள்ளவராகவும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் சாப்பிடுவார். எதிரிகளே ஜயித்துவிடுவார். வழக்கு விவகாரம் தகராறு இவைகளில் அநியாயமாகவும் ஒருபக்கமாகவும் பேச மாட்டார். கடன் என்ருல் பயப்படக்கூடியவர். பணத்தின்மேல் ஆசையுடையவர். சண்டை சச்சரவுகளில் முன்னே போய் நிற்காதவராவார். வண்டி இவருக்கு வந்து சேரும்.

13. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தனமிக பெருக்கம் செய்வன்
முந்துமால் பத்தி கொஞ்சம் முண்டக ரேகை யுண்டு
வந்தவர்க் கன்ன மீவன் வளமையாய்க் குடும்ப மேற்பன்
பந்துவும் மதிக்க வாழ்வன் பார்வதி கேட்டி டாயே.

13. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்தைவிட அதிகமான அந்தஸ்தில் இருந்து வாழ்வார். பணத்தை அதிகமாக விருத்தி செய்வார். முதலில் மகாவிஷ்ணுவின்மேல் கொஞ்சம் பக்தியை யுடையவர். இவருடைய உள்ளங்கையில் தாமரைரேகை உண்டு. தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். மேன்மையானதும் வளமானதுமான குடும்பத்தையுடையவர். தன்னுடைய பந்துக்கள் தன்னே மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். பார்வதியம்மையே! கேட்பீராக.

[குறிப்பு.—இதுவரையிலுந்தான் ஓலே ஏடுகள் இருக்கின்றன. 14 முதல் 27 வரையிலுமுள்ள பாடல்கள் உள்ள ஏடுகள் கிடைக்கவில்லே.]

28. மாரனும் ஜனிக்கும் காலே மகமது இரண்டாம் பாதம்
தீரமாய்க் கேது யிருப்புச் செப்புவோம் ஆண்டு நாலும்
நேரிடும் நவமாம் திங்கள் நிகழ்த்தினேம் பூர்வ பாகம்
ஆறுமா முகனேப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

28. ஜாதகர் பிறக்குங்காலத்தில் ஜன்மநட்சத்திரம் மகத்தில் இரண்டாவது பாதமாகும். இதற்குரிய கேதுமகாதசையில் இருப்பு நான்கு வருஷங்களும் ஒன்பது மாதங்களும் ஆகும். இவ்விதமாக முன்பாகத்தைச் சொன்னேம். ஆறு பெருமை பொருந்திய முகங்களேயுடைய முருகக்கடவுளேப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே! கேட்பீராக.